வெளியீடு 14-10-98

Issued 14-10-98

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

வியாழக்கிழமை, மார்ச் 19, 1998 – தொகுதி 39 – எண் 1

Thursday the 19th March, 1998 – Volume 39 – No. 1

·மன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

·tive Assembly Secretariat, Fort St. George,
Chennai-600 009

[Price Rs. 3.00

410/99

**19–3–1998**

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் | iii-vi |
| Personnel of the Govemment of Tamil Nadu | vii-x |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல் | xii-xiv |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் பட்டியல் (அகர வரிசைப்படி) | xv-xxv |
| 1. **இரங்கல் குறிப்புகள்**-- | |
| முன்னாள் உறுப்பினர்கள் மறைவு | 1-3 |
| 2. **இரங்கல் தீர்மானங்கள்**-- | |
| (அ) முன்னாள் இந்தியப் பிரதமர் திரு. குல்சாரிலால் நந்தா மறைவு | 3-4 |
| (ஆ) மத்திய பாதுகாப்புத் துறை இணை அமைச்சர் திரு. என்.வி.என். சோமு மறைவு | 4-5 |
| 3. **வினாக்கள்-விடைகள்**-- | |
| (அ) உறுக்குறியிட்ட வினாக்கள் | 6-46 |
| (ஆ) உறுக்குறியிடாத வினாக்கள் (முதலாவது பட்டியல் முதல் நான்காவது பட்டியல் வரை) | 46-308 |

| | பக்கங்கள் |
|---|---|
| 4. அறிவிப்புகள்-- | |
| (அ) பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள் பேரவையில் அழைக்கப்படுதல் | 309 |
| (ஆ) 'தேவேந்திரர் சங்கம்' என்பது 'புதிய தமிழகம்' என அழைக்கப்படுதல் | 309 |
| (இ) அ.இ.அ.தி.மு.க. (தி) என்பது எம்.ஜி.ஆர். அ.தி.மு.க. என அழைக்கப்படுதல் | 310 |
| (ஈ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல் | 310 |
| **5. ஆளுநர் 18-03-1998 ஆம் நாளன்று அவையில் உரையாற்றுகையில் சில உறுப்பினர்கள் நடந்து கொண்ட விதம் குறித்தும், அன்றையதினம் பேரவைத் தலைவருக்குள்ள அதிகாரம் குறித்தும் பேரவைத் தலைவர் தீர்ப்பு--** | 311-313 |
| **6. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம்--** | 314-396 |
| *திரு. இ. புகழேந்தி | 314-327 |
| திரு. ச. அழகிரி | 328-343 |
| திரு. கே. சுந்தர் | 343-348 |
| திரு. கே. சுப்பராயன் | 333,341, 348-361 |
| திரு. ஓ. பன்னீர்செல்வம் | 361-364 |
| திரு. சி. வேலாயுதன் | 341,355,364 371,384-387 |
| திரு. பி.ஆர். சுந்தரம் | 340,341,351, 352,373-382 |
| *திரு. ஜி. நிஜாமுதீன் | 382-387 |
| திரு. ப. கோவிந்தன் | 387-390 |
| *திரு. வி.கே. லட்சுமணன் | 390-396 |
| **7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்--** | 396-404 |


218447



D
V2H,31'N98
N98.391

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர்--நீதிபதி செல்வி மீ. பாத்திமா பீவி

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. முதலமைச்சர் : **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, மாவட்ட வருவாய் அதிகாரிகள், உள் துறை, நிதி, திட்டம், தொழில்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, சிறுபான்மையினர் நலன், கடவுச் சீட்டு மற்றும் வணிக வரிகள்.

2. **கல்வி அமைச்சர்** : **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** தொழிற்கல்வி உள்ளிட்ட கல்வி, சட்டமன்றம், தேர்தல்கள், மின்னணு வியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், விளையாட்டு மற்றும் இளைஞர் பணிப்படை மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.

3. **மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலம் மற்றும் மின்சாரம்.

4. **வருவாய்த் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் :** வருவாய், வருவாய் வாரியம், மாவட்ட வருவாய் நிருவாகம் மற்றும் மாவட்டத் துணை ஆட்சியாளர்கள்.

5. **ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. கோ.சி. மணி :** நகராட்சி நிருவாகம், சமுதாய வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.

19. செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன் :**
*செய்தி மற்றும் விளம்பரம். திரைப்படத் தொழில் நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம்.*

20. கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் : **மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன் :**
*கால்நடைப் பராமரிப்பு.*

21. சமூக நலத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குண பாண்டியன் :**
*மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன். இரவலர் காப்பு இல்லம். அனாதை இல்லங்கள். குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம்.*

22. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு :**
*ஆதிதிராவிடர் நலன். மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்.*

23. சுற்றுலாத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன் :**
*சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.*

24. கதர்த் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு :**
*கதர் வாரியம். பூமிதானம் மற்றும் கிராமதானம்.*

25. மீன் வளத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன் :**
*மீன் வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்.*



## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR—JUSTICE SELVI M. FATHIMA BEEVI

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. **Chief Minister** .. **The Hon. Kalaignar M. Karunanidhi :**
Public. General Administration. Indian Administrative Service. District Revenue Officers. Home. Finance. Planning. Industries. Prohibition and Excise. Minorities Welfare. Passports and Commercial Taxes.

2. **Minister for Education**.. **The Hon. Prof. K. Anbazhagan:**
Education including Technical Education. Legislature. Elections. Electronics. Science and Technology. Sports and Youth Service Corps and Ex-Servicemen.

3. **Minister for Health and Electricity** .. **The Hon. Thiru Arcot N. Veerasamy:**
Health, Medical Education and Family Welfare and Electricity.

4. **Minister for Revenue** .. **The Hon. Thiru Nanjil K. Manoharan:**
Revenue. Board of Revenue. District Revenue Establishment and Deputy Collectors.

5. **Minister for Rural Development and Local Administration** .. **The Hon. Thiru Ko.Si. Mani:**
Municipal Administration. Community Development. Panchayats. Panchayat Unions and Rural Indebtedness and Urban and Rural Water Supply.

6. **Minister for Agriculture** .. **The Hon. Thiru Veerapandi S. Arumugam:** Agriculture. Agricultural Engineering. Agro Service Co-operatives. Horticulture. Sugarcane Cess and Sugarcane Development.

7. **Minister for Public Works** .. **The Hon. Thiru Duraimurugan:** Public Works. Irrigation including Minor Irrigation and Programme Works.

8. **Minister for Transport** .. **The Hon. Dr. K. Ponmudi:** Transport. Nationalised Transport. Motor Vehicles Act. Ports and Highways and Chennai Metropolitan Development Authority.

9. **Minister for Tamil Official Language and Tamil Culture and Hindu Religious and Charitable Endowments** .. **The Hon. Dr. M. Thamizhkudimagan:** Tamil Official Language. Tamil Culture and Hindu Religious and Charitable Endowments.

10. **Minister for Food, Public Distribution System and Co-operation** .. **The Hon. Thiru K.N. Nehru:** Food. Price Control and Civil Supplies. Public Distribution System. Co-operation and Statistics.

11. **Minister for Milk** .. **The Hon. Thiru K. Sundaram:** Milk and Dairy Development. Slum Clearance and Accommodation Control.

12. **Minister for Labour** .. **The Hon. Thiru A. Rahmankhan:** Labour. Census. Employment and Training. Iron and Steel Control. Newsprint Control and Wakf.



13. **Minister for Law** .. **The Hon. Thiru Aladi Aruna:** Law. Courts. Prisons. Legislation on Weights and Measures. Registration of Companies. Debt Relief including Legislation on Money lending and Legislation on Chits.

14. **Minister for Handlooms** .. **The Hon. Thiru N.K.K. Periasamy:** Handlooms. Textiles and Environmental Pollution Control.

15. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru M.R.K. Panneerselvam:** Backward Classes. Most Backward Classes and Denotified Communities. Indians Overseas. Refugees and Evacuees.

16. **Minister for Forest and Printing** .. **The Hon. Thiru Pongalur N. Palanisamy:** Forest. Cinchona. Stationery and Printing and Government Press.

17. **Minister for Housing** .. **The Hon. Thiru K. Pitchandi:** Housing. Rural Housing Development. Town Planning and Urban Development.

18. **Minister for Rural Industries and Registration** .. **The Hon. Thiru I. Periasamy:** Rural Industries including Village and Cottage Industries. Registration and Stamp Act and Nutritious Meals.

19. **Minister for Information and Publicity** .. **The Hon. Thiru V. Mullaivendan:** Information and Publicity. Film Technology and Cinematography Act.

20. **Minister for Animal Husbandry** .. **The Hon. Pulavar P.M. Senguttuvan:** Animal Husbandry.

| | | |
|---|---|---|
| 6. வேளாண்மைத் துறை அமைச்சர் | : | **மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் :** வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்புப் பயிர் மேம்பாடு. |
| 7. பொதுப்பணித் துறை அமைச்சர் | : | **மாண்புமிகு திரு. துரைமுருகன் :** பொதுப்பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டம் மற்றும் செயற் திட்டப் பணிகள். |
| 8. போக்குவரத்துத் துறை அமைச்சர் | : | **மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி :** போக்குவரத்து, நாட்டுடைமை யாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகம், நெடுஞ்சாலைகள் மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம். |
| 9. தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் | : | **மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை. |
| 10. உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் | : | **மாண்புமிகு திரு. கா.நா. நேரு :** உணவு, விலைக் கட்டுப்பாடு மற்றும் குடிமைப் பொருட்கள் வழங்கல், பொது விநியோக முறை, கூட்டுறவு மற்றும் புள்ளிவிவரங்கள். |
| 11. பால்வளத் துறை அமைச்சர் | : | **மாண்புமிகு திரு. க. சுந்தரம் :** பால், பால்பண்ணை வளர்ச்சி, குடிசை மாற்று திட்டம் மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு. |
| 12. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் | : | **மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான் :** தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, இரும்பு மற்றும் எஃகு கட்டுப்பாடு, பத்திரிகை அச்சுக் காகிதக் கட்டுப்பாடு மற்றும் இசுலாமிய அறக்கட்டளை (வக்ஃப்). |



| | | |
|---|---|---|
| 13. சட்டத் துறை அமைச்சர் | : | **மாண்புமிகு திரு. ஆலடி அருணா :** சட்டம், நீதிமன்றங்கள், சிறைச் சாலைகள், எடைகள் மற்றும் அளவைகள் குறித்த சட்டம், கம்பெனிகள் பதிவு, கடன் வழங்கல் பற்றிய சட்டமியற்றல் உள்பட கடன் நிவாரணம் மற்றும் சீட்டு நிதி பற்றிய சட்டம் இயற்றுதல். |
| 14. கைத்தறித் துறை அமைச்சர் | : | **மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி :** கைத்தறி, துணித் தொழில், சுற்றுச் சூழல் மாசுக் கட்டுப்பாடு. |
| 15. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் | : | **மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் :** பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர். |
| 16. வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் | : | **மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி :** வனம், சின்கோனா, எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை மற்றும் அரசு அச்சகம். |
| 17. வீட்டுவசதித் துறை அமைச்சர் | : | **மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி :** வீட்டுவசதி, ஊரக வீட்டுவசதி, நகர அமைப்பு திட்டமிடல் மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி. |
| 18. ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் | : | **மாண்புமிகு திரு. இ. பெரியசாமி :** கிராமக் குடிசைத் தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பதிவுத் துறை, முத்திரைத் தாள் சட்டம் மற்றும் சத்துணவு. |

21. **Minister for Social Welfare** .. **The Hon. Tmt. S.P. Sarkunapandian:** Social Welfare including Women's and Children's Welfare. Beggars Home. Orphanages and Correctional Administration and Integrated Child Development Services Schemes.

22. **Minister for Adi-Dravidar and Tribal Welfare** .. **The Hon. Thiru Samayanallur S. Selvarasu:** Adi-Dravidar Welfare. Hill Tribes and Bonded Labour.

23. **Minister for Tourism** .. **The Hon. Thiru N. Suresh Rajan:** Tourism and Tourism Development Corporation.

24. **Minister for Khadi** .. **The Hon. Thiru Andhiyur P. Selvarasu:** Khadi Board. Bhoodan and Gramdan.

25. **Minister for Fisheries**.. **The Hon. Tmt. S. Jenefer Chandran:** Fisheries and Fisheries Development Corporation.



# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**பேரவைத் தலைவர்**
மாண்புமிகு திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்

**பேரவைத் துணைத் தலைவர்**
மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி

**மாற்றுத் தலைவர்கள் பட்டியல்**

திரு. ரா. சேதுநாதன்
திரு. கு. மனோகரன்
திரு. வ. வேலுசாமி
திரு. சி. ஞானசேகரன்
திரு. நா. பெரியசாமி
திரு. முகம்மது கோதர் மைதீன்

**செயலாளர்**
திரு. டி.. சாலமன் ஜெயபால்

| | | |
|---|---|---|
| 17. திருமதி வீ.நா. உமா, பி.ஏ. | .. | குழு அலுவலர் |
| 18. திரு. க. ராஜகுரு | .. | குழு அலுவலர் |
| 19. திரு. சௌரி அய்யாத்துரை | .. | பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் |
| 20. திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 21. திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 22. திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 23. திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 24. திரு. க. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 25. திருமதி என். துளசிபாய், பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| 26 திரு. கோ. ரவீந்திரன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 27. திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| 28. திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 29. திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 30. திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 31. திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 32. திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 33. திரு. ம. பிலிப், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | தலைமை நிருபர் |
| 34. திருமதி சி. கனகவல்லி, டி.சி.பி. | .. | தலைமை நிருபர் |
| 35. திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. | .. | தலைமை நிருபர் |
| 36. திரு. நா. நடராஜன், பி.ஏ. | .. | தலைமை நிருபர் |



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## உறுப்பினர்களின் பட்டியல் (அகர வரிசைப்படி)

## பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. அசோகன், திரு. அ. | .. | திருவாரூர் (செ.வ.) |
| 2. அந்தியூர் ப. செல்வராசு, திரு. | .. | அந்தியூர் (செ.வ.) |
| 3. அபுல்ஹசன், திரு. எம். எம். எஸ். | .. | மயிலாடுதுறை |
| 4. அப்துல் நாசர், திரு. அ.வ. | .. | புவனகிரி |
| 5. அப்துல் லத்தீப், திரு. ம. | .. | வாணியம்பாடி |
| 6. அப்பாவு, திரு. மு. | .. | ராதாபுரம் |
| 7. அமரமூர்த்தி, திரு. டி. | .. | அரியலூர் |
| 8. அய்யலுசாமி, திரு. லி. | .. | கோவில்பட்டி |
| 9. அருண்குமார், திரு. பா. | .. | மேட்டுப்பாளையம் |
| 10. அழகராஜா, திரு. என்.ஆர். | .. | தேனி |
| 11. அழகிரி, திரு. ச. | .. | சிதம்பரம் |
| 12. அழகுவேலு, திரு. ச. | .. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 13. அன்பழகன், திரு. வ. | .. | செய்யார் |
| 14. அன்பழகன், பேராசிரியர் க. | .. | துறைமுகம் |
| 15. அன்பில் பொய்யாமொழி, திரு. | .. | திருச்சிராப்பள்ளி-2 |
| 16. ஆசையன், திரு. பெ. | .. | ஆண்டிப்பட்டி |
| 17. ஆண்டமுத்து, திரு. வெ.அ. | .. | பவானிசாகர் |
| 18. ஆண்டி அம்பலம், திரு. எம். | .. | நத்தம் |
| 19. ஆரூண் ரஷீத், திரு. ஜே.எம். | .. | வில்லிவாக்கம் |
| 20. ஆலடி அருணா, திரு. | .. | ஆலங்குளம் |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின்
## முக்கிய அலுவலர்கள் பட்டியல்

| | | |
|---|---|---|
| 1. | திரு. வெ. இராசாராமன், பி.எஸ்சி., பி.எல். | .. கூடுதல் செயலாளர் |
| 2. | திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல். | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 3. | திருமதி பானுமதி ஆனந்தராஜன், பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் |
| 4. | திரு. கா.ப. இராஜன், டி.ஆர்.எஸ்., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் |
| 5. | திரு. கி. சாயிநாதன், பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| 6. | திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| 7. | திரு. சா. கணேசன், பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| 8. | திரு. தி. திருமாவளவன், பி.எஸ்சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| 9. | திரு. வெ. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல். | .. பேரவைத் தலைவரின் சிறப்புத் தனிச் செயலர் |
| 10. | திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| 11. | திரு. எம். ஜோபாய், பி.காம்., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| 12. | திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| 13. | திரு. இரா. வெங்கடேசன், எம்.ஏ., எல்.எல்.பி. | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 14. | திரு. மு. ஆறுமுகப் பெருமாள், எம்.ஏ., பி.லிட். | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 15. | திரு. கோ. ஸ்ரீராமன், பி.காம். | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 16. | திரு. இல. மாரியப்பன், பி.ஏ. | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |

21. ஆல்பன், டாக்டர் வே. .. திருவட்டாறு
22. ஆவுடையப்பன், திரு. இரா. .. அம்பாசமுத்திரம்
23. ஆறுமுகம், திரு. தி.ப. .. திருச்செங்கோடு
24. ஆற்காடு நா. வீராசாமி, திரு. .. அண்ணாநகர்
25. ஆனந்தன், திரு. பால. .. வந்தவாசி (செ.வ.)
26. இரகுமான்கான், திரு. அ. .. இராமநாதபுரம்
27. இராசமாணிக்கம், திரு. க.வெ.வீ. .. மேலூர்
28. இராசமாணிக்கம், திரு. பி. .. ஒரத்தநாடு
29. இராசன், திரு. வி. பி. .. இராஜபாளையம் (செ.வ.)
30. இராசேந்திரன் என்கிற தீரன், திரு. ஆ. .. ஆண்டிமடம்
31. இராமசாமி, டாக்டர் வை. .. பண்ருட்டி
32. இராமசாமி, திரு. கே. ஆர். .. திருவாடனை
33. இராமச்சந்திரன், திரு. ஓ. ஆர். .. கம்பம்
34. இராமச்சந்திரன், திரு. சி. இரா. .. தொண்டாமுத்தூர்
35. இராமச்சந்திரன், திரு. மா. .. திருவோணம்
36. இராமலிங்கம், திரு. ஏ. .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.)
37. இராமலிங்கம், திரு. செ. .. திருவிடைமருதூர்
38. இராமன், டாக்டர் இ. எஸ். எஸ். .. பள்ளிப்பட்டு
39. இராமஜெயம், திரு. ந.பூ. .. மயிலாப்பூர்
40. இராஜ ரெட்டி, திரு. ச. .. தளி
41. இராஜேந்தர், திரு. டி. .. பூங்கா நகர்
42. இளங்கோ, திரு. கோ. .. அவினாசி (செ.வ.)
43. ஈஸ்வரன், திரு. ரா. .. வாசுதேவநல்லூர் (செ.வ.)



44. உதயசூரியன், திரு. தா. .. சங்கராபுரம்
45. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். .. தஞ்சாவூர்
46. கணேசன், திரு. ஐ. .. எடப்பாடி
47. கணேசன், திரு. கே. சி. .. ஜெயங்கொண்டம்
48. கருணாநிதி, கலைஞர் மு. .. சேப்பாக்கம்
49. கருப்பசாமி, திரு. சொ. .. சங்கரநயினார்கோவில் (செ.வ.)
50. கருப்பண்ண உடையார், திரு. ந. .. பாபநாசம்
51. கருப்புசாமி, திரு. டி. .. உப்பிலியாபுரம் (ஆ.வா.)
52. கன்னையன், திரு. க. .. தொட்டியம்
53. காஞ்சனா கமலநாதன், டாக்டர் .. கிருஷ்ணகிரி
54. காந்தி, திரு. ஆர். .. இராணிப்பேட்டை
55. கிருஷ்ணசாமி, டாக்டர் க. .. ஒட்டப்பிடாரம் (செ.வ.)
56. கிருஷ்ணன், திரு. எஸ். வி. .. நாங்குநேரி
57. கிருஷ்ணன், திரு. சி. வெ. .. வேடசந்தூர்
58. குண்டன், திரு. டி. .. உதகமண்டலம்
59. குத்தாலம் பி. கல்யாணம், திரு. .. குத்தாலம்
60. குமாரதாஸ், டாக்டர் தே. .. கிள்ளியூர்
61. குழந்தை தமிழரசன், திரு. .. விருத்தாசலம்
62. கோதண்டம், திரு. ஏ. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
63. கோபால், திரு. பா. .. மேட்டூர்
64. கோபு, திரு. சி. .. அணைக்கட்டு
65. கோமதி சீனிவாசன், திருமதி .. வலங்கைமான் (செ.வ.)
66. கோவிந்தன், திரு. ப. .. தாரமங்கலம்

67. கோவிந்தன், திரு. வெ. .. பேரணாம்பட்டு (செ.வ.)
68. சக்ரபாணி, திரு. ஆர். .. ஒட்டன்சத்திரம்
69. சண்முகம், திரு. கோ. .. திருப்பத்தூர்
70. சண்முகம், திரு. சி. .. ஆலந்தூர்
71. சண்முகம், திரு. ம. .. கிணத்துக்கடவு
72. சந்தானம், திரு. லா. .. சோழவந்தான்
73. சந்திரசேகரன், திரு. சி. .. சேந்தமங்கலம் (ஆ.வா.)
74. சந்திரசேகரன், திரு. துரை. .. திருவையாறு
75. சமயநல்லூர் எஸ். செல்வராசு, திரு. .. சமயநல்லூர் (செ.வ.)
76. சம்பத், திரு. ஏ.ஜி. .. முகையூர்
77. சரஸ்வதி, திருமதி ஆர். .. தாராபுரம் (செ.வ.)
78. சற்குணபாண்டியன், திருமதி எஸ்.பி. .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
79. சாமிநாதன், திரு. மு.பெ. .. வெள்ளக்கோவில்
80. சிங்காரவேலு, திரு. வி.பி. .. வால்பாறை (செ.வ.)
81. சிவபுண்ணியம், திரு. வை. .. மன்னார்குடி
82. சிவராமன், திரு. ஆர். .. திருப்பத்தூர்
83. சிவராஜ், திரு. க. .. ரிஷிவந்தியம்
84. சிவலிங்கம், திரு. எஸ்.ஆர். .. பனமரத்துப்பட்டி
85. சிவானந்தம், திரு. ஆர். .. ஆரணி
86. சிவாஜி, திரு. இ.ஏ.பி. .. திருத்தணி
87. சின்னய்யா, திரு. வெ. .. திருமயம்
88. சீனிவாசன், திரு. ஏ.ஆர்.ஆர். .. விருதுநகர்



89. சுகவனம், திரு. இ.ஜி. .. பர்கூர்
90. சுடலைமுத்து, திரு. அ. .. போடிநாயக்கனூர்
91. சுதர்சனம், திரு. டி. .. பூந்தமல்லி
92. சுந்தரம், திரு. க. .. பொன்னேரி (செ.வ.)
93. சுந்தரம், திரு. ந. .. காரைக்குடி
94. சுந்தரம், திரு. பி.ஆர். .. இராசிபுரம்
95. சுந்தர், திரு. கே. .. உத்திரமேரூர்
96. சுப்பராயன், திரு. கே. .. திருப்பூர்
97. சுப்பிரமணி என்கிற சி.சு.மணி, திரு. சி. .. திருவள்ளூர்
98. சுப்பிரமணி, திரு. பி.என். .. ஆற்காடு
99. சுப்பிரமணியன், திரு. அ.லெ. .. திருநெல்வேலி
100. சுப்புலட்சுமி ஜெகதீசன், திருமதி .. மொடக்குறிச்சி
101. சுரேஷ் ராஜன், திரு. என். .. கன்னியாகுமரி
102. செங்குட்டுவன், புலவர் பூ.ம. .. மருங்காபுரி
103. செங்கை சிவம், திரு. .. பெரம்பூர் (செ.வ.)
104. செல்லக்குமார், டாக்டர் அ. .. தியாகராய நகர்
105. செல்வம், திரு. ரெ. .. குளித்தலை
106. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன், திரு. .. கொளத்தூர் (செ.வ.)
107. செல்வராஜ், திரு. து. .. உடுமலைப்பேட்டை
108. சேகரன், திரு. ஆர்.ஆர். .. ஓமலூர்
109. சேதுநாதன், திரு. ரா. .. திண்டிவனம்
110. சைதை கா. கிட்டு, திரு. .. சைதாப்பேட்டை

111. சொக்கர், திரு. ஆர். .. சிவகாசி
112. சொக்கலிங்கம், திரு. ஜி. .. திருப்போரூர் (செ.வ.)
113. ஞானசேகரன், டாக்டர் ஆ. .. மேல்மலையனூர்
114. ஞானசேகரன், திரு. சி. .. வேலூர்
115. டேவிட் செல்வின், திரு. எஸ். .. ஸ்ரீவைகுண்டம்
116. தங்கமணி, திரு. கே. .. மானாமதுரை (செ.வ.)
117. தங்கம் தென்னரசு, திரு. வெ. த. .. அருப்புக்கோட்டை
118. தங்கவேலன், திரு. சுப. .. கடலாடி
119. தங்கவேல், திரு. அ. ல. .. சேலம்-2
120. தண்டபாணி, திரு. சி. டி. .. கோயம்புத்தூர் மேற்கு
121. தமிழ்க்குடிமகன், முனைவர் மு. .. இளையான்குடி
122. தமிழ்ச்செல்வன், திரு. ஆர். .. அரக்கோணம் (செ.வ.)
123. தமிழ்மணி, திரு. வீ. .. செங்கல்பட்டு
124. தளபதி, திரு. கோ. .. சேடப்பட்டி
125. தனபாலன், திரு. கு.ர.கோ. .. சேலம்-1
126. தனபால், திரு. வி. ஜி. .. குடியாத்தம்
127. தாமரைக்கனி, திரு. இரா. .. ஸ்ரீவில்லிபுத்தூர்
128. திரைவீரன், திரு. உ. .. பரமக்குடி (செ.வ.)
129. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. .. பேராவூரணி
130. திருநாவுக்கரசு, திரு. எஸ். .. அறந்தாங்கி
131. திருவேங்கடம், திரு. பெ. சு. .. கலசப்பாக்கம்
132. துரைசாமி, திரு. பா. .. வரகூர் (செ.வ.)
133. துரை, திரு. கே. .. திருவெறும்பூர்
134. துரைமுருகன், திரு. .. காட்பாடி



135. தெய்வநாயகம், திரு. எ. .. மதுரை மத்தி
136. தேவராஜன், டாக்டர் மு. .. பெரம்பலூர் (செ.வ.)
137. நடராசன், திரு. ஆ. .. பேரூர்
138. நடராஜன், திரு. த. .. செஞ்சி
139. நயினா முகமது, திரு. கோ. .. கடையநல்லூர்
140. நன்னன், திரு. கொ.வீ. .. செங்கம் (செ.வ.)
141. நாகரத்தினம், திரு. ச. .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
142. நாஞ்சில் கி. மனோகரன், திரு. .. திருவல்லிக்கேணி
143. நிஜாமுதீன், திரு. ஜி. .. நாகப்பட்டினம்
144. நெல்லிக்குப்பம், அ. மணி., திரு. .. நெல்லிக்குப்பம்
145. நேரு, திரு. கா.நா. .. லால்குடி
146. பசும்பொன் தா. கிருட்டிணன், திரு. .. சிவகங்கை
147. பத்மா, டாக்டர் .. நன்னிலம் (செ.வ.)
148. பரணிகுமார், திரு. பா. .. திருச்சிராப்பள்ளி-1
149. பரிதி இளம்வழுதி, திரு. .. எழும்பூர் (செ.வ.)
150. பழனிசாமி, திரு. ஜி. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)
151. பழனிவேல் ராஜன், திரு. பி.டி.ஆர். .. மதுரை மேற்கு
152. பன்னீர்செல்வம், திரு. எம். ஆர்.கே. .. குறிஞ்சிப்பாடி
153. பன்னீர்செல்வம், திரு. மு. .. சீர்காழி (செ.வ.)
154. பாண்டுரங்கன், திரு. ந. .. பெரணமல்லூர்
155. பாலகிருஷ்ணன், திரு. சோ. .. முதுகுளத்தூர்
156. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.என். .. பவானி
157. பாலசுப்பிரமணியன், திரு. ப. .. பட்டுக்கோட்டை

158. பிச்சாண்டி, திரு. கு. .. திருவண்ணாமலை

159. புகழேந்தி, திரு. இ. .. கடலூர்

160. புரட்சிமணி, திரு. ச. .. மங்களூர் (செ.வ.)

161. பூவேந்தன், திரு. த. .. பழனி (செ.வ.)

162. பெரியசாமி, திரு. இ. .. ஆத்தூர்

163. பெரியசாமி, திரு. என். .. தூத்துக்குடி

164. பெரியசாமி, திரு. என்.கே.கே. .. ஈரோடு

165. பெரியசாமி, திரு. நா. .. பெருந்துறை

166. பெருமாள், திரு. வி. .. ஏற்காடு (ஆ.வா.)

167. பெர்னார்டு, திரு. இரா. .. குளச்சல்

168. பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. .. சிங்காநல்லூர்

169. பொன்முடி, டாக்டர் க. .. விழுப்புரம்

170. பொன்முடி, திரு. எஸ்.எஸ். .. பல்லடம்

171. பொன்னம்மாள், திருமதி ஏ.எஸ். .. நிலக்கோட்டை (செ.வ.)

172. மகேந்திரன், திரு. இரா. .. நாட்றாம்பள்ளி

173. மணிக்கண்ணன், திரு. ஆ.செ. .. திருநாவலூர்

174. மணி, டாக்டர் அ. .. உளுந்தூர்பேட்டை (செ.வ.)

175. மணி, திரு. கோ.சி. .. கும்பகோணம்

176. மணி, திரு. டி. .. விளவங்கோடு

177. மணி, திரு. ஜி.கே. .. பென்னாகரம்

178. மணி நாடார், திரு. எஸ்.எஸ். .. சாத்தான்குளம்

179. மணிமாறன், திரு. இரா. .. திண்டுக்கல்



180. மணிவர்மா, திரு. க. .. தண்டராம்பட்டு

181. மதிவாணன், திரு. இரா. .. இராயபுரம்

182. மதிவாணன், திரு. செ. .. அச்சரப்பாக்கம் (செ.வ.)

183. மனோகரன், திரு. கு. .. தர்மபுரி

184. மாயவன், திரு. தி.ப. .. ஸ்ரீரங்கம்

185. மாரி அய்யா, திரு. பே. .. புதுக்கோட்டை

186. மாரிமுத்து, திரு. அ. .. வானூர் (செ.வ.)

187. முகம்மது இஸ்மாயில், திரு. எஸ். எஸ். .. அரவக்குறிச்சி

188. முகம்மது கோதர் மைதீன், திரு. .. பாளையங்கோட்டை

189. முத்து, திரு. வி. .. சங்கரி (செ.வ.)

190. முத்துராமலிங்கம், திரு. ம. .. திருமங்கலம்

191. முபாரக், திரு. பா.மு. .. கூடலூர்

192. முருகேசன், திரு. பொ. .. காஞ்சிபுரம்

193. முல்லைவேந்தன், திரு. வ. .. மொரப்பூர்

194. முனிரத்தினம், திரு. ஆ.மு. .. சோளிங்கர்

195. மூக்கப்பன், திரு. இரா. .. சின்னசேலம்

196. மூக்கையா, திரு. எல். .. பெரியகுளம்

197. மோகனதாசன், திரு. கோ. .. பூம்புகார்

198. மோகன் கந்தசாமி, திரு. ப. .. பொங்கலூர்

199. மோசஸ், டாக்டர் எம். .. நாகர்கோவில்

200. ரங்கநாதன், திரு. எம். .. குன்னூர் (செ.வ.)

201. ரங்கநாதன், திரு. ப. .. புரசைவாக்கம்

202. ரவி அருணன், திரு. கே. .. தென்காசி

203. ரவிசங்கர், திரு. கு. .. விளாத்திகுளம்

204. ராசேந்திரன், திரு. ஏ. .. போளூர்

205. ராணி, செல்வி க. .. தலைவாசல் (செ.வ.)

206. ராமசாமி, திரு. ஏ.எம். .. ஆத்தூர்

207. ராமச்சந்திரன், திரு. செ. .. திருப்பரங்குன்றம்

208. ராஜு, திரு. எஸ். .. பொள்ளாச்சி

209. ராஜேந்திரன், திரு. எஸ்.கே. .. சத்தியமங்கலம்

210. ராஜ்குமார் மன்றாடியார், திரு. என்.எஸ். .. காங்கேயம்

211. லட்சுமணன், திரு. வி.கே. .. கோயம்புத்தூர் கிழக்கு

212. வல்லரசு, திரு. பி.என். .. உசிலம்பட்டி

213. வாசுகி முருகேசன், திருமதி .. கரூர்

214. விஜயகுமார், திரு. கே.எம். .. சாத்தூர்

215. விஜயன், திரு. டி.சி. .. திருவொற்றியூர்

216. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. .. வீரபாண்டி

217. வீரப்பன், திரு. கே.கே. .. கபிலர்மலை

218. வெங்கடசாமி, திரு. பி. .. ஒசூர்

219. வெங்கடாசலம், திரு. அ. .. ஆலங்குடி

220. வெங்கடாசலம், திரு. ஜி.எல். .. பாலக்கோடு

221. வெங்கடேசன், திரு. ச. க. .. மதுராந்தகம்

222. வெங்கடேசன், திரு. பி.வி.எஸ். .. காவேரிப்பட்டினம்

223. வெங்கிடு, திரு. ஜி. பி. .. கோபிச்செட்டிப் பாளையம்

224. வேடம்மாள், திருமதி ஏ.ஆர். .. அரூர் (செ.வ.)



225. வேணு, திரு. கி. .. கும்மிடிப்பூண்டி

226. வேதரத்தினம், திரு. எஸ்.கே. .. வேதாரண்யம்

227. வேலாயுதன், திரு. சி. .. பத்மநாபபுரம்

228. வேலுசாமி, திரு. வ. .. மதுரை கிழக்கு

229. வேல்சாமி, திரு. க. .. நாமக்கல் (செ.வ.)

230. வேல்துரை, திரு. பா. .. சேரன்மகாதேவி

231. வைதியலிங்கம், திரு. மீ.அ. .. தாம்பரம்

232. ஜெனிபர் சந்திரன், திருமதி எஸ். .. திருச்செந்தூர்

233. ஜோதிகண்ணன், திரு. மு.ந. .. முசிறி

234. ஸ்டாலின், திரு. மு.க. .. ஆயிரம் விளக்கு

235. ஆன் டி மான்டி, திருமதி .. நியமனம்

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. கே.வி. வெங்கடபதி .. அரசு தலைமை வழக்கறிஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**பங்குனி 5, ஈஸ்வர — திருவள்ளுவர் ஆண்டு 2029**

**1998 மார்ச் 19, வியாழக்கிழமை**

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை
மேற்சென்று செய்யப் படும்."

வாழ்க்கையின் நிலையாமையை உணர்ந்து நம் உயிர் இருக்கும்போதே உயர்ந்த நற்பணிகளை ஆற்றிட முனைய வேண்டும்.

## 1. இரங்கல் குறிப்புகள்

### முன்னாள் உறுப்பினர்கள் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினர்களான திருவாளர்கள் கே.என். பழனிசாமி கவுண்டர் அவர்கள் 3-1-1996 அன்றும், வி. பொன்னுசாமி கவுண்டர் அவர்கள் 26-9-1997 அன்றும், கி. எத்திராசன் அவர்கள் 19-10-1997 அன்றும், எம். சந்திரசேகர் அவர்கள் 11-12-1997 அன்றும், கே. பெருமாள் பிள்ளை அவர்கள் 24-12-1997 அன்றும், டி.ஆர் வரதன் அவர்கள் 2-1-1998 அன்றும், ஆகு. மூர்த்தி அவர்கள் 12-1-1998 அன்றும், வி. சுவாமிநாதன் அவர்கள் 28-2-1998 அன்றும், எஸ். பரமசிவம் அவர்கள் 3-3-1998 அன்றும், வி. பாலகிருஷ்ணன் அவர்கள் 12-3-1998 அன்றும் மறைவுற்றதை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே.என். பழனிசாமி கவுண்டர் அவர்கள், கோயம்புத்தூர் மாவட்டம், திருப்பூர் தொகுதியிலிருந்து இருமுறை தமிழ்நாடு

சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1957 ஆம் ஆண்டு முதல் 1962 ஆம் ஆண்டு வரை மற்றும் 1962 ஆம் ஆண்டு முதல் 1967 ஆம் ஆண்டு வரை சீரிய முறையில் பணியாற்றியுள்ளார்கள். மேலும், அவர் 1952 ஆம் ஆண்டு முதல் 1957 ஆம் ஆண்டு வரை சேலம்-கோயம்புத்தூர்-நீலகிரி உள்ளாட்சி அமைப்புகள் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு சென்னை சட்டமன்ற மேலவையின் உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார்.

திரு. வி. பொன்னுசாமி கவுண்டர் அவர்கள், அன்றைய வடாற்காடு மாவட்டம், திருப்பத்தூர் பொது ஊரகத் தொகுதியிலிருந்து அன்றைய சென்னை சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1946 ஆம் ஆண்டு முதல் 1951 ஆம் ஆண்டு வரை செவ்வனே பணியாற்றியுள்ளார்கள்.

திரு. கி. எத்திராசன் அவர்கள், அன்றைய செங்கல்பட்டு மாவட்டம், அச்சரப்பாக்கம் தனித் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு இருமுறை தேர்ந்தெடுக்கப்பட்டு 1977 ஆம் ஆண்டு முதல் 1980 ஆம் ஆண்டு வரை மற்றும் 1985 ஆம் ஆண்டு முதல் 1988 ஆம் ஆண்டு வரை நல்லமுறையில் பணியாற்றியுள்ளார்கள்.

திரு. எம். சந்திரசேகர் அவர்கள், அன்றைய தென்னாற்காடு மாவட்டம், முகையூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1985 ஆம் ஆண்டு முதல் 1988 ஆம் ஆண்டு வரை சிறப்புறப் பணியாற்றியுள்ளார்கள்.

திரு. கே. பெருமாள் பிள்ளை அவர்கள், கன்னியாகுமரி மாவட்டம், கன்னியாகுமரி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1985 ஆம் ஆண்டு முதல் 1988 ஆம் ஆண்டு வரை நன்கு பணியாற்றியுள்ளார்கள்.

விடுதலைப் போராட்ட வீரரான திரு. டி.ஆர். வரதன் அவர்கள் தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1952 ஆம் ஆண்டு முதல் 1957 ஆம் ஆண்டு வரை போற்றத்தக்க வகையில் பணியாற்றியுள்ளார்கள்.

திரு. ஆ. கு. மூர்த்தி அவர்கள், திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஜெயங்கொண்டம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப்





பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1967 ஆம் ஆண்டு முதல் 1971 ஆம் ஆண்டு வரை பாராட்டத்தக்க வகையில் பணியாற்றியுள்ளார்கள்.

திரு. வி. சுவாமிநாதன் அவர்கள், திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருவெறும்பூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1967 ஆம் ஆண்டு முதல் 1971 ஆம் ஆண்டு வரை சிறப்புடன் பணியாற்றியுள்ளார்கள்.

திரு. எஸ். பரமசிவம் அவர்கள் அன்றைய மதுரை மாவட்டம், ஆண்டிப்பட்டி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1967 ஆம் ஆண்டு முதல் 1971 ஆம் ஆண்டு வரை சீரிய முறையில் பணியாற்றியுள்ளார்கள்.

திரு. வி. பாலகிருஷ்ணன் அவர்கள், புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டைத் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1952 ஆம் ஆண்டு முதல் 1957 ஆம் ஆண்டு வரை நல்லமுறையில் பணியாற்றியுள்ளார்கள்.

இப்பெரியவர்களின் மறைவு குறித்து அவர்களை இழந்து தவிக்கும் அவர்தம் குடும்பத்தினர்க்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இயற்கை எய்திய இப்பெரியவர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று ஒரு மணித்துளி அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று ஒரு மணித்துளி அமைதி காத்தனர்)

முற்பகல் 9-35

## 2. இரங்கல் தீர்மானங்கள்

### (அ) முன்னாள் இந்தியப் பிரதமர் திரு. குல்சாரிலால் நந்தா மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரங்கல் தீர்மானங்கள். பாரதத்தின் முன்னாள் பிரதமர் திரு. குல்சாரிலால் நந்தா அவர்கள் மறைவு குறித்த இரங்கல் தீர்மானத்தைப் பேரவைமுன் வைக்கிறேன் :

"நெடிய அனுபவம் கொண்ட ஒரு தலைவரும், விடுதலைப் போராட்ட வீரரும், எளிமையும் நேர்மையும் ஒருங்கே அமையப் பெற்றவரும், குறுகிய காலத்திற்கு இருமுறை பிரதமராக இருந்தவருமான திரு. குல்சாரிலால் நந்தா அவர்கள், 15-01-1998 அன்று மறைவுற்றதை அறிந்து இம்மாமன்றம் ஆழ்ந்த அதிர்ச்சியையும், துயரத்தையும், வேதனையையும் தெரிவித்துக்கொள்கிறது.

தற்போது பாகிஸ்தானின் ஒரு பகுதியாக விளங்கும் பஞ்சாபில் பிறந்திருந்த போதிலும், மகாத்மா காந்தியின் அறிவுரையின் பேரில் அகமதாபாத்தைத் தன் வாழ்விடமாக்கிக் கொண்டு காந்திஜி அமைத்த ஏழை பஞ்சாலைத் தொழிலாளர்களின் தொழிற்சங்கமான மஸ்தூர் மகாஜன் சங்கத்திற்கு அவர் பொறுப்பு ஏற்றார். உண்மையான காந்தியவாதியாக இருந்த அவர் தன் வாழ்நாளில் பெரும் பகுதியைத் தொழிலாளர்களின் முன்னேற்றத்திற்காகவே செலவிட்டார்.

சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டதற்காக இவர் மூன்று முறை சிறையிலடைக்கப்பட்டார். பம்பாய் சட்டமன்றப் பேரவைக்கு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு டாக்டர் பாபா சாஹேப் கெர் அமைச்சரவையில் சிறிது காலம் அவர் இடம் பெற்றிருந்தார். சுதந்திர இந்தியாவின் முதல் திட்ட அமைச்சராகப் பதவி வகித்ததோடன்றி, பண்டித ஜவஹர்லால் நேரு, திரு. லால்பகதூர் சாஸ்திரி, திருமதி இந்திரா காந்தி ஆகியோர் தலைமையிலான அமைச்சரவைகளிலும் பல்வேறு பொறுப்புகளை வகித்தார். நாட்டிற்கு அவர் ஆற்றிய தன்னலமற்ற சேவைக்காக இந்தியாவின் உயரிய விருதான "பாரத ரத்னா" விருது அவருக்கு அண்மையில் வழங்கப்பட்டது. அவரது மறைவினால் காந்தியடிகள் காலப் போராட்டம், தியாகம் ஆகியவற்றோடு இருந்த ஓர் இணைப்பை நாடு இழந்து விட்டது.

அன்னாரின் குடும்பத்தினருக்கு இம்மாமன்றம் தன் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது."

## (ஆ) மத்திய பாதுகாப்புத் துறை இணை அமைச்சர் திரு. என்.வி.என். சோமு மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மத்திய பாதுகாப்புத் துறை இணை அமைச்சர் திரு. என்.வி.என். சோமு அவர்கள் மறைவு குறித்த இரங்கல் தீர்மானத்தைப் பேரவைமுன் வைக்கிறேன் :





"1980 ஆம் ஆண்டு முதல் 1984 ஆம் ஆண்டு வரை சென்னை, பூங்கா நகர் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் உறுப்பினராகவும், 1996 ஆம் ஆண்டில் மக்களவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு மத்திய பாதுகாப்புத் துறை இணை அமைச்சராகவும், இனிய பண்பும், செயல்திறனும் கொண்டு எளிமையுடன் வாழ்ந்த திரு. என்.வி.என். சோமு அவர்கள் 14-11-1997 அன்று மறைந்தமை குறித்து இப்பேரவை பெரும் அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது. அன்னாரது மறைவினால் அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினர்க்கு இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் தெரிவித்துக் கொள்கிறது."

மறைந்த இப்பெரியவர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில் இப்பேரவையின் உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று ஒரு மணித்துளி அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று ஒரு மணித்துளி அமைதி காத்தனர்)

மறைந்தவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில், பேரவையின் நிகழ்ச்சிகள் பதினைந்து நிமிடங்கள் ஒத்திவைக்கப்படுகின்றன.

பேரவை மீண்டும் 9-55 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை முற்பகல் 9-40 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

[1998 மார்ச் 19

முற்பகல் 9-55

முற்பகல் 9-55 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

## 3. வினாக்கள்-விடைகள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் வினா எண் 1. திரு. க. மணிவர்மா, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

1—

**புறக்காவல் நிலையத்தை முழுக் காவல் நிலையமாக்குதல்**

***8082—திரு. க. மணிவர்மா:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தண்டராம்பட்டு தொகுதி, வாணாபுரம் புறக்காவல் நிலையத்தை, காவல் நிலையமாக மாற்றியமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருவண்ணாமலை மாவட்டம், தண்டராம்பட்டு தொகுதி, வாணாபுரம் காவல் நிலையம் முழுக் காவல் நிலையமாக நிலை உயர்த்தப்பட்டு 21-5-1997 முதல் செயல்பட்டு வருகிறது.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாணாபுரம் புறக்காவல் நிலையத்தை முழுக் காவல் நிலையமாக உயர்த்தித் தந்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு தண்டராம்பட்டு தொகுதி மக்கள் சார்பாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு, புதியதாகத் தொடங்கப்பட்ட வாணாபுரம் காவல்



1998 மார்ச் 19]

நிலையத்தில் போதுமான காவலர்களையும், ஆய்வாளர் ஒருவரையும் நியமனம் செய்ய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பேரவைத் தலைவர் அவர்களே போதுமான அளவுக்குக் காவலர்களோ, ஆய்வாளரோ, இல்லையென்றால் அதுகுறித்து உடனடியாக விசாரித்து ஆவன செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்:

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இன்னும் எத்தனை புறக்காவல் நிலையங்கள் முழுக் காவல் நிலையங்களாக மாற்றப்படாமல் இருக்கின்றன? ஏனென்றால் இப்போது சட்டம்—ஒழுங்கு என்று சிலபேர் பிரச்சினைகள் கிளப்பி, வெடிகுண்டு வெடிக்காதா அல்லது ஆட்சி கலையாதா என்றெல்லாம் கனவு கண்டு கொண்டிருக்கிற இந்த நேரத்தில், காவல் நிலையங்களை இரண்டாகப் பிரித்துக் கூட, மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமிழகம் முழுவதும் இன்னும் கொஞ்சம் காவல் நிலையங்களைப் பரவலாக்கி, காவலர்களை அதிகரிக்க நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்வியினுடைய முதல் பகுதிக்குப் புறக்காவல் நிலையங்களினுடைய எண்ணிக்கை 116 என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். படிப்படியாக எல்லாப் புறக்காவல் நிலையங்களும் முழுக்காவல் நிலையங்களாக மாற்றப்பட்டு வருகின்றன. நாம் இரண்டாவதாக நியமித்த போலீஸ் கமிஷனுடைய பரிந்துரையின்படி இனி புறக்காவல் நிலையங்களுக்குப் பதிலாக முழுக் காவல் நிலையங்களை அமைக்கலாம் என்ற அந்தக் கருத்தோட்டத்தின் அடிப்படையிலே அரசு செயல்பட்டு வருகின்றது.

காவலர்களைப் பொறுத்தவரையில், இன்றைக்கு 86,071 பேர் மொத்தப் பணியாளர்கள் காவல் துறையிலே இருக்கிறார்கள். அதைக் கணக்கிட்டுப் பார்த்தால், மக்கள் தொகையிலே 686 பேருக்கு ஒரு காவலர் என்கின்ற முறையிலே இன்றைக்குக் காவலர்கள் இருக்கிறார்கள். இன்னும் நாட்டின் நிலை, சமுதாய நிலை, குறிப்பாக நம்முடைய

[1998 மார்ச் 19

மாநிலத்தினுடைய நிலை இவற்றையெல்லாம் எண்ணிப் பார்க்கும்போது காவலர்களுடைய எண்ணிக்கை மேலும் பெருக வேண்டும் என்பதிலே இருவேறு கருத்துக்களுக்கு இடமில்லை. அதனால்தான் இப்போது கூட அதிகக் காவலர்களைச் சேர்ப்பதற்கான முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வ. அன்பழகன்.

**திரு. வ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மகளிர் காவல் நிலையங்கள் தமிழ்நாட்டில் ஒரு மாவட்டத்திற்கு ஒன்று அல்லது இரண்டு என்ற அளவிலேதான் இருக்கின்றன. நம்முடைய அரசு ஒரு வட்டத்திற்கு ஒரு மகளிர் காவல் நிலையம் என்ற அளவிலே ஏற்படுத்த, நம்முடைய முதல்வர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மாநிலத்திலே மகளிர் காவல் நிலையங்களுடைய எண்ணிக்கை 57-ஆக இருக்கிறது. அதை மேலும் பெருக்க வேண்டும் என்பதுதான் அரசினுடைய யோசனை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் அறிவித்த மாதிரி புறக்காவல் நிலையங்கள் எல்லாம் எவ்வளவு ஆண்டிற்குள் முழுக் காவல் நிலையங்களாக மாற்றப்படும்? அதிலும் குறிப்பாக, நடப்பாண்டிலே புறக்காவல் நிலையங்கள் எல்லாம் முழுக் காவல் நிலையங்களாக மாற்றப்படுவது சாலப்பொருத்தம் என்பதால் அதை மாற்றிக் கொடுக்குமாறு கேட்டுக் கொள்வதோடு, என்னுடைய பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட பெரும்பாணி பகுதியிலே புறக்காவல் நிலையம் இயங்கி வருகிறது. அதை நிரந்தரக் காவல் நிலையமாக மாற்றுவதோடு, தேவையான வாகன வசதியும் செய்து தரப்படுமா என்பதையும் முதலமைச்சர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை மானியத்திலே எழுப்ப வேண்டிய கோரிக்கையை இந்தக் கேள்வியைப் பயன்படுத்திக் கொண்டு எழுப்பியிருக்கின்றார்கள். காவல் துறை மானியத்திலே இந்தக் கோரிக்கை எழுப்பப்படுமேயானால் அதுபற்றிக் கவனிக்கப்படும்.



1998 மார்ச் 19]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில், தோவட்டியோடில் புறக்காவல் நிலையமாகத் தொடங்கப்பட்ட ஒரு காவல் நிலையம் பல ஆண்டுகளாகப் பூட்டியிருக்கின்றது. இதுபோன்று தமிழகத்தில் வேறு உள்ளதா? தோவட்டியோடு புறக்காவல் நிலையத்தைப் பொறுத்தமட்டில், நெடுஞ்சாலையினுடைய பக்கத்தில் உள்ளது. அது போக்குவரத்திற்கு ரொம்பப் பாதுகாப்பாக அமையும். எனவே, மீண்டும் அதைத் தொடங்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-00

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பிட்டு எந்தப் புறக்காவல் நிலையம் அப்படிப் பூட்டப்பட்டுக் கிடக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிப்பார்களேயானால், அதுபற்றி அரசு உடனடியாகக் கவனிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மா. இராமச்சந்திரன்.

**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில புறக்காவல் நிலையங்கள், முழுக் காவல் நிலையங்களாக அறிவிக்கப்பட்ட பின்னரும் அவற்றில் இன்னும் உதவி ஆய்வாளர்கள்தான் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஆய்வாளர் அவர்களைத் தனியாகப் போடுகிறபோதுதான் அதைச் சரியாக நடைமுறைப்படுத்த முடியும். சில காவல் நிலையங்களில் இன்னும் ஆய்வாளர்கள் இல்லாமல் இருக்கிறார்கள். அவைகளுக்கு ஆய்வாளர்கள் நியமிக்கப்படுவார்களா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் நிலையங்களுடைய தகுதி, அது எப்படி இயங்க வேண்டுமென்ற நிலை, இவைகளைப் பொறுத்துத்தான் ஆய்வாளர்கள், துணை ஆய்வாளர்கள் நியமிக்கப்படுகின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தக் காவல் நிலையத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறார்கள் என்று தெரியவில்லை. அதுபற்றி ஒரு குறிப்பு அனுப்புவார்களேயானால் கவனிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் தே. குமாரதாஸ்.

[1998 மார்ச் 19

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முந்தைய ஆட்சியின்போது தேர்வு செய்யப்பட்ட 98 உதவி ஆய்வாளர்கள் மீண்டும் பணியில் அமர்த்தப்பட வேண்டுமென்று கடந்தமுறை சட்டமன்றத்தில் கேட்டபோது, மாண்புமிகு முதல்வர் அவர்கள் கனிவுடன் பரிசீலிப்பதாக பதில் அளித்தார்கள். அவர்கள் மீண்டும் பணியில் தேர்வு செய்யப்படாத நிலையில், மிகவும் வாடிய நிலையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள். தேர்வு செய்யப்பட்ட அவர்களை மீண்டும் பணியில் அமர்த்த கருணை உள்ளத்தோடு பரிசீலிக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்வு செய்யப்பட்டவர்களை யாரும் விலக்கவில்லை. கடந்த ஆட்சியிலே காவல் துறைக்குப் பல பேர் எடுக்கப்பட்டார்கள். அது எந்த முறையில் எடுக்கப்பட்டது; எந்த முறை கையாளப்பட்டது என்பதைப் பற்றியெல்லாம் கூடக் கவலைப்படாமல், அவர்களையெல்லாம் வீட்டுக்கு அனுப்புகின்ற நிலையை ஏற்படுத்தாமல் அவர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டு, அவர்களையும் அரசு தேர்வு செய்யும் என்று இந்த அவையிலே உறுதி அளிக்கப்பட்டு, அவ்வாறு செய்யப்பட்டு வருகிறது. அவர்கள் எல்லாம் இப்போது பயிற்சியிலே இருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. மோகனதாசன்.

**திரு. கோ. மோகனதாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூம்புகார் தொகுதியில் பாரசாலை என்ற ஒரு ஊரில், புறக்காவல் நிலையம் இயங்கிக் கொண்டு வருகிறது. அதிலே ஆய்வாளர் இல்லாமல், தலைமைக் காவலர் மட்டும் இருக்கிறார். எனவே, அதை இந்த ஆண்டு முழுக் காவல் நிலையமாக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாற்றி அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புறக்காவல் நிலையங்களைப் படிப்படியாகத்தான் முழுக் காவல் நிலையங்களாக மாற்ற இயலும் என்று முதலிலேயே சொல்லியிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். திருநாவுக்கரசு.



1998 மார்ச் 19]

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்குத் தொடர்பு இல்லை என்றாலும், மாண்புமிகு முதல்வர் அவர்கள் எல்லாக் கேள்விகளுக்கும் பதில் சொல்கிற காரணத்தினாலே, இது ஏற்கெனவே வந்த கேள்வியை ஒட்டியது. 360 பேர் காவலர்களாகத் தேர்வு செய்யப்பட்டவர்கள் வயது வரம்பு தாண்டி வேறு பணிகளுக்குச் செல்ல முடியாத நிலையில் இருப்பவர்கள் மீண்டும் பணிக்கு எடுத்துக் கொள்ளப்படுவார்கள் என்று இந்தச் சட்டமன்றத்திலேகூட ஏற்கெனவே அறிவிக்கப்பட்டது. இன்னும் அவர்கள் பணியிலே அமர்த்தப்படாமல் இருக்கிறார்கள். அதுகுறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பரிசீலித்து, அவர்களை வேலைக்கு எடுத்துக் கொள்ள ஆவன செய்து ஆணையிடுவார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியினுடைய அடிப்படையிலே இந்தப் பிரச்சினை ஆராயப்பட்டு, உரிய முறையில் நடவடிக்கை எடுக்கப்படும். தகுதி இருந்தால் நிச்சயமாக அவர்கள் புறக்கணிக்கப்படமாட்டார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்கள் அதிகமாக நடமாடும் பகுதி, பள்ளிக் குழந்தைகள், காலேஜ் குழந்தைகள் நடமாடும் பகுதியிலேயெல்லாம் சில காவாலிப் பயல்கள் கிண்டல் பண்ணுவதும், கேலி பண்ணுவதும், பெண்களைக் கடத்திப் போவதுமாக இருக்கிறது. தமிழ்நாட்டிலே அந்த இடங்களையெல்லாம் ஆராய்ந்து அங்கெல்லாம் பெண் காவல் நிலையங்கள் அமைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற அந்த நபர்கள் உலவுகிற இடத்தில் பெண் காவல் நிலையங்களையும் எச்சரிக்கையுடன்தான் வைக்க வேண்டும். (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு எங்கு பார்த்தாலும் குற்றங்கள் அதிகமாக இருக்கின்ற நிலையில், காவல் நிலையங்களில் இருக்கின்ற காவலர்களுடைய

[1998 மார்ச் 19

எண்ணிக்கை மிகவும் குறைவாக இருக்கிறது. அதனால், அவர்கள் குற்றங்களைத் தடுப்பதற்கு, நடவடிக்கை எடுப்பதற்கு எங்களுக்கு அதிகக் காவலர்கள் தேவை என்று பல்வேறு இடங்களிலும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதை இந்த அரசு பரிசீலனை செய்து, இன்றைக்கு காவல் நிலையங்களில் இருக்கின்ற காவலர்களுடைய எண்ணிக்கையை உயர்த்துவதற்கு தமிழக முதல்வர் அவர்கள் முன்வருவாரா என்று தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலிலேயே நான் பதில் சொல்லியிருக்கிறேன். இப்போது நம்முடைய மாநிலத்தில் 686 பேருக்கு ஒரு காவலர் என்ற முறையிலேதான் இருக்கின்றார்கள். இது அதிகப்படுத்தப்பட வேண்டும். எனவேதான் இந்த ஆண்டுகூட காவலர்களை அதிகமாகச் சேர்க்கின்ற பணி தொடங்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் கிராமப் பகுதியில் எல்லாம் நிறைய காவல் நிலையங்களை ஏற்படுத்தியிருக்கின்றோம். தனியார் வீடுகளிலேதான் அந்தக் காவல் நிலையங்கள் இருந்து கொண்டிருக்கின்றன. தனியார் வீடுகளிலேதான் சப்-இன்ஸ்பெக்டர் போன்றவர்கள் குடியிருந்து வருகிறார்கள், அதனால் சில கஷ்டங்கள் ஏற்படுகின்றன. அதாவது கேஸ் நடத்துவதிலேகூட சில தொந்தரவுகள் வருவதாக நான் அறிகின்றேன். ஆகையினால் எல்லா இடங்களிலும் காவல் நிலையங்களைக் கட்டுவதற்கும், குடியிருப்புக்களைக் கட்டுவதற்குமான நடவடிக்கை எடுக்க வேண்டும். நிறைய பெண் காவலர்களை நியமிப்பதோடு அவர்களுடைய உடையில் சிறு மாறுதல் செய்ய வேண்டும் என்று நான் ஏற்கெனவே சட்டசபையிலே சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களும் அதற்கு ஒப்புக் கொண்டிருக்கிறார்கள் என்று நான் கருதுகின்றேன். அவர்களுக்கு இந்த 'ட்ரெஸ்' ரொம்ப அழகாகத்தான் இருக்கிறது. ஆனால் மேலே ஒரு மேலாடை போடுகின்ற மாதிரி, அதிலேயே வைத்து தைக்கக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாக்கப்படுமானால் இன்னும் கொஞ்சம் அவர்களுக்குப் பாதுகாப்பாக இருக்கும் என்று நான்



1998 மார்ச் 19]

அறிகின்றேன். ஆகையினால் தயவுசெய்து அந்த மேலாடை வருவதற்கான முயற்சியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் திருமதி பொன்னம்மாள் அவர்கள் இந்தக் கருத்தைச் சொல்லியிருக்கின்றார்கள். இந்தக் கருத்து ஆலோசனையிலே இருக்கிறது. ஆனால் அதை எப்படி நிறைவேற்றுவது என்பதைப்பற்றி மேலும் சில ஆக்கபூர்வமான கருத்துக்களை நம்முடைய அக்காள் பொன்னம்மாள் அவர்களிடத்திலிருந்து எதிர்பார்க்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா.மு. முபாரக்.

**திரு. பா.மு. முபாரக்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சிக் காலத்தில் தேர்வு செய்யப்பட்ட காவலர்களை மீண்டும் பணியில் அமர்த்திக்கொள்ள வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டுக்கொண்டபடி கருணை உள்ளத்தோடு, அவர்களுக்கு அந்த வாய்ப்புத் தரப்படும் என்று முதல்வர் அவர்கள் தெரிவிக்கின்றார்கள். ஆனால் அவர்கள் எல்லாம் இந்த ஆட்சிக்கு விசுவாசமாக இருப்பார்களா என்கிற சந்தேகம் நாட்டு மக்களிடத்திலே இருப்பதால் அதைப் பரிசீலிக்க வேண்டும்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது கேள்வி இல்லை. திரு டி. மணி.

**திரு. டி. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, புதிய காவல் நிலையங்களை அமைக்கின்றபோது அதற்குத் தேவையான வாகனங்கள், தொலைபேசி — இவை இரண்டும் இல்லாத ஒரு சூழ்நிலை உள்ளது. குறிப்பாக கரையாங்குழி காவல் நிலையத்திலும், ஆறுகாணி காவல் நிலையத்திலும் உள்ளது. எனவே அந்தப் பகுதிகளுக்கு, மலைப்பாங்கான பகுதிகள் என்ற காரணத்தினால் தொலைபேசி வசதியும், வாகன வசதியும் செய்து கொடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதியாதாரத்திற்கு ஏற்ற வகையில் படிப்படியாக வாகன வசதிகள், தொலைபேசி வசதிகள் மற்றும் அந்தக் காவல் நிலையத்திற்குத் தேவையான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டு வருகின்றன. இதைப் படிப்படியாகத்தான் செய்யவேண்டியிருக்கின்றது.

[1998 மார்ச் 19

ஏனென்றால், காவல் நிலையங்களுடைய எண்ணிக்கை அதிகமாக, அதிகமாக நிதியினுடைய தேவையும் அதிகமாகின்றது. எனவே, இரண்டையும் கணக்கிட்டு இந்தப் பணிகளை ஆற்ற வேண்டியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மிக அத்தியாவசியமாக குறிப்பிட்ட அந்தக் காவல் நிலையத்தைப்பற்றி மீண்டும் நினைவு படுத்துவார்களேயானால் உடனடியாக அதைக் கவனிக்க எல்லா வகையான ஆய்வுகளும் நடத்தப்பட்டு அவர்களுடைய எண்ணம் நிறைவேற்றப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 2, திரு. கே. சுப்பராயன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

2—

## ஆலங்குளம் சிமென்ட் ஆலையைத் திறத்தல்

***11386—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குளம் அரசு சிமெண்ட் ஆலையைத் திறக்க உயர் நீதிமன்றம் எந்த அடிப்படையில் அனுமதி வழங்கியுள்ளது?

(ஆ) சுற்றுப்புறச் சூழல் பாதிக்காதவாறு தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளனவா?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் விதிமுறைகளுக்கு மாறாக எந்தவிதச் சுற்றுப்புறச் சூழ்நிலையும் பாதிக்கப்படவில்லை என உயர் நீதிமன்றத்திற்கு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் அளித்த அறிக்கையின் அடிப்படையில் ஆலங்குளம் சிமெண்ட் ஆலையை இயக்க உயர் நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

(ஆ) ஆம்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் மாசுக் கட்டுப்பாட்டு வாரிய விதிமுறைகளுக்கு மீறிச் செயல்படுகிறது என்ற பிரச்சினையின்கீழ் வழக்குத் தொடரப்பட்டு நீதிமன்றத்தால் மூட ஆணையிடப்பட்ட தொழிற்சாலைகள் எத்தனை? அவற்றால் பாதிக்கப்பட்டிருக்கின்ற தொழிலாளர்கள் எத்தனை பேர் என்று அறிய விரும்புகிறேன்.



1998 மார்ச் 19]

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர், அவர்களே, அவ்வாறு மூடப்பட்டுள்ள தொழிற்சாலைகளுடைய மொத்த எண்ணிக்கை 858. அதிலே தொழில்வாரியாகச் சொல்ல வேண்டுமானால், தோல் பதனிடும் தொழிற்சாலைகள் 253, மின் மூலாம் பூசும் தொழிற்சாலைகள் 73, சலவை மற்றும் சாயத் தொழிற்சாலைகள் 434, கல் உடைக்கும் தொழிற்சாலைகள் 81, ஜவ்வரிசித் தொழிற்சாலைகள் 16, எரிசாராயத் தொழிற்சாலை 1. அவற்றிலே பணியாற்றுகின்ற தொழிலாளர்களுடைய எண்ணிக்கையைப் பற்றி என்னிடத்திலே விவரங்கள் இல்லை. பிறகு தனிக் கேள்வி போட்டால் விவரங்கள் அளிக்க இயலும்.

முற்பகல் *10-10*

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற்சாலைகளால் சமூக வாழ்வு மாசுபடுவதற்கு எந்தவகையிலும் தொழிலாளர்கள் காரணமானவர்கள் அல்ல. ஆனால் நீதிமன்றங்கள் பசுமை நீதிமன்றங்கள் ஆகட்டும், வேறு நீதிமன்றங்கள் ஆகட்டும், இந்தப் பிரச்சினைகள் குறித்து தங்களிடம் முறையீடு வருகிறபோது அந்தப் பிரச்சினையின் அடிப்படையில் தொழிற்சாலைகள் மூடப்பட வேண்டுமென்று ஆணையிட்டு விடுகின்றன. மூடப்படுவதன் மூலம் உடனடியாகப் பாதிக்கப்படுகிறவர்கள் தொழிலாளர்கள் தான். நீதிமன்றத் தீர்ப்பு என்பது குற்றவாளிகளைத் தண்டிக்க வேண்டுமே தவிர, நிரபராதிகளைத் தண்டித்து விடக்கூடாது. ஆனால் நடைமுறையில் தொழிற்சாலைகள் மூடப்படுவதால் நிரபராதிகளான தொழிலாளர்கள் தண்டிக்கப்படுகிறார்கள். இதனால் அவர்கள் வேலை இழந்து வாழ்க்கை பாதித்து விடுகிறதே, இதை ஈடுகட்டுவதற்கு பொருத்தமான வழிமுறைகளை உருவாக்குவது குறித்து அரசு பரிசீலிக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்தகைய தொழிற்சாலைகளில் பணிபுரிகின்றவர்களுடைய எண்ணிக்கையைவிட இதுபோன்ற

[1998 மார்ச் 19

தொழிற்சாலைகளுடைய கழிவுப் பொருட்களால் அல்லது அதிலிருந்து உருவாகின்ற மாசினால் பாதிக்கப்படுகின்ற மக்கள் தொகை அதிகம் என்பதை நாம் மறந்து விடக்கூடாது. ஒரு தொழிற்சாலை மூடப்படுகின்ற காரணத்தால் 200 அல்லது 300 பேர் தொழிலாளர்கள் பாதிக்கப்படக்கூடும். ஆனால் அது மூடப்படாமல் அந்த மாசு மிகுந்த தொழிற்சாலைகளுடைய கழிவுப் பொருட்கள் வெளியேறும்போது வாய்க்கால்கள், குளங்கள், காற்று இவைகளால் மாசு பரவி, அதன் காரணமாக உயிர் இழக்கின்ற கால்நடைகள், பாதிக்கப்படுகின்ற பல்லாயிரக்கணக்கான மக்கள், விவசாயிகளுடைய பயிர்கள் இவைகளை எல்லாம் எண்ணும்போது, இரண்டையும் ஒப்பிட்டுப் பார்த்தால், அதிலே தான் அதிக இழப்பு. நூற்றுக்கணக்கான தொழிலாளர்களுடைய வாழ்வு பாதிக்கப்படுகிறது; ஆனால் பொதுமக்கள், விவசாயிகள், வெளியில் உள்ள மக்கள் பல்லாயிரக்கணக்கில் பாதிக்கப்படுகிறார்கள். நான் இந்த ஒப்புநோக்கினை எடுத்துக் காட்டுவதால் தொழிலாளர்கள் பாதிக்கப்பட வேண்டும் என்ற கருத்துக்கு வலுவூட்ட விரும்பவில்லை என்பது நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்களுக்கு மிக நன்றாகத் தெரியும். அதனால்தான் அரசின் சார்பில் இந்தத் தொழிற்சாலைகளிலே சுத்திகரிப்பு நிலையங்களை உருவாக்குவதற்கு உதவிகளைச் செய்து வருகின்றோம். மத்திய அரசின் சார்பிலும் மற்றும் நிதி நிறுவனங்களின் சார்பிலும் கடன் கொடுக்கப்பட்டு சுத்திகரிப்புக்கான சாதனங்களை அமைக்க வேண்டுமென்று நாம் இன்றைக்கு வலியுறுத்தி வருகிறோம். ஏற்கெனவே மாநில அரசு மானியமாக வழங்கியது. சுத்திகரிப்பு நிலையங்களை அமைத்தால் அதற்கான செலவிலே, திட்ட மதிப்பீட்டில் 25 விழுக்காடு அல்லது அதிகபட்சமாக ரூபாய் 50 இலட்சம் மாநில அரசு தந்தது. அதேபோல் மத்திய அரசு மானியமும் 25 விழுக்காடு அல்லது அதிகபட்சமாக 50 இலட்ச ரூபாய் இதில் எது குறைவோ அது என்ற ஒரு நிலை இருந்தது. இப்போது இந்த அரசு வந்த பிறகு அதைக் கூட மாற்றி, திட்ட மதிப்பீட்டிலே 25 விழுக்காடு மாநில அரசு—அதாவது எது குறைவு, எது அதிகம் என்றெல்லாம் பார்க்காமல் எவ்வளவு செலவானாலும்— மாநில அரசு 25 விழுக்காடு, மத்திய அரசு 25 விழுக்காடு, உறுப்பினர்களுடைய பங்குத் தொகையாக 20 விழுக்காடு என்பதுடன், நிதி நிறுவனங்களின் கடனுதவியாகத் திட்ட மதிப்பீட்டிலே 30 விழுக்காடும் பெறுகின்ற அளவுக்கு ஒரு சூழ்நிலையை அரசின் சார்பிலே உருவாக்கியிருக்கிறோம். அதையாவது பயன்படுத்திக் கொண்டு



1998 மார்ச் 19]

அந்த அதிபர்கள், ஆலை அதிபர்கள், தொழிற்சாலை அதிபர்கள் முன்வந்து மாசினை நீக்க முன்வருவார்களானால் தொழிலாளர்களும் நலன் பெறுவார்கள். அதுபோல் பொதுமக்களும் நலன் பெறுவார்கள். அந்தக் குறிக்கோளோடு தான் இந்த அரசு செயல்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ம. அப்துல் லத்திப்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தோல் மூடப்பட்ட தொழிற்சாலைகளில் பெரும்பாலானவை, தோல் தொழிற்சாலைகள் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் புள்ளிவிவரங்களின் வாயிலாகத் தெரிவித்திருக்கிறார்கள். குறிப்பாக, என்னுடைய தொகுதி இதிலே பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது. இதுவரையிலே மூடப்பட்ட தோல் தொழிற்சாலைகளைப் பொறுத்தவரையிலே எவ்வளவு தொழிற்சாலைகளுக்கு உதவிகள் அளிக்கப்பட்டு சுத்திகரிப்பு நிலையங்களை ஏற்படுத்த அரசு ஆவன செய்திருக்கிறது? அப்படி மூடப்பட்ட தொழிற்சாலைகளில் எவ்வளவு தொழிற்சாலைகள் மீண்டும் திறக்கப்பட்டிருக்கின்றன? சில இடங்களிலே சுத்திகரிப்பு நிலையங்களை ஏற்படுத்துவதற்குக்கூட தடைகள் ஏற்படுகின்றன. இந்தத் தடைகளை நீக்கி, சுத்திகரிப்பு நிலையங்களை ஏற்படுத்தவும் அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஆலங்குளம் சிமெண்ட் ஆலையிலிருந்து தொடங்கி, இப்பொழுது வாணியம்பாடி வரையிலே வந்திருக்கின்றது. எத்தனை தொழிற்சாலைகள் இப்பொழுது சீர்படுத்தப்பட்டிருக்கின்றன என்று கேட்டார்கள். இந்தத் தோல் பதனிடும் தொழிற்சாலையிலே பிரச்சினை ஏற்பட்டபொழுது, நான் முத்தரப்பு மாநாடு ஒன்றைக் கூட்டி அவர்களிடத்தில் விவாதித்து, அந்தத் தொழிலதிபர்கள் சுத்திகரிப்பு நிலையங்களை அமைப்பதற்கு ஒத்துக்கொண்டு, அதன்படி படிப்படியாக அந்த நிலையங்களை அமைத்துக் கொண்டு வருகின்றார்கள். எத்தனை சுத்திகரிப்பு நிலையங்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அருமை நண்பர் லத்தீப் அவர்கள் என்னைக் கேட்கிறார்கள். தொகுதியினுடைய உறுப்பினர் என்கின்ற முறையில், இதுவரையிலே அந்தக் கணக்கையெடுத்து, மற்றவர்களும் சுத்திகரிப்பு நிலையங்களை

[1998 மார்ச் 19

உருவாக்குவதற்கு அவர்கள் ஊக்கம் ஏற்படுத்தியிருப்பார்கள் என்று நினைத்தேன்; அது நடைபெறவில்லை என்பதை எண்ணி உள்ளபடியே நான் ஏமாற்றம் அடைகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 3, திரு. வி. பெருமாள், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

3—

**உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்குதல்**

***3528—திரு. வி. பெருமாள்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஏற்காடு தொகுதி, பெத்தநாயக்கன்பாளையம் ஒன்றியம், தும்பல் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1998-99 ஆம் கல்வி ஆண்டில் இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மேம்படுத்தக் கோரி கருத்துருக்கள் பெறப்படுமானால், உயர்மட்டக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. வி. பெருமாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட கேள்விக்கு விடையும், விளக்கமும் அளிப்பாரா என்று அறிய விரும்புகிறேன். ஏற்காடு தொகுதியில், பெத்தநாயக்கன்பாளையம் ஊராட்சியில், தும்பல் அரசினர் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்றிக் கொடுக்கச் சொல்லி, போன வருடமே அறிவிப்பார்கள் என்று எதிர்பார்த்தோம். வரும் ஆண்டிலே அறிவிக்கிறேன் என்று சொன்னார்கள். அதனாலே, இந்த வருடமாவது அறிவிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு அந்தப் பள்ளியில் பத்தாவது வகுப்பிலே 56 மாணவர்கள்தான் பயின்றார்கள். அதற்கு முதல் ஆண்டு பத்தாவது வகுப்பிலே படித்தவர்களிலே 40 விழுக்காடுதான் தேர்ச்சி பெற்றார்கள். கடந்த ஆண்டு அது 50 விழுக்காடாக தேர்ச்சி பெறுகிறார்கள். உயர்ந்தாலும்கூட, முப்பது மாணவர்கள்தான் தேர்ச்சி பெறுகிறார்கள். 100 பேர், 120 பேர் பயில்கிற பள்ளிகளுக்கு முன்னுரிமை வழங்குகிற முறையில் அதற்கான குழு முடிவெடுக்கிறது. கேட்கிற அனைவரும் உடனடியாக மேல்நிலைப் பள்ளியைப் பெறக்கூடிய நிலை இன்றைக்கு இல்லை. எனவே, முன்னுரிமை அடிப்படையில் வருகிற ஆண்டில் அந்தப் பள்ளி மாணவர்களின் எண்ணிக்கை பெருகுமானால் கருதப்படும்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 4, திரு. ச. நாகரத்தினம், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

4—

**நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக்குதல்**

***7604—திரு. ச. நாகரத்தினம்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் தொகுதி, கடவூர் ஒன்றியம், மோளப்பட்டி நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் நிறைவேற்றப்படுமா?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அத்தகைய செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 5, டாக்டர் ஆ. ஞானசேகரன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

5—

**ஆரம்பச் சுகாதார நிலையத்தை மருத்துவமனையாக்குதல்**

***5846—டாக்டர் ஆ. ஞானசேகரன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்மலையனூர் தொகுதி, அனந்தபுரத்தில் உள்ள ஆரம்பச் சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மேல்மலையனூர் தொகுதி, அனந்தபுரத்தில் உள்ள ஆரம்பச் சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக மாற்றும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

**டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரும் நிதியாண்டில் அனந்தபுரத்தில் இருக்கும் ஆரம்பச் சுகாதார நிலையத்தை 24 மணி நேரமும் இயங்குகின்ற ஆரம்பச் சுகாதார நிலையமாக உயர்த்தித் தர மாண்புமிகு அமைச்சரவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, அனந்தபுரத்தில் மருந்தகமாக இருந்த ஓர் இடத்தை இன்றையதினம் ஆரம்பச் சுகாதார நிலையமாக உயர்த்தியிருக்கின்றோம். இது மேலும் 24 மணி நேரம் இயங்கக்கூடிய ஆரம்பச் சுகாதார நிலையமாக மாற்றப்பட வேண்டுமா என்பது குறித்து அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 6, திரு. ஏ.எம். ராமசாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

6—

**ஆத்தூர் மருத்துவமனையை மாவட்ட மருத்துவமனையாக மாற்றுதல்**

***7696—திரு. ஏ.எம். ராமசாமி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) ஆத்தூர் அரசினர் மருத்துவமனையை மாவட்ட மருத்துவமனையாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): மேட்டூர் அரசு மருத்துவமனையை மாவட்டத் தலைமையிட மருத்துவமனையாக மாற்றவும், ஆத்தூர் மருத்துவமனையில் தற்போதுள்ள படுக்கைகளின் எண்ணிக்கையை 200 என விரிவுபடுத்தவும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

முற்பகல் 10-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 7, திரு. பெ. ஆசையன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

7—

**வருவாய்க் கிராமங்களை இரண்டாகப் பிரித்தல்**

***9770—திரு. பெ. ஆசையன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி வட்டம், ஆண்டிப்பட்டி ஒன்றியத்திலுள்ள திம்மரசு நாயக்கனூர் வருவாய்க் கிராமத்தையும், கடமலைக்குண்டு-மயிலாடும்பாறை ஒன்றியத்திலுள்ள மேகமலை கிராமத்தையும் நிருவாக வசதிக்காக இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இப்பொருள் குறித்து செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

[1998 மார்ச் 19

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 8, செல்வி க. ராணி, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**8—**

**தம்மம்பட்டி பேரூராட்சியில் குடிநீர் வசதி**

***12389—செல்வி க. ராணி:**

*மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தலைவாசல் தொகுதி, கெங்கவல்லி வட்டம், தம்மம்பட்டி பேரூராட்சியில் பெரப்பன்சோலைக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்ற அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம்.

**செல்வி க. ராணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் 'ஆம்' என்று பதில் சொன்னார்கள். அப்படியென்றால் இந்தத் திட்டத்திற்கு வரும் நிதியாண்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கெங்கவல்லி வட்டத்தில் தம்மம்பட்டி ஊரகப் பேரூராட்சியில் தற்போதைய நிலையில் 33,210 மக்களுக்கு நாள் ஒன்றுக்கு 8 லிட்டர் வீதம்தான் தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. ஆனால் புதிய அரசு, முதலமைச்சர் அறிவித்ததையொட்டி 40 லிட்டர் கிராமப்புறங்களுக்கு வழங்க வேண்டும். அந்த அடிப்படையில் இவைகளையெல்லாம் கணக்கெடுத்து காவிரி நீரை நீராதாரமாகக் கொண்டு செயல்படுத்த, பட்டணம், சிராப்பள்ளி மற்றும் தம்மம்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் இந்த ஊரகப் பேரூராட்சி முழுமையாகப் பயன்பெறத் திட்டம் தீட்டப்பட்டு வருகிறது. ஆனால், தற்சமயம் பெரப்பன்சோலையில் அமைக்கப்பட்டுள்ள கிணற்று நீரை நீராதாரமாகக் கொண்டு குடிநீர் வழங்க ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் உத்தேச மதிப்பீடு ரூ. 85 இலட்சம். 1998-99-ல் இது நடைமுறைக்குக் கொண்டு வரப்படும்.



1998 மார்ச் 19]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 9, திரு. த. பூவேந்தன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**9—**

**பழம் பதனிடும் தொழிற்சாலை அமைத்தல்**

***7087—திரு. த. பூவேந்தன்:**

*மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திண்டுக்கல் மாவட்டம், பழனியில் பழம் பதனிடும் தொழிற்சாலை அமைக்கப்படுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. த. பூவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இரண்டாவது இடமாக மாம்பழங்களும் காய்கறி வகைகளும் பழனி பகுதிகளிலேதான் சிறப்பாக உற்பத்தி செய்கின்றார்கள். அந்த அடிப்படையிலாவது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பழம் பதனிடும் தொழிற்சாலை அமைத்துத் தருவாரா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு தரப்பில் பழம் பதனிடும் தொழிற்சாலை அமைக்க தற்போது உத்தேசம் இல்லை. ஆனால், தனியார் பழம் பதனிடும் தொழிற்சாலை அமைக்க முன்வந்தால் அரசாங்கம் அதற்கான உதவிகளைச் செய்ய 'தாய்' நிறுவனத்தின் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 10, திரு. வி.பி. இராசன், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

[1998 மார்ச் 19

10—

**சாஸ்தாகோவில் நீர்த்தேக்கத் திட்டப்பணி**

***9525—திரு. வி.பி. இராசன்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராசபாளையம் தொகுதியில் தேவதானத்திற்கு மேற்கே கணபதி சாஸ்தாகோவில் நீர்த்தேக்கத்திற்கான திட்டப் பணிகள் எந்த நிலையில் உள்ளன?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தங்களுடைய முன் அனுமதியோடு விடையை ஒரு சிறு மாற்றத்தோடு அளிக்க விரும்புகிறேன்.

விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் வட்டம், சாஸ்தாகோவில் அருகே நகரி ஆற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைக்கும் திட்டத்திற்கு முதல் நிலை அறிக்கை, 1997-98 விலை விகிதப்படி 600 இலட்சம் ரூபாய்க்கு தயாரிக்கப்பட்டு, தலைமைப் பொறியாளர் (திட்ட உருவாக்கம்) அவர்களால் 29-1-1998 அன்று அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

**திரு. வி.பி. இராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல்நிலை அறிக்கை தயார் செய்யப்பட்டதாகச் சொல்லியிருக்கிறார்கள். இந்தக் கோரிக்கை, எங்கள் தொகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கை ஆகும். **என்பது நாடறிந்த ஒன்று. வறுமையும் வேலையில்லாத் திண்டாட்டமும் தலைதூக்குகின்ற காலங்களில் அங்கே கலவரம் வருகிறது. இந்த ஓராண்டு காலத்தில் நல்ல மழை பெய்ததன் விளைவாக கலவரம் என்பது இப்போதில்லை. மழை பெய்கின்ற காலங்களில் தண்ணீரைத் தேக்கி வைத்து வேலை தொடர்ந்து கிடைக்குமானால், நிச்சயமாகக் கலவரம் வருவதற்கு வாய்ப்பில்லை என்பதை மனதில் கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மிகவும் கனிவுடன் பரிசீலனை செய்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று எங்கள் அணையை இந்த ஆண்டு

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1998 மார்ச் 19]

நிதிநிலை அறிக்கையில் சேர்க்க உத்தரவாதம் தருவாரா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன ** என்ற சொற்றொடரை அவைக்குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன், அதனால் ஒரு கலவரம் வந்துவிடக் கூடாது என்பதற்காக.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்தச் சொற்றொடர் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

முற்பகல் 10-25

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்ததைப்போல் அது வறட்சிப் பகுதி என்கிற காரணத்தால்தான், அந்தப் பகுதியிலே இப்படிப்பட்ட ஓர் அணையைக் கட்டவேண்டும் என்று அரசுக்கு அக்கறை இருக்கிற காரணத்தால்தான், அதுகுறித்து விரைவான நடவடிக்கை எடுக்கச் செய்து அறிக்கையும் அரசு பெற்றிருக்கிறது. அதை எப்போது கட்டுவது, இந்த ஆண்டிலேயே சேர்ப்பதா, இல்லையா என்பதை நிதிநிலை ஆதாரத்தைப் பொறுத்து மாண்புமிகு முதல்வர் அவர்கள்தான் முடிவு எடுப்பார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 11, திரு. து. செல்வராஜ், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

11—

**தளி சாலையில் மேம்பாலம் அமைத்தல்**

***3980—திரு. து. செல்வராஜ்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலை நகரில் தளி சாலையின் குறுக்கே இருப்புப் பாதைக் கடவில் மேம்பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): உடுமலை நகரில் தளி சாலையின் குறுக்கே இருப்புப்பாதைக் கடவில் மேம்பாலம் அமைக்கும் திட்டம் தற்சமயம் ஏதுமில்லை.

**திரு. து. செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இரயில் பாதை உடுமலை நகரத்தின் மையப் பகுதியில் செல்லுவதால் போக்குவரத்திற்கு மிகவும் இடையூறாக இருக்கிறது. மேலும், இந்த மேம்பாலத்தை மேம்படுத்துவதற்கு அதிகச் செலவு ஆகாது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கான நடவடிக்கையை மேற்கொள்வார்களா என்பதைத் தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த இடத்தில் மேம்பாலம் அமைக்க வேண்டுமெனில் சுமார் மூன்று கோடி ரூபாய் தேவைப்படும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. மேலும், அந்த இடத்திலே இப்போது போக்குவரத்து ஒரு இலட்சத்திற்குக் குறைவாக உள்ளதால், அதாவது ஊர்தி அலகு ஒரு இலட்சத்திற்குக் குறைவாக உள்ளதாலே அங்கே மேம்பாலம் கட்டுவதற்கான அனுமதியை மத்திய அரசிடமிருந்து பெற முடியாது. ஆகவே, அந்த அலகு அதிகரிக்குமெனில் அது குறித்து மத்திய அரசுக்கு எழுதி, பாதிச் செலவை மாநில அரசே ஏற்று, அதற்கான ஏற்பாடுகளை செய்வதற்கான முயற்சிகளை மேற்கொள்வோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 12, திரு. எஸ்.எஸ். பொன்முடி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**12—**

**நொய்யல் ஆற்றில் பாலம் அமைத்தல்**

***8098—திரு. எஸ்.எஸ். பொன்முடி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—





*கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் ஒன்றியம், சோமனூருக்கு அருகில் அன்னூர் சாலையில் நொய்யல் ஆற்றின் மீது பாலம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வினாவில் குறிப்பிட்டுள்ள பாலப் பணி, ஹட்கோ நிதியுதவியுடன் கட்டப்படவிருக்கும் 50 பாலப் பணிகளுள் ஒன்றாகச் சேர்க்கப்பட்டு மேற்படி பாலப் பணிக்கு ரூபாய் 176 இலட்சத்திற்கு நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

**திரு. எஸ்.எஸ். பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கான நிதியொதுக்கீடு செய்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் திட்டம் எப்போது தொடங்கப்படும், உத்தேசமாக எப்போது முடிவடையும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை இல்லாத அளவிற்கு மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய அனுமதியோடு தமிழகத்தில் 106 பாலங்கள்—50 பாலங்கள் ஹட்கோ உதவியோடும், 56 பாலங்கள் நபார்டு திட்டத்தின் கீழும் – சுதந்திரம் அடைந்து 50 ஆண்டுகளிலே கட்டப்பட்டிருப்பவை ஏறத்தாழ 150 தான் – இந்த ஒரே ஆண்டில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகு இந்த நிதியுதவியோடு 106 பாலப் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, அதற்காக 29-10-1997-லேயே நெடுஞ்சாலைத் துறையின் மூலமாக ஆணை வழங்கப்பட்டு, அதற்கான ஒப்பந்தப்புள்ளிகளும் கோரப்பட்டிருக்கின்றன. விரைவில் இந்தப் பணி தொடங்கும் என்பதை உறுப்பினருக்குச் சொல்லிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மிகச் சிறந்த சாதனைகளை எடுத்துச்சொன்னார்கள். சென்னை நகரிலே

[1998 மார்ச் 19

வாகனப் பெருக்கம் மிகுந்து வருகின்ற நாளிலே, கல்கத்தா மாதிரி மிகவும் நெருக்கமாகச் செல்லக்கூடிய நிலைமை இப்போது இங்கேயும் சாலைகளிலே உண்டாகியிருக்கிறது. இதற்காகப் பறக்கும் சாலை அமைக்கப்படுவதற்கு உதவுவதாக மலேசிய அமைச்சர் திரு. டத்தோ சாமிவேல் அவர்கள்கூட நம்முடைய தமிழக முதல்வர் அவர்களுடன் கலந்துபேசி இருக்கிறார் என்று அறிகிறேன். எனவே, Parallel Roads என்று சொல்லப்படுகின்ற அந்தப் பறக்கும் சாலை அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சியின்போதே திரு. டத்தோ சாமிவேல் அவர்களுடன் தொடர்புகொள்ளப்பட்டு. மத்திய அரசாங்கம் மூலமாக அனுமதியெல்லாம் வாங்கப்பட்டு கடிதம் எழுதப்பட்டது. அவர்கள் அதற்குரிய ஆய்வுப் பணியைத் தொடங்குவதாகச் சொன்னார்களே தவிர அவர்களிடமிருந்து உரிய பதில் எதுவும் வரவில்லை; வந்தால் அதற்கான முயற்சியை அரசு மேற்கொள்ளும். ஆனால், சென்னை நகரத்தினுடைய நெரிசலைக் குறைக்கின்ற வகையில் புறவழிச்சாலைப் பணிகள் உடனடியாகத் தொடங்கப்படவிருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி சுப்புலட்சுமி செகதீசன்.

**திருமதி சுப்புலட்சுமி செகதீசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நொய்யல் ஆற்றின் குறுக்கே எனது தொகுதியில் இரண்டு பாலங்கள் கட்டப்பட வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கோரிக்கை வைத்தோம். அது எந்த நிலையிலே இருக்கிறது என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தப் பாலங்கள் என்பதைக் குறிப்பிட்டுத் தனிக் கேள்வி போட்டால் அதற்குரிய விடை அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 13, திரு. பா. துரைசாமி மற்றும் திரு. அ.வ. அப்துல் நாசர், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.



1998 மார்ச் 19]

**13—**

### அறநிலையத் துறை தணிக்கைப் பிரிவு

***3951—திரு. பா. துரைசாமி :**

**திரு. அ.வ. அப்துல் நாசர் :**

*மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) இந்து சமய அறநிலையத் துறை தணிக்கைப் பிரிவு அரசு நிதித் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்படுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

முற்பகல் 10-30

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. பா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தணிக்கைப் பிரிவை அரசின் நிதித் துறையின்கீழ் கொண்டு வருவதில் ஏதாவது நடைமுறைச் சிக்கல் உண்டா, அவ்வாறு இருந்தால் அதைத் தீர்ப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதுதான் இல்லை என்று சொல்லிவிட்டார்களே, துணைக் கேள்வி வேறு ஏதாவது இருந்தால் கேளுங்கள், திரு. அ.வ. அப்துல் நாசர்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தணிக்கைப் பிரிவை நிதித் துறையோடு இணைப்பதற்கு

[1998 மார்ச் 19

எந்தவிதமான சிரமங்கள் இருக்கின்றன? ஏன் அதை இணைக்க முடியவில்லை என்ற காரணத்தை அமைச்சர் அவர்கள் சொல்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் துறையில் தலைமைத் தணிக்கை அலுவலர் ஒருவர், மண்டலத் தணிக்கை அலுவலர் 19 பேர், உதவித் தணிக்கை அலுவலர் 27 பேர், தணிக்கைக் கண்காணிப்பாளர் 51 பேர், தனி ஆய்வர்கள் 138 பேர் என்று பெரிய அளவிலே இது பணியாற்றி வருகிறது. முன்பு அறநிலையத் துறை தொடங்கப்பட்ட காலத்தில் இதுபோன்ற தணிக்கைப் பிரிவு நேரடியாக இங்கே வரவில்லை. உள்ளாட்சித் துறையைச் சேர்ந்த தணிக்கை ஆய்வர்கள்தான் முதலில் தணிக்கையைச் செய்தார்கள். அதற்குப் பிறகு நம்முடைய தலைவர் ஆட்சிக் காலத்தில் 1997-லிருந்துதான் இந்தப் பிரிவு தனியாகப் பிரிக்கப்பட்டு அறநிலையத் துறையோடு இணைந்து இயங்கி வருகிறது. அது சிறப்பாக இயங்கி வருகிறது. அதிலும் குறிப்பாக, தலைமைத் தணிக்கை அலுவலர் ஏற்கெனவே இருக்கின்ற தணிக்கைப் பிரிவிலிருந்து, முறையான தணிக்கைப் பிரிவிலிருந்து அயற் பணியிலே ஈர்க்கப்பட்டு தனி அதிகாரியாகச் செயற்பட்டு வருகிறார். எனவே, கிட்டத்தட்ட அது தனிப் பிரிவிலேயே வருகிறது. தனிப் பிரிவாக அல்ல, தணிக்கைப் பிரிவிலே வருகிறது. அதற்குப் பிறகு மண்டலத் தணிக்கை அலுவலரும், மண்டல இணை ஆணையாளரும், உதவி ஆணையாளரும் கேட்கிறபோது வேண்டுகோளாகவும் ஆய்வு செய்கிறார்கள். அதே நேரத்தில் திடீர் திடீரென்று ஆய்வு செய்வதற்கும், அவர்களுக்கு உரிமை அளிக்கப்பட்டிருக்கிறது. எந்தக் கோயிலையும் எப்பொழுது வேண்டுமானாலும் ஆய்வு செய்யலாம். அதேபோல முதுநிலைக் கணக்கு அலுவலரும் அன்றாடம் உள்ள கணக்குகளை ஆய்வு செய்கிறார். எனவே, முழுமையாக இயங்குகின்ற இந்தத் துறையை வேறு தனியாக நிதித் துறையிலே இணைத்துச் செயல்படுத்தத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 14, திரு. வ. வேலுசாமி, மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.



1998 மார்ச் 19]

14—

### மதுரையில் உலகத் தமிழ்ப் பல்கலைக்கழகம்

***8226—திரு. வ. வேலுசாமி:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரையில் உலகத் தமிழ்ப் பல்கலைக்கழகம் மீண்டும் செயல்படுத்தப்படுமா?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வ. வேலுசாமி, இருக்கையில் இல்லை. வினா எண் 15, திரு. ஜி. நிஜாமுதீன், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

15—

### நாகப்பட்டினத்தில் சட்டக் கல்லூரி தொடங்குதல்

***8639—திரு. ஜி. நிஜாமுதீன்:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினத்தில் சட்டக் கல்லூரி தொடங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் சென்னை, திருச்சி, மதுரை, கோவை போன்ற நான்கு

[1998 மார்ச் 19

நகரங்களில் சட்டக் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. பெருகி வரும் இன்றைய வளர்ச்சிகளை கருத்தில் கொண்டும், மக்கள் தொகைப் பெருக்கங்களையும், மாணவர்களின் பெருக்கங்களையும் கவனத்தில் கொண்டும் நாகையிலே சட்டக் கல்லூரி அமைத்திட அரசு மறு பரிசீலனை செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் எல்லா மாநகராட்சிப் பகுதிகளிலும் சட்டக் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. 2,127 மாணவர்கள் ஒவ்வொரு ஆண்டும் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். நாகை மாவட்டத்தைச் சார்ந்த தகுதியுள்ள மாணவர்களுக்கு திருச்சி சட்டக் கல்லூரியில் இடம் அளிக்கப்படுகிறது. எனவே, புதிதாக சட்டக் கல்லூரி தொடங்க வேண்டிய அவசியமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 16, திரு. ப. கோவிந்தன், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

**16—**

### மூர்த்திப்பட்டியில் நூற்பு ஆலை நிறுவுதல்

***8578—திரு. ப. கோவிந்தன்:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், மேச்சேரி ஒன்றியம், நகாளிப்பட்டி கிராமம் மூர்த்திப்பட்டியில் ஒரு நூற்பு ஆலை நிறுவ அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சாத்தியக்கூறுகள் ஏதுமில்லை.

**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாரமங்கலம் தொகுதியில் மேச்சேரி ஒன்றியத்தினை மையமாகக் கொண்டு அந்தப் பகுதியிலே விவசாயம், நெசவுத் தொழில் ஆகிய



1998 மார்ச் 19]

இரண்டைத் தவிர வேறு எந்தவிதமான தொழிலும் இல்லாத ஒரு நிலை இருக்கிறது. அந்தப் பகுதி மக்களுடைய வாழ்வில் வளம் சேர்ப்பதற்காக அந்தத் தொகுதியில் ஒரு நூற்பாலை அமைத்துக் கொடுக்க அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்பொழுது தமிழ்நாட்டில் தேவைக்கு மேல் நூல் உற்பத்தி இருக்கின்றது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். சேலத்தில் இருக்கின்ற 50 ஆயிரம் கதிர்கள் கொண்ட ஆலை இன்று ஏறத்தாழ 1,100 பேர் வேலை செய்கின்ற அளவுக்கும், 3,24,000 கிலோ அளவுக்கு உற்பத்தி நடைபெறுகின்ற காரணத்தாலும் மேற்கொண்டு நூற்பாலை கூட்டுறவுத் துறையின் மூலமாக அமைப்பதற்கு வாய்ப்பில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 17, திரு. லா. சந்தானம், மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்.

**17—**

### வனநிலங்களை விவசாயிகளுக்கு உடைமையாக்குதல்

***2470—திரு. லா. சந்தானம்:**

மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம், விராலிப்பட்டி கிராமம், சிறுமலை கிராமம், மேற்கு உத்தேச வனப்பகுதியில் உள்ள சர்வே எண் 1/1, 3,009 ஏக்கர் நிலங்களில் சுமார் 85 ஆண்டுகளாக சாகுபடி செய்துவரும் விவசாயிகளின் நிலங்களை வனநிலமாக இருப்பதை இரத்து செய்து விவசாயிகளுக்கே உடைமையாக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இங்குள்ள நிலங்களில் ஏறத்தாழ 85 ஆண்டுக் காலமாக விவசாயிகள் விவசாயம் செய்து வருகிறார்கள். இந்த 3,000 ஏக்கர் நிலத்தில் மட்டுமல்ல. ஏறத்தாழ 12,000 ஏக்கர் நிலப் பரப்பில் மக்கள் விவசாயம் செய்து வருகிறார்கள். இந்த நிலப் பரப்பிலே, திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள 9,000 ஏக்கர் பரப்புள்ள நிலத்திற்கு ஏற்கெனவே பட்டா வழங்கப்பட்டு இருக்கிறது. மதுரை மாவட்டத்திற்கு உட்பட்ட பகுதிக்கு மட்டும்தான் இந்தப் பட்டா வழங்கப்படவில்லை. எனவே, அமைச்சர் அவர்கள் மீண்டும் பரிசீலனை செய்து அந்தப் பகுதிகளுக்கு பட்டா வழங்குவதற்கு என்ன சாத்தியக்கூறுகள் கையாளப்பட்டனவோ, அதேபோன்று இந்தப் பகுதிக்கும் கையாண்டு பட்டா வழங்க ஆவன செய்வாரா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த சிறுமலை கிராம எல்லையிலிருந்து, விராலிப்பட்டி கிராம எல்லை வரை சுமார் 3,009 ஏக்கர் நிலங்கள் ஆக்கிரமிப்பாளர்களால் ஆக்கிரமணம் செய்யப்பட்டிருக்கின்றது. பல ஆண்டுகளாக இதை அவர்கள் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள். அங்கு பெரும்பாலான நிலப் பகுதி பாறையாகவும் சரிவாகவும் உள்ளது. மண் தரையாகவும் பல இடங்களில் உள்ளன. மேற்படி பகுதிகளில் பணப் பயிர்களான எலுமிச்சை, முந்திரி, மிளகு, நார்த்தை போன்ற பயிர்களை காட்டு ஓடைத் தண்ணீரைப் பயன்படுத்திக் கொண்டு, ஆக்கிரமிப்பாளர்கள் விவசாயம் செய்து வருகிறார்கள். பெரும்பாலான பகுதிகளில் விலை உயர்ந்த, இயற்கையாக வளர்ந்த மரங்கள் உள்ளன. எனவே, இந்நிலங்கள் விலை மதிப்புமிக்க நிலங்கள் ஆகும். ஆக்கிரமிப்பாளர்களின் நோக்கமே மரங்களை வெட்டி விற்பனை செய்ய வேண்டுமென்பதுதான். ஆக்கிரமிப்பாளர்கள் 1981-82 முதல் தாங்கள் ஆக்கிரமித்துள்ள பகுதிகளை வேறு நபர்களுக்கு விற்றுவிடுவது அல்லது ஒத்திக்கு



விட்டுவிடுவது என்ற வகையில் செய்ததாகத் தெரிகிறது. பணக்காரர்கள் பினாமிகள் பெயர்களில் கணிசமானப் பகுதிகளைத் தங்கள் வசம் வைத்துள்ளனர்.

பணப் பயிர்களான மலைத் தோட்டப் பயிர்கள் அங்கே விவசாயம் செய்யப்பட்டு வருவதால், அந்நிலங்கள் விலை மதிப்பு மிக்கவை என்பதில் ஐயமில்லை. ஆக்கிரமிப்புப் பகுதிகளைத் தவிர பிற பகுதிகள் அடர்த்தியான காடுகளாக உள்ளன. உண்மையில் யார், யார் அங்கே ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள், அவர்களின் பொருளாதார நிலை, ஆக்கிரமிப்பு செய்துள்ள நிலங்களின் அளவு, ஆக்கிரமிப்புச் செய்துள்ளவர்களால் விற்கப்பட்ட நிலங்கள் போன்றவைகளை ஆராய உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. லா. சந்தானம்:** தலைவர் அவர்களே.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம், உட்காருங்கள். நான் கூப்பிட்டால்தான் நீங்கள் எழுந்திருக்க வேண்டும். திரு. குழந்தை தமிழரசன்.

**திரு. குழந்தை தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களில் சாலைகள் அமைக்கின்றபோது, சில இடங்களில் வனத் துறைப் பகுதிகள் குறுக்கிடு செய்கின்றன. அதனால் ஒன்றியங்கள் வாயிலாகவும், நெடுஞ்சாலைத் துறை மூலமாகவும் சாலைகள் அமைப்பதில் சிரமங்கள் ஏற்பட்டு சாலைகள் அமைக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. இதனை மாற்றுவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழமையான சாலைகளாக இருந்தால் வனத் துறை அதற்கான அனுமதி கொடுக்கும். புதிதாக சாலைகள் அமைக்க வேண்டுமென்றால் மத்திய அரசின் அனுமதியைப் பெற்றுத் தரும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாய்ப்பு கொடுத்தமைக்கு மிக்க நன்றி. இந்தப் பகுதி வனப் பகுதியாக மட்டுமல்லாது கடந்த காலத்திலே மீனாட்சி அம்மன் கோயிலுக்குரிய நிலமாகவும் இருந்திருக்கிறது. அமைச்சர் அவர்கள் சொல்வதைப்போல பெரும் பணக்காரர்கள் அங்கு ஆக்கிரமிப்பு செய்யவில்லை. ஏழையெளிய விவசாயிகள் அந்தப் பகுதியிலே 'மீனாட்சிபுரம்' என்ற

[1998 மார்ச் 19

ஊரை அமைத்துக்கொண்டு, அந்த ஊரிலேயே வசித்துக் கொண்டிருக்கிறார்கள். ஏறத்தாழ 100 வீடுகளுக்கு மேலாக அங்கு இருக்கின்றன. மேலும் வாடிப்பட்டி ஒன்றியத்தின் மூலமாக ஒரு பள்ளிக்கூடம் அமைத்துத் தரப்பட்டிருக்கிறது. சத்துணவுக்கூடம் அமைத்துத் தரப்பட்டிருக்கிறது. இப்படியெல்லாம் ஒரு கிராமமாக உருவாவதற்கு, அந்தக் கிராமத்திலுள்ள மக்கள் பாடுபட்டுக்கொண்டு, விவசாயம் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அமைச்சர் அவர்கள் மீண்டும் இந்த நிலையை ஆராய்ந்துப் பார்த்து, அந்த மக்களுக்கு பட்டா வழங்குவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு வனச் சட்டப் பிரிவு 4-ன்கீழ் ஒதுக்கக் காடுகளாக இந்த நிலங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. நில ஆக்கிரமிப்பாளர்கள் கோரிக்கை நியாயமானதல்ல என்று அரசு கருதுகிறது. மேலும் இந்திய வனச் சட்டம், 1980-ன்கீழ், வனம் இல்லா வேலைகளுக்கு வன நிலங்களைப் பயன்படுத்த இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. மணிமாறன்.

முற்பகல் 10-40

**திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவரம் குறித்து சென்ற பட்ஜெட் கூட்டத்தொடரிலே நான் பேசியிருக்கிறேன். இது ஜமீன்தாரர்களுக்குச் சொந்தமான நிலம். ஜமீன் ஒழிப்புச் சட்டம் வந்ததற்குப் பின்னால் அது செட்டில்மென்ட் செய்யப்பட்டது. அங்கே வசதி படைத்தவர்கள் மட்டும்தான் பட்டா பெற்றிருக்கிறார்கள். தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான் 75 சதவிகித நிலம் ஏழை மக்களுக்கு வழங்கப்பட்டது. ஆனால், அந்தக் காட்டின் உட்பகுதியில், ஏறத்தாழ 200 ஆண்டு காலம், 250 ஆண்டு காலமாக 500-க்கு மேற்பட்ட ஏழையெளிய விவசாயக் குடும்பங்கள் பயிர்செய்து வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அவர்களை இப்பொழுது வன இலாக்கா மூலம் வெளியேற்றுவதன் மூலமாக, அவர்களுடைய வாழ்க்கையே சிதைந்து விடும். எனவே, ரெவின்யூ இலாக்கா மூலமாக மீண்டும் ரீ-செட்டில்மென்ட் கொண்டுவந்தால்தான் இதற்கு ஒரு முடிவு காண முடியும். எனவே, அதனை அரசு பரிசீலிக்குமா என அறிய விரும்புகிறேன்.



1998 மார்ச் 19]

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு பரிசிலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டம், பவானி வட்டத்திற்கு உட்பட்ட குறிச்சி கிராமத்தில் 30 ஆண்டுகளுக்கு முன்பாக சுமார் 75 ஏக்கர் அளவிற்கு நிலம் வருவாய்த் துறையிலிருந்து வனத் துறைக்கு மாற்றிக் கொடுக்கப்பட்ட நிலையில், அந்தப் பகுதியிலே குடியிருந்து வந்த ஆதிதிராவிடர்கள், சுமார் 300 குடும்பங்களுக்கும் மேலானவர்கள் இடவசதி இல்லாமல் இருக்கின்ற சூழ்நிலை ஏற்பட்டுள்ளதால், அந்த நிலத்தை மீண்டும் வருவாய்த் துறைக்கே ஒப்படைத்திட நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கான குறிப்புகள் தற்போது என்னிடமில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களை தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்.

**திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், ஏற்காடு பகுதியில் ஆதிதிராவிட மலைவாழ் மக்களும், பின்தங்கிய, பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மக்களும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அந்தப் பகுதியில் உள்ள வனத் துறைக்குச் சொந்தமான அரசுப் புறம்போக்கு நிலங்களைக் கையகப்படுத்தி பயிர் செய்து வருகிறார்கள். அவர்கள், இரண்டு ஏக்கர் முதல் மூன்று ஏக்கர் வரை காப்பி மற்றும் கமலா, ஆரஞ்சு போன்ற பழ வகைகளைப் பயிர் செய்தும் வருகிறார்கள். கடந்த 10, 12 ஆண்டுகளாக அவர்கள் பயிர் செய்து வந்தும், அவர்களுக்கு உரிய பட்டா கிடைக்கப் பெறவில்லை. தற்போது அரசு அதிகாரிகள் பி.எம்.நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். ஆனால், அங்குள்ள நிலச்சுவான்தாரர்கள், தங்களுக்கு அருகிலுள்ள நிலத்தைக் கையகப்படுத்த, அங்குள்ள ஏழையெளிய, ஆதிதிராவிட, மலைவாழ் மக்களை மிரட்டி, அவர்களை அப்புறப்படுத்தி, அவர்களுடைய நிலங்களைக் கையகப்படுத்துகின்ற வகையிலே நடந்து கொண்டு வருகின்றார்கள். எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள், நல்லாட்சி அமைத்திருக்கின்ற இந்த நேரத்தில், ஏழையெளிய, ஆதிதிராவிட பிற்படுத்தப்பட்ட மக்கள் அனுபவித்து வருகின்ற நிலங்களில்,

அவர்களுக்கே பட்டா வழங்கிட அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நாட்டின் வளமான செழுமைக்கு, நாட்டின் மொத்தப் பரப்பில் 33 சதவிகிதம் வனப்பகுதியாக இருக்க வேண்டும் என்பது நியதி. தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், அதன் மொத்தப் பரப்பளவில் 17 சதவிகிதம் மட்டுமே வனப்பகுதியாக இருக்கிறது. எனவே, வனப் பகுதிகளை ஆக்கிரமிப்பாளர்களுக்கே சொந்தமாக்கித் தரவோ, அவர்களுக்கு உரிமம் தரவோ இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. ஆவுடையப்பன்.

**திரு. இரா. ஆவுடையப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பாசமுத்திரம் சட்டமன்றத் தொகுதியில் புலிகள் சரணாலயம் என்ற பெயரில், ஆடு, மாடுகளை வனப்பகுதியில் மேய்ப்பதற்கு அனுமதி மறுக்கப்படுகிறது. அதற்குத் தடை செய்கிறார்கள். இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு வரை ஆடு, மாடுகள் மேய்ப்பதற்காக பாஸ்கள் வழங்கப்பட்டன. இப்பொழுது முழுவதும் தடைசெய்யப்பட்டு, ஆடு, மாடுகள் மேய்ப்பதற்கு பெரிய இடையூறுகள் செய்து வருகிறார்கள். ஆகவே, முன்புபோல, பாஸ் வழங்கி ஆடு, மாடுகள் மேய்ப்பதற்கு அனுமதி வழங்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய பகுதி வன விலங்கு சரணாலயம் என்று அறிவிக்கப்பட்டிருப்பதால் பாஸ்கள் வழங்குவது படிப்படியாகக் குறைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுமலை கிராமத்தில் உள்ள வனப்பகுதியில் இருக்கின்ற விவசாயிகளுக்குப் பட்டா கொடுக்க முடியாத நிலையினை அமைச்சர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள். அங்கே எலுமிச்சை போன்ற பணப்பயிர் சாகுபடி செய்யப்படுவதாகவும் கூறினார்கள். எனவே, அந்த விவசாயிகளுக்கு மரப்பட்டா வழங்கி, வனத்தைப் பாதுகாக்கவும், வனத்தை மேலும் பலப்படுத்தவும் அவர்களுக்கே உரிமம் அளிக்கக்கூடிய வகையில் அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு 1980 ஆம் ஆண்டு வனச்





சட்டப்படி அவ்வாறு கொடுக்க இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுப. தங்கவேலன்.

**திரு. சுப. தங்கவேலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆடுகள் மேய்ப்பதற்கு அனுமதி வழங்கப்படுகின்ற இடத்தில் பட்டி போடுவதற்கும் அனுமதி வழங்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-45

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படிப்படியாக, அந்த பட்டி போடுவதையே அறவே நிறுத்துவதற்காக இந்த அரசு முயற்சி செய்து வருகிறது. ஆகவே, பட்டி போடுவதற்கு அனுமதி கொடுப்பதற்கு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. அ.வ. அப்துல் நாசர்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிக்குட்பட்ட கடற்கரை ஓரங்களில் மீனவக் கிராமங்கள் அதிகமாக இருக்கின்றன. ஆனால், அந்தப் பகுதியை வனப் பகுதியாகச் சொல்கிறார்களே தவிர, அங்கு எந்தவிதமான காட்டுக்குரிய வளங்களும் இல்லை. எனவே, அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய மீனவ மக்களுக்கு, அவர்கள் வசித்து வருகிற நிலங்களை பட்டா நிலங்களாக மாற்றி வழங்குவதற்கு அரசு அனுமதி அளிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், கடந்த ஆண்டு ஜப்பான் அரசிடமிருந்து ஏறத்தாழ 500 கோடி ரூபாய் வனங்களை மேம்படுத்துவதற்காகப் பெற்றுத் தந்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், குறிப்பிட்ட இடத்தைக் காட்டினால், தரமிக்க வனமாக அதை மாற்றுவதற்கு இந்த அரசு முயற்சி செய்யும். பட்டா செய்து கொடுப்பதற்கு இடமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 18, திரு. ந.பூ. இராமஜெயம், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

**18—**

### கலைவாணர் சிலை அமைத்தல்

***9793—திரு. ந.பூ. இராமஜெயம்:**

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1998 மார்ச் 19

(அ) சென்னை கலைவாணர் அரங்கத்தின் முன்பு கலைவாணர் சிலையை அமைத்திடும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 19, திரு. குழந்தை தமிழரசன், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

**19—**

### ஏழை விதவைகளுக்கு உதவித் தொகை

***7810—திரு. குழந்தை தமிழரசன்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஏழை விதவைகளுக்கு மகன் இருந்தாலும், அரசு வழங்கும் மாதாந்திர உதவித் தொகையை வழங்கிட அரசு முன் வருமா?

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

உறுப்பினர் கேட்ட கேள்விக்கு ஏற்றதான திட்டம், அரசிடம் ஏதும் இல்லை.

**திரு. குழந்தை தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது கிராமப்புறங்களில் விதவைகளாக இருக்கிற தாய்மார்களை மிகவும் பாதிக்கக்கூடிய பிரச்சினை. ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும், அன்றாடம் இந்தப் பிரச்சினைக்குப் பதில் சொல்ல முடியாமல் இருக்கக்கூடிய ஒரு நிலைமை இருக்கிறது. இது சோஷியல் பிராப்ளமாக எல்லா இடங்களிலும் இருக்கிற காரணத்தினால், மகன்கள், விதவையான தாயை விட்டுவிட்டு எங்கேயோ சென்று விடுகிறார்கள். கிராமத்திலேகூட இதுபோன்ற கவனிப்பாரற்ற நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. எனவே, இது மிகப்பெரிய பிரளயத்தை உண்டுபண்ணக்கூடிய அளவுக்கு, பாதிக்கக் கூடிய பிரச்சினையாக இருக்கிற காரணத்தினால், தயவுசெய்து நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள், முதலமைச்சர் அவர்களோடு கலந்து, விதவைகளாக இருக்கிற தாய்மார்களுக்கு,



1998 மார்ச் 19]

அவர்களுக்கு மகன்கள் இருந்தாலும் பரவாயில்லை என்று கருதி—ஏனென்றால், நாம் கொடுப்பது 100 ரூபாய்தான்; அதில் தவறில்லை; இப்போது எவ்வளவோ பேர்களுக்கு நமது அரசு வழங்கிக் கொண்டிருக்கிறது; எனவே, அந்த அடிப்படையில், கருணையுள்ளத்தோடு, தயவுசெய்து சட்டவிதிகளைத் தளர்த்தி, விதவையான தாய்மார்களுக்கு, மகன்கள் இருந்தாலும் பரவாயில்லை என்று கருதி—அந்த நிதி ஒதுக்கீட்டை ஒவ்வொரு மாதமும் வழங்குவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதை அரசு மீண்டும் பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதவைகள், உதவித் தொகை பெறுகின்ற வயது வரம்பு ஆரம்பத்தில் 45 என்று இருந்தது. அதன் பிறகு, அந்த வயது வரம்பு 40-ஆகக் குறைக்கப்பட்டது. கடந்த 1990-ஆம் ஆண்டு, மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களால், அந்த வயது வரம்பு அறவே நீக்கப்பட்டுவிட்டது. எனவே, விதவைப் பெண்களுக்கு, உதவித் தொகை தருவது என்பதில் வயது வரம்பு இல்லாமல் அளிக்கப்படுவதற்கு அரசு உத்தரவிட்டிருக்கிறது. இருப்பினும், அவர்களுக்கு ஆண் குழந்தை இருந்தால், அந்த ஆண் வாரிசு 18 வயது பூர்த்தி அடைந்து இருந்தால் நிச்சயமாக அந்த உதவித் தொகை வழங்க இயலாது. ஆனால், பல உறுப்பினர்கள், பல நேரங்களில் இந்தக் கேள்வியை எழுப்பியிருக்கிற காரணத்தினால், அந்த மகன் 18 வயது பூர்த்தி அடைந்த பிறகும், தாயைப் பராமரிக்க முடியாத சூழ்நிலையில், தனித்து வாழக்கூடிய நிலைமை அந்தத் தாய்க்கு இருக்குமென்றால், இதுகுறித்து அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. குத்தாலம் பி. கல்யாணம்.

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகன்கள் வயது வரம்பைக் குறைந்தபட்சம் 18-லிருந்து 25-ஆக உயர்த்தி, இந்த உதவித் தொகை வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு இதனைப் பரிசீலனை செய்யும் என்று சொல்லியிருக்கிறேன். ஆலோசனை செய்து, அரசு நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பெ.சு. திருவேங்கடம்.,

[1998 மார்ச் 19

**திரு. பெ.சு. திருவேங்கடம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது கிராமங்களிலே இருக்கிற விவசாயிகளுக்கு, வயதான காலத்திலே, அவர் விதவைத் தாயாக இருந்தாலும் சரி, ஆணாக இருந்தாலும் சரி, அவர்களுக்கு பென்ஷன் தொகை கொடுக்கும்போது, அவர்களுக்கு ஆண் குழந்தை இருந்தால் தள்ளுபடி செய்து விடுகிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள் கிராமங்களுக்குச் செல்கிறபோது இது ஒரு பெரிய பிரச்சினையாக இருக்கிறது. அதனால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், கருணையுள்ளத்தோடு, ஆண் குழந்தை இருந்தாலும் வயதானவர்களுக்கு, ஏழைகளுக்கு, விவசாயிகளுக்கு, இந்த ஓய்வூதியத்தை வழங்க, இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த ஆணையிடுவார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 65 வயது பூர்த்தி அடைந்த ஆடவர்கள், ஆதரவற்றவர்களாக இருபபார்களானால், அவர்களுக்கு இந்த உதவித் தொகை வழங்கப்படுகிறது. அதைப்போல, வேளாண்மைத் துறையிலும் 60 வயது நிரம்பிய ஆதரவற்ற வேளாண்மைத் தொழிலாளர்கள் இருப்பார்கள் என்று சொன்னால் அவர்களுக்கும் இந்த உதவித் தொகை வழங்கப்படுகிறது. மகன் இருந்தால் கொடுக்கக்கூடாது என்பது நிபந்தனையாக இருக்கிறது. அதைத் தளர்வு செய்கிற எண்ணம் இந்த அரசுக்கு இல்லை.

*முற்பகல் 10-50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என்.ஆர். அழகராஜா.

**திரு. என்.ஆர். அழகராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு திட்டங்களிலே அரசு பலருக்கு நிதியுதவியை அதிகப்படுத்தியிருக்கிறது. ஆனால் விதவைகளாக இருக்கக்கூடிய, அனாதைகளாக இருக்கக்கூடிய தாய்மார்களுக்கு உதவித் தொகை 100 ரூபாய் என்றிருப்பது நாள் ஒன்றுக்கு 3 ரூபாய் என்ற அளவிலே தான் இருக்கிறது. ஆகவே அதை உயர்த்தித் தருவது பற்றி அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதியோர் உதவித் தொகை பெறுபவர்களுடைய எண்ணிக்கை 6,82,788. மாதம் 100 ரூபாய் அவர்கள் உதவித் தொகை பெறுகிறார்கள். இந்த உதவித் தொகை பெறுகிறவர்களுக்கு மதிய உணவுகூட சத்துணவுக் கூடங்களில் வழங்கப்படுகிறது. மதிய உணவு சாப்பிடுபவர்களாக இருந்தால் அவர்களுக்கு வாரம் ½ கிலோ அரிசி



1998 மார்ச் 19]

இலவசமாக வழங்கப்படுகிறது. மதிய உணவு சாப்பிடாதவர்களாக இருப்பார்கள் என்று சொன்னால் அவர்களுக்கு 1 கிலோ அரிசி இலவசமாக வழங்கப்படுகிறது. விதவைத் தாய்மார்கள் 2,25,000 பேருக்கு மேல் இந்த உதவியை பெற்று வருகிறார்கள். எனவே, அரசினுடைய நிதி ஆதாரத்தைப் பொறுத்து இதுபற்றிப் பரிசீலனை மேற்கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.பி. வெங்கிடு.

**திரு. ஜி.பி. வெங்கிடு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதவைத் தாய்மார்களுக்கு மகனிருந்தால், அவனுக்கு 18 வயது நிரம்பியிருந்தால், உதவித் தொகை இல்லை என்றிருக்கிறது. மகன் இருந்தும், மகனே ஏழையாக இருந்தால், அந்தத் தாய்க்கு உதவி கிடைப்பதில்லை. உதாரணத்திற்கு என்னுடைய தொகுதியில் ஒரு ஏழைத் தாய் பக்கத்து வீடுகளிலே கொடுக்கின்ற உணவை வாங்கிச் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார். அவருக்கு வேறு வழியே இல்லை. வயது முதிர்ந்தவர், மகன் ஒருவன் இருக்கிறான் என்று சொல்லி அவருக்கு இந்த உதவித் தொகை இல்லை என்று சொல்லிவிட்டார்கள். மகன் திருப்பூரிலே இருக்கிறான். அங்கே அவன் கூலி வேலை செய்து கொண்டிருக்கிறான். அப்படியிருக்கிற அந்தச் சூழ்நிலையில்கூட அந்தத் தாய் உதவித் தொகை பெற முடியாமல் இருக்கிறார். ஆகவே மகன் ஏழையாக இருந்தால் அவர்களுக்கு இந்த உதவித் தொகை கொடுக்கலாம் என்ற நிலையைக் கொண்டுவர அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகனுடைய பராமரிப்பு இல்லை என்று அறியும் பட்சத்தில், மகனை விட்டுத் தனியாகத் தாய் வாழ்கிறாள் என்பது உறுதிப்படுத்தப்படும் என்று சொன்னால், அதுகுறித்து அரசு பரிசீலனை செய்யும் என்பதை மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி. முத்து.

**திரு. வி. முத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகன் இருந்தால் ஒன்று குடிகாரனாக இருக்கிறான் அல்லது ஈவு இரக்கமற்றவனாக இருக்கிறான் அல்லது மனைவி பேச்சைக் கேட்டுக் கொண்டு தாயைக் கவனிக்காதவனாக இருக்கிறான். அப்படிப்பட்ட குடும்பத்தில் தலைவர் அவர்கள் அந்தக் குடும்பத்திற்கு மகனாக இருந்து உதவி செய்ய ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

[1998 மார்ச் 19

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழந்தை பெறுகின்றபோது ஆண் குழந்தை வேண்டும் என்று கேட்கிறார்கள். பெண் குழந்தையைப் பெற்றால் முகத்தைச் சுளிக்கிறார்கள். ஆண் மகனிருந்தால் இந்த உதவித் தொகை பெறமுடியவில்லை என்று எண்ணிப் பார்க்கும்போதாவது ஆண் குழந்தை வேண்டாம் என்று பெண் குழந்தைகளை ஏற்றுக்கொள்கிற மனப்பக்குவம் ஆண்களுக்கு வர வேண்டும் என்பதை இந்த நேரத்தில் வலியுறுத்துகிறேன். விதவைக்கு மகன் இருந்தாலும், உதவி நிதி வழங்கும் ஆலோசனை குறிப்பிலே இருக்கிறது என்பதைத் தெரிவித்திருக்கிறேன். இதுபற்றி அரசு கலந்தாலோசித்து பரிசீலனை செய்து அறிவிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சொக்கர்.

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சமுதாய அமைப்பிலே பெண்கள் படுகின்ற சிரமங்களில் மிகப் பெரிய சிரமமாகக் கருதப்படுவது திருமணமாகி, அவர்கள் தங்களுடைய கணவனை இழக்கக்கூடிய ஒரு சூழ்நிலைதான். ஒரு வேளை பிள்ளையில்லாமல் இருந்தாலாவது மறுமணம் செய்து, அவர்கள் தங்களுடைய வாழ்க்கையை நல்லமுறையில் அமைத்துக்கொள்ள முடியும். குழந்தை பிறந்துவிட்டால் 18 வயது வரையோ, 20 வயது வரையோ அதைப் படிக்க வைத்து, கஷ்டப்பட்டு வளர்த்து, அதற்குப் பிறகு அதை வேலையில் அமர்த்தி அல்லது திருமணம் செய்து கொடுத்த பிறகு அந்தக் குழந்தைக்கு என்று தனியாக குடும்பம் ஏற்பட்டுவிடுகிறது. அது ஆண் குழந்தையாக இருந்தாலும் சரி அல்லது பெண் குழந்தையாக இருந்தாலும் சரி. ஆகவே பல இடங்களில் இந்த ஏழைத் தாய்மார்கள் பிறந்ததிலிருந்தே கடைசி வரையில் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே ஆண் வாரிசு இருந்தால்கூட ஆதரவற்ற விதவைத் தாய்மார்களாக இருப்பார்களேயானால் அவர்களுக்கு இந்த உதவித் தொகையை வழங்குவது நியாயமாக இருக்கும். இது சமூக நலத் துறை சம்பந்தப்பட்ட விஷயம் மட்டுமல்ல, நிதித் துறையும் சேர்ந்து இருக்கக்கூடிய காரணத்தினால் மாண்புமிகு முதல்வர் அவர்கள் எத்தனையோ சமூக நலத் திட்டங்களை அறிமுகப்படுத்தியவர். எனவே வருகிற பட்ஜெட் கூட்டத் தொடரிலேயே இதை அறிவிக்கும்போது இந்த சமூக நலத் திட்டத்தையும் தங்களுடைய உரையிலே இணைத்து அறிவிப்பார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.



1998 மார்ச் 19]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்ஜெட் இரகசியங்களை முன்கூட்டி வெளியிடக்கூடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 20, திரு. ப. ரங்கநாதன், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர்.

**20—**

**மீன் பிடித் துறைமுகங்களுக்குக் கூடுதல் வசதி.**

***9585—திரு. ப. ரங்கநாதன்:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மீன்பிடித் துறைமுகங்களில் குடிநீர் வசதி, சாலை வசதி இல்லாதது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், உடனடியாகச் செய்து கொடுக்க அரசு முன்வருமா?

முற்பகல் 10-55

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன் வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போது மீன்பிடித் துறைமுகங்கள் அனைத்திலும் சாலை வசதிகள் நன்கு அமைக்கப்பட்டுள்ளன. குடிநீர் வசதிகளும் தேவையான முறையில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் மாவட்டம் பழவேற்காடு மீன் பிடித் துறைமுகம், சிவகங்கை மாவட்டம் தொண்டி மீன் பிடித் துறைமுகம், கடலூர் மீன்பிடித் துறைமுகம், கன்னியாகுமரி மாவட்டம், சின்னமுட்டம் மீன் பிடித் துறைமுகம் ஆகிய துறைமுகப் பகுதிகளில் இருந்து மீன் பிடிக்கின்ற தொழிலாளர்கள் வாழும் குடியிருப்புகளுக்கு எல்லாம் சாலை வசதி, குடிநீர் வசதி இல்லாமல் இருக்கிறது. அவற்றை உடனடியாகச் செயல்படுத்துவதற்கு அரசிடம் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

[1998 மார்ச் 19

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், குடியிருப்புகளுக்குக் கேட்கிறாரா அல்லது துறைமுகங்களுக்குக் கேட்கிறாரா என்று தெரியவில்லை.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியிருப்புகளுக்குக் கேட்கிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியிருப்புகளுக்கு நிச்சயமாக இணைப்புச் சாலைகள் அமைத்துத் தருவதற்கு நம்முடைய கழக அரசு ஒவ்வொரு நிதிநிலை அறிக்கையிலும் ஒரு கோடி ரூபாய் அளவுக்கு நிதி ஒதுக்கி வருகிறது. மொத்தம் 442 மீனவ கிராமங்கள் இருக்கின்றன. படிப்படியாக ஒவ்வொரு கிராமத்திற்கும் இணைப்புச் சாலைகள் அமைத்து கொடுத்துக்கொண்டு வருகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்*

### (முதல் பட்டியல்)

1—

**மூடிக்கிடக்கும் தொழிற்சாலைகளைத் திறக்க நடவடிக்கை**

**வினா 183—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் மூடிக் கிடக்கும் தொழிற்சாலைகள் எத்தனை?

(ஆ) அவற்றை மீண்டும் திறப்பதற்கு மாநில அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் மூடிக் கிடக்கும் தொழிற்சாலைகள் 451.

* குறிப்பு: வினாக்களுக்கான விடைகள், அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.



1998 மார்ச் 19]

(ஆ) மேற்படி தொழிற்சாலைகள் நடைமுறை மூலதனப் பற்றாக்குறை, கடன்சுமை அதிகரிப்பு, உற்பத்திச் செலவு அதிகரிப்பு, தொழில்நுட்பத் தட்டுப்பாடு, தொழிலாளர் அமைதியின்மை, நிர்வாகத் திறமையின்மை போன்ற பல காரணங்களால் இயங்க முடியாமல் மூடப்பட்டு விட்டன. மூடிக் கிடக்கும் தொழிற்சாலைகளில் நலிவுற்றவைகளை தொழில் மற்றும் நிதிசார்ந்த புனரமைப்பு மன்றத்திற்கு [Board for Industrial and Financial Reconstruction (BIFR)] தெரிவித்து, அவற்றை மீண்டும் செயல்பட வைக்க அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. தொழிற்சாலைகள், அரசு நிறுவனங்களின் கடன் தொகையைத் திருப்பிச் செலுத்த இயலாதபோது, அவை மறுபடியும் இயங்க சாத்தியக்கூறுகள் இல்லாத நிலைமைகளில், அவற்றின் சொத்துக்கள் சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு கைப்பற்றப்படுகின்றன. தொழில் மற்றும் நிதிசார்ந்த புனரமைப்பு மன்றம் (BIFR), தொழில் மற்றும் நிதிசார்ந்த புனரமைப்பு மேல்முறையீட்டுக் குழு (ABIFR) மற்றும் உயர்நீதிமன்றம், தொழிற்சாலைகளின் நிலைமைகளை ஆராய்ந்து அவை இனி இயங்க இயலாது என தீர்மானித்து, அவற்றை மூடிவிடலாம் என ஆணையிட்ட பின்பே தொழிற்சாலைகள் முடிவாக மூடப்படுகின்றன. எனவே, அரசு மூடிய தொழிற்சாலைகளைத் தொழிலாளர் ஆணையம், தொழில் மற்றும் நிதிசார்ந்த புனரமைப்பு மன்றம் (BIFR), தொழில் மற்றும் நிதிசார்ந்த புனரமைப்பு மேல்முறையீட்டுக் குழு (ABIFR), மற்றும் உயர்நீதிமன்றம் போன்ற அமைப்புகளில், அவை மறுபடியும் இயங்க சாத்தியக்கூறுகளை ஆராய்கிறது. அப்படியும் முடியாத நிலைமைகளில்தான் மேற்படி தொழிற்சாலைகள் மூடப்படுகின்றன.

2—

**தமிழ்நாட்டில் இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகள்**

**வினா 508—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1994-95 இல் தமிழ்நாட்டில் இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணி அதிகாரிகள் முறைகேடான சொத்துப்பெருக்கம் குறித்து புகார் ஏதேனும் மாநில அரசிற்கு வந்துள்ளதா? ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

இந்திய ஆட்சிப் பணி—இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகள் குறித்து பொதுத் துறை தனியாக ஒரு கோப்பினை முதலமைச்சருக்கு சுற்றனுப்புகிறது.

இந்திய காவல் பணி பற்றி 3 விவரங்கள் :

(1) திரு. எஸ். இராமநாதன், இ.கா.ப., முன்னாள் செங்கற்பட்டு (கிழக்கு), மாவட்டக் காவல் கண்காணிப்பாளர், தற்பொழுது துணைக் காவல் ஆணையர், (தலைமையிடம்), மாநகரக் காவல் ஆணையர் அலுவலகம், சென்னை.

(விசாரணை முடிவடையும் தருவாயிலுள்ளது)

(2) திரு. கே. காசிம், இ.கா.ப., முன்னாள் திருச்சி சரக காவல் துறைத் துணைத் தலைவர் (ஓய்வு பெற்றவர்).

இவர் மீது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குநரகம் விசாரணை மேற்கொண்டது. இதற்கிடையில், மத்திய உள்துறைச் செயலக சார்புச் செயலர் தன்னுடைய 10-10-1996 நாளிட்ட கடிதத்துடன், மத்திய புலனாய்வுத் துறையின் 13-5-1996 நாளிட்ட அறிக்கையை அனுப்பினார். அந்த அறிக்கையில், திரு. காசிம், இ.கா.ப., காவல் துறைத் துணைத் தலைவர், வரம்புக்கு அதிகமாகச் சொத்து சேர்த்ததாகக் கிடைக்கப்பட்ட அடிப்படைத் தகவலின்படி, மேல் விவரங்கள் சேகரிக்கப்பட்டதாகவும், இதையறிந்த அவர், சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிபேராணை மனு தாக்கல் செய்து, மத்திய புலனாய்வுத் துறை மேலும் விசாரணை செய்யாமலிருக்கத் தடுப்பு ஆணை பெற்றதாகவும் கூறப்பட்டது. இந்தத் தடுப்பு ஆணை இன்னும் நிலுவையிலுள்ளது. இச்சூழ்நிலையில், மாநில ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குநரகத்தில் விசாரணை முடிவடைந்து அறிக்கை பெறப்பட்டது. அந்த அறிக்கையில், அவர்மீது கூறப்பட்டிருந்த குற்றச்சாட்டுக்கள் நிரூபணமாகவில்லை என்று கூறப்பட்டிருந்தது. எனவே, இவர் மீது கூறப்பட்டிருந்த குற்றச்சாட்டுக்களின் மீது மேல்நடவடிக்கை ஏதுமில்லை என்று முடிவெடுக்கப்பட்டது. இருப்பினும் அது சம்பந்தமான ஆணை ஏதும் பிறப்பிக்கப்படவில்லை. ஏனெனில்,



அப்படி பிறப்பிக்கப்படும் ஆணை, நீதிமன்ற தடுப்பாணை விலக்கப்பட்டு மத்திய புலனாய்வுத் துறை இவர்மீது விசாரணை மேற்கொள்ளும் பட்சத்தில் அந்த விசாரணைக்கு அப்படிப்பட்டதொரு ஆணை பாதகமாக இருந்துவிடுமோ என்ற சந்தேகம் இருந்தது. எனவே, இது சம்பந்தமாக, மத்திய உள்துறைச் செயலகத்திடம் கருத்து கோரப்பட்டுள்ளது. இச்செயலகத்திற்கு, அவ்வப்பொழுது, நினைவூட்டுக் கடிதமும் எழுதப்படுகிறது. இந்நாள் வரை, இச்செயலகத்திடமிருந்து எவ்வித பதிலும் கிடைக்கப்பெறவில்லை. எனவே, மாநில ஊழல், தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குநரகத்தின் விசாரணை அறிக்கை மீது முடிவான ஆணை எதுவும் பிறப்பிக்கப்படவில்லை.

(3) திரு. எஸ். இராஜேந்திரன், இ.கா.ப., முன்னாள் திருச்சி இருப்புப் பாதை காவல் கண்காணிப்பாளர், தற்பொழுது காவல் துணை ஆணையர், கிண்டி, சென்னை மாநகர காவல் பிரிவு.

விசாரணையின்போது அவர் வரம்புக்கு அதிகமாகச் சொத்து சேர்த்ததாக நிரூபணமாகவில்லை. விசாரணை அறிக்கை இத்துறையின் பரிசீலனையிலுள்ளது.

**3—**

### திருவண்ணாமலையில் மாவட்டக் காவல் துறை கண்காணிப்பாளர் அலுவலகம் கட்டுதல்

**வினா 8750—திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலையில் மாவட்டக் காவல் துறை கண்காணிப்பாளர் அலுவலகம் கட்டுவதற்கு அரசிடம் திட்டம் ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

[1998 மார்ச் 19

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): திருவண்ணாமலை மாவட்டத்தில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மற்றும் மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் அலுவலகம் உள்ளிட்ட பல அலுவலகங்கள் அமைக்க பெருந்திட்ட வளாகம் (Master Plan complex) கட்டுவதற்காக திருவண்ணாமலை வேங்கிகாலில் 235.88 ஏக்கர் நிலத்தினைக் கையகப்படுத்துவதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ள திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியருக்கு ஒப்புதல் அளித்து அரசு ஆணை (நிலை) எண் 455, வருவாய், நாள் 14-5-1997 இல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேற்படி நிலம் கையகப்படுத்திய பின்னர், மாவட்டக் காவல் அலுவலகம் உட்பட இதர அலுவலகங்கள் கட்டும் பணி மேற்கொள்ளப்படும்.

4—

**காவலர்களுக்குக் குடியிருப்பு கட்டித் தரும் திட்டம்**

**வினா 8788—திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாசுதேவநல்லூர் தொகுதி, புளியங்குடி, வாசுதேவநல்லூர் மற்றும் சிவகிரி காவல் நிலையத்தில் ஆய்வாளர், உதவி ஆய்வாளர்கள், காவலர்களுக்கு குடியிருப்புகள் கட்டித்தரும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): வாசுதேவநல்லூர் தொகுதியில் உள்ள சிவகிரி, வாசுதேவநல்லூர் மற்றும் புளியங்குடி ஆகிய காவல் நிலையங்களைச் சார்ந்த காவலர்களுக்கு ஏற்கெனவே, தமிழ்நாடு காவலர் வீட்டுவசதி கழகத்தின் மூலம் வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு அவைகளில் 1994-95 ஆம் ஆண்டிலிருந்து பணியாளர்கள் குடியிருந்து வருகின்றனர்.



1998 மார்ச் 19]

5—

**காவலர் குடியிருப்பு சீர் செய்தல்**

**வினா 8834—திரு. ரா. சேதுநாதன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திண்டிவனம் நகரில் உள்ள பழுதுபட்ட இரண்டு காவலர் குடியிருப்புகள் சீர்செய்யப்படுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

இதுகுறித்த செயற்குறிப்பு எதுவும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

6—

**காவல் நிலையத்திற்குக் கட்டடம்**

**வினா 9369—திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி தொகுதி, சத்திரக்குடி, பார்த்திபனூர் காவல் நிலையங்கள் மற்றும் பரமக்குடி வட்டக் காவல் நிலையம் ஆகியவை தனியார் கட்டடங்களில் இயங்கி வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அவற்றிற்குக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): அரசாணை நிலை எண் 841, உள் துறை, நாள் 3-6-1997 இல், தற்போது வாடகைக் கட்டடத்தில் இயங்கும் 79 காவல் நிலையங்களுக்கு அரசு கட்டடம் கட்ட அனுமதி அளித்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்த 79 காவல் நிலையங்களுள், சத்திரக்குடி மற்றும் பரமக்குடி வட்டக் காவல் நிலையங்களும்

அடங்கும். பார்த்திபனூர் காவல் நிலையத்துக்குக் கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

7—

### புதிய காவலர் குடியிருப்பு கட்டுதல்

**வினா 9668—திரு. பி. இராசமாணிக்கம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவாரூர் மாவட்டம், ஓரத்தநாடு தொகுதியில் உள்ள நீடாமங்கலம் காவலர் குடியிருப்பு பழுதடைந்த நிலையில் உள்ளதால், அவற்றிற்குப் புதிய காவலர் குடியிருப்பு கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

நீடாமங்கலம் காவல் நிலையப் பணியாளர்களுக்கு ஏற்கெனவே கட்டிக் கொடுக்கப்பட்டுள்ள 1 ஆய்வாளர் மற்றும் 10 காவலர் குடியிருப்புகள் பழுதடைந்த நிலையில் உள்ளதால், அவற்றில் தகுந்த பழுதுபார்ப்புப் பணிகளை மேற்கொள்ளுமாறு 22-8-1997 அன்று காவல் துறை துணைத் தலைவருக்குத் தகுந்த அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. இக்குடியிருப்புகளுக்குப் பதிலாக புதிய குடியிருப்புகள் கட்டும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

8—

### காவலர்களுக்குக் குடியிருப்பு

**வினா 9720—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தென்காசி, குற்றாலம் ஆகிய காவல் நிலையங்களில் பணிபுரியும் காவலர்களுக்குக் குடியிருப்புகள் கட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா?





விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

தென்காசி காவல் நிலையத்தில் பணிபுரியும் 6 தலைமைக் காவலர்கள் மற்றும் 6 காவலர்கள் ஆகியோருக்கு ஏற்கெனவே குடியிருப்புகள் உள்ளன. மீதமுள்ள பணியாளர்களுக்குக் குடியிருப்புக் கட்ட 1.24 ஏக்கர் நிலம் காவல் துறை வசம் உள்ளது. இதில் காவலர் குடியிருப்புகள் கட்ட 1998-99 ஆம் வருட நிதியாண்டில் நிலை ஏழு திட்டத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். குற்றாலம் காவல் நிலையக் காவலர்களுக்குக் குடியிருப்பு கட்ட நிலம் ஏதும் காவல் துறை வசம் இல்லை. நில ஆர்ஜிதம் செய்யப்பட்டபின் குடியிருப்புகள் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

9—

### காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடம்

**வினா 9993—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், பாவூர்சத்திரம் காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) தற்போது இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

10—

### மூலனூர் காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடம்

**வினா 10613—திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெள்ளக்கோவில் தொகுதி, மூலனூரில் உள்ள காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்டும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டப்படும்?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**11—**

**காவலர் குடியிருப்புகளைப் பழுதுபார்க்கும் திட்டம்**

**வினா 10736—திரு. இரா. மதிவாணன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராயபுரம், ஆர்.கே. நகர் பகுதிகளில் உள்ள காவலர் குடியிருப்புகளைப் பழுதுபார்க்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**12—**

**கடைகள் கட்டும் திட்டம்**

**வினா 10745—திரு. இரா. மதிவாணன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) இராயபுரம், ஆர்.கே. நகர் பகுதிகளில் உள்ள காவலர் குடியிருப்புக்கு முன்பு உள்ள காலி இடங்களில் கடைகள் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**13—**

**காவல் நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம்**

**வினா 10777—திரு. எஸ். டேவிட் செல்வின்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி ஒன்றியம், புதுக்கோட்டையில் வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் காவல் நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டிக் கொடுக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): அரசாணை எண் 841, உள் (காவல் 10) துறை, நாள் 3-6-1997இல் அரசு 79 காவல் நிலையக் கட்டடங்கள் கட்ட ஆணை வழங்கியுள்ளது. அதில் தூத்துக்குடி மாவட்டம் தூத்துக்குடி ஒன்றியம், புதுக்கோட்டை காவல் நிலையமும் அடங்கும். இக்கட்டடம் கட்டுதல் தொடர்பாக மேல் நடவடிக்கை பொதுப் பணித் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

[1998 மார்ச் 19

14—

## காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடம்

**வினா 11238—திரு. கோ. தளபதி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேடப்பட்டி தொகுதி, டி. கல்லுப்பட்டி காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

15—

## காவலர் குடியிருப்பு அமைக்கும் திட்டம்

**வினா 11391—திரு. துரை. சந்திரசேகரன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், திருக்காட்டுப்பள்ளியில் காவலர் குடியிருப்பு அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): திருக்காட்டுப்பள்ளியில் காவலர்களுக்குக் குடியிருப்புகள் கட்டும் பணி படிப்படியாகக் கட்டப்பட்டு, வருகின்ற நிலை-7 திட்டத்தில் பரிசீலிக்கப்பட்டு உரிய ஆணை பிறப்பிக்கப்படும்.



1998 மார்ச் 19]

16—

## புதிய தொழிற்சாலைகள் தொடங்குதல்

**வினா 11408—திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் தொகுதியில் புதிய தொழிற்சாலைகள் தொடங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் தொகுதியில் புதிய தொழிற்சாலைகள் தொடங்கும் திட்டம் தற்சமயம் அரசிடம் ஏதும் இல்லை.

17—

## தீயணைப்பு நிலையத்திற்குப் புதிய கட்டடம்

**வினா 11987—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடியிலுள்ள தீயணைப்பு நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

தீயணைப்பு நிலையக் கட்டடங்கள் கட்ட மத்திய அரசின் நிதியுதவி கோரி திட்ட மதிப்பீடு அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. மைய அரசின் நிதியுதவி பெற்றவுடன், எடப்பாடி தீயணைப்பு நிலைய நிலத்துக்கான நிலம் தேர்வு செய்யப்பட்டு நிரந்தரக் கட்டடம் கட்ட தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

18— [1998 மார்ச் 19

**பெருகவாழ்ந்தான் அரசு மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடம்**

**வினா 4340—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஒன்றியம், பெருகவாழ்ந்தான் அரசு மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

அரசாணை நிலை எண் 291, பள்ளிக் கல்வித் துறை, நாள் 9-7-1997இல் திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஒன்றியம், பெருகவாழ்ந்தான் அரசு மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடம் கட்ட ரூ. 4 இலட்சம் ஒதுக்கீடு செய்து அரசு ஆணையிட்டுள்ளது.

19—

**கல்லூரிக் கட்டடப் பணிகள் தாமதம்**

**வினா 6617—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் குமரன் பெண்கள் கல்லூரிக்கான கட்டடப் பணிகள் தாமதம் ஆகிவருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், பணிகளை உடனடியாகத் தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) திருப்பூர் குமரன் பெண்கள் கல்லூரிக்கான கட்டடங்கள் மற்றும் ஆய்வுக் கூடங்கள், நூலகங்கள், கட்டப்பட்டு 24-7-1997 அன்று திறப்பு விழாவும் செய்யப்பட்டுள்ளது.



1998 மார்ச் 19]

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

20—

**நூலகங்கள் விவரம்**

**வினா 6959—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் மொத்தம் எத்தனை நூலகங்கள் இருக்கின்றன?

(ஆ) எடப்பாடி தொகுதியில் உள்ள நூலகங்கள் எத்தனை? அவற்றுக்கு வாங்கப்படும் நூல்கள் எவ்வாறு தேர்வு செய்யப்படுகின்றன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) நாமக்கல் மாவட்டத்தை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த சேலம் மாவட்டத்தில் மொத்தம் 92 நூலகங்கள் உள்ளன. தற்போது சேலம் மற்றும் நாமக்கல் மாவட்ட நூலக ஆணைக் குழுக்கள் தனித்தனியாக 1-8-1997 முதல் செயல்பட்டு வருகின்றன. இதனையடுத்து அம்மாவட்டங்களிலுள்ள நூலகங்களின் விவரம் வருமாறு:

சேலம் மாவட்டம்—

| | | |
|---|---|---|
| மாவட்ட மைய நூலகம் | .. | 1 |
| கிளை நூலகங்கள் | .. | 50 |
| | | 51 |

நாமக்கல் மாவட்டம்—

| | | |
|---|---|---|
| மாவட்ட மைய நூலகம் | .. | 1 |
| கிளை நூலகங்கள் | .. | 40 |
| | | 41 |

(ஆ) எடப்பாடி தொகுதியில் கீழ்க்கண்ட 5 கிளை நூலகங்கள் செயல்படுகின்றன:

(1) எடப்பாடி

(2) சித்தூர்

(3) கொங்கணாபுரம்

(4) எடங்கணசாலை

(5) மகுடஞ்சாவடி

மேற்கண்ட கிளை நூலகங்களுக்கு நூல்கள் வழங்குவதற்கு மாநில அளவில் அமைக்கப்பட்ட "நூல் தேர்வுக் குழு"வின் மூலம் நூல்கள் தேர்வு செய்யப்பட்டு, அதன் அடிப்படையில் துறைத் தலைவரான பொது நூலக இயக்குநர் மூலமாக நூல்கள் வாங்கப்பட்டு, மாவட்ட நூலக ஆணைக் குழுவிற்கு வழங்கப்படுகின்றன. மாவட்ட நூலக ஆணைக் குழு மூலம் கிளை நூலகங்களுக்கு நூல்கள் விநியோகம் செய்யப்படுகின்றன.

21—

**நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக்குதல்**

**வினா 10193—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1997-98 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் எந்தெந்த நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக மாற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது?

(ஆ) அதேபோல் எந்தெந்த உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்த அரசால் தீர்மானிக்கப்பட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, கஞ்சநாயக்கன்பட்டி மற்றும் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்





பள்ளி, சின்ன சிரகப்பாடி ஆகியன 1997-98 ஆம் ஆண்டில் உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்பட்டு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

(ஆ) அதேபோன்று மேல்நிலைப் பள்ளிகளைப் பொறுத்த வரையில் அரசு உயர்நிலைப் பள்ளி, சமுத்திரம், அரசு (மகளிர்) உயர்நிலைப் பள்ளி, மேச்சேரி, அரசு உயர்நிலைப் பள்ளி, கோனேரிப்பட்டி, அரசு (மகளிர்) உயர்நிலைப் பள்ளி, தம்மம்பட்டி, அரசு (மகளிர்) உயர்நிலைப் பள்ளி, மகுடஞ்சாவடி, அரசு உயர்நிலைப் பள்ளி, வாழப்பாடி ஆகிய உயர்நிலைப் பள்ளிகள் 1997-98 ஆம் ஆண்டில் மேல்நிலைப் பள்ளிகளாக மேம்படுத்தப்பட்டு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

22—

**கிளை நூலகம் அமைத்தல்**

**வினா 11547—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, ஏர்ரபையன அள்ளி ஊராட்சி, கருபையன அள்ளியில் கிளை நூலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) அரசாணை எண் 66, கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் துறை, நாள் 30-1-1996-ல் தமிழ்நாடு முழுவதும் 625 ஊர்ப்புற நூலகங்கள் திறக்க அரசு வழிவகை செய்துள்ளது. அதன்படி தருமபுரி மாவட்டத்தில் 41 கிராமங்களில் ஊர்ப்புற நூலகங்கள் திறக்க ஆணையிடப்பட்டுள்ளது. இக்கிராமங்களுள் பெண்ணாகரம் தொகுதி, ஏர்ரபையன அள்ளி ஊராட்சி, கருபையன அள்ளி இடம் பெறவில்லை. எனவே, தற்சமயம் இக்கிராமத்தில் ஊர்ப்புற நூலகமோ அல்லது கிளை நூலகமோ அமைக்க வாய்ப்பில்லை.

(ஆ) வினா எழ வாய்ப்பில்லை.

[1998 மார்ச் 19

23—

## கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல்

**வினா 12549—திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் அரசு எம்.வி.எம். மகளிர் கலைக் கல்லூரியில் இட நெருக்கடியைத் தவிர்த்திட கூடுதல் வகுப்பறைகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) ஆம், அரசு ஆவன செய்து வருகிறது.

(ஆ) இக்கல்லூரியின் முதல் மாடியில் வகுப்பறை மேம்பாட்டுப் பணிகளுக்கென ரூ.1.23 இலட்சம் கல்லூரிக் கல்வி இயக்குநரால் நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இதுதவிர, இக்கல்லூரி கட்டடத்தில் இரண்டாவது தளத்தில் கூடுதல் வகுப்பறைகள் கட்டும் பணிகளுக்கு ரூ.4.70 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து சம்பந்தப்பட்ட கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

24—

## மருந்துக் கடை வைக்கக் கடனுதவி

**வினா 9545—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் மருந்தாளுனர் பட்டயச் சான்று பெற்றவர்கள் மருந்துக் கடை வைத்து நடத்துவதற்குக் கடன் உதவி வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



1998 மார்ச் 19]

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மருந்தாளுநர் பட்டயச் சான்று பெற்றவர்கள் மருந்துக் கடை நடத்துவதற்கு அரசு கடன் உதவி வழங்கும் திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

25—

## தொழுநோய்க் கட்டுப்பாடு நிலையங்களின் நன்மை

**வினா 9546—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசு மருத்துவத் துறையில், தனியாகச் செயல்பட்டு வந்த தொழுநோய்க் கட்டுப்பாடு நிலையங்கள், பொது சுகாதாரத் துறையின் கட்டுப்பாட்டில் இணைக்கப்பட்டு உள்ளது என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதனால் அரசுக்குக் கிடைக்கும் நன்மை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 1983ஆம் ஆண்டு நிலவரத்தின்படி தமிழ்நாட்டில் 10,000 மக்கள்தொகைக்கு 118 பேர்களுக்குத் தொழுநோய் இருந்தது கண்டறியப்பட்டது. தேசிய தொழுநோய் ஒழிப்புத் திட்டத்தின் தீவிர செயல்பாட்டினாலும், கூட்டு மருந்து சிகிச்சை முறை கையாளப்பட்டதனாலும், 1996ஆம் ஆண்டு நிலவரப்படி தொழு நோயாளிகளின் எண்ணிக்கை 10,000-க்கு 7 பேர் என்ற அளவிற்கு

[1998 மார்ச் 19

மிகவும் குறைந்துள்ளது. மத்திய அரசும், உலகச் சுகாதார நிறுவனமும் தொழு நோயாளிகளின் விகிதம் 10 ஆயிரத்துக்கு 10 பேருக்குக் கீழ் உள்ள மாநிலங்களில் செயல்படுத்தப்பட்டுவரும் தொழுநோய் ஒழிப்புத் திட்டத்தை, பொது சுகாதாரத் துறையுடன் இணைத்து இதில் ஈடுபட்டுள்ள பணியாளர்களைத் தொழுநோயுடன் சேர்த்து மற்ற நோய்களையும் கண்டறியும் பணியில் ஈடுபடுத்தலாம் என்று பரிந்துரைத்ததின் அடிப்படையில், தொழுநோய் ஒழிப்புத் திட்டப் பணியாளர்களைப் பொது சுகாதாரத் துறையுடன் 1-7-1997 முதல் இணைக்கப்பட்டது. தொழு நோயாளிகளின் எண்ணிக்கை மிகவும் குறைந்துவிட்டதன் காரணமாகத் தொழுநோய் ஒழிப்புத் துறை ஊழியர்களுக்குப் போதிய அளவிற்கு வேலை இல்லாமல் போனதால், இவர்களைத் தொழுநோய் ஒழிப்புப் பணிக்கு மட்டும் பயன்படுத்தாமல் மற்ற நோய்களையும் கண்டறியும் பணியில் ஈடுபடுத்துவதினால் மொத்த சமுதாயத்திற்கும் மிகுந்த பயனளிக்கும். மேலும், சுமார் 25 ஆயிரம் மக்கள்தொகைக்கு ஒரு தொழுநோய் ஆய்வாளர் என்ற நிலை மாறி, 5 ஆயிரம் மக்கள்தொகைக்கு ஒரு பணியாளர் என நிலை தற்போது உருவாகியுள்ளது. தொழுநோய் ஒழிப்புப் பணியாளர்களைப் பொது சுகாதாரத் துறையுடன் இணைத்ததினால், தொழுநோய் கண்டுபிடிப்புப் பணியிலும், அதன் செயல் முறையிலும், மற்றும் நோயாளிகளுக்குத் தரப்படும் சிகிச்சையிலும் எந்தவித மாற்றமும் இல்லை. மாறாக, அனைத்துச் சுகாதாரப் பணியாளர்களும் தொழுநோய் தீர்ப்பு முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். இதன்மூலம் தொழுநோய் ஒழிப்புப் பணிகள் தொடர்ந்து நடைபெறவும் கி.பி. 2000-க்குள் தமிழகத்தில் தொழு நோயாளி ஒருவரும் இல்லை என்னும் இலக்கை அடையவும் திட்டமிட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**26—**

### கூடுதல் துப்புரவுப் பணியாளர்கள் நியமித்தல்

**வினா 10009—திரு. சி. வேலாயுதன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கன்னியாகுமரி மாவட்டம், பத்மனாபபுரம் தொகுதி, பத்மனாபபுரம் அரசு மருத்துவமனையில் கூடுதல் துப்புரவுப் பணியாளர்களை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?*



1998 மார்ச் 19]

*விடை—*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*தேவையான அளவு மருத்துவமனைப் பணியாளர்கள், துப்புரவுப் பணியாளர்கள் உள்ளதால் கூடுதல் துப்புரவுப் பணியாளர்கள் நியமிக்கத் தேவையில்லை எனக் கருதப்படுகிறது.*

**27—**

### மின்மாற்றியை மாற்றுதல்

**வினா 11269—திரு. மா. இராமச்சந்திரன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தஞ்சை மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், காயாவூர் கிராமத்தில் தீப்பிடித்து எரிந்துவிட்ட மின்மாற்றியை மாற்ற அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

*விடை—*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ): தஞ்சை மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், காயாவூர் கிராமத்தில் 3-4-1997 அன்று பழுதடைந்த காயாவூர் 63 கி.வோ. ஆம்பியர், 11 கி.வோ. 400 வோல்ட் மின்மாற்றிக்குப் பதிலாக அதே திறன் கொண்ட ஒரு புதிய மின்மாற்றி 11-4-1997 அன்று மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. 3-4-1997 முதல் 10-4-1997 வரை அருகிலுள்ள காயாவூர் துணை மின் நிலையம்-I, 63 கி.வோ. ஆம்பியர் மின்மாற்றியிலிருந்து பின் மின்னூட்டு கொடுத்து இடைப்பட்ட காலத்தில் தடங்கலின்றி மின்சாரம் வழங்கப்பட்டது.*

28—

**செவிலியர் பணி விவரம்**

**வினா 12442—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் பயிற்சி முடித்தும் பணி கிடைக்காமல் காத்திருக்கும் செவிலியர் எத்தனை பேர்?

(ஆ) அவர்களுக்கு எப்போது பணி வழங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) 1995ஆம் ஆண்டு வரை செவிலியர் பயிற்சி பெற்று அரசுப் பணி கிடைக்காமல் காத்திருக்கும் செவிலியர் 3,870 பேர்கள்.

(ஆ) தற்போது சுமார் 290 பேர்களின் நியமனத்திற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மீதமுள்ளோர் பணி ஓய்வுபெறும் காலிப் பணியிடங்களிலும், அரசு அவ்வப்போது ஏற்படுத்தும் புதிய பணியிடங்களிலும் அவர்கள் பயிற்சி முடித்த முதுநிலை அடிப்படையில் காலக்கிரமத்தில் பணி நியமனம் செய்யப்படுவார்கள்.

29—

**சாதிச் சான்றிதழ் உடனடியாகக் கிடைக்க வழி செய்தல்**

**வினா 11763—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மாவட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகங்களில் வழங்கப்படும் சாதிச் சான்றிதழ் உடனடியாகக் காலதாமதமின்றிக் கிடைக்க அரசு ஆவன செய்யுமா?



விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

பொதுவாக, சாதிச் சான்றிதழ்கள் இரண்டு நாட்களிலும், தவிர்க்க முடியாத சூழ்நிலையில் மூன்று நாட்களிலும் வழங்கப்பட வேண்டும் என்றும், தவிர, விசாரணை தேவைப்படும் பழங்குடியினர் சான்று, இரண்டு வாரத்திற்குள் வழங்கப்பட வேண்டும் என்றும் அனைத்து சான்று வழங்கும் அலுவலர்களுக்கும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. தவிர, 1988-89 கல்வி ஆண்டிலிருந்து நிரந்தர சாதிச் சான்று முறை பின்பற்றப்பட்டு வருகிறது. இவ்வாறாக, சாதிச் சான்று வழங்கக் கோரும் அனைவருக்குமே காலதாமதமின்றி சாதிச் சான்று வழங்க அரசு ஆவன செய்துள்ளது.

30—

**திருக்கழுக்குன்றம் வட்டார அலுவலகத்திற்குப் புதிய கட்டடம்**

**வினா 12671—திரு. வீ. தமிழ்மணி:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருக்கழுக்குன்றம் வட்டார அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

செயற்குறிப்பு ஏதுமில்லை. கட்டடம் இல்லாத வட்டாட்சியர் அலுவலகங்களுக்குக் கட்டடம் கட்ட நிதிநிலைக்கேற்றவாறு, தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

31—

**மேம்பாட்டுத் திட்டப் பணிகள் விவரம்**

**வினா 2738—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1998 மார்ச் 19

(அ) திருப்பூர் பகுதி வளர்ச்சி நிறுவனத்தின் மேம்பாட்டுத் திட்டப் பணிகள் செயல் வடிவம் பெற்றுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) திருப்பூர் நகரத்தில் தமிழ்நாடு அரசு, மத்திய அரசு, I.L.F.S. மற்றும் திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்கம் (TEA) ஆகியவைகள் ஒருங்கிணைந்து திருப்பூர் மேம்பாட்டுத் திட்டம் ஒன்றை உலக வங்கி உதவியுடன் செயல்படுத்த உள்ளது. திரு. எஸ். வெங்கிடரமணன், முன்னாள் ஆளுநர், ரிசர்வ் வங்கி மற்றும் உறுப்பினர், மாநில திட்டக்குழு அவர்கள் என்.டி.ஏ.டி.சி.எல். (NTADCL)-ன் தலைவராகப் பொறுப்பேற்றுள்ளார். மேலும் ஒரு முதுநிலை இந்திய ஆட்சிப் பணியாளர் (Senior I.A.S.) முழு நேர மேலாண்மை இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார். இத்திட்டத்தின்கீழ் தண்ணீர் வசதி (ரூ.253 கோடி), தொழிற்சாலை கழிவுநீர் சுத்திகரித்தல் (ரூ.303.60 கோடி), சாலை மேம்படுத்தல் (ரூ.32.10 கோடி) மற்றும் தொலைபேசி வசதிகள் (ரூ.64.50 கோடி) அமைக்கப்பட உள்ளன.

இந்தத் திட்டத்தினைச் செயல்படுத்த ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன.

32—

### தெருக்களைப் பராமரித்தல்

**வினா 4763—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர், தோட்டப்பாளையம், அடுகந்தம்பூண்டி பெரிய தெரு, பிள்ளையார் கோயில் தெரு, எட்டியம்மன் கோயில் தெரு, படவேட்டம்மன் கோயில் தெரு ஆகிய தெருக்களைப் பராமரிக்க அரசு ஆவன செய்யுமா?



1998 மார்ச் 19]

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

அடுகந்தம்பூண்டி பெரிய தெரு சாலைக்குத் தார்ச் சாலை அமைக்க ரூ.1.48 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டும், தோட்டப்பாளையம் பிள்ளையார் கோயில் தெருவிற்கு சிமெண்ட் தளம் அமைக்க ரூ.70,000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டும், தோட்டப்பாளையம், எட்டியம்மன் கோயில் தெருவிற்கு தார் தளம் அமைக்க ரூ.70,000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டும் ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. இவற்றைச் செப்பனிடும் பணியை விரைவில் முடிக்க நகராட்சியால் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. தோட்டப்பாளையம் படவேட்டம்மன் கோயில் தெரு தார்ச் சாலை தற்சமயம் ஓரளவிற்கு நல்ல நிலையில் உள்ளதால் அதனைச் சற்று காலம் கடந்து செப்பனிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

33—

### இணைப்புச் சாலையைப் புதிதாக அமைத்தல்

வினா 5300—**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஒன்றியம், கிள்ளை-சிங்காரக்குப்பம் (கலைஞர் நகர்) இணைப்புச் சாலையைப் புதிதாக அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): 1997-98ஆம் ஆண்டு அடிப்படை வசதி திட்டத்தில் "சாலை" தலைப்பின்கீழ் கிள்ளை பேரூராட்சிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.3.00 இலட்சத்தில் சிங்காரக்குப்பம் இணைப்புச்

[1998 மார்ச் 19

சாலையை மேம்பாடு செய்ய ரூ.70,000 ஒதுக்கீடு செய்யப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

34—

**சிதம்பரம் நகராட்சியுடன் சிறு நகர்களை இணைத்தல்**

**வினா 5744—திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிதம்பரம் நகரின் மேற்குப் பகுதியிலுள்ள ஜமால் நகர், சி. தண்டேஸ்வரநல்லூர், சிவசக்தி நகர், எஸ்.ஆர். நகர், பொன்னம்பலம் நகர், திருநகர், சிவஜோதி நகர், கிழக்குப் பகுதியிலுள்ள சுதாகர் நகர், இப்ராகிம் நகர், சி. கொத்தங்குடி, முதக்குடி, பள்ளிப்படை, முத்தையா நகர், வடக்குப் பகுதியிலுள்ள சிவா நகர், வள்ளலார் நகர், சக்தி நகர், மகாவீர் நகர், கணபதி நகர், ராஜா நகர், தெற்குப் பகுதியிலுள்ள எம்.ஆர்.வி. நகர், பூதகேணி, டி.டி.கே. நகர், இந்திரா நகர் ஆகிய பகுதிகளை சிதம்பரம் நகராட்சியுடன் இணைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இல்லை.

35—

**அருந்ததியர் காலனிக்கு மயான நிலம்**

**வினா 6973. திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1998 மார்ச் 19]

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, பூலாம்பட்டி பேரூராட்சியிலுள்ள மணியக்காரனூர் அருந்ததியர் காலனிக்கு மயானத்திற்கு நிலம் கையகப்படுத்த வருவாய்த் துறையின்மூலம் நடவடிக்கை எடுத்தும், இதுவரை அந்தப் பகுதியில் மயானத்திற்கு நிலம் கையகப்படுத்தப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இதுகுறித்து அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) எடப்பாடி தொகுதியைச் சேர்ந்த பூலாம்பட்டி பேரூராட்சியில் மணியக்காரனூர் அருந்ததியர் காலனி பகுதிக்கு மயானம் அமைக்க பேரூராட்சிக்குச் சொந்தமான இடம் ஏதும் இல்லாத காரணத்தால், தனியார் இடத்தினைக் கையகப்படுத்திட சங்ககிரி கோட்டாட்சியர்மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தற்போது, சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் இதுகுறித்து விரைவான நடவடிக்கை மேற்கொள்ளக் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்.

36—

**தார்ச் சாலை அமைத்தல்**

**வினா 6998—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி நகரம் 4-வது வார்டு மோட்டூரில் உள்ள மோட்டூர் காட்டுவளவிலிருந்து சுமார் 2 கிலோ மீட்டர் தூரம் உள்ள மோட்டூருக்கு தார்ச் சாலை அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

மோட்டூர், காட்டுவளவு பகுதிக்கு தார்ச் சாலை அமைக்கும் பணி அடுத்துவரும் திட்ட ஆண்டுகளில் மேற்கொள்ளப்படும் என நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார்.

37—

## ஆழ்துளைக் கிணறு அமைத்தல்

**வினா 7006—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, இடங்கணசாலை பேரூராட்சி, பேருந்து நிற்கும் இடத்திற்கும், மோட்டூர் சத்திய நகரிலும் ஆழ்துளைக் கிணறு அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இடங்கணசாலை பேரூராட்சி, பேருந்து நிற்கும் இடத்திற்கும் சத்தியா நகருக்கும் அருகிலுள்ள ஒரு ஆழ்துளைக் கிணறு மூலமும் பாப்பாப்பட்டி மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலமும் தற்போது குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி பகுதிக்குக் கூடுதலாக ஒரு ஆழ்துளைக் கிணறு அமைத்துக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

38—

## தார்ச் சாலை அமைத்தல்

**வினா 7018—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



எடப்பாடி தொகுதி, பூலாம்பட்டி பேரூராட்சியில் வளையசெட்டியூரிலிருந்து வன்னியர் நகர் வரை தார்ச் சாலை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

எடப்பாடி தொகுதி, பூலாம்பட்டி பேரூராட்சியில், வளையசெட்டியூரிலிருந்து வன்னிய நகர் வரை மொத்தம் 2 கிலோ மீட்டர் தூரம் தற்போது மெட்டல் சாலையாக உள்ளது. இப்பேரூராட்சியில் போதுமான நிதி வசதியில்லாததால் இச்சாலையை 1996-97ஆம் ஆண்டில், தார்ச் சாலையாக மாற்றி அமைக்க இயலவில்லை. இருப்பினும், நடப்பு நிதி ஆண்டில் இப்பணியினை மேற்கொள்ள பரிசீலனை செய்து ஆவன செய்யுமாறு சேலம் மண்டல இயக்குநருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

39—

## புதிய திருப்பூர் வளர்ச்சிக் கார்ப்பரேசன் லிமிடெட் திட்டங்கள்

**வினா 7746—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதிய திருப்பூர் வளர்ச்சிக் கார்ப்பரேசன் லிமிடெட் நிறுவனம் இயங்கி வருகிறதா?

(ஆ) ஆம் எனில், அதில் அரசின் பங்கு என்ன?

(இ) அவற்றின் எதிர்காலத் திட்டங்கள் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ), (ஆ) மற்றும் (இ): ஆம். புதிய திருப்பூர் பகுதி வளர்ச்சிக் கார்ப்பரேசன் லிமிடெட் (New Tiruppur Area Development Corporation

[1998 மார்ச் 19

Limited) தற்போது செயல்படுகிறது. புதிய திருப்பூர் திட்டத்தினைச் செயல்படுத்துவதற்காக தமிழ்நாடும் மற்றும் மத்திய அரசும் தலா ரூ.10 கோடி கொடுத்துள்ளன. தமிழ்நாடு அரசு, மத்திய அரசு, ஐ.எல்.எப்.எஸ். மற்றும் திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்கம் ஆகியவைகள் ஒருங்கிணைந்து திருப்பூர் மேம்பாட்டுத் திட்டம் ஒன்றை உலக வங்கி உதவியுடன் செயல்படுத்த உள்ளன. இத்திட்டத்தின் கீழ், தண்ணீர் வசதி (ரூ.253 கோடி), தொழிற்சாலை கழிவுநீர் சுத்திகரித்தல் (ரூ.303.60 கோடி) சாலை மேம்படுத்துதல் (ரூ.32.10 கோடி) மற்றும் தொலைபேசி வசதிகள் (ரூ.64.50 கோடி) செயல்படுத்தப்படவுள்ளன.

40—

## மருத்துவமனைகளில் மதில் சுவர் அமைத்தல்

**வினா 7863—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் நகராட்சியிலுள்ள கஸ்பா, குட்டைமேடு, அம்பேத்கர் நகர் ஆகிய இடங்களிலுள்ள தாய்-சேய் நலம் மற்றும் மருத்துவமனைகளில் மதில் சுவர் இல்லாமையால் சமூக விரோதிகளினால் தொல்லை ஏற்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கையின் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): கஸ்பா பகுதியிலுள்ள தாய்-சேய் நல விடுதியின் ஒரு பகுதிக்குச் சுற்றுச்சுவர் அமைக்க ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. மீதமுள்ள பகுதிக்கு சுற்றுச்சுவர் கட்டி முடிக்கப் போதுமான நிதி ஒதுக்கீடு செய்தபின் கட்டி முடிக்கப்படும். அம்பேத்கர் நகரிலுள்ள தாய்-சேய் நல விடுதிகளின் நான்கு புறமும், குட்டைமேடு கோலக்காரன் தெருவிலுள்ள பகுதி நேர மருத்துவமனைக்கு நான்கு புறமும் சுற்றுச்சுவர் ஏற்கெனவே அமைக்கப்பட்டுவிட்டன.



1998 மார்ச் 19]

41—

## தரைப்பாலம் அமைத்தல்

**வினா 8079—திரு. பி.என். சுப்பிரமணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆற்காடு தொகுதி, ஆற்காடு நகரத்தில் பாலாற்றின் குறுக்கே தரைப்பாலம் அமைக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஆற்காடு நகரத்தில் பாலாற்றின் குறுக்கே தரைப்பாலம் அமைக்கும் உத்தேசம் ஏதும் இல்லை.

42—

## குடிநீர்க் கிணற்றை ஆழப்படுத்துதல்

**வினா 8280—திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குனேரி தொகுதி, இடையன்குளம் ஆதிதிராவிடர் குடியிருப்பிலுள்ள திறந்தவெளி குடிநீர்க் கிணற்றை ஆழப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): நாங்குனேரி தொகுதி, இடையன்குளம் ஆதிதிராவிடர் குடியிருப்பில் உள்ள திறந்தவெளி குடிநீர்க் கிணற்றை

[1998 மார்ச் 19

ஆழப்படுத்த ரூ.40,000 (ரூபாய் நாற்பதாயிரம் மட்டும்) 1997-98 ஆம் ஆண்டு வறட்சி நிவாரணத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணி விரைவில் தொடங்கப்பட உள்ளது.

43—

**கசிவுநீர்க் குட்டைகள் அமைத்தல்**

**வினா 8477—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், செங்காநத்தத்தில் கசிவுநீர்க் குட்டைகள் அமைத்து, விவசாயத்தைப் பெருக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): வேலூர் மாவட்டம், செங்காநத்தம் கிராமத்தில் கசிவுநீர்க் குட்டை அமைக்கும் பணி ரூ.2,00,000 மதிப்பீட்டில் 31-7-1997இல் முடிக்கப்பட்டது.

44—

**கடைகள் வளாகத்தில் மின் இணைப்பு வாடகை வசூலித்தல்**

**வினா 10059—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, எடப்பாடி நகராட்சியில் பேருந்து நிலையத்தில் கட்டப்பட்டுள்ள எட்டு கடைகள் வளாகத்திற்கு இன்னும் மின் இணைப்பு வழங்கப்படாததை அரசு அறியுமா?



1998 மார்ச் 19]

(ஆ) ஆம் எனில், அந்தக் கடை ஏலதாரர்களிடம் வாடகை வசூலிப்பதில் நகராட்சிக்குப் பிரச்சினை ஏற்பட்டுள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) எடப்பாடி நகராட்சி பேருந்து நிலையத்தில் கட்டப்பட்டுள்ள எட்டு கடைகள் வளாகத்திற்கு 11-4-1997இல் மின் இணைப்பு மின்வாரியத்தால் வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) அந்தக் கடை ஏலதாரர்களுடன் பிரச்சினை ஏதுமின்றி வாடகை வசூல் செய்யப்பட்டு வருகிறது என நகராட்சி ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

45—

**இலவசக் குடியிருப்புகள் கட்டும் விவரம்**

**வினா 10205—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1997-98ஆம் ஆண்டு இந்திரா குடியிருப்புத் திட்டத்தின்கீழ் சேலம் மாவட்டத்தில் இலவசக் குடியிருப்புகள் எத்தனை கட்டப்பட உத்தேசித்துள்ளது?

(ஆ) இராஜாஜி மாவட்டத்தில் எத்தனை கட்டத் தீர்மானிக்கப்பட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): 1997-98ஆம் ஆண்டிற்கு சேலம் மாவட்டத்திற்கு 2,401 வீடுகளும், நாமக்கல் மாவட்டத்திற்கு 1,854 வீடுகளும் ஒதுக்க உத்தேசித்துள்ளது.

[1998 மார்ச் 19

46—

## நள்ளிரவு காய்கறிச் சந்தை அமைத்தல்

**வினா 10891—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு பேருந்து நிலைய வளாகத்திற்குள் நள்ளிரவு காய்கறிச் சந்தை அமைக்க வேண்டும் என்ற முறையீடு அரசுக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): ஈரோடு பேருந்து நிலைய வளாகத்திற்குள் நள்ளிரவு காய்கறிச் சந்தை அமைப்பது குறித்த முறையீடு, நகராட்சியால் கருதிப் பார்க்கப்பட்டது. குறிப்பிடப்பட்ட காலியிடத்தில் நகரப் பேருந்து நிலையம் அமைக்க நகராட்சியால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதால் மேற்படி முறையீட்டை ஏற்க இயலாது என நகராட்சி தெரிவித்துள்ளது.

47—

## வாகன வசதி செய்து கொடுத்தல்

**வினா 11323—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரியும் உதவிப் பொறியாளர், கைப்பம்பு பொருத்துநர், மின் பணியாளர் ஆகியோருக்கு வாகன வசதி செய்து கொடுப்பது குறித்து அரசு பரிசீலித்து வருகிறதா?



1998 மார்ச் 19]

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தற்பொழுது ஊராட்சி ஒன்றியங்களில் ஒரு ஈப்பு மட்டும்தான் உள்ளது. அவ்வாகனத்தை ஒன்றிய ஆணையர் மற்றும் ஒன்றியப் பொறியாளர்களும், அவசரம்கருதி அவசர வேலைகளுக்காக ஒன்றியப் பணியாளர்களும் பயன்படுத்துகின்றனர். எனவே மேற்கண்ட பணியாளர்களுக்குத் தனியே வாகன வசதி செய்து தர வேண்டியதில்லை. மேலும் தற்பொழுது வேலைப்பளு உள்ள ஊராட்சி ஒன்றியங்களுக்குக் கூடுதலாக ஒரு ஈப்பு ஒதுக்கப்பட்டுள்ளது. வேலைப்பளு அதிகமாக உள்ள ஒன்றியத்திற்கு இரண்டு ஈப்புக்ள் வழங்குவதால் மேற்கண்ட பணியாளர்களும் அவைகளை அவசரத் திட்டப் பணிகளுக்காகப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

48—

## சாலை ஓர வியாபாரிகளை அப்புறப்படுத்துதல்

**வினா 11653—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை உயர் நீதிமன்ற ஆணைக்கு விரோதமாகக் கோயம்புத்தூர் ராஜ வீதியில் சாலை ஓர வியாபாரிகள் அப்புறப்படுத்தப்பட்டதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) கோயம்புத்தூர் மாநகராட்சியால் கோயம்புத்தூர் ராஜ வீதியில் சாலை ஓர வியாபாரிகள் அகற்றப்படவில்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

49—

## மதுரை மாநகராட்சியில் ஊராட்சிகளை இணைத்தல்

**வினா 12423—திரு. க.வெ.வீ. இராசமாணிக்கம் :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாநகராட்சியில் மேலமடை ஊராட்சி, வண்டியூர் ஊராட்சி, உத்தங்குடி ஊராட்சி மற்றும் அவனியாபுரம் ஊராட்சி ஆகிய ஊராட்சிகளை இணைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

(அ) தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

50—

## பேருந்து நிழற்குடை அமைத்தல்

**வினா 12639—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ரெட்டவயல் கடைவீதியில் பேருந்து நிழற்குடை அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா ?





விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

ஆம். தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ரெட்டவயல் கடைவீதியில் நிழற்குடை அமைக்க 1996-97ஆம் ஆண்டு பாராளுமன்ற உள்ளூர் அபிவிருத்தி திட்டத்தில் ரூ.30,000 மதிப்பீட்டில் அமைக்க நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டு நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டு வேலைகள் தொடங்கும் நிலையில் உள்ளன.

51—

## ஏலகிரி மலையில் பழம் மற்றும் பூந்தோட்டம் அமைத்தல்

**வினா 8474—திரு. சி. ஞானசேகரன் :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வடஆற்காடு மாவட்டம், ஏலகிரி மலையில் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் பழத்தோட்டங்கள், பூந்தோட்டங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

வட ஆற்காடு மாவட்டம், ஏலகிரி மலையில் பயணிகளைக் கவரும் வகையில் பழத்தோட்டங்கள் மற்றும் பூந்தோட்டங்கள் அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது இத்துறையில் இல்லை.

52—

## ஏரிக்கரையை அகலப்படுத்துதல்

**வினா 4611-அ—திரு. கு. மனோகரன் :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1998 மார்ச் 19

(அ) தருமபுரி தொகுதி, தருமபுரி ஒன்றியம், கோட்டை - கோடியூர் ஏரிக்கரையை அகலப்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ): தருமபுரி தொகுதி, தருமபுரி ஒன்றியம், கோட்டை-கோடியூர் ஏரி என்று அழைக்கப்படும் அதியமான் கோட்டை சோழராயன் ஏரியை அகலப்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

**53—**

## ஆறுகள் அகலப்படுத்துதல்

**வினா 5884—திரு. குத்தாலம் பி. கல்யாணம் :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குத்தாலம் தொகுதியிலுள்ள (1) தென்கோறையாறு (2) வடகோறையாறு (3) முட்டையாறு (4) கோணவாய்க்கால் ஆறு (5) கடலாழி ஆகிய ஐந்து ஆறுகளை "புல்டோசர்" மூலம் ஆழப்படுத்த அரசு ஆவன செய்யுமா ?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர் :**

ஆம்.

வடகோறையாறு, தென்கோறையாறு, முட்டையாறு வடிகால், கோணவாய்க்கால் ஆறு ஆகியவைகள் 1997-98-ம் ஆண்டின் கோடையில் ''புல்டோசர்'' மூலம் ஆழப்படுத்தி அகலப்படுத்தப்பட்டுள்ளது. கடலாழி ஆறு 1998-99-ம் ஆண்டு கோர்டையில் அகலப்படுத்தி ஆழப்படுத்தப்படும்.



1998 மார்ச் 19]

**54—**

## ஆற்றின் கரைகளைச் சீர் செய்தல்

**வினா 7216—திரு. எம்.எம்.எஸ். அபுல்ஹசன் :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை தொகுதி, இராதாநல்லூர் முதல் கூடநடமங்கை வரை உள்ள அய்யாவையனாறு இருகரைகளும் பெருமழையின் காரணமாக பெரும் சேதம் அடைந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், ஆற்றின் கரைகள் சீர் செய்யப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர் :**

(அ) ஆம்.

(ஆ) கடந்த டிசம்பர் 1996-ஆம் ஆண்டு பெய்த கடும் மழையின் காரணமாக அய்யாவையனாறு ஆற்றின் இரு கரைகளும் பெரும் சேதம் அடைந்துள்ளதை சரிசெய்யும் நோக்குடன் அய்யாவையனாறு தலைப்பு அமைந்துள்ள கொற்கை கிராமம் முதல் கடைமடை அமைந்துள்ள கீழையூர் கிராமம் வரையுள்ள தூரமான 18 கி.மீ. நீளத்திற்கு வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள இராதாநல்லூர், கூடநடமங்கை கிராமங்கள் உட்பட அய்யாவையனாற்றை மண் தள்ளும் இயந்திரம் மூலம் அகலப்படுத்தியும், அதற்காக வெட்டி எடுக்கப்பட்ட மண்ணைக் கொண்டு ஆற்றின் இருகரைகளையும் பலப்படுத்தும் பணி ரூ.17.95 இலட்சம் மதிப்பீட்டுத் தொகையில் செய்து முடிக்கப்பட்டுள்ளது.

**55—**

## கால்வாய் சீர் செய்து கான்கிரீட் தளம் அமைத்தல்

**வினா 7226—திரு. த. பூவேந்தன் :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1998 மார்ச் 19

(அ) திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், வரதமாநதி அணைத் திட்டத்தில் உள்ள பாப்பான் வாய்க்கால் சீரமைக்கப்பட்டு கான்கிரீட் தளம் அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) : திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், வரதமாநதி அணைத் திட்டத்தில் உள்ள பாப்பான் வாய்க்கால் சீரமைக்கப்பட்டு கான்கிரீட் தளம் அமைக்கும் திட்டம் தற்போது ஏதுமில்லை.

56—

## இறைவை நீரேற்றுப் பாசனத் திட்டம்

**வினா 7623—திரு. பி. இராசமாணிக்கம் :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், ஒரத்தநாடு தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், மகாதேவப்பட்டினம்-முக்குளம், சாத்தனூர் ஆகிய கிராமங்களுக்கிடையில் உள்ள காட்டாற்றில் இறைவை நீரேற்றுப் பாசனத் திட்டம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இந்த ஆண்டு நிறைவேற்றப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர் :**

(அ) இத்திட்டம் ஆய்வு நிலையில் உள்ளது.

(ஆ) இல்லை.



1998 மார்ச் 19]

57—

## ஏரியை ஆழப்படுத்துதல்

**வினா 7688—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கைவனவயல் கிராமத்தில் உள்ள ஏரியை ஆழப்படுத்தி செப்பனிடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர் :**

இதுபோன்ற திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் தற்சமயம் இல்லை.

58—

## நிலநீர் ஆய்வுக் கோட்ட அலுவலகம் இடமாற்றம்

**வினா 9707—திரு. ஜி.எல். வெங்கடாசலம் :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டத்தின் தலைமை இடத்தில் அமைந்துள்ள நில நீர் ஆய்வுக் கோட்ட அலுவலகத்தை திருச்சிக்கு மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர் :**

திருச்சியில் உருவாக்கப்பட்ட நீரியல் கோட்டத்திற்கு, தருமபுரி நிலநீர் கோட்டத்துடன் இரு பொறியியல் உப கோட்டங்களை மாற்றவும் (Redeployment) இதர இரு உபகோட்டங்களை சேலம் நிலநீர் ஆய்வுக் கோட்டத்துடன் இணைக்கவும் ஏற்கெனவே ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

[1998 மார்ச் 19

59—

**வடிகால் வாய்க்கால் செப்பனிடல்**

**வினா 11154—திரு. மா. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், ஆழிவாய்க்கால் கிராமத்தில் வடிகால் வாய்க்காலை செப்பனிட்டு விவசாயத்திற்கு பயன்படுமாறு செய்ய அரசு முன்வருமா ?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர் :**

ஆம். இந்த வடிகால் வாய்க்காலை மண் தள்ளும் இயந்திரம் மூலம் 1998-99-ம் ஆண்டில் முன்னுரிமை அடிப்படையில் செப்பனிட நடவடிக்கை எடுக்கப்படும்.

60—

**வாய்க்காலை சீரமைத்தல்**

**வினா 11157—திரு. மா. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், உப்பங்கரைக்கு வரும் வாய்க்காலை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர் :**

வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள வாய்க்கால் பருத்திக்கோட்டை கிளை வாய்க்காலில் வலது கரை மதகு மூலம் பயனடையும் கன்னி வாய்க்கால் ஆகும். அதனை பொதுப்பணித் துறை மூலம் செப்பனிட இயலாது. வேளாண் பொறியியல் துறை மூலம் இதனைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.



1998 மார்ச் 19]

61—

**அகவுறை அமைத்தல்**

**வினா 11365—திரு. கே. ரவி அருணன் :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், திப்பனம்பட்டி ஊராட்சி, நாராயணப்பேரி கால்வாயின் மூன்று பக்கங்களுக்கும் அகவுறை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர் :**

இத்திட்டம் ஆய்வில் இல்லை.

62—

**குளம் ஆழப்படுத்தி மராமத்து செய்தல்**

**வினா 11366—திரு. கே. ரவி அருணன் :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், மேலப்பாவூர் கிராமம் பெரிய குளத்தை ஆழப்படுத்தி மராமத்து செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர் :**

திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், மேலப்பாவூர் கிராமத்தில் உள்ள பெரியகுளத்தை மராமத்து செய்யும் பணியும், தூர்வாரி ஆழப்படுத்தும் பணிகளும் நிதி நிலைக்கேற்ப வரும் நிதியாண்டுகளில் எடுத்துக்கொள்ள பரிசீலனை செய்யப்படும்.

**63—** [1998 மார்ச் 19

### மடைகள் சீர் செய்தல்

**வினா 11367—திரு. கே. ரவி அருணன் :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், மேலப்பாவூர் கிராமம் சிற்றாறு கால்வாயில் புதர் செடிகளை அகற்றி மடைகளை சீர்செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர் :**

இக்கால்வாயில் புதர் செடிகளை அகற்றி மடைகள் மற்றும் கால்வாய்களை சீர் செய்யும் பணிக்கு உலக வங்கி நிதி உதவியுடன் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தக்காரர் நியமனம் செய்த பின்னர் இம்மராமத்து பணிகள் விரைவாக தொடங்கப்படும்.

**64—**

### குளம் ஆழப்படுத்துதல்

**வினா 11367—திரு. கே. ரவி அருணன் :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், திப்பனம்பட்டி ஊராட்சிக் கைக்கொண்டான்குளம் தெற்கு மடையைப் பழுது பார்த்து குளத்தை ஆழப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர் :**

வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள கைக்கொண்டான்குளம் தெற்கு மடையைப் பழுதுபார்க்கும் பணி வரும் நிதி ஆண்டில் நிதி ஒதுக்கீட்டிற்கு ஏற்ப முன்னுரிமை கொடுத்து பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். ஆனால், இக்குளத்தை ஆழப்படுத்த திட்டம் எதுவும் தற்பொழுது ஆய்வில் இல்லை.



1998 மார்ச் 19]

**65—**

### கால்வாய் மராமத்து செய்தல்

**வினா 11369—திரு. கே. ரவி அருணன் :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், திப்பனம்பட்டி ஊராட்சி. குற்றாலம்பேரி மற்றும் நாராயணப்பேரி கால்வாயை மராமத்து செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றாலம்பேரி மற்றும் நாராயணப்பேரி கால்வாய்களின் மராமத்துப் பணிகள் நிதிநிலைக்கேற்ப வரும் நிதி ஆண்டில் முன்னுரிமை கொடுத்து பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

**66—**

### தற்காலிகப் பணியாளர்கள் பணி நிரந்தரம்

**வினா 4982—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள போக்குவரத்துக் கழகங்கள் அனைத்திலும் மொத்தமாக எத்தனை தற்காலிகத் தொழிலாளர்கள் உள்ளனர்?

(ஆ) அவர்கள் பணி எப்போது நிரந்தரம் செய்யப்படும்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டிலுள்ள போக்குவரத்துக் கழகங்கள் அனைத்திலும் மொத்தமாக 6,646 தற்காலிகத் தொழிலாளர்கள் உள்ளனர்.

(ஆ) போக்குவரத்துக் கழகங்களில் ஏற்படும் காலியிடங்களைப் பொறுத்து கழக விதிகளின்படி அவர்களது பணி நிரந்தரம் செய்யப்படும்.

67— [1998 மார்ச் 19

### சாலை சீரமைத்தல்

**வினா 5208—திரு. அ. வ. அப்துல் நாசர் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, பறங்கிப்பேட்டை ஒன்றியம், காட்டுவராயன்குறிச்சி சாலை சீரமைப்பது தொடர்பாக அளிக்கப்பட்டுள்ள மனுவின்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

(ஆ) அச்சாலை எப்போது செப்பனிடப்படும்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) : புவனகிரி தொகுதி பறங்கிப்பேட்டை ஒன்றியம், காட்டுவராயன்குறிச்சி சாலை என்பது, அரசு பெரிய மாவட்டச் சாலையாக உள்ள பழைய கடலூர்-சிதம்பரம் சாலையாகும். இச்சாலை பெரும்பகுதி மக்களின் பேச்சுவழக்கில் காட்டுவராயன்குறிச்சி சாலை என்றழைக்கப்படுகிறது. இதன் நீளம் 6.4 கி.மீ. (34/0-40/4) ஆகும்.

இச்சாலையில் 34/0-34/8 வரை சென்ற நிதியாண்டில் தார் புதுப்பித்தல் வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. தற்போது இச்சாலை சீரமைக்கப்பட்டு போக்குவரத்திற்கு ஏற்றவாறு பராமரிக்கப்பட்டு வருகிறது.

68—

### தார்ச்சாலை அமைக்கும் திட்டம்

**வினா 7355—திரு. எஸ். டேவிட் செல்வின் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி மாவட்டம், திருவைகுண்டம் தொகுதியில் உள்ள நட்டாத்தி கிராமம், கட்டாலங்குளம் கிராமம் வழியாக திருநெல்வேலி மெயின் ரோட்டை அடையும் ராணி மங்கம்மாள் சாலையைப் புதுப்பித்து தார்ச்சாலை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?



1998 மார்ச் 19]

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): நட்டாத்தி கிராமம், திருவைகுண்டம் ஒன்றியத்திலும் கட்டாலங்குளம் கிராமம் தூத்துக்குடி ஒன்றியத்திலும் உள்ளன. தற்பொழுது நட்டாத்தி, சாயர்புரம், கட்டாலங்குளம் ஆகிய கிராமங்கள் வழியாக திருநெல்வேலி மெயின்ரோட்டை வாகைக்குளம் கிராமத்தில் (தே. நெ. 7எ கி.மீ.31/8) சேரும்படி போக்குவரத்து நடைபெற்று வருகிறது. இச்சாலைகள், அனைத்தும் தார்ச்சாலைகளாகவும் நல்ல நிலையிலும் உள்ளன. சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள வழித்தடமானது சாயர்புரம் செல்லாமல் நட்டாத்தியில் இருந்து நேரிடையாக கட்டாலங்குளம் சென்று திருநெல்வேலி மெயின்ரோட்டை சேரும் வழித்தடமாகும். இவ்வழித்தடம் அமைக்க நட்டாத்தியில் இருந்து 4 கி.மீ. நீளமுள்ள மண் சாலையினை மேம்பாடு செய்ய வேண்டும். இது தூத்துக்குடி ஊராட்சி ஒன்றியத்தினைச் சேர்ந்த ஒரு வகைப்படுத்தப்படாத சாலையாகும். சாலையினை மேம்பாடு செய்து தார்ச்சாலையாக அமைத்தால் ஏற்கெனவே உள்ள வழித்தடம் (சாயர்புரம் வழியாக) வி.1, 4 கி.மீ. தூரம் மட்டுமே குறையும். மேலும், புதியதாக மேம்பாடு செய்யப்பட வேண்டிய சாலையில் கிராமங்கள் எதுவும் இல்லை. சாலையினை மேம்பாடு செய்து தார்ச்சாலையாக்க தோராயமாக ரூ.40 இலட்சங்கள் தேவைப்படும். அண்மைக்காலங்களில் இப்பணியை மேற்கொள்ளும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

69—

### வழியோர உணவகம் அமைத்தல்

**வினா 11328—திரு. நா. பெரியசாமி :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருந்துறை தொகுதியில் வரும் தேசிய நெடுஞ்சாலை 47-இல் பெருந்துறைக்கும் நசியனூருக்கும் இடையில் வழியோர உணவகம் (Motel) அமைக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது செயல்படுத்தப்படுகிறதா?

[1998 மார்ச் 19

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழ இடமில்லை.

70—

**வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைத்தல்**

**வினா 12018—திரு. கே. ரவி அருணன் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசியில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) உடனடியாக இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

71—

**தெப்பக்குளத்தைச் செப்பனிடுதல்**

**வினா 4103—திரு. வை. சிவபுண்ணியம் :** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னார்குடி நகரிலுள்ள பிரசித்திப் பெற்ற தெப்பக்குளத்தைச் செப்பனிடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) : திருக்குளத்தின் கைப்பிடிச் சுவர்களும், படித்துறைகளும் திருக்குளத்தைச் சுற்றி அமைந்துள்ள சிறிய கோயில்களும், மையப்பகுதியில் உள்ள நீராழி மண்டபமும் மற்றும்



1998 மார்ச் 19]

அங்கே உள்ள அருள்மிகு வேணுகோபாலசாமி திருக்கோயிலும் எவ்வித பழுதுமின்றி நல்ல முறையில் உள்ளது. எனவே, தற்போது செப்பனிட வேண்டிய அவசியம் இல்லை.

72—

**சாஸ்தான்கோவிலில் கொடிமரம் அமைத்தல்**

**வினா 4640—திரு. சி. வேலாயுதன் :** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், பத்மனாபபுரம் தொகுதி, முத்தலக்குறிச்சி ஊராட்சி கூனாங்கானி சாஸ்தான்கோவிலில் கொடிமரம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் :**

கன்னியாகுமரி மாவட்டம், பத்மனாபபுரம் தொகுதி, முத்தலக்குறிச்சி அருள்மிகு கூனாங்கானி சாஸ்தான்கோவிலில் விமானம் இல்லாமலும் மேல் கூரையில்லாமலும் திறந்த வெளியில் விக்கிரகம் இருப்பதால் கொடிமரம் நிறுவ முடியாத நிலை உள்ளது.

73—

**வரலாற்று ஆய்வாளர்கள் குழு அமைத்தல்**

**வினா 11491—திரு. செல்வராஜ் (என்கிற) கவிதைப்பித்தன் :** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வீரபாண்டிய கட்டபொம்மன் போன்றவர்களின் வரலாறு பற்றிய குழப்பங்களை ஒரு முடிவுக்குக் கொண்டுவர வரலாற்று ஆய்வாளர்களின் குழு ஒன்று அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

[1998 மார்ச் 19

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் :**

ஆய்வாளர்கள் குழு அமைக்கும் திட்டம் தற்போது ஏதும் இல்லை.

74—

**பொதுக் கழிப்பிடம் அமைத்தல்**

**வினா 11931—திரு. ஐ. கணேசன் :** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டம், சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலுக்கு தரிசனத்துக்காக வருகை தரும் பக்தர்களின் உபயோகத்திற்காக பொதுக் கழிப்பிடம் அமைத்துத் தர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் :**

சமயபுரம், அருள்மிகு மாரியம்மன் திருக்கோவிலுக்கு வருகை தரும் பக்தர்களின் வசதிக்காக திருக்கோயில் சார்பாக ஆண்கள் மற்றும் பெண்களுக்கென தனித்தனியே பொதுக் கழிப்பிடம் அமைக்கப்பட்டு, குறைந்த கட்டணமாக கட்டணச் சீட்டு மூலம் நபர் ஒன்றுக்கு 50 பைசா வசூலிக்கப்படுகிறது. அதே போன்று சமயபுரம் பேருந்து நிலையம் அருகில் எஸ். கண்ணனூர் பேரூராட்சி சார்பில் பொதுக் கட்டணக் கழிப்பிடம் அமைக்கப்பட்டு, நபர் ஒன்றுக்கு கட்டணச் சீட்டு மூலம் 50 பைசா வசூலிக்கப்படுகிறது.

75—

**திருக்கோயில் சிறப்பு பற்றிய கையேடு தமிழில் அச்சடித்தல்**

**வினா 11933—திரு. ஐ. கணேசன் :** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1998 மார்ச் 19]

(அ) திருச்சி மாவட்டம், சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலில் முக்கிய பிரமுகர்களுக்கு வழங்கப்படும் திருக்கோயிலின் சிறப்பு பற்றிய கையேடு ஆங்கிலத்தில் மட்டும் அச்சிடப்பட்டுள்ளது என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதைத் தமிழில் அச்சடித்து வழங்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் :**

(அ) சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலில், முக்கிய பிரமுகர்களுக்கு வழங்கப்படும் திருக்கோயில் சிறு குறிப்புப் புத்தகம் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் அச்சிடப்பட்டுள்ளது.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

76—

**மலைவாழ் மக்களுக்கு நுகர்பொருள் துறை வழங்கும் சலுகைகள்**

**வினா 3548—திரு. சி. கோபு :** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நுகர்பொருள் வழங்கல் துறை மூலமாக மலைவாழ் மக்களுக்கு வழங்கிடும் சலுகைகள் பற்றிய விவரம் என்ன?

(ஆ) அவர்கள் முழுமையாக அரசின் சலுகைகளைப் பெறுகிறார்களா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :**

(அ) மத்திய அரசின் திருத்தியமைக்கப்பட்ட பொது விநியோகத் திட்டப் பகுதிகளில் வாழும் மலைவாழ் மக்களுக்குச் சலுகை விலையில்

[1998 மார்ச் 19

பொது விநியோக முறையின் கீழ் வழங்கப்படும் பொருட்களின் விவரங்கள் கீழ்வருமாறு :—

அரிசி :

அரிசியைப் பொறுத்தவரை பொது விநியோகத் திட்டத்தின் கீழ் மாதம் ஒன்றிற்கு பெரியவர்களுக்கு நபர் ஒன்றுக்கு 4 கிலோ என்ற வீதத்திலும், சிறியவர்களுக்கு நபர் ஒன்றுக்கு 2 கிலோ என்ற வீதமும், ஆனால், குடும்ப அட்டை ஒன்றிற்கு குறைந்தபட்சம் மாதம் ஒன்றுக்கு 12 கிலோவாகவும், அதிகபட்சம் 20 கிலோவாகவும், சாதாரண இரக அரிசி கிலோ ரூ. 2 என்ற வீதத்திலும், சன்ன மற்றும் மிகச் சன்ன இரக அரிசி கிலோ ரூ. 3.75 என்ற வீதத்திலும் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. இது தவிர, நீலகிரி மாவட்டத்தில் வாழும் குடும்ப அட்டைதாரர்களுக்கு மட்டும் சிறப்புச் சலுகையாகக் கூடுதலாக 4 கிலோ அரிசியும் பொது விநியோக முறையில் வழங்கப்பட்டு வருகிறது.

கோதுமை :

கோதுமையைப் பொறுத்தவரை மலைவாழ் மக்களுக்கு உச்ச வரம்பாக 5 கிலோ கோதுமை வழங்கப்பட்டது. ஆனால், விலையைப் பொறுத்தவரை பொது விநியோக முறை விலையை விட ரூ. 0.70 குறைவாக அதாவது ரூ. 3.80 விலையில் மே 1997 வரை வழங்கப்பட்டு வந்தது. 1-6-1997 முதல் வறியோர் நலன் காக்கும் பொது விநியோகத் திட்டம் மத்திய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து இம்மாநிலத்திற்கு மாதாந்திர ஒதுக்கீடு கோதுமை நிறுத்தப்பட்டது. தற்பொழுது கோதுமை வெளிச் சந்தையில் வாங்கி பொது விநியோகத் திட்ட முறையில் விநியோகம் செய்யப்படுவதால், மலைவாழ் மக்களுக்கு சலுகை விலையில் விற்பனை செய்வது தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

மண்ணெண்ணெய் :

மண்ணெண்ணெயைப் பொறுத்தவரை மலைவாழ் மக்களுக்கு பொது விநியோக முறையில் அதாவது லிட்டர் ஒன்றுக்கு விலை ரூ. 2.80-லிருந்து ரூ. 3.10 வரை வழங்கப்படும் விலையிலேயே வழங்கப்படுகிறது. ஆனால், வழங்கப்படும் அளவுகள் பின்வருமாறு :—



1998 மார்ச் 19]

| (1) | சமையல் எரிவாயு வைத்திருக்காத குடும்ப அட்டைதாரர்கள். (2) | ஒரு சமையல் எரிவாயு உருளை வைத்திருக்கும் குடும்ப அட்டைதாரர்கள். (3) | இரு சமையல் எரிவாயு உருளை வைத்திருக்கும் குடும்ப அட்டைதாரர்கள். (4) |
|---|---|---|---|
| நீலகிரி மாவட்டம் : | | | |
| தலைநகரம்/நகராட்சிகள் | 15 | 10 | 8 |
| பேரூராட்சிகள் | 10 | 5 | 3 |
| கிராம பஞ்சாயத்துக்கள் | 5 | 5 | 5 |
| கொடைக்கானல் மற்றும் ஏற்காடு வட்டங்கள் : | | | |
| பேரூராட்சி மற்றும் நகரியங்கள் | 10 | 5 | 3 |
| கிராம பஞ்சாயத்துக்கள் | 5 | 5 | 5 |
| சிறப்பு நகராட்சிப் பகுதிகள் | 10 | 5 | 3 |

(ஆ) ஆம்.

77—

### நியாய விலைக் கடை மாற்றுதல்

**வினா 5889—டாக்டர் ஆ. ஞானசேகரன் :** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் தொகுதி. சிறுவல்லிக்குப்பம் குடும்ப அட்டைதாரர்களை அருகில் உள்ள கீழ்மலை நியாய விலைக் கடைக்கு மாற்ற அரசு ஆவன செய்யுமா ?

[1998 மார்ச் 19

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :**

விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், சிறுவல்லிக்குப்பம் கிராமத்தைச் சேர்ந்த 85 குடும்ப அட்டைகளை, சித்தரசூர் கிராம நியாய விலைக் கடையிலிருந்து பிரித்து கீழ்மலை நியாயவிலைக் கடையுடன் 1-10-1997 முதல் இணைக்கப்பட்டுள்ளன.

78—

**நியாய விலைக் கடை திறத்தல்**

**வினா 7584—திரு. கே. சுப்பராயன் :** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர், பாண்டியன் நகரில் நியாய விலைக் கடை திறக்க அதிகாரிகள் மறுப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது நியாய விலைக் கடை திறக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) : திருப்பூர் வட்டம், பாண்டியன் நகரில் தற்போது நெருப்பெரிச்சல் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிக்குட்பட்ட பகுதி நேர நியாய விலைக் கடை ஒன்று, 7-6-1997 அன்று, திறக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றது.

79—

**பகுதி நேர நியாய விலைக் கடை திறத்தல்**

**வினா 8287—திரு. எஸ்.வி. கிருஷ்ணன் :** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



1998 மார்ச் 19]

நாங்குனேரி தொகுதி, தெற்கு பாப்பாங்குளத்தில் உள்ள நியாய விலைக் கடையைப் பிரித்து வடக்கு பாப்பாங்குளத்தில் பகுதி நேர நியாய விலைக் கடை திறக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :**

திருநெல்வேலி மாவட்டம், நாங்குனேரி வட்டம், புரப்பாடி வேளாண்மை தொடக்கக் கூட்டுறவு வங்கி நடத்தும் பாப்பாங்குளம் முழு நேர நியாய விலைக் கடையில் மொத்தம் 569 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. இதில், வடக்கு பாப்பாங்குளம், மாங்குளம் ஆகிய இரண்டு கிராமப் பகுதிகளைச் சேர்ந்த மொத்தம் 165 குடும்ப அட்டைகளும் புரப்பாடி நியாயவிலைக் கடையில் இணைக்கப்பட்டுள்ளன. தற்பொழுது உள்ள நிபந்தனைகளின்படி, ஒரு பகுதி நேர நியாயவிலைக் கடை அமைக்க குறைந்தபட்சம் 200 குடும்ப அட்டைகள் தேவை. இதுபோன்ற நிபந்தனைகள் பூர்த்தி அடையாத நிலையில், குறைந்த குடும்ப அட்டைகளைக் கொண்டு வடக்கு பாப்பாங்குளம் கிராமத்தில் ஒரு பகுதி நேர நியாயவிலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

80—

**பகுதி நேர கூட்டுறவு அங்காடி**

**வினா 10157—திரு. மா. இராமச்சந்திரன் :** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், நாட்டரசன்கோட்டை கிராமத்தில் பகுதி நேர கூட்டுறவு அங்காடி துவக்க அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

[1998 மார்ச் 19

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) : தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், நாட்டரசன்கோட்டையில் தற்போது 167 குடும்ப அட்டைகளே உள்ளன. ஒரு புதிய பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க குறைந்தபட்சம் 200 குடும்ப அட்டைகளாவது இருக்க வேண்டும் என்ற நிபந்தனை உள்ளதால், நிபந்தனை பூர்த்தியாகாத நிலையில் அங்கு பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**81—**

**பகுதி நேர கூட்டுறவு அங்காடியை முழு நேர அங்காடியாக்குதல்**

**வினா 10159—திரு. மா. இராமச்சந்திரன் :** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், நத்தம் கிராமத்தில் தற்போது உள்ள பகுதி நேர கூட்டுறவு அங்காடியை முழு நேர அங்காடியாக மாற்ற அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) : தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டத்தில் உள்ள ஆழிவாய்க்கால் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி நடத்தும் ஆழிவாய்க்கால் அங்காடி, 1,083, குடும்ப அட்டைகளைக் கொண்டது. அதில் 372 குடும்ப அட்டைகளைப் பிரித்து தெற்கு நத்தத்தில், மேலத்தெரு, கீழத்தெரு, நடுத்தெரு மற்றும் தெற்கு நத்தம் ஆகிய பகுதிகளை இணைத்து ஒரு பகுதி நேர அங்காடி இயங்கி வருகிறது. பகுதி நேர நியாய விலைக் கடையை முழு நேர நியாயவிலைக் கடையாக மாற்ற வேண்டுமானால், தற்போதுள்ள நிபந்தனைகளின்படி,



1998 மார்ச் 19]

குறைந்தபட்சம் 500 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட வேண்டும். இதனால், தற்போது இயங்கும் பகுதி நேர நியாய விலைக் கடையை, முழு நேர நியாய விலைக் கடையாக மாற்ற சாத்தியக்கூறுகள் இல்லை.

**82—**

**கூட்டுறவுப் பண்டகசாலை விவரம்**

**வினா 10172—திரு. ஐ. கணேசன் :** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் எண் 722, கூட்டுறவுப் பண்டகசாலை நிதிப் பற்றாக்குறையால் நலிந்துள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதில் பணிபுரியும் 17 பணியாளர்களின் பணிக்குப் பாதுகாப்புக் கொடுக்கும் வகையில் அதனைத் திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்துடன் இணைக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ): ஆம். சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் கூட்டுறவுப் பண்டகசாலை (எண் 722) நிதிப் பற்றாக்குறையால் நலிந்துள்ள விவரம், அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

2. இப்பண்டகசாலையானது, 1996-9 ஆம் ஆண்டில் ரூ. 4.05 இலட்சம் திரண்ட நட்டத்தில் செயல்பட்டுள்ளது. இப்பண்டகசாலையில் பணியாற்றும் பணியாளர்களுக்கு அப்போதிருந்த தேர்ந்தெடுக்கப்பட்ட இயக்குநர்கள் அடங்கிய நிர்வாகக் குழு, 1-1-1991 முதல் ஊதிய உயர்வு மிக அதிக அளவில் வழங்கியுள்ளதாகத் தெரிகிறது. இதுவே, சங்கத்தின் நிதிநிலைமைச் சீரழிவுக்கு முக்கிய காரணமாகத் தெரிகிறது. கொங்கணாபுரம் கூட்டுறவுப் பண்டகசாலை சேலம் மாவட்ட எல்லைக்குட்பட்டது. திருச்செங்கோ[illegible] நாமக்கல்

மாவட்ட எல்லைக்குட்பட்டது. எனவே, கொங்கணாபுரம் கூட்டுறவுச் சங்கத்தை திருச்செங்கோடு கூட்டுறவுச் சங்கத்துடன் சேர்த்திட இயலாது எனினும், திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தைப் பிரித்து, இரண்டு விற்பனை சங்கங்களாக்கி கொங்கணாபுரத்தைத் தலைமையிடமாகக் கொண்டு, மற்றொரு சங்கம் தொடங்குதல்குறித்த் முன்மொழிவு பரிசீலனையில் உள்ளது.

3. இந்த விற்பனைச் சங்கத்தினைப் பிரிக்கையில் கொங்கணாபுரம் கூட்டுறவுப் பண்டகசாலையின் 11 நியாய விலைக் கடைகள் மற்றும் மேலே சொல்லப்பட்ட கொங்கணாபுரம் கூட்டுறவுப் பண்டகசாலையில் தற்போதுள்ள 17 பணியாளர்களைப் புதிய விற்பனை சங்கத்துடன் சேர்ப்பது உசிதம் என்பதால் அதுசமயம், இது குறித்துப் பரிசீலிக்கப்படும்.

**83—**

## நியாய விலைக் கடை அமைத்தல்

**வினா 10292—திரு. ஐ. கணேசன் :** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி ஒன்றியம், ஆவணிப்பேரூர் கீழ்முகம் ஊராட்சியில் பட்டரைக்கட்டிவளவில் புதிதாக ஒரு நியாய விலைக் கடை அமைத்துக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :**

சேலம் மாவட்டம், மந்தையன்வளவு நியாய விலைக் கடையைப் பிரித்து குப்பதாசன் காட்டுவளவில் 413 குடும்ப அட்டைகளுடன் பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க முன்மொழிவுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. மேற்படி கடையில், பட்டரைக்கட்டிவளவு கிராம குடும்ப அட்டைகளும் சேர்க்கப்படும். பட்டரைக்கட்டிவளவில் 102 குடும்ப அட்டைகளே உள்ளதாலும், பட்டரைக்கட்டிவளவு, குப்பதாசன் காட்டுவளவிலிருந்து 1 கிலோ மீட்டர் தூரமே உள்ளதாலும்



அங்கு தனியே புதியதாக நியாய விலைக் கடை திறக்க சாத்தியக் கூறுகள் இல்லை.

**84—**

## தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்குச் சொந்தக் கட்டடம்

**வினா 10471—திரு. வை. சிவபுண்ணியம் :** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஒன்றியம், பெருகவாழ்ந்தான் கிராமத்தில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்குச் சொந்தக் கட்டடம் கட்ட இடம் வாங்கப்பட்டுள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், விரைவில் கட்டடம் கட்டப்படுமா ?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :**

(அ) மன்னார்குடி சரகம் பெருகவாழ்ந்தான் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்கு கிடங்கு கட்டுவதற்கு மேற்படி வங்கியால் பெருகவாழ்ந்தான் கிராமத்தில் புலம் எண் 628-ஏ-இல் 0.21 ஏக்கர் நிலம் 5-4-1991-ல் ரூ.28,980 கிரயத்திற்கு வாங்கப்பட்டுள்ளது.

(ஆ) தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு அலுவலகக் கட்டடம் மட்டும் கட்ட நிதியுதவி வழங்கும் திட்டம் ஏதும் நடைமுறையில் இல்லை. தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கிடங்கு கட்ட 90 சதவீதம் நிதியை மாநில அரசுக்குக் கடனாக வழங்குகிறது. மாநில அரசு அதனைப் பெற்று 50 சதவீதம் கடனாகவும் 40 சதவீதம் அரசு பங்கு மூலதனமாகவும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஒன்றியம், பெருகவாழ்ந்தான் கிராமத்திலுள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்குச் சொந்தக் கட்டடம் கட்ட பிரேரணை ஏதும்

[1998 மார்ச் 19

சங்கத்திடமிருந்து பெறப்படவில்லை. மேற்படி சங்கத்திடமிருந்து பிரேரணை பெறப்படின், தகுதி மற்றும் தேவையின் அடிப்படையில் பரிசீலிக்கப்படும்.

85—

## அமுதம் அங்காடி துவங்குதல்

**வினா 11212—திரு. மா. இராமச்சந்திரன் :** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் வட்டம், புதுப்பட்டினம் கிராமத்தில் அமுதம் அங்காடி ஒன்று துவக்க அரசு முன் வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) : தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் வட்டம், புதுப்பட்டினம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி நடத்தும் புதுப்பட்டினம் அங்காடியில் மொத்தம் 391 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. இதில் புதுப்பட்டினம் கிராமத்தைச் சேர்ந்த 71 குடும்ப அட்டைகளும் அடங்கும். புதுப்பட்டினம் அங்காடியானது தற்போது கீழவஸ்தாசாவடியில் செயல்பட்டு வருகிறது. அரசாணை (நிலை) எண் 63, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 11-3-1997-ன்படி பகுதி நேர அங்காடி அமைக்கத் தேவையான 200 குடும்ப அட்டைகள் இவ்வூரில் இல்லாததால் தனியாக பகுதி நேரக் கடை அமைக்கவும் இயலாது. மேலும் புதுப்பட்டினம் (கீழவஸ்தாசாவடி) அங்காடியில் இணைக்கப்பட்டுள்ள குடும்ப அட்டைதாரர்கள் அனைவருக்கும் தற்போது அங்காடி அமைந்துள்ள இடத்திலிருந்து பொருட்களைப் பெற எவ்வித சிரமமும் இல்லாததால், இந்த அங்காடியை புதுப்பட்டினத்திற்கு மாற்றத் தேவையில்லை எனக் கருதப்படுகிறது.



1998 மார்ச் 19]

86—

## பகுதி நேர நியாய விலைக் கடை அமைத்தல்

**வினா 11444—திரு. கே. ரவி அருணன் :** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி ஒன்றியம், ஆயிரப்பேரி ஊராட்சி, அங்கராயன்குளம் பகுதியில் பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :**

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி வட்டம், ஆயிரப்பேரி ஊராட்சியில் மேலகரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி ஆயிரப்பேரி கிராமத்தில் நியாய விலைக் கடையை நடத்தி வருகிறது. இக்கடையில் 214 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. ஆயிரப்பேரி கிராமத்திலிருந்து 4 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள அங்கராயன்குளம் கிராமத்தைச் சார்ந்த 95 குடும்ப அட்டைகளும் மேற்படி ஆயிரப்பேரி நியாய விலைக் கடையுடன் தற்பொழுது இணைக்கப்பட்டுள்ளன. தனியாக பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க குறைந்தபட்சம் 200 குடும்ப அட்டைகளாவது இணைக்கப்பட்டிருக்க வேண்டும். எனவே, அங்கராயன்குளம் பகுதியில் 95 குடும்ப அட்டைகளே உள்ளதால், இக்கிராமத்தில் பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**87—**

## நியாய விலைக் கடை அமைத்தல்

**வினா 11446—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், செட்டியூர், பனையடிப்பட்டி, பஞ்சபாண்டியூர், வேல்மயில்பட்டி ஆகிய கிராமங்களில் உள்ள குடும்ப அட்டைகளுக்குத் தனியாக பனையடிப்பட்டியில் நியாய விலைக் கடை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

*விடை—*

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): திருநெல்வேலி மாவட்டம், தென்காசி வட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், செட்டியூர், பனையடிப்பட்டி, பஞ்சபாண்டியூர், வேல்மயில்பட்டி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 510 குடும்ப அட்டைகள் தென்காசி வட்டம், பாவூர்சத்திரத்தில் உள்ள அமுதம் நியாய விலைக் கடை எண் 1-இல் இணைக்கப்பட்டுள்ளன. மேற்படி நான்கு கிராமங்களும் தாய்க் கடை அமைந்துள்ள பாவூர் சத்திரத்திலிருந்து 1 கி.மீ. தூரத்திற்குள்ளாகவே அமைந்துள்ளன. அதனால் பனையடிப்பட்டியில் புதிய முழு நேர நியாய விலைக் கடையோ அல்லது பகுதி நேர நியாய விலைக் கடையோ துவக்க சாத்தியமில்லை எனக் கருதப்படுகிறது.

**88—**

## நுகர்வோர் கூட்டுறவு இயக்கம் ஊக்கப்படுத்துதல்

**வினா 12074—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



நுகர்வோர் கூட்டுறவு இயக்கத்தை ஊக்கப்படுத்துவதற்காக அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதா?

*விடை—*

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

ஆம். நுகர்வோர் கூட்டுறவு இயக்கத்தை ஊக்கப்படுத்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. அவையாவன:

(1) நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களுக்காகச் செயல்பட்டுக் கொண்டிருந்த சில நிதித்திட்டங்கள் 1-4-1992 முதல் செயலற்று இருந்தன. இதனை அரசு மீண்டும் செயல்படுத்தத் துவங்கி 1996-97 ஆம் ஆண்டிலேயே ரூ.30.85 இலட்சம் அளவிற்குப் பின்வரும் திட்டத்திற்காக நிதியுதவி வழங்கப்பட்டது:

(அ) நலிவடைந்த நுகர்வோர் கூட்டுறவுப் பண்டகசாலைகளைப் புனரமைத்தல்;

(ஆ) பெரிய அளவிலான சில்லறை விற்பனை நிலையங்கள் அமைத்தல்;

(இ) சிறிய அளவிலான சில்லறை விற்பனை நிலையங்கள் அமைத்தல்;

(ஈ) நவீன சில்லறை விற்பனைக் கடைகள் அமைத்தல்.

இத்திட்டங்களுக்காக 1997-98 ஆம் ஆண்டில் ரூ.53.50 இலட்சம் அளவிற்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

(2) நலிவடைந்த நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளைப் புனரமைக்கத் திட்டம் தயாரித்து படிப்படியாக அவற்றைப் புனரமைக்கும் வகையில் முதற்கட்டமாக ஆறு பண்டகசாலைகளுக்கும், அடுத்த கட்டமாக மூன்று பண்டகசாலைகளுக்கும் புனரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(3) நுகர்வோர் கூட்டுறவு இயக்கத்தை மேம்படுத்த கீழ்க்கண்ட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன:

[1998 மார்ச் 19

(அ) நலிவடைந்த நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளுக்கு நிதியுதவி வழங்க ஒரு தனி நிதி (Corpus Fund) நிறுவ பரிசீலிக்கப்பட்டு வருகின்றது :

(ஆ) நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளின் செயல்பாட்டினை ஊக்கப்படுத்தவும் நிதி மேம்பாட்டை ஏற்படுத்தவும் சில கூட்டுறவு வல்லுநர்களைக் கொண்டு ஓர் "உயர்மட்டக் குழு" அமைக்க பரிசீலிக்கப்பட்டு வருகின்றது:

(இ) பெரும்பாலான பண்டகசாலைகள் பொது விநியோகத் திட்டத்தை செயல்படுத்துவதால் நிதியிழப்புக்கு ஆளாகின்றன. இதனைச் சரிகட்டும் நோக்கத்தோடு அத்தியாவசியப் பொருட்கள் விநியோகிப்பதற்காக வழங்கப்படும் விளிம்புத் தொகையை (Margin Money) உயர்த்துவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஈ) நுகர்வோர் கூட்டுறவுப் பண்டகசாலைகளின் கொள்முதல் பணியினைச் சீரமைத்து அது செம்மைப்படுத்தப்பட்டுள்ளது.

பிரதம கூட்டுறவுப் பண்டகசாலைகளுக்கு முறையாகத் தேர்தல் நடத்தப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக்குழுவிடம் இதன் நிர்வாகம் ஒப்படைக்கப்பட்டது. இதனால் கூட்டுறவு இயக்கம் ஊக்கப்படுத்தப்படுகின்றது.

இவ்வாறு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்மூலம் நுகர்வோர் கூட்டுறவு இயக்கம் ஊக்கப்படுத்தப்பட்டு மேம்படுத்தப்பட்டுள்ளது. 1995-96 இல் நுகர்பொருள் விற்பனை ரூ.1,617 கோடியாகும். இது 1996-97 ஆம் ஆண்டில் ரூ.1,805 கோடியாக உயர்ந்துள்ளது.

**89—**

### கூட்டுறவுச் சங்கத் தேர்தல் விவரம்

**வினா 12244—திரு. ஐ. கணேசன் :** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1998 மார்ச் 19]

(அ) தமிழ்நாட்டில் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள எத்தனை கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல்கள் நடத்தி முடிக்கப்பட்டுள்ளன ?

(ஆ) எத்தனை சங்கங்களுக்கு இன்னும் தேர்தல் நடத்தப்படாமல் உள்ளது ?

விடை—

**மாண்புமிகு திரு. கா. நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :**

(அ) தமிழ்நாட்டில் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள 7,974 தொடக்க கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேர்தல்கள் நடத்தி முடிக்கப்பட்டுள்ளன.

(ஆ) 59 தொடக்க கூட்டுறவுச் சங்கங்கள், 98 மையச் சங்கங்கள் மற்றும் 6 தலைமைச் சங்கங்கள் ஆக மொத்தம் 163 சங்கங்களுக்குத் தேர்தல்கள் இன்னும் நடத்தப்படாமல் உள்ளன.

**90—**

### நியாய விலைக் கடைகளுக்குச் சொந்தக் கட்டடம்

**வினா 12255—திரு. ப. கோவிந்தன் :** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், மேச்சேரி ஒன்றியம், வெள்ளார் ஊராட்சி, வெள்ளார், எருமைப்பட்டி மற்றும் வெள்ளாப்பம்பட்டி ஆகிய இடங்களில் உள்ள நியாய விலைக் கடைகளுக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா ?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :**

சேலம் மாவட்டத்தில், மேச்சேரி ஒன்றியத்தில் செயல்படும் வெள்ளார் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியானது.

[1998 மார்ச் 19

வெள்ளார் மற்றும் எருமைப்பட்டி ஆகிய இடங்களில் இரு முழு நேர நியாய விலைக் கடைகளையும், வெள்ளப்பம்பட்டி என்ற இடத்தில் ஒரு பகுதி நேர நியாய விலைக் கடையையும் நடத்தி வருகிறது. அதில் வெள்ளார் நியாய விலைக் கடைக்கான சொந்தக் கட்டடம். வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின்கீழ் கட்ட ரூ. 1.20 இலட்சம் மதிப்பீட்டில் கட்டுமானப் பணி துவங்கப்பட்டுள்ளது. வெள்ளப்பம்பட்டி. பகுதி நேர நியாய விலைக் கடை என்பதால், இதற்குரிய நிபந்தனையின்படி. அக்கடை நடத்த வாடகை இன்றி. கட்டடத்தை 5 ஆண்டுகளுக்குத் தனியாரிடமிருந்து பெறப்பட்டுள்ளது. எருமைப்பட்டி நியாய விலைக் கடைக்காக ஆக கட்டடம் கட்ட. உரிய முயற்சிகள் வரும் ஆண்டுகளில் மேற்கொள்ளப்படவுள்ளன.

**91—**

## தொழில் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் விவரம்

**வினா 11999—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருந்துறை வட்டத்தில் தொழிற்சாலை சட்டப்படி பதிவு செய்யப்பட்டுள்ள தொழில் நிறுவனங்கள் எத்தனை உள்ளன ?

(ஆ) அவைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள் எண்ணிக்கை எவ்வளவு ?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர் :**

(அ) பெருந்துறை வட்டத்தில் தொழிற்சாலைகள் சட்டப்படி பதிவு செய்யப்பட்டுள்ள தொழில் நிறுவனங்கள் இருநூற்றுப் பத்தொன்பது (219).

(ஆ) அவைகளில் பணிபுரியும் மொத்தத் தொழிலாளர்கள் எண்ணிக்கை நான்காயிரத்து அறுநூற்று முப்பத்தொன்பது (4.639).



1998 மார்ச் 19]

அவற்றில் ஆண் தொழிலாளர்கள் எண்ணிக்கை மூவாயிரத்து எண்பத்து நான்கு (3.084), பெண் தொழிலாளர்கள் எண்ணிக்கை ஆயிரத்து ஐநூற்று ஐம்பத்தைந்து (1.555).

**92—**

## ஆலைகளுக்குப் பஞ்சு வழங்குதல்

**வினா 10876—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத் :** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசே பஞ்சினைக் கொள்முதல் செய்து ஆலைகளுக்கு வழங்க முன்வருமா ?

விடை—

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

அரசே பஞ்சினைக் கொள்முதல் செய்து கூட்டுறவு நூற்பாலைகளுக்கு வழங்க சாத்தியக்கூறு ஏதுமில்லை. ஒரு விவர அறிக்கை கீழே உள்ளது.

### விவர அறிக்கை

தமிழ்நாட்டிலுள்ள நூற்பு ஆலைகளுக்குத் தேவைப்படும் பஞ்சு பேல்கள் சுமார் 40 இலட்சம் ஆகும். ஆனால், இங்கு விளையும் பஞ்சு பேல்கள் சுமார் 6 இலட்சம் மட்டுமே ஆகும். கூட்டுறவு நூற்பாலைகளுக்கு மாதந்தோறும் தேவைப்படும் பஞ்சு பேல்கள் 15,000 ஆகும். மேலும் கூட்டுறவு நூற்பாலைகளின் நிதிநிலை மிகவும் நெருக்கடியாக இருப்பதால், நூற்பாலைகளுக்குத் தேவையான பஞ்சினை தாராளமாக ரொக்கத்திற்குக் கொள்முதல் செய்ய இயலவில்லை. எனவே கூட்டுறவு நூற்பாலைகளுக்குத் தேவைப்படும் பஞ்சினை இணை மண்டல பஞ்சுக் கொள்முதல் குழு மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு நூற்பாலைகளின் இணையம் மூலமும் ஓரளவிற்கு கொள்முதல் செய்து வருகிறது.

[1998 மார்ச் 19

எனவே அரசே பஞ்சினை கொள்முதல் செய்து கூட்டுறவு நூற்பாலைகளுக்கு வழங்க சாத்தியக்கூறு ஏதுமில்லை.

93—

**அகில இந்திய கைத்தறிக் கண்காட்சி விற்பனை விவரம்**

**வினா 12415—திரு. ஐ. கணேசன் :** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1996-97 ஆம் ஆண்டு 42ஆவது அகில இந்திய கைத்தறி கண்காட்சியில் மொத்த விற்பனை எவ்வளவு ?

(ஆ) 1997-98 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் 43ஆவது அகில இந்திய கைத்தறி விற்பனை எவ்வளவு ?

விடை—

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) 42ஆவது அகில இந்திய கைத்தறி கண்காட்சியில் மொத்த விற்பனை ரூ. 1,797.36 இலட்சமாகும். (பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ரூ. 1,692.84 இலட்சம் மற்றும் கோ-ஆப்டெக்ஸ் ரூ. 104.52 இலட்சம்)

(ஆ) 43ஆவது அகில இந்திய கைத்தறிக் கண்காட்சி நடைபெற்றதில் மொத்த விற்பனை ரூ. 1,178.39 இலட்சமாகும். (பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ரூ. 1,148.83 இலட்சம் மற்றும் கோ-ஆப்டெக்ஸ் ரூ. 29.56 இலட்சம்)

94—

**ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு மாணவர் விடுதி**

**வினா 11608—திரு. கு. மனோகரன் :** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



1998 மார்ச் 19]

தருமபுரி நகரில் அதியமான் கோட்டை ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு மாணவர் விடுதி கட்ட அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா ?

விடை—

**மாண்புமிகு திரு. எம். ஆர். கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் :**

தருமபுரி நகரில் அதியமான் கோட்டை ஆண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவர் விடுதிக்குக் கட்டடம் கட்ட அரசு கடித எண் 1563 பிந1/97-2, நாள் 21-3-1997இல் ஆணையிடப்பட்டுள்ளது.

95—

**கழிவு நீரை அகற்ற நிரந்தர ஏற்பாடு**

**வினா 8731—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத் :** மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், கொரட்டூர் கோட்டம், திருமுல்லைவாயில் வீட்டுவசதி வாரியக் குடியிருப்பில், கழிவு நீரை அகற்ற நிரந்தர ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், இப்பணி எப்போது முடிக்கப்பெறும்?

விடை—

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி, வீட்டுவசதித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) : தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், கொரட்டூர் கோட்டம், திருமுல்லைவாயில் வீட்டுவசதி வாரியக் குடியிருப்புகளின் கழிவு நீரை நிரந்தரமாக அகற்ற அம்பத்தூர் நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் முடிய சுமார் 4 மாத காலம் ஆகும்.

96—

## வாடகை வீடுகள் கட்டும் திட்டம்

**வினா 9103—திரு. ஐ. கணேசன் :** மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதியில் பொது மக்களுக்கு வாடகைக்கு விட வீட்டு வசதித் துறை மூலம் பொது ஒதுக்கீடு முறைக்கு வீடுகள் கட்டித் தரும் திட்டத்தை அரசு பரிசீலிக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி, வீட்டு வசதித் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ): பொது மக்களுக்கு வாடகைக் குடியிருப்புகள் கட்டும் திட்டம் பொருளாதார ரீதியில் உகந்ததாக இல்லாமையால், வாடகைக் குடியிருப்புகள் கட்டும் திட்டத்தை வாரியம் ஏற்க இயலவில்லை.

97—

## விசைத்தறி உதிரி பாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை ஏற்படுத்துதல்

**வினா 10849—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, வட்டாரம் விசைத்தறி உள்ள பகுதியாக உள்ளதால், விசைத்தறி உதிரி பாகங்கள் தயாரிக்க ஒரு தொழிற்சாலை ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?





விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): எடப்பாடி தொகுதி, வட்டாரத்தில் விசைத்தறி உதிரி பாகங்கள் தயாரிக்க ஒரு தொழிற்சாலை அமைக்கும் திட்டம் ஏதும் இத்துறையின் பரிசீலனையில் இல்லை.

தனியார் எவரேனும் மேற்படி தொழிற்சாலை அமைக்க முன்வந்தால் அவர்களுக்கு அத்தொழிற்சாலை அமைக்க இத்துறை அனைத்து ஆலோசனைகளையும், உதவிகளையும் வழங்கும்.

98—

## முதியோர் மற்றும் ஆதரவற்றோர் நலக் காப்பகங்கள்

**வினா 11713—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்திற்கு சமூக நலத் துறை மூலமாக முதியோர் மற்றும் ஆதரவற்றோர் நலக் காப்பகங்கள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) எடப்பாடி தாலுக்காவிற்கு ஒரு முதியோர் நலக் காப்பகம் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) முதியோர் நலத்திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் பதிவு செய்யப்பட்ட தொண்டு நிறுவனங்கள் வாயிலாக முதியோர் இல்லம் செயற்படுத்த ரூ.10.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு செலவு செய்யப்பட்டு வருகிறது. எனவே ஏதாவது தொண்டு நிறுவனம் சேலம் மாவட்டத்தில் முதியோர் இல்லம் செயல்படுத்த முன்வந்தால் அரசு அதனைப் பரிசீலிக்கும்.

(ஆ) எனவே, எடப்பாடி தாலுக்காவில் அரசே முதியோர் இல்லம் கட்டித்தர இயலாது.

99—

## இலவச வீட்டுமனை வழங்கிய விவரம்

**வினா 19853—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1996-97 மற்றும் 1997-98 ஆம் ஆண்டு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களில் எத்தனை பேருக்கு இலவச வீட்டுமனை வழங்கப்பட்டுள்ளது?

(ஆ) சேலம், நாமக்கல் மாவட்டத்தில் எத்தனை பேருக்கு வழங்கப்பட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) 1996-97 ஆம் ஆண்டு 85,309 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களுக்கும், 1997-98-ல் 31-7-1997 வரை 3,408 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களுக்கும் வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது.

| (ஆ) ஆண்டு | சேலம் | நாமக்கல் |
|---|---|---|
| 1996-97 | 1,755 | 1,051 |
| 1997-98-ல் (31-7-1997 வரை) | 87 | 704 |



100—

## ஆதிதிராவிடர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா

**வினா 11624—திரு. மு. பெ. சாமிநாதன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், தாராபுரம் வட்டம், வெள்ளக்கோவில் தொகுதிக்குட்பட்ட கொளத்துப்பாளையம் பேரூராட்சி ஆலாம்பாளையத்தில் வசிக்கும் ஆதிதிராவிடர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது வழங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மேற்படி கிராமத்தில் க.ச.எண் 346/1 சாலையில் 2.70.0 எக்டேர் நிலம் தேர்வு செய்து நேரடி பேச்சு வார்த்தை மூலம் நிலமெடுப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டது. நடவடிக்கைகள் முடிவுற்றதும் ஆலாம்பாளையத்தில் வசிக்கும் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படும் எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

# இரண்டாம் பட்டியல்

1—

## அரசுத் துறையில் ஆங்கிலோ இந்தியர்கள்

**வினா 2729—திருமதி ஆன் 'டி' மான்டி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநிலத்தில் அனைத்து அரசுத் துறைகளிலும் உள்ள ஆங்கிலோ இந்தியர்கள் மொத்தம் எத்தனை பேர் பணியாற்றுகிறார்கள்?

(ஆ) மேற்படி பணியாளர்கள் பிரிவு வாரியாக மொத்தம் எத்தனை பேர் பணியாற்றுகிறார்கள்?

(அ) பிரிவு பணியில்

(ஆ) பிரிவு பணியில்

(இ) பிரிவு பணியில்

(ஈ) பிரிவு பணியில்

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மொத்தம் 323 ஆங்கிலோ இந்தியர்கள் அரசுத் துறைகளில் மற்றும் பொது நிறுவனங்களில் பணியாற்றுகிறார்கள்.

(ஆ) பிரிவு வாரியாக விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| பிரிவு வாரியாக (1) | அரசுத் துறையில் (2) | அரசின் பொது நிறுவனங்களில் (3) | மொத்தம் (4) |
|---|---|---|---|
| (அ) பிரிவு பணியில் | 5 | .. | 5 |
| (ஆ) பிரிவு பணியில் | 129 | 4 | 133 |
| (இ) பிரிவு பணியில் | 145 | 25 | 170 |
| (ஈ) பிரிவு பணியில் | 5 | 10 | 15 |
| மொத்தம் | **284** | **39** | **323** |

2—

**போக்குவரத்து காவல் நிலையம் அமைக்கும் திட்டம்**

**வினா 6761—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பவானி நகரில் போக்குவரத்து காவல் நிலையம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம், எனில் எப்போது?



விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பவானி நகரில் புதிய காவல் நிலையம் அமைக்க அரசாணை (பல்வகை) எண் 971, நாள் 27-6-1997-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

3—

**காவல் நிலைய எல்லைகளைத் திருத்தியமைத்தல்**

**வினா 842—திரு. அ. அசோகன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் உள்ள காவல் நிலைய எல்லைகளைத் திருத்தியமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

காவல் நிலைய எல்லை மாற்றம் குறித்து பெறப்படும் கருத்துருக்கள் பரிசீலிக்கப்பட்டு அவ்வப்போது அரசாணை வெளியிடப்படுகிறது. எனவே தமிழகத்தில் உள்ள அனைத்து காவல் நிலைய எல்லைகளையும் ஒட்டுமொத்தமாகத் திருத்தி அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

4—

**காவல் நிலையத்தை இடம் மாற்றி அமைத்தல்**

**வினா 11126—திரு. செல்வராஜ் (என்கிற) கவிதைப்பித்தன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தொகுதி, கீரனூர் காவல் நிலையத்தை ஊரின் மையப்பகுதிக்கு மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

[1998 மார்ச் 19

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

கீரனூர் காவல் நிலையத்தை ஊரின் மையப்பகுதிக்கு மாற்றியமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

5—

**விடுமுறை அளித்தல்**

வினா 11271—**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் வட்டம், குருங்குளம் அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலையில் மாநில அரசால் அறிவிக்கப்படும் விடுமுறை அளிக்க அரசு உத்தரவிடுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

தொழிற்சாலையில் பணிபுரிபவர்களுக்கு தொழிற்சாலை விதிமுறைக்குட்பட்டு விடுமுறையளிக்கப்படுகிறது. அரசு அலுவலகங்களுக்கும், தொழிற்சாலைகளுக்கும் பல்வேறு வேற்றுமைகள் உள்ளன. ஆதலால் அரசு அலுவலகங்களுக்கு அளிக்கப்படும் விடுமுறை அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலையில் பணிபுரிபவர்களுக்கு அளிக்க இயலாது.

6—

**எடப்பாடியில் பெண் காவலர்கள் நியமித்தல்**

**வினா 11906—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி காவல் நிலையத்திற்கு பெண் காவலர்கள் நியமிக்க அரசு ஆவன செய்யுமா?



1998 மார்ச் 19]

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

அனைத்துக் காவல் நிலையங்களுக்கும் பெண் காவலர்களை நியமிக்கும்போது எடப்பாடி காவல் நிலையத்திற்கும் பெண் காவலர்களை நியமிப்பது குறித்துப் பரிசீலிக்கப்படும்.

7—

**காவலர் குடியிருப்புக் கட்டடங்களைப் பழுது பார்த்தல்**

**வினா 11913—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், காக்காபாளையம் காவல் நிலையக் காவலர் குடியிருப்புக் கட்டடங்கள் பழுதுபட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதைப் பழுது பார்க்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சேலம் மாவட்டம், மகுடஞ்சாவடி (காக்காபாளையம்) காவல் நிலையம் மற்றும் குடியிருப்புகளில் கூரைச் சுவர்கள் மற்றும் தளம் மராமத்துச் செய்தல் மற்றும் அவைகளுக்கு வெள்ளையடித்தல் ஆகியவை 1997-98 ஆம் ஆண்டிற்கான சிறு கட்டுமானப் பணிகளுடன் சேர்த்து மராமத்துச் செய்யப்படும். காவல் நிலையம் மற்றும் குடியிருப்புகளுக்குச் சுற்றுச்சுவர் கட்டவும், இக்காவல் நிலையத்தின் 5 பழைய வீடுகளுக்கு நவீனக் கழிவறை கட்டவும், சேலம் மாவட்டப் பொதுப்பணித் துறைச் செயற் பொறியாளரிடம் தோராய மதிப்பீடு மற்றும் வரைபடம் கோரப்பட்டுள்ளது. அவை கிடைக்கப் பெற்றதும் இப்பணிகள் மேற்கொள்ளப்படும்.

8—

### கொலைக் குற்றங்கள் விவரம்

**வினா 11982—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1997-98 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் எத்தனை கொலைக் குற்றங்கள் நடந்துள்ளன என்று காவல் துறைக்குப் புகார்கள் வந்துள்ளன?

(ஆ) இதுவரை கொலைக் குற்றங்கள் புரிந்தவர்கள் எத்தனை பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் 1997 ஆம் ஆண்டு, 31-7-1997 முடிய 1,152 கொலைக் குற்றங்கள் நடந்துள்ளன.

(ஆ) கொலைக் குற்றம் புரிந்தவர்கள் 2,516 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

9—

### போலீஸ் அவுட்-போஸ்ட் அமைத்தல்

**வினா 12021—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி அரசுத் தலைமை மருத்துவமனையில் ஒரு போலீஸ் அவுட் —போஸ்ட் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): காவல் ஆணையக் குழுவின் பரிந்துரைப்படி தமிழகத்தில் தற்போதுள்ள எல்லாப் புறக்காவல் நிலையங்களும் முழுக்காவல் நிலையங்களாக நிலை உயர்த்தப்பட்டு வருகின்றன. இச்சூழ்நிலையில், புதிதாகப் புறக்காவல் நிலையங்கள் அமைப்பது உகந்ததாக அமையாது. எனவே, தென்காசி அரசுத் தலைமை மருத்துவ மனையில் புதிதாகப் புறக்காவல் நிலையம் அமைக்கும் எண்ணம் எதுவும் அரசுக்கு இல்லை.



10—

### அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்குப் புதிய கட்டடங்கள்

**வினா 4341—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தொகுதி, களப்பாள், இராதா நரசிம்மபுரம், புள்ளமங்களம் அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

அரசாணை நிலை எண் 718, கல்வி, நாள் 4-10-1996-இல் மன்னார்குடி தொகுதி, இராதா நரசிம்மபுரம் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு ரூ.3.01 இலட்சமும் மற்றும் புள்ளமங்களம் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு ரூ.3.01 இலட்சமும், கூடுதல் வகுப்பறைகள் கட்டுவதற்காக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

அரசாணை நிலை எண் 291, பள்ளிக் கல்வித் துறை, நாள் 9-7-1997-இல் களப்பாள் அரசு உயர்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் வகுப்பறைகள் கட்டுவதற்காக ரூ. 4 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

11—

### அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்குக் கட்டடம்

**வினா 4346—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): அரசாணை நிலை எண் 291, பள்ளிக் கல்வித் துறை, நாள் 9-7-1997-இல் திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு ரூ.4 இலட்சம் செலவில் கூடுதல் கட்டடம் கட்டித்தர அரசு ஆணையிட்டுள்ளது.

12—

### அரசு உயர்நிலைப் பள்ளிக்குப் புதிய கட்டடம்

**வினா 4776—திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், பத்மனாபபுரம் தொகுதி, கப்பியறை பேரூராட்சியில், வாத்தியார் கோணம் அரசு உயர்நிலைப் பள்ளிக் கூடத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

அரசாணை நிலை எண் 291, பள்ளிக் கல்வித் துறை, நாள் 9-7-1997-இல் கன்னியாகுமரி மாவட்டம், பத்மனாபபுரம் தொகுதி, கப்பியறை பேரூராட்சி, வாத்தியார் கோணம் அரசு உயர்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடம் கட்டித்தர அரசு ரூ.4 இலட்சம் ஒதுக்கீடு செய்து ஆணையிட்டுள்ளது.

13—

### ஆண்கள் உயர்நிலைப் பள்ளிக்குப் புதிய கட்டடம்

**வினா 5198—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) திருவாரூர் மாவட்டம், கூத்தாநல்லூர் பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்குப் புதிய கட்டடம் மற்றும் ஆண்கள் உயர்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): அரசாணை நிலை எண் 291, பள்ளிக் கல்வித் துறை, நாள் 9-7-1997-ல் திருவாரூர் மாவட்டம், கூத்தாநல்லூர் பெண்கள் உயர்நிலைப் பள்ளி மற்றும் ஆண்கள் உயர்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் வகுப்பறைக் கட்டடம் கட்ட, முறையே ஒவ்வொரு பள்ளிக்கும் தலா ரூ.4 இலட்சம் வீதம் அரசு ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பித்துள்ளது.

14—

### அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளிக்குப் புதிய கட்டடம்

**வினா 6145—திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளிக்குப் புதியதாகக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): அரசாணை நிலை எண் 263, பள்ளிக் கல்வித் துறை, நாள் 19-6-1997-இல் திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளிக்கு, பகுதி-2 திட்டத்தின்கீழ் 1996-97-ஆம் ஆண்டில் வகுப்பறைகள் கட்டிக் கொடுக்க ரூ.3.01 இலட்சம் ஒதுக்கப்பட்டு ஆணையிடப்பட்டுள்ளது.

[1998 மார்ச் 19

15—

### நகராட்சி ஆரம்பப் பள்ளி தொடங்குதல்

**வினா 7021—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி நகராட்சி, 4-ஆவது வார்டு மோட்டூரில் உள்ள பூண்டாரச்சியூர் காட்டுவளைவில் நகராட்சி ஆரம்பப் பள்ளி தொடங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

எடப்பாடி நகராட்சி, மோட்டூரில் உள்ள பூண்டாரச்சியூர் காட்டுவளைவில் பகுதியின் மக்கள் தொகை 467 ஆகும். பள்ளி வயதுப் பிள்ளைகள் 62 பேர் உள்ளனர். இவ்வூருக்கு அருகில் 0.5 கி.மீ. தூரத்தில் மடக்கனூர் ஊராட்சி ஒன்றியத் துவக்கப் பள்ளியும், 1.5 கி.மீ. தூரத்தில் பூப்பனூர் நகராட்சித் துவக்கப் பள்ளியும் உள்ளன. பூண்டாரச்சியூர் காட்டுவளைவில் புதிய பள்ளி திறந்தால் மேற்கண்ட இரு பள்ளிகளும் பாதிக்கப்படும். எனவே, பூண்டாரச்சியூர் காட்டுவளைவில் புதிய நகராட்சி ஆரம்பப் பள்ளி திறக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

16—

### மேல்நிலைப் பள்ளிக்குப் புதிய கட்டடம்

**வினா 7305—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரம்பலூர் மாவட்டம், ஆண்டிமடம் மேல்நிலைப் பள்ளிக்குப் புதிய கட்டடம் கட்டித்தரும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

அரசாணை நிலை எண் 291, பள்ளிக் கல்வித் துறை, நாள் 9-7-1997இல் பெரம்பலூர் மாவட்டம், ஆண்டிமடம் மேல்நிலைப்



1998 மார்ச் 19]

பள்ளிக்குப் புதிய கட்டடம் கட்ட ரூ. 4 இலட்சம் ஒதுக்கீடு செய்து அரசு ஆணையிட்டுள்ளது.

17—

### மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடம்

**வினா 9218—திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் தொகுதியிலுள்ள அய்யம்பேட்டை மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

அரசாணை நிலை எண் 291, பள்ளிக் கல்வித் துறை, நாள் 9-7-1997-இல் தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் தொகுதியிலுள்ள அய்யம்பேட்டை மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் வகுப்பறைகள் கட்ட ரூ.4 இலட்சம் ஒதுக்கப்பட்டு ஆணையிடப்பட்டுள்ளது.

18—

### சென்னம்பட்டியில் புதிய நூலகம் அமைத்தல்

**வினா 10158—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் வட்டம், சென்னம்பட்டி கிராமத்தில் புதியதாக நூலகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): 1948ஆம் ஆண்டு பொது நூலகச் சட்டத்தின்படி 5,000 மக்கள் தொகையினைக் கொண்ட கிராமங்களில்

மட்டுமே கிளை நூலகம் திறக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. சென்னம்பட்டி கிராமத்தின் மக்கள் தொகை 1991 ஆம் ஆண்டுக் கணக்கெடுப்பின்படி 1,276 ஆகும். மேலும் தற்போது சென்னம்பட்டியிலிருந்து 3 கி.மீ. தொலைவில் வல்லம் கிளை நூலகம் செயல்பட்டு வருகின்றது.

எனவே, தஞ்சாவூர் வட்டம், சென்னம்பட்டி கிராமத்தில் புதியதாக நூலகம் அமைப்பதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

19—

### புதியதாக நூலகம் அமைத்தல்

**வினா 10160—திரு மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், தும்பத்திக்கோட்டை கிராமம் மற்றும் பாப்பாநாடு, சங்கரன் தெருவில் புதியதாக நூலகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): 1948 ஆம் ஆண்டு பொது நூலகச் சட்டத்தின்படி 5,000 மக்கள் தொகையினைக் கொண்ட இடங்களில் மட்டுமே கிளை நூலகம் திறக்க இயலும்.

ஒரத்தநாடு வட்டம், தும்பத்திக்கோட்டையை உள்ளடக்கிய பருத்திக்கோட்டை ஊராட்சியில் 1991 ஆம் ஆண்டுக் கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 2,535 ஆகும்.

பாப்பாநாடு கிராமத்தினை உள்ளடக்கிய ஆவிடநல்ல விஜயபுரம் ஊராட்சியில் 1991 ஆம் ஆண்டுக் கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 4,356. பாப்பாநாடு கிராமத்தில் சங்கரன் தெரு உள்ளது. பாப்பாநாடு கிராமத்தில் 9-8-1993 முதல் பகுதி நேர நூலகம் ஒன்று ஏற்கெனவே செயல்பட்டு வருகிறது.





எனவே, தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், தும்பத்திக்கோட்டை கிராமம் மற்றும் பாப்பாநாடு, சங்கரன் தெருவில் புதியதாக நூலகம் திறப்பதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

20—

### ஆரம்பப் பள்ளிக்கு ஆசிரியர் நியமனம்

**வினா 12426—திரு. டி. மணி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறை கல்வி மாவட்டம், சிவலோகம் அரசு ஆரம்பப் பள்ளியில் ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த எத்தனை மாணவர்கள் கல்வி பயிலுகின்றனர்?

(ஆ) அப்பள்ளியில் போதுமான ஆசிரியர்கள் நியமனம் எப்போது நடைபெறும்?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) குழித்துறை கல்வி மாவட்டம், சிவலோகம் அரசு ஆரம்பப் பள்ளியில் ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த 6 மாணவர்கள் பயிலுகின்றனர்.

(ஆ) இப்பள்ளியில், தொடக்கப் பள்ளித் தலைமையாசிரியர், ஒரு இடைநிலை ஆசிரியர் (தமிழ்), ஒரு இடைநிலை ஆசிரியர் (மலையாளம்) ஆகிய மூவர் பணியாற்றி வருகின்றனர். இப்பள்ளியில் பயிலும் மாணவர்கள் எண்ணிக்கை அடிப்படையில் தேவையான ஆசிரியர்கள் உள்ளனர். எனவே, கூடுதல் நியமனப் பிரச்சினை எழவில்லை.

21—

### மருத்துவக் கல்லூரிகளில் வெளிநாட்டவர்க்கு இட ஒதுக்கீடு.

**வினா 8416—திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மருத்துவக் கல்லூரிகளில் வெளிநாட்டவர்க்கு (NRI) அதிகக் கட்டணத்தில் இட ஒதுக்கீடு செய்யும் முறை நிறுத்தப்பட்டுள்ளதை மீண்டும் நடைமுறைப்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் :**

இல்லை.

**22—**

### பெண் மருத்துவரை நியமனம் செய்தல்

**வினா 9981—திரு. அ. அசோகன் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் தொகுதி, கீழ்வேளூர் ஒன்றியம், கோகூர் தாய் சேய் நல மையத்தில் கடந்த ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாக பெண் மருத்துவர் இல்லாதிருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், விரைவில் பெண் மருத்துவரை நியமனம் செய்ய ஆவன செய்யப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): திருவாரூர் தொகுதி, கீழ்வேளூர் ஒன்றியம், கோகூரில் இயங்கி வருவது ஒரு துணைச் சுகாதார நிலையமாகும். அரசால் நிர்ணயிக்கப்பட்ட விதிகளின்படி துணைச் சுகாதார நிலையத்திற்கு மருத்துவரை நியமிக்க வாய்ப்பு இல்லை. கிராமச் சுகாதார செவிலியர் மட்டும்தான் நியமிக்கப்பட வேண்டும். அதன்படி, திருமதி ப்ளோரா கடந்த 1-10-1992 முதல் பணியாற்றி வருகிறார். இது தவிர, கீழ்வேளூர் மற்றும் திருவாரூரில் இரண்டு ஆரம்பச்





சுகாதார நிலையங்கள் இயங்கி வருகின்றன. இந்த ஆரம்பச் சுகாதார நிலையங்களில் போதிய மருத்துவர்கள் பணியாற்றி வருகின்றார்கள்.

**23—**

### ஆரம்பச் சுகாதார நிலையம் அமைத்தல்

**வினா 10080—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் இந்த நிதி ஆண்டில், எந்த ஊரில் ஆரம்பச் சுகாதார நிலையம் அமைக்கப்பட உள்ளது?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): எடப்பாடி தொகுதியில் எடப்பாடி, மகுடஞ்சாவடி மற்றும் கொங்கணாபுரம் ஆகிய மூன்று ஊராட்சி ஒன்றியங்கள் உள்ளன. எடப்பாடி ஒன்றியத்தில் இரண்டு ஆரம்பச் சுகாதார நிலையங்களும், மகுடஞ்சாவடி ஒன்றியத்தில் மூன்று ஆரம்பச் சுகாதார நிலையங்களும், கொங்கணாபுரம் ஒன்றியத்தில் இரண்டு ஆரம்பச் சுகாதார நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. மேற்படி ஒன்றியங்களின் மக்கள் தொகைக்கேற்ப தற்போது செயல்பட்டு வரும் ஆரம்பச் சுகாதார நிலையங்களே போதுமானதால், எடப்பாடி தொகுதியில் இந்த நிதி ஆண்டில் புதிய ஆரம்பச் சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறு ஏதுமில்லை.

**24—**

### மின் தடையைச் சீர் செய்தல்

**வினா 10611—திரு. ஐ. கணேசன் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1998 மார்ச் 19

எடப்பாடி நகரில் பிற்பகல் 2 மணி முதல் 6-30 மணி வரை ஏற்படும் மின் தடையைச் சீர் செய்ய உடனடி நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

எடப்பாடி நகரில் 20-3-1997 முதல் 6-5-1997 வரை அனைத்து 22 கி.வோ. மின்னூட்டிகளிலும் மதியம் 2-00 மணி முதல் மாலை 6-30 மணி வரை மின் நிறுத்தம் செய்யும்படி லோடு டெஸ்பேச் (எல்.டி.சென்டர்) சென்டர், ஈரோடு: உத்தரவின்படி, எடப்பாடி நகர் 22 கிலோ வோல்ட் மின்னூட்டியிலும் மேற்கண்ட நாட்களில் மின் நிறுத்தம் செய்யப்பட்டு வந்தது. தற்பொழுது மின் உற்பத்தி சீரடைந்து விட்டதால், எடப்பாடி நகரில் 24 மணி நேரமும் சீரான மின் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

25—

**மின் அழுத்தக் குறைவினைச் சரி செய்தல்**

**வினா 11995—திரு. கோ. தளபதி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேடப்பட்டி தொகுதி, ஏழுமலையில் மின் அழுத்தக் குறைவினைச் சரி செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): சேடப்பட்டி தொகுதியில் உள்ள மின் நுகர்வோர்க்கு ஏழுமலை 110/11 கே.வி. மற்றும் தும்மக்குண்டு 33/11 கே.வி. துணை மின் நிலையம் மூலம் மின் விநியோகம் செய்யப்படுகிறது. மேலே கூறிய இரு மின் நிலையங்களின் இறுதிப் பகுதியில் மின் அழுத்தம் குறைவாக இருப்பதைச் சீர் செய்ய



1998 மார்ச் 19]

சாப்டூரில் ஒரு 33/11 கே.வி. துணை மின் நிலையம் அமைக்கும் பணியும், சாப்டூர் துணை மின் நிலையத்திலிருந்து 11 கே.வி. இணைப்பு மின் பாதைகள் அமைக்கும் பணியும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இப்பணிகள் முடிவடைந்தவுடன், இக்கடைசிப் பகுதியில் நிலவி வந்த மின் அழுத்தக் குறைபாடு முற்றிலும் சீரடையும்.

26—

**திருப்பூர் மருத்துவமனையில் மருத்துவர்கள் நியமனம்**

**வினா 12440—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூரிலுள்ள மாவட்ட மருத்துவமனையில் போதுமான டாக்டர்கள் இல்லை என்று அரசுக்கு முறையீடு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நியமிக்கப்படுவார்கள்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

27—

**மின் இணைப்பு வழங்குதல்**

**வினா 12468—திரு. டி. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், மசினகுடி பகுதி மலைவாழ் மக்கள் குடியிருப்புகளுக்கு மின்னிணைப்பு வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது வழங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) நீலகிரி மாவட்டம், மசினகுடி பகுதி மலைவாழ் மக்கள் குடியிருப்புகளுக்கு ஏற்கெனவே மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) நீலகிரி மாவட்டம், மசினகுடி பகுதி மலைவாழ் மக்கள் குடியிருப்புகளுக்கு மின் இணைப்பு கீழ்க்கண்டவாறு வழங்கப்பட்டுள்ளது.

மாவநல்லா என்ற இடத்திலுள்ள 40 குடிசைகளுக்கு 31-3-1997 அன்றும், ஆனைகட்டி என்ற இடத்திலுள்ள 49 குடிசைகளுக்கு 20-3-1997 அன்றும், மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது. இவையன்றி, மின் இணைப்புக் கோரி விண்ணப்பங்கள் ஏதும் நிலுவையில் இல்லை.

**28—**

**மின் இணைப்பு வழங்குதல்**

**வினா 12477—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காடையாம்பட்டி பேரூராட்சிக்குட்பட்ட ஆண்டிக்கொட்டாய் காலனியில் வசிக்கும் 75 குடும்பங்களுக்கும் வீட்டுக்கொரு விளக்குத் திட்டத்தின்கீழ் மின் இணைப்பு வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

ஆண்டிக்கொட்டாய் காலனி, காடையாம்பட்டி பேரூராட்சிக்கு உட்பட்ட பகுதியாகும். மேற்கண்ட காலனியில் குடிசைக்கு ஒரு விளக்குத் திட்டத்தின்கீழ் எவ்வித விண்ணப்பமும் மின் வாரியத்தால் பெறப்படவில்லை. மேலும், பேரூராட்சிக்குட்பட்ட பகுதியானதால் வாரிய விதிமுறைகளின்படி குடிசைக்கு ஒரு விளக்குத் திட்டத்தின்கீழ் மின் இணைப்பு வழங்க இயலாது.



**29—**

**புறம்போக்கு நிலத்திற்குப் பட்டா வழங்குதல்**

**வினா 11472—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, அஜ்ஜன அள்ளி அருந்ததியர்கள் விவசாயம் செய்யும் புறம்போக்கு நிலத்திற்குப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டம், அஜ்ஜன அள்ளி கிராமத்தில் ஒதுக்கப்பட்ட காடு புறம்போக்கில் ஆக்கிரமிப்புச் செய்துள்ள நபர்கள் தவிர ஏனைய நபர்களுக்கு, நிலவகை மாற்றம் செய்து ஒப்படை வழங்கத் துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**30—**

**வீட்டுமனை வழங்குதல்**

**வினா 11997—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருந்துறை வட்டத்தில் வீட்டுமனையிடம் கேட்டு 1996-97 ஆம் ஆண்டில் அரசுக்கு எத்தனை மனுக்கள் வந்தன?

(ஆ) அவைகளில் எவ்வளவு மனுக்களுக்கு வீட்டுமனையிடம் வழங்கப்பட்டன?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) : 1996-97 ஆம் ஆண்டில் வீட்டு மனையிடம் கேட்டு வரப்பெற்ற மனுக்கள் மொத்தம் 407 ஆகும். இவை அனைத்திற்கும் பட்டா வழங்கப்பட்டு விட்டது.

31—

### இலவச வீட்டுமனைப் பட்டா

வினா 12479—திரு. ஆர்.ஆர். சேகரன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, பண்ணப்பட்டி அருந்ததியர் தெருவில் வசிக்கும் 25 குடும்பங்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர் :**

ஒப்படை வழங்க கிராம நத்தத்தில் தகுதியான காலியிடம் இல்லை இருப்பினும், ஆதிதிராவிட நலத் துறை மூலம் நிலத்தைக் கையகப்படுத்தி இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

32—

### ஆரம்பப் பள்ளிக்கூடக் கட்டடங்களைப் பழுது பார்த்தல்

**வினா 2811—திரு. கோ. சண்முகம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியில் பெரும்பாலான ஆரம்பப் பள்ளிக்கூடக் கட்டடங்கள் பழுதடைந்து உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அவற்றைச் சீர் செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) : திருப்பத்தூர் சட்டமன்றப் பேரவைத் தொகுதிக்குட்பட்ட திருப்பத்தூர், சோலையார்பேட்டை, ஆலங்காயம்





ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் ரூ. 22.80 இலட்சம் மதிப்பீட்டில் 215 பள்ளிக் கட்டடங்கள் பழுது பார்க்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

33—

### கசிவு நீர்க் குட்டை அமைத்தல்

**வினா 3646—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பென்னாகரம் வட்டம், கஞ்சல்நத்தம் கிராமம், பட்டக்காரக் கொட்டாயப் பகுதியில், கணாம் பள்ளத்தில் கசிவு நீர்க் குட்டை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

1996-97 ஆம் ஆண்டில் ரூ. 2.00 இலட்சம் மதிப்பீட்டில் கசிவு நீர்க் குட்டை கட்டி முடிக்கப்பட்டு விட்டது.

34—

### சாலைகள் பழுது பார்த்தல்

**வினா 5373—திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி ஒன்றியம், கோபாலசமுத்திரம் பேரூராட்சிக்குட்பட்ட கொத்தன்குளம் கிராமத்துச் சாலையும், கல்லிடைக்குறிச்சி பேரூராட்சியிலுள்ள காட்டுமன்னார் கோவில் செல்லும் சாலையும் பழுதடைந்த நிலையில் உள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது சீர் செய்து தரப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): கல்லிடைக்குறிச்சி பேரூராட்சிக்குச் சொந்தமான காட்டுமன்னார்கோவில் சாலை (2.50 கி.மீ.) செப்பனிட 1997-98 ஆம் ஆண்டிற்கான அடிப்படை வசதிகள் திட்டத்தில் ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டில் சாலைப் பராமரிப்பு வேலை செய்யப்படுகிறது. கோபாலசமுத்திரம் பேரூராட்சிக்குச் சொந்தமான கொத்தன்குளம் கிராமச் சாலையில் (0.80 கி.மீ) ஏற்பட்டுள்ள பழுதுகளைச் சரி பார்க்க 1997-98 ஆம் ஆண்டில் அடிப்படை வசதிகள் திட்டத்தில் ரூ.80,000 மதிப்பீட்டில் வேலை செய்யப்படுகிறது.

35—

## பவானி தொகுதியில் சாலையைச் சீர் செய்தல்

வினா 6663—**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, பவானி வட்டம்-ஓடத்துறை கிராமம் ஒ.என். பாளையத்திலிருந்து இந்திரா நகர் வரை, வைரமங்கலம் கிராமம், வைரமங்கலத்திலிருந்து செம்பூத்தாம்பாளையம் வரை, பெரிய புரியூர் கிராமம் வளையக்காரபாளையத்திலிருந்து செம்பூத்தாம்பாளையம் வரை சாலை வசதி செய்துதர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஓடத்துறை – ஆண்டிப்பாளையம் சாலையில் இந்திரா நகர் உள்ளது. ஓடத்துறை – ஆண்டிப்பாளையம் சாலையை இந்த ஆண்டில் வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தில் எடுத்துச் செய்ய அனுமதி பெறப்பட்டுள்ளது. சட்டமன்ற உறுப்பினர் கோரியுள்ள எஞ்சிய இணைப்புச் சாலைகளை எதிர்காலத்தில் அரசின் நிதிநிலைக் கேற்ப



ஏதேனும் ஒரு திட்டத்தில் எடுத்துக் கொள்வது குறித்து முடிவு செய்யப்படும்.

36—

## குழாய் இணைப்பை அதிகரித்தல்

**வினா 7011—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிக்கப்பாரா—

எடப்பாடி தொகுதி, பூலாம்பட்டி பேரூராட்சியில், எடப்பாடி பிரதான சாலையிலிருந்து மணியக்காரனூர் காலனிக்குக் குழாய் இணைப்பை விஸ்தரிப்புச் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

எடப்பாடி தொகுதி, பூலாம்பட்டி பேரூராட்சியில், எடப்பாடி பிரதான சாலையில் இருந்து மணியக்காரனூர் காலனிக்கு ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர்க் குழாய் அமைத்து, 4 பொதுக் குழாய்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

37—

## மெர்க்குரி விளக்குகள் அமைத்தல்

**வினா 7014—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, இடங்கணசாலை பேரூராட்சி, சாந்தி ஸ்டுடியோ- நடராஜா தியேட்டர் வரை, காந்தி நகர், இளம்பிள்ளை முதல் சேலம் மெயின் ரோடு வரை, பழக்காரன் தோட்டம், மோட்டூர் வரை மெர்க்குரி விளக்குகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :

எடப்பாடி தொகுதி, இடங்கணசாலை பேரூராட்சி, சாந்தி ஸ்டுடியோ — நடராஜா தியேட்டர், இளம்பிள்ளை வரை, காந்தி நகர், இளம்பிள்ளை முதல் சேலம் மெயின் ரோடு வரை, பழக்காரன் தோட்டம், மோட்டூர் வரை மெர்க்குரி விளக்குகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

38—

### தொகுப்பு வீடு பற்றிய விவரம்

**வினா 7385—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதியில், தொகுப்பு வீடு வேண்டி எடப்பாடி, கொங்கணாபுரம், மகுடஞ்சாவடி ஆகிய ஒன்றியங்களிலிருந்து எத்தனை விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன?

(ஆ) அவர்களுக்குத் தொகுப்பு வீடு கட்டிக் கொடுக்க அரசு எடுத்த நடவடிக்கை பற்றிய விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) எடப்பாடி ஒன்றியத்தில் 60, கொங்கணாபுரம் ஒன்றியத்தில் 30 மற்றும் மகுடஞ்சாவடி ஒன்றியத்தில் 40, ஆக மொத்தம் 130 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன.

(ஆ) 130 தொகுப்பு வீடுகளும் கட்டிக் கொடுக்கப்பட உத்தரவு பிறப்பிக்கப்பட்டு வீடுகள் கட்டும் பணியும் நடைபெற்று வருகிறது.





39—

### ஜீயர் ஊற்றில் தூர் எடுத்தல்

**வினா 7871—திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி பேரூராட்சி, நாங்குநேரி ஜீயர் ஊற்றில் தூர் வார அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) நாங்குநேரி பேரூராட்சி, நாங்குநேரி ஜீயர் ஊற்றில் தூர் வாருதல் தொடர்பான கருத்துரு ஏதும் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

40—

### கசிவு நீர்க் குட்டை அமைத்தல்

**வினா 8207—திரு. சி. கோபு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், அணைக்கட்டு தொகுதி, எல்லப்பன்பட்டி கிராமத்தில் கசிவு நீர்க் குட்டை அமைத்திடும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

(அ) இல்லை.

(ஆ) வினா எழ வாய்ப்பில்லை.

**41—**

### குளங்களைச் செப்பனிடுதல்

**வினா 8281—திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, ஆலடி புதூர் குளத்தின் மடையை பழுது நீக்கி, கரையைச் செப்பனிடவும் செண்பகராமநல்லூர் தெப்பக்குளத்தைச் செப்பனிடவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) : நாங்குநேரி தொகுதி, ஆலடி புதூர் குளத்தை நடப்பு நிதியாண்டில் நிதி நிலைமைக்கு ஏற்ப மடையைப் பழுது பார்த்து செப்பனிட்டுக் கொடுக்க பரிசீலிக்கப்பட்டு வருகிறது. செண்பகராமநல்லூர் தெப்பக்குளத்தை ஊராட்சி ஒன்றியம் மூலம் செப்பனிட விதிகளில் வழிவகை இல்லை.

**42—**

### ஜீயர் ஊற்று படிக்கட்டுகளை செப்பனிடுதல்

**வினா 8286—திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, நாங்குநேரி பேரூராட்சி, நாங்குநேரியிலுள்ள ஜீயர் ஊற்று படிக்கட்டுகளைச் செப்பனிட அரசு ஆவன செய்யுமா?



(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) : நாங்குநேரி பேரூராட்சியில் உள்ள ஜீயர் ஊற்று படிக்கட்டுகளைச் செப்பனிட கருத்துருக்கள் ஏதும் பரிசீலனையில் இல்லை.

**43—**

### சேலம் மாவட்டத்தில் ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம்

**வினா 10226—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1996-97 ஆம் ஆண்டு ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தில் சேலம் மாவட்டத்தில் எத்தனை கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளது?

(ஆ) எடப்பாடி தொகுதியில் எவ்வளவு தொகை செலவழிக்கப்பட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

(அ) ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தில் 1996-97 ஆம் ஆண்டில் ரூ. 416.950 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) 1996-97 ஆம் ஆண்டு ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தில் எடப்பாடி தொகுதியில் ரூ. 24.266 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது.

**44—**

### கசிவு நீர்க் குட்டைகள் கட்டுதல்

**வினா 10360—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1998 மார்ச் 19

(அ) 1996-97-ஆம் ஆண்டு ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் சேலம் மாவட்டத்தில் கசிவு நீர்க் குட்டைகள் எத்தனை கட்டப்பட்டுள்ளன?

(ஆ) 1997-98-ல் சேலம் மாவட்டத்தில் ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் எத்தனை கசிவு நீர்க் குட்டைகள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளன?

(இ) எடப்பாடி தொகுதியில் கசிவு நீர்க் குட்டைகள் 1997-98-ல் எத்தனை கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) 1996-97-ஆம் ஆண்டு ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் சேலம் மாவட்டத்தில் கசிவு நீர்க் குட்டைகள் ஏதும் கட்டப்படவில்லை.

(ஆ) 1997-98-ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் கசிவு நீர்க் குட்டைகள் ஏதும் கட்ட உரிய முன்மொழிவு சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து வரவில்லை.

(இ) எடப்பாடி தொகுதியில் பத்து லட்சம் கிணறுகள் திட்டத்தின்கீழ் வேளாண் பொறியியல் துறை மூலம் இரண்டு இடங்களிலும், வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தில் 9 இடங்களிலும் கசிவு நீர்க் குட்டைகள் கட்டப்பட உள்ளன.

45—

## இலவச மின் விளக்கு வசதி

வினா 10897—**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரூராட்சி பகுதிகளில், கட்டிக் கொடுக்கப்பட்டுள்ள ஆதிதிராவிட தொகுப்பு வீடுகளுக்கு இலவச மின் விளக்கு வசதி செய்து கொடுக்க அரசு ஆவன செய்யுமா?



1998 மார்ச் 19]

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) செயற்குறிப்பு ஏதும் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

46—

## பழுதடைந்த பள்ளிகளைச் செப்பனிடுதல்

வினா 10925—**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதிக்குட்பட்ட சலங்கப்பாளையம் பேரூராட்சி இராமநாதபுரத்திலுள்ள பள்ளியும் வரதநல்லூர் ஊராட்சியிலுள்ள கூலிக்காரன்பாளையம் பள்ளியும் பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இப்பள்ளிகளைச் செப்பனிட அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): சலங்கப்பாளையம் பேரூராட்சி இராமநாதபுரத்திலுள்ள பள்ளியைச் செப்பனிட 1997-98ஆம் ஆண்டில் கல்வி நிதியில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வரதநல்லூர் ஊராட்சியிலுள்ள கூலிக்காரன்பாளையத்திலுள்ள பள்ளி, தனியார் பள்ளியாதலால் ஊராட்சி ஒன்றிய நிதியிலிருந்து பழுதுகளை சரி செய்ய இயலாது.

[1998 மார்ச் 19

47—

## தொகுப்பு விடுகள் கட்டும் திட்டம்

வினா 11527—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, தொள்ளகுட்ட அள்ளி ஊராட்சி, அத்திமரத்தூர் மற்றும் நாகமரை ஊராட்சி, பண்ணவாடியான்காடு ஆகிய இடங்களில் தொகுப்பு விடுகள் கட்டும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த அத்திமரத்தூரில் 26 நபர்களுக்குப் பட்டா வழங்கப்பட்டுள்ளது. மேற்படி நபர்களுக்கு வரும் ஆண்டுகளில் முன்னுரிமை அடிப்படையில் தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க ஆய்வு செய்யப்படும். நாகமரை ஊராட்சி பண்ணவாடியான்காடு கிராமத்தில் 34 நபர்களுக்கு பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. அதில் 12 நபர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள நபர்களுக்கு வரும் ஆண்டுகளில் வீடுகள் கட்டிக் கொடுக்க ஆய்வு செய்யப்படும்.

48—

## தொகுப்பு விடுகள் கட்டுதல்

வினா 11532—திரு. ஜி. கே. மணி: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1998 மார்ச் 19]

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கெண்டயன அள்ளி ஊராட்சி, காலக்காடு புதுக்காலனி மற்றும் எச்சன அள்ளி ஊராட்சி, அனுமந்தாபுரம் ஆகிய இடங்களில் தொகுப்பு வீடுகள் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றியம், அனுமந்தாபுரத்தில் எச்சன அள்ளி ஊராட்சியில் தொகுப்பு வீடுகள் கட்ட மனுக்கள் பெறப்படவில்லை. பட்டாக்கள் வழங்கப்பட்டால் பரிசீலனை செய்து, வரும் நிதியாண்டில் தொர்குப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க ஆய்வு செய்யப்படும். கெண்டயன அள்ளி ஊராட்சி காலக்காடு புதுக்காலனியில் இதுவரை 29 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. மேலும் இலவச வீடுகள் கட்டிக் கொடுக்க பட்டாவுடன் மனு செய்தால் பரிசீலனை செய்து எதிர்வரும் ஆண்டுகளில் தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க ஆய்வு செய்யப்படும்.

49—

## தருமபுரி மாவட்டத்தில் தொகுப்பு விடுகள்

**வினா 11534—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, அரக்காசன் அள்ளி ஊராட்சி, எர்ரப்பட்டு மற்றும் பண்ட அள்ளி ஊராட்சி, கெட்டு அள்ளி ஆகிய இடங்களில் தொகுப்பு வீடுகள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

[1998 மார்ச் 19

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பெண்ணாகரம், ஊராட்சி ஒன்றியம், அரக்காசன் அள்ளி ஊராட்சி, எர்ரப்பட்டு கிராமத்தில் பட்டாக்கள் ஏதும் வழங்கப்படவில்லை. பட்டாக்கள் வழங்கப்பட்ட பின்னர் இலவசமாக வீடு கட்டிக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். பண்ட அள்ளி கிராமத்தில் 1995-96-ஆம் ஆண்டில் ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் 15 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. மேலும் இக்கிராமத்தில் வீடு கட்டிக் கொடுக்க தற்போது விண்ணப்பங்கள் நிலுவையில் இல்லை. கெட்டு அள்ளியில் 1993-94 ஆம் ஆண்டு 20 வீடுகளும் மற்றும் 1996-97 ஆம் ஆண்டில் 10 வீடுகளும் கட்டப்பட்டுள்ளன.

50—

**தருமபுரி மாவட்டத்தில் தொகுப்பு வீடுகள்**

**வினா 11540—திரு. ஜி. கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, சாமிசெட்டிபட்டி ஊராட்சி, எருமைப்பட்டி கொட்டாய் கிராமத்தில் இருப்பவர்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழ வாய்ப்பில்லை.



1998 மார்ச் 19]

51—

**தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுத்தல்**

**வினா 11550—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, இராமகொண்ட அள்ளி ஊராட்சி, மலையனூர் கெண்டயன அள்ளி ஊராட்சி, போடம்பட்டி ஆகிய இடங்களில் தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றியம், இராமகொண்ட அள்ளி ஊராட்சி, மலையனூர் கிராமத்தில் 20 பட்டாக்கள் வழங்கப்பட்டதில் இதுவரை 10 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.

கெண்டயன அள்ளி ஊராட்சி, போடம்பட்டியில் 40 பட்டாக்களில் 15 தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. இராமகொண்ட அள்ளி ஊராட்சி, மலையனூரில் 10 நபர்களுக்கும் போடம்பட்டியில் உள்ள 25 நபர்களுக்கும் எதிர்வரும் ஆண்டுகளில் தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க ஆய்வு செய்யப்படும்.

52—

**பெண்ணாகரம் தொகுதியில் தொகுப்பு வீடுகள்**

**வினா 11591—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1998 மார்ச் 19

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பெரும்பாலை ஊராட்சி, சோளிக்கவுண்டனூர், சுஞ்சல்நத்தம் கிராமம், ஏரியூர் காலனி மற்றும் அக்கன அள்ளி ஊராட்சி, அஜ்ஜன அள்ளி ஆகிய இடங்களில் தொகுப்பு வீடுகள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த பெரும்பாலை ஊராட்சி சோளிக்கவுண்டனூரில் பட்டாக்கள் எதுவும் வழங்கப்படவில்லை.

சுஞ்சல்நத்தம் ஊராட்சி, ஏரியூர் காலனியில் 57 பட்டாதாரர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. 44 வீடுகளை முன்னுரிமை அடிப்படையில் கட்ட அடுத்த ஆண்டு ஆய்வு செய்யப்படும்.

அஜ்ஜன அள்ளியில் இதுவரை 26 தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. இன்னும் 6 பட்டாதாரர்களுக்கு அடுத்த ஆண்டு தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க ஆய்வு செய்யப்படும்.

53—

## பெண்ணாகரம் தொகுதியில் கூடுதல் தொகுப்பு வீடுகள்

**வினா 11594—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பெரும்பாலையில் கூடுதலாகத் தொகுப்பு வீடுகள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த பெரும்பாலையில் இதுவரை 78 தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.



1998 மார்ச் 19]

இன்னும் 12 நபர்களுக்கு பட்டா உள்ளது. அவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க வரும் ஆண்டுகளில் ஆய்வு செய்யப்படும்.

54—

## தொகுப்பு வீடுகள் கட்டுதல்

**வினா 11595—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பெரும்பாலை ஊராட்சி, கொம்பாடியூர், மஞ்சார அள்ளி ஊராட்சி, கவுண்டனூர் அருந்ததியர் காலனி மற்றும் பெரும்பாலை ஊராட்சி, ஆலமரத்தூர் காலனி ஆகிய இடங்களில் தொகுப்பு வீடுகள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றியம், பெரும்பாலை ஊராட்சி, கொம்பாடியூர் கிராமத்தில் பட்டாக்கள் ஏதும் வழங்கப்படவில்லை. மஞ்சார அள்ளி ஊராட்சி, கவுண்டனூர் அருந்ததியர் காலனியில் 16 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 24 நபர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் வரும் ஆண்டுகளில் வீடுகள் கட்டிக் கொடுக்க ஆவன செய்யப்படும்.

பெரும்பாலை ஊராட்சி, ஆலமரத்தூரில் இதுவரை 30 தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. மேற்கொண்டு 37 தொகுப்பு வீடுகள் வரும் நிதி ஆண்டுகளில் கட்டிக் கொடுக்க ஆவன செய்யப்படும்.

55—

## தெரு விளக்கு வசதி

**வினா 12115—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டி ஒன்றியம், கண்ணப்பாடி, வீராக்கூர், பூமாந்தூர், கோவில்பாடி ஆகிய கிராமங்களுக்குத் தெரு விளக்கு வசதி செய்துதர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி, மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டி ஒன்றியம், கண்ணப்பாடி, வீராக்கூர், பூமாந்தூர், கோவில்பாடி ஆகிய கிராமங்களுக்குத் தெரு விளக்கு வசதி செய்வதற்கு அரசு ஆவன செய்து வருகிறது. இதற்கான மின் கட்டணத் தொகை தமிழ்நாடு மின் வாரியத்திற்குச் செலுத்தப்பட்டுள்ளது.

56—

## மத்திய அரசு வழங்கிய உர மானிய விவரம்

**வினா 7807—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டுக்கு உர மானியமாக மத்திய அரசு வழங்கிய தொகை 1996-97 ஆம் ஆண்டில் எவ்வளவு?

(ஆ) அதில் சேலம் மாவட்டத்திற்கு மட்டும் வழங்கப்பட்ட தொகை எவ்வளவு?

(இ) நாமக்கல் மாவட்டத்திற்கு வழங்கப்பட்ட தொகை எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர் :**



(அ) மத்திய அரசு கட்டுப்பாடு நீக்கப்பட்ட உரங்களின் விலை உயர்வினை ஓரளவு சரி செய்யும்பொருட்டு உரங்களுக்குச் சலுகைத் தொகை அளித்து வருகிறது.

1-4-1997 முதல் உரங்களுக்கு டன் ஒன்றுக்கான சலுகைத் தொகை பின்வருமாறு:-

| வரிசை எண் | உரத்தின் பெயர் | டன் ஒன்றுக்கு சலுகைத் தொகை |
|---|---|---|
| 1 | டி.ஏ.பி. (உள்ளூர்) | 3,750 |
| 2 | டி.ஏ.பி. (இறக்குமதி) | 2,250 |
| 3 | எம்.ஓ.பி | 2,000 |
| 4 | சூப்பர் பாஸ்பேட் | 600 |
| | உள்ளூர் காம்ப்ளக்ஸ் உரங்கள்— | |
| 5 | 15:15:15 | 1,723 |
| 6 | 12:32:16 | 3,142 |
| 7 | 23:2:0 | 1,875 |
| 8 | 14:35:14 | 3,320 |
| 9 | 28:28:0 | 2,283 |
| 10 | 16:20:0 | 1,630 |
| 11 | 20:20:0 | 1,630 |
| 12 | 10:26:26 | 2,986 |
| 13 | 17:17:17 | 1,953 |
| 14 | 19:19:19 | 2,182 |
| 15 | 14:28:14 | 2,749 |
| 16 | 20:10:0 | 1,149 |

இந்த உரச் சலுகைத் தொகை வேளாண்மை இயக்குநரின் பரிந்துரையின் பேரில் தயாரிப்பாளர்களுக்கு நேரடியாக மத்திய அரசு வழங்குகிறது. 1996-97 ஆம் ஆண்டில் பல்வேறு தயாரிப்பாளர்களுக்கு மாநில அளவில் ரூ.164 கோடி சலுகைத் தொகை வழங்குவதற்கு மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. 1-10-1997 முடிய

உர மானியமாக ரூ.140.94 கோடிக்கு மானியத் தொகை வழங்கிட மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்து அனுப்பப்பட்டுள்ளது.

(ஆ) மற்றும் (இ): சேலம் மாவட்டம், பொறுத்தவரையில் இன்னும் தனியே பிரித்து செயல்படாததினால் இத்துறையினைப் பிரிக்கப்படாத ஒட்டுமொத்த சேலம் மாவட்டத்திற்கு 1-10-1997 முடிய உரம் வாரியாக வழங்கப்பட்ட அளவு மற்றும் அதற்கான மானியத் தொகை பரிந்துரை செய்த விவரம் பின்வருமாறு:-

| வரிசை எண் (1) | உரம் (2) | அளவு (டன்) (3) | மானியத் தொகை (4) |
|---|---|---|---|
| | | | (ரூபாய் இலட்சத்தில்) |
| 1 | டி.ஏ.பி. | 3540.150 | 121.63 |
| 2 | டி.ஏ.பி.(இறக்குமதி) | 333.00 | 4.99 |
| 3 | முயோரியேட் ஆப் பொட்டாஷ் | 11557.571 | 172.61 |
| 4 | சூப்பர் பாஸ்பேட் | 5257.150 | 25.30 |
| 5 | 17:17:17 | 9009.750 | 138.21 |
| 6 | 15:15:15 | 1030.000 | 14.02 |
| 7 | 14:28:14 | 3080.300 | 67.03 |
| 8 | 16:20:0 | 1740.500 | 22.70 |
| 9 | 20:20:0 | 4960.500 | 64.51 |
| | | மொத்தம் | 631.000 அல்லது ரூ.6.31 கோடி |

57—

**குற்றாலம் பழத்தோட்ட அருவி**

வினா 9632— **திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குற்றாலம் பழத்தோட்ட அருவி எந்தத் துறையின் பராமரிப்பில் உள்ளது?





(ஆ) பழத்தோட்ட அருவியில் ஏழை எளிய மக்களும் சென்று நீராட அனுமதி அளிக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) குற்றாலம் பழத்தோட்ட அருவி குற்றால நகரியத்தின் பாரமரிப்பில் உள்ளது.

(ஆ) பழத்தோட்ட அருவியில் தற்போது ஏழை எளிய மக்களும் நீராட அனுமதிக்கப்படுகின்றனர்.

58—

**முந்திரி ஏற்றுமதி விவரம்**

**வினா 12007—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1996-97 ஆம் ஆண்டு முந்திரி ஏற்றுமதி மூலம் எவ்வளவு ரூபாய் அன்னியச் செலாவணி கிடைத்துள்ளது?

(ஆ) 1997-98 ஆம் ஆண்டில் எவ்வளவு ஏற்றுமதி செ உத்தேசிக்கப்பட்டுள்ளது?

(இ) முந்திரி விளைச்சலைப் பெருக்க நவீன சாகுபடி முறையில் அடர்கொத்து இரகங்களைத் தமிழ்நாட்டில் பயிரிட அரசு மேற்கொண்ட நடவடிக்கை பற்றிய விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) 1996-97 ஆம் ஆண்டில் இந்தியாவிலிருந்து சுமார் 68.757 மெட்ரிக் டன் முந்திரி ஏற்றுமதி செய்யப்பட்டது. இதன் மூலம் 1,281.04 கோடி ரூபாய் அன்னியச் செலாவணி கிடைத்துள்ளது. இது தவிர, முந்திரிக் கொட்டையிலிருந்து எடுக்கப்பட்ட எண்ணெய்

(Cashewnut shell liquid) 1.350 மெட்ரிக் டன் ஏற்றுமதி செய்யப்பட்டு, 1.99 கோடி ரூபாய் அன்னியச் செலாவணி ஈட்டப்பட்டுள்ளது.

(ஆ) 1997-98 ஆம் ஆண்டிற்கு இந்தியாவிருந்து முந்திரி ஏற்றுமதி செய்வதன் மூலமாக, அன்னியச் செலாவாணியாக ரூ.1,328.49 கோடி அடைய உத்தேசிக்கப்பட்டு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

(இ) தமிழ்நாட்டில் நவீன சாகுபடி முறையில் முந்திரி
அடர்கொத்து இரகங்களைப் பயிரிட மத்திய அரசு நிதி உதவி
பெறும் திட்டமான முந்திரி அபிவிருத்தித் திட்டம் 1997-98 ஆம்
ஆண்டில் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் முந்திரி
உயர் விளைச்சல் இரக ஒட்டுச் செடிகள், புதிய பரப்பு கொண்டு
வருதல், திட்டத்தின் மூலம் 850 ஏக்கர் பரப்பிற்கு, விவசாயிகளுக்கு
விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. ஹெக்டேருக்கு ரூ 2,100 விதம்
முந்திரி உயர் விளைச்சல் ஒட்டுச் செடிகள், உரங்கள், பயிர்ப்
பாதுகாப்பு மருந்துகள் ஆகியவை விநியோகிக்கப்படுகின்றன.
இத்திட்டத்தின் மூலம் இரண்டாம் ஆண்டுக்கு தொடர் பணியின்கீழ்
வரும் முந்திரிப் பயிர்களுக்கு 1,875 ஹெக்டேர்களுக்கு, ஹெக்டேருக்கு
ரூ.1,500 மதிப்பிலான உரங்களும், பயிர்ப பாதுகாப்பு மருந்துகளும்
மற்றும் 10 சதவீதம் அளவில் போக்கு போன நடவுச் செடிகளுக்குப்
(Gap filling) புதிய ஒட்டுச் செடிகளும் வழங்கப்படுகின்றன.
இத்திட்டத்தின்கீழ் வரும் மூன்றாம் ஆண்டு முந்திரித் தோட்டங்களுக்கு,
782 ஹெக்டேர் பரப்பளவிற்கு ஹெக்டேருக்கு ரூ. 1,700 விதம்
உரங்களும் பயிர்ப் பாதுகாப்பு மருந்துகளும் விவசாயிகளுக்கு 100 சத
மானியத்தில் வழங்கப்பட்டு வருகின்றன.

முந்திரி, பூக்கும் மற்றும் காய்ப்புப் பருவத்தில் தேயிலை கொசுக்கள்
தாக்கி மகசூலை அழிக்காமல் கட்டுப்படுத்த ரூ.800 மதிப்புடைய
பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள் 100 சத மானியத்தில் வழங்கப்படுகின்றன.
இவ்வாண்டு சுமார் 3,500 ஹெக்டேரில் பயிர்ப் பாதுகாப்பு
நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

மேலும், நலிவடைந்த பழைய முந்திரித் தோட்டங்களைப் புதுப்பிக்கும்
வண்ணம் ஹெக்டேருக்கு ரூ.2,800 விதம் முந்திரி ஒட்டுச் செடிகள்,
உரங்கள் மற்றும் பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள் விவசாயிகளுக்கு
விநியோகிக்கப்படுகின்றன.



1998 மார்ச் 19]

59—

### விவசாயிகளுக்கு மருந்துகள் வழங்குதல்

*வினா* **12793—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் மானாவாரி நிலக்கடலைப் பயிரில் சில இடங்களில் சிவப்புக் கம்பளிப் புழு தாக்குதல் காரணமாக பெரும் சேதம் ஏற்படுத்தப்படுகிறது என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், விவசாயிகளுக்கு இலவசமாக மருந்துகளை அல்லது மானிய முறையில் மருந்துகளை வழங்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம். நாமக்கல் மாவட்டத்தில் ஆகஸ்ட்-செப்டம்பர்
மாதங்களில் சில கிராமங்களில் சுமார் 300 ஹெக்டேர் பரப்பில்
மானாவாரி நிலக் கடலைப் பயிரில் சிவப்புக் கம்பளிப் புழுவின்
தாக்குதல் ஏற்பட்டது. இதேபோன்று பரமத்தி வட்டாரத்திலும் சுமார்
100 ஹெக்டேர் பரப்பில் சிவப்புக் கம்பளிப் புழு தாக்குதல் இருந்தது.

(ஆ) சிவப்புக் கம்பளிப் புழுவின் தாய் அந்திப் பூச்சி
தென்பட்டதும், அதன் தாக்குதலைக் கட்டுப்படுத்தும் முறைகள் பற்றி
எடுத்துக் கூறி வேளாண்மைத் துறை களப் பணியாளர்கள் மாலைக்
கூட்டங்கள் நடத்தியும், நேரடியாக விவசாயிகளைச் சந்தித்தும்,
வானொலி மற்றும் செய்தித் தாள்கள் மூலம் விளம்பரப்படுத்தியும்
தாக்குதல் உடன் கட்டுப்படுத்தப்பட்டது. இதனால் பெரிய சேதம்
ஏற்படாவண்ணம் தடுக்கப்பட்டது. இப்புழுவினைக் கட்டுப்படுத்த
இலவசமாகவோ அல்லது மானியமாகவோ பூச்சி மருந்துகள் வழங்க
அரசுத் திட்டங்கள் ஏதும் இல்லை. ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு
முறை பின்பற்றப்பட்டது. எண்டோசல்பான், குயினல்பாஸ்,
குளோரைபிரிபாஸ் மற்றும் பெனிட்ரொதியான் ஆகிய மருந்துகளில்
ஏதேனும் ஒன்றினை உபயோகித்திட பரிந்துரைக்கப்பட்டது. தேவையான
பூச்சி மருந்துகள் தனியார் கடைகளில் இருப்பு இருந்தன.

60— [1998 மார்ச் 19

### கண்மாயை ஆழப்படுத்துதல்

**வினா 8775—திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை ஒன்றியம், கீழப்பசளை கண்மாயை மராமத்து செய்து ஆழப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

(அ) ஆம். மராமத்து மட்டும் செய்திட நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) 1997-98 ஆம் நிதி ஆண்டிற்குள் நிறைவேற்றத் திட்டமிடப்பட்டுள்ளது.

61—

### கலுங்கினைச் சீரமைத்தல்

**வினா 10022—திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், பத்மனாபபுரம் தொகுதியில் கீழ கருப்புக் கோடுகுளத்தில், தண்ணீர் பாயும் கலுங்கு சேதமடைந்து தண்ணீர் வீணாவதைத் தடுக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

கருப்புக்கோடுகுளம் கோதையாறு பாசனத் திட்டத்தின்கீழ் உள்ள பி.பி. கால்வாயின் பிரிவுகளாகிய தோட்டியோடு பிரிவிலிருந்து தண்ணீர் பெறும் குளமாகும். இக்குளத்திற்கு தண்ணீர் பாயும் வரத்துக்களில் உள்ள கலுங்கினைச் சீரமைக்கவும், பலவீனமடைந்த கரைகளில்



1998 மார்ச் 19]

தடுப்புச்சுவர் கட்டவும் ரூ. 20,000/-க்கு மதிப்பீடு தயார் செய்து ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இப்பணி விரைவில் செய்து முடிக்கப்படும்.

62—

### சாலையைச் சீர் செய்து நீட்டித்தல்

**வினா 8164—திரு. வி. அய்யலுசாமி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவில்பட்டி தொகுதி, கோவில்பட்டி-கடலையூர் சாலையில் காட்டுராமன்பட்டியிலிருந்து கடலையூர் காலனி வரையில் உள்ள சாலையைச் சீரமைக்கவும் அதை சென்னையம்பட்டி வரை நீட்டிக்கவும் அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலையில் 1. கோவில்பட்டி-கடலையூர் சாலை, 2. காட்டுராமன்பட்டி சாலை மற்றும் 3. காட்டுராமன்பட்டி-சென்னையம்பட்டி சாலை ஆகிய மூன்று சாலைகள் அடங்கியுள்ளன.

1. கோவில்பட்டி-கடலையூர் சாலை:

இச்சாலை 9.6 கி.மீ. (கி.மீ. 0/0—9/6) நீளமுடைய அரசு இதர மாவட்டச் சாலையாகும். முழுவதும் தார் தளமுடைய இச்சாலை கி.மீ. 0/0—0/4 வரை இருவழித்தட அகலத்துடனும், கி.மீ. 0/4—9/6 வரை ஒருவழித்தட அகலத்துடனும் உள்ளது. இச்சாலை கி.மீ. 8/2—9/4 வரை 1996-97 ஆம் நிதி ஆண்டில் புதுப்பிக்கப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் கி.மீ. 6/0—7/0 வரை தார் தளம் புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள பகுதிகளான கி.மீ. 0/0—6/0 கி.மீ., 7/0—8/2 மற்றும் கி.மீ. 9/4—9/6 ஆகிய 7.4 கி.மீ. நீள சாலைப் பகுதிகளை மேம்பாடு செய்ய தோராயமாக ரூ. 29.60 இலட்சம் தேவைப்படும். இப்பணி வரும் நிதியாண்டில் பராமரிப்பு நிதி ஒதுக்கீட்டினைப் பொறுத்து மேற்கொள்ள நடவடிக்கை

எடுக்கப்படும். அதுவரை இச்சாலை பகுதிகளில் சிறுசிறு பழுதுகளை நொடிகள் போட்டு சீர் செய்து சாலைப் போக்குவரத்துக்கேற்ற வகையில் பராமரிக்கப்படும்.

2. காட்டுராமன்பட்டி சாலை:

இச்சாலை கோவில்பட்டி-கடலையூர் சாலை கி.மீ. 7/8-ல் இடதுபுறம் பிரிந்து செல்கிறது. 0.60 கி.மீ. (கி.மீ. 0/0—0/6) நீளமுடைய இச்சாலை கோவில்பட்டி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த ஊராட்சி சாலையாகும். இச்சாலை முழுவதும் 1996-97 ஆம் நிதியாண்டில் தார் தளம் அமைக்கப்பட்டு உள்ளது. இச்சாலை தற்போது நல்ல நிலையில் உள்ளது.

3. காட்டுராமன்பட்டி-சென்னையம்பட்டி சாலை:

இச்சாலை கோவில்பட்டி-கடலையூர் சாலை கி.மீ. 8/0-ல் வலதுபுறம் பிரிந்து செல்கிறது. இச்சாலை 1.20 கி.மீ. (கி.மீ. 0/0—1/2) நீளமுடைய கோவில்பட்டி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த ஊராட்சி ஒன்றியச் சாலையாகும். இச்சாலை கி.மீ. 0/0—0/450 வரை 1994-95 ஆம் ஆண்டு வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் சரள் சாலையாக அமைக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள கி.மீ. 0/450—1/2 வரை தற்போது வண்டிப் பாதையாக உள்ளது. இச்சாலை கி.மீ. 0/0—0/450 வரை சீர் செய்ய தோராயமாக ரூ. 1.80 இலட்சமும் கி.மீ. 0/450—1/2 வரை சாலை அமைத்து தாரிட தோராயமாக ரூ. 3.00 இலட்சமும் ஆக மொத்தம் ரூ. 4.80 இலட்சம் தேவைப்படும். அரசின் நிதி நெருக்கடி நிலைமை காரணமாய் இப்பணிகளை அண்மைக் காலங்களில் மேற்கொள்ளும் சாத்தியக்கூறுகள் இல்லை.



## குட்டப் பட்டிக்குப் பேருந்து வசதி

**வினா 9494—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், மேச்சேரியிலிருந்து நங்கவள்ளி செல்லும் அனைத்துப் பேருந்துகளும் குட்டப்பட்டி ஊர் வழியாகச் செல்ல அரசு ஆவன செய்யுமா?

1998 மார்ச் 19]

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

மேச்சேரி-நங்கவள்ளி தடப் பகுதியில் இயக்கப்படும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், சேலம்-கோட்டம் (1)-ஐச் சேர்ந்த இரண்டு நகரப் பேருந்துகளும் குட்டபட்டி வழியாகவே இயக்கப்பட்டு வருகின்றன.

64—

**நகரப் பேருந்துகள் இயக்குதல்**

**வினா 9823—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியம், மேட்டூரில் இருந்து பொட்டனேரி இரும்பு உருக்காலை வழியாக மேச்சேரிக்கு மற்றும் தாரமங்கலத்திற்குச் செல்ல நகரப் பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

கோரிக்கை வழித் தடத்தில் பொட்டனேரியிலிருந்து குட்டப்பட்டி நால்ரோடு வரையுள்ள 3.4 கி.மீ. தூரம் மட்டுமே நேரடியாக பேருந்து வசதி பெறாத பகுதி. இதில் சிஸ்கால் இரும்பு உருக்காலைக்கு பொட்டனேரியிலிருந்து 0.8 கி.மீ. தூரம். மேட்டூரையும் மேச்சேரியையும் இணைக்கும் பிரதான சாலையில் அமைந்துள்ள பொட்டனேரி வழியாக அதிக அளவு நகரப் பேருந்துகள் மற்றும் புறநகர் பேருந்துகள் உள்ளன. இவைகள் மூலம் மேச்சேரி செல்ல பேருந்து வசதியுள்ளது.

சிஸ்கால் இரும்பு உருக்காலைக்கும் ஏர்வாடிக்கும் மத்தியில் ஆளில்லாத இரயில்வே லைன் கிராசிங் உள்ளது. இது பயணிகள் பேருந்து இயக்கத்திற்கு ஆபத்தானது.

ஏர்வாடி கிராமம் குட்டப்பட்டி நால்ரோட்டிலிருந்து 0.8 கி.மீ. தூரத்தில் உள்ளது. மேச்சேரியையும் நங்கவள்ளியையும் இணைக்கும் பிரதான சாலையில் அமைந்துள்ள குட்டப்பட்டி நால்ரோடு வழியாக

[1998 மார்ச் 19

மேச்சேரிக்கு நகர மற்றும் புறநகர் பேருந்துகள் மூலம் தினசரி 50 நடைகளுக்குமேல் இயக்கப்படுகின்றன. ஏர்வாடி கிராம மக்கள் இப்பேருந்துகள் மூலம் மேச்சேரி செல்ல போதிய பேருந்து வசதி பெற்றுள்ளனர்.

தவிரவும், அரசு ஆணையின்படி, பேருந்து வசதி பெறும் சாலைகளிலிருந்து ஒரு கி.மீ. தொலைவில் உள்ள இரும்பு உருக்காலையும், ஏர்வாடி கிராமமும் நேரடியாகவே பேருந்து வசதி பெற்றுள்ளதாகக் கருதப்படுகிறது. இதே ஊர்கள் வழியாக தாரமங்கலத்திற்கு செல்லும் வழித் தடத்தின் நீளம் 38.0 கி.மீ. தாரமங்கலமும் மேட்டூரும் ஏற்கெனவே பேருந்து வசதி பெற்ற ஊர்கள். மோட்டார் வாகன விதிகளின்படி ஏற்கெனவே பேருந்து வசதி பெற்று வரும் ஊர்களை இணைத்து 30.0 கி.மீ.-க்கு அதிகமான தூரத்தில் நகரப் பேருந்து இயக்க அனுமதி இல்லை. தவிரவும் மேச்சேரியிலிருந்து குட்டப்பட்டி நால்ரோடு, மாதநாயக்கன்பட்டி, தொளசம்பட்டி வழியாக தாரமங்கலத்திற்கு தினசரி 20 நடைகள் வீதம் புறநகர் பேருந்துகளும் இயக்கப்பட்டு வருகின்றன. மேற்கூறிய காரணங்களால் கேட்கப்பட்ட வழித் தடங்களில் நகரப் பேருந்துகளை இயக்கும் கருத்துரு எதுவும் இல்லை.

65—

### பேருந்து வழித்தடம் நீட்டிப்பு செய்தல்

**வினா 9829—திரு. ப. கோவிந்தன்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், பெரியேரிப்பட்டியில் கிராமப் பகுதிக்குச் செல்லும் தடம் எண் 6 ஏ-யை சேலம்—தொளசம்பட்டி (வழி) வேடப்பட்டி, பெரியேரிப்பட்டி என நீட்டிப்பு செய்ய அரசு ஆவன செய்யுமா?

*விடை—*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

சேலம் தொளசம்பட்டி (வழி) வேடப்பட்டி, பெரியேரிப்பட்டியின் தட நீளம் 33.8 கி.மீ. ஏற்கெனவே பேருந்து வசதி பெற்று வரும்



1998 மார்ச் 19]

சேலம் மற்றும் தொளசம்பட்டி ஆகிய இரு முனைகளை இணைத்து 30.0 கி.மீ.-க்கு அதிகமுள்ள தடத்திற்கு மோட்டார் வாகன விதிமுறைகளின்படி நகரப் பேருந்து இயக்க அனுமதியில்லை. மேலும் இதில் நேரடியாக பேருந்து வசதி பெறாத பகுதியான வேடப்பட்டி-பெரியேரிப்பட்டி (வழி) பூதலூர், பாலிக்கடை தடப் பகுதியின் நீளம் 2.0 கி.மீ. ஆகும்.

சேலம்-வேடப்பட்டி (வழி) லட்சுமாயர், தாரமங்கலம் தடத்தில் ஒரு நகரப் பேருந்து தினசரி 16 நடைகள் மற்றும் ஓமலூர்-மேச்சேரி (வழி) பெரியேரிப்பட்டி தடத்தில் ஒரு நகரப் பேருந்து தினசரி 8 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. அரசின் வழிகாட்டுதல்களின்படி பேருந்துகள் இயக்கப்படும் வழித் தடங்களிலிருந்து 1.0 கி.மீட்டருக்குள் இருக்கும் ஊர்கள் பேருந்து வசதி பெற்றதாகக் கருதப்பட வேண்டும். இதன் அடிப்படையில் பெரியேரிப்பட்டியிலிருந்து 0.4 கி.மீட்டரில் உள்ள பூதலூர் பேருந்து வசதி பெற்றதாகக் கருதப்படுகிறது. அதேபோல பெரியேரிப்பட்டி மற்றும் வேடப்பட்டியிலிருந்து 1.0 கி.மீட்டருக்குள் இருக்கும் பாலிக்கடை பேருந்து வசதி பெற்றதாகவே கருதப்படுகிறது. எனவே கேட்கப்பட்ட வழித்தடத்தில் தட நீட்டிப்பு செய்யும் நிலை எழவில்லை.

66—

### புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்குதல்

**வினா 9830—திரு. ப. கோவிந்தன்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மாவட்டம், ஓமலூர் ஒன்றியம், ஊ. மாரமங்கலம் ஊராட்சிப் பகுதிகளுக்குச் செல்ல சேலத்திலிருந்து ஓமலூர், திண்டமங்கலம், பனங்காட்டூர் வழியாக பஞ்சுகாளிப்பட்டி வரை புதிய வழித்தடத்தில் நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

*விடை—*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

கோரிக்கை வழித்தடத்தின் ஒரு பகுதியை உள்ளடக்கி, பச்சினம்பட்டி, திண்டமங்கலம், பாலிக்கடை, பஞ்சுகாளிப்பட்டி, கோவிலூர் வழியாக மேச்சேரிக்கு ஒரு நகரப் பேருந்து மூலம் நான்கு நடைகள் இயக்கப்பட்டு

[1998 மார்ச் 19

வருகின்றன. இப்பேருந்தில் பயணிகள் பிரயாணம் 26 விழுக்காடு மட்டுமே. எனவே, தற்போதைய பேருந்து வசதி பயணிகளின் தேவையை நிறைவு செய்வதாக உள்ளது.

சேலத்திலிருந்து ஓமலூர், பஞ்சுகாளிப்பட்டி வழியாக பல்வேறு ஊர்களுக்கு ஏழு நகரப் பேருந்துகள் மூலம் 72 நடைகள் நேரிடையாக இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், சேலத்திலிருந்து ஓமலூர் வரை அதிக எண்ணிக்கையில் பேருந்து வசதி அளிக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் வினாவில் கேட்கப்பட்ட பஞ்சுகாளிப்பட்டிக்கு நேரடியாகவும், பகுதி வாரியாகவும் பேருந்து வசதி அளிக்கப்பட்டுள்ளது. திண்டமங்கலம் என்ற ஊர் ஓமலூர்-மேச்சேரி பிரதான சாலையிலிருந்து சுமார் 0.3 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளதால் இந்த ஊர் மக்கள் பாவிக்கடை வந்து பேருந்து வசதியைப் பயன்படுத்த வாய்ப்பு உள்ளது.

எனவே, கேட்கப்பட்ட வழித்தடத்தில் ஏற்கெனவே அளிக்கப்பட்ட பேருந்து வசதியே போதுமானது என்றும், இவ்வழித்தடத்தில் நேரிடையாக பேருந்து வசதி அளிக்கத் தேவை நிலவவில்லை என்றும் கருதப்படுகிறது.

67—

**அருந்ததியர் குடியிருப்பு வழியாக பேருந்து இயக்குதல்**

**வினா 10175—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, கண்டர்குலமாணிக்கம் ஊராட்சி, ஆண்டிப்பட்டி மற்றும் அருந்ததியர் குடியிருப்பு வழியாக பேருந்து எதுவும் செல்வது இல்லை என்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், ஆட்டையாம்பட்டி முதல் வேம்படிதாளம் வரை செல்லும் பேருந்துகளையும், ஆட்டையாம்பட்டி முதல் எடப்பாடி வரை செல்லும் பேருந்துகளையும் ஆண்டிப்பட்டி மற்றும் அருந்ததியர் தெரு வழியாக இயக்க அரசு ஆவன செய்யுமா?



1998 மார்ச் 19]

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) கோரிக்கையில் தெரிவிக்கப்பட்ட ஆண்டிப்பட்டி கிராமம் (பெரிய ஆண்டிப்பட்டி என்றும் அழைக்கப்படுகிறது) மற்றும் அருந்ததியர் குடியிருப்பு முதலான பகுதிகள் தற்போது நகர மற்றும் புறநகரப் பேருந்துகள் இயக்கப்படும் ஆட்டையாம்பட்டி, காகாபாளையம் சாலையில் அமைந்துள்ள கண்டர்குலமாணிக்கம் என்ற இடத்தில் இருந்து 0.7 கி.மீ. தொலைவிலும், நவாப்மேடு என்ற இடத்தில் இருந்து 0.6 கி.மீ. தொலைவிலுமே உள்ளன. அரசு விதிகளின்படி பேருந்து வசதி பெற்றுள்ள சாலைகளிலிருந்து ஒரு கி.மீ. தூரம் வரை அமைந்துள்ள கிராமங்கள் பேருந்து வசதி பெற்றவையாகவே கருதப்படவேண்டும். எனவே, ஆண்டிப்பட்டி மற்றும் அருந்ததியர் குடியிருப்பு முதலான பகுதிகள் பேருந்து வசதி பெற்றுள்ளதாகக் கருதப்படுகின்றன.

(ஆ) அரசு விதிகளின்படி இவ்வூர்கள் பேருந்து வசதி பெற்றவைகளாக உள்ளதால் இவ்வூர்கள் வழியாக பேருந்துகள் இயக்கும் தேவை நிலவவில்லை.

68—

**அரசுப் பேருந்து இயக்குதல்**

**வினா 10176—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடியிலிருந்து போடிநாயக்கன்பட்டி, தோரணம்பட்டி, இராயணம்பட்டி தொப்பக்காடு, எட்டிகுட்டைமேடு வழியாக இளம்பிள்ளை வரை அரசுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

கோரிக்கை வழித்தடத்தில் கீழ்க்கண்ட பகுதியில் மட்டுமே நேரிடையாக பேருந்து இயக்கப்படவில்லை. (மொத்தம் மூன்று கி.மீ. தூரம்)

[1998 மார்ச் 19

| | | |
|---|---|---|
| இராயணம்பட்டி | .. | 0.0 |
| தொப்பக்காடு | .. | 1.0 கி.மீ. |
| கோம்பைக்காடு | .. | 2.0 கி.மீ. (இருபது வீடுகள்) |
| எட்டிக்குட்டைமேடு | .. | 3.0 கி.மீ. |

மேற்கூறிய மூன்று கி.மீ. தூரமும், பராமரிக்கப்படாத மிகுந்த சேதாரமடைந்த பெரும் குழிகள் நிரம்பி மாட்டுவண்டி செல்லக்கூடிய சாலையாக உள்ளது. சாலை உள்ள நிலையில் கனரக பயணிகள் பேருந்து இயக்கத்திற்கு ஏற்றதாக இல்லை. பேருந்து வசதி பெறாத பகுதிகளில் இருபுறமும் ஒரு கி.மீ. தொலைவுக்கு நகரப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. அரசு வழிகாட்டுதல்களின்படி பேருந்துகள் இயக்கப்படும் வழித்தடங்களிலிருந்து ஒரு கி.மீ. தூரத்திற்குள் அமைந்துள்ள கிராமங்கள் நேரிடையாக பேருந்து வசதி பெற்று வருபவையாகக் கருதப்படவேண்டும். எனவே கோம்பைக்காடு கிராமமும் ஏனைய பகுதிகளும் நேரடியாகவே பேருந்து வசதி பெற்று வருபவைகளாகக் கருதப்படுகின்றன. பிற பகுதிகள் அனைத்தும் நகரப் பேருந்துகள் மூலம் பேருந்து வசதி பெற்று வருகின்றன. அனைத்துப் பகுதிகளும் பேருந்து வசதி பெற்று வருவதால், இவ்வழித்தடத்தில் கூடுதல் பேருந்து இயக்கும் உத்தேசம் இல்லை.

69—

### சேலம் மாவட்டத்தில் கூடுதல் நகரப் பேருந்துகள்

**வினா 10299—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், மேச்சேரி ஒன்றியம், அரங்கனூர் கிராமப் பொதுமக்கள், ஊராட்சி ஒன்றிய தலைமையிடமான மேச்சேரிக்குச் செல்லும் வகையில் ஓமலூர்-மேச்சேரி (வழி) தாராபுரம், அரங்கனூர், செம்மனூர் தடத்தில் ஒரு புதிய பேருந்து வழித்தடம் அனுமதித்து நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?



1998 மார்ச் 19]

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

அரங்கனூர் கிராமப் பொதுமக்கள் மேச்சேரிக்குச் செல்ல நேரடியாகவே கீழ்க்கண்ட நகரப் பேருந்துகள் நெரிசல் நேர (peak hours) நடைகள் காலையிலும், மாலையிலும் இயக்கப்படுகின்றன.

தடம் எண் 24, மேட்டூர்-அரங்கனூர் (வழி) மேச்சேரி, காமனேரி, சிந்தாமணியூர், செம்மாண்டப்பட்டி-நெரிசல் நேர 4 நடைகளில் பயணிகள் பிரயாணம் 38 சதவீதம் மட்டுமே உள்ளது. இதிலிருந்து தற்போது அளிக்கப்படும் பேருந்து வசதி பயணிகள் தேவையை நிறைவு செய்வதாகக் கருதப்படுகிறது. அரங்கனூரிலிருந்து ஒன்றரை கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள செம்மனூர் வழியாக இதே நகரப் பேருந்து மேட்டூரிலிருந்து (மேச்சேரி, காமனேரி, செம்மனூர் வழியாக) சின்ன திருப்பதிக்கு தினசரி ஆறு நடைகள் இயக்கப்படுகின்றது. அரங்கனூர் கிராம மக்கள் இந்தப் பேருந்தையும் பயன்படுத்தும் வாய்ப்பு உள்ளது.

கோரிக்கையில் கேட்கப்பட்ட வழித்தடத்தில் நேரடியாக நகரப் பேருந்து வசதி இல்லையென்றாலும், இவ்வழித்தடத்தில் அனைத்து பகுதிகளுமே பகுதிவாரியாக கீழ்க்கண்ட நகரப் பேருந்துகளால் ஓமலூருடன் இணைக்கப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| (அ) | தடம் எண் 79, 97 நகரப் பேருந்துகள். சேலம்-ஒண்டிவரனூர் (வழி) ஓமலூர், காமனேரி, செம்மனூர், மரக்கோட்டை | - 24 நடைகள். |
| (ஆ) | தடம் எண் 58ஏ—நகரப் பேருந்து. சேலம்-அரங்கனூர், செம்மனூர் (வழி) ஓமலூர், தாராபுரம், செம்மாண்டப்பட்டி | - 14 நடைகள். |
| (இ) | தடம் எண் 58—நகரப் பேருந்து. சேலம்-பெரியபட்டி (வழி) ஓமலூர், தாராபுரம், செம்மாண்டப்பட்டி | - 12 நடைகள். |

மேற்கூறிய பேருந்துகள் மட்டுமல்லாது, காமனேரி மேச்சேரி தடப்பகுதி அதிக அளவில் நகர மற்றும் புறநகரப் பேருந்துகளால் பேருந்து வசதி பெற்றுவருகிறது. மேற்கூறியவாறு அரங்கனூர் கிராமம் நேரடியாகவும் கேட்கப்பட்ட வழித்தடம், பகுதி வாரியாகவும் போதுமான அளவு பேருந்து வசதி பெற்று வருவதால் புதிய நகரப்

[1998 மார்ச் 19

பேருந்து இயக்க வேண்டிய அவசியம் நிலவவில்லை.

70—

### காலை, மாலை பள்ளி நேரங்களில் பேருந்தினை இயக்குதல்

**வினா 10307—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியம், வெள்ளார் கிராமப் பள்ளிக்கு செல்லும் சிறுவர்கள் பயனடையும் வகையில், தொப்பூர்-மேச்சேரி இடையே காலையிலும், மாலையிலும் பேருந்தினை இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

சட்டமன்ற உறுப்பினரின் கோரிக்கையை ஏற்று மேச்சேரி - தொப்பூருக்கு இடையே வெள்ளார் கிராமப் பள்ளிக்குச் செல்லும் சிறுவர்கள் பயனடையும் வகையில் மேச்சேரி வழியாக இயக்கப்படும் நகரப் பேருந்துகள் தடம் 8 மற்றும் 10-ஐ கீழ்க்கண்டவாறு காலை, மாலை பள்ளி நேரங்களில் 3-10-1997 முதற்கொண்டு இயக்கப்பட்டு வருகிறது.

| மேச்சேரி | | | | தொப்பூர் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| வரும் | நேரம். | புறப்படும் | நேரம். | வரும் | நேரம். | புறப்படும் | நேரம். |
| 19 | 20 | 07 | 35 | 08 | 25 | 08 | 30 |
| 17 | 45 | 16 | 30 | 17 | 03 | 17 | 10 |

71—

### பேருந்தை நீட்டித்து இயக்குதல்

**வினா 10378—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



1998 மார்ச் 19]

சேலம் மாவட்டம், சேலத்திலிருந்து இயங்கும் ஓ.11 பேருந்தினை நீட்டித்து சிங்கால் மெயின்கேட் வழியாக பொட்டனேரி வரை இயக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

இவ்வினாவில் சிங்கால் என குறிப்பிடப்பட்டிருப்பது சிஸ்கால் என அழைக்கப்படுகிறது. (SISCOL தேனிரும்பு தொழிற்சாலை) வினவப்பட்ட ஓ.11 நகரப் பேருந்து ஓமலூரை மையமாக வைத்து, விருதாசம்பட்டி, சந்நியாசிகுண்டு என இரண்டு வழித் தடங்களில் இயக்கப்பட்டு வருகிறது. விருதாசம்பட்டி நடையினை சிஸ்கால் மெயின்கேட் வழியாக பொட்டனேரி வரை தடம் மாற்றினால், விருதாசம்பட்டி, தற்போது ஓ.11 பேருந்து மூலம் பெற்று வரும் பேருந்து வசதிகளில் ஆறு நடைகளை இழக்க நேரிடும். மேலும், விருதாசம்பட்டி கிராம மக்கள் ஓமலூருக்கு செல்ல நேரிடை பேருந்து வசதியை இழப்பார்கள். இது அப்பகுதி மக்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தும். இதனால் ஆட்சேபணை எழக்கூடும். கேட்கப்பட்ட வழித்தடத்தில் நேரடியாக பேருந்து வசதி பெறாத ஏர்வாடி கிராமம் சிஸ்கால் இரும்பு தொழிற்சாலை தற்போது பேருந்துகள் இயக்கப்பட்டுவரும் குட்டப்பட்டி நால்ரோட்டிலிருந்தும் பொட்டனேரியிலிருந்தும் 0.8 கி.மீ. தொலைவில் உள்ளது. அரசு ஆணையின்படி பேருந்துகள் இயக்கப்படும் சாலைகளிலிருந்து ஒரு கி.மீ. தொலைவுக்குள் அமைந்துள்ள கிராமங்களும், பகுதிகளும் நேரடியாக பேருந்து வசதி பெற்றதாகக் கருதப்பட வேண்டும்.

ஏர்வாடிக்கும், சிஸ்கால் தேனிரும்பு தொழிற்சாலைக்கும் இடையே ஆளில்லாத, கேட் இல்லாத ரெயில்வே கிராசிங் உள்ளது. இது பயணிகள் பேருந்து இயக்கத்திற்குப் பாதுகாப்பானது அல்ல.

மேற்கூறிய காரணங்களால் கேட்கப்பட்டவாறு தடமாறுதல் செய்ய சாத்தியக்கூறு இல்லை.

72— [1998 மார்ச் 19

## ஓமலூரில் நகரப் பேருந்து இயக்குதல்

**வினா 10381—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், மேச்சேரி ஒன்றியம், பானாபுரம் கிராமம், குதிரைகாரனூர், செங்காட்டூர் வழியாக மேச்சேரி—மேட்டூர் செல்ல ஓமலூரில் இருந்து ஒரு நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

கேட்கப்பட்ட ஊர்கள் வழியாக அமையும் மிகக் குறைந்த தொலைவு கொண்ட வழித்தடத்தின் நீளம் 45.4 கி.மீ. மேலும் இவ்வழித்தடத்தில் அனைத்து பகுதிகளும் கீழ்க்கண்டவாறு நகரப் பேருந்து வசதி பெற்றுள்ளன.

ஓமலூர்—தொளசம்பட்டி தடப்பகுதி:

1. சேலம்—தொளசம்பட்டி (வழி) ஓமலூர். பாலிக்கடை தடத்தில் இயக்கப்படும் 98, 98ஏ எண் கொண்ட இரு நகரப் பேருந்துகள் மூலம் 24 நடைகள்.

2. ஓமலூர்—மேச்சேரி (வழி) தொளசம்பட்டி, செங்காட்டூர் வழித் தடத்தில் இயக்கப்படும் 08 எண் கொண்ட நகரப் பேருந்து மூலம் நான்கு நடைகள்.

தொளசம்பட்டி-மேச்சேரி பிரிவு சாலை தடப்பகுதி:

ஓமலூர்—மேச்சேரி (வழி) திண்டமங்கலம், தொளசம்பட்டி, கோவிலூர் பானாபுரம், செங்காட்டூர், குதிரைக்காரனூர் வழித்தடத்தில் இயக்கப்படும் 08 எண் கொண்ட நகரப் பேருந்து மூலம் நான்கு நடைகள்.

செங்காட்டுப் பிரிவு சாலை—மேட்டூர் தடப்பகுதி:

1. ஓமலூர்—மேச்சேரி; மற்றும்



1998 மார்ச் 19]

2. மேச்சேரி—மேட்டூர் வழித்தடங்களில் இயக்கப்படும் பல்வேறு நகரப் பேருந்துகள் மூலம் மேற்கூறியவாறு அனைத்துப் பகுதிகளிலும் பேருந்து வசதி கொண்டுள்ள இவ்வழித்தடத்தில் நகரப் பேருந்துகள் இயக்க மோட்டார் வாகன விதிகளின்படி அனுமதி இல்லை. எனவே, வினவப்பட்ட வழித்தடத்தில் நகரப் பேருந்து இயக்கும் சாத்தியக்கூறு இல்லை.

73—

## பேருந்து கூடு கட்டும் தொழிற்சாலை

**வினா 10479—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசு சார்பாக துவங்கப்பட இருக்கும் பேருந்து கூடு கட்டும் தொழிற்சாலைகளில் ஒன்றை சேலம் மாவட்டம் ஓமலூரில் துவங்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

அரசு சார்பாக பேருந்து கூடு கட்டும் தொழிற்சாலைகள் கீழ்க்கண்ட இடங்களில் அமைப்பதாக முடிவு செய்யப்பட்டுள்ளது :

1. சென்னையில் குரோம்பேட்டை

2. பொள்ளாச்சி

3. விழுப்புரம்

4. நாகர்கோவில்

2. எனவே, சேலம் மாவட்டம், ஓமலூரில் அரசு பேருந்து கூடு கட்டும் தொழிற்சாலை துவங்க வாய்ப்பில்லை.

74— [1998 மார்ச் 19

### ஒட்டன்சத்திரத்தில் பணிமனை கட்டுதல்

**வினா 10503—திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டன்சத்திரத்தில் அரசு போக்குவரத்துக் கழகத்தின் பணிமனைக்கு நிரந்தரக் கட்டடம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) ஒட்டன்சத்திரத்தில் 3.61 ஏக்கர் நிலத்தில் ஒரு பணிமனை கட்டுவதற்கு 19-8-1981 ஆம் நாளன்று நில எடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. நில உரிமையாளர்கள் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து இடைக்கால தடை உத்தரவு பெற்றுள்ளதால் நில எடுப்பு நடவடிக்கை நிலுவையில் உள்ளது. 1-12-1983 முதல் பழநி-திண்டுக்கல் ரோட்டில் பெட்ரோல் பங்க் அருகில் பேருந்து நிலையத்திலிருந்து ஒரு கி.மீ. தொலைவில் சர்வே எண் 36-இல் வாடகை இடத்தில் தற்காலிக வசதிகளோடு ஒரு சிறிய பணிமனை அமைக்கப்பட்டு இயங்கி வருகிறது. நில எடுப்பு மூலம் நிலம் கிடைத்த பின்னரே, நிரந்தரமான கட்டடம் கட்ட இயலும்.

75—

### திருவண்ணாமலை, செங்கம் வழியாக பெங்களூருக்கு பேருந்து இயக்குதல்

**வினா 11342—திரு. கொ.வீ. நன்னன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) சென்னையிலிருந்து பெங்களூர் செல்லும் பேருந்துகளில் சிலவற்றை திருவண்ணாமலை, செங்கம் வழியாக இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) சென்னையிலிருந்து திருவண்ணாமலை, செங்கம் வழியாக இயக்கப்படும் தடத்தின் நீளம் 395 கி.மீ. இத்தடம் சுற்றுத் தடமாகும். சென்னையிலிருந்து பெங்களூருக்கு நேரிடையாகப் பயணம் செய்யும் பயணிகள் இச்சுற்றுத் தடத்தில் பயணம் செய்ய விரும்பமாட்டார்கள். இத்தடத்தினை இயக்குவது பொருளாதார ரீதியில் சாத்தியமில்லை. எனவே இத்தடத்தினை இயக்க இயலாது.

(ஆ) வினா எழவில்லை.

76—

### கூடுதல் பேருந்து இயக்கும் திட்டம்

**வினா 11344—திரு. கொ.வீ. நன்னன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையிலிருந்து திருவண்ணாமலைக்கு செல்லும் பயணிகளின் கூட்டம் அதிகமாக இருக்கும் காரணத்தால் அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்து எண் 122 பி.பி. மற்றும் 122 சாதாரண பேருந்துகளின் எண்ணிக்கையை அதிகரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், விழுப்புரம் (கோட்டம்-1)ஐச் சார்ந்த பேருந்துகள் தடம் எண் 122

திருவண்ணாமலை-சென்னை வழித்தடத்தில் 26 பேருந்துகள் மூலம் நாளொன்றுக்கு 90 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், கள்ளக்குறிச்சி, மோத்தக்கல் போன்ற ஊர்களிலிருந்து திருவண்ணாமலை வழியாக சென்னைக்கு 14 பேருந்துகள் மூலம் நாளொன்றுக்கு 25 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும் இத்தடத்தில் பயணிகளின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு கூடுதல் பேருந்து இயக்கும் திட்டம் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) பிப்ரவரி 1998 முதல் கூடுதலாக ஆறு நடைகள் மூலம் திருவண்ணாமலைக்கும் சென்னைக்கும் இடையே கூடுதல் பேருந்து வசதி அளித்திட திட்டமுள்ளது.

77—

**பெண்ணாகரம் தொகுதியில் நகரப் பேருந்து இயக்குதல்**

**வினா 11529—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி ஏலகிரி ஊராட்சி, ஓமல்நத்தம், சென்றாயன் கொட்டாம், முத்தம்பட்டி, ஈச்சம்பட்டி வழியாக தருமபுரியில் இருந்து, ஏர்ரப்பட்டிக்கு புதிய நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): கோரிக்கை இடத்தில் முத்தம்பட்டி முதல் தண்டுகாரம்பட்டி வரையுள்ள 4 கி.மீ. தூரம் சாலை பேருந்து செல்ல இயலாத நிலையில் மிகவும் மோசமாக உள்ளது. எனவே தற்போதைய நிலையில் பேருந்து இயக்கிட இயலாது.



78—

**புதிய நகரப் பேருந்து இயக்குதல்**

**வினா 11531—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், சேலத்திலிருந்து கே.ஆர். தோப்பூர் கோனகப்பாடி, குள்ளம்பூசாரியூர், அத்திக்காட்டனூர், போத்தனூர் வழியாக தாரமங்கலம் வரை புதிய நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

கோரிக்கை வழித்தடத்தில் போத்தனூரில் துவங்கி அத்திக்காட்டனூர் காலனி, அத்திக்காட்டனூர் ஆகிய ஊர்கள் வழியாக தாரமங்கலம், இரும்பாலை பிரதான சாலையை அடையும் 2.8 கி.மீ. தூரம் மட்டுமே பேருந்து வசதி பெறாதது. இதில் அமைந்துள்ள ஜல்லிசாலை, மிகுந்த சேதாரமடைந்தும் பெரிய குழிகளுடனும் பராமரிக்கப்படாமல், கனரக பயணிகள் பேருந்து இயக்கத்திற்கு ஏற்றதாக இல்லை. தற்போது சேலத்திலிருந்து கே.ஆர். தோப்பூர், கோனகப்பாடி குள்ளம்பூசாரியூர், போத்தனூர் வழியாக தாரமங்கலத்திற்கு நகரப் பேருந்து எண் 86 மூலம் தினசரி எட்டு நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. சேலத்திலிருந்து கே.ஆர். தோப்பூர் பிரிவு. அணைமேடு. அத்திக்காட்டனூர் பிரிவு வழியாக தாரமங்கலத்திற்கு அதிக அளவில் நகரப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. இந்தப் பேருந்து இயக்கப்படும் சாலையிலிருந்து 0.8 கி.மீ. தொலைவிலேயே அத்திக்காட்டனூர் கிராமம் அமைந்துள்ளது. எனவே, இக்கிராம மக்கள் மேற்கூறிய பேருந்துகளைப் பயன்படுத்தும் வாய்ப்பு உள்ளது. தவிரவும், அரசு வழிகாட்டுதல்களின்படி பேருந்து இயக்கப்படும் வழித்தடங்களில் இருந்து ஒரு கி.மீ. தூரத்திற்குள்ளேயே உள்ள அத்திக்காட்டனூர் கிராமம் பேருந்து வசதி பெற்றதாகவே கருதப்படுகிறது. எனவே, கோரிக்கை வழித்தடத்தில் நகரப் பேருந்து இயக்கும் உத்தேசம் ஏதும் இல்லை.

79— [1998 மார்ச் 19

### தடத்தை மாற்றி பேருந்தை இயக்குதல்

**வினா 11542—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரத்திலிருந்து செல்லும் நகரப் பேருந்து பருவதனஅள்ளி, தூவஅள்ளி, ஆனைக்கல்லானூர், மோட்டுப்பட்டி வழியாக செல்ல அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) பெண்ணாகரத்திலிருந்து தருமபுரி செல்லும் நகரப் பேருந்தை பருவதனஅள்ளி, தூவஅள்ளி, ஆனைக்கல்லானூர், மோட்டுப்பட்டி வழியாக இயக்கினால் தடத்தின் நீளம் 35 கிலோ மீட்டர்கள் ஆகிறது. தடத்தின் நீளம் 30 கிலோ மீட்டருக்கு அதிகமாக உள்ள காரணத்தாலும், தருமபுரி ஏற்கெனவே பேருந்து வசதி பெற்றுள்ள காரணத்தாலும் நடைமுறையிலுள்ள தமிழ்நாடு மோட்டார் வாகன விதிப்படி தடத்தை மாற்றி இயக்கிட இயலாத நிலை உள்ளது.

(ஆ) வினா எழ வாய்ப்பில்லை.

80—

### ஒசூர் செல்ல பேருந்து

**வினா 11553—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், நெருப்பூரிலிருந்து ஒசூர் செல்ல பேருந்து இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், பேருந்தை இயக்க அரசு ஆவன செய்யுமா?



1998 மார்ச் 19]

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தற்போது நெருப்பூரிலிருந்து ஒசூருக்கு நேரடி பேருந்து கிடையாது. ஆனால், பெண்ணாகரத்திலிருந்து ஒசூருக்கு பேருந்துகள் இயங்கி வருகின்றன. பெண்ணாகரத்திலிருந்து நெருப்பூர் 25 கி.மீ. தூரத்தில் உள்ளது. நெருப்பூரிலிருந்து பெண்ணாகரத்திற்கு 2 நகரப் பேருந்துகள் மூலம் 16 நடைகளும், 1 புறநகர் பேருந்து மூலம் 6 நடைகளும் இயக்கப்படுகின்றன. மேற்படி பேருந்துகள் மூலம் பெண்ணாகரம் வரை பயணம் செய்து பெண்ணாகரம் வழியாக ஒசூர் செல்லும் பேருந்துகளில் ஒசூர் செல்லலாம். நெருப்பூரிலிருந்து ஒசூருக்கு நேரடி பேருந்து இயக்கிட போதிய பயணிகள் கொள்ளளவு கிடையாது என்கின்ற காரணத்தால் நெருப்பூரிலிருந்து ஒசூருக்கு நேரடி புறநகரப் பேருந்து இயக்கிட இயலாது.

81—

### மேச்சேரி செல்ல பேருந்து

**வினா 11600—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரத்திலிருந்து மேச்சேரி செல்லும் பேருந்து பருவதனஅள்ளி, ஆனைக்கல்லானூர் மோட்டுப்பட்டி வழியாக மேச்சேரி செல்ல பேருந்துவிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) தற்போது பெண்ணாகரத்திலிருந்து மேச்சேரிக்கு இயங்கி வரும் தடத்தின் நீளம் 43 கிலோ மீட்டர்கள். இதை பருவதனஅள்ளி, ஆனைக்கல்லானூர், மோட்டுப்பட்டி வழியாக மேச்சேரிக்கு இயக்கினால் தடத்தின் நீளம் 48 கி.மீ. ஆகிறது. மாற்றி இயக்கிட கோரியுள்ள தடம் சுற்றுத் தடமாகும். இத்தடத்தில் பேருந்து இயக்கினால் பெண்ணாகரத்திலிருந்து மேச்சேரி செல்ல வேண்டிய பயணிகள் யாரும் பயணம் செய்யமாட்டார்கள் என்கிற காரணத்தினால் மாற்றி இயக்கிட இயலாத நிலை உள்ளது.

(ஆ) வினா எழவில்லை.

82—

### சாலை விபத்தில் உயிரிழந்தோர் விபரம்

**வினா 11847—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழநாட்டில் 1996-97, 1997-98 வரையிலும் சாலை விபத்தில் எவ்வளவு பேர் உயிர் இழந்திருக்கிறார்கள்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

1996 - 9,028

1997 - 3,985

(30-06-1997 முடிய)

83—

### போக்குவரத்துப் பணிமனை துவங்குதல்

**வினா 12911—திரு. இ.ஜி. சுகவனம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பர்கூர் தொகுதி, போச்சம்பள்ளி வட்டத்தில் வட்டத் தலைமையிடத்தை மையமாகக் கொண்டு போக்குவரத்துப் பணிமனை தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) போச்சம்பள்ளி வட்டத் தலைமையிடத்தை மையமாகக் கொண்டு போச்சம்பள்ளியில் பணிமனை தொடங்க செயற்குறிப்பு ஏதுமில்லை



(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

84—

### வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்குப் புதிய கட்டடம்

**வினா 8683—திரு. அ. அசோகன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் தொகுதி, கீழ்வேளூர் வட்டம், ஆதமங்கலம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்குப் புதிய கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ): திருவாரூர் தொகுதி, கீழ்வேளூர் வட்டம், ஆதமங்கலம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்கு மூன்று கட்டடங்கள் சொந்தமாக உள்ளன.

1. ஆதமங்கலம்—கிடங்குக் கட்டடம் (தற்போது இதில் அலுவலகம் நடைபெற்று வருகிறது).

2. இள்ளுக்குடி—கிடங்குக் கட்டடம்.

3. வலிவலம்—கிடங்குக் கட்டடம்.

மேற்கண்ட கட்டடங்கள் ஏற்கெனவே பழுதுபார்க்கப்பட்டு நல்ல நிலையில் உள்ளதால் இவற்றை தற்பொழுது பழுதுபார்க்கும் அவசியம் எழவில்லை. வலிவலம் கிராமத்தில் வங்கிக்குச் சொந்தமான 14 சென்ட் பரப்பளவுள்ள அடிமனை உள்ளது. இதில் ஏற்கெனவே உள்ள கிடங்குக் கட்டடம் போக எஞ்சியுள்ள இடத்தில் புதிய கிளைக்கான அலுவலகக் கட்டடம் கட்ட வங்கி உத்தேசித்துள்ளது. இதற்கான பிரேரணை பெறப்பட்டதும் தனியே நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

85— [1998 மார்ச் 19

**நகைக் கடனுக்கான வட்டியைக் குறைத்தல்**

**வினா 9205—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூட்டுறவு வங்கிகளில் வழங்கப்படும் நகைக் கடனுக்கான வட்டி 16.5% ஆண்டு வட்டியை 15% ஆகக் குறைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): நகையீட்டுக் கடன்களுக்கான வட்டி விகிதம் வினாவில் குறிப்பிட்டுள்ளவாறு 16.5% இல்லை. கூட்டுறவு வங்கிகளில் நிதி ஆதாரங்களுக்கேற்ப 18.5% முதல் 19% வரை நகையீட்டுக் கடன்களுக்கு வட்டி வசூலிக்கப்படுகிறது. கூட்டுறவு வங்கிகள் சேவை நோக்குடன் செயல்பட்டு வருகிறபடியால், இதர வங்கிகளைவிட வைப்புத் தொகைகளுக்கு கூடுதலாக வட்டி அளித்து பொதுமக்களுக்கு சேவை புரிந்து வருகின்றன. நகைக் கடனுக்கான வட்டி குறைக்கப்படும் பட்சத்தில் அவை வைப்புத் தொகைகளுக்கான வட்டி விகிதங்களை குறைக்க வேண்டிய நிலையை உருவாக்கும். அவ்வாறு குறைக்கப்பட்டால் கூட்டுறவுகள் பெருமளவில் வைப்புத் தொகைகள் சேகரிக்க இயலாத நிலை ஏற்பட்டு வங்கிகளின் கடன் வழங்கும் பணிகள் பாதிக்கப்படும். எனவே, நகைக் கடனுக்கான வட்டி விகிதங்களை 15% ஆகக் குறைக்க வாய்ப்புகள் இல்லை.

86—

**கூட்டுறவு வங்கியில் இறந்த உறுப்பினர்கள் பெயரை நீக்குதல்**

**வினா 11224—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1998 மார்ச் 19]

(அ) திருப்பூர் கூட்டுறவு நகர வங்கியின் உறுப்பினர் பட்டியலில் இறந்தவர்களின் பெயர் இன்னும் நீடித்து வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதை முறைப்படுத்த அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) திருப்பூர் நகர கூட்டுறவு வங்கியில் உறுப்பினர் பட்டியலில் இறந்த உறுப்பினர் சிலரின் பெயர் நீடித்து வருகிறது. வங்கி உறுப்பினர்களில் இறந்தவர்களின் மரணச் சான்றிதழ் பெறப்படாததால் இவர்களின் பெயர்களை உறுப்பினர் பட்டியலில் இருந்து நீக்க இயலவில்லை. இறந்தவர்களின் வாரிசுதாரர்கள் தகுந்த ஆவணங்களுடன் விண்ணப்பிக்கும்போது இறந்தவர்களின் பங்குத் தொகை மற்றும் ஈவுத் தொகைகளை திருப்பி வழங்கியபின் அவர்களின் பெயர்கள் உறுப்பினர்கள் பட்டியலில் இருந்து நீக்கம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் 1991-92 மற்றும் 1992-93 ஆம் ஆண்டில் முறையற்ற வகையில் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டதை ஆட்சேபித்து திருவாளர்கள் என். கனகராஜ் (உறுப்பினர் எண் 41643), எண். செங்குட்டுவன் (உறுப்பினர் எண். 0642) ஆகியோரிடமிருந்து பெறப்பட்ட முறையீடு தொடர்பாக வங்கி 02-08-1996 மற்றும் 07-08-1996 ஆம் தேதிகளில் தினமலர் நாளிதழில் இது தொடர்பான அறிவிப்பை வெளியிட்டது. அதன்பின் 10-08-1996 ஆம் தேதியில் நடைபெற்ற வங்கியின் நிர்வாக சபை நிறைவேற்றிய தீர்மானம் எண் 140-ன் அடிப்படையில் உறுப்பினர் எண் 39602 முதல் 41530 முடிய இறந்த 1926 உறுப்பினர்களை நீக்கம் செய்ய முடிவு செய்யப்பட்டது. பின்னர் சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பாணை நாள் 19-11-1996-ன்படி நீக்கப்பட்ட உறுப்பினர்களுக்கு மீண்டும் ஒரு வாய்ப்பு அளிக்கும் பொருட்டு 06-02-1997 முதல் 7 நாட்கள் காலக்கெடு அளித்து 12-03-1997 ஆம் தேதியில் மாலைமலர் நாளிதழில் தனித்தனியாக உறுப்பினர்களின் பெயர் மற்றும் விலாசத்துடன் விளம்பரப்படுத்திய பின்னர் இதுகுறித்து 105 உறுப்பினர்கள் தங்களை மீண்டும் சேர்த்துக்கொள்ள கோரி

விண்ணப்பித்ததின் பேரில் 25-03-1997 ஆம் தேதியில் இப்பொருள் குறித்து விசேசமாக கூட்டப்பட்ட மகாசபை கூட்டத்தில் 105 உறுப்பினர்களை மீண்டும் சேர்த்தும் 1,821 உறுப்பினர்களை நீக்கியும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு துணைப் பதிவாளர் பொள்ளாச்சி [illegible] ஆணை ந.க.3193/97 சப நாள் 31-03-1997-ன்படி [illegible]ளது. நீக்கப்பட்ட உறுப்பினர்களுக்கு இதுகுறித்து [illegible] 31-[illegible]-1997 ஆம் தேதியிட்ட சான்றிடப்பட்ட கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

87—

## வேளாண்மை விற்பனைப் பொருள்கள் விற்பனை விவரம்

**வினா 12246—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1997-98 ஆம் நிதியாண்டில் சேலம் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மற்றும் நுகர்வோர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மூலம் வேளாண்மை விற்பனைப் பொருள்கள் எடப்பாடி, சங்ககிரி வட்டங்களில் எவ்வளவு விற்பனை செய்யப்பட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

எடப்பாடி, சங்ககிரி வட்டங்களில் வேளாண்மை விற்பனை பொருட்கள் சேலம் மண்டலத்திலுள்ள திருச்செங்கோடு கூட்டுறவு விற்பனைச் சங்கம் மூலமாக விற்பனைச் செய்யப்படுகிறது. திருச்செங்கோடு கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் கிளை எடப்பாடி வட்டத்திலுள்ள கொங்கணாபுரத்தில் அமைந்துள்ளது. இதன் மூலம் சங்ககிரி மற்றும் எடப்பாடி வட்டத்தில் விளையும் வேளாண் விளைபொருட்களும் அதற்கருகில் உள்ள ஈரோடு, திருச்சி, கரூர், பெரம்பலூர், தர்மபுரி, வேலூர் ஆகிய மாவட்டங்களில் விளையும் விளைபொருட்களும் விற்பனை செய்யப்படுகின்றன. எடப்பாடி, சங்ககிரி வட்டங்களில் ரூ.1,952.78 இலட்சம் மதிப்புள்ள வேளாண் விளைபொருள்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.



வேளாண் விளைபொருள் விற்பனை விவரம்

| வரிசை எண். | வேளாண் விளைபொருள் | அளவு (மெ.டன்னில்) | மதிப்பு ரூபாய் (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | பருத்தி | 8,220.448 | 1791.80 |
| 2 | எள் | 729.551 | 117.22 |
| 3 | பஞ்சு | 38.234 | 22.28 |
| 4 | மற்றவை | 336.963 | 21.48 |
| | | **9,325.196** | **192.78** |

88—

## தமிழ்நாட்டில் சமூகச் சேர்மானம்

**வினா 12443—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் சமூகச் சேர்மானம் குறித்து சாதி வாரியாக சென்சஸ் எடுக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தமிழ்நாட்டில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் தவிர்த்து ஏனைய சாதி வாரியான எண்ணிக்கை பற்றிய விவரங்கள் கணக்கெடுக்கப்படவில்லை. இருப்பினும் சாதி வாரியான சமூகப் பொருளாதார மற்றும் கல்வி பற்றிய ஆய்வினை தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் நடத்த உள்ளது. அதில் சாதி வாரியான விவரங்கள் சேகரிக்கப்பட உள்ளன.

[1998 மார்ச் 19

89—

**நிலுவைத் தொகைகளை வருவாயிலிருந்து பிடித்தம் செய்தல்**

**வினா 4675—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழிலாளர் வழக்குத் தீர்ப்புகளின் அடிப்படையில் வருவாயிலிருந்து பிடித்தம் (Revenue Recovery) செய்யாமல் நிலுவையிலுள்ள வழக்குகள் எத்தனை?

(ஆ) வருவாயிலிருந்து பிடித்தம் செய்ய அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) 474

(ஆ) நிலுவைத் தொகைகளை சம்பந்தப்பட்ட நிலுவை தாரர்களிடமிருந்து வருவாய் வசூல் சட்டப்படி வசூல் செய்திட சம்பந்தப்பட்ட வட்டாட்சியர்கள் நடவடிக்கை மேற்கொள்கின்றனர்.

90—

**வேலைவாய்ப்பு வழங்கும் சிறப்புத் திட்டம்**

**வினா 6527—திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டத்தில், இளைஞர்களின் வேலையில்லா திண்டாட்டத்தைப் போக்கி, வேலைவாய்ப்பு வழங்கும் சிறப்புத் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

இராமநாதபுரம் மாவட்டத்தில் இளைஞர்களின் வேலையில்லா திண்டாட்டத்தைப் போக்கி, வேலைவாய்ப்பு வழங்கும் சிறப்புத் திட்டம் ஏதும் அரசிடம் தற்போது இல்லை.



1998 மார்ச் 19]

91—

**தொழிலாளர்களின் வாரிசுகளுக்கு முன்னுரிமை**

**வினா 11782—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தொழிற்சாலைகளில் பணி இடங்களை நிரப்பும்பொழுது பணிபுரிகின்ற தொழிலாளர்களின் வாரிசுகளுக்கு முன்னுரிமை வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

வாரிசுதாரர்களுக்கு பணி இடங்களில் முன்னுரிமை வழங்கிட சட்டத்தில் இடம் கிடையாது. தொழிற்சாலைகளில் உள்ள தொழிற்சங்கங்களுக்கும் நிர்வாகத்திற்கும் பணியிடங்களை நிரப்பும்பொழுது வாரிசுதாரர்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டுமென ஒப்பந்தங்கள் போட்டுக்கொள்ள எவ்வித தடையும் இல்லை. இது சம்பந்தப்பட்ட நிர்வாகம் மற்றும் தொழிற் சங்கங்களின் விருப்பத்தைப் பொறுத்தது.

92—

**பிற்படுத்தப்பட்டோர் மாணவர்களுக்கு புதிய விடுதி**

**வினா 12228—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னையில் பயிலும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மாணவர்களுக்கு புதியதாக விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**•மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

சென்னை நகரில் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலனுக்கென 4 விடுதிகள் இயங்கி வருகின்றன. அவை அனைத்தும் தனியார்

[1998 மார்ச் 19

கட்டடங்களில் இயங்கி வருகின்றன. சென்னை நகரில் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மாணவர்களுக்கென புதியதாக விடுதிகள் திறப்பது மற்றும் தனியார் கட்டடங்களில் இயங்கும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் விடுதிகளுக்கு அரசு சொந்தக் கட்டடங்கள் கட்டுவது குறித்த செயற்குறிப்புகள் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

93—

### மாணவருக்கு புதிய விடுதி திறத்தல்

**வினா 12741—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை வட்டம், புளியரையில் பிற்படுத்தப்பட்டோர் மாணவர்க்கு புதிய விடுதி திறக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை வட்டம், புளியரையில் பிற்படுத்தப்பட்டோர் மாணவர்களுக்கு புதிய விடுதி திறப்பதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

94—

### சார்பதிவாளர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம்

**வினா 4530—திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?



1998 மார்ச் 19]

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

தருமபுரி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

95—

### தொழிற்பேட்டையில் தொழில் துவங்குதல்

**வினா 10759—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் எலக்ட்ரானிக்ஸ் தொழிற்பேட்டையில் தொழில் துவங்க எத்தனை விண்ணப்பங்கள் வந்துள்ளன?

(ஆ) எத்தனை தொழிற்கூடம் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் (எலக்ட்ரானிக்ஸ்) மின்னணுத் தொழிற்பேட்டையில் தொழில் தொடங்க இதுவரை ஒன்பது (9) விண்ணப்பங்கள் வரப்பெற்றுள்ளன.

(ஆ) இரண்டு (2) தொழிற்கூடங்கள் துவங்கப்பட்டுள்ளன. 1986 ஆம் ஆண்டு 52 மொத்த மனைகளுடன் சேலம் மாவட்டம், சூரமங்கலத்தில் அமைக்கப்பட்ட மின் மற்றும் மின்னணுத் தனித் தொழிற்பேட்டையில் தற்போது 38 மனைகள் காலியாக உள்ளன. தற்போது தொழில் துவங்க தகுந்த திட்ட அறிக்கையுடன் ஒன்பது தொழில் முனைவோர்கள் விண்ணப்பித்துள்ளனர். இதன் அடிப்படையில் பதினொன்று (11) மனைகள் ஒதுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

96— [1998 மார்ச் 19

### சிட்கோ தொழில் வளாகம் நிறுவுதல்

**வினா 11942—திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி தொகுதிக்குட்பட்ட கிருஷ்ணாபுரம், நாயக்கன் கொட்டாய் ஆகிய பகுதிகளில் சிட்கோ தொழில் வளாகம் ஒன்றை நிறுவிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

தற்போது தருமபுரி தொகுதிக்குட்பட்ட கிருஷ்ணாபுரம், நாயக்கன் கொட்டாய் ஆகிய பகுதிகளில் சிட்கோ தொழில் வளாகம் அமைக்கும் திட்டம் எதுவும் சிட்கோவிடம் இல்லை.

97—

### குழந்தைகள் நல மையம் அமைத்தல்

**வினா 12599—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியம், எம்.காளிப்பட்டி ஊராட்சி, மூர்த்திப்பட்டி ஆதிதிராவிடர் குடியிருப்பில் குழந்தைகள் நல மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

மூர்த்திப்பட்டி ஆதிதிராவிடர் பகுதியில் 10 குழந்தைகள் மட்டுமே (சத்துணவு பயனாளிகள்) உள்ளதால், அங்கு குழந்தைகள் நல மையம்



1998 மார்ச் 19]

அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. எனவே, பிரதான குழந்தைகள் நல மையத்திலிருந்து மைய உதவியாளர் மூலம் உணவு எடுத்துச் சென்று அக்கிராம பயனாளிகள் பயனடையும் வகையில் வழங்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

98—

### ஆதிதிராவிடர்களுக்கு வீடு கட்டுதல்

**வினா 6043—திரு. வீ. தமிழ்மணி மற்றும் திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரூராட்சியின் எல்லைக்குட்பட்ட ஆதிதிராவிட மக்களுக்கு இந்த நிதி ஆண்டு 1996-97 இல் வீடுகள் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) செங்கற்பட்டு-காஞ்சிபுரம் மாவட்டத்தில் எத்தனை வீடுகள் கட்டப்பட உள்ளன?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

99—

### ஆட்டோ வாங்குவதற்கு நிதியுதவி

**வினா 12393—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1997-98 ஆம் ஆண்டில் சென்னையில் ஆதிதிராவிடர் பெண்களுக்கு ஆட்டோ ஓட்டுநர் பயிற்சி அளித்து ஆட்டோ வாங்க தாட்கோ

[1998 மார்ச் 19

நிறுவன நிதியுதவி, மத்திய சிறப்பு நிதியுதவி அளிப்பது போல் இத்திட்டத்தை மாவட்டந்தோறும் செயல்படுத்த அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் :**

சென்னையில் செயல்படுத்தவிருக்கும் இத்திட்ட முன்னேற்றமறிந்து இதர மாவட்டங்களில் இதைச் செயல்படுத்த ஆவன செய்யப்படும்.

**100—**

**இலங்கை இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டவர்கள் விவரம்**

**வினா 11709—திரு. ஐ. கணேசன் :** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1997-98 இல் தமிழக மீனவர்கள் மீன்பிடிக்கச் சென்ற போது இலங்கை இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை என்ன?

(ஆ) அதைத் தடுக்க மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்தியுள்ளதா?

(இ) இறந்தோர் குடும்பத்திற்கு அரசு செய்த உதவி என்ன?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) 17-7-1997 வரை இலங்கை இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்ட மீனவர் 8 பேர்.

(ஆ) ஆம். இம்மாதிரி நிகழ்ச்சிகள் நடைபெறும்பொழுதெல்லாம் உடனுக்குடன் தமிழக அரசு, மத்திய அரசு மூலம் இலங்கையில் உள்ள இந்திய தூதுவருடன் தொடர்புகொண்டு தமிழக மீனவர்கள் மீது இராணுவம் கண்மூடித்தனமாக சுடுவதைத் தடுத்து நிறுத்திட வலியுறுத்தி வருகிறது.



1998 மார்ச் 19]

(இ) 1-4-1997 முதல் 31-7-1997 வரை இலங்கை கடற்படையினரின் துப்பாக்கிச் சூட்டில் இறநததாக கருதப்பட்ட எட்டு மீனவர்கள், குடும்ப வாரிசுதாரர்களுக்கு புதுதில்லியில் உள்ள தேசிய மீனவர் கூட்டுறவு சம்மேளனம் மூலம் ரூ.35,000-ம் நிவாரணம் பெறவும், சென்னை யுனைடெட் இந்தியா நிறுவனம் மூலம் ரூ. 15,000-ம் நிவாரணம் பெறவும் மீன் துறை இயக்குநரால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. கால்நடை பராமரிப்பு (மற்றும்) மீன் வளத் துறை அரசாணை (நிலை) எண் 40, நாள் 17-10-1997, வெளியிட்ட ஆணையில், இலங்கைக் கடற்படையினரின் துப்பாக்கிச் சூட்டில் இறக்க நேரிடும் மீனவர்களின் வாரிசுதாரர்களுக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.1.00 இலட்சம் நிவாரணமாக வழங்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இவ்வாணை 12-8-1997 ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வருகிறது.

## மூன்றாம் பட்டியல்

**1—**

**கரும்பு மேம்பாட்டிற்கு கடன் வழங்குதல்**

**வினா 11925—திரு. ஐ. கணேசன் :** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1997-98 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் கரும்பு மேம்பாட்டிற்காக எத்தனை நிறுவனங்களுக்கு அரசு கடன் வழங்கப்பட்டுள்ளது?

(ஆ) தமிழ்நாட்டில் 1997-98 ஆம் ஆண்டு புதிய சர்க்கரை ஆலை தொடங்க மத்திய அரசிடம் தமிழக அரசு எவ்வளவு ஆலைக்கு அனுமதி கேட்டுள்ளது?

(இ) அனுமதி எவ்வளவுக்கு வந்துள்ளது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர் :**

(அ) 1997-98-ஆம் நிதியாண்டில் கரும்பு மேம்பாட்டிற்காக சர்க்கரை அபிவிருத்தி நிதியிலிருந்து மத்திய அரசு, மாநில அரசு

[1998 மார்ச் 19

மூலம் சுப்பிரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலை மற்றும் சக்தி சர்க்கரை ஆலைக்கு கடன் வழங்கியுள்ளது.

(ஆ) 1997-98 ஆம் ஆண்டு அறந்தாங்கி, வலங்கைமான் மற்றும் சங்கராபுரம் ஆகிய மூன்று இடங்கள் புதிய சர்க்கரை ஆலைகள் அமைக்க அனுமதி கோரியது.

(இ) மேலே 'ஆ'-வில் கூறப்பட்ட மூன்று இடங்களிலும் ஆலை அமைக்க அனுமதி வந்துள்ளது.

2—

**காவல் நிலையத்திற்குக் கட்டடம்**

**வினா 12020—திரு. கே. ரவி அருணன் :** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், சுரண்டை காவல் நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர் :**

(அ) தற்போது இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

3—

**காவல் ஆணையர் அலுவலகத்திற்குக் கட்டடம்**

**வினா 12496—திரு. ஆர்.ஆர். சேகரன் :** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகர காவல் ஆணையர் அலுவலகத்திற்கு புதியதாக கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



1998 மார்ச் 19]

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): சேலம் மாநகர காவல் ஆணையாளர் அலுவலகத்திற்கு புதியக் கட்டடம் கட்ட காவல் துறையிடம் தற்போது நிலம் கைவசமில்லை. நிலம் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நிலம் கையகப்படுத்தியதும், புதியக் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

4—

**தீயணைப்பு நிலையத்திற்கு கட்டடம்**

**வினா 13201—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் தீயணைப்பு நிலையத்திற்கு தேசிய நெடுஞ்சாலையில் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா ?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

தமிழ்நாடு தீயணைப்புத் துறையில் தற்பொழுது நிலமுள்ள 87 தீயணைப்பு நிலையங்கள் மற்றும் நிலமற்ற 76 தீயணைப்பு நிலையங்கள் ஆக மொத்தம் 163 தீயணைப்பு நிலையங்களுக்கு நிலத்திற்கான செலவுத் தொகை ரூ.15.20 கோடி உட்பட ரூ.39.65 கோடி செலவில் நிரந்தரக் கட்டடம் கட்ட இந்த அரசு முடிவு மேற்கொண்டுள்ளது. இதற்கென மத்திய அரசின் நிதியுதவி கோரி திட்ட மதிப்பீட்டு அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. மத்திய அரசின் நிதியுதவி பெற்றவுடன், ஓமலூர் தீயணைப்பு நிலத்துக்கான நிலம் தேர்வு செய்யப்பட்டு நிரந்தரக் கட்டடம் கட்ட தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

5—

**ஊதியமில்லா விடுப்பை சரிசெய்ய நடவடிக்கை**

**வினா 7294—திரு. டி. மணி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1998 மார்ச் 19

(அ) மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர்கள் 1993-இல் 20 நாட்கள் போராட்டம் நடத்திய நாட்களை ஊதியமில்லா விடுப்பாக அறிவித்தது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், வருவாய்த் துறை ஊழியர்களுக்கு இதுபோன்ற விடுப்பை அரசு கடிதம் (நிலை) எண் 430, வருவாய், நாள் 3-5-1996-ன்படி சரிசெய்து வழங்கியதுபோல் இவர்களுக்கும் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): 17-2-1993 முதல் 7-3-1993 முடிய 19 நாட்கள் வேலை நிறுத்தம் செய்த மேல்நிலைப்பள்ளி முதுகலை பட்டதாரி ஆசிரியர்களின் பணிபுரிந்து ஈடு செய்த 12 நாட்களை பணிக்காலமாகக் கருதியும், மீதமுள்ள 7 நாட்கள் அந்தந்த ஆசிரியர்களின் விடுப்புக் கணக்கில் உள்ள நாட்கள் வரையில் விடுப்பாகக் கருதலாம் எனவும், விடுப்புக் கணக்கில் நாட்கள் ஏதுமில்லையெனில் மீதம் நாள் இருந்தால் அவற்றைச் சம்பளமில்லா விடுப்பாக முறைப்படுத்தலாம் எனவும் அரசு, அரசாணை (நிலை) எண் 108, பள்ளிக் கல்வித் துறை, நாள் 12-3-1997-ல் ஆணை பிறப்பித்துள்ளது.

6—

## பேராவூரணி தொகுதியில் ஆசிரியர்கள் நியமித்தல்

**வினா 7415—திரு. எஸ். வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், வெள்ளாளங்காடு கிராமத்தில் உள்ள பள்ளிக்கு போதிய ஆசிரியர்கள் நியமிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** சேதுபாவாசத்திரம் ஒன்றியம், வெள்ளாளங்காடு ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியில் ஒரு தலைமை ஆசிரியர் மற்றும் இரண்டு



1998 மார்ச் 19]

இடைநிலை ஆசிரியர்கள் பணிபுரிகின்றனர். இப்பள்ளியில் மொத்த மாணவ/மாணவிகளின் சராசரி வருகை 89 (46 + 43) தற்போது இப்பள்ளிக்கு ஆசிரியர் மாணவர் விகிதாசாரத்தின்படி போதுமான ஆசிரியர் பணியிடம் இருப்பதால் புதியதாக ஆசிரியர்கள் நியமனம் செய்யும் பிரச்சினை தற்போது எழவில்லை.

7—

## நேரு விளையாட்டு அரங்க வருமானம்

**வினா 10123—திரு. டி. மணி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையிலுள்ள நேரு விளையாட்டு அரங்கிலிருந்து வரும் ஆண்டு வருமானம் என்ன?

(ஆ) அது எந்த வகையில் செலவிடப்படுகிறது?

(இ) 1996-97-ல் எவ்வளவு வருவாய் வந்துள்ளது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (இ): நேரு விளையாட்டரங்க நிர்வாகப் பொறுப்பினை, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் ஏற்றுக் கொண்ட நாளான 1-4-1994 முதல் விளையாட்டுக் களங்களையும் இதர தளவாடங்களையும் பயன்பாட்டுக்கு விட்டு வசூலித்த ஆண்டுவாரியான கட்டண விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது —

| | |
|---|---|
| 1994-95 | ரூ.5,68,395/- |
| 1995-96 | ரூ.3,86,193/- |
| 1996-97 | ரூ.6,73,370/- |

(ஆ) இந்த வருமானம் விளையாட்டரங்க பணியாளர்கள் ஊதியம், மின்சாரம், தண்ணீர் போன்ற செலவினங்களுக்காகவும் மற்றும் அரங்க பராமரிப்பிற்காகவும் செலவிடப்பட்டு வருகிறது.

**1996-97-ம் ஆண்டின் செலவின விவரம் :-**

| | |
|---|---|
| 1. மின் கட்டணம் (உயர் மின் அழுத்தம்) | ரூ.22,55,589.00 |
| 2. குடிநீர் கட்டணம் | ரூ.8,10,936.00 |
| 3. தொலைபேசிக் கட்டணம் | ரூ.9,536.00 |
| 4. தோட்ட பராமரிப்பு செலவினம் | ரூ.1,10,979.00 |
| 5. துப்புரவுப் பணிக்கான செலவினம் | ரூ.2,48,039.00 |
| 6. பிற காவல் பணிக்கான செலவினம் | ரூ.1,65,850.00 |
| 7. காப்பீட்டுத் தொகை (இன்சூரன்ஸ்) | ரூ.3,99,471.00 |
| 8. இ.பி.சி.டி.வி. பராமரிப்பு | ரூ.26,132.00 |
| 9. ஜெனரேட்டர் பராமரிபபு | ரூ.13,000.00 |
| 10. மின் உயர் தூக்கி (லிப்ட்) | ரூ.77,220.00 |
| 11. இதர செலவினங்கள் | ரூ.1,60,912.00 |
| 12. பணியாளர்களின் சம்பளம் | ரூ.5,58,386.00 |
| மொத்தம் | **ரூ.48,36,050.00** |

வருவாய்க்கு மேல தேவைப்படும் தொகையை அரசு மானியமாக ஒதுக்குகிறது.

**8—**

**கலைக் கல்லூரி அமைத்தல்,**

**வினா 12935—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதிக்குட்பட்ட ஓமலூர் நகரில அரசு கலைக் கல்லூரி அமைக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர் :**

செயற்குறிப்பேதும் அரசின் பரிசீலனையில் இல்லை.



**9—**

**அரசு மருத்துவமனைக்கு கூடுதல் வசதி**

**வினா 10796—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதியில் உள்ள கவுந்தப்பாடி அரசு மருத்துவமனைக்கு கட்டடம் மற்றும் படுக்கை வசதிகளும் மருத்துவர்களை தேவையான அளவு நியமனம் செய்யவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விரைவில் அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): ஈரோடு மாவட்டம், பவானி தொகுதியில் உள்ள கவுந்தப்பாடி அரசு மருத்துவமனைக்கு 32 படுக்கை வசதிகளுடன் கூடிய கட்டடம் கட்டப்பட்டுவருகிறது. கட்டட வேலை முடிந்ததும், தேவைப்படின் கூடுதல் மருத்துவர்களை நியமனம் செய்ய தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**10—**

**தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரியில் கேன்சர் பிரிவு துவக்குதல்**

**வினா 11261—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் வட்டம், தஞ்சை மருத்துவக் கல்லூரியில் கேன்சர் பிரிவு துவக்க மத்திய அரசின் அட்டாமிக் எனர்ஜி கமிஷன் கிளியரன்ஸ் சர்டிபிகேட் கிடைக்காத நிலையில், மாநில அரசு, மத்திய அரசிடம் மேற்படி சான்றிதழ் கிடைக்க நடவடிக்கை எடுக்குமா?

[1998 மார்ச் 19

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தஞ்சாவூர் மருத்துவமனையில் கேன்சர் பிரிவு துவங்கப்படுவதற்கு மத்திய அரசின் அட்டாமிக் எனர்ஜி கமிஷன் கிளியரன்ஸ் சான்றிதழ் பெறப்பட்டுள்ளது.

11—

**மருத்துவமனையில் கூடுதல் கட்டடம்**

**வினா 12023—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கோட்டை வட்ட மருத்துவமனையில் கூடுதலாக ஐம்பது படுக்கை வசதி கொண்ட கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): செங்கோட்டை வட்ட மருத்துவமனையில் தற்போதுள்ள படுக்கை எண்ணிக்கை 46. ஒரு நாளின் சராசரி உள்நோயாளி எண்ணிக்கை 54. தேவைப்படின் படுக்கை வசதிகளை அதிகப்படுத்தி புதியக் கட்டடம் கட்டுவதற்கு 1998-99 ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தில் பரிசீலிக்கப்படும்.



1998 மார்ச் 19]

12—

**எடப்பாடி தொகுதியில் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கட்டடம்**

**வினா 12644—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், வைகுந்தத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையம் சொந்த கட்டடத்தில் இயங்கவில்லை என்பது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், புதிய கட்டடம் கட்ட அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியம் வைகுந்தம் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் தற்போது தனியார் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. 1997-98-ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தின்கீழ் 352 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு கட்டடப் பணிகள் மேற்கொள்ள அரசு ஆணையிட்டுள்ளது. இதில் வைகுந்தமும் ஒன்றாகும். இதற்கான நிலமும் தேர்வு செய்யப்பட்டுவிட்டது. நிலமாற்றம் பெறப்பட்டவுடன் பொதுப்பணித் துறையினர் மூலம் கட்டடப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, முடிக்கப்பட்டதும் வாடகைக் கட்டடத்திலிருந்து சொந்தக் கட்டடத்திற்கு மாற்றப்படும்.

13—

**ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கட்டடம்**

**வினா 12652—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1998 மார்ச் 19

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பெருமகளூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

ஆம். 1996-97 ஆம் ஆண்டுக்கான பகுதி-2 திட்டத்தின்கீழ் 300 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு கட்டடப் பணிகள் நடைபெற்று வருகின்றன. சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியம், பெருமகளூர் ஆரம்ப சுகாதார நிலையமும் ஒன்றாகும். ஆரம்ப சுகாதார நிலையத்திலேயே தேவையான நிலம் உள்ளது. பொதுப்பணித் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டு கட்டடப் பணிகள் நடைபெற்று வருகின்றன; விரைவில் முடிவடையும்.

**14—**

### ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுகா அலுவலகத்திற்கு கூடுதல் கட்டடம்

**வினா 2329—திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுகா அலுவலகத்திற்கு இட நெருக்கடி அதிகமாக இருப்பதால் கூடுதல் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு கூடுதல் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழாது.



1998 மார்ச் 19]

**15—**

### வட்டாட்சியர் அலுவலகத்திற்குக் கட்டடம்

**வினா 2331—திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டாட்சியர் அலுவலகம் வாடகைக் கட்டடத்தில் இயங்கிவருவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், நிரந்தரக்கட்டடம் கட்ட ஆவன செய்யுமா ?

(இ) நிரந்தரக்கட்டடம் கட்ட இடத்தேர்வு செய்யப்பட்டுள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர் :**

(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டாட்சியர் அலுவலகம் வாடகைக் கட்டடத்தில் இயங்கவில்லை. அரசுக் கட்டடத்திலேயே இயங்கி வருகிறது. ஸ்ரீவில்லிபுத்தூர் தனி வட்டாட்சியர் (ஆதிந) அலுவலகம் மட்டும் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது.

(ஆ) மற்றும் (இ) : கட்டடம் இல்லாத மற்றும் தற்போது செயல்பட்டு வரும் கட்டடங்களில் இடப்பற்றாக்குறை இருக்கும் வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு கட்டடங்களை அரசு நிதி நிலைக்கேற்றவாறு படிப்படியாக கட்டித்தரும்.

**16—**

### கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்தைப் புதுப்பித்தல்

**வினா 4036—திரு. அ. வ. அப்துல் நாசர் :** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர் மாவட்டம், கீழ் புவனகிரி கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்திற்கு புதியதாகக் கட்டடம் கட்டவும், மேல் புவனகிரி கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்தைப் புதுப்பிக்கவும் அரசு ஆவன செய்யுமா ?

[1998 மார்ச் 19

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) : கடலூர் மாவட்டம், கீழ்புவனகிரி கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம் புதிதாகக் கட்ட பிரேரணை ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. மேல்புவனகிரியில் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம் ஏதுமில்லை. கிராம நிர்வாக அலுவலர்களுக்கென்று அலுவலகம் அமைக்கும் திட்டம் நிதிநிலைக்கேற்றவாறு படிப்படியாக செயல்படுத்தப்படுகிறது.

17—

### ஆதிதிராவிடர்களுக்கு மனைப் பட்டா

**வினா 11652—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் முத்தாரம்பாளையம் கிராமம், அமராவதிபாளையம் புல எண் 244 இல் குடியிருந்து வரும் ஆதிதிராவிடர்களுக்கு தாமதமின்றி மனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது வழங்கப்படும் ?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ): பட்டா வழங்கக் கோருமிடத்தில் மழைக்காலத்தில் தண்ணீர் குடிசைக்குள் செல்லும் அபாயம் உள்ளதால் அப்பகுதியில் வாழும் மக்களுக்கு அவ்விடத்தில் பட்டா வழங்க இயலாது. அவர்களுக்கு மாற்றிடம் தேர்வு செய்து, தகுதியானவர்களுக்குப் பட்டா வழங்க அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.



1998 மார்ச் 19]

18—

### செங்கோட்டை வட்ட அலுவலகத்திற்குக் கட்டடம்

**வினா 12032—திரு. கே. ரவி அருணன் :** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை வட்ட அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) : திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை வட்ட அலுவலகத்தில் தீ விபத்தினால் ஏற்பட்ட சேதங்கள் ரூ.5.10 இலட்சம் செலவில் பழுதுபார்க்கப்பட்டு முடிக்கப்பட்டு விட்டது. எனவே, புதிய கட்டடம் கட்டும் வினா எழவில்லை.

19—

### வீட்டுமனைப் பட்டா

**வினா 12478—திரு. ஆர்.ஆர். சேகரன் :** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காடையாம்பட்டி ஒன்றியம், கணவாய்ப்புதூர் பஞ்சாயத்து லேண்ட் காலனி, குபேரன் காட்டுவளவு பகுதியில் உள்ள சொசைட்டிக்குச் சொந்தமான 430 ஏக்கர் இடத்திலிருந்து அப்பகுதியில் வசிக்கும் மக்களுக்குப் பட்டா வழங்க அரசு முன்வருமா ?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர் :**

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், கணவாய்ப்புதூர் நிலக்குடியேற்றக் கூட்டுறவுச் சங்கம் கலைக்கப்பட்டு விட்டது. மேற்படி

[1998 மார்ச் 19

கணவாய்ப்புதூர் கிராமத்தில் 75.69.0 ஹெக்டேர் நிலமும், கேதுநாயக்கன்பட்டி புதூர் கிராமத்தில் 77.19.5 ஹெக்டேர் நிலமும் மேற்படி நிலக்குடியேற்றச் சங்க உறுப்பினர்கள் மற்றும் சங்க உறுப்பினர் அல்லாதவர்கள் ஆக்கிரமணைத்தில் உள்ளது. நிலத்தை அனுபவம் செய்து வருபவர்களுக்கு நில ஒப்படை விதிமுறைகளுக்குட்படுத்தி அனுபவப் பகுதியை, நிலக்குடியேற்றச் சங்க உறுப்பினர்களுக்கும், சங்க உறுப்பினர் அல்லாதவர்களுக்கும் தகுதியின் அடிப்படையில் ஒப்படை வழங்குமாறு அரசாணை எண் 225, ஆதிதிராவிடர் மற்றும் மலைவாழ் மக்கள் நலத் (டிஇ2) துறை, நாள் 2-11-1993 இல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அவ்வரசாணையின் அடிப்படையில் நில ஒப்படை வழக்கில் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

20—

## நடுநிலைப் பள்ளிகளுக்குக் கட்டட வசதி

**வினா 439—திரு. ப. பாலசுப்பிரமணியன் :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை தொகுதி, மதுக்கூர ஒன்றியம், சிரமேல்குடி, பட்டுக்கோட்டை ஒன்றியம், துவரங்குறிச்சி ஆகிய இடங்களிலுள்ள அரசினர் நடுநிலைப் பள்ளிகளுக்குக் கட்டட வசதி செய்து தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

மதுக்கூர் ஊராட்சி ஒன்றியம், சிரமேல்குடி ஊராட்சி ஒன்றியப் பள்ளிக் கட்டடம் 1996-97-ஆம் ஆண்டின் பரவலாக்கல் திட்டத்தின் கீழ் கட்டப்பட நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், துவரங்குறிச்சி ஊராட்சி ஒன்றியம், துவரங்குறிச்சி ஊராட்சி ஒன்றியப் பள்ளிக் கட்டடம் 1995-96-ஆம் ஆண்டில் வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு வருகிறது.



1998 மார்ச் 19]

21—

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

**வினா 2744—திரு. க. சிவராஜ்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருக்கோவிலூர் பேரூராட்சிக்கு உட்பட்ட சந்தைப்பேட்டை பகுதியில் புதியதாக ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ): திருக்கோவிலூர் குடிநீர் அபிவிருத்தித் திட்டம் ரூ.165 இலட்சம் மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ் சந்தைப்பேட்டையில் (கனிப்பேட்டையில்) 3 இலட்சம் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுவதற்கு வகை செய்யப்பட்டுள்ளது. திட்ட மதிப்பீடு தற்போது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.

22—

## கிராமங்களுக்குச் சாலை வசதி

**வினா 6479—திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி ஒன்றியம், கொண்டகரஅள்ளி ஊராட்சியில் உள்ள மலைவாழ் கிராமங்களான வத்தல் மலை, பெரியூர் உட்பட பல கிராமங்களுக்குச் சாலை வசதி ஏற்படுத்தித்தர அரசு ஆவன செய்யுமா?

[1998 மார்ச் 19

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

இப்பகுதியில் சாலை அமைக்க ஏராளமான மரங்களை வெட்டவும், பாதுகாக்கப்படும் வனப்பகுதியில் சாலை அமைக்கவும் மத்திய அரசின் அனுமதியைப் பெற வேண்டும். மேலும் புதிதாக சாலை அமைக்க மட்டும் சுமார் ரூ.200.00 இலட்சங்கள் தேவைப்படும். இவ்வளவு பெருந்தொகை தேவைப்படுவதால் இப்பணியை மேற்கொள்ள அண்மைக் காலங்களில் சாத்தியக்கூறுகள் இல்லை.

**23—**

**குடிநீர்க் குழாய் இணைப்பு வழங்குதல்**

**வினா 6917—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, இடங்கணசாலை பேரூராட்சிக்குட்பட்ட இராசிகவுண்டனூர் முதல் மடத்தூர் வரை பூலாம்பட்டி குடிநீர்க் குழாய் இணைப்பு வழங்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

இராசிபுரம்-எடப்பாடி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் இடங்கணசாலை பேரூராட்சிக்கு இரண்டு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் மற்றும் பகிர்மான குடிநீர்க் குழாய் அமைத்து குடிநீர் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இராசிகவுண்டனூர் முதல் மடத்தூர் பகுதிவரை காவிரிக் குடிநீர் வழங்க ஆவன செய்யப்படும்.



1998 மார்ச் 19]

**24—**

**பாதை செப்பனிடல்**

**வினா 6965—திரு. ஐ. கணேசன் :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், கனககிரி பஞ்சாயத்து காக்காப்பாளையம் பிரிவு ரோடிலிருந்து வேலப்ப கோவில் காலனி வழியாக, மரப்பாளையம் வழியாக தாசன்காடு வந்து காசாபாளையம் மெயின் ரோடு வரை செல்லும் மோசமாக உள்ள பாதையை செப்பனிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

மேற்படி சாலைகளைச் செப்பனிட 1997-98-ஆம் ஆண்டு வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ் 3.20 கி.மீ. தூரம் வரை பணிகள் எடுத்துச் செய்யப்பட்டுள்ளன. மீதமுள்ள 0.80 கி.மீ. தூரம் சாலை 1998-99-இல் வேலைவாய்ப்பு உறுதி அளிப்புத் திட்டத்தில் எடுத்துச் செய்யப்பட உள்ளது.

**25—**

**பாலம் அமைத்தல்**

**வினா 7438—திரு. ஐ. கணேசன் :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி-சித்தூர் (வழி) மோட்டூர் வழி அமைக்கப்பட்டுள்ள சாலையில் கந்தப்பன் காடு என்கின்ற பேருந்து நிற்குமிடத்தில் ஒரு சிறிய பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

மோட்டூர் வழியாக உள்ள கந்தப்பன் காடு பகுதியானது போக்குவரத்து அதிகமில்லாத பகுதியாகும். இப்பகுதியில் பாலம் அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது இல்லை.

26—

**மேற்கூரை அமைத்தல்**

**வினா 9432—திரு. சி. ஞானசேகரன்** : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இந்திய மக்கட் தொகைத் திட்டம் 5-ன்கீழ் வழங்கப்பட்டுள்ள வேனை நிறுத்துவதற்கு கஸ்பாவில் உள்ள 10 படுக்கைகள் கொண்ட நல மையத்தில் மேற்கூரை (Sheet) அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

தற்சமயம் மேற்படி வேன் நகராட்சி அலுவலகத்தில் நிறுத்தப்பட்டு வருகிறது. இந்திய மக்கட்தொகைத் திட்டத்தின்கீழ் ரூ.10.00 இலட்சம் செலவில் கட்டப்பட்ட நல மையத்தில் ஒரு பகுதி சுற்றுச்சுவர் கட்ட மதிப்பீடு ரூ.50,000/-க்குத் தயார் செய்யப்பட்டு நகர்மன்ற ஒப்புதல் பெறப்பட்டு நடவடிக்கையிலுள்ளது. அந்த சுற்றுச்சுவர் பகுதிக்குள் வேன் நிறுத்தும் வகையில் கொட்டகை அமைக்க தற்சமயம் ரூ.40,000/- க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு மன்ற ஒப்புதலுக்காக வைக்கப்பட்டுள்ளது. மன்ற அனுமதி பெற்று வேன் நிறுத்துமிடம் விரைவில் கட்டி முடிக்கப்படும்.





27—

**மயானப் பகுதியில் ஆக்கிரமிப்புகள்**

**வினா 9442—திரு. சி. ஞானசேகரன் :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் நகராட்சி, அம்னாஸ்குட்டை மயானப் பகுதியில் ஆக்கிரமிப்புகள் நிகழ்வதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) : வேலூர் நகரம், சலவன்பேட்டை, அம்னாஸ்குட்டையில் சர்வே எண் 2132 மற்றும் 2148இல் உள்ள மயானப் பகுதி வருவாய்த் துறையினரால் நகராட்சிக்கு மாற்றம் செய்யப்பட்டு, நகராட்சியின் கட்டுப்பாட்டில் உள்ளது. இதில் இடுகாடாக உள்ள (கல்லறைகள் உள்ள) சர்வே எண் 2148இல் ஆக்கிரமிப்பு ஏதும் இல்லை. இடுகாடாக தற்போது உபயோகத்தில் இல்லாத (கல்லறைகள் இல்லாத) சர்வே எண் 2132இல்தான் 18 தனி நபர்கள் சுமார் ஏழு வருடங்களுக்கு முன்னர் கூரை வீடு மற்றும் ஓட்டு வீடு கட்டி ஆக்கிரமிப்பு செய்துள்ளனர். இதில், சிலருக்கு நகராட்சி வீட்டுவரியும் விதிக்கப்பட்டுள்ளது. சிலர் வருவாய்த் துறையினரிடம் பீ-மெமோ பெற்று கட்டணம் செலுத்தி வருகின்றனர். ஏழு நபர்களுக்கு மின் இணைப்பும் வழங்கப்பட்டுள்ளது. இது தவிர, நகராட்சியினால், சலவைத் தொழிலாளர்களுக்கு சலவைத் தொழில் செய்ய இடம் ஒதுக்கப்பட்டு கிணறு ஒன்றும் கட்டப்பட்டுள்ளது.

[1998 மார்ச் 19

28—

## நிழற்குடை அமைத்தல்

**வினா 9622—திரு. இ.ஜி. சுகவனம் :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பர்கூர் தொகுதி, அஞ்சூர், ஜெகதேவி மேல்நிலைப் பள்ளிக்கு முன் இருபுறங்களிலும் மாணவர்களின் நலன் கருதி நிழற்குடை அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

(அ) ஆம்.

(ஆ) பணிகள் துவங்கப்பட்டுள்ளன.

29—

## நகராட்சி அலுவலகம் கட்டுதல்

**வினா 10330—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானி நகரத்தில், புதிதாக நகராட்சி அலுவலகம் கட்டும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், உடனடியாக புதிய கட்டிடம் கட்டிக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**



1998 மார்ச் 19]

(அ) மற்றும் (ஆ): பவானி நகரத்தில் புதியதாக நகராட்சி அலுவலகம் கட்டும் திட்டம் தொடர்பான நகராட்சியின் செயற்குறிப்பு, நகராட்சி நிர்வாக ஆணையாளர் வழியாகப் பெறப்பட்ட பின்பு பரிசீலிக்கப்பட்டு தக்க முடிவு எடுக்கப்படும்.

30—

## மின் கம்பங்களை மாற்றி அமைத்தல்

**வினா 10500—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, மேலகரம்-குற்றாலம் சாலையில் ஆதிபராசக்தி கோவிலருகே போக்குவரத்திற்கு இடைஞ்சலாக உள்ள மின் கம்பங்களை மாற்றி அமைத்திட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ): குற்றாலம்-தென்காசி சாலையிலுள்ள மரங்களில், மேலகரம் ஆதிபராசக்தி கோவிலருகே போக்குவரத்துக்கு இடைஞ்சலாக இருந்த ஆலமரம் 13-8-1997 அன்று வெட்டி அப்புறப்படுத்தப்பட்டு, மின் கம்பமும் மாற்றியமைக்கப்பட்டுவிட்டது.

31—

## திருமணிமுத்தாற்றில் மேல்தளம் அமைத்தல்

**வினா 10714—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் நகரில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க, திருமணிமுத்தாற்றில் மேல்தளம் அமைத்து, வணிக வளாகம், சிறுந்து

[1998 மார்ச் 19

நிறுத்துமிடம் போன்றவைகளை ஏற்படுத்த அரசு முன்வருமா ?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

சேலம் நகரில் திருமணிமுத்தாற்றில் மேல்தளம் அமைக்கும் உத்தேசம் ஏதுமில்லை.

32—

**விளையாட்டு அரங்கம் அமைத்தல்**

**வினா 10851—திரு. ஐ. கணேசன் :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி நகரில் விளையாட்டு அரங்கம் அமைக்க அரசு முன்வருமா ?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

எடப்பாடி நகராட்சிப் பகுதிக்குள் விளையாட்டு அரங்கம் அமைக்கக்கூடிய அளவிற்கு நகராட்சிக்கு நிலம் ஏதும் இல்லை. நில எடுப்பு செய்து அரங்கம் அமைக்கும் அளவிற்கு நகராட்சி நிதி நிலை சரியில்லை. எனவே, நகராட்சி எல்லைக்குள் விளையாட்டு அரங்கம் அமைக்கும் உத்தேசம் இல்லை.

33—

**மயான வசதி ஏற்படுத்துதல்**

**வினா 10888—திரு. கே. ரவி அருணன் :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1998 மார்ச் 19]

(அ) தென்காசி வீட்டு வசதி வாரியக் குடியிருப்பு மக்களுக்கு தனியாக மயான இடம் ஒதுக்கீடு செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

(அ) தென்காசி வீட்டு வசதி வாரியக் குடியிருப்பு இடத்திற்கான அங்கீகரிக்கப்பட்ட தெருக்கள், திறந்த இடங்கள், பூங்காக்கள் ஆகியவை வீட்டு வசதி வாரியத்தால் நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்படவில்லை. அவை ஒப்படைப்பு செய்யப்பட்ட பின்பு, மேற்படி வீட்டு வசதி வாரியக் குடியிருப்பு மக்களுக்கு மயான வசதி செய்ய இடம் தேர்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) வினா எழவில்லை.

34—

**பராமரிக்கும் பணியாளர் நியமனம்**

**கைப்பம்புகள், விசைப்பம்புகள்** மாண்புமிகு ஊரகவளர்ச்சி

**வினா 11324—திரு. நா. பெரியசாமி:** கீழ்க்காணும் வினாக்களுக்கு

மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்

விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் கைப்பம்புகள் - விசைப்பம்புகள் உயர்ந்துள்ள அளவு

அளவில் அதனைப் பராமரிக்கும் பணியாளர் அறியுமா?

உயர்த்தப்படவில்லை என்பதை அரசு அறியுமா? நியமனத்திற்கு உத்தரவிடப்படுமா?

(ஆ) ஆம் எனில், பணியாளர்

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ): அரசாணை நிலை எண் 159, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 15-5-1997-ன்படி கைப்பம்புகள் மற்றும் விசைப்பம்புகள் பழுதுபார்க்கும் பணியை ஊராட்சி ஒன்றியங்கள், அவர்களுக்கு அருகில் உள்ள நிறுவனங்களில் மேற்கொள்ளலாம் என

[1998 மார்ச் 19

உத்தரவிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு வட்டாரத்திலுள்ள பொருத்துநர் மட்டுமின்றி, தனியாகவும் தொழில்நுட்பப் பணியாளர்கள் மூலம் பழுதுகள் பார்த்திட அனுமதித்துள்ள நிலையில் கைப்பம்பு மற்றும் விசைப்பம்பு பராமரிக்கும் பணியாளர்களின் அளவு உயர்த்தப்படவில்லை.

35—

## தார்ச் சாலை அமைத்தல்

**வினா 11513—திரு. மு.பெ. சாமிநாதன் :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெள்ளக்கோவில் தொகுதி, மூலனூர் ஒன்றியம், நீலாங்காளி வலசுக்கும், கருடன்கோட்டைக்கும் இடையே தார்ச்சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ): மூலனூர் ஒன்றியம், நீலாங்காளிவலசு—கருடன்கோட்டை சாலையின் மொத்த நீளம் 1 கி.மீ. இது தற்போது ஊராட்சி சாலையாயுள்ளது. கருங்கல் ஜல்லி போடப்பட்டுள்ளது. இதனைத் தார்ச்சாலையாகப் புதுப்பிக்க ரூ.2.45 இலட்சம் செலவாகும். இச்சாலையில் 0/6இல் சுமார் 85 மீட்டர் அகலத்திற்கு ஓர் ஓடை உள்ளது. இதற்குப் பாலம் கட்டுவது அவசியமாகும். இப்பாலம் கட்டப்பட்டால்தான் தார்ச்சாலையமைப்பதன் முழுப் பயன் ஏற்படும். இச்சூழ்நிலையில் மேற்காணும் சாலைப்பணி எந்தத் திட்டத்தின்கீழும் தற்போது எடுத்துக்கொள்ளப்படவில்லை.



1998 மார்ச் 19]

36—

## தார்ச் சாலையாக மாற்றுதல்

**வினா 11517—திரு. மு.பெ. சாமிநாதன் :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெள்ளக்கோவில் தொகுதி, மூலனூர் ஒன்றியம், மாலமேடு-கவுண்டப்ப கவுண்டன்புதூர் சாலையை தார்ச் சாலையாக மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) : இந்தச் சாலையின் நீளம் 2.2 கி.மீ. ஆகும். தற்போது ஓரடுக்கு கருங்கல் பரப்பப்பட்டு உள்ளது. அவற்றில் 1 கி.மீ. தார்ச்சாலையாக மாற்றும் பணி ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தில் எடுத்துச் செய்யப்பட்டு வருகிறது. மீதியுள்ள 1.2 கி.மீ. தூரம், வரும் நிதியாண்டில் எடுத்துச் செய்யப்படும்.

37—

## தார்ச் சாலையாக மாற்றுதல்

**வினா 11519—திரு. மு.பெ. சாமிநாதன் :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வெள்ளக்கோவில் தொகுதி, வெள்ளக் கோவில்—மூலனூர் சாலையில் இருந்து செல்லும் குருக்கபாளையம் சாலையைத் தார்ச்சாலையாக மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

வெள்ளக்கோவில் தொகுதி, வெள்ளக்கோவில்-மூலனூர் சாலையில் இருந்து செல்லும் குருக்கபாளையம் சாலையைத் தார்ச்சாலையாக மாற்றும் செயற்குறிப்பு தற்போது ஏதும் இல்லை.

**38—**

**பள்ளிகளைப் பழுதுபார்த்தல்**

**வினா 11860—திரு. கே. ரவி அருணன் :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை வட்டத்திலுள்ள ஆரம்ப நடுநிலைப் பள்ளிகள் எந்தத் தாலுகா துறையின் பராமரிப்பில் உள்ளன ?

(ஆ) பல ஆண்டுகளாகப் பராமரிப்பின்றி இருக்கும் அப்பள்ளிகளைப் பழுதுபார்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) : கல்வித் துறை அரசு ஆணை எண் 342, நாள் 1-4-92-ன்படி பொதுப்பணித் துறையிலிருந்து 14-7-94 இல் செங்கோட்டை ஊராட்சி ஒன்றியத்திற்கு 23 ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அவ்வாறு ஒப்படைக்கப்பட்ட ஊராட்சி ஒன்றியத்தின் பராமரிப்பில் 23 பள்ளிகள் உள்ளன. அவற்றில் கீழ்க்கண்ட 13 பள்ளிகள் பழுதுபார்க்க தேர்வு செய்யப்பட்டுள்ளன:

1. பார்வதிபுரம் பள்ளிக் கட்டிடம்
2. கேசவபுரம் பள்ளிக் கட்டிடம்





3. தவளை பள்ளிக் கட்டிடம்
4. அச்சன்புதூர் பள்ளிக் கட்டிடம்
5. தெற்குமேடு பள்ளிக் கட்டிடம்
6. சாம்பவர் வடகரை மேலூர் பள்ளிக் கட்டிடம்
7. இலத்தூர் பள்ளிக் கட்டிடம்
8. ஆயக்குடி கீழூர் பள்ளிக் கட்டிடம்
9. பாலமார்த்தாண்டபுரம் பள்ளிக் கட்டிடம்
10. திருவெற்றியூர் பள்ளிக் கட்டிடம்
11. அகரக்கட்டு பள்ளிக் கட்டிடம்
12. பொய்கை பள்ளிக் கட்டிடம்
13. நடராஜபுரம் பள்ளிக் கட்டிடம்.

**39—**

**சுங்கக் கட்டணம் வசூலிப்பதைத் தடை செய்தல்**

**வினா 4047—திரு. ச. இராஜரெட்டி :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், தளி தொகுதி, அஞ்செட்டியில் 2 சுங்கச் சாவடிகளிலும், நாட்ராம்பாளையம், உரிகம், நெகட்டி, தொட்டமஞ்சி போன்ற கிராமங்களிலிருந்து கொண்டு செல்லப்படும் விவசாயப் பொருட்களுக்கு சுங்கக் கட்டணம் வசூலிக்கப்படுவதைத் தடை செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர் :**

தருமபுரி மாவட்டம், தளி தொகுதி, அஞ்செட்டியில் இரு சுங்கச் சாவடிகளிலும், நாட்ராம்பாளையம், உரிகம், நெகட்டி, தொட்டமஞ்சி

[1998 மார்ச் 19

போன்ற கிராமங்களிலிருந்து கொண்டு செல்லப்படும் விவசாயப் பொருட்களுக்கு அவை அப்பிரதேசத்தில் அறிவிக்கை செய்யப்பட்டிருந்தால், 1987–ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மை விளைபொருள் விற்பனை (ஒழுங்குபடுத்துதல்) சட்டத்தின் பிரிவு 24 (1)-ன் படியும், 1991–ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மை விளைபொருள் விற்பனை (ஒழுங்குபடுத்துதல்) சட்டம் விதி எண் 33-ன்படியும் ரூ. 100/- மதிப்புள்ள விளைபொருளுக்கு ரூ.1/- என்கிற விகிதத்தில் விற்பனைக் கட்டணத்தை வியாபாரிகள் செலுத்த வேண்டும். இதைத் தடை செய்ய சட்டத்தில் இடமில்லை. விவசாய விளைபொருள்களை அப்பகுதி விவசாயிகள் விற்பனைக்காகக் கொண்டு சென்றால் அவர்கள் கட்டணம் கட்டத் தேவையில்லை.

40—

### மாம்பழம், திராட்சை மற்றும் பூக்கள் ஏற்றுமதி

**வினா 7036—திரு. ஜ. கணேசன் :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாம்பழம், திராட்சை மற்றும் பூக்கள் ஏற்றுமதியில் தமிழகத்தின் பங்கு என்ன ?

(ஆ) இந்தியாவில் உள்ள மாநிலங்களில் தமிழகத்தின் நிலை பற்றிய விவரம் என்ன ?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர் :**

(அ) தமிழகத்திலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் முக்கிய பழவகைகள் மா, விதையில்லா திராட்சை ஆகியவை ஆகும். 1994-95–ஆம் ஆண்டில் சுமார் ரூ.7.50 கோடி மதிப்பில் மாம்பழம் ஏற்றுமதி செய்யப்பட்டது. தமிழ்நாட்டில் மலர்களின் மொத்த உற்பத்தி 75,475 மெட்ரிக் டன் ஆகும். ஓசூரில் மலர்கள் பூங்கா ஒன்று அமைத்து ஏற்றுமதியை ஊக்குவிக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. மேலும் மலர்ச் சாகுபடியை ஊக்குவிக்க நிதி தொடர்பான சில சலுகைகளை அரசு சமீபத்தில் அறிவித்துள்ளது.



1998 மார்ச் 19]

(ஆ) இந்தியாவிலுள்ள மாநிலங்களில், தமிழ்நாடு மாம்பழம் உற்பத்தியில் நான்காவது இடத்திலும், திராட்சை உற்பத்தியில் ஐந்தாவது இடத்திலும் உள்ளது.

41—

### கரும்புச் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் சாலை செப்பனிடுதல்

**வினா 11418—திரு. ந. பாண்டுரங்கன் :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் ஒன்றியம், ராஜபாட்டை சாலையை கரும்புச்சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் செப்பனிட்டுத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) : திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் ஒன்றியம், ராஜபாட்டை சாலை, பெரணமல்லூர் ஊராட்சி ஒன்றியச் சாலையாகும். மேற்கண்ட சாலையைச் செப்பனிட தோராயமாக ரூ.40/- இலட்சம் செலவாகும். செய்யாறு கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு ஒரு சாலை அமைக்க ரூ.70/- இலட்சம் மதிப்பீட்டில் 1995-96–ஆம் ஆண்டு புதிய சாலை வேலைகளில் அனுமதி அளிக்கப்பட்டு, தற்போது கரும்புச் சாலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் செய்யப்பட்டு வருகிறது. எனவே, தற்போதைய நிதிப் பற்றாக்குறை நிலையில் குறிப்பிட்ட ராஜபாட்டை சாலை வேலையை கரும்புச் சாலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்ய தற்போது இயலாது.

[1998 மார்ச் 19

**42—**

## நீலகிரியில் மலர்க் கண்காட்சி

**வினா 11835—திரு. ஐ. கணேசன் :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரியில் 102-ஆவது மலர்க் கண்காட்சியைக் காண சுற்றுலாப் பயணிகள் எவ்வளவு பேர் வருகை புரிந்தார்கள் ?

(ஆ) வசூலான தொகை எவ்வளவு ?

(இ) உதகமண்டலம் அரசு தாவரவியல் பூங்காவைப் பராமரிக்க ஆண்டுக்கு ஆகும் செலவு எவ்வளவு ?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர் :**

(அ) நீலகிரியில் 102-ஆவது மலர்க் கண்காட்சியைக் காண 50,000 சுற்றுலாப் பயணிகள் வருகை புரிந்துள்ளனர்.

(ஆ) இதன்மூலம் வசூலான தொகை ரூ.4.77 இலட்சம்.

(இ) உதகமண்டலம் அரசு தாவரவியல் பூங்காவைப் பராமரிக்க ஆண்டுக்கு ரூ.57.00 இலட்சம் செலவாகிறது.

**43—**

## காபி ஏற்றுமதி விவரம்

**வினா 12088—திரு. ஐ. கணேசன் :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1996-97, 1997-98-ஆம் ஆண்டுகளில் வெளிநாடுகளுக்கு எவ்வளவு காபி ஏற்றுமதி செய்யப்பட்டது ?

(ஆ) அதனால் எவ்வளவு அந்நியச் செலாவணி கிடைத்தது ?



1998 மார்ச் 19]

(இ) காபியின் தரத்தை உயர்த்தவும், உற்பத்தித் திறனை அதிகப்படுத்தவும், பயிர்களுக்கு ஏற்படும் நோயைத் தடுக்கவும் அரசு எடுத்துவரும் நடவடிக்கை பற்றிய விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர் :**

(அ) 1996-97—ஆம் ஆண்டில் இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட காபி 1,81,258 மெட்ரிக் டன்களாகும். 1997-98—ஆம் ஆண்டில் (11-11-1997 வரை) 88,358 மெட்ரிக் டன்கள் ஏற்றுமதி செய்யப்பட்டது.

(ஆ) 1996-97–ஆம் ஆண்டில் காபி ஏற்றுமதி மூலம் 1466.67 கோடி ரூபாயும், 1997-98-ஆம் ஆண்டில் (11-11-1997 வரை) 988.61 கோடி ரூபாயும் கிடைத்துள்ளது.

(இ) காபியின் தரத்தை உயர்த்தவும், உற்பத்தித் திறனை அதிகப்படுத்தவும் மத்திய அரசின்கீழ் இயங்கி வரும் காபி வாரியம் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. இவ்வாரியத்தின் கிளைகள் ஒருங்கிணைப்பு அலுவலர்கள் மூலம் (Liaison Officer) உதகை, ஏற்காடு, கொடைக்கானல் போன்ற இடங்களில் இயங்கி வருகிறது.

காபி நாற்றுக்கள் ஏற்காடு, செம்மேடு, மணியார்குண்டம், படசோலை, கல்லார், சிறுமலை, தாண்டிக்குடி போன்ற அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டு வருகிறது.

மேலும் நீலகிரி மாவட்டத்தில் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் தரமிக்க உயர் விளைச்சல் தாவல்ல காபி விதைகள் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி விவசாயிகளுக்கும் 50 சதவீத மானியத்தில் வழங்கப்பட்டு வருகிறது. 1997-98–ஆம் ஆண்டுக்கு 0.30 இலட்சம் ரூபாய் செலவில் காபி நாற்றுக்கள் விநியோகிக்கப்படவுள்ளன. 1997 அக்டோபர் மாதம் வரையில் 0.175 இலட்சம் ரூபாய் செலவில் 14,000 எண்கள் காபி நாற்றுக்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

[1998 மார்ச் 19

44—

## ஏரிகளை ஆழப்படுத்தி கால்வாய்களை சீர் செய்தல்

**வினா 1793—திரு. அ. மாரிமுத்து :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வானூர் தொகுதி, புளிச்சம்பள்ளம், வானூர், தென்சிறுவள்ளூர் ஆகிய இடங்களில் உள்ள ஏரிகளை ஆழப்படுத்தவும், மதகு மற்றும் நீர்வரத்துக் கால்வாய்களைச் சீர் செய்யவும் அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், இந்நிதியாண்டிலேயே பணிகளைத் துவங்க அரசு முன்வருமா ?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர் :**

(அ) ஆம்.

(ஆ) 1. புளிச்சம்பள்ளம் பெரிய ஏரி :

இதன் ஆயக்கட்டு 254 ஏக்கர். இப்பணி வெளிநாட்டு உதவித் திட்டத்தின்கீழ் மதிப்பீடு ரூ.2.50 இலட்சத்திற்கு அங்கீகரிக்கப்பட்டு பணி தொடங்கப்பட்டுள்ளது. இதில் ஏரிக்கரை பலப்படுத்தும் வேலை, மேலும் 2-ம் மதகின் வெளிப்போக்கியை சீர் அமைக்கும் பணிகள் செய்யப்பட உள்ளன.

2. புளிச்சம்பள்ளம் சித்தேரி :

இதன் ஆயக்கட்டு 205 ஏக்கர். ஏரி தூர்வாரிப் புனரமைக்கும் திட்டத்திற்கு ரூபாய் 10 இலட்சம் மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தப்புள்ளி தீர்வு செய்யப்பட்டதும் பணி துவக்கப்படும். இதில் ஏரி தூர் வாருதல் மற்றும் வரத்துக் கால்வாய் சீர் அமைத்தல் முதலிய பணிகள் செய்யப்பட உள்ளன.



1998 மார்ச் 19]

3. தென்சிறுவள்ளூர் ஏரி :

இதன் ஆயக்கட்டு 412 ஏக்கர். ஐரோப்பியப் பொருளாதார மேம்பாட்டுக் குழுவின் பகுதி-II திட்டத்தின்கீழ் பணி 7/96-ல் துவக்கப்பட்டு நடைபெற்று வருகின்றது. பணி முடிவடையும் நிலையில் உள்ளது. இதன் மதிப்பீடு ரூ.21.25 இலட்சம். இதுவரை ரூ.19.14 இலட்சங்கள் செலவு செய்யப்பட்டுள்ளது. இதில் கண்மாய்களை மேம்படுத்தும் பணி, மடைகள் பழுதுபார்க்கும் பணி, சமுதாயக் கிணறு, விவசாயிகள் சங்கக் கட்டடம் கட்டும் பணிகள் ஆகியவை அடங்கும்.

45—

## வாய்க்கால் அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடு

**வினா 5755—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரம்பிக்குளம் - ஆழியாறு பாசன வாய்க்கால் அபிவிருத்திக்காக எவ்வளவு தொகை செலவழிக்கப்பட்டுள்ளது?

(ஆ) கீழ்பவானி வாய்க்கால், மேட்டூர் வலது, இடது கரை வாய்க்கால், காளிங்கராயன் வாய்க்கால்கள் அபிவிருத்திக்காக எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர் :**

(அ) பரம்பிக்குளம் - ஆழியாறு பாசனத் திட்ட அபிவிருத்திக்காக, தற்போது உலக வங்கி உதவியுடன் தமிழ்நாடு நீர்வள ஆதார அமைப்புத் திட்டத்தின்கீழ் ரூ. 103.50 கோடி செலவு செய்ய பூர்வாங்கப் பணிகள் நடைபெற்று வருகின்றன. தற்சமயம் இப்பணிகளுக்கான 19 ஒப்பந்தப்புள்ளிகள் சுமார் ரூ.32 கோடிக்கு கோரப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளன. அனைத்துப் பணிகளும் தொடர்ந்து செயல்படுத்தினால் உலக வங்கித் திட்டம் 2001 ஆம் ஆண்டிற்குள் முடிவடையும்பொழுது பரம்பிக்குளம் - ஆழியாறு திட்ட வாய்க்கால்கள்

அனைத்திலும் சீரமைப்புப் பணிகள் முடிவடையும். பாசனப் பகுதிகளுக்குத் தேவையான நீர் தங்குதடையின்றி வழங்குவதற்கு வழி ஏற்படும். ஜூலை 1997 வரை செலவழிக்கப்பட்ட தொகை ரூ.24,49,000 ஆகும்.

(ஆ) கீழ்பவானித் திட்டம் பகுதியில் கீழ்க்கண்ட வாய்க்கால்கள் அமைந்துள்ளன:-

1. கீழ்பவானி பிரதான வாய்க்கால்
2. காளிங்கராயன் வாய்க்கால்
3. தடப்பள்ளி வாய்க்கால்
4. அரக்கன்கோட்டை வாய்க்கால் (பழைய ஆயக்கட்டு வாய்க்கால்கள்)

மேற்கண்ட வாய்க்கால்களின் பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்புப் பணிகளுக்கு 2701-மேஜர் மற்றும் மீடியம் இரிகேஷன்-18-மெயின்டனன்ஸ் என்ற தலைப்பில் வருடந்தோறும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. இத்தலைப்பின்கீழ் 1997-98 ஆம் ஆண்டுக்கு ஆயக்கட்டு பரப்பினைக் கருத்திற்கொண்டு கீழ்க்கண்ட வகையில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது:—

| | | |
|---|---|---|
| 1. கீழ்பவானி அணைத் திட்டம் (கீழ்பவானி அணை மற்றும் வாய்க்கால் அடங்கியது) | .. | ரூ.86.76 இலட்சங்கள் |
| 2. காளிங்கராயன் வாய்க்கால் | .. | ரூ.9.00 இலட்சங்கள் |
| 3. தடப்பள்ளி வாய்க்கால் | .. | ரூ.20.00 இலட்சங்கள் |
| 4. அரக்கன்கோட்டை வாய்க்கால் | .. | ரூ.8.10 இலட்சங்கள் |

கடந்த 1996-97 ஆம் ஆண்டிற்கு பி.ஈ. 1996-97-இல் ரூ.6,00,000 (ரூபாய் ஆறு இலட்சங்கள் மட்டும்) நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால் இத்தொகைக்குத் கடன் சான்று வழங்கப்பட்டதால் செலவினம் ஏதும் மேற்கொள்ளப்படவில்லை. நீர்வள ஆதார அமைப்பின்கீழ் உலக வங்கி நிதி உதவியுடன் கீழ்பவானித் திட்ட வாய்க்கால்களின் அபிவிருத்திப் பணிகளுக்கான ரூ.33.70 கோடி ரூபாய்க்கு உத்தேச





மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இதற்கு உலக வங்கியின் ஒப்புதல் கிடைக்கப்பெற்று நிதி ஒதுக்கீடு கிடைக்கப் பெற்றவுடன் கீழ்பவானித் திட்ட வாய்க்கால்களின் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**46—**

### ஏரி ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்

**வினா 6057—திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புவனகிரி தொகுதி, புவனகிரி ஒன்றியத்தில் உள்ள உளுத்தூர் ஏரி, சித்தேரி ஏரி, சீப்பான் ஏரி, பெருமாள் ஏரி ஆகியவற்றில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி அவற்றை ஆழப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

புவனகிரி தொகுதி, புவனகிரி ஒன்றியத்திலுள்ள உளுத்தூர் ஏரி, சித்தேரி ஏரி, சீப்பான் ஏரி, பெருமாள் ஏரி ஆகியவற்றின் கரைகளை பலப்படுத்தவும், ஆக்கிரமிப்புகளை அகற்றிடவும் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. மதிப்பீட்டிற்கு ஒப்புதலும், நிதி ஆதாரங்களும் கிடைக்கப் பெற்றபின் பணி மேற்கொள்ளப்படும்.

**47—**

### கான்கிரீட் தளம் அமைத்தல்

**வினா 7225—திரு. த. பூவேந்தன்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், பாலாறு-பொருந்தலாறு அணையிலிருந்து மேல்கரைப்பட்டி செல்லும் பாசன வாய்க்காலில் கான்கிரீட் தளம் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[1998 மார்ச் 19

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், பாலாறு-பொருந்தலாறு அணையிலிருந்து மேல்கரைப்பட்டி செல்லும் பாசன வாய்க்காலில் கான்கிரீட் தளம் அமைக்கும் கருத்து தற்போது ஏதுமில்லை.

**48—**

**தடுப்புச் சுவர் கட்டுதல்**

**வினா 8527—திரு. சி. கோபு:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், அணைக்கட்டு தொகுதி, நிலத்தடி நீர் மட்டம் உயர மேல்அரசம்பட்டு மலைக்கோயில் ஆற்றில் தடுப்புச் சுவர் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை:

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): வேலூர் மாவட்டம், வேலூர் வட்டம், மேல் அரசம்பட்டு கிராமம் அருகே கோயில்மலை ஆற்றில் (மண்கோயிலாறு) குறுக்கே நீர்த்தேக்கம் அமைப்பதற்கான திட்டம் தலைமைப் பொறியாளர் (திட்ட உருவாக்கம்) அவர்களது பரிசீலனையில் உள்ளது.

**49—**

**கால்வாயை மராமத்து செய்தல்**

**வினா 8770—திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், திருபுவனம் ஒன்றியம், பெரமலூர் கால்வாயை மராமத்து செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?



1998 மார்ச் 19]

(ஆ) ஆம் எனில், எப்போது பணிகள் துவங்கும்?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) உலகவங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு நீர்வள ஆதார ஒருங்கிணைப்புத் திட்டம் கிரடிட் எண் 2745-ஐ மூலம் பெறப்படும் நிதி ஆதாரத்தைக் கொண்டு மராமத்துப் பணிகள் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

மதுரை மாவட்டம், விரகனூர் ரெகுலேட்டரில் வலது புறம் கால்வாயிலிருந்து பிரிவு 23 உப கால்வாய்களில் பெரமலூர் உபகால்வாயும் ஒன்றாகும். வலதுபுறக் கால்வாயில் உப கால்வாய்களை மராமத்து செய்ய ரூ.39.60 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மதிப்பீட்டுக் குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு ஒப்பளிப்பு கிடைக்கப் பெற்றவுடன் தொழில் நுட்ப ஒப்புதலளித்து ஒப்பந்தப்புள்ளி கோரி மராமத்துப் பணிகள் மேற்கொள்ளப்படும். 1998-99-ஆம் ஆண்டில் மராமத்துப் பணிகள் திட்டமிடப்பட்டுள்ளது.

**50—**

**வாய்க்காலில் ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை**

**வினா 9729—திரு. ச. அழகுவேலு:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம் வட்டத்திலுள்ள வளவனூர் ஏரிக்கு பெண்ணையாற்றிலிருந்து வரும் வரத்து வாய்க்காலில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம் வட்டத்திலுள்ள வளவனூர் ஏரிக்கு பெண்ணையாற்றிலிருந்து வரும் வரத்து வாய்க்காலான அழங்கால் வாய்க்காலைச் செப்பனிடும் பணி உலக வங்கி நிதியுதவித் திட்டத்தின் கீழ் எடுத்துச் செயல்படுத்தப்பட உள்ளது. அச்சமயத்தில் இந்த ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு வாய்க்கால் சீரமைக்கப்படும்.

[1998 மார்ச் 19

51—

**குளம் குட்டைகளுக்குத் தண்ணீர் நிரப்பும் திட்டம்**

**வினா 11147—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் தெற்குப் பகுதியிலுள்ள குளம் குட்டைகளுக்கு வருடம் ஒருமுறை பி.ஏ.பி.-யிலிருந்து தண்ணீர் விட்டு நிரப்பும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

(அ) திருப்பூர் தெற்குப் பகுதியிலுள்ள குளம் குட்டைகளுக்கு வருடம் ஒருமுறை பி.ஏ.பி.-யிலிருந்து தண்ணீர் விட்டு நிரப்பும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

52—

**தமிழ்நாடு இல்லத்தில் சலுகைகள்**

**வினா 11572—திரு. வி. கே. லட்சுமணன்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுதில்லியிலுள்ள தமிழ்நாடு இல்லத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் தங்குவதற்கு வாடகை நாளொன்றுக்கு ரூ.30/-லிருந்து ரூ.100/-ஆக உயர்த்தி, அந்த விருந்தினர் இல்லத்தில் எஸ்.டி.டி., ஃபேக்ஸ், எல்க்ட்ரானிக் டைப்ரைட்டர் போன்ற வசதிகளை செய்து கொடுக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

புதுதில்லியிலுள்ள தமிழ்நாடு இல்லத்தில் சலுகைக் கட்டண அறை வாடகையை ரூ.30/-லிருந்து ரூ.100/-ஆக உயர்த்தும் கருத்துரு தற்போது



1998 மார்ச் 19]

ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. புதுதில்லி தமிழ்நாடு இல்லத்தில் கணிப்பொறி, தொலைபேசி வசதி, லேசர் அச்சு, ஸ்பைரல் புத்தகம் கட்டுதல், ஃபேக்ஸ் முதலியவை கொண்ட தொழில் அலுவல் மையம் தொடங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையிலுள்ளது.

53—

**மகுடஞ்சாவடி சாலையை அகலப்படுத்துதல்**

**வினா 1031—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி - சேலம் சாலையில் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க எடப்பாடி - மகுடஞ்சாவடி சாலையை அகலப்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர். க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள எடப்பாடி-மகுடஞ்சாவடி சாலை 17.8 கி.மீ.(0/0-17/8) நீளமுடைய, அரசு பெரிய மாவட்ட சாலையாகும்.

இச்சாலையில் கி.மீ.0/0-6/8, கி.மீ. 7/0-8/6, கி.மீ.1/6-11/0, கி.மீ. 10/0-16/4 மற்றும் கி.மீ.17/4-17/8 ஆகிய 9.6 கி.மீ. நீள சாலைப் பகுதிகள் இருவழித்தட அகலம் (7.0 மீட்டர்) கொண்டவையாகவும் கி.மீ.6/8-7/0 கி.மீ 8/6-10/6, கி.மீ. 11/0-16/0 மற்றும் கி.மீ.16/4-17/4 ஆகிய 8.2 கி.மீ. நீள சாலைப் பகுதிகள் ஒரு வழித்தட அகலம் ((முறையே 3.66, 1.67, 5.33 மீட்டர் ஏற்கனவே இடதுபுறம் அகலப்படுத்தப்பட்டுள்ளது) கொண்டவையாகவும் உள்ளன.

இந்த 8.2 கி.மீ. நீள ஒரு வழித்தட அகலம் (5.33 மீட்டர்) கொண்ட சாலைப் பகுதிகளை மட்டும் வலதுபுறம் (1.67 மீட்டர்) அகலப்படுத்தி இருவழித்தடமாக்கப்பட வேண்டும். இதற்கு சுமார் ரூ.20.00 இலட்சம் தேவைப்படும். மேலும், இச்சாலை கி.மீ. 0/2-4-ல் சரபங்கா நதியின் குறுக்கே அமைந்துள்ள குறுகிய அகலமுடைய

[1998 மார்ச் 19

கண்மாய் தாம்போகிக்குப் பதிலாக இருவழித்தட உயர்மட்டப் பாலம் அமைக்கப்பட வேண்டும். இதற்கு சுமார் ரூ.130 இலட்சம் தேவைப்படும். ஆக மொத்தம் இப்பணிகளுக்கு சுமார் ரூ.150 இலட்சம் தேவைப்படும்.

இப்பணி அரசால் அங்கீகரிக்கப்பட்ட திட்டங்கள் எதிலும் இடம் பெறவில்லை. அரசு ஆண்டுதோறும் பகுதி-2 திட்டத்திற்குக் குறைந்த அளவே நிதி ஒதுக்கீடு செய்து வருவதால் பெருந்தொகை தேவைப்படும் இப்பணியை அண்மைக்காலங்களில் இத்துறையின் பகுதி-2 திட்டத்தில் மேற்கொள்ளும் சாத்தியக்கூறுகள் இல்லை.

**54—**

## புதிய பேருந்துகளை இயக்குதல்

**வினா 2826—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் ஒன்றியம், அமரகுந்தி கிராமத்திற்கு 16-ம் எண் பேருந்துக்கு இணையாக மற்றொரு பேருந்து தடம் எண் ஓ-7-க்கு இணையாக மற்றொரு பேருந்து, தாரமங்கலத்திலிருந்து, கொசவரெட்டிபட்டியில் பிரிந்து, அமரகுந்தி வழியாக மேச்சேரி செல்ல ஒரு பேருந்து என புதிய அரசுப் பேருந்துகளை இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது இயக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) கோரிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள கசவரெட்டிப்பட்டி (கொசவரெட்டிபட்டி) தற்போது பேருந்துகள் இயக்கப்படும் தாரமங்கலம் - அமரகுந்தி சாலையிலிருந்து 0.4 கி.மீ தொலைவிலும், தாரமங்கலம் - நங்கவள்ளி சாலையிலிருந்து 0.7 கி.மீ. தொலைவிலும் உள்ளது. எனவே, அரசு வழிகாட்டுதல்களின்படி பேருந்துகள் இயக்கப்படும் வழித்தடங்களிலிருந்து ஒரு கி.மீ. தொலைவில் உள்ளதால் கசவரெட்டிபட்டி பேருந்து வசதி பெற்ற கிராமமாகக் கருதப்படுகிறது.



1998 மார்ச் 19]

அமரகுந்தி கிராமத்திற்கு 16, இ-7, எஸ்.2, எஸ்.8, ஓ.11 ஆகிய பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

மேற்குறிப்பிட்ட நகரப்பேருந்துகள் மட்டுமல்லாது குட்டப்பட்டி கிராமம் வழியாகவும் மேட்டூரிலிருந்து மேச்சேரிக்கு இரண்டு நகரப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. மேற்கூறியவாறு அமரகுந்தி கிராமத்திலிருந்து தாரமங்கலம், ஓமலூர், மேச்சேரி, மேட்டூர், ஆகிய நகரங்களுக்குச் செல்ல நேரடியாகவும் இணைப்பாகவும் போதிய பேருந்து வசதிகள் உள்ளதால் கேட்கப்பட்ட வழித்தடத்தில் கூடுதல் நடைகள் இயக்கும் அவசியம் இல்லை.

(ஆ) வினா எழாது.

**55—**

## சாலை வசதி ஏற்படுத்துதல்

**வினா 5173—திரு. அ. வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூர் மாவட்டம், பரங்கிப்பேட்டை பெரிய தெருவிலுள்ள பெரும் பள்ளத்தை மேடாக்கிச் சாலையாக மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

கடலூர் மாவட்டம், பரங்கிப்பேட்டையிலுள்ள அரசு இதர மாவட்ட சாலையான கீரைக்காரன் தெரு என்னும் பெரியதொரு சாலை 1.865 கி.மீ. (0/000-1/865) நீளம் உள்ளது. இச்சாலையில் ஏற்பட்ட பெரும் பள்ளத்தை 'வெள்ள நிவாரணப் பணித்திட்டத்தின் கீழ் உயர்த்திச் சமன் செய்து சாலைத்தளம் மேம்படுத்தப்பட்டுள்ளது. தற்போது இச்சாலையில் நீர் தேங்கி நிற்காமல் வழிந்து சென்று விடுவதால் சாலைத்தளம் பாதிப்படையாமல் போக்குவரத்திற்கு ஏற்றவாறு நன்றாகவுள்ளது.

56—

## தார்ச்சாலை அமைக்கும் திட்டம்

**வினா 6449—திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், வெள்ளக்கோவில் தொகுதியில் காசிலிங்கம்பாளையம்-பகவான்கோவில் சாலையில் உச்சவலகு வழியாகச் செல்லும் பள்ளிப்பட்டிசாலையில் 1.80 கி.மீ. தூரம் தார்ச்சாலை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது திட்டம் நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ). ஈரோடு மாவட்டம், வெள்ளக்கோவில் தொகுதியில் காசிலிங்கம்பாளையம்-பகவான்கோவில் சாலையில் உச்சவலகு வழியாகச் செல்லும் பள்ளிப்பட்டி சாலையில் 1.80 கி.மீ. தூரம் தார்ச்சாலையாக ஆக்குவதற்கு ரூ.10.80 இலட்சம் மதிப்பீட்டில் தேசிய விவசாய மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் நிதியுதவியுடன் (நபார்டு) பேருந்து சாலைகள் திட்டத்தின் மூலம் அரசாணை நிலை எண் 357, நெடுஞ்சாலைத் துறை, நாள் 8-8-1997-இல் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

57—

## புதிய பாலம் கட்டும் திட்டம்

**வினா 6495—திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதியில் முக்குட்டு சாலைக்கும் மஞ்சக்கொல்லைக்கும் இடையே வைகை ஆற்றின் குறுக்கே புதிய பாலம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?



விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதியில் முக்குட்டு சாலைக்கும் மஞ்சக்கொல்லைக்கும் இடையே வைகை ஆற்றின் குறுக்கே தரைமட்டத் தாம்போகி அமைக்கும் பணி, தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் ஊரக உள்கட்டமைப்பு வளர்ச்சி நிதி திட்டம்-3-இல் ரூ.200 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளுவதற்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

58—

## பயணியர் விடுதி கட்டுதல்

**வினா 7643—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செந்துறையில் புதியதாக பயணியர் விடுதி கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): மேற்காணும் பயணியர் விடுதி கட்டித்தர செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

59—

## பேருந்து தடம் மாற்றம்

**வினா 9492—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதியில், சேலம் பழைய பேருந்து நிலையத்திலிருந்து தொளசம்பட்டி வழியாக செல்லும் ஓ.11 நகரப்பேருந்தை மல்லிக்குட்டை வழியாகவும் செல்ல அரசு ஆவன செய்யுமா?

[1998 மார்ச் 19

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

கோரிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தடம் எண் ஓ. 11 பேருந்து, சேலம் பேருந்து நிலையத்திலிருந்து தொளசம்பட்டி வழியாக விருதாசம்பட்டி காட்டுவளைவு வரை இயக்கப்பட்டு வருகிறது. இப்பேருந்தை சேலத்திலிருந்து மல்லிக்குட்டை வழியாக இயக்கினால் தொளசம்பட்டி ஊர் மக்கள், விருதாசம்பட்டி காட்டுவளைவு செல்வதற்கான பேருந்து வசதியை இழக்க நேரிடும். தற்போது தடம் எண் எஸ். 2 என்ற பேருந்து மூலம் சேலத்திலிருந்து ஜங்ஷன், தாரமங்கலம், அமரகுந்தி, மல்லிக்குட்டை வழியாக ஓலைப்பட்டி வரை தினசரி 6 நடைகள் இயக்கப்பட்டு வருகிறது. இந்த நடைகளில் பயணிகள் பிரயாணம் சராசரியாக 55% மட்டுமே உள்ளது. எனவே, கோரிக்கை வழித்தடத்தில் தற்போதுள்ள பேருந்து வசதியே போதுமானது என்பதால் தடமாற்றம் ஏதும் தேவையில்லை எனக் கருதப்படுகிறது.

**60—**

## பேருந்து நிலையம் கட்டுதல்

**வினா 9792—திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூந்தமல்லியில் தற்போது இயங்கிவரும் பேருந்து நிலையத்தின் சுற்றுப்புறமுள்ள சர்வே எண் 115 அடங்கிய 6.50 ஏக்கர் நிலத்தில் பல்லவன் போக்குவரத்துக் கழகம் புதிய பேருந்து நிலையம் கட்டத் திட்டமிட்டு இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், மேற்படி நிலத்தைக் கையகப்படுத்தி பல்லவன் போக்குவரத்துக் கழகத்திற்கு உடனடியாக ஒப்படைக்குமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): இந்து அறநிலையத் துறைக்குச் சொந்தமான புல எண் 115 எண்ணுள்ள பூந்தமல்லி கிராமத்தில் உள்ள 6.5 ஏக்கர் நிலத்தை நில மாற்றம் செய்து தரும்படி 12-6-1996 அன்று மாநகர



1998 மார்ச் 19]

போக்குவரத்துக் கழகத்தால் கோரப்பட்டது. அந்நிலத்தின் மதிப்பு மிக அதிகமாக உள்ளது. தேவைப்படும் நிலத்தின் அளவை 6.5 ஏக்கரிலிருந்து 4.0 ஏக்கராகக் குறைத்தாலும் அதன் தோராய மதிப்பு ரூ. 2.1 கோடியாக உள்ளது. மாநகர போக்குவரத்துக் கழகத்தின் நிதி நிலைமையினைக் கருத்திற்கொண்டு மிக அதிகமான விலை கொடுத்து நிலத்தைப் பெறும் நிலையில் இல்லை. எனவே, இந்நிலத்தை நீண்ட காலக் குத்தகை அடிப்படையில் பெற்று பேருந்து நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**61—**

## குமாரபாளையத்திற்குக் கூடுதல் பேருந்து வசதி

**வினா 10174—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி நகரில் இருந்து குமாரபாளையத்திற்குப் போதுமான பேருந்து இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், கூடுதல் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) எடப்பாடியிலிருந்து குமாரபாளையத்திற்குக் கீழ்கண்டவாறு தற்போது பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.

தேவூர் வழியாக:

| | |
|---|---|
| தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக நகரப் பேருந்துகள் 6 மூலம் | -- 64 நடைகள் |
| தனியார் புறநகரப் பேருந்துகள் 12 மூலம் | -- 84 நடைகள் |
| கல்வடங்கம்/நெடுங்குளம் வழியாக: | |
| தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக நகரப்பேருந்துகள் 3 மூலம் | -- 26 நடைகள் |
| நாளொன்றுக்கு | -- 174 நடைகள் |

மேற்கூறியவாறு கேட்கப்பட்ட வழித்தடத்தில் அதிக அளவு பேருந்து வசதி உள்ளது.

[1998 மார்ச் 19

(ஆ) போதுமான அளவு பேருந்து வசதி உள்ளதால் கூடுதல் பேருந்து இயக்கும் உத்தேசம் இல்லை.

62—

## புதிய வழித்தடம் அனுமதித்து நகரப்பேருந்து இயக்குதல்

**வினா 10383—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம் மேட்டூரிலிருந்து, விருதாசம்பட்டி, குட்டப்பட்டி, நங்கவள்ளி வழியாக ஜலகண்டாபுரத்திற்கு ஒரு புதிய வழித்தடம் அனுமதித்து நகரப்பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

கோரிக்கையில் கேட்கப்பட்ட வழித்தட ஊர்களின் வழியாக மேட்டூரிலிருந்து ஜலகண்டாபுரத்திற்கு நேரடியாக நகரப்பேருந்து வசதி இல்லை. எனினும், அனைத்து தடப்பகுதிகளுமே கீழ்க்கண்டவாறு நகரப்பேருந்து வசதி பெற்றுவருகின்றன:

1. மேட்டூர்-விருதாசம்பட்டி-குட்டப்பட்டி தடப்பகுதியில்

(அ) மேட்டூர்-மேச்சேரி (வழி) குஞ்சாண்டியூர், விருதாசம்பட்டி, குட்டப்பட்டி வழித்தட நகரப்பேருந்து எண் 11 மூலம் 14 நடைகள்.

(ஆ) மேட்டூர் இரயில்வே நிலையம் - தாரமங்கலம் (வழி) குஞ்சாண்டியூர், விருதாசம்பட்டி, குட்டப்பட்டி, தொளசம்பட்டி வழித்தட நகரப் பேருந்து தடம் எண் 16 மூலம் 12 நடைகள்.

2. குட்டப்பட்டி - நங்கவள்ளி - ஜலகண்டாபுரம் தடப்பகுதியில்

(அ) மேச்சேரி - ஜலகண்டாபுரம் (வழி) குட்டப்பட்டி நங்கவள்ளி வழித்தட நகரப்பேருந்து தடம் எண் 10 மூலம் 4 நடைகள்.

(ஆ) மேலும் இத்தடப்பகுதிகளை உள்ளடக்கி இயக்கப்படும் பல்வேறு புறநகர் பேருந்துகள் மூலமும்.



1998 மார்ச் 19]

மேலே குறிப்பிட்டவாறு அனைத்துப் பகுதிகளும் பேருந்து வசதி பெற்றுவரும் இவ்வழித்தடத்தின் தடநீளம் 34 கி.மீ. ஆகும். மோட்டார் வாகன விதிகளின்படி ஏற்கெனவே பேருந்து வசதி பெற்றுவரும் பகுதிகளில் 30 கி.மீ. தூரத்திற்கு அதிகமாக நகரப்பேருந்து இயக்க அனுமதி இல்லை. எனவே கேட்கப்பட்ட வழித்தடத்தில் நகரப்பேருந்து இயக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

63—

## நகரப் பேருந்து இயக்குதல்

**வினா 10304—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூரிலிருந்து மேச்சேரிக்கு செம்மாண்டப்பட்டி அரங்கனூர், செம்மானூர், காமனேரி வழியாக ஒரு புதிய நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

கோரிக்கையில் குறிப்பிட்டுள்ளபடி அரங்கனூர் கிராமப் பொதுமக்கள் மேச்சேரிக்குச் செல்ல நேரடியாகவே கீழ்க்கண்ட நகரப் பேருந்தில் நெரிசல் நேர (Peak hour) பேருந்துகள் காலையிலும் மாலையிலும் இயக்கப்படுகின்றன.

தடம் எண் 24:

மேட்டூர்-அரங்கனூர் (வழி) மேச்சேரி, காமனேரி, சிந்தாமணியூர், செம்மாண்டப்பட்டி - 4 நடைகள்: இந்த நெரிசல் நேரப் பேருந்துகளில் பயணிகள் பிரயாணம் 38 சதவீதம் மட்டுமே உள்ளது. இதிலிருந்து தற்போது அளிக்கப்படும் பேருந்து வசதி பயணிகளின் தேவையை நிறைவு செய்வதாகக் கருதப்படுகிறது. அரங்கனூரிலிருந்து 1½ கி.மீ. தூரத்தில் உள்ள செம்மனூர் வழியாக இதே நகரப் பேருந்து சேலம் மேட்டூரிலிருந்து (மேச்சேரி, காமனேரி, செம்மனூர் வழியாக) சின்ன திருப்பதிக்கு தினசரி ஆறு நடைகள் இயக்கப்படுகிறது. அரங்கனூர் கிராம மக்கள் இப்பேருந்தையும் பயன்படுத்தும் வாய்ப்பு உள்ளது. கோரிக்கையில் கேட்கப்பட்ட வழித்தடத்தில் நேரடியாக நகரப்பேருந்து

[1998 மார்ச் 19

வசதி இல்லையென்றாலும், இவ்வழித்தடத்தில் அனைத்து தடப்பகுதிகளுமே பகுதி வாரியாக இந்நகரப் பேருந்துகளால் ஓமலூருடன் இணைக்கப்பட்டுள்ளன.

(அ) தடம் எண் 79, 97 நகரப் பேருந்துகள் - சேலம்-ஒண்டிவரனூர் (வழி), ஓமலூர், காமனேரி, செம்மானூர், மரக்கோட்டை .. 24 நடைகள்.

(ஆ) தடம் எண் 58-ஏ-நகரப்பேருந்து - சேலம்-அரங்கனூர், செம்மானூர் (வழி), ஓமலூர், தாராபுரம், செம்மாண்டப்பட்டி .. 14 நடைகள்.

(இ) தடம் எண் 58, நகரப்பேருந்து - சேலம்-பெரியப்பட்டி (வழி) ஓமலூர், தாராபுரம், செம்மாண்டப்பட்டி .. 12 நடைகள்.

மேற்கூறிய பேருந்துகள் மட்டுமல்லாது, காமனேரி-மேச்சேரி, தடப்பகுதி அதிக அளவில் நகர மற்றும் புறநகரப் பேருந்து வசதி பெற்று வருகிறது.

மேற்கூறியவாறு அரங்கனூர் கிராமம் நேரடியாகவும், கேட்கப்பட்ட வழித்தடம் பகுதி வாரியாகவும் போதுமான அளவு பேருந்து வசதி பெற்று வருவதால் புதிய நகரப் பேருந்து விடத் தேவையில்லை என்று கருதப்படுகிறது.

**64—**

**தமிழ்நாடு நகர்ப்புற அடிப்படை வசதி நிதிப்பணிகள்**

**வினா 10647—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு மற்றும் தனியார் கூட்டமைப்புடன் ஏற்படுத்தப்பட்டுள்ள தமிழ்நாடு நகர்ப்புற அடிப்படை வசதி நிதிப்பணிகள் நிறுவனம் (TNUIFSL) மூலமாக இதுவரை எத்தனை திட்டங்களுக்கு நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது?

(ஆ) எத்தனை நகராட்சிகள் பயனடைந்து உள்ளன?



1998 மார்ச் 19]

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு நகர்ப்புற அடிப்படை வசதி நிதிப்பணிகள் நிறுவனம் (TNUIFSL) மூலமாக இதுவரை (1997 ஜூன் 3-ம் தேதி வரை) 85 திட்டங்களுக்கு நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது. இதில் 27 வருவாய் ஈட்டும் திட்டங்கள் மற்றும் 58 வருவாய் ஈட்டாத (பயனளிக்கும்) திட்டங்களாகும்.

(ஆ) இதுவரை 18 நகராட்சிகளும் 4 மாநகராட்சிகளும் கடன் மற்றும் மானியம் பெற்றுள்ளன.

**65—**

**புறவழிச்சாலை அமைத்தல்**

**வினா 10776—திரு. எஸ். டேவிட் செல்வின்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி மாவட்டம், திருவைகுண்டம் தொகுதியில் உள்ள தூத்துக்குடி ஒன்றியம், புதுக்கோட்டையிலிருந்து தூத்துக்குடி ஸ்பிக் நகருக்கு மறவன்மடம், கோரம்பள்ளம், குலையன்கரிசல், அத்திமரப்பட்டி ஊராட்சிகளை உள்ளடக்கிய குறுக்குப் புறவழிச்சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): அரசு மாவட்ட நெடுஞ்சாலையான திருவைகுண்டம்-புதுக்கோட்டை சாலை கி.மீ.32/4-இல் பிரிந்து சிறுபாடு வழியாக அத்திமரப்பட்டி செல்லும் சாலையாகும். தற்போதைய விலை விவரப்படி மேற்படி வழித்தடத்தில் புதிதாக சாலை அமைத்து பாலங்கள் கட்டவும், ஏற்கெனவே உள்ள சாலைகளை மேம்படுத்தவும் தோராயமாக ரூ.200 இலட்சங்கள் தேவைப்படும். பெருநிதி தேவைப்படும். இப்பணியினை அரசின் நிதி நெருக்கடி காரணமாக அண்மைக் காலங்களில் மேற்கொள்ளும் சாத்தியக்கூறுகள் இல்லை.

66—

### மதுரையிலிருந்து துரித இரயில்கள் இயக்குதல்

**வினா 11200— திரு. க.வெ.வீ. இராசமாணிக்கம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரையிலிருந்து புதுடில்லிக்கும், கல்கத்தாவிற்கும் புதிதாக துரித இரயில் வண்டி விட மத்திய அரசுக்குத் தமிழக அரசு கோரிக்கை விடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): 1-8-1997 முதல் இரண்டு வாரங்களுக்கு ஒரு தடவை மதுரைக்கும், ஜம்முதாவிக்கும் இடையே (வழி: டெல்லி) நேரடி இரயில் போக்குவரத்து தொடங்கப்பட்டுள்ளது. கல்கத்தாவிற்கும் நேரடி இரயில் விடுவதைப் பொறுத்தவரை, இரயில் பெட்டிகள், இரயில் எஞ்சின் பற்றாக்குறை மற்றும் பாதை இடர்ப்பாடுகள் ஆகிய காரணங்களினால் இயக்க இயலவில்லை.

67—

### இரயில்களின் எண்ணிக்கையை அதிகரித்தல்

**வினா 11225—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலிருந்து வட மாநிலங்களுக்குப் புதிய இரயில்கள் விடும் யோசனைகளையும், ஓடும் இரயில்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் யோசனைகளையும் இரயில்வே போர்டு கைவிட்டு விட்டதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?



விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டிலிருந்து வட மாநிலங்களுக்குப் புதிய இரயில்களை விடும் யோசனைகளையும் ஓடும் இரயில்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் யோசனைகளையும் இரயில்வே போர்டு கைவிடவில்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

68—

### செங்கை வரை பேருந்துகளை நீட்டித்தல்

**வினா 11343—திரு. கொ. வீ. நன்னன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையிலிருந்து திருவண்ணாமலைக்குச் செல்லும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக பேருந்து தடம் எண் 122-இல் சிலவற்றை செங்கம் வரை நீட்டிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம் கோட்டம்-1)-ன் மூலம் தடம் எண் 122 பி. தாழையூத்து சென்னை (வழி) செங்கம், திருவண்ணாமலை, திண்டிவனம் வழித்தடத்தில் ஒரு புறநகர் பேருந்தை நாளொன்றுக்கு இரண்டு நடைகள் இயக்கி வருகிறது.

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம் கோட்டம்-2)-ன் மூலம் இரண்டு புறநகர் பேருந்துகள் தலா இரண்டு நடைகள் வீதம் செங்கத்திலிருந்து போளூர், வந்தவாசி, காஞ்சிபுரம் வழியாக சென்னைக்கு இயக்கப்பட்டு வருகின்றன. திருவண்ணாமலை முக்கிய நகரங்களில் ஒன்றாகும். மேலும், திருவண்ணாமலையிலிருந்து சென்னை செல்லும் நேரடி பயணியரே அதிக அளவில் உள்ளதாலும், தடம் எண் 122 திருவண்ணாமலை-சென்னை வழித்தடத்தில் இயங்கி வரும்

பேருந்துகள் அனைத்தும் சுழல் முறையில் நாளொன்றுக்கு 3 நடைகள் வீதம் இயக்கப்பட்டு வருவதாலும், இத்தடத்தில் இயங்கி வரும் இப்பேருந்துகளில் சில பேருந்துகளை, இயக்கக் காரணங்களால் செங்கம் வரை நீட்டித்திட இயலாது.

:9—

## செங்கம் பயணிகளுக்காக சில இருக்கைகள் ஒதுக்குதல்

**வினா 11346—திரு. கொ.வீ. நன்னன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலையிலிருந்து பெங்களூர் செல்லும் அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் செங்கத்திலிருந்து செல்லும் பயணிகளுக்காக சில இருக்கைகளை ஒதுக்கித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

திருவண்ணாமலையிலிருந்து பெங்களூருக்கு தருமபுரியை மையமாகக் கொண்டு இயங்கும் அரசு போக்குவரத்துக் கழகத்தால் மிகவும் குறைந்த சாதாரண பேருந்துகளே இயக்கப்பட்டு வருகின்றன. இப்பேருந்துகளில் திருவண்ணாமலையிலிருந்து பெங்களூர் செல்லும் நேரடி பயணிகளின் எண்ணிக்கை அதிக அளவில் உள்ள காரணத்தால் திருவண்ணாமலையிலிருந்து 35 கி.மீ.க்கு அடுத்து உள்ள செங்கத்தில் ஏறும் பயணிகளுக்காக இருக்கை ஒதுக்கித்தர இயலாத நிலை உள்ளது.

70—

## கொட்டாவூர் வரை பேருந்துகளை நீட்டித்தல்

**வினா 11548—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரியிலிருந்து மாங்கரை செல்லும் 26ஏ, 26சி ஆகிய நகரப் பேருந்துகளை மோட்டுப்பட்டி வழியாக கொட்டாவூர் வரை நீட்டிக்க அரசு ஆவன செய்யுமா?





(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) தருமபுரியிலிருந்து மாங்கரை வரை இயங்கி வரும் நகரப் பேருந்துகளை கொட்டாவூர் வரை நீட்டித்தால் தடத்தின் நீளம் 32 கி.மீ. ஆகும். தடத்தின் நீளம் 30 கி.மீ.-க்கு அதிகமாக உள்ளதாலும் கொட்டாவூர் ஏற்கெனவே பேருந்து வசதி பெற்றுள்ளதாலும் மோட்டார் வாகன விதிப்படி, தடம் எண் 26ஏ மற்றும் 26சி நகரப் பேருந்துகளை கொட்டாவூர் வரை நீட்டித்து இயக்கிட இயலாத நிலை உள்ளது. மேலும், மாங்கரையிலிருந்து மோட்டுப்பட்டி வரையிலுள்ள 2 கி.மீ. சாலை பேருந்து செல்ல இயலாத மோசமான நிலையில் உள்ளது.

(ஆ) வினா எழாது.

71—

## பேருந்து வழித்தடத்தை மாற்றி அமைத்தல்

**வினா 11599—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரியிலிருந்து ஒகேனக்கல் செல்லும் பேருந்து மாங்கரை, ஆணைக்கல்லானூர், நூல அள்ளி, பருவதன அள்ளி வழியாக பென்னாகரம், ஒகேனக்கல் செல்ல அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) தருமபுரியிலிருந்து ஒகேனக்கல்லுக்கு நேர்வழியில் இயங்கி வரும் பேருந்தை மாங்கரை, ஆணைக்கல்லானூர், நூல அள்ளி, பருவதன அள்ளி வழியாக மாற்றி இயக்கினால் தடத்தின் நீளம் 2 கி.மீ. அதிகமாவதுடன் பென்னாகரம் மற்றும் ஒகேனக்கல் செல்லும் நேரடி பயணிகள் யாரும் பயணம் செய்யமாட்டார்கள். மேலும், மாற்றி இயக்கக் கோரும் தடத்தில் போதிய பயணிகளின் கொள்ளளவு கிடையாது. எனவே, தருமபுரி - ஒகேனக்கல் தடத்தில் இயங்கிவரும்

[1998 மார்ச் 19

புறநகர் பேருந்தை மாங்கரை, ஆனைக்கல்லானூர், நூல அள்ளி, பருவதன அள்ளி வழியாக மாற்றி இயக்கிட இயலாது.

(ஆ) கேள்வி எழாது.

**72—**

## மேட்டூர்-வெள்ளார் பேருந்து வசதி

**வினா 12515—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், மேச்சேரி ஒன்றியம், தெத்திகிரிபட்டி ஊராட்சி மேட்டூர் முதல் கச்சராயலூர் வரை வந்து செல்லும் பேருந்து தடம் எண் 5-ஐ மேட்டூர் முதல் (வழி) கருப்பூசாலியூர், வெள்ளார் வரை செல்ல அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

கோரிக்கையில் தட நீட்டிப்பு கேட்கப்பட்டுள்ள கச்சராயலூர்-வெள்ளார் தடப் பகுதியை உள்ளடக்கி மேட்டூர் - வெள்ளார் வழித்தடத்தில் கீழ்க்கண்ட பேருந்து வசதி உள்ளது :

தடம் எண் 10-ன் மூலம் 4 நடைகளும்; தடம் எண் 27-ன் மூலம் 6 நடைகளும் ஆக, தினசரி 10 நடைகள் இயக்கப்பட்டு பயணிகளின் தேவை நிறைவு செய்யப்பட்டு வருகிறது.

மேலும் தடம் எண் 5, பல்முனை வழித்தடப் பேருந்தாக இயக்கப்பட்டு வருகிறது. கச்சராயலூர் பொதுமக்களின் முந்தைய கோரிக்கையினை ஏற்று மேட்டூர் - மேச்சேரி வரை இயக்கப்பட்டு வந்த தடம் எண் 5-ஐ பிற வழித்தடங்களில் நேரமாற்றமும், பாதிப்பும் இல்லாமல் கச்சராயலூர் வரை நீட்டித்து இயக்கப்பட்டு வருகிறது. முந்தைய கோரிக்கையின் தொடர்ச்சியாக இந்த நடைகளை வெள்ளார் வரை நீட்டித்து இயக்க கேட்கப்பட்டுள்ளது. கச்சராயலூர் - வெள்ளார் தட நீளம் 6.5 கி.மீ.

தடம் எண் 5-ல் தற்போது இயக்கப்படும் கால அட்டவணையில் மேற்கூறிய தட நீட்டிப்பினைச் செய்ய கால அவகாசம் இல்லை, அவ்வாறு நீட்டித்தால் இதன் பெரும்பகுதி நேரங்களை மறு நிர்ணயம் செய்ய நேரிடும். இதனால் புக்கம்பட்டி மக்களின் முந்தைய கோரிக்கையினை ஏற்று காலை 7.45 மணிக்கு அங்கே புறப்பட்டு மேச்சேரி வழியாக மேட்டூர் அடையும்; பள்ளி நேர நடையும் மாறுதலுக்குள்ளாகி அப்பகுதி மக்களுக்கு பாதிப்பேற்படும். இது அவர்களது ஆட்சேபணைகளைத் தோற்றுவிக்குமெனக் கருதப்படுகிறது. தட நீட்டிப்பு கேட்கப்பட்ட தடப் பகுதி ஏற்கெனவே போதிய பேருந்து வசதி பெற்று வருவதாலும், தட நீட்டிப்புக்கான கால அவகாசம் தடம் எண் 5 பேருந்தில் இல்லாததாலும் இக்கோரிக்கையை நிறைவேற்ற சாத்தியக்கூறுகள் இல்லை.



**73—**

## கூடுதலாகப் பேருந்து இயக்குதல்

**வினா 12521—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், மேச்சேரி ஒன்றியம், புக்கம்பட்டி ஊராட்சி, புக்கம்பட்டியிலிருந்து மேச்சேரிக்குச் சென்றுவர புதன்கிழமைகளில் சந்தை காரணமாக கூடுதலாகப் பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

மேட்டூரிலிருந்து புக்கம்பட்டிக்கு மேச்சேரி வழியாக தற்போது கீழ்க்கண்டவாறு நகரப்பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன :

தடம் எண் 21-ன் மூலம் 12 நடைகள்

தடம் எண் 22-ன் மூலம் 4 நடைகள்

தடம் எண் 5-ன் மூலம் 4 நடைகள்

மொத்தம் நாளொன்றுக்கு - 20 நடைகள்

மேற்கூறியவாறு கேட்கப்பட்ட வழித்தடத்தில் தினசரி இயக்கப்படும் பேருந்து வசதியே சந்தை தினத்திலும் பயணிகள் தேவைக்குப் போதுமானதாக உள்ளதால் கூடுதல் பேருந்து இயக்கும் தேவை நிலவவில்லை.

[1998 மார்ச் 19

74—

### திருப்பூர் நகரில் கூடுதல் பேருந்து வசதி

**வினா 12804—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகரில் காலை, மாலை நேரங்களில் கட்டுக்கடங்காத கூட்டம் பேருந்துகளில் அலைமோதுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதைத் தடுக்க அரசு என்ன ஏற்பாடு செய்துள்ளது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) : தற்சமயம் திருப்பூர் நகரைப் பொறுத்தமட்டில், கோவையை மையமாகக் கொண்டு இயங்கி வரும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், திருப்பூர், பல்லடம் மற்றும் கருமத்தம்பட்டி கிளைகளைச் சார்ந்த 89 நகரப் பேருந்துகளை திருப்பூர் நகரில் இயக்கி வருகிறது. மேலும், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோவை, கோட்டம்-2) ஈரோடு, தனது திருப்பூர் கிளையிலிருந்து 73 நகரப் பேருந்துகளை தினசரி இயக்கி வருகிறது. இது தவிர, கீழ்க்கண்ட புதிய நகர மற்றும் புறநகர் வழித்தடங்களில் பேருந்துகள் கோவை மாவட்ட சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் பரிந்துரையின்பேரில் திருப்பூர் பகுதியில் கீழ்க்காணும் தேதி முதல் இயக்கப்பட்டு வருகின்றன.

1. நகர வழித்தடம் :

| வரிசை எண் | துவக்க நாள் | | வழித்தடம் |
|---|---|---|---|
| (1) | 1-6-1997 | .. | திருப்பூர் பழைய பேருந்து நிலையம்-திருப்பூர் புதிய பேருந்து நிலையம் |
| (2) | 11-8-1997 | .. | பல்லடம்-திருப்பூர்-பாண்டியன் நகர். |
| (3) | 5-3-1997 | .. | (1) திருப்பூர் - அய்யம்பாளையம்,<br>(2) திருப்பூர் - பல்லடம் மற்றும்<br>(3) திருப்பூர் - வலுப்பூரம்மன்கோவில் |



1998 மார்ச் 19]

2. புறநகர்:

| வரிசை எண் | துவக்க நாள் | | வழித்தடம் |
|---|---|---|---|
| (1) | 16-3-1997 | .. | கோவை-திருப்பூர் (வழி) பல்லடம். |
| (2) | 23-5-1997 | .. | நாயக்கன்பாளையம் - கோவை-திருப்பூர் (வழி) அவினாசி. |
| (3) | 26-5-1997 | .. | கோவில்பாளையம் - திருப்பூர் (வழி) பல்லடம். |
| (4) | 23-8-1997 | .. | கோவை-திருப்பூர் (வழி) பெரியநாயக்கன் பாளையம், அன்னூர், கருவலூர் மற்றும் அவினாசி. |
| (5) | 23-8-1997 | .. | மேட்டுப்பாளையம்-திருப்பூர் (வழி) காரமடை, பெரியபுத்தூர், காடுவெட்டி பாளையம், தெக்கலூர் மற்றும் அவினாசி. |
| (6) | 5-9-1997 | .. | திருப்பூர்-செஞ்சேரிபுத்தூர் (வழி) பல்லடம் மற்றும் சுல்தான்பேட்டை. |

மேற்கண்ட புறநகர் பேருந்துகள் அவினாசி மற்றும் பல்லடம் பகுதிகளிலிருந்து திருப்பூர் பகுதிக்கு நெரிசல் நேரங்களில் இயக்கிடும் வகையில் நேரம் அமைக்கப்பட்டு இயங்கி வருகிறது. மேலும், திருப்பூரின் நெரிசல் மிகுந்துள்ள பகுதிகளில் நெரிசல் நேரங்களில் முக்கியமான இடங்களில் தணிக்கையாளர்களை நியமித்து பேருந்துகளை நிறுத்தி பயணிகளை ஏற்றி இறக்கவும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

75—

### நாராயணசுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலம்

**வினா 6907—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1998 மார்ச் 19

(அ) எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், புதுப்பாளையம் கிராமத்தில் இருக்கும் கோட்டைமேடு, சரபங்கா நதிக்கரையில் உள்ள அருள்மிகு ஸ்ரீலட்சுமி நாராயணசுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலம் எத்தனை ஏக்கர்?

(ஆ) அந்த நிலம் தற்போது யார் வசம் உள்ளது?

(இ) அதை கோயிலுக்கு வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) இத்திருக்கோயிலுக்குச் சொந்தமான கோணசமுத்திரம் கிராமம் ச.எண் 103-இல் 9.40 ஏக்கர் புன்செய் நிலமும், புதுப்பாளையம் கிராமத்தில் உள்ள ச.எண் 87/1-ல் 1.24 ஏக்கர் நன்செய் நிலமும் உள்ளது.

(ஆ) மேற்படி நிலங்களை திருவாளர்கள் பெருமாள், சித்தையன், ரங்கசாமி மற்றும் ஐயம்பெருமாள் ஆகிய நால்வரும் ஆக்கிரமிப்புச் செய்துள்ளனர்.

(இ) மேற்கண்ட 4 ஆக்கிரமிப்பாளர்கள், மேற்கண்ட நிலங்கள் யாவும் தங்களுக்குச் சொந்தம் என்று சங்ககிரி மாவட்ட முன்சீப் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளனர். அந்த வழக்கை எதிர்த்து மேற்கண்ட திருக்கோயிலின் முன்னாள் அறங்காவலர் திரு. மாணிக்கம் என்பவர் சங்ககிரி சார்நிலை நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து (ஐ.ஏ.783/93 மற்றும் ஓ.எஸ்.251/93) இடைக்காலத் தடையுத்தரவு வாங்கியுள்ளார். முன்னாள் அறங்காவலர் திரு. மாணிக்கம் தொடர்ந்த வழக்கில் அறநிலையத் துறையினரை பிரதிவாதியாகச் சேர்க்க Impleading petition தாக்கல் செய்து வழக்கைத் தொடர்ந்து நடத்த மேற்கண்ட திருக்கோயில் தக்காருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.



1998 மார்ச் 19]

**76—**

**அருள்மிகு சங்கமேஸ்வரர் திருக்கோயில் பற்றிய விவரம்**

**வினா 10003—திரு. எஸ். என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பவானி நகரில் அமைந்துள்ள அருள்மிகு சங்கமேஸ்வரர் திருக்கோயிலுக்கு மொத்தம் புஞ்சை/நஞ்சை ஏக்கர் எவ்வளவு?

(ஆ) அவற்றின் மூலம் கிடைக்கும் மொத்த வருட வருமானம் எவ்வளவு?

(இ) திருக்கோயிலின் கட்டட வாடகை மூலம் கிடைக்கும் வருட வருமானம் எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ), (ஆ) மற்றும் (இ):

| விவரம் | பரப்பளவு | | ஆண்டு வருமானம் |
|---|---|---|---|
| | | | ரூ. |
| நஞ்சை நிலம் | 0.27 | ஏக்கர் | 400.00 |
| புஞ்சை நிலம் | 6.38 | ஏக்கர் | 6,000.00 |
| மானாவரி (சுற்றுலா வண்டி நிறுத்துமிடம்) | 0.49 | ஏக்கர் | -- |
| மனைகள் (நத்தம்) | 0.46 | ஏக்கர் | 10,902.00 |
| நந்தவனம் (தென்னைமரம் மேல்பலன்) | 0.54 | ஏக்கர் | 5,599.00 |
| மொத்தம் | 8.14 | ஏக்கர் | 22,901.00 |

| கட்டடங்கள் | எண்ணிக்கை | | ஆண்டு வருமானம் |
|---|---|---|---|
| பணியாளர் குடியிருப்பு | 17 | வீடுகள் | 7,980.00 |
| பால் நுகர்வோர் சங்கம் கட்டடத்தில் இயங்கி வருகிறது | 1 | | 2,400.00 |
| யாத்திரிகர் விடுதிகள் | 2 | அறைகள் | 90,839.00 |
| | 2 | குடில்கள் | |
| திருமண மண்டபம் (நத்தம்) | | | 45,239.00 |
| | | | 1,69,359.00 |

77—

### பழங்கால ஓலைச் சுவடிகளைப் பாதுகாத்தல்

**வினா 13554—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் அழிந்துவரும் பழங்கால ஓலைச் சுவடிகளை ஒளிப்படம் மூலம் படம் எடுத்து பாதுகாக்கவும், அவற்றை மலிவு விலையில் புத்தகமாக வெளியிடவும் அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

அரசு கீழ்த்திசை ஓலைச், சுவடி நூலகத்திற்கு நுண்படப் பிரிவு ஏற்படுத்துவதற்காக 1997-98 ஆம் ஆண்டுக்கான இடைக்காலத் திட்டத்தில் ரூ.25.66 இலட்சம் ஒப்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் பழங்கால ஓலைச் சுவடிகள், அழியாமல் பாதுகாக்கப்படும். சுவடிகளில் உள்ளவற்றைத் தொகுத்துப் புத்தகங்களாக ஆண்டுதோறும் வெளியிடப்படுகின்றன. 1995-இல் 26 நூல்களும், 1997-98-ல் 14 நூல்களும் அச்சிடப் பெற்றுள்ளன. இவ்வாறு வெளியிடப்பெறும் நூல்கள் 25 சதவீதம் தள்ளுபடி விலையில் விற்பனை செய்யப்படுகின்றன.



78—

### பகுதி நேரக் கடை அமைத்தல்

**வினா 8108—திரு. லி. அய்யலுசாமி:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவில்பட்டி வட்டம், இளம்புவனம் கிராமத்திலுள்ள கூட்டுறவுக் கடையைப் பிரித்து பிதப்புரம் கிராமத்தில் பகுதி நேரக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

கோவில்பட்டி வட்டம், பிதப்புரம் கிராமத்தில் 103 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளதாலும், புதியதாக பகுதிநேர நியாயவிலைக் கடை அமைக்க குறைந்தபட்சம் 200 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் என்ற நிபந்தனையின் காரணமாகவும் அங்கு பகுதி நேர நியாயவிலைக் கடை அமைக்க வாய்ப்பில்லை.

79—

### மத்தியக் கூட்டுறவு வங்கி

**வினா 11853—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1997-98-ஆம் ஆண்டு மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மூலம் ரூ.6.00 இலட்சம் வரை கடன் பெற்றோர் எத்தனை பேர்?

(ஆ) சேலம் மாவட்டத்தில், இத்திட்டத்தினால் பயன் பெற விண்ணப்பித்தவர்கள் எத்தனை பேர்?

[1998 மார்ச் 19

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் தனியார்களுக்கு வீடு கட்டுவதற்கு முன்பணம், நகை ஈட்டின் பேரில் கடன், பண்ணை சாரா கடன்கள், பொறியாளர் மற்றும் மருத்துவர்களுக்குத் தொழில் தொடங்க நீண்ட காலக் கடன்கள் மற்றும் இதர வகை கடன்கள் வழங்கி வருகின்றன. மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் அவற்றின் சொந்த நிதி ஆதாரங்களிலிருந்து வீடு கட்டும் நோக்கத்திற்காக ஏற்கெனவே வழங்கி வந்த கடன் அளவான ரூ.2 இலட்சம் தற்போது ரூ.3 இலட்சம் என உயர்த்தி நீண்ட காலக் கடனாக வழங்கப்பட்டு வருகிறது. வீடு கட்டும் நோக்கத்திற்காக ரூ.10 இலட்சம் வரை கடன் வழங்க சிறப்பினமாக அனுமதிக்க இந்தியத் தலைமை வங்கியின் (Reserve Bank of India) அனுமதி கோரப்பட்டுள்ளது. அனுமதி பெற்றவுடன் தற்போது வழங்கி வரும் ரூ.3 இலட்சம் என்ற இக்கடன் அளவை மேலும் உயர்த்தி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். வீடு கட்டும் நோக்கங்களுக்காக சேலம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிக்கு மட்டும் ரூ.3.75 கோடி குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் இனி எதிர்வரும் திங்கள்களில் கணிசமான முன்னேற்றம் எதிர்பார்க்கப்படுகிறது. ரூ.6.00 இலட்சம் வரை கடன் பெற்றவர்கள் யாருமில்லை.

**80—**

### கூட்டுறவுச் சங்க விதிமுறையை மாற்றுதல்

**வினா 11890—திரு. டி. மணி:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1958 ஆம் ஆண்டின் கூட்டுறவுச் சட்டப்படி இலாபத்தில் இரண்டு சதவீதம்தான் செலவு செய்ய முடியும் என்ற விதிமுறையை 37 ஆண்டுகள் கடந்த பின்பும் விலைவாசிப் புள்ளி உயர்வுக்கு ஏற்ப மாற்றாமல் இருப்பது, கூட்டுறவுச் சங்கங்களின் வளர்ச்சிக்குத் தடையாகும் என்பது அரசுக்குத் தெரியுமா?



1998 மார்ச் 19]

(ஆ) ஆம் எனில், இந்த விதிமுறையை மாற்ற அரசு என்ன நடவடிக்கை மேற்கொண்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) 1958 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் என எந்தச் சட்டமும் இயற்றப்படவில்லை. தற்போது செயல்பாட்டில் உள்ள 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்திலும் எந்த ஒரு கூட்டுறவுச் சங்கமும் அதனுடைய இலாபத்தில் இரண்டு சதவீதம்தான் செலவு செய்திட வேண்டும் என்ற வரைமுறை ஏதும் நிர்ணயிக்கப்படவில்லை. இருப்பினும், கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்கள் பணிநிலை தொடர்பான மாதிரித் துணை விதிகள் (Model Byelaws) ஒரு கூட்டுறவுச் சங்கத்தின் சாதல்வார் செலவானது அச்சங்கத்தின் மொத்த லேவாதேவி அல்லது நடைமுறை மூலதனம் இவற்றில் எது அதிகமோ அதில் இரண்டு சதவீதத்திற்கு மிகாமல் இருக்கவேண்டும் என்று வரைமுறை செய்யப்பட்டுள்ளது. இந்த இரண்டு சதவீதம் என்பதை விலைவாசிப் புள்ளி உயர்விற்கு ஏற்ப மாற்றாமல் இருப்பது சங்கத்தின் வளர்ச்சிக்குத் தடையாக இருக்கும் என்று கருதுவதற்கு இடமில்லை.

(ஆ) வினா எழவில்லை.

**81—**

### நியாயவிலைக் கடை அமைத்தல்

**வினா 12129—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டி ஒன்றியம், பண்ணப்பட்டி ஊராட்சி, மாரகவுண்டன்புதூரில் ஒரு நியாயவிலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

[1998 மார்ச் 19

விடை—

**மாண்புமிகு திரு. கா. நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டி ஒன்றியம், பண்ணப்பட்டி ஊராட்சியைச் சேர்ந்த மாரகவுண்டன்புதூரில் பண்ணப்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியானது ஏற்கெனவே ஒரு முழுநேர நியாயவிலைக் கடையை 490 குடும்ப அட்டைகளுடன் நடத்தி வருவதால் மேலும் ஒரு நியாயவிலைக் கடையை மாரகவுண்டன்புதூரில் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

**82—**

**கூட்டுறவு ஒன்றியங்களுக்குப் புதிய கட்டடம்**

**வினா 12178—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1997-98 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் எந்தெந்தக் கூட்டுறவு ஒன்றியங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்டித் தரப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கா. நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :**

சேலம் மாவட்டத்தில் ஒரு கூட்டுறவு ஒன்றியம் மட்டும்தான் செயல்பட்டு வருகிறது. இவ்வாண்டு (1997-98) சேலம் மாவட்ட கூட்டுறவு ஒன்றியத்திற்குப் புதிய சொந்தக் கட்டடம் ஒன்று கட்டப்பட உள்ளது.



1998 மார்ச் 19]

**83—**

**நியாயவிலைக் கடை அமைத்தல்**

**வினா 12520—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், மேச்சேரி ஒன்றியம், எம். காளிப்பட்டி ஊராட்சி, தீராம்பட்டி, குக்கல்பட்டி, மலமானூர் ஆகிய ஊர்களில் நியாயவிலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், மேச்சேரி ஒன்றியம் எம். காளிப்பட்டி ஊராட்சியில், எம். காளிப்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி, தீராம்பட்டி மற்றும் மலமானூர் கிராமங்களை உள்ளடக்கி கோல்காரனூர் என்ற கிராமத்தில் நியாயவிலைக் கடை நடத்தி வருகின்றது. கோல்காரனூரிலிருந்து 2.8 கி.மீ. தூரமுள்ள தீராம்பட்டியில் 42 குடும்ப அட்டைகளும், 1 கி.மீ. தொலைவில் உள்ள மலமானூரில் 80 குடும்ப அட்டைகளும் உள்ளன.

(2) மேற்படி வங்கி, எம். காளிப்பட்டி என்ற கிராமத்தில் நடத்திவரும் நியாயவிலைக் கடையில் குக்கல்பட்டி கிராமத்தைச் சேர்ந்த 130 குடும்ப அட்டைகள் சேர்க்கப்பட்டுள்ளன. எம். காளிப்பட்டியிலிருந்து இக்கிராமம் 2 கி.மீ. தூரத்தில் உள்ளது.

(3) பகுதி நேர அங்காடி அமைக்க குறைந்தபட்சத் தேவையான 200 குடும்ப அட்டைகள் இல்லாமையாலும், இடவசதி மற்றும் போக்குவரத்து வசதிகள் இல்லாமையாலும் தீராம்பட்டியில் பகுதி நேரக்கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

(4) 200 குடும்ப அட்டைகள் இல்லாமையாலும், கோல்காரனூர் நியாயவிலைக் கடை 1 கி.மீ. தூரத்திலேயே உள்ளதாலும், மலமானூரிலும் பகுதி நேரக் கடை திறக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

[1998 மார்ச் 19

(5) எனினும் குக்கல்பட்டிக்கு ½ கி.மீ. தூரத்தில் உள்ள சித்திக்குள்ளனூர் என்ற கிராமத்தில் ஒரு பகுதி நேர நியாயவிலைக் கடையை எம். காளிப்பட்டி நியாயவிலைக் கடையிலிருந்து பிரித்து அமைத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**84—**

**இடைநிலை ஆசிரியர் பணிக்குக் காத்திருப்போர் விவரம்**

**வினா 10498அ—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மாவட்ட வாரியாக இடைநிலை ஆசிரியர் பணிக்குக் காத்திருப்போர்கள் எண்ணிக்கை எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து வேலைவாய்ப்பு அலுவலகங்களிலும் பதிவு செய்து வேலை வேண்டிக் காத்திருக்கும் இடைநிலை ஆசிரியர்கள் 30-6-1997 தேதிய நிலவரப்படி மொத்த எண்ணிக்கை 42,389 ஆகும். அவற்றின் விவரங்கள் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.



1998 மார்ச் 19]

**இணைப்பு**

**30-6-1997 நிலவரப்படி உயர் பதிவேட்டில் உள்ள இடைநிலை ஆசிரியர்களின் எண்ணிக்கை**

| வ.எண். | அலுவலகங்களின் பெயர்கள். | ஆண்கள் | பெண்கள் | ஆண்கள் (கலம் 1-இல் உட்பட்டது) | பெண்கள் (கலம் 1-இல் உட்பட்டது) | ஆண்கள் (கலம் 1-இல் உட்பட்டது) | பெண்கள் (கலம் 1-இல் உட்பட்டது) | 1-1-97 முதல் 30-6-1997 முடிய அறிவிக்கப்பட்டு பரிந்துரை மேற்கொள்ளப்பட்டு தேர்வு முடிவுறாமல் நிலுவையிலுள்ள காலியிடங்களின் எண்ணிக்கை. | 1996-ஆம் ஆண்டு அரசு கல்வித்துறை, ஆதிதிராவிடர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைகளில் இருந்து காலியிடங்கள் பெறப்பட்டு பரிந்துரை மேற்கொள்ளப்பட்டு தேர்வு முடிவு பெறாததால் பணியமர்த்தும் இன்றும் கணக்கிடப்படாமல் நிலுவையில் இருப்பின் அவ்வாணை அட்டவணையில் அடங்கும் காலியிடங்களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
| 1. | மதுரை | 202 | 1314 | - | 1 | 17 | 41 | 495 | - |
| 2. | ஈரோடு | 207 | 1113 | - | 1 | 13 | 39 | 441 | - |
| 3. | தேனி | 185 | 667 | - | - | - | - | - | - |
| 4. | வேலூர் | 332 | 1352 | 1 | 2 | 18 | 118 | 589 | - |
| 5. | இராமநாதபுரம் | 294 | 840 | - | - | 1 | 3 | 429 | - |
| 6. | புதுக்கோட்டை | 347 | 752 | - | - | 4 | 22 | 355 | 13 |
| 7. | சேலம் | 407 | 1448 | 1 | 2 | 9 | 60 | 920 | - |
| 8. | திருவண்ணாமலை | 508 | 921 | - | - | 21 | 20 | 706 | 284 |
| 9. | கடலூர் | 407 | 1060 | - | - | 10 | 33 | 664 | - |
| 10. | விழுப்புரம் | 805 | 953 | - | 3 | 3 | 5 | 750 | - |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 11. | திண்டுக்கல் | 343 | 943 | - | 1 | 11 | 27 | 526 | - |
| 12. | உடல் ஊனமுற்றோருக்கான சிறப்பு வேலை வாய்ப்பு அலுவலகம், சென்னை-600 040. | 2 | 19 | - | - | - | 1 | - | 2 |
| 13. | திருவாரூர் | 101 | 303 | - | - | 5 | 8 | - | - |
| 14. | நாகப்பட்டினம் | 339 | 370 | - | - | - | 12 | 596 | - |
| 15. | கிருஷ்ணகிரி | 1115 | 1307 | 1 | 2 | 15 | 36 | 1084 | - |
| 16. | தஞ்சாவூர் | 138 | 825 | - | - | 2 | 20 | 397 | - |
| 17. | திருச்சிராப்பள்ளி | 503 | 1431 | 1 | 2 | 8 | 23 | 106 | 37 |
| 18. | காஞ்சிபுரம் | 139 | 896 | - | - | 13 | 42 | 620 | - |
| 19. | தூத்துக்குடி | 104 | 1985 | - | - | 13 | 33 | 599 | 4 |
| 20. | கோயம்புத்தூர் | 197 | 1572 | - | - | 8 | 27 | 450 | - |
| 21. | திருநெல்வேலி | 526 | 3192 | 1 | - | 16 | 62 | 247 | - |
| 22. | விருதுநகர் | 186 | 1286 | - | - | 3 | 16 | 112 | 13 |
| 23. | உதகமண்டலம் | 126 | 573 | - | - | 6 | 30 | 198 | - |
| 24. | சென்னை-40 | 134 | 1428 | 1 | 1 | 8 | 34 | 89 | - |
| 25. | சிவகங்கை | 186 | 717 | - | - | 4 | 12 | 384 | - |
| 26. | நாகர்கோவில் | 618 | 5273 | - | 4 | 6 | 29 | 19 | - |
| 27. | திருவள்ளூர் | 312 | 1078 | 1 | - | 14 | 44 | 280 | 16 |
| | மொத்தம் | 8763 | 33626 | 7 | 19 | 228 | 797 | 11065 | 369 |

**85—**

## சம்பளத்தை மறுமதிப்பீடு செய்ய நடவடிக்கை

**வினா 11950—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின்கீழ் சம்பளத்தை மறுமதிப்பீடு செய்ய அரசு என்ன வரைமுறைகளைக் கையாளுகிறது?





விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(i) 1948 ஆம் ஆண்டைய குறைந்த அளவு ஊதியச் சட்ட பிரிவு 3(1) (பி)-ன்படி குறைந்த அளவு ஊதிய மறுநிர்ணயம் 5 ஆண்டுகளுக்கு மிகாமல் செய்யப்பட வேண்டும். ஆனால், குறைந்த அளவு ஊதியச் சட்ட அட்டவணையில் இடம் பெற்றுள்ள தொழில் இனங்களுக்கு குறைந்த அளவு ஊதிய நிர்ணயம்/மறுநிர்ணயம் செய்யப்பட்ட பின்னர், 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை மறுநிர்ணயம் செய்தால் போதுமானதாகும் என்று சட்டத்தில் கூறப்பட்டு இருந்தாலும்கூட இந்த அரசு 2 ஆண்டுகளுக்கு ஒருமுறை குறைந்த அளவு ஊதியம் மறுநிர்ணயம் செய்கிறது.

(ii) தற்போது அமலில் உள்ள குறைந்த அளவு அடிப்படை ஊதிய விகிதங்களுடன் ஒரு குறிப்பிட்ட ஆண்டின் நுகர்வோர் விலைக் குறியீட்டு எண்ணின் சராசரிக்குண்டான அகவிலைப்படியை இணைத்து வரும் தொகையுடன் மறுநிர்ணயப் பலன் அளித்து, கணக்கிடப்படும் கூட்டுத் தொகையே மாற்றியமைக்கப்படவேண்டிய அடிப்படை ஊதியமாகும்.

(iii) அந்த அடிப்படை ஊதியத்தினை மேலே குறிப்பிட்டுள்ளவாறு எந்த ஆண்டின் நுகர்வோர் விலைக் குறியீட்டு எண்ணுடன் இணைக்கின்றோமோ அந்த ஆண்டிற்கான நுகர்வோர் விலைக்குறியீட்டு எண்ணின் சராசரியால் வரும் தொகையின் அடிப்படையில் 100% ஈடுசெய்து (100% neutralisation) அகவிலைப்படி கணக்கிட்டு நிர்ணயம் செய்யப்படுகிறது. இவ்வாறே குறைந்த அளவு ஊதியம் மறுநிர்ணயம் செய்யப்படுகிறது.

**86—**

## துணை வேலைவாய்ப்பு அலுவலக இடமாற்றம்

**வினா 12513—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1998 மார்ச் 19

(அ) சேலம் மாவட்டம் மேட்டூர் துணை வேலைவாய்ப்பு அலுவலகம் வேறு இடத்திற்கு மாற்றப்படாமல் அதே இடத்தில் தொடர்ந்து செயல்பட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): 7-2-1997 நாளிட்ட தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அரசு ஆணை (நிலை) எண் 10-இல் சேலம் மாவட்டம் மேட்டூரில் இயங்கி வந்த துணை வேலைவாய்ப்பகத்தை ஒரு மாவட்ட வேலைவாய்ப்பகமாக மேம்படுத்தி புதியதாகத் தோற்றுவிக்கப்பட்ட நாமக்கல் மாவட்டத்தில், மாவட்ட வேலைவாய்ப்பகமாகச் செயல்பட ஆணை வெளியிடப்பட்டுள்ளது. எனவே, இந்த துணை வேலைவாய்ப்பகத்தை அதே இடத்தில் தொடர்ந்து செயல்படுத்த வாய்ப்பு ஏதுமில்லை.

**87—**

**பணியாளர்களுக்கு உரிய நாளில் சம்பளம் வழங்குதல்**

**வினா 13121—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் சார்பு நீதிமன்றம் தற்காலிகமாக இயங்குவதால் ஊழியர்களுக்குச் சம்பளப் பட்டுவாடா காலதாமதமாகி வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதற்கு அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?



1998 மார்ச் 19]

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): திருப்பூரில் தற்காலிகமாக இயங்கும் சார்பு நீதிமன்றம் 30-6-1998 வரை நீட்டிப்புச் செய்யப்பட்டுள்ளதால், அதன் பணியாளர்கள் உரிய நாளில் சம்பளம் பெறுவதில் காலதாமதம் ஏதும் இருக்க வாய்ப்பில்லை.

**88—**

**நூல்களின் விலை, தரம் மற்றும் விவரம்**

**வினா 10326—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கூட்டுறவு நூற்பாலைகளில் உற்பத்தியாகும் நூல்களின் தரத்தைவிட தனியார் நூற்பாற்பாலைகளில் கிடைக்கும் நூல்களின் விலை, தரம் நன்றாக இருப்பதும், எடை அதிகமாகயிருப்பதும் அரசுக்குத் தெரியுமா?

விடை—

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

கூட்டுறவு நூற்பாலைகளில் உள்ள இயந்திரங்களின் தற்போதைய நிலையோடு ஒப்பிடுங்கால், அவற்றில் உற்பத்தியாகும் நூல், அதே நிலையிலுள்ள தனியார் ஆலையின் நூலைவிட தரம் கூடுதலாகவே உள்ளது.

கூட்டுறவு நூற்பாலைகளின் நூலின் விலை, சந்தை விலையை விடக் குறைவாகவே உள்ளது.

கட்டு ஒன்றுக்கு 4.54 கிலோவிற்குக் குறையாமலும், 2/17 எண் நூல் 5 கிலோவிற்குக் குறையாமலும் நிர்ணயித்த எடை அளவிற்கே கூட்டுறவு நூற்பாலையில் நூல் உள்ளது.

[1998 மார்ச் 19

89—

## சாயக் கழிவுநீர் தேங்குவதை அகற்றுதல்

**வினா 10846—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி நகராட்சி, செல்லியாண்டியம்மன் கோயில் தெரு, 24 ஆவது வார்டு கவுண்டன்பட்டியில் சாயக் கழிவுநீர் தேங்குவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இதுகுறித்து அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) எடப்பாடி நகராட்சி, செல்லியாண்டியம்மன் கோயில் தெரு, 24-ஆவது வார்டு கவுண்டன்பட்டியில் சாயக் கழிவுநீர் தேங்குவதாக புகார்கள் ஏதும் அரசிடம் கொடுக்கப்படவில்லை. ஆனால், பொதுவாக சேலம் மாவட்டத்திலுள்ள சாயத் தொழிற்சாலைகள் கழிவுநீரைச் சுத்திகரிக்காமல் வெளியேற்றுவதால் சுற்றுச் சூழல் பாதிக்கப்படுவதாக புகார்கள் பெறப்பட்டுள்ளன.

(ஆ) எடப்பாடி பகுதியில் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் இசைவாணையைப் பெறாமலும், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்காமலும் தொழிற்சாலைகளை இயக்கி வரும் 43 தொழிற்சாலை உரிமையாளர்கள் மீது 1974 ஆம் ஆண்டு நீர் (மாசுத் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் பிரிவு 44/33ஏ-இன்கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

90—

## பஞ்சாலைகள் மூலம் வேலைவாய்ப்பை அதிகரித்தல்

**வினா 12588—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1998 மார்ச் 19]

(அ) தமிழ்நாட்டில் கைத்தறி, விசைத்தறி பஞ்சாலைகள் மூலம் வேலைவாய்ப்புப் பெற்றுள்ளோரின் எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) இந்தத் துறைகளில் வேலைவாய்ப்பை அதிகரிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

**(அ) (1) கைத்தறி:** தமிழ்நாட்டில் கைத்தறி மூலம் சுமார் 4 இலட்சம் நெசவாளர்களுக்கு வேலைவாய்ப்பளிக்கப்பட்டு வருகிறது. அதில் நிரந்தர மற்றும் தற்காலிகப் பணியாளர்கள் விவரம் கீழே தெரிவிக்கப்பட்டுள்ளது.

| | பருத்தி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம். | பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம். |
|---|---|---|
| நிரந்தரப் பணியாளர்கள் | 4125 | 959 |
| தற்காலிகப் பணியாளர்கள் | 1198 | 165 |
| மொத்தம் : | **5323** | **1124** |

**(2) விசைத்தறி:** தற்போதுள்ள 69 விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக வேலைவாய்ப்புப் பெற்றுள்ளோரின் எண்ணிக்கை 5,809. தற்போது தமிழ்நாட்டில் 2,62,903 விசைத்தறிகள் உள்ளன.

**(3) பஞ்சாலைகள்:** கூட்டுறவு நூற்பாலைகளின் மூலம் வேலை வாய்ப்புப் பெற்றுள்ளோரின் எண்ணிக்கை.

| நிரந்தரம் | பதிலி | தற்காலிகம் | பயிற்சியாளர்கள் |
|---|---|---|---|
| 8,616 | 273 | 421 | 218 |

மொத்தத் தொழிலாளர்கள் 9,528

பணியாளர்கள் 860

(ஆ) இந்தத் துறைகளில் வேலைவாய்ப்பை அதிகரிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளாவன:

[1998 மார்ச் 19

**(1)** *கைத்தறி:* அரசு வழங்கியுள்ள நிதிகளின் மூலம் கைத்தறி வளர்ச்சி மையம், வீடு கட்டும் திட்டம், சேமிப்பு மற்றும் பாதுகாப்பு திட்டம் போன்ற சமூக நலத் திட்டங்களின் மூலம் கூட்டுறவுச் சங்கங்களிலுள்ள நெசவாளர்கள் பயன்பெறுவதுடன் தனியார்களின் கீழ் தொழில் புரியும் நெசவாளர்கள் கூட்டுறவுத் துறைக்கு ஈர்க்கப்பட்டு இதனால் அதிகமான நெசவாளர்கள் பயன் பெறுகின்றனர். அதிகமாக வேலைவாய்ப்பும் பெறுகின்றனர். மேலும், கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் உற்பத்தி விற்பனைகளை அதிகரிக்கும் பட்சத்தில் வேலைவாய்ப்பை அதிகரிக்க வழிவகை உள்ளதால் அதற்குரிய உற்பத்தி, விற்பனை குறியீடுகள் சங்கங்கள் வாரியாக நிர்ணயிக்கப்பட்டு இலக்கு எய்திட அதிக அளவில் நெசவாளர்கள் வேலைவாய்ப்பு பெற தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**(2)** *விசைத்தறி:* விசைத்தறியின் மூலம் வேலைவாய்ப்பை அதிகரிக்க விசைத்தறி அதிக அளவில் உள்ள இடங்களில் மேலும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பித்து அதன் மூலம் விசைத்தறி நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்பு அளிக்க அரசின் இலவச வேட்டி, சேலை மற்றும் இலவச சீருடை உற்பத்தி திட்டங்களும் வழங்கப்படுகின்றன. இதனால், அதிக அளவில் விசைத்தறியாளர்களுக்கு வேலைவாய்ப்பளிக்கப்பட்டு வருகிறது. தற்போதைய வியாபாரச் சூழ்நிலையில் தனியாரிடம் உள்ள விசைத்தறி நெசவாளர்களும் சிறிய விசைத்தறி முதலாளிகளும் கூட்டுறவுச் சங்கம் ஆரம்பிக்க ஆர்வமாக செயல்பட்டு சங்கங்கள் தொடங்கப்பட்டு வருகின்றன.

**(3)** *பஞ்சாலைகள்:* தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவு நூற்பாலைகளில் விஞ்ஞான ரீதியாக வேலைப்பளு நிர்ணயம் செய்து அமல்படுத்தப்படுவதால், தொழிலாளர்கள் உபரியாக உள்ளனர். இருப்பினும், அவர்கள் ஓய்வு பெறும் வரை அவர்களுக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டு வருகிறது.

**91—**

### பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு குடியிருப்பு வசதி

**வினா 12930—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



1998 மார்ச் 19]

ஓமலூர் தொகுதியிலுள்ள பிற்படுத்தப்பட்ட மக்களைக் கணக்கெடுத்து அவர்களுக்குக் குடியிருப்பு வசதி செய்து கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

*விடை—*

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

வறுமைக்கோட்டிற்குக் கீழே கிராமப்புறங்களில் வாழ்ந்து வரும் மிகப் பிற்படுத்தப்பட்டோருக்கும், சீர்மரபினருக்கும் இலவசமாக வீட்டுமனைப் பட்டாக்கள் மட்டும் இத்துறையினால் அளிக்கப்பட்டு வருகிறது. நடப்பு நிதியாண்டிலிருந்து இலவச வீட்டுமனைத் திட்டமானது வறுமைக்கோட்டிற்குக்கீழே கிராமப்புறங்களில் வாழும் பிற்படுத்தப்பட்டோருக்கும், முன்னேறிய பிரிவினருக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. எனவே, ஓமலூர் தொகுதியிலுள்ள பிற்படுத்தப்பட்ட மக்களும் இலவசமாக வீட்டுமனைப் பட்டாக்கள் கோரி மாவட்ட ஆட்சியரை அணுகுவார்களேயானால், தகுதியின் அடிப்படையில் அவர்கட்கும் இலவசமாக வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கிட பரிசீலிக்கப்படும்.

**92—**

### வனக் காவலர்களுக்கு சிறப்புப் பயிற்சி

**வினா 10676—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஜவ்வாது மலைப் பகுதியிலிருந்து சந்தனக் கட்டைகள் கடத்தப்படுவதைத் தடுக்க வனத் துறைக் காவலர்களுக்கு ஏ.கே. 47 போன்ற நவீன இரகத் துப்பாக்கிகளைக் கொடுத்து பயிற்சி அளிக்க அரசு முன் வருமா?

*விடை—*

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

இந்த அரசு பொறுப்பேற்றபின் ஆயுதங்களை வாங்க ரூ. 45 இலட்சம் ஒதுக்கீடு செய்து 220 கிளாக்-17 இரக கைத்துப்பாக்கிகள்

[1998 மார்ச் 19

(220 Nos. of Glock-17 Pistals) வாங்குவது சம்பந்தமான கருத்துரு மைய அரசின் அனுமதிக்காக அனுப்பப்பட்டுள்ளது. இவ்வகைத் துப்பாக்கிகள் லேசாகவும், கொண்டு செல்ல எளிதாகவும், வனப் பணியாளர்கள் தற்காப்புத் தேவைக்கு உகந்ததாகவும் உள்ளது. எனவே, ஏ.கே. 47 போன்ற துப்பாக்கிகள் தேவை இல்லை.

**93—**

### வனத் துறை மூலம் பாதை வசதி

**வினா 10698—திரு ஜி.கே. மணி:** மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, ஏமதூருக்குப் போக்குவரத்து வாகனங்கள் செல்ல வனத் துறையின் மூலம் பாதை வசதி செய்து கொடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**94—**

### சாலை வசதி அமைத்தல்

**வினா 12132—திரு. ஆர். ஆர். சேகரன்:** மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டி ஒன்றியம், கணவாய்ப்புதூர் ஊராட்சிக்குட்பட்ட மலைப் பகுதியில் சாலை வசதி இல்லாமலிருக்கும் வீராட்சியூர், பூமரத்தூர், கோயில்பாறை



1998 மார்ச் 19]

ஆகிய கிராமங்களுக்கு எஸ். பாளையத்திலிருந்து சாலை அமைக்க மத்திய அரசின் அனுமதிபெற அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

இதுகுறித்து அரசுக்கு எந்தவிதமான கருத்துருவும் வரவில்லை.

**95—**

### சந்தனக் கட்டைகள் சேமிப்பு

**வினா 12402—திரு. கே.சுப்பராயன்:** மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் சேமித்து வைக்கப்பட்டுள்ள சந்தனக் கட்டைகளின் மதிப்பு எவ்வளவு?

(ஆ) அவற்றை விற்பனை செய்வதில் காலதாமதம் ஏன்?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

(அ) தமிழகத்தில் சேமித்து வைக்கப்பட்டுள்ள சந்தனக் கட்டைகளின் தோராயமான மதிப்பு ரூ.386 கோடியாகும்.

(ஆ) சந்தன மர ஏற்றுமதியினை எல்லா வகையிலும் மத்திய அரசு 1-4-1992 முதல் தடை செய்துள்ளது. தற்போது, சந்தன மரச் சில்லு (சிப்ஸ்) மற்றும் சந்தன வெள்ளடை (பிளேக்ஸ்) வகையினை மட்டுமே ஏற்றுமதி செய்ய அனுமதி வழங்கியுள்ளது. மத்திய அரசின் ஏற்றுமதி தடையினாலும், சில குறிப்பிட்ட பிரிவு சந்தனக் கட்டைகளை குறிப்பிட்ட அளவு மட்டுமே ஏற்றுமதி செய்ய மத்திய அரசு அனுமதிப்பதாலும், இருப்பிலிருக்கிற சந்தனக் கட்டைகளை விற்பனை செய்வதில் காலதாமதம் ஏற்படுகின்றது.

[1998 மார்ச் 19

96—

## கரும்புச் சக்கையிலிருந்து சிறிய பலகை தயாரித்தல்

**வினா 11967—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் கரும்புச் சக்கையிலிருந்து சிறிய பலகை தயாரிக்கும் ஆலை எங்கெங்கு உருவாக்க அரசு திட்டம் தீட்டியுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில் கரும்புச் சக்கையிலிருந்து சிறிய பலகை தயாரிக்கும் ஆலை உருவாக்கும் திட்டம் ஏதும் இத்துறையின் பரிசீலனையில் இல்லை. தனியார் எவரேனும் மேற்படி தொழிற்சாலை அமைக்க முன்வந்தால் அத் தொழிற்சாலை அமைக்க அனைத்து ஆலோசனைகளையும் உதவிகளையும் இத்துறை வழங்கும்.

97—

## அரசினர் மாணவர் விடுதிக்குக் கட்டடம்

**வினா 9189—திரு. அ. சுடலைமுத்து:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

போடிநாயக்கனூரில், வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் தேவாரம் அரசினர் மாணவர் விடுதிக்குச் சொந்தக் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

வரும் ஆண்டுகளில் நிதி நிலைமைக்கேற்ப பரிசீலிக்கப்படும்.



1998 மார்ச் 19]

98—

## இலவச விட்டுமனைப் பட்டா

**வினா 13096—திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெள்ளக்கோவில் தொகுதி, தாராபுரம் வட்டம் தட்டாரவலசு, பாறைவலசு ஆதிதிராவிட மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது பட்டா வழங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): ஈரோடு மாவட்டம், வெள்ளக்கோவில் தொகுதி, தாராபுரம் வட்டம், தட்டாரவலசு, பாறைவலசு, ஆதிதிராவிட மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க நில எடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நில எடுப்பு நடவடிக்கைகள் முடிவுற்றதும் பட்டாக்கள் வழங்கப்படும்.

99—

## காந்திநிகேதன் ஆசிரமம்

**வினா 3425—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், டி. கல்லுப்பட்டியில் உள்ள காந்திநிகேதன் ஆசிரமத்தில் என்னென்ன பிரிவுகள் செயல்படுகின்றன?

(ஆ) அவைகளில் பணியாளர்கள், தொழிலாளர்கள் எவ்வளவு பேர் வேலைவாய்ப்புப் பெற்றுள்ளனர்?

விடை—

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு, கதர்த் துறை அமைச்சர்:**

(அ) காந்திநிகேதன் ஆசிரமத்தில் கீழ்க்கண்ட 13 பிரிவுகள் செயல்படுகின்றன:

1. காந்திநிகேதன் ஆரம்பப் பள்ளி
2. காந்திநிகேதன் மேல்நிலைப் பள்ளி
3. டாக்டர் ஜே.சி. குமரப்பா உயர்கல்வி பயிற்சி நிலையம்
4. சோப்பு பகுதி
5. தேன் பகுதி
6. தோல் உற்பத்தி பயிற்சி நிலையம்
7. கதர் நூற்பு நெசவு பயிற்சி நிலையம்
8. எண்ணெய் பகுதி
9. மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவனத்துடன் நடைபெறும் தோல் பயிற்சி
10. மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட காந்திய சிந்தனைக் கல்லூரி (சர்டிபிகேட், பட்டப்படிப்பு பிரிவுகள்)
11. வயது வந்தோர் கல்வித் திட்ட மையங்கள்
12. கிராம சபை அமைப்புகள்
13. காந்திநிகேதன் ஆசிரமத்தில் உற்பத்தியாகும் பொருட்களை விற்பனை செய்யும் 11 விற்பனை நிலையங்கள்

(ஆ) மேற்படி பிரிவுகளில் 152 பணியாளர்கள் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர்.



**100—**

### கதர்த் தயாரிப்பு நெசவாளர்கள்

**வினா 12869—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கதர்த் தயாரிப்புத் தொழிலில் தமிழ்நாட்டில் எத்தனை நெசவாளர்கள் பணியாற்றி வருகிறார்கள்?

(ஆ) அவர்களது சம்பளம் எவ்வாறு நிர்ணயம் செய்யப்படுகிறது?

விடை—

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு, கதர்த் துறை அமைச்சர்:**

(அ) கதர்த் தயாரிப்புத் தொழிலில் தமிழ்நாட்டில் 11,425 நெசவாளர்கள் பணியாற்றி வருகிறார்கள்.

(ஆ) ஒவ்வொரு முறையும் கதர் விலை நிர்ணயம் செய்யும்பொழுது கதர் ஆணைக் குழுவும் மற்றும் சகோதர நிறுவனங்களும் இணைந்து கூட்டம் நடத்தி, அக்கூட்டத்தில் நூலின் இரகங்களின் அடிப்படையிலும், சிட்டத்தின் அடிப்படையிலும் நெசவாளர்களின் கூலியை நிர்ணயம் செய்து விலை நிர்ணயப் புத்தகத்தில் அமல்படுத்தி, அவரவர்கள் நெசவு செய்யும் துணியின் அளவிற்கேற்ப (மீட்டர் கணக்கில்) கூலி வழங்கப்பட்டு வருகிறது.

## நான்காவது பட்டியல்

**1—**

### கிரானைட் கல் ஏற்றுமதி விவரம்

**வினா 9396—திரு. டி. மணி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிரானைட் கல் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளதா?

[1998 மார்ச் 19

(ஆ) ஆம் எனில், 1995-96-இல் எவ்வளவு ஏற்றுமதியாகியுள்ளது? அதனால், அரசுக்கு வருமானம் எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) அரசு, நேரிடையாக கிரானைட் கற்களை ஏற்றுமதி செய்வதற்கு அனுமதி வழங்குவதில்லை. என்றாலும், குத்தகைதாரர்கள் கிரானைட் கற்களை ஏற்றுமதி செய்வதற்கு அனுமதிச் சீட்டுகள் கேட்கும்பொழுது, அனுமதி அளிப்பதன் மூலமாகவும், 100 சதவீதம் கற்களை ஏற்றுமதி செய்யும் தொழிற்சாலைகளுக்கு அனுமதி வழங்குவதன் மூலமாகவும் அரசு கிரானைட் கற்களை ஏற்றுமதி செய்வதற்கு ஊக்குவிக்கிறது.

(ஆ) 1995-96 ஆம் ஆண்டில், 67,894,486 கனமீட்டர் பல வண்ண கிரானைட் கற்களும், 10,601,760 கனமீட்டர் கருப்பு கிரானைட் கற்களும், ஆக மொத்தம் 78,496,246 கனமீட்டர் கிரானைட் கற்கள் எடுத்துச் செல்ல அனுமதிச் சீட்டுகள் வழங்கப்பட்டுள்ளன. பல வண்ண கிரானைட் கற்கள் மூலம் ரூ. 6,80,48,228-ம், கருப்பு கிரானைட் கற்கள் மூலம் ரூ. 2,04,93,574-ம், ஆக மொத்தம் ரூ. 8,85,40,802 அரசுக்கு Seigniorage தொகை மூலம் வருமானம் கிடைத்துள்ளது. மேலும், பல வண்ண கிரானைட் கற்கள் மூலம் ரூ.125,46,69,545-ம் கருப்பு நிற கிரானைட் கற்கள் மூலம் 66,58,77,134-ம், ஆக மொத்தம் ரூ.192,05,46,679 அந்நியச் செலாவணியாகவும் கிடைத்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

2—

### மேல்நிலைப் பள்ளிக் கட்டடங்கள் பழுது பார்த்தல்

**வினா 3514—திரு. செ. இராமலிங்கம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, சைதாப்பேட்டை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, மாதிரி மேல்நிலைப் பள்ளிக் கட்டடங்கள், பழுதடைந்த நிலையில் உள்ளதை அரசு அறியுமா?



1998 மார்ச் 19]

(ஆ) ஆம் எனில், புதிய வகுப்பறைகள், பள்ளிக் கட்டடங்கள் கட்டிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சென்னை, சைதாப்பேட்டை அரசினர் மாதிரி மேல்நிலைப் பள்ளிக் கட்டடம் 9-1-1996-இல் பொதுப்பணித் துறையிடம் ஒப்படைக்கப்பட்டு பழுது பார்க்கும் பணி 17-2-1997-இல் முடிக்கப்பட்டு விட்டது. பழுது பார்க்கப்பட்ட பகுதியில் மின் இணைப்புகள், குடிநீர் இணைப்புகள் அளிக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

3—

### வகுப்பறைக் கட்டடம் கட்டித் தருதல்

**வினா 5811—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் மூலமாக ஆறு வகுப்பறைக் கட்டடங்கள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அடுத்த நிதி ஆண்டில் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தமிழ்நாடு பாடநூல் கழகத்தின் நிதியிலிருந்து நலிவடைந்த பள்ளிகளுக்குப் பள்ளிக் கட்டடம் கட்டிக் கொடுக்க ஆண்டுதோறும் ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வந்தது. 1995-96 ஆம் நிதியாண்டு, இக்கழகத்தின் வெள்ளிவிழா ஆண்டானதால் சிறப்பினமாக 77 பள்ளிகளுக்கு ரூ. 100 இலட்சம் பள்ளிக் கட்டட நிதியாக அனுமதிக்கப்பட்டது.

1995-96 மற்றும் 1996-97 ஆம் கல்வி ஆண்டில் புதிய வரிசைப் பாடநூல்களுக்கு விலையேற்றம் இன்றி இக்கழகம் விற்பனை செய்த காரணத்தால் ரூ.9.12 கோடி நஷ்டம் ஏற்படும் நிலையை எதிர்நோக்கி 21-5-1996 அன்று நடைபெற்ற ஆளுநர் குழுக் கூட்டத்தில் இப்பொருள் சார்ந்து நன்கு விவாதிக்கப்பட்டும், நிதி நிலையைக் கருதியும் 1996-97 ஆம் நிதியாண்டில் பள்ளிக் கட்டடங்களுக்கு நிதி ஒதுக்கீடு அனுமதிக்க வாய்ப்புகள் இல்லை எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே, 1996-97 ஆம் நிதி ஆண்டில் பள்ளிக் கட்டடத்திற்கு பாடநூல் கழகத்தின் நிதியிலிருந்து ஒதுக்கீடு ஏதும் அனுமதிக்கப்படவில்லை. மேலும், இதுவரை செய்யப்பட்டு வந்த இந்நிதி ஒதுக்கீட்டின்கீழ் பல்வேறு பள்ளிகளும் பயன்பெறத்தக்க வகையில் ஒன்று அல்லது இரண்டு வகுப்பறைகள் மட்டுமே கட்டிக் கொடுப்பது வழக்கத்தில் இருந்தது. எனவே, மேற்படி பள்ளிக்கு 6 வகுப்பறைகள் மொத்தமாக கட்டிக்கொடுப்பதும் வழக்கத்தில் இல்லை. எனவே, மேற்கூறிய காரணங்களினால் தற்போது சேலம் மாவட்டம் எடப்பாடி அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு ஆறு வகுப்பறைக் கட்டடங்கள் கட்ட பாடநூல் கழகத்திலிருந்து நிதி ஒதுக்கீடு செய்வதற்கு வாய்ப்பு ஏதும் இல்லை.

4—

### பள்ளிக் கட்டடம் கட்டுதல்

**வினா 6406—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் கே.எஸ்.சி. மேல்நிலைப் பள்ளியில், பள்ளிக் கல்வி இயக்குநரகம், கட்டடம் கட்ட அனுமதி கொடுத்தும் பணிகள் தொடங்கப்படாமலிருப்பதற்குக் காரணம் என்ன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

அரசாணை நிலை எண் 741, நாள் 30-8-1996-இன்படி 1995-96-ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தின்கீழ் திருப்பூர் கே.எஸ்.சி. மேல்நிலைப்



பள்ளிக்கு 2 வகுப்பறைகள் கட்ட (அரசு பங்கீடு ரூ.2,23,500 பெற்றோர் ஆசிரியர் கழக பங்கீடு ரூ.74,500-ம்) ஆணையிடப்பட்டு கட்டடப் பணிகள் முடியும் தருவாயில் இருக்கிறது.

5—

### அரசினர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்குதல்

**வினா 6411—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு மாவட்டம், பெருந்துறை தொகுதி, திங்களூர் அரசினர் உயர்நிலைப் பள்ளி 1997-98 ஆம் கல்வியாண்டில் மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்படுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

1997-98-ம் ஆண்டில் திங்களூர் அரசினர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மேம்படுத்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

6—

### நிரப்பப்பட வேண்டிய ஆசிரியர் பணியிடங்கள் விவரம்

**வினா 6729—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் கருப்பன்கவுண்டன்பாளையம் தொடக்கப் பள்ளியில் எத்தனை ஆசிரியர் பணியிடங்கள் காலியாக உள்ளன?

(ஆ) அவை எப்போது நிரப்பப்படும்?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) திருப்பூர், கருப்பன்கவுண்டன்பாளையம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்கள் 5. இதில் ஐந்து ஆசிரியர்களும் தற்போது பணிபுரிந்து வருகின்றனர். தற்போது வரையறுக்கப்பட்ட நெறிமுறைகளின்படி கூடுதல் பணியிடங்கள் வரும் ஆண்டில் வழங்கப்படும்.

(ஆ) கூடுதல் பணியிடங்கள் வழங்கப்பட்ட பின் நிரப்பப்படும்.

7—

**ஆசிரியர் பணியிடங்கள் நிரப்புதல்**

**வினா 8706—திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தண்டாரம்பட்டு தொகுதி, மோததக்கல் கிராமத்தில் அரசு உயர்நிலைப் பள்ளியில் காலியாக உள்ள ஆசிரியர் பணியிடங்களை நிரப்ப அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தண்டாரம்பட்டு தொகுதி, மோததக்கல் கிராமத்தில் அரசு உயர்நிலைப் பள்ளியில் தற்போது சிறப்பாசிரியர் (மரவேலை) பணியிடம் தவிர மற்ற பணியிடங்கள் நிரப்பப்பட்டுவிட்டன. சிறப்பாசிரியர் (மரவேலை) பணியிடம் நிரப்ப அரசால் தடையாணை உள்ளது. எனவே, அப்பணியிடத்தை நிரப்ப இயலாது.



8—

**அரசு செலவில் மேற்படிப்பிற்கு உதவி**

**வினா 12064—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மாவட்ட அளவில் முதல் 3 இடங்களைப்பெறும் 2 மாணவர்களுக்கு அரசு செலவில் மேற்படிப்புக்கு செய்யும் உதவியை, முதல் 10 இடங்களைப் பெறும் 2 மாணவர்களுக்கு செய்ய அரசு பரிசீலிக்குமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

இல்லை. அரசு மேல்நிலைப் பள்ளியில் பயிலும் மாணவர்கள் மாநில அளவில் மொழி மற்றும் மொழி அல்லாத பாடங்களில் முதல் மூன்று இடங்களை பெறுபவர்கள் ரூ.5,000, ரூ.3,000, ரூ.2,000 என மூன்று நிலைகளில் பரிசுத் தொகை பெறுகின்றனர். 1996-97 ஆம் வருடம் முதல், மாநில அளவில் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவ/மாணவியர் சார்பாக, அவர்களது மேற்படிப்பிற்கான செலவினை அரசு ஏற்கும் என ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் கல்வி மேம்பாட்டிற்காக மேற்கொள்ளப்பட்ட பல புதிய முயற்சிகளின் ஓர் அம்சமாக 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் மாநில அளவில் அதிக மதிப்பெண்கள் பெற்று முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களின் அடுத்த நிலைப்படிப்பிற்கான செலவினை அரசு ஏற்றுக்கொள்ளும் என அரசு ஆணையிட்டுள்ளது. இந்த முறை மாநில அளவில் மட்டுமின்றி 1997 ஆம் ஆண்டு முதல் மாவட்ட அளவிலும் நீட்டிக்கப்பட்டிருப்பதுடன் தமிழை ஒரு பாடமொழியாகவாவது எடுத்துப் படிக்கும் மாணவர்களுக்கும் பொருந்துமாறு மாற்றியமைத்து அரசு ஆணை வழங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் திறன் வாய்ந்த மாணவர்கள் ஊக்கத்துடன் மேற்படிப்பைத் தொடர வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் தற்போது மாவட்ட அளவில் 87 (29 x 3 = 87) முதல்

[1998 மார்ச் 19

மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்கள் அரசின் நிதியுதவி மற்றும் கல்விச் சலுகைகளைப் பெற்று வருகின்றனர். இவர்கள் அதிக மதிப்பெண்களைப் பெற்றுள்ளதால், தொழிற்கல்விப் பட்டப்படிப்புகளில் (Professional Course) சேர வாய்ப்பு அதிகமாகவே உள்ளன. ஆதலால், இவர்களது மேற்படிப்புச் செலவினை அரசு ஏற்கும் நிலை ஏற்படுகிறது. இந்நிலையில் ஒரு மாவட்டத்தில் முதல் 10 இடங்களைப் பெறும் மாணவர்களின் மேற்படிப்புக்கான செலவினங்களை அரசு ஏற்கும் நிலை ஏற்படின் அரசுக்குக் கூடுதல் செலவினம் ஏற்படும் என்பதாலும், இத்திட்டத்தின் நோக்கம் பயன்தரும் வண்ணம், முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களுக்கு மட்டும் கல்விச் செலவினங்களை அரசு ஏற்றுக் கொண்டால் போதும் என அரசு கருதுகிறது.

9—

## பூசாரிப்பட்டியில் நூல் நிலையம்

**வினா 12932—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டி ஒன்றியம், பூசாரிப்பட்டியில் நூல் நிலையம் அமைத்துக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டி ஒன்றியம், பூசாரிப்பட்டியில் 10-2-1991 முதல் பகுதி நேர நூலகம் ஒன்று தனியார் வீட்டில் இயங்கி வருகிறது. நடைமுறை விதிகளின்படி இக்கிராம மக்கள் நூலகத்திற்கான இலவசக் கட்டடம் உள்ளிட்ட இதர நிபந்தனைகளை பூர்த்தி செய்து தந்தால், அவ்வூரில் ஊர்ப்புற நூலகம் திறக்க வழிவகை உள்ளது.



1998 மார்ச் 19]

10—

## மருத்துவமனையை விரிவுபடுத்துதல்

**வினா 10011—திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் தொகுதி, பத்மநாபபுரம் அரசு மருத்துவமனைக்குப் புதிய கட்டடம் கட்டுதல் மற்றும் படுக்கை வசதிகள் செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் அரசு மருத்துவமனையில் தற்போது போதுமான படுக்கை வசதியும், கட்டட வசதியும் உள்ளது. மேலும் விரிவுபடுத்துவது குறித்து தக்கசமயத்தில் பரிசீலிக்கப்படும்.

11—

## மின் இணைப்பு வழங்குதல்

**வினா 11260—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் விவசாய மின் இணைப்பு வேண்டி காத்திருப்போரின் எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) அவர்களுக்கு எப்போது மின் இணைப்பு வழங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் விவசாய மின் இணைப்பு வேண்டி காத்திருப்போரின் எண்ணிக்கை 22,975.

[1998 மார்ச் 19

(ஆ) வருடம் ஒன்றுக்கு ஆண்டு இலக்கீடாக சேலம் மாவட்டத்தில் சராசரியாக 4200 பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டு வருகிறது. இந்த அளவில் ஆண்டுதோறும் சேலம் மாவட்டத்தில் மின் இணைப்புகள் வழங்கப்பட்டால் சுமார் ஆறு வருடங்களில் இவர்களுக்கு விவசாய மின் இணைப்பு வழங்க இயலும்.

12—

**தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரிக்குக் கூடுதல் வகுப்பறைகள்**

**வினா 11263—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரியில் வகுப்பறைகள் கூடுதலாகக் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரியில் வகுப்பறைகள் போதுமான அளவில் உள்ளதால் கூடுதலாகக் கட்ட தற்போது செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

13—

**தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு வசதிகள்**

**வினா 11264—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்குக் கூடுதல் படுக்கை வசதி, மருத்துவ வசதி, கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



1998 மார்ச் 19]

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்குக் கூடுதல் படுக்கை வசதி, மருத்துவ வசதி மற்றும் கட்டடம் கட்ட தற்போது செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை. தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் போதுமான மருத்துவ வசதிகள் மற்றும் கட்டட வசதிகள் தற்சமயம் உள்ளன. மேலும் கூடுதலாக புற்று நோயாளிகளின் சிகிச்சைக்காக கோபால்ட் தெரபி பிரிவு துவங்க புறநோயாளிகளுக்கென கட்டடம் கட்டப்பட்டு வருகின்றது.

14—

**உயர் அழுத்தப் புதை மின் வடம் அமைத்தல்**

**வினா 11738—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகரம் முழுவதுமுள்ள மின் கம்பங்களை அகற்றி மின் விநியோகத்தை under ground system ஆக மாற்றி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): திருப்பூர் நகரப் பகுதியில் மின் விநியோகத்தைச் சீரமைப்பதற்கென உயர் அழுத்தப் புதை மின் வடம் போடுவதற்கான ஒரு திட்டம் தீட்டப்பட்டுள்ளது. மேற்கூறிய திட்டத்தில் 44 கி.மீ. தூரத்திற்கு உயர் அழுத்த புதை மின் வடம் போட உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய திட்டம் 1998 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

[1998 மார்ச் 19

**15—**

**அரசு மருத்துவமனையில் பணியிடங்கள் ஏற்படுத்துதல்**

**வினா 12030—திரு. கே. ரவி அருண்ன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கோட்டை அரசு வட்ட மருத்துவமனையில் ஒரு உதவியாளர் மற்றும் இளநிலை உதவியாளர் பணியிடங்களை ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): இப்பொருள் குறித்து செயற்குறிப்பு ஒன்றும் தற்போது ஆய்வில் இல்லை.

**16—**

**திருப்பூர் மாவட்ட மருத்துவமனையின் கோரிக்கை**

**வினா 12438—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூரிலுள்ள மாவட்ட மருத்துவமனையில் சிறப்பு வார்டு, N.G.O. வார்டுகள் கட்டித் தருமாறு அரசிற்குக் கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) திருப்பூரிலுள்ள மாவட்ட மருத்துவமனையில் சிறப்பு வார்டு, என்.ஜி.ஓ. வார்டுகள் கட்டித் தருமாறு கோரிக்கை ஏதும் அரசுக்கு வரவில்லை.



1998 மார்ச் 19]

(ஆ) இவ்வினா எழாது.

**17—**

**மின் அழுத்தக் குறைவை சரி செய்தல்**

**வினா 12441—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர், பொங்குபாளையம் ஊராட்சி, பள்ளிப்பாளையத்தில் கடுமையான மின் அழுத்தக் குறைவு இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அது எப்போது சரி செய்யப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) திருப்பூர், பொங்குபாளையம் ஊராட்சி, பள்ளிப்பாளையத்தில் இரட்டை மின்னூட்டி அமைக்கப்பட்டு, 20-6-1997 முதல் மின் அழுத்தக் குறைவு சரி செய்யப்பட்டது.

**18—**

**புதிய மின்மாற்றி அமைத்தல்**

**வினா 12512—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேச்சேரி ஒன்றியம், எம். காளிப்பட்டி ஊராட்சி, அமரத்தானூரில் மின் அழுத்தம் குறைவாக உள்ளதால் புதிய மின் மாற்றி அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

[1998 மார்ச் 19

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

மேச்சேரி ஒன்றியம், எம். காளிப்பட்டி பகுதிக்கு 110/11 கே.வி. நங்கவள்ளி துணை மின் நிலையத்திலிருந்து 11 கே.வி. மல்லிகுந்தம் மின்னூட்டியின் மூலம் அமரத்தானூரில் அமைக்கப்பட்டுள்ள எம். காளிப்பட்டி மின் மாற்றி எண் II-க்கு மின்சாரம் வழங்கப்படுகிறது. மேற்படி மல்லிகுந்தம் மின்னூட்டியின் வழித்தடத்தின் தூரம் 25 கி.மீ. ஆகும். எனவே இந்த மின்னூட்டியில் கடைப்பகுதியில் உள்ள எம். காளிப்பட்டி ஊராட்சி, அமரத்தானூரில் தாழ்வு மின் அழுத்தம் இருந்து வருகிறது. எம் காளிப்பட்டி மின் மாற்றி எண் II-ன் மின்னழுத்தத்தை 26-9-1997 அன்று கணக்கெடுத்தபோது கீழ்க்கண்டவாறு கண்டறியப்பட்டது:

| | | |
|---|---|---|
| பேஸ்-எர்த் | - 220 வோ. | மின் மாற்றியின் கடைசியில் |
| பேஸ்-பேஸ் | - 380 வோ. | |
| பேஸ்-எர்த் | - 220 வோ. | மின் மாற்றியில் கடைசியாக இணைக்கப்பட்டுள்ள இணைப்பில் |
| பேஸ்-பேஸ் | - 380 வோ. | |

எனவே மின் மாற்றியிலுள்ள மின்னழுத்தமும் கடைப்பகுதி மின் இணைப்பு மின்னழுத்தமும் ஏறக்குறைய ஒரே அளவாக இருப்பதால், புதிய மின் மாற்றி அமைப்பதால் மட்டும் குறைந்த மின் அழுத்தத்தைப் போக்க சாத்தியக்கூறு இல்லை. எனவே மேச்சேரியில் புதிதாக 110/11 கே.வி. துணை மின் நிலையம் அமைக்கும் திட்டம் தயாரிக்கப்பட்டு வருகின்றது. அத்திட்டத்தினை நிறைவேற்றிய பின்பு அமரத்தானூர் உள்ளிட்ட மேச்சேரி பகுதியில் நிலவும் குறைந்த மின் அழுத்தம் சீரடையும்.



1998 மார்ச் 19]

**19—**

### வருவாய்த் துறை கிராமச் சாவடிகள் விவரம்

**வினா 9528—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வருவாய்த் துறை கிராமச் சாவடிகள் எடப்பாடி தொகுதியில் எத்தனை உள்ளன?

(ஆ) கிராமச் சாவடி இல்லாத இடங்களுக்குப் புதிதாக கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) எடப்பாடி தொகுதியில் மொத்தம் 8 கிராமச் சாவடிகள் உள்ளன.

(ஆ) இப்பொருள் பற்றிய செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**20—**

### நிலப்பட்டா வழங்குதல்

**வினா 11579—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புறம்போக்கு நிலங்களில் விவசாயம் செய்யும் ஏழை விவசாயிகளுக்கு அவர்களின் பேரில் நிலப்பட்டா வழங்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

ஆட்சேபணையற்ற அரசு புறம்போக்கு நிலங்களில் ஆக்கிரமணம் செய்து, வேளாண்மை செய்துவரும் விவசாயிகளுக்கு அவர்களது

ஆண்டு வருமானம் ரூ. 12,000 அல்லது அதற்குக் குறைவாக இருந்தால் அவர்கள் ஏழை எனக் கருதப்பட்டு இலவசமாக நிலம் ஒப்படை செய்யப்பட்டு வருகிறது.

**21—**

**தார்ச் சாலை அமைத்தல்**

**வினா 5067—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் மாவட்டம், எரியோடு பேரூராட்சியில் வடமதுரையிலிருந்து எர்ணாசமுத்திரம் வரை, வடமதுரை ஒன்றியத்தில் வேல்வார் கோட்டையிலிருந்து குப்பத்துப்பட்டி வரை, மற்றும் மோளப்பாடியூரிலிருந்து வெள்ள பொம்மன்பட்டி வரை தார்ச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): திண்டுக்கல் மாவட்டம், வடமதுரை முதல் எர்ணாசமுத்திரம் வரை உள்ள சாலை வடமதுரை ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்டதாகும். எர்ணாசமுத்திரம் முதல் வடமதுரை வேடசந்தூர் வரை சுமார் 0.500 கி. மீட்டர் தூரம் எரியோடு பேரூராட்சிக்கு உட்பட்டதாகும். எரியோடு பேரூராட்சிப் பகுதியில், ரூ.60,000 செலவில் தார்ச் சாலை அமைக்க இப்பேரூராட்சியால் தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எர்ணாசமுத்திரம் முதல் வடமதுரை வேடசந்தூர் வரை மெட்டல் சாலை அமைக்கப்பட்டு மக்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

வடமதுரை ஊராட்சி ஒன்றியம், வேல்வார் கோட்டையிலிருந்து வெள்ள பொம்மன்பட்டி வரை மொத்தம் 5 கி.மீ. தூரமாகும். இதில் முதல் 2 கி.மீ. தூரம் நெடுஞ்சாலைத் துறையினர் பராமரிப்பிலும் அடுத்த 2 கி.மீ. தூரம் தேசிய நெடுஞ்சாலைத் துறையினர் பராமரிப்பிலும் உள்ள தார்ச் சாலைகளாகும். இச்சாலைகள் நல்ல நிலையில் உள்ளன. மீதமுள்ள 1 கி.மீ. தூரம் ஊராட்சி ஒன்றிய பராமரிப்பிலுள்ள சரளைச் சாலையாக இருந்ததை மாவட்ட பரவலாக்கப்பட்டத் திட்டத்தில் 1996-97-இல் தார்ச் சாலையாகப் போடப்பட்டு நல்ல நிலையில் உள்ளது.



மோளப்பாடியூரிலிருந்து வெள்ளப்பொம்மன்பட்டி வரை மொத்தம் 3.6 கி.மீ. தூரமாகும். இது ஊராட்சி ஒன்றிய பராமரிப்பில் உள்ள சாலையாகும். இதில் மோளப்பாடியூரிலிருந்து ஊராளிப்பட்டி வரை 2.4 கி.மீ. தூரத்திற்கு 1997-98-ஆம் ஆண்டு வேலை உறுதியளிப்பு திட்டத்தின்கீழ் தார்ச் சாலை போடும் வேலை எடுக்கப்பட்டு முடிவடையும் தருவாயில் உள்ளது. மீதமுள்ள 1.2 கி.மீ. தற்போது சரளை, சாலையாக உள்ளது. அடுத்து வரும் நிதியாண்டில் இதற்கு முன்னுரிமை கொடுத்து தார்ச் சாலை அமைக்கப்படும்.

**22—**

**இணைப்புச் சாலை அமைத்தல்**

**வினா 5171—திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர் மாவட்டம், பரங்கிப்பேட்டை ஒன்றியம், கரிகுப்பம் குடியிருப்பு, வடக்குத்துறை வண்ணாரப்பாளையம் இணைப்புச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): பரங்கிப்பேட்டை ஒன்றியம், கரிகுப்பம் குடியிருப்பு, வடக்குத்துறை வண்ணாரப்பாளையம் இணைப்புச் சாலை கடற்கரையோரம் இருப்பதால் மணல் நிரம்பி காணப்படுகிறது. மேற்படி சாலையினை தார்ச் சாலையாக மாற்ற ரூ.15 இலட்சம் செலவாகும்.

நடப்பு நிதி ஆண்டிற்கு செய்யப்படும் திட்ட வேலைகளுக்கு முன்மொழிவு கடலூர் திட்ட அலுவலர், ஊரக வளர்ச்சி முகமை அவர்களுக்கு ஏற்கெனவே அனுப்பப்பட்டுவிட்டதால், மேற்படி வேலையை வரும் நிதியாண்டில் செய்வதற்கு ஆவன செய்யப்படும்.

**23—**

**பேருந்து நிலைய கடை வளாகக் கட்டடப் பணி**

**வினா 7858—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி நகராட்சி பேருந்து நிலையத்தில் நடைபெற்று வந்த கடை வளாகக் கட்டடப் பணி நின்றுள்ளது என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) எடப்பாடி நகராட்சி பேருந்து நிலையத்திற்கு மத்திய ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் அனுமதிக்கப்பட்ட ரூ.66.87 இலட்சத்தில் ரூ.33.32 இலட்சம் விடுவிக்கப்பட்டு, செலவு செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள ரூ.33.55 இலட்சத்தை தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகத்தால் விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நிதி விடுவிக்கப்பட்டதும் நிலுவைப் பணிகள் முடிக்கப்படும்.

**24—**

**பாலம் அமைத்தல்**

**வினா 8285—திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) நாங்குனேரி தொகுதி, செண்பகராமநல்லூர், அனுமார் புதுகுளத்திற்குச் செல்லும் சாலையில் பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): இல்லை.

**25—**

**பேருந்து நிலையம் அமைத்தல்**

**வினா 11420—திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் பேரூராட்சியில் பேருந்து நிலையம் இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டித் தரப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) பெரணமல்லூர் பேரூராட்சியில் நிதி வசதி போதுமானதாக இல்லாததால் தற்போது பேருந்து நிலையம் அமைக்க இயலாது.

[1998 மார்ச் 19

**26—**

**பள்ளிக்குக் கூடுதல் கட்டடம்**

**வினா 11601—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, எர்ரபையன அள்ளி ஊராட்சி, கருபையனஅள்ளியில் உள்ள பள்ளிக்குக் கூடுதல் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் கட்டித் தரப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தர்மபுரி மாவட்டம் நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், எர்ரபையனஅள்ளி ஊராட்சி கருபையனஅள்ளி ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் தற்போது 121 மாணவ மாணவிகள் பயின்று வருகின்றனர். தற்சமயம் உள்ள பள்ளிக் கட்டடம் மேற்குறிப்பிட்டுள்ள மாணவர்களுக்கு போதுமானதாக உள்ளது.

**27—**

**மின்சார இரயில் பாதையின் இருபுறமும் கழிவுநீர் அகற்ற நடவடிக்கை**

**வினா 11642—திரு. டி. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, சென்ட்ரல் இரயில் நிலையத்திலிருந்து, சென்னை ஆவடி வரையுள்ள மின்சார இரயில் பாதையின் இருபுறங்களிலும் கழிவுநீர் தேங்கியுள்ளதால் சுற்றுப்புற சூழ்நிலை பாதிக்கப்படுவதோடு சுகாதாரக் கேடும் ஏற்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், சுத்தப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?



1998 மார்ச் 19]

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): சென்னை, சென்ட்ரல் இரயில் நிலையத்திலிருந்து, சென்னை, ஆவடி வரையுள்ள இரயில் பாதையில், சென்னையின் எல்லையான வில்லிவாக்கம் வரையில் கழிவுநீர் தேக்கம் ஏதும் இல்லை. அதற்கு அப்பால் ஆவடி வரை உள்ள பகுதியில் இரயில் பாதையின் இருபுறமும் குறிப்பிட்ட தூரம் வரை இரயில்வே நிர்வாகத்தினால் பராமரிக்கப்படுகிறது. அப்பகுதிகள் நகராட்சியின் கட்டுப்பாட்டிற்கு வராததால் அங்கு சுகாதாரப் பணிகள் இரயில்வே நிர்வாகத்தினால்தான் மேற்கொள்ளப்பட வேண்டும்.

**28—**

**தார் சேமிப்புத் தொட்டிகள் அமைத்தல்**

**வினா 11650—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாநகராட்சியில் தார் சேமிப்புத் தொட்டிகள் இல்லை என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், தார் சேமிப்புத் தொட்டிகள் உருவாக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தார் சேமிப்புத் தொட்டிகள் இல்லை என்பது உண்மையில்லை. ஆர்.எஸ்.புரம், காது கேளாதோர் பள்ளி வளாகத்தின் பின்புறம் இரு தொட்டிகள் உள்ளன.

[1998 மார்ச் 19

29—

## அனுமதியில்லாமல் கட்டப்பட்ட கட்டடங்கள் மீது வழக்கு

**வினா 11651—திரு.கே சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாநகராட்சியில் அனுமதியில்லாமல் கட்டப்பட்ட கட்டடங்கள் மீது வழக்குத் தொடுத்த கோப்புகள் மாநகராட்சியில் காணப்படவில்லை என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): கோயம்புத்தூர் மாநகராட்சியில் அனுமதியில்லாமல் கட்டப்பட்ட கட்டடங்கள் மீது வழக்குத் தொடுக்கப்பட்ட கோப்புகள் ஏதும் காணாமல் போகவில்லை. வழக்குத் தொடரும் நிலையில் இருந்த சில கோப்புகள் காணவில்லை. சம்பந்தப்பட்ட மூன்று நகராமைப்பு ஆய்வர்கள் மீது கோயம்புத்தூர் மாநகராட்சியால் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

30—

## மானியம் விவரம்

**வினா 11821—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

(அ) 1997-98 ஆம் ஆண்டு சேலம் மாவட்டத்தில் உள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்கு வருவாய்க் கணக்கில் இந்த ஆண்டு அளிக்கும் மானியம் எவ்வளவு?

(ஆ) எடப்பாடி, சங்ககிரி வட்டங்களுக்கு அளித்த மானியம் எவ்வளவு?



1998 மார்ச் 19]

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர்:**

(அ) மாநில வருவாய்க் கணக்குக்கு பொதுசேர்மம் 'ஏ' (Pool 'A') மற்றும் பொதுச்சேர்மம் 'பி' (Pool 'B') என்று இரண்டு வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. பொதுச்சேர்மம் ஏ-ல் முத்திரைத்தாள், மேல்வரி, உள்ளூர் செஸ், உள்ளூர் செஸ் மேல்வரி மற்றும் கேளிக்கை வரிகள் சேரும். இந்த வரிகள் வசூலிக்கப்படும் மூல இருப்பிடத்தின் அடிப்படையில் சேலம் மாவட்டத்திலுள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாற்று உரிமை மூலம் அளிக்கப்படுகிறது. பொதுச் சேர்மம் 'பி'-ல் கேளிக்கை வரிகளைத் தவிர ஏனைய வரிகள் தொகுக்கப்பட்டு அதில் 8% உள்ளாட்சி அமைப்புகளுக்கு பிரித்து வழங்கப்படுகிறது. இதில் 1997-98-ஆம் ஆண்டில் சேலம் மாவட்ட உள்ளாட்சி அமைப்புகளுக்கான மானியம் பின்வருமாறு:-

| | | ரூபாய் |
|---|---|---|
| மாவட்ட ஊராட்சி | .. | 1,34,95,752 |
| ஊராட்சி ஒன்றியங்கள் | .. | 5,78,58,365 |
| ஊராட்சி | .. | 5,78,58,364 |

(ஆ) எடப்பாடி மற்றும் சங்ககிரி வட்டங்களுக்கு அளிக்கப்படுகின்ற மானியம்:

| | எடப்பாடி | சங்ககிரி |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| மாநில நிதிக்குழுவின் பரிந்துரையின்படி வழங்கப்பட்ட மானியம் | 22,14,022 | 28,86,972 |

31—

## வணிக வளாகமும், திருமண மண்டபமும் கட்டுதல்

**வினா 12769—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1998 மார்ச் 19

(அ) திருநெல்வேலி மாவட்டம், மேலகரம் பேரூராட்சி புல எண் 76/4, இடத்திலுள்ள 60 சென்ட் நிலத்தில் வணிக வளாகமும், திருமண மண்டபமும், ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) இதற்கான கருத்துரு பேரூராட்சிகளின் இயக்குநரால் 9-12-1997 அன்று நகர் ஊரமைப்பு இயக்குநருக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. நகர் ஊரமைப்பு இயக்குநரால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு நிதி ஒதுக்கீடு கொடுக்கப்பட்டதும் கட்டுமானப் பணிகள் தொடங்கப்படும்.

**32—**

## இலவச மின் விளக்குத் திட்டம்

**வினா 13027—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இலவச மின் விளக்குத் திட்டத்தை பேரூராட்சியிலுள்ள குடிசை வீடுகளுக்கும் விஸ்தரிக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர்:**

இலவச மின் விளக்குத் திட்டத்தை பேரூராட்சியில் உள்ள குடிசை வீடுகளுக்கு விஸ்தரிக்கும் திட்டம் அரசிடம் இல்லை.



98 மார்ச் 19]

—

## தமிழ்நாடு வேளாண்மைத் தொழில் கழக செயல்பாடு

**வினா 13618—திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு வேளாண்மைத் றை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு வேளாண்மைத் தொழில் கழகத்தின் (டி.ஏ.ஐ.) லம் எந்தெந்த பணிகளுக்கு முதலீடு செய்யப்பட்டுள்ளது?

(ஆ) அத்திட்டத்தின் செயல்பாடுகள் பற்றிய விவரம் என்ன?

டை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ் ஆறுமுகம், வேளாண்மைத்துறை மைச்சர்:**

(அ) மற்றும் (ஆ):

| சை ண | திட்டத்தின் தொழில் முனைவர் மற்றும் திட்டத்தின் பெயர் | அரசாணை எண் மற்றும் நாள் | 'தாய்' நிறுவன முதலீடு | திட்டத்தின் தற்போதைய செயல்பாடுகள் |
|---|---|---|---|---|
| 1) | (2) | (3) | (4) | (5) |
| | அ மெஸர்ஸ் டெண்டக் அக்ரோ கெமிக்கல்ஸ், கடலூர், கடலூர் மாவட்டம். ஆ பூச்சிக்கொல்லி மூலம் பொருட்கள் தயாரிப்பு | அரசாணை (நிலை) எண் 322, விவசாயம், நாள் 7-6-1994 | 22 விழுக்காடு ரூ.9.9 இலட்சம் | யோலகுராட்டா-பான் என்ற பூச்சிக்கொல்லி மூலப்பொருள் வியாபார ரீதியான உற்பத்தி தொடங்கப்பட்டு விட்டது. |
| | அ. மெஸர்ஸ் இண்டஸ்ப்ளோரா பேஸ் லிமிடெட், ஒசூர் தாலுக்கா, தர்மபுரி மாவட்டம். ஆ உயர்வகை பூக்கள் பயிரிடுதல் | அரசாணை (நிலை) எண்.103 விவசாயம் நாள் 14-3-1996 | 11 விழுக்காடு ரூ.11 இலட்சம் | உயர்வகைப் பூக்கள் பயிரிடப்பட்டு உள்ளூரில் வியாபாரம் செய்யப் பட்டுவருகிறது. |

[1998 மார்ச் 19

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 3. அ. | டச்ராமா அக்ரோ புட்ஸ் லிமிடெட், மெய்யூர் கிராமம், மதுராந்தகம் தாலுக்கா | அரசாணை (நிலை) எண் 458, நாள் 22-8-1996 | 11 விழுக்காடு ரூ.126 இலட்சங்கள் ஆயினும் இதுவரை ரூ.40 இலட்சங்கள் 'தாய்' நிறுவனத்தால் முதலீடு செய்யப்பட்டு உள்ளது. | வங்கிக்கடன் தொழில் முனைவர்க்கு வழங்கப்பட உள்ளது. தொழில் முனைவோரது பங்கு முதலீட்டின் அடிப்படையில் 'தாய்' நிறுவனம் தனது பங்குத் தொகையை கொடுத்து வருகிறது. |
| ஆ. | வெள்ளை உணவு காளான் ஏற்றுமதி தரம் வாய்ந்தது. | | | |
| 4. அ. | போச்சிராஜு ப்ளோரிடெக் லிமிடெட், சத்தியமங்கலம் கிராமம், ஓசூர் தாலூக்கா, தர்மபுரி மாவட்டம். | அரசாணை (நிலை) எண் 197, விவசாயம் நாள் 7-5-1997 | 11 விழுக்காடு ரூ. 10 இலட்சங்கள் | தொழில் முனைவர் வங்கிக் கடனை எதிர்நோக்கி உள்ளார். |
| ஆ. | ஏற்றுமதிக்கென உயர் மலர்களை பயிரிடுதலும் ஏற்றுமதி செய்தலும். | | | |
| 5. | சச்சின் ப்ளோரிடெக் லிமிடெட், தும்மனப்பள்ளி கிராமம், ஓசூர் தாலூக்கா, தர்மபுரி மாவட்டம். | அரசாணை (நிலை) எண் 197, நாள் 7-5-1997 | 11 விழுக்காடு ரூ. 10 இலட்சங்கள் | முதல் ஏற்றுமதி அக்டோபர் 1997-இல் செய்யப்பட்டு விட்டது. மேலும் கட்டுமானப் பணி நடந்து வருகிறது. |



1998 மார்ச் 19]

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 6. | கிருஷ்ணகிரி பழம் பதப்படுத்தும் தொழிற்சாலை | அரசாணை (நிலை) எண் 210, நாள் 12-5-1997 | ரூ. 10 இலட்சங்கள் | கிருஷ்ணகிரி, ஓசூர் ரோட்டில் கிருஷ்ணகிரியிலிருந்து 11 கிமீ. தொலைவில் இடம் தெரிவு செய்யப்பட்டு உள்ளது. கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட உள்ளன. |

**34—**

## ஏரியில் தடுப்புச் சுவர் அமைத்தல்

**வினா 7689—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், வெள்ளாளங்காடு பெரிய ஏரியின் வடக்கு கரையில் ஏற்படும் மண் அரிப்பைத் தடுக்கவும் தடுப்புச் சுவர் அமைக்கவும் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

இல்லை.

ஆனால் ஏரியின் வடக்குக் கரையில் சில இடங்களில் அரிமானம் ஏற்பட்டுள்ளதால் வரும் கோடையில் இக்கரையை வலுப்படுத்தி தேவையான இடங்களில் சறுக்கை அமைக்கும் பணி மேற்கொள்ளப்படவுள்ளது.

[1998 மார்ச் 19

35—

### ஏரிகளை ஆழப்படுத்துதல்

**வினா 9517—திரு. பா. துரைசாமி:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வரகூர் தொகுதியில் உள்ள பொதுப்பணித் துறை ஏரியான ஓகளூர், அத்தியூர் மற்றும் பெண்ணக்கோணம் ஆகிய ஏரிகளை ஆழப்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) : இந்நிதியாண்டில் (1997-98) முன்னுரிமை அடிப்படையில் வரகூர் தொகுதியில் உள்ள வடக்காலூர் ஏரி, ஏரிகள் தூர்வாரும் திட்டத்தின்கீழ் செயலுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. நிதிநிலைக்கேற்ப இனி வரும் ஆண்டுகளில் இந்தத் தொகுதியில் உள்ள மற்ற ஏரிகளிலும் தூர்வாரும் பணி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

36—

### ஆற்றில் ரிவிட்மென்ட் கட்டுதல்

**வினா 10765—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மன்னார்குடி நகரில் ஓடும் பாமணியாற்றில் வடக்குக் கரை வெள்ளக் காலங்களில் உடைப்பு எடுக்கும் அபாயம் உள்ளதால் அப்பகுதியில் ரிவிட்மெண்ட் உடன் கட்டித் தரப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

இதுபோன்ற திட்டம் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை. சமீபத்தில் டிசம்பர் 1996-ல் ஏற்பட்ட வெள்ளத்தின்போது மன்னார்குடி நகரில் பாமணியாற்றின் இரு கரைகளில் வெள்ளச் சேதம் அதிகம்



1998 மார்ச் 19]

இல்லை என்பதாலும், கரையின் முழு நீளத்திற்கும் ரிவிட்மென்ட் கட்டிக் கொடுக்க அதிக செலவு ஆகும் என்பதாலும் இப்பணி உடனடியாக மேற்கொள்ளத் தேவையில்லை எனக் கருதப்பட்டது. மேலும் இந்த 1997 ஆம் ஆண்டு அடைப்புக் காலத்தில் மேற்கண்ட சரகத்தில் 600 மீட்டர் நீளத்திற்கு ஆற்றின் உட்பகுதியில் உள்ள திட்டுக்கள் மற்றும் காட்டாமணக்குகளை ஒரு பகுதி அரசு இயந்திரங்கள் மூலம் அப்புறப்படுத்தி கரைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. இதன் மதிப்பு ரூபாய் 1.00 இலட்சமாகும். ஆற்றில் தண்ணீர் வந்துவிட்டபடியால் வேலை நிறுத்தப்பட்டது. வரும் 1998-ஆம் ஆண்டு கோடை காலத்தில் மீதமுள்ள பணிகளை முடித்துக் கொடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும் மேற்கண்ட பணிகள் முடிக்கப் பட்டவுடன், அத்தியாவசியம் உள்ள இடங்களில் மட்டும் வெள்ளச் சேதத்தைத் தடுக்க ரிவிட்மெண்ட் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

37—

### அணையை உயர்த்திக் கட்டுதல்

**வினா 11120—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தர்மபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட பெரும்பாலை ஊராட்சியைச் சேர்ந்த சானார்பட்டி அணையை உயர்த்திக் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

தர்மபுரி மாவட்டம் பெண்ணாகரம் வட்டம், பெரும்பாலை கிராமத்தில் உள்ள நாகவதி சானார்பட்டி அணைக்கட்டின் மூலம் சானார்பட்டி கிராமத்திற்கு பாசன வசதி செய்யும் பொருட்டு பாசனம் நடைபெற்று வருகிறது. இந்த அணைக்கட்டு பாசனப் பரப்பிற்கு மேல் உள்ள பகுதிகள் யாவும் நாகாவதி நீர்த்தேக்கத்தின் மூலம் பாசனம் செய்யப்படுகின்றன. தற்போது அணைக்கட்டில் தேங்கும் நீர் அணைக்கட்டின் ஆயக்கட்டு 101.18 ஏக்கர் முழுவதும் பாசனம் செய்வதற்கு போதுமானதாக உள்ளது. இந்நிலையில் அணைக்கட்டின் உயரத்தை மேலும் உயர்த்தத் தேவையில்லை என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

[1998 மார்ச் 19

38—

**வாய்க்காலில் மண் அரிப்பைத் தடுத்தல்**

**வினா 11149—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் வட்டம், வரவுக்கோட்டை கிராமத்திலிருந்து நாயக்கன்கோட்டை கிராமம் வரை உள்ள பாசன வாய்க்காலில் சுவர் எழுப்பி மண் அரிப்பு ஏற்படாமல் தடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் வட்டம், வரவுக்கோட்டை கிராமத்திலிருந்து நாயக்கன்கோட்டை கிராமம் வரையிலான பகுதியில் கல்யாண ஓடை கிளை வாய்க்கால் என்ன 1-இல் ரூ. 1,96,000-க்கு அங்கீகரிக்கப்பட்டு ஒப்பந்தங்கள் நிர்ணயிக்கப் பட்டுள்ளன. இப்பணிகள் வரும் 1998-99 ஆம் ஆண்டு கோடையில் துவங்கி முடிக்கப்படும். கல்யாண ஓடை பிரதான வாய்க்காலில் தேவைப்படும் இடங்களில் சறுக்கைக் கட்டவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

39—

**ஏரியின் கீழ்க்கரையில் தடுப்புச் சுவர் அமைத்தல்**

**வினா 12660—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், வீரியங்கோட்டை பெரிய ஏரியின் கீழ்க்கரை முழுவதும் தடுப்புச்சுவர் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?



1998 மார்ச் 19]

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

சேதுபாவாசத்திரம் ஒன்றியம், வீரியங்கோட்டை பெரிய ஏரி பொதுப்பணித் துறை பராமரிப்பில் உள்ள ஏரியாகும். இந்த ஏரியின் கரையில் நெடுஞ்சாலைத் துறையின் மூலம் பராமரிக்கும் தார்ச்சாலை செல்கிறது. இந்த ஏரிக்கரையில் கருங்கற்களைக் கொண்டு அலை தாங்கிச் சுவர் நெடுஞ்சாலைத் துறையினரால் கட்டப்பட்டு கரை நல்ல நிலையில் உள்ளதால் மேற்கண்ட ஏரியின் கீழ்க்கரை முழுவதும் தடுப்புச் சுவர் கட்டும் கருத்துரு ஏதும் இல்லை.

40—

**பாலம் கட்டும் பணி**

**வினா 7669—திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வாசுதேவநல்லூர் தொகுதி, சிவகிரி-விஸ்வநாதபேரி செல்லும் நெடுஞ்சாலையில் உள்ள பாலம் மற்றும் மதுரை-தென்காசி நெடுஞ்சாலையில் உள்ளார்-ஒத்தக்கடை மத்தியில் உள்ள பாலம், ஒத்தக்கடை-கடலூர் நெடுஞ்சாலையில் ஒத்தக்கடைக்கு கீழ்புறம் உள்ள பாலம், மதுரை-தென்காசி நெடுஞ்சாலையில் புளியங்குடியில் வடபகுதியில் உள்ள பாலம் ஆகியவற்றை அகலப்படுத்தி சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

சிவகிரி-விஸ்வநாதபேரி செல்லும் நெடுஞ்சாலையில் உள்ள பாலம் மற்றும் மதுரை-தென்காசி நெடுஞ்சாலையில் உள்ள பாலம், உள்ளார்-ஒத்தக்கடை மத்தியிலுள்ள பாலம் ஆகியவற்றை பகுதி-2 திட்டத்தில் மேற்கொள்ளும் வாய்ப்புகள் இல்லை.

ஒத்தக்கடை-கடலூர் நெடுஞ்சாலையில் ஒத்தக்கடையின்கீழ் உள்ள பாலத்தை சிறு பணிகள் என்ற தலைப்பின்கீழ் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

[1998 மார்ச் 19

மதுரை-தென்காசி நெடுஞ்சாலையில் புளியங்குடியின் வடபகுதியில் உள்ள பாலம் கட்டும் பணியை நபார்டு திட்டத்தின்கீழ் செயல்படுத்தும் சாத்தியக்கூறுகள் ஆராயப்பட்டு வருகின்றன.

41—

## பொதுப்பணித் துறை பயணியர்கள் விடுதி

**வினா 7914—திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வாசுதேவநல்லூர் புளியங்குடி நகரத்தில் பொதுப்பணித் துறை பயணியர்கள் விடுதி கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தென்காசி-மதுரை சாலையில், புளியங்குடியிலிருந்து 8 கிலோ மீட்டர் தூரத்தில் வாசுதேவநல்லூர் பயணியர் விடுதி அமைந்திருப்பதால், புளியங்குடியில் பயணியர் விடுதி கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

42—

## சவகர் பால பவன் கலைத்திறன் துறை

**வினா 8564—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையிலுள்ள சவகர் பால பவன் கலைத்திறன் துறையில் எத்தனை பேர் பணியாற்றுகிறார்கள்?

(ஆ) அவர்கள் நிரந்தரம் செய்யப்படுவார்களா?



1998 மார்ச் 19]

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): சவகர் சிறுவர் இல்லத்தில் பகுதி நேர கலைத்திறன் ஆசிரியர்கள் 17 பேர் பகுதி நேர ஆசிரியர்களாகத் தொகுப்பூதியத்தில் பணியாற்றி வருவதால் அவர்களை நிரந்தரம் செய்ய விதிமுறைகளில் வழிவகை இல்லை.

43—

## கோயில் குளத்தின் சுற்றுச்சுவர் கட்டுதல்

**வினா 10048—திரு. பீ.அ. வைத்தியலிங்கம்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாம்பரம் தொகுதி, திருவான்மியூரிலுள்ள இந்து சமய அறநிலைய ஆட்சித் துறைக்குட்பட்ட அருள்மிகு மருந்தீஸ்வரர் திருக்கோயில் திருக்குளத்தைப் புனரமைப்பு செய்து, சுற்றுச்சுவர் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

தாம்பரம் தொகுதி, திருவான்மியூரிலுள்ள இந்து சமய அறநிலைய ஆட்சித் துறைக்குட்பட்ட அருள்மிகு மருந்தீஸ்வரர் திருக்கோயிலில் நிதி வசதியின்மை காரணமாக, மேற்படி திருக்கோயிலில் உள்ள இரண்டு திருக்குளங்களையும் சீரமைக்க இயலவில்லை. இருப்பினும் திருக்கோயிலின் நிதிநிலையை பரிசீலித்தும், மேற்படி திருக்குளங்களை சென்னை நகரின் திருக்கோயில்களின் திருக்குளங்களை சீரமைக்கும் திட்டத்தின்கீழ் உபயதாரர்கள் மூலமும் பழுதுபார்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[1998 மார்ச் 19

44—

## பண்கள் ஸ்வரப்படுத்துதல்

**வினா 11563—திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்கள் ஸ்வரப்படுத்தப்படுகின்றனவா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) பண்களோடு முதன் முதலில் இசைக்கப்பட்டது தேவாரப் பாடல்கள் மட்டும்தான். தேவாரப் பண்கள் ஏற்கெனவே ஸ்வரப்படுத்தப் பட்டுள்ளன. உலக இசைகளுக்கெல்லாம் முன்னோடியாக தேவாரப் பண்ணிசை விளங்குகிறது. தேவாரம் மட்டுமே முதலில் பண்ணோடு தோன்றிய பாடல்.

45—

## சாயக் கழிவு நீரைப் போக்க நடவடிக்கை

**வினா 10847—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி நகராட்சி, வெல்லாண்டி வலசு, பழையப் பேட்டையில் சாயப் பட்டறையிலுள்ள சாயக் கழிவு நீர் தேங்குவதால் சுற்றுப்புறச் சுகாதாரம் பாதிக்கப்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அந்தப் பகுதியிலுள்ள சாயக் கழிவு நீரை போக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?



1998 மார்ச் 19]

விடை—

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி நகராட்சி, வெல்லாண்டி வலசு பழையப் பேட்டையில் சாயப் பட்டறையிலுள்ள கழிவு நீர் தேங்குவதால் சுகாதாரம் பாதிக்கப்படுவதாக புகார்கள் ஏதும் அரசால் பெறப்படவில்லை.

(ஆ) எடப்பாடி நகராட்சி, வெல்லாண்டி வலசு பகுதியில் 20 சலவை மற்றும் சாயப்பட்டறைகள், வாரியத்தின் இசைவினைப் பெறாமலும், கழிவு நீரை சுத்திகரிப்பு செய்யாமலும் வெளியேற்றி மாசுபடுத்துவதற்காக சாயப் பட்டறை உரிமையாளர்களுக்கு விளக்கம் கோரி முகாந்திரம் அறிக்கை தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியத்தால் அனுப்பப்பட்டுள்ளது. சுத்திகரிப்பு நிலையம் அமைக்காத தொழிற்சாலைகளை மூட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

46—

## சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்கக் குழு அமைத்தல்

**வினா 11732—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்க வழக்கறிஞர்கள், மருத்துவர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவியரை உறுப்பினராகக் கொண்டு பகுதி வாரியாக ஒரு குழு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

மாவட்ட சுற்றுப்புறச் சூழல் நலக் குழு என்ற 21 உறுப்பினர்களைக் கொண்ட குழுவை அமைத்து, மாவட்ட ஆட்சித் தலைவரை தலைவராகவும், அம்மாவட்டத்திலுள்ள பல்வேறு துறைகள், உள்ளாட்சித் துறைத் தலைவர்கள், மாவட்டத்திலுள்ள சட்டமன்ற உறுப்பினர்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் கல்லூரி, பல்கலைக்கழகம், ஆய்வகங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளை அக்குழுவில் உறுப்பினர்களாக நியமித்துள்ளது. இந்தக் குழு ஒவ்வொரு மாவட்டத்திலும்

[1998 மார்ச் 19

மக்களிடையே சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்ச்சியையும், அங்கு நிலவும் சுற்றுப்புறச் சூழல் பிரச்சினைகள் பற்றி தெரிவு செய்யவும், அப்பிரச்சினைகளை சரி செய்ய ஆவன செய்யும் இக்குழுவின் பணி அறிவுரைகள் கூறுவது மட்டுமே ஆகும்.

47—

**விஸ்கோஸ் ஆலைக் கழிவு நீர் தரம்**

**வினா 12873—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விஸ்கோஸ் ஆலையின் சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீர் வரையறைக்குட்பட்ட தரத்தில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) கோயமுத்தூர் மாவட்டம், சிறுமுகை கிராமத்தில் அமைந்திருக்கும் திருவாளர்கள் எஸ்.ஐ.வி. இண்டஸ்ட்ரீஸ் நிறுவனம் வெளியேற்றிய சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீரின் தரம் 3-9-1997, 3-10-1997 மற்றும் 6-10-1997 அன்று எடுக்கப்பட்ட மாதிரிகளின் பகுப்பாய்வு அறிக்கையிலிருந்து எல்லா அளவுகளும் வாரியம் நிர்ணயித்துள்ள தர அளவுகளுக்குள் இருந்தது அறியப்பட்டது.

48—

**பிற்பட்ட நல மாணவ, மாணவியர் விடுதிக்குக் கட்டடம்**

**வினா 12714—திரு. கே. தளபதி:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், சேடப்பட்டி தொகுதியில் டி. கல்லுப்பட்டி, பாப்பநாயக்கன்பட்டி, எழுமலையில் பிற்படுத்தப்பட்ட நல மாணவ, மாணவியர் விடுதிக்குக் கட்டடம் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா?



1998 மார்ச் 19]

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) : மதுரை மாவட்டம், சேடப்பட்டி தொகுதியில் டி. கல்லுப்பட்டி, பாப்பநாயக்கன்பட்டி, எழுமலையில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவ, மாணவியர் விடுதிக்குக் கட்டடம் கட்டுவது குறித்த செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

49—

**மலைத்தோட்ட விவசாயிகளுக்குப் பட்டா**

**வினா 6519—திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் தொகுதி, சிறுமலையில் பல ஆண்டுக் காலமாக விவசாயம் செய்து வரும் மலைத்தோட்ட விவசாயிகளின் நிலங்களுக்குப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

(அ) திண்டுக்கல் தொகுதி, சிறுமலையில் ஒதுக்குக் காடாக அறிவிக்கப்பட்டுள்ள நிலங்களில் ஆக்கிரமித்து விவசாயம் செய்து வரும் மலைத்தோட்ட விவசாயிகளின் நிலங்களுக்குப் பட்டா வழங்க நடைமுறை விதிகளின்படி இயலாத நிலையில் உள்ளது.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**50—**

## பதிவேடு, அரசு வெளியீடுகள் தட்டுப்பாடின்றி கிடைத்தல்

**வினா 11498—திரு. மு. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*விற்பனை நிலையம் மற்றும் கருவூலங்களில் அரசுப் பணியாளர்கள் பயன்படுத்தும் பதிவேடு, அரசு வெளியீடுகள் தட்டுப்பாடின்றி கிடைக்க அரசு ஆவன செய்யுமா?*

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

அரசுப் பணியாளர்கள் பயன்படுத்தும் பணிப் பதிவேடுகள் கேட்புக்கேற்ப அவ்வப்போது அச்சிடப்பட்டு அரசு வெளியீடுகள் விற்பனை நிலையங்கள் மற்றும் கருவூலங்கள் மூலம் விற்பனை செய்யப்படுகின்றன.

2. சென்னை, அண்ணா சாலை, கதவிலக்கம் எண் 817-இல் உள்ள அரசு வெளியீடுகள் விற்பனை நிலையம் மற்றும் உயர்நீதிமன்ற வளாகத்திலுள்ள துணை விற்பனை நிலையம் ஆகியவை மூலமாக அரசு வெளியீடுகள் பொதுமக்களுக்கு நேரடியாக விற்பனை செய்யப்படுகின்றன. வெளியூர்களிலிருந்து அஞ்சல் மூலமாக அனுப்பக் கோருவோருக்கு, அதற்கான உரிய தொகையைப் பெற்ற பிறகு அஞ்சல் மூலமாக அனுப்பப்படுகின்றன. இவை தவிர நியமிக்கப்பட்ட முகவர்கள் மூலமாகவும் வெளியீடுகள் விற்பனை செய்யப்படுகின்றன. மேலும் பொதுமக்களால் அடிக்கடி கோரப்படும் முக்கிய வெளியீடுகள் இருப்பில் இல்லாத நிலையில் மீண்டும் அச்சிட சம்பந்தப்பட்ட துறைகளுடன் தொடர்பு கொண்டு அரசாணை பெறப்பட்டு அச்சிட்டு வழங்க ஆவன செய்யப்படுகின்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (•) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]



# 4. அறிவிப்புகள்

## (அ) பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள் பேரவையில் அழைக்கப்படுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவராகவும் அக்கட்சியின் சட்டமன்றக் கட்சித் தலைவராகவும் பணியாற்றி வந்த திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அக்கட்சியின் அடிப்படை உறுப்பினர் பொறுப்பு உட்பட அனைத்துப் பொறுப்புகளிலிருந்தும் நீக்கப்பட்டதாக அக்கட்சியின் பொதுச் செயலாளர் திரு. தலித் எழில்மலை அவர்கள் எனக்கு எழுதிய கடிதத்தின் அடிப்படையில் தற்காலிகமாக நான் இந்தத் தீர்ப்பை அறிவிக்கிறேன். தற்காலிகமாகத் தீர்ப்பு அறிவிப்பதற்குக் காரணம், நீதிமன்றத்திலே ஒரு தடை உத்தரவு இருக்கிறது. நான் நிரந்தரத் தீர்ப்பு அளிப்பதற்கு அது தடையாக இருக்கின்ற காரணத்தால் பாட்டாளி மக்கள் கட்சி-1 என்ற தலைப்பில் அந்தக் கட்சியின் தலைவராக திரு. ஐ. கணேசன் அவர்களும், கட்சியினுடைய உறுப்பினர்களாக திரு. ஜி.கே. மணி அவர்களும், திரு. ப. கோவிந்தன் அவர்களும், பாட்டாளி மக்கள் கட்சி-2 என்ற தலைப்பில் திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களும் தற்காலிகமாக இயங்கி வருவார்கள் என்று அறிவிக்கிறேன்.

## (ஆ) 'தேவேந்திரர் சங்கம்' என்பது 'புதிய தமிழகம்' என அழைக்கப்படுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள் தேவேந்திரர் சங்கம் உறுப்பினராக இதுவரை பணியாற்றியவர், மைய தேர்தல் கமிஷன் மூலமாக புதிய தமிழகம் என்று தன்னுடைய கட்சியின் பெயரை மாற்றி, அதற்குத் தேர்தல் கமிஷனின் அனுமதியும் வழங்கப்பட்டுள்ள காரணத்தால் இனிமேல் அவரது கட்சி 'புதிய தமிழகம்' என்று அழைக்கப்படும்.

[1998 மார்ச் 19

**(இ) அ.இ.அ.தி.மு.க.(தி.) என்பது எம்.ஜி.ஆர். அ.தி.மு.க. என அழைக்கப்படுதல்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ். திருநாவுக்கரசு அவர்கள் இதுவரையில் அ.இ.அ.தி.மு.க (திருநாவுக்கரசு) என்று எனது தீர்ப்பின் அடிப்படையில் அழைக்கப்பட்டார். கடந்த தேர்தலில் எம்.ஜி.ஆர். அ.தி.மு.க. சார்பிலே வேட்பாளராக நிறுத்தப்பட்டு தேர்தல் கமிஷனால் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறார். ஒரே ஒரு ஆவணத்தை மட்டும் இன்று மதியம் என்னிடம் கொண்டு வந்து காட்ட வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன். ஆகவே, எதிர்காலத்தில் அவர் எம்.ஜி.ஆர். அ.தி.மு.க. என்று அழைக்கப்படுவார்.

**(ஈ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்ததாக தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9(1)-ன்கீழ் கீழ்க்காணும் உறுப்பினர்களை இப்பேரவையின் 5-ஆவது கூட்டத் தொடரின் மாற்றுத் தலைவர்களாக நியமிக்கின்றேன்:

திரு. ரா. சேதுநாதன்

திரு. கு. மனோகரன்

திரு. வ. வேலுசாமி

திரு. சி. ஞானசேகரன்

திரு. நா. பெரியசாமி

திரு. முகம்மது கோதர் மைதீன்



1998 மார்ச் 19]

**5. ஆளுநர் 18-03-1998 ஆம் நாளன்று அவையில் உரையாற்றுகையில் சில உறுப்பினர்கள் நடந்து கொண்ட விதம் குறித்தும், அன்றையதினம் பேரவைத் தலைவருக்குள்ள அதிகாரம் குறித்தும் பேரவைத் தலைவர் தீர்ப்பு**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. நேற்றையதினம் ஆளுநர் உரையின்போது நடந்த ஒரு நிகழ்ச்சியை நான் பேரவையின் கவனத்திற்குக் கொண்டுவந்து என் தீர்ப்பை வழங்க விரும்புகிறேன். நம்முடைய சட்டமன்றப் பேரவை விதிகளிலே ஆளுநர் உரை நிகழ்த்தும்போது இடையூறு இருக்கக்கூடாது என்று தெளிவாக இருக்கிறது. இருந்தபோதிலும், கடந்த காலங்களிலே ஜனநாயக மரபின் அடிப்படையில் எதிர்க்கட்சியில் இருக்கின்ற தலைவர்கள் தங்கள் கருத்தைச் சுருக்கமாக, அவர்கள் இருக்கையிலே இருந்து சொல்லிவிட்டு வெளியேறுவது ஒரு மரபாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. அந்த வகையில் நேற்று அ.இ.அ.தி.மு.க. சட்டமன்றத் தலைவர் திரு. இரா. தாமரைக்கனி அவர்கள் செய்தது நம்முடைய விதிகளுக்கு விரோதமானதாக இருந்தாலும் மரபின் அடிப்படையில் ஏற்றுக்கொள்ளக்கூடியது.

*முற்பகல் 11-00*

அதைப் போலவே பாட்டாளி மக்கள் கட்சி சட்டமன்றத் தலைவர் திரு. ஐ. கணேசன் அவர்கள் எழுந்து நின்ற நேரத்தில், அவருக்குப் பின்னணிக் குரலாக திரு. ஜி.கே. மணி பேசியது இரண்டு உறுப்பினர்கள் ஒரே நேரத்தில் எழுந்து நிற்கக் கூடாது என்ற ஒரு விதி இருந்தாலும், அதைக்கூடப் பெரிதாக நான் எடுத்துக் கொள்ளவில்லை. ஆனால், மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. பி.ஆர். சுந்தரம் மற்றும் திரு. கருப்பசாமி ஆகியவர்களின் செயல்கள், பேரவைத் தலைவர் கடுமையாக நடவடிக்கை எடுக்க வேண்டிய முறையில் அமைந்துள்ளவையாகும். சட்டமன்றக் கட்சித் தலைவர் திரு. தாமரைக்கனி அவர்கள் எழுந்து நின்று, அவர் கட்சியின் சார்பிலே ஒரு கருத்தைச் சொல்லி 'ஆகவே நாங்கள் வெளியேறுகின்றோம்' என்று சொன்ன பிறகு, அந்தக் கட்சியைச் சார்ந்த இரண்டு உறுப்பினர்கள் அவருக்குப் பின்னால் வெளியேறாமல், அவர்களிலே ஒருவர் மீண்டும் ஒரு முறை உரை நிகழ்த்துவது எந்த மரபின் அடிப்படையிலே என்று எனக்குத் தெரியாது. உதாரணமாக,

ஒரு கட்சியிலே 30 பேர் இருந்தால், இப்படிப்பட்ட நிகழ்வுகளிலே
ஒரு கட்சித் தலைவர் என்ற முறையிலே ஒருவர்தான் பேச
அனுமதிக்கப்படுவார். முப்பது பேரும் தங்கள் உரையை நிகழ்த்த
வேண்டுமென்றால் சட்டமன்றத்தை நடத்த முடியாது. ஆகவே, திரு.
தாமரைக்கனி அவர்கள் கட்சியின் சார்பிலே வெளிநடப்புச்
செய்கிறோம் என்று சொன்ன பிறகும் இந்த இரண்டு உறுப்பினர்களும்
செய்தது மன்னிக்க முடியாத குற்றம் என்பது என்னுடைய கருத்து.

ஏதோ அவர்கள் கறுப்புத் துணியையும், பேனரையும் கொண்டு
வந்தது எனக்குத் தெரியாது என்று அவர்கள் நினைத்துகொள்ளக்
கூடாது. இப்படி வருவார்கள் என்று எனக்கு முன்கூட்டியே தகவல்
தெரியும். தகவல் தெரிந்தபோதிலும் நான் நடவடிக்கை எடுக்காததற்குக்
காரணம் சட்டமன்ற உறுப்பினர்களைச் சோதனையிட்டுத்தான்
சட்டமன்றத்திற்குள்ளே விடவேண்டும் என்ற ஒரு அவல நிலை,
நம்முடைய உறுப்பினர்களை அவமரியாதை செய்வதாகும் என்று
கருதி அந்தக் காரியத்திலே நான் ஈடுபடவில்லை. ஆகவே, நிச்சயமாக
இவர்கள் செய்தது மன்னிக்க முடியாத ஒரு குற்றம். இருந்தாலும்,
இந்த நீண்ட தொடர் ஆரம்பிக்கும்போதே தண்டனை
விதிக்கவேண்டுமென்று எனக்கு விருப்பம் இல்லை. அவர்களைக்
கடுமையாக எச்சரிக்கிறேன்.

குறிப்பாக திரு. கருப்பசாமி அவர்கள் ஆளுநர் அவர்கள்
பேரவையிலே உரை நிகழ்த்திக் கொண்டிருந்தபோது இருக்கையின்மேலே
எழுந்து நின்றது மிகமிக அநாகரிகமான செயல் என்பதை நான்
தெளிவுபடுத்த விரும்புகிறேன். ஆகவே, அந்த இரண்டு உறுப்பினர்களுக்கு
இதை ஒரு எச்சரிக்கையாகச் சொல்கின்றேன். அடுத்த முறை இப்படி
ஒரு நிகழ்வு நடந்தால்—சட்டப் பேரவை விதிகள் என்ன என்று
அவர்களுக்குத் தெரியும். முதல் தடவை முறைகேடாக நடந்தால் ஒரு
நாளைக்கு வெளியேற்றப்படுவார்கள். இரண்டாவது முறை முறைகேடாக
நடந்தால் அந்தத் தொடர் முழுவதும் வெளியேற்றப்படுவார்கள் என்று
விதி இருப்பதை அவர்களுக்கு நினைவுபடுத்தக் கடமைப்
பட்டிருக்கின்றேன். இந்த அளவோடு இந்த நிகழ்வு குறித்து என்னுடைய
கருத்தைத் தெரிவித்துவிட்டேன்.



அடுத்தபடியாக, இந்த நிகழ்வு குறித்து இன்னொரு கருத்தை நான்
சொல்ல விரும்புகிறேன். அரசமைப்புச் சட்ட நிபுணர்கள் பலபேர்
ஆளுநர் உரையின்போது பேரவைத் தலைவருக்கு என்ன அதிகாரம்
என்று ஒரு கேள்வி எழுப்பி இருக்கின்றார்கள். என்னைப்
பொறுத்தவரையில் ஆளுநர் உரையின்போது பேரவைத் தலைவருக்கு
எப்போதும் உள்ள அதிகாரம் உண்டு. உதாரணமாக, ஆளுநர் இங்கே
உரை நிகழ்த்துகின்ற நேரத்தில், சட்டமன்றத்திலே மாண்புமிகு
முதலமைச்சர் அவர்களையோ, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்
அவர்களையோ அல்லது மற்ற உறுப்பினர்களையோ யாராவது இங்கே
இருக்கின்ற உறுப்பினர்கள் தாக்க முயன்றால், நான் பேரவைத்
தலைவராக இங்கே உட்கார்ந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க
முடியாது. அல்லது ஆளுநர் அவர்களையே தாக்க வந்தாலும் நான்
அதை, உட்கார்ந்து, வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்க முடியாது.
அன்று ஒரு நாள் மட்டும் சட்டமன்றத்திலே திரிசங்கு சொர்க்க
நிலை; யாருக்கும் அதிகாரம் இல்லை என்ற நிலையிலே பேரவைத்
தலைவராக நான் இயங்க முடியாது. இதற்கு முன்னுதாரணம் உண்டா
என்று பலபேர் கேட்கிறார்கள். முன்னுதாரணம் உண்டா, இல்லையா
என்பது பற்றி எனக்குக் கவலையில்லை. நானே முன்னுதாரணமாக
இந்த நாட்டிலே இருக்கின்ற எல்லாப் பேரவைத் தலைவர்கள் சார்பிலும்
இந்தக் கருத்தைத் தெரிவிக்கின்றேன். (மேசையத் தட்டும் ஒலி) எல்லா
நேரங்களிலும் சட்டமன்றப் பேரவைத் தலைவருக்கு அதிகாரம் உண்டு.
ஒலிபெருக்கி முன்னாலே இல்லையென்றாலும் அதிகாரம் உண்டு.
நடவடிக்கை எடுக்க முடியும்.

நேற்றையதினம்கூட இந்த இரண்டு உறுப்பினர்கள்—திரு. சுந்தரம்
அவர்களும், திரு. கருப்பசாமி அவர்களும்—வெளியேற்றப்பட்டார்கள்
என்று பத்திரிகைகளிலே ஒரு செய்தி வந்தது. அந்தச் செய்தியைத்
திருத்திக்கொள்ள வேண்டுமென்று பத்திரிகையாளர்களுக்கு நான் ஒரு
கருத்தைத் தெரிவிக்கின்றேன். ஏனென்றால் அவர்கள் தாங்களாகவே
வெளியேறுவதாகச் சொல்லித்தான் பேசினார்கள். காவலர்கள் அங்கே
சென்றது. அவர்கள் கையிலே வைத்திருந்த கறுப்புத் துணியையும்,
பேனரையும் கைப்பற்றுவதற்குத்தான் என்பதை நான் இந்த நேரத்திலே
தெளிவாக்க விரும்புகிறேன். ஆகவே, பத்திரிகையாளர்கள் 'காவலர்கள்
அவர்களை வெளியேற்றினார்கள்' என்ற செய்தியை மறுத்துத் திருத்தம்
வெளியிட வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-05*

## 6. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் முன்மொழிதல். திரு. இ. புகழேந்தி

***திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பின்வரும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்:

"மேதகு ஆளுநர் அவர்களுக்கு கீழ்க்காணும் நன்றியுரை அளிக்கப்பெற வேண்டும்:—

'1998-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 18-ஆம் நாளன்று சட்டமன்றப் பேரவைக்கு ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு@ தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்.'

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தீர்மானத்தை வழிமொழிதல். திரு. இரா. பொன்னார்டு.

**திரு. இரா. பொன்னார்டு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் எதிர்கால வளர்ச்சி குறித்து, பல்வேறு நலத் திட்டங்களையும், சமூக நீதி காத்து மொழியுணர்வு போற்றிடவுமான திட்டங்களை உள்ளடக்கி, வணக்கத்திற்குரிய மேதகு ஆளுநர் அவர்கள் இம்மாமன்றத்தில் மகிழ்ச்சியோடு வழங்கிய உரை குறித்து இம்மாமன்றத்தில் மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. புகழேந்தி அவர்கள் கொண்டு வந்த நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் 11 பேர் இன்றைக்குப் பேச இருக்கிறார்கள். அதைக் கருத்தில் கொண்டு உறுப்பினர்கள் தங்களுடைய பேச்சை அமைத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, திரு. இ. புகழேந்தி அவர்களை, பேச அழைக்கின்றேன்.

---

@405 முதல் 431 வரையிலான பக்கங்களில் மேதகு ஆளுநர் ஆற்றிய ஆங்கில உரை இணைப்பு-I ஆகவும், மாண்புமிகு பேரவைத் தலைவர் பேரவையில் படித்த ஆளுநர் உரையின் தமிழாக்கம் இணைப்பு-II ஆகவும் அச்சிடப் பெற்றுள்ளன.



**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பதினோராவது சட்டமன்றப் பேரவையின் ஐந்தாவது கூட்டத் தொடரில் மாட்சிமை மிக்க ஆளுநரின் உரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீதான விவாதத்தில் கலந்து கொண்டும், அதைத் தொடங்கி வைக்கின்ற நன்றி கூறும் தீர்மானத்தை முன்மொழிகின்ற வாய்ப்பினையும் அளித்ததற்காக, தந்தை பெரியாராய், பேரறிஞர் அண்ணாவாய், நான் காண்கின்ற தமிழகத்தினுடைய முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்களுக்கும், சட்டமன்றத்தினுடைய அவை முன்னவர் மாண்புமிகு கல்வி அமைச்சர், இனமானப் பேராசிரியர் அவர்களுக்கும், என்னுடைய இதயமார்ந்த நன்றியினைக் காணிக்கையாக்குகின்றேன்.

*(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. சி. ஞானசேகரன் தலைமை)*

ஆளுநர் உரை என்பது அரசின் கொள்கைக் குறிப்பினுடைய தொகுப்புரை என்று குறிப்பிடலாம். இது பேரறிஞர் அண்ணா அவர்களுடைய அருமைத் தம்பியாக விளங்குகின்ற தலைவர் கலைஞர் அரசினுடைய ஆளுநர் அவர்களுடைய குறிப்பு என்கின்ற காரணத்தினால், ஒரு காவியத்தினுடைய முன்னுரையாக, உயர் புத்தகத்தினுடைய உள்ளடக்கக் குறிப்பாக, பொருளடக்கமாக, நல்ல நிதிநிலை அறிக்கையினுடைய நுழைவாயிலாக, இல்லாதவர்க்கும், இயலாதவர்க்கும் நம்பிக்கைக் கீற்றாக, நம்பிக்கை ஒளியாக விளங்கக்கூடியது என்பதே இந்த ஆளுநர் உரை குறித்த என்னுடைய கருத்து என்று இங்கே எடுத்து வைக்க விரும்புகிறேன்.

ஒரு பண்பாட்டின் தொடக்கமாக இந்த ஆளுநர் உரை அமைந்திருக்கிறது. அனைவருடைய கவனத்திற்கும் நான் சொல்லிக் கொள்ள விரும்புவது, தமிழ்ப் பண்பாட்டினுடைய துவக்கமாக, இந்த ஆளுநர் உரையின் தொடக்க நிலையிலே, தமிழகத்தின் தலைசிறந்த மூவர்கள், இந்தியத் துணைக் கண்டத்தின் பாராட்டினைப் பெறுகின்ற விதமாக 'பாரத ரத்னா" விருது பெற்ற அந்த நிலை பற்றிப் புகழ்ந்து, அவர்களுக்குப் பாராட்டினைத் தெரிவிக்கின்ற நிலையை ஆளுநர் அவர்கள் எடுத்துக் கொண்டிருப்பது வரவேற்பிற்குரிய ஒரு நிலையாகும்.

பண்பாடு மிக்க இந்த அரசினுடைய நிலைப்பாடு, முதல் நிலையிலேயே வரவேற்கப்படுகின்ற சூழ்நிலையும், அதுமட்டுமல்ல, ஆளுநர் உரையின் இறுதிப் பக்கத்திலேகூட மிகத் தெளிவாகக்

குறிப்பிடப்பட்டுள்ளது. பகட்டு நிலையான, கொட்டிக் குவிக்கக்கூடிய பணத்தைக் கொண்டு முன்வரக்கூடிய திட்டங்களையெல்லாம் தவிர்த்து, மக்களினுடைய அடிப்படைத் தேவையாக விளங்கக்கூடிய உணவு, உடை, உறையுள், சாலை வசதி, மின் வசதி, கல்வி வசதி போன்ற அடிப்படைத் தேவைகளைத்தான் முதல் நிலையாக, தலையாயக் கொள்கையாக இந்த அரசு கொண்டிருக்கிறது என்பதை எடுத்துக்காட்டுகின்ற விதமாக இந்த ஆளுநர் உரையின் இறுதி நிலையும் அமைந்திருக்கிறது. அதுவே இந்த உரையினுடைய சாரமாக, மூலமாக நான் கருத விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

ஒன்றை இந்த மாமன்றத்தின்முன் தெளிவாகச் சொல்லியாக வேண்டும். இந்த அரசினுடைய தலைமையாக இருந்து, முதல்வராக நமக்கெல்லாம் வழிகாட்டுகின்ற முதல்வர்—நான் குறிப்பிட விரும்புவது, விரும்பத்தகாத விளைவுகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கிற நிலையில் நான் தெளிவாகச் சொல்கிறேன், மாமன்றத்தின் மூலமாக இந்த மாநிலத்திற்குச் சொல்ல விரும்புகிறேன்—அரசுப் பதவியினை எதிர்பார்த்து அல்ல, சட்டமன்ற உறுப்பினராக, அமைச்சராக, முதலமைச்சராக வருவோம் என்றல்ல, என் பின்னால் வந்தால் சிறை உண்டு; சித்திரவதை உண்டு; வதை உண்டு; பலவகை வகையான ஏச்சுக்கள், பேச்சுக்கள் உண்டு யார்யார் உழைக்கின்றோமோ அவர்களே தாக்குகின்ற நிலைகூட உண்டு. விருப்பம் உடையவர்கள் வரலாம்; மனிதர்களுக்கு உயர் நிலையை பெருக்குத் தர விரும்புவோர் வரலாம்; சுயமரியாதை உணர்வையூட்ட நினைப்போர் வரலாம் என்று திராவிட இயக்கத்தினுடைய தளகர்த்தர் தந்தை பெரியார் அவர்கள் அழைக்கிறார். நம்முடைய கழகத்தினுடைய தலைவர், நம்முடைய மாநிலத்தினுடைய முதல்வர் அவர்கள் எல்லாம் அந்தப் பணியில் ஈடுபட்டார்கள். பொதுப் பணியிலே, பொது வாழ்க்கையிலே அவர் ஓடி வந்து நின்றது சுகம் தேடி அல்ல நண்பர்களே; சுகம் தேடி வந்தவர்களாக அல்ல; சுமைதாங்கியாக, சுமையைத் தாங்குபவர்களாக, பொறுப்புக்களையெல்லாம் சுமந்துகொண்டு பொதுப் பணியிலே ஈடுபட்ட காரணத்தால்தான், இந்த மண்ணை நேசித்தார்; இந்த மண்ணில் தவழ்கின்ற காற்றை நேசித்தார்; மனிதர்கள் வாழ வேண்டும். அவன் மொழி, இனம், கலாச்சாரம், பண்பாடு இவை எல்லாம் உயர



வேண்டும். அதற்காக நாம் அழிந்தாலும் பரவாயில்லை; இந்த நாடு வாழ வேண்டும் என்ற அந்த உயர்ந்த சிந்தனையோடு உழைக்க வந்த ஒரு மாமனிதரின் தலைமையிலேதான் இந்த அரசு அமைந்திருக்கிறது என்பதை நான் இங்கே பெருமையோடு கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 11-10

பேரறிஞர் அண்ணா அவர்களின் அரசியல் நெறி கண்டதற்குப் பிறகுதான் தலைவர் கலைஞர் அவர்கள் ஒவ்வொரு பொறுப்பிலும் நிலையாக உயர்வு பெற்று உயர்ந்த நிலையிலே முதல்வராக வந்தார்கள் என்றால், பொதுப் பணியிலே, மக்கள் நலத்திலே அக்கறை உடைய தலைவர் என்பதால்தான். இந்த நிலையில், அவரை வேறு யாரோடும் ஒப்பிட்டுச் சொல்ல முடியுமா? பார்க்க முடியுமா? பொதுப் பணியை ஏற்றுக்கொள்வது என்பது என்னுடைய அடிப்படை. என் கடன் பணி செய்து கிடப்பதே என்று, அந்தக் கொள்கை வழி நடக்கின்ற நாயகராக விளங்குகின்ற காரணத்தால்தான் இந்தக் குறிப்பேட்டிலேகூட நான் குறிப்பிட விரும்புகிறேன், திட்டங்கள் வகுக்கப்படுகின்றன; தொடர்ந்து அறிவிக்கப்படுகின்றன. அதிலே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் பெருமைப்படத்தக்க அளவிற்கு - அவர்கள் என்ன எண்ணினார்களோ - கிராமப்புறத்திலே வாழ்கின்ற மாணவர்களுக்கு வாய்ப்பு வேண்டும் என்கிற அடிப்படையிலே 15 சதவீதம் பொறியியல் படிப்பில் வாய்ப்பு அளிக்கப்பட்டது. இதன் விளைவு என்ன தெரியுமா, நான் தெளிவாகக் குறிப்பிட விரும்புகிறேன். முன்னாள் துணைவேந்தர் மரியாதைக்குரிய திரு. அனந்தகிருஷ்ணன் அவர்கள் சொல்கிறார்கள். 1995 ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக்கழகத்தில் 11 கிராமப்புற மாணவர்கள் மட்டுமே சேர்ந்து படித்த நிலையையும், நம்முடைய முதல்வர் அவர்களால் கிராமப்புற மாணவர்களுக்கு 15 சதவீதம் ஒதுக்கீடு கொடுக்கப்பட்டதற்குப் பிறகு, 1997 ஆம் ஆண்டு 77 கிராமப்புற மாணவர்கள் அதிலே சேர்ந்து படித்திருக்கின்ற நிலையையும் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இவை எல்லாம் எதைக் காட்டுகின்றன? நான் பெருமையோடு இந்த மாமன்றத்திலே எடுத்து வைக்க விரும்புகிறேன். 1997 ஆம் ஆண்டு கிராமப்புறத்தைச் சேர்ந்த 1,476 மாணவர்கள் அனைத்துப் பொறியியல் கல்லூரிகளிலே சேர்ந்து படிக்கின்ற வாய்ப்பினைப் பெற்றிருக்கிறார்கள். இதுதான் அவருடைய உள்ளம்; இதுதான் இந்த அரசினுடைய எண்ணம்; இதுதான் இந்தக் கொள்கைக் குறிப்பினுடைய அடிப்படைகள் என்பதை நான் இங்கே

எடுத்து வைப்பதில் பெருமைப்படுகிறேன். அப்படிப்பட்ட ஒரு சிறந்த கொள்கையாளராக விளங்குகின்ற காரணத்தால்தான், சிறந்த திட்டங்கள் அவரால் வகுக்கப்படுகின்றன. கலர் கண்ணாடிகளைப் போட்டுக்கொண்டு, காட்சிகளைப் பார்த்துவிட்டால் உண்மையான நிறம் தெரிவதற்கு வாய்ப்பு ஏது? ஒன்றை நான் குறிப்பிட விரும்புகிறேன். விரும்பத்தகாத நிலைகள் வருகின்றன. அப்படி வருகின்ற சூழ்நிலைகளில்கூட. இதே மாமன்றம்தான், நாம் எல்லாம் அமர்ந்திருக்கிறோம். கடந்த நிதிநிலை அறிக்கைக் கூட்டம் நடந்துகொண்டிருந்த நேரம்: தயவு செய்து கொஞ்சம் பின் வாருங்கள். மார்ச் 11, 1997-ஆம் ஆண்டு சட்டமன்றத்திலே அமர்ந்திருக்கிறோம். மாண்புமிகு முதல்வர் அவர்கள் வருகிறார்கள்; அமர்கிறார்கள். உடனடியாகச் செல்கிறார்கள், செய்திகளைப் பெறக்கூடிய அளவிற்கு எழுந்து செல்கிறார்கள்; மீண்டும் வருகிறார்கள். பதைபதைத்து, பதற்றம் அடைந்து வருகிறார்கள். எங்கள் உழைப்பெல்லாம் இந்த நாட்டிற்கு, இந்த மண்ணின் மைந்தனுக்கு என்று எண்ணுகின்ற அந்த மாமனிதர் திடீரென்று வருகை தருகின்றார். தகவல் கோரல் குறித்து செய்திகள் கொண்டுவரப்படுகின்றன. அதிலே செய்திகள் வெளிப்படுகின்றன. இந்த நாட்டுக்கு நான் அறிவிக்கின்றேன், இந்த நாட்டு மக்களைப் பாதுகாக்க, இளைஞர்களுக்கு வழிகாட்ட எங்கள் உழைப்பையெல்லாம் செலுத்துகிறோம். இந்த இளைஞர்கள் வன்முறை கலாச்சாரத்தை நம்ப வேண்டாம்: அது பலன் அளிக்காது; வாழ்வில் உயர்வளிக்காது: உங்கள் கொள்கையை அது நிச்சயம் தோற்றுவிக்காது: உயர்விக்காது என்ற கருத்தின் அடிப்படையில் சொல்வார். அன்றைக்குத் தெளிவாகச் சொன்னார்கள்.

அதிகாலை மூன்று மணிக்கு—அதிகாலை மூன்று மணிக்கே அவசர அவசரமாகக் காவல் துறை அலுவலர்களுடன் கலந்தாலோசிக்கிறார். ஒரு கொடுமை நடக்கிறது. கொடுங்கையூர் என்ற பகுதியிலே ஒரு கொடுமை நடக்கிறது. யார் செய்கிறார்கள்? தீவிரவாத அமைப்புகள். என்ன வைத்திருக்கிறார்கள்? வெடிகுண்டு வைத்திருக்கிறார்கள். என்ன எண்ணம்? எதற்காக? தகர்க்க வேண்டும் என்பதற்காக. காற்றிலே மிதந்து வந்த இப்படிப்பட்ட கொடுமையான செய்தி இந்த அரசுக்கு வந்ததும் உடனடியாக மூன்று மணிக்கே நடவடிக்கை எடுத்தார்கள்—நாம் எல்லாம் உறங்குகிறோம்; நம் தலைவர் கலைஞர் அவர்கள் உறங்கினார்களா? எண்ணிப் பாருங்கள். மனசாட்சி உள்ளவர்களைக் கேட்கிறேன். நெஞ்சில் ஈரம் உள்ளவர்களைக்



கேட்கிறேன். உறங்காமல், உண்ணாமல் தவித்து—எப்படியும் குற்றவாளிகளைப் பிடிக்க வேண்டுமென்று வியூகம் வகுத்து அன்றைக்குப் பிடித்த காரணத்தால் இந்த சென்னை மாவட்டம் மட்டுமல்ல, தலைவர் அவர்களே, தமிழகத்தில் பல பகுதிகள் அன்றைக்குத் தப்பித்தன.

இந்த மாமன்றத்திலே இருக்கின்ற தலைவர்களை எல்லாம் அழைத்து இதே கோட்டையிலே - பிடிக்கப்பட்ட அந்தப் பொருட்களை எல்லாம் பார்வையிடச் செய்து, அவர்களுடைய பாராட்டுக்களையெல்லாம் இந்த அரசு பெற்றது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். இதைச் சொல்வதற்குக் காரணம் என்ன தெரியுமா? நடவடிக்கை எடுப்பதிலே உடனடியாகப் பாய்ந்துசென்று, குற்றங்களைத் தடுத்து நிறுத்துவதிலே இந்த அரசைத் தவிர, இந்தியாவில் வேறு எந்த அரசும் இவ்வளவு சிறப்பாகச் செய்து இருக்க முடியாது என்பதற்கு அது ஆதார நிகழ்ச்சி; (மேசையைத் தட்டும் ஒலி) அது ஒரு சான்று.

*முற்பகல் 11-15*

நான் இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். இதற்கு முன்பு ஒரு அரசு இருந்தது; கடந்த கால அரசு: அந்த அரசின் காலத்திலே சிந்தாதிரிப்பேட்டையில் இந்து முன்னணி அலுவலகம், ஆழ்வார்ப்பேட்டையில் மணிரத்தினம் இல்லம், சேத்துப்பட்டில் ஆர்.எஸ்.எஸ். அலுவலகம், பிராட்வேயில் ஆசியா ஹோட்டல், எழும்பூரில் இம்பீரியல் ஹோட்டல் ஆகிய இந்த இடங்களில் எல்லாம் வெடிகுண்டுகள் வெடித்தனவே, அந்த வெடிகுண்டுகள் வைத்ததற்கும் இதிலே கைப்பற்றிய பொருளுக்கும், நபர்களுக்கும் தொடர்பு இருக்கிறது என்ற நிலையையும் நம்முடைய அரசுதான் கண்டுபிடித்தது என்று நான் சொல்ல விரும்புகிறேன். கடந்த அரசு கவலைப்படாமல், நடவடிக்கைகள் எடுக்காமல் போய்விட்ட அந்தச் சூழ்நிலைக்கு, நடவடிக்கை எடுத்து கண்டுபிடித்தது நம்முடைய தலைவர் கலைஞரின் அரசு என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நடவடிக்கை எடுக்கிறோம், தொடர்ந்து செயல்படுகிறோம். சில நேரங்களில் விரும்பத்தகாத விளைவுகள் வந்துவிட்ட காரணத்தால், எதையும் சொல்லிவிடுவதா? விரும்பத்தகாத விளைவுகள் இங்கு மட்டுமா நடைபெறுகிறது? அனைத்து அதிகாரங்களுமே கொட்டி குவிந்து இருக்கின்ற டெல்லிப் பட்டினத்திலேகூட வெடித்துக் கொண்டிருக்கிறது; மும்பையிலே வெடித்துக் கொண்டிருக்கிறது—

நியாயப்படுத்துவதற்காகச் சொல்லவில்லை; எங்களுடைய பணிகளிலே குறை இல்லை என்பதற்காக நான் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன். ஆக, அந்த இடங்களில் எல்லாம் வெடிக்கின்றபோது எடுக்கின்ற நடவடிக்கைகளைவிட, இந்த அரசு எடுக்கின்ற நடவடிக்கை சிறப்பானது.

இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். குண்டுகள் வெடிக்கப்படுவதற்கு முன்பு, அவை அகற்றப்பட்ட செய்திகள்தான் தலைவர் அரசில் அதிகமே தவிர, குண்டுகள் வெடித்ததற்குப் பிறகு பார்த்த நிலை என்பது குறைவு என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். அவை வெடிப்பதற்கு முன்பு அகற்றுகிறோம்; பிடிக்கிறோம்; பார்க்கிறோம் என்றால், அரசு கண்விழிப்போடே, விழிப்புணர்வோடே இருக்கிறது என்று பொருள். ஆகவேதான், நல்ல அரசாக, மக்கள் அரசாக, நியாய அரசாக, சட்டம்—ஒழுங்கைப் பாதுகாக்க வேண்டும் என்பதற்காக இப்படிப்பட்ட கொடுமைகள் நடக்கக்கூடாது என்பதற்காக, கோவை சம்பவத்திலேகூட ஓய்வுபெற்ற நீதியரசர் பி.ஆர். கோகுலகிருஷ்ணன் அவர்கள் தலைமையிலே ஒரு அமைப்பு போடப்பட்டு, அதற்கான பரிந்துரைகள் பெறப்பட இருக்கின்றன.

சந்தனக் கடத்தலைத் தடுக்ககூட சென்னை உயர்நீதிமன்றத்தினுடைய ஆலோசனையின்பேரில் உயர்நிலைக் குழு ஒன்று அமைக்கப்பட்டு இருக்கிறது.



இதைப்போன்ற நிலைமைகள் எல்லாம் ஏற்பட்டபோதுகூட இப்படிப்பட்ட நடவடிக்கைகள் எங்கேனும் இருந்தது உண்டா? நான் இன்னும் சொல்கிறேன், ஒரு அரசு மாறுமேயானால், ஆளுகின்ற பொறுப்பு மாறுமேயானால், வெடிகுண்டு வெடிப்பு நின்றுவிடும் என்பதற்கு உத்தரவாதம் உண்டா? இன்னமும் தெளிவாகக் கேட்கவேண்டும் என்றால், திராவிட முன்னேற்றக் கழக அரசு இல்லையென்றால், திராவிட முன்னேற்றக் கழக அரசு மாறிவிடுமேயானால், தீவிரவாதிகள் எல்லாம் மனம் திருந்திவிடுவோம் என்று யாருக்காவது உத்தரவாதம் கொடுத்தார்களா? குண்டு வெடிப்புகள் இதற்குமுன் நடக்காமல் இருந்ததுண்டா? அல்ல. அந்தக் கொடுமைகளை ஏற்றுக்கொள்ள முடியாது. நாம் பார்க்கின்ற வேதனைகள் தடுக்கப்பட வேண்டும் என்பதிலே அரசு எடுக்கின்ற நடவடிக்கைகள் தெரியும். ஆனால், வெடிக்கவில்லையே என்று யாராவது வருத்தப்படுவார்களேயானால், அது மனிதாபிமானமற்ற செயல் என்பதையும் இந்த மாமன்றத்திற்கு நான் எடுத்துச்சொல்லக் கடமைப்பட்டு இருக்கறேன்.

இந்த மண்ணிலேதான் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களின் அரசு, திட்டப் பணிகளை எல்லாம் செம்மையாக, ஆக்கபூர்வமாக நடத்தி வருவதால்தான், மத்திய திட்டக் குழு தமிழ்நாட்டிற்கு ஒதுக்கீட்டு அளவை ரூ. 25 ஆயிரம் கோடியாக உயர்த்தி ஒப்புதல் அளித்துள்ளது. ரூ. 25 ஆயிரம் கோடியாக உயர்த்தி ஒப்புதல் அளித்து இருக்கின்றது என்றால், இந்தத் திட்டப் பணிகள் அவ்வளவும் செம்மையாக இருக்கின்றன என்பதற்கு அது ஒரு ஆதாரம் அல்லவா? எல்லாக் கண்மாய்களும் ஏரிகளும் தூர் வாரப்படுகின்றன.

*முற்பகல் 11-20*

நான் பெருமையோடு சொல்லிக்கொள்கிறேன், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களும், பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்களும் ஓரிரு நாட்களுக்கு முன்பு நீர்ப்பாசனக் கருத்தரங்கு ஒன்றில் கலந்து கொள்வதற்காக சிதம்பரத்திற்கு வந்திருந்தார்கள். அங்கேதான் அந்தச் செய்திகள் வெளியிடப்பட்டன. அப்போதுதான் சொன்னார்கள் விவசாயப் பெருங்குடி மக்கள். இதை நான் இந்த மன்றத்தில் சொல்வதில் பெருமைப்படுகிறேன். பராந்தகச்

சோழன் காலத்தில் வெட்டப்பட்ட பெருமாள் ஏரி, அந்த ஏரியைப் பராந்தகச் சோழன் காலத்திற்குப் பிறகு யாருமே பராமரித்ததும் இல்லை, அதிலே யாரும் தூர் வாரியதும் இல்லை என்ற நிலையை மாற்றி, நமது ஆரூர்ச் சோழராம் நம் தலைவர் கலைஞர் அவர்களின் ஆட்சியிலேதான் அங்கே தூர் வாருகின்ற மகத்தான பணி நடைபெறுகிறது என்றால், இடையிலே எத்தனை நூற்றாண்டுகள் போயின? இத்தனை நூற்றாண்டு காலம் என்ன நடந்தது? இதுவரை ஏன் அந்த எண்ணம் யாருக்கும் வரவில்லை? ஏன் இந்த அரசுக்கு அந்த எண்ணம் வந்தது? விவசாயிகளுடைய நலனிலே அக்கறை கொண்டிருக்கின்ற காரணத்தால், விளைச்சல் பெருகுகிறது; விளைச்சல் பெருகுகின்ற காரணத்தால் விவசாயிகள் மகிழ்ச்சியடைகின்றார்கள். விவசாயிகளுக்குப் பாதிப்பு ஏற்படக்கூடாது என்பதற்காக 926 கொள்முதல் நிலையங்களை இந்த அரசுதானே தோற்றுவித்து, அவர்களுக்கெல்லாம் ஒரு நல்ல வாய்ப்பினை, ஒரு நிலையினை உருவாக்கியது. எந்தத் துறையிலே குறை கண்டோம்? யார் குறை சொல்லமுடியும்?

நான் இன்னும் பெருமையாகச் சொல்கிறேன். 22 மாதங்களில் 15 ஆயிரத்து 576 கோடி ரூபாய்க்கான தொழில் முதலீடுகள் இந்த மாநிலத்தில் செய்யப்பட்டிருக்கின்றன என்றால், தமிழக வரலாற்றிலேயே இதுதான் முதல்முறை? இப்படி வரலாற்றைப் படைக்கின்ற இந்த அரசை, சரித்திரங்களை உருவாக்கியிருக்கின்ற இந்த அரசை, பண்பாட்டுக் கேந்திரமாகத் திகழ்கின்ற இந்த அரசை, நல்லபல திட்டங்களுக்கு நடுநாயகமாக விளங்கக்கூடிய இந்த மக்கள் அரசை, ஜனநாயக விரோதப் போக்கோடு, தங்களுடைய எண்ணங்களிலே மாக கற்பித்துக் கொண்டு மாற்றார் குற்றம் சாட்டுவதைத் தயவுசெய்து எண்ணிப்பார்க்கவேண்டும்.

பொருளாதார வளர்ச்சி விகிதத்தை அதிகரிக்கத்தானே ஆலோசனைகள் பெறுகிறோம். எனக்கு எல்லாம் தெரியும், என்னைவிடத் தெரிந்தவர் யாரும் இல்லை, நான்தான் அனைத்திற்கும் 'Authority', நான் சொன்னால் நீ கேட்கவேண்டும் என்கிற அந்த ஆணவத்தை, அந்த அகங்காரத்தை விரட்டி, ஆட்சிப் பீடத்திலே அதெல்லாம் இருக்கக்கூடாது என்கிற விதமாக, ஜனநாயகத்தின் உச்சகட்டமாக, ஜனநாயகத்தைப் போற்றக்கூடியவராக, தேர்வு செய்யப்பட்ட ஜனநாயகத்தின் காவலராக விளங்குகின்ற நம்முடைய



கழக அரசின் தலைவர், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், ஒன்றை மிகத் தெளிவாகச் சொன்னார்கள். ஹார்வர்டு பன்னாட்டு வளர்ச்சிக் கழகத்தோடு இந்த அரசு ஒரு ஒப்பந்தம் போட்டுள்ளது. எதற்கு? பொருளாதார வளர்ச்சி விகிதத்தைப் பெருக்க வேண்டும் என்பதற்காக ஒப்பந்தம் போடப்பட்டிருக்கிறது. கடந்த காலங்களில் ஒப்பந்தம் போடப்பட்டது என்றால் அதற்கு வேறு அர்த்தம். ஆனால் இந்த காலத்தில் ஒப்பந்தம் போடப்படுகிறது என்றால், அது இந்த மாநிலத்தினுடைய உயர்நிலையை உருவாக்கத்தான் என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

இன்னும் ஒன்று, நம்முடைய மின் துறை அமைச்சர் அவர்கள் மகிழக்கூடிய அளவுக்கான செய்தி ஒன்று. மின் தடைகளை எல்லாம் சரி செய்வதற்கு விரைவான திட்டங்கள் தீட்டப்பட்டு இங்கே நம்முடைய அரசு செயல்படுகிறது. இல்லை என்று சொல்லவில்லை. அதை யாரும் மறுப்பதும் இல்லை. விமர்சனங்களை நாங்கள் வரவேற்கிறோம், அதிலே அர்த்தம் இருக்குமானால். நியாயங்களை நாங்கள் கேட்டுக் கொள்வோம், அதிலே உண்மை இருக்குமானால். அந்த நியாயங்கள் வரவேற்புக்குரியவையே. இந்திய அரசின் நிறுவனமான, 'கோல் இந்தியா' நிறுவனத்தினுடைய உயர் அதிகாரி ஒருவர், 18-2-1998-லே கல்கத்தாவில் ஒரு நிகழ்ச்சியில் ஒன்றைச் சொன்னார். இந்தியாவிலே இருக்கிற எல்லா மாநிலங்களும் எங்களிடம் நிலக்கரியை வாங்கிக்கொண்டு சரியான பணத்தைக் கட்டாமல் நிலுவைகளை வைத்துவிடுவதால் மிக மோசமான பெயரைப் பெற்றிருக்கின்றன. ஆனால் தமிழ்நாடு மட்டும்தான் இந்தியத் துணைக்கண்டத்திலேயே பாராட்டைப் பெறக்கூடிய மாநிலமாக, எங்களிடம் சரியான முறையில் வர்த்தகத்தை வைத்துக்கொண்டு நிலக்கரியைப் பெற்றுக் கொண்டிருக்கிறது என்ற பாராட்டை அந்த உயர் அதிகாரி கல்கத்தாவிலே சொல்லியிருக்கிறார் என்றால், இதைவிட எங்களுடைய பணிகளுக்கு, எங்களுடைய செயற்பாடுகளுக்கு என்ன ஆதாரம் வேண்டும்?

இன்றும் கூடச் சொல்கிறார்களே—இணைப்புச் சாலைகள் பற்றி. ஆயிரம் மக்கள் தொகைக்கு மேற்பட்ட கிராமங்கள் இருக்குமானால், அங்கே இணைப்புச் சாலைகள் போடப்படுகின்றனவே! இதுவரையில் இந்தத் தமிழகத்திலே வேறு யாருமே எண்ணிப்பார்க்க முடியாத அளவுக்கு நம்முடைய அரசில்தானே சாலை வசதிகள் செய்யப்பட்டு வருகின்றன!

அடுத்தது, பாலங்கள். பாலங்கள் என்கிறபோது, நான் ஒன்றைக் குறிப்பிட்டாக வேண்டும். நீண்டகாலமாக இதே மன்றத்தில்—நான் எப்போதும் கேட்டுக்கொண்டிருக்கிற—சிங்காரத்தோப்புப் பாலம் கட்டப்படவேண்டும் என்று நான் கோரிக்கை வைத்தபோது, 'என் இதயத்திலே இருக்கின்ற பாலம் அது, நீ கவலைப்படாதே' என்று ஆறுதல் மொழியை மாண்புமிகு முதல்வர் அவர்கள் உறுதியாக அன்றைக்கு அள்ளித் தந்தார்கள். இப்போது இந்த நிதிநிலை அறிக்கை விவாதம் முடிவதற்குள்ளாக அதற்கான நிதியினை அள்ளித் தந்து, அந்தப் பாலத்தை மகிழ்வோடு பெற்றுத் தருவார்கள் என்ற நம்பிக்கையோடு, அந்த நம்பிக்கையை நான் எதிர்பார்த்து இங்கே என்னுடைய வேண்டுகோளையும் இந்த ஆளுநர் உரை மீதான விவாதத்திலே சமர்ப்பிப்பது என்னுடைய கடமை என்ற அடிப்படையில் என்னுடைய பணியை நான் நிறைவேற்றுகிறேன்.

துறைமுக மேம்பாட்டுத் திட்டப் பணிகளில் கடலூர் துறைமுகமும் எடுக்கப்பட்டிருக்கிறது. அதற்காக நன்றியைச் சொல்ல வேண்டியது என்னுடைய கடமையாகும்.

*முற்பகல் 11-25*

காவிரி பிரச்சினையிலேகூட நடுவர் தீர்ப்பிற்காகப் போராடியதும், நடுவர் மன்றத்திற்கு அதைக் கொண்டு வந்ததும் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அல்லவா? மாண்புமிகு திரு. வி.பி. சிங் அவர்கள் காலத்திலே கொண்டு வரப்பட்டதல்லவா? நான் சொல்ல விரும்புவது, சிலவற்றைக் கேட்கலாம், சிலவற்றைப் பெற முடியும். எல்லா நிலைகளிலும் black mailing policy இந்த நாட்டிற்கு ஒத்து வராது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

ஒன்றை வைத்துக்கொண்டிருக்கிற காரணத்தால் இதை நீ செய்ய வேண்டும் என்று கட்டாயப்படுத்துவோமேயானால், கட்டாயப் படுத்துவதன் மூலமாக ஒன்றைச் சரியாகச் சாதித்து விடமுடியும் என்பதற்கு இந்த உலகத்தில் எந்தவிதமான ஆதாரமும் இல்லை என்பதையும் நான் இங்கே குறிப்பிட்டாக வேண்டும்.

நெசவாளர்கள், விவசாயிகள், பாமரர்கள், அனைத்து நிலைகளிலும் இருக்கக்கூடிய அனைவரையும் எண்ணிப்பார்க்கின்றது நம்முடைய ஆளுநர் உரை. மீனவர்களுடைய நலன் காக்க - தலைவர் அழகாகச்



சொன்னார்கள். கச்சத் தீவில் நமக்கிருந்த விதிமுறைகள் என்ன? 1974-ஆம் ஆண்டு போடப்பட்டு, அந்த நிலையில் நம்முடைய மக்கள் அங்கு போகலாம், வரலாம். அங்கு ஏதோ விழா கொண்டாடுவார்களாம். நம்முடைய மக்கள் எங்கு வேண்டுமானாலும் விழா கொண்டாடலாம். அவர்களையே காப்பாற்ற முடியாத அளவிற்கு அதனுள்ளே விழா கொண்டாடுகிற நிலை இருக்கலாம், அது வேறு. ஆனால் அந்த இடத்திலே விழா கொண்டாட, போக, வர உரிமை அளிக்கக்கூடிய விதிமுறைகள் இருந்தன. 1977-லிருந்து விதிமுறைகள் பின்பற்றப்படவில்லை. ஏன் பின்பற்றப்படவில்லை? விதிமுறைகள் பின்பற்றப்பட்டு இருக்குமேயானால், மீனவர்களுக்குப் பாதுகாப்பு இருந்திருக்கும். தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசு அந்த விதிமுறைகளை மீண்டும் மத்திய அரசு செயல்படுத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டை எடுத்திருப்பதை இந்த ஆளுநர் உரையில் மிகத் தெளிவாக எடுத்துச் சொல்லியிருப்பது அனைவரும் வரவேற்கக்கூடிய ஒன்று.

ஐந்தாவது ஊதியக் குழு குறித்து, அரசு ஊழியர்கள் வருகின்றபோதெல்லாம் ஆவலோடு என்னிடம் சொன்னார்கள், கலைஞர் எங்களுக்கும் தலைவர்தானே! 'போஸ்டல் ஓட்டைப் பார்த்தீர்களா? 39-லும் நாம் அல்லவா! எல்லாமே கொண்டு வந்தோமே, நாங்கள் எல்லாம் அவர் வழிதான்' என்ற அந்தக் கருத்தை எல்லாம் என்னிடம் சொல்லி, எப்போதும் நாங்கள் மனம் மகிழ வாரி வழங்குகின்ற ஒரு மாமுதல்வர் அவர்கள் ஐந்தாவது ஊதியக் குழு என்கிறபோது நான் தெளிவாக ஆளுநர் உரையைப் படித்துக் காட்டி சொன்னேன். அதற்காக அமைக்கப்பட்ட அலுவலர்கள் குழு இருக்கின்றது, பரிந்துரை ஏற்கப்பட்டிருக்கிறது, இந்த நிதிநிலை அறிக்கையிலே உங்களுக்கு நல்ல செய்தியை வழங்குவதாக உள்ளோம் என்ற கருத்தும் இங்கே கொடுக்கப்பட்டிருக்கின்ற காரணத்தால் இன்னொரு முறை குறிப்பிட்டுச் சொல்லி நான் என்னுடைய ஆளுநர் உரையை வரவேற்கின்ற விவாதத்தைத் தொடங்கி வைத்து விடைபெற விரும்புகிறேன்.

சேலத்திலே தந்தை பெரியார் பெயரிலே பல்கலைக்கழகம், அதைப்போல டாக்டர் அம்பேத்கர் பெயரிலே ஒரு பல்கலைக்கழகம், முத்தமிழ் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் பெயரிலே ஒரு மருத்துவக் கல்லூரி. இந்தப் பல்கலைக்கழகங்களை எல்லாம் கண்டு, நம்முடைய

அரசு மிகத் தெளிவாக தன்னுடைய பணியைச் செய்து கொண்டிருக்கிற வேளையில், கடந்த ஆட்சிக் காலத்தில் நடந்த ஒரு குறிப்பைப் பார்த்தேன்.

ஒரு கேள்வி எழுப்பப்படுகிறது, இந்த மாமன்றத்தில் முதலமைச்சர் அமர்ந்து இருக்கிறார்கள். பல்கலைக்கழகம் சேலத்திலே அமைக்கப்படுமா என்று ஒரு உறுப்பினர் கேள்வி கேட்கிறார். அந்தக் கேள்விக்கு என்ன பதில் தெரியுமா? 'பல்கலைக்கழகம் அமைக்க முடியாது' என்று. ஏன் அமைக்க முடியாது? 'பல்கலைக்கழகம் அமைப்பதற்கான நிலைகள் இந்த அரசின் கருத்திலேயே இல்லை' என்ற ஒரு செய்தியை இந்த மாமன்றத்திலே பதிவு செய்திருக்கிறார்கள்.

இன்னும்கூட சொல்ல வேண்டுமானால் கோவைக்கு பக்கத்திலே நடைபெற்ற ஒரு சம்பவத்தை, விரும்பத்தகாத சம்பவத்தை முன்னாள் முதலமைச்சர் இதே மாமன்றத்திலே அமர்ந்து பதில் சொல்கிறார். அன்று பேரவைத் தலைவர் மூலமாக ஒருவர் ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வருகிறார்.

வெடிவிபத்து - பலமுறை நடந்ததில் ஒன்று, கோவையிலே சத்தியமங்கலம் சாலை என்று கருதுகிறேன், அந்தச் சாலைப் பகுதியிலே நடைபெற்ற வெடி விபத்து குறித்து, முதலமைச்சர் பேசியது குறித்து நான் உண்மையிலேயே வேதனைப்பட்டேன், வருத்தப்பட்டேன். படிக்கின்றபோதே மிகவும் துன்பப்படுகிற அளவுக்கு அதிலே வந்த செய்தி என்னவென்றால், வெடித்ததற்காக வருத்தமோ, வேதனையோ, அன்றைய முதல்வருக்கு இருந்ததாகத் தெரியவில்லை. பேரவைத் தலைவர் மகிழ்ச்சியோடு குறிப்பிடுகிறார். 'கோவையிலே அதற்குப் பக்கத்திலே 'வெடிவிபத்து' என்று. அவர் சொல்லி, இவரும் பேசி, விளையாட்டுத்தனமாக எழுந்து சொல்கிறார். 'என்னுடைய பிறந்த நாளுக்கு, இந்த மாமன்றத்திலே இருப்பவர்கள் எல்லாம் பிறந்த நாள் வாழ்த்துச் செய்தியைத் தெரிவித்தீர்கள். அதற்காக உங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்' என்று. அந்தப் பிறந்த நாள் செய்திகளுக்கு எல்லாம் முக்கியத்துவம் கொடுத்து, பிறகு, அந்த விபத்து சம்பந்தமாக நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்றுதான் அன்றைய முதலமைச்சர் சொன்னாரே தவிர, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரைப் போல உணர்ந்து அல்ல, தெளிந்து அல்ல, தெரிந்து அல்ல, புரிந்து அல்ல, அறிந்து அல்ல. 60 ஆண்டு காலம் உழைத்து, உழைத்து இந்த மண்ணின் மைந்தர்களை உணர்ந்து



இருக்கின்ற அந்த உணர்வின் அடிப்படையிலே பேசுகின்ற அந்த எண்ணத்தால் அல்ல.

முற்பகல் 11-30

நான் இன்னும் சொல்கிறேன். 39 பத்திகளைக் கொண்டது இந்த ஆளுநர் உரை. 39 பத்திகள் என்பதை நான் எண்ணிப் பார்த்தேன். அது என்ன 39? ஒன்றிலிருந்து ஆரம்பித்து 39-ஆவது பத்தியிலே முடித்திருக்கிறார்கள். அப்போதுதான் எண்ணியும் பார்த்தேன். தமிழர்களே, தமிழ்ப் பெருங்குடி மக்களே, நான் உங்களுக்காக உழைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன், நான் உங்களுக்கானவன், எது வேண்டும் என்றாலும் நடக்கலாம், வரலாம், போகலாம், வாழலாம், வீழலாம், வெல்லலாம், வெல்லாமல் போகலாம். ஆனாலும்கூட என் உழைப்பு இந்தத் தமிழ் மண்ணிற்கு உண்டு என்பதை 39 என்ற எண்ணிலேயே சொல்லி, இந்த மண்ணிற்கு அறிவுறுத்தி இருக்கிறார் என்றுதான் நான் இந்த 39 என்ற எண்ணை எண்ணிப் பார்த்தேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, இதை எல்லாம் கூறுகின்ற இந்த வேளையிலே மனமகிழ்ச்சியோடு குறிப்பிடுகின்றேன். இப்படிப்பட்ட ஆளுநர் உரை என்பது, ஆளுநர் உரைகளுக்கெல்லாம் இலக்கணம். இந்த ஆளுநர் உரை எல்லா இதழ்களும் மணக்கின்ற ரோஜா; இந்த ஆளுநர் உரை என்பது வர இருக்கின்ற நல்ல திட்டங்களுக்கான நுழைவாயில், தோற்றம், தோற்றுவாயில் என்பதை இங்கே எடுத்துச் சொல்லி, மிகச் சிறந்த இந்த அரிய வாய்ப்பினை வழங்கியமைக்காகவும், இந்த அரசினுடைய அனைத்து நிலைப்பாட்டையும், கொள்கைக் குறிப்பினையும், நடந்தது, நடந்து கொண்டிருப்பது....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து திரு. ச. அழகிரி (குறுக்கீடு). சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. இ. புகழேந்தி:** நடந்தது, நடந்து கொண்டிருப்பது, நடக்கப்போவது, அனைத்தையும் இணைத்து, ஒரு சாறாக, மூலமாக இதை வடித்துத் தந்த, அந்த மிகச் சிரிய சிறப்பினையும், வியந்து பாராட்டி, தமிழ்ப் பெருங்குடி மக்கள் சார்பாக என்னுடைய இதயமார்ந்த நன்றியினைத் தெரிவித்து வாழ்த்தி, வரவேற்று, வணங்கி அமர்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ச. அழகிரி.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 11-ஆவது சட்டப் பேரவையின் ஐந்தாவது கூட்டத் தொடரில் முதன்முறையாக உரையாற்றிய மேதகு ஆளுநர் உரையின் மீதான விவாதத்தை தமிழ் மாநில காங்கிரஸ் சார்பில் தொடங்கி வைப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். தமிழகத்தைச் சேர்ந்த சிறந்த விஞ்ஞானியான டாக்டர் அப்துல் கலாம் அவர்களுக்கும், இசை மேதையும், மிகவும் பிற்படுத்தப்பட்ட குலத்தில் பிறந்தவருமான டாக்டர் எம்.எஸ். சுப்புலட்சுமி அவர்களுக்கும், அரசியல் மேதை திரு. சி. சுப்ரமணியம் அவர்களுக்கும், "பாரத ரத்னா" விருதுகள் வழங்கப் பட்டதற்காக தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பாக எங்களுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறோம். உயர்ந்த இலட்சியங் களுக்காக தங்களுடைய வாழ்வை அர்ப்பணித்த இந்த மூத்த தலைவர்களுக்கும், அறிஞர்களுக்கும், மேதைகளுக்கும் தலை வணங்கி எங்களுடைய வணக்கத்தை நாங்கள் தெரிவித்துக்கொள்கிறோம்.

அண்மையில் 39 பாராளுமன்றத் தொகுதிகளுக்கும், 2 சட்டப் பேரவைத் தொகுதிகளுக்கும் தேர்தல்கள் நடைபெற்று, முடிவுகள் வந்துள்ளன. இந்த முடிவுகள் இருவேறுவிதமாக மக்களால் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. நாடாளுமன்றத்திற்கு ஒருவிதமான முடிவும், சட்டமன்றத்திற்கு ஒருவிதமான முடிவும், அளிக்கப்பட்டிருப்பதை நாம் பார்க்கிறோம். ஆனால் இன்றைக்கு ஒருசிலர் அவசரக் கோலத்திலே அள்ளித் தெளித்ததைப்போல, ஆளுகின்ற அரசாங்கம், தேர்தலிலே தோல்வியை அடைந்திருக்கிறது, எனவே, அரசியல் சட்டத்தின் 356-வது பிரிவை உபயோகித்து இந்த அரசாங்கத்தைக் கலைக்க வேண்டும் என்று கூறி வருகிறார்கள். நான் அவர்களிடம் ஒன்றைக் கேட்க ஆசைப்படுகிறேன். உங்களுடைய இந்தக் கோரிக்கை தமிழ்நாட்டோடு நின்றுவிடுமா அல்லது அது மராட்டிய மாநிலத்திற்கும் பொருந்துமா என்கின்ற கேள்வியை நான் கேட்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) திங்களுக்கும், தீப்பிழம்பிற்கும் வித்தியாசம் தெரியாத சிறுபிள்ளைகளைப்போல, இந்தத் தேர்தல் முடிவுகளினுடைய உண்மையை அறிந்து கொள்ளாமல், இதிலே அரசியல் பித்தலாட்டம் செய்யலாம் என்று ஒரு சிலர் கருதுகிறார்கள். தமிழிலே 'கொண்டு வந்தாலும் வராவிட்டாலும் தாய்; கொண்டு வந்தால்தான் தந்தை; உயிர் காப்பான் தோழன்; கொலையும் செய்வாள் பத்தினி' என்று ஒரு முதுமொழி உண்டு. நான் இந்த நேரத்திலே கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். எங்களுடைய தமிழ் மாநில காங்கிரஸ் சார்பில்



'வளமான தமிழகம், வலிமையான பாரதம்' என்று கூறி வருகிறோம். எனவே, ஒரு வளமான தமிழகத்தை உருவாக்குவதற்கு தமிழ் மாநில காங்கிரஸ் எப்போதும் உறுதுணையாக இருக்கும். ஆக்கபூர்வமான எதிர்க்கட்சி என்று சொல்லி வருகின்ற நாங்கள், அரசாங்கத்தின் குறைகளை விமர்சிக்கின்றபோதும், அரசாங்கத்தின் நிறைகளைப் பாராட்டுகின்றபோதும், எவ்வாறு உறுதியான குரலிலே சொல்லி வருகிறோமோ, அதேபோல், எங்களுடைய தோழமைக் கட்சியான இந்த அரசாங்கத்தின் மீது 356-ஆவது பிரிவு உபயோகிக்கப்படாது என்பது எங்களுக்கு நன்றாகத் தெரியும். ஆனால் அதற்கு யாராவது முயற்சி செய்வார்களேயானால் தமிழ் மாநில காங்கிரஸ், மக்கள் சக்தியை ஒன்று திரட்டி ஒரு மாபெரும் போராட்டத்தை நடத்தும். (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுடைய தோழர்களுக்கு நாங்கள் உறுதுணையாக இருப்போம் என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்வதிலே நான் பெருமைப்படுகிறேன்.

முற்பகல் 11-35

மதச்சார்பின்மை மீது தமிழ் மாநில காங்கிரசிற்கும், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் அழுத்தமான நம்பிக்கை உண்டு. அது இன்று, நேற்று அல்ல. 100 ஆண்டுகாலமாகவே இந்தக் கோரிக்கைகளுக்காக, இந்தக் கொள்கைகளுக்காக நாம் போராடி வருகின்றோம். மதச்சார்பின்மையைக் காப்பாற்றுவதற்காக எந்த விலையையும் கொடுப்பதற்கு இந்தியாவிலே இருக்கின்ற மதச்சார்பற்ற கட்சிகள் உறுதியாக இருக்கிறார்கள் என்பது நாம் அறிந்த ஒன்றுதான். மதச்சார்பின்மைக்காக 50 ஆண்டுகளுக்கு முன்பு மகாத்மா காந்தியினுடைய உயிர் பறிக்கப்பட்டது. 50 ஆண்டுகளுக்குப் பிறகு இன்றைக்குத் தமிழகத்திலே மதச்சார்பின்மைக்குப் போராடியதற்காகத் தேர்தல் வெற்றிகளை நாம் இழந்திருக்கிறோம். இந்த இரண்டும்தான் வித்தியாசம். 50 ஆண்டுகளுக்கு முன்பு உயிர் பறிக்கப்பட்டது– மகாத்மாவினுடைய உயிர். இன்றைக்குத் தேர்தல் வெற்றிகள் தவிர்க்கப்பட்டிருக்கின்றன. இதை நாங்கள் உணர்ந்து பார்க்கிறோம். ஆனால் இந்த நேரத்திலே நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தியாவின் மதச்சார்பின்மை என்பது பலரால் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டிருக்கிறது. மகாத்மா காந்தியடிகள் அவர்களாலும், ஜவஹர்லால் நேரு அவர்களாலும், ஜெயப்பிரகாஷ் நாராயணன் அவர்களாலும் வகுத்து அளிக்கப்பட்ட

அந்த உயர்ந்த கொள்கை ஏதோ சிறுபான்மையினருக்கு ஆதரவானதாகவும், பெரும்பான்மையினருக்கு எதிரானதாகவும் இன்றைக்குக் கருதப்படுகிறது. ஏனென்றால் அதைப் பற்றிய தெளிவான நோக்கங்களை நாம் கடந்த காலங்களில் சொல்லாத காரணத்தினால், இன்றைக்கு மதச்சார்பின்மை என்பது சிறுமைப்படுத்தப்பட்டிருக்கிறது. எனவே இந்த நேரத்தில் மதச்சார்பின்மையினுடைய உண்மை நிலையை எடுத்துச்சொல்ல வேண்டிய கட்டாயத்திலே நாம் இருக்கிறோம்.

மகாத்மா காந்தி தன்னை இந்து என்று சொல்லிக் கொள்வதிலே பெருமை கொண்டார். ஆனால் அதற்காக அவர் பிற மதங்களின் மீது வெறுப்புணர்ச்சியைக் காட்டவில்லை. அதிலே அவர் உறுதியாக இருந்தார். "நான் வணங்கும் கடவுள் பிற மதத்தினருடைய கடவுள்மீது அன்பு காட்டுமாறு எனக்குப் பணித்திருக்கிறார். நான் வணங்கும் கடவுள் பிற மதத்தினரை அன்போடு அழைத்துச் செல் என்று எனக்கு உத்தரவிட்டிருக்கிறார். என்னுடைய மனசாட்சி எனக்கு இதைச் சொல்கிறது" என்று மகாத்மா காந்தி அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எல்லாவற்றுக்கும் மேலாக "நான் வணங்கும் கடவுள் பிற மதத்தினர்மீது துவேஷம் போதித்தால் எனது மதத்தையும், கடவுளையும் துறக்கத் தயார்" என்று மகாத்மா காந்தி அவர்கள் உரத்த குரலிலே சொல்லியிருக்கிறார். மகாத்மா காந்தியைவிட சிறந்த இந்துவைப் பார்க்க முடியாது. மகாத்மா காந்தியைவிட கடவுள் மீது நம்பிக்கை கொண்டவர்கள் யாரும் இல்லை. எல்லையற்ற அன்பும், பரந்த நோக்கமும் கொண்ட மகாத்மா காந்தி அவர்கள், நான் வணங்கும் கடவுள் பிற மதத்தினர்மீது துவேஷம் போதித்தால், நான் எனது கடவுளையும் துறந்துவிடுவேன், எனது மதத்தையும் துறந்துவிடுவேன் என்ற மனித நேயத்தை இந்த உலகத்திற்கு எடுத்துச் சொன்னவர். எனவே அவரை தேசத் தந்தையாகக் கொண்டிருக்கிற இந்த இந்திய தேசத்தில், எல்லா மதத்தினரையும் அரவணைத்துச் செல்ல வேண்டியதனுடைய அவசியத்தை இன்றைக்கு நாம் உணர்ந்திருக்கிறோம். மனித நேயமே முக்கியம், மதவெறி முக்கியம் அல்ல என்பதே அவர் நமக்கு விட்டுச் சென்றிருக்கிற செய்தி. எனவே அவற்றை நாம் காப்பாற்றிப் பின்பற்ற வேண்டும்.

அதேபோல் நபிகள் நாயகம் சொல்லியிருக்கிறார். "அவரவர் மார்க்கம் அவரவருக்கு" என்று. இது பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய விஷயம். 'அவரவர் மார்க்கம் அவரவருக்கு' என்பது



'பிறருடைய மார்க்கத்திலே நீ தலையிடாதே' என்கின்ற ஓர் உயர்ந்த நோக்கத்தைச் சொல்கின்ற கருத்தாகும். ஆனால் இன்றைக்கு மதவெறியர்களால் இவை எல்லாம் மறக்கப்பட்டிருக்கின்றன; மாற்றப் பட்டிருக்கின்றன. எல்லா சமுதாயங்களிலும் இருக்கிற மதவெறியர்கள் தங்களை, இன்றைக்கு அவர்களுடைய மதத்தின் தலைவர்களாகக் கருதுகிறார்கள். இந்த நிலை அகற்றப்பட வேண்டும். மத வெறியர்கள் என்பவர்கள் வேறு. மதத் தலைவர்கள் என்பவர்கள் வேறு; மதத் தலைவர்கள் மனித குலத்தை ஒன்றுபடுத்தினார்கள். மத வெறியர்கள் மனித குலத்தைக் கூறு போட்டிருக்கிறார்கள். மகாத்மா காந்தியடிகள் இராமருடைய பெயரால் தன்னுடைய பொது வாழ்வைத் தொடங்கினார். ஆனால், அவரைக் கொன்றவர்கள்கூட இராமருடைய பெயரால்தான் அவரைக் கொன்றார்கள். மகாத்மா காந்தியினுடைய இராமர் இந்திய மக்களை ஒன்று திரட்டினார். ஆனால், மகாத்மா காந்திக்கு எதிராக இருந்தவர்கள் வணங்கிய இராமர் இந்திய மக்களைப் பிரித்துப் பார்த்தார். இவற்றை நாம் உணர்ந்து பார்க்க வேண்டும். எனவே, இந்த நேரத்தில் மதச்சார்பின்மை என்பது தமிழகத்திலே ஒரு முக்கியமான கருத்தாக இருக்க வேண்டும். இந்த நிலைமைகள் மாற வேண்டுமானால் ஒரு கலாச்சாரப் புரட்சி தேவை.

முற்பகல் 11-40

இவ்வளவு சீர்திருத்தவாதிகள் தோன்றி, இவ்வளவு புரட்சியாளர்கள் தோன்றி, உலகத்திலேயே இந்தியாவில்தான் ஆன்மீகம் வளர்ந்தோங்கிய நிலையில் இன்றைக்கு இங்கே மனிதர்கள் மதத்தின் பெயரால் தங்களை பலி கொடுத்துக்கொள்கிறார்கள். அந்த உயரிய கருத்துகள் எல்லாம் இன்றைக்கு மறக்கப்பட்டிருக்கின்றன. எனவே, அவற்றை நினைவூட்ட ஒரு கலாச்சாரப் புரட்சி தேவை. புத்தர், விக்கிரக ஆராதனையை எதிர்த்தார். ஆனால், அதன் பிறகு புத்தரையே ஒரு விக்கிரகமாக மாற்றி, அவரை வழிபடுகின்ற நிலைமையை நாம் பார்த்தோம். தமிழகத்திலேகூட நமக்கு நினைவிருக்கிறது. பேரறிஞர் அண்ணா அவர்கள் சுயமரியாதைக் கொள்கையை உலகிற்குப் பறை சாற்றினார்கள். ஆனால், அவருடைய சமாதியையே கோயிலாக்கி, அங்கே கற்பூரம் கொளுத்தி, அவரைத் தெய்வமாக்கிய ஒரு சூழ்நிலையை நாம் பார்க்கிறோம். இவற்றிற்கெல்லாம் என்ன காரணம்? மக்களுடைய அஞ்ஞானத் தன்மைதான் காரணம். மக்கள் அஞ்ஞானிகளாக மாறியிருக்கிறார்கள். எனவே, இவற்றையெல்லாம் சீர்திருத்த ஒரு

கலாச்சாரப் புரட்சியை தமிழகத்திலே இருக்கிற மூத்தத் தலைவர்கள் - அவர்கள் எந்த அரசியல் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் கவலையில்லை - உருவாக்க வேண்டும். எப்படி நவகாளியிலே இனக் கலவரம் ஏற்பட்டதோ, அப்போது மகாத்மா காந்தியடிகள் எல்லாவற்றையும் ஒதுக்கி வைத்துவிட்டு, நவகாளிக்கு யாத்திரை சென்றாரோ, அதேபோல, தமிழகத்திலே நம்முடைய மூத்த அரசியல் தலைவர்கள் இன்றைக்கு ஒரு புரட்சியை ஏற்படுத்த வேண்டும்; செயல்பாட்டைக் கொண்டுவர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதேபோல, இன்றைக்கு மேலும் ஒரு பிரச்சினை தோன்றியிருக்கிறது. கோயம்புத்தூரிலே குண்டு வெடித்திருக்கிறது. இந்தக் குண்டுவெடிப்பிற்கு என்ன காரணம் சொல்கிறார்கள்? அயோத்தியிலே மசூதி இடிக்கப் பட்டது. அதனுடைய நினைவாகத்தான் இப்போது பிரச்சினைகள் எல்லாம் தோன்றியிருக்கின்றன என்று சொல்கிறார்கள். ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு யாரோ ஒரு காட்டுமிராண்டிக் கும்பல் ஒரு கோயிலை இடித்துவிட்டு, அங்கே மசூதியைக் கட்டினார்கள் என்பதற்காக ஐந்நூறு ஆண்டுகளுக்குப் பிறகு நாமும் ஒரு காட்டுமிராண்டியாக மாறி அதேபோன்று இடிக்க வேண்டிய ஒரு விஷயத்தைச் செய்ய வேண்டியது அவசியம்தானா என்று நாம் உணர்ந்து பார்க்க வேண்டும். இந்தியா முழுவதும், நம்முடைய மதத்தைக் காப்பாற்றப் போவதாக இன்றைக்கு ஒருசிலர் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். நான் கேட்கிறேன், இந்த தேசத்தை எழுநூறு ஆண்டு காலம் இஸ்லாமியர் ஆண்டார்கள். முன்னூறு ஆண்டு காலம் ஆங்கிலேயர்கள் ஆண்டார்கள். உலகத்திலே ஆயிரம் ஆண்டு காலம் வேறு மதத்திற்கு அடிமையாக எந்த ஒரு தேசமும் இருந்தது கிடையாது. ஆனால், ஆயிரம் ஆண்டு காலம் நாம் அடிமையாக இருந்தும்கூட இந்து மதத்தை யார் காப்பாற்றினார்கள்? யார் வந்து இந்து மதத்திற்காகக் குரல் கொடுத்தார்கள்? இவ்வளவு இக்கட்டான நிலைகளிலும்கூட இந்து மதம் உயிர் வாழ்ந்தது, வளமாக வளர்ந்தது. அதற்குக் காரணம் என்ன? இந்து மதம் இயற்கையான மதம். அது அழிவற்ற மதம். அதனைக் காப்பாற்ற எந்த இரட்சகரும் தேவையில்லை. அவரவர் தங்களுடைய மதத்தைக் காப்பாற்றிக் கொள்வார்கள். (மணியடிக்கப்பெற்றது)



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 14 நிமிடங்கள் ஆகியிருக்கின்றன என்பதை நினைவூட்டுகிறேன்.

**திரு. ச. அழகிரி:** எனவே, இந்த நேரத்திலே நான் கூறிக்கொள்வது......

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உண்மையிலேயே இது ஒரு மிக சீரியஸான விஷயம் என்கிற முறையில், நேரத்தைத் தீர்மானிக்காமல், இந்த விஷயம் தீவிரமாகவும், தீர்க்கமாகவும் விவாதிக்கப்பட வேண்டிய விஷயம் என்பதால், இதற்குரிய நேரம் ஒதுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஆகியிருக்கின்ற நிமிடங்களைத்தான் நினைவூட்டினேன்.

முற்பகல் 11-45

**திரு. ச. அழகிரி:** துணைத் தலைவர் அவர்களே, நான் உறுதியாக நம்புகிறேன். என்னுடைய மதத்தைக் காப்பாற்ற எந்த இரட்சகரும் தேவையில்லை. எந்த மொகலாய வாளும், எந்த ஐரோப்பிய துப்பாக்கியும் என்னுடைய மதத்தை வீழ்த்திவிடாது என்பதிலே பிறரைவிட நான் உறுதியாக இருக்கிறேன். ஒரு கையிலே குரான் இன்னொரு கையிலே கூரிய வாள் இவற்றை வைத்துக்கொண்டு ஔரங்கசீப் இந்த நாட்டை ஆண்டபோதுகூட என்னுடைய மதம் உறுதியாக இருந்தது. துப்பாக்கி முனையிலே ஒரு புறமும், கோதுமையைக் காட்டி ஒரு புறமும் ஐரோப்பியர்கள் இந்த நாட்டிலே வந்து மத மாற்றம் செய்தபோதுகூட என்னுடைய மதம் உறுதியாக இருந்தது. அப்பொழுதெல்லாம் என்னுடைய மதத்திற்கு எந்தவிதமான பங்கமும் ஏற்பட்டுவிடவில்லை. எனவே அப்பொழுதெல்லாம் என்னுடைய மதத்தைக் காப்பாற்ற முன்வராத இவர்கள், இன்றைக்கு நாமே ஆண்டுகொண்டு இருக்கிறபொழுது - இன்றைக்கு இந்தியாவிலே யார் ஆளுகிறார்கள்? குஜ்ரால் இந்து அல்லவா? தேவ கௌடா இந்து இல்லையா? இன்றைக்குத் தமிழகத்தை ஆளுகின்ற கலைஞர் இந்து அல்லவா? தலைவர் மூப்பனார் அவர்கள் இந்து இல்லையா? இந்து மதத்தின்மீது எங்களுக்கெல்லாம் அக்கறை இல்லையா? எனவே ஆங்கிலேயர்களும், இஸ்லாமியர்களும் ஆண்டபோதுகூட இந்து மதத்தைக் காப்பாற்ற யாரும் வராதபொழுது, இன்றைக்கு இந்துக்களே இந்த நாட்டை ஆளுகிறபொழுது இந்து மதத்தைக் காப்பாற்ற எந்த இரட்சகரும் வேண்டாம். எனவே, மதத்தின் பெயரால் தமிழகத்திலே

இரத்த ஆறு ஓடுவதை நாம் அனுமதிக்க முடியாது என்பதை இந்த நேரத்திலே நான் கூறிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கோயம்புத்தூர் குண்டு வெடிப்பு, கண்களிலே இரத்தக் கண்ணீரை வடிக்கிறது. 80 பேர் இறந்திருக்கிறார்கள். நம்முடைய காவல் துறை தன்னுடைய முகவரியை இழந்து நிற்கிறது. எதனால் இந்தச் சோர்வு ஏற்பட்டது என்பது எங்களுக்குப் புரியவில்லை. இவ்வளவு திறமையான காவல் துறை, குண்டு வெடித்த பிறகு இவ்வளவு குண்டுகளையும் தோண்டித் தோண்டி எடுக்கிறவர்கள், குண்டு வெடிப்பதற்கு முன்பு ஏன் அவற்றைக் கண்டு பிடிக்க முடியவில்லை என்பதனை அரசாங்கம் கண்டுபிடித்தாக வேண்டும். ஏனென்றால் மக்களுக்குப் பாதுகாப்பு தேவை. இன்றைக்குப் பத்திரிகையிலே படிக்கிறோம். 50 கிலோ வெடி குண்டுகளோடு 3 பேர் சென்னையிலே சுற்றி வருகிறார்கள் என்று படிக்கிறபொழுது மனதிற்குப் பயமாக இருக்கிறது. எனவே, அரசாங்கம் எந்தத் தீவிரவாதியாக இருந்தாலும் சரி, அவர் இந்துமத தீவிரவாதியாக இருந்தாலும் சரி, இஸ்லாமிய தீவிரவாதியாக இருந்தாலும் சரி, இரும்புக் கரம் கொண்டு அடக்க வேண்டும் என்பதனை நான் இந்த அவையிலே தமிழ் மாநில காங்கிரஸ் சார்பாகக் கூறிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

எங்கேயோ ஒரு சுணக்கம் ஏற்பட்டிருக்கிறது, யாரோ தன்னுடைய கடமையைச் செய்யத் தவறியிருக்கிறார்கள். அந்தச் சுணக்கமும், கடமை தவறலும் இல்லாமல் இருந்திருந்தால், 80 உயிர்களை நாம் இழந்திருக்க வேண்டிய நிலை வந்திருக்காது என்பதனை நான் இங்கே கூறிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வெறும் கடும் நடவடிக்கை மட்டுமே இந்தப் பிரச்சினையைத் தீர்த்துவிடாது. இதற்குப் பின்னால் ஒரு சமுதாயப் பிரச்சினை இருக்கிறது. இவ்வளவு காலம் அமைதியாக இருந்த தமிழகத்திலே இப்போது மதக் கலவரம் ஏற்படுகிறது என்றால், அதற்கு யார் காரணம் என்பதையும் நாம் உணர்ந்து பார்க்க வேண்டும். நான் இதை அரசியலாக்க விரும்பவில்லை. அரசியலும் இதிலே தலையிடக் கூடாது. இந்தச் சமுதாயப் பிரச்சினையை எல்லா அரசியல் கட்சிகளும் சமுதாயப் பிரச்சினையாக நோக்க வேண்டுமே ஒழிய, ஒருவரை ஒருவர் வீழ்த்துவதற்கு இதை ஆயுதமாக எடுத்துக் கொள்ளக் கூடாது. ஒவ்வொரு சமுதாயப்



பிரச்சினையைப் பார்க்கிறபொழுதும் அதிலே நாம் அரசியலை நுழைத்து, அதனை ஆளுகின்ற கட்சிக்கோ அல்லது எதிர்க் கட்சிக்கோ எதிராக அதனைப் பயன்படுத்தி அதன் மூலமாகப் பிரச்சினையினுடைய கூர்மையை நாம் மழுங்கடித்து இருக்கிறோம். இதுதான் கடந்தகால வரலாறு. அது காவிரிப் பிரச்சினையாக இருந்தாலும் சரி, மதப் பிரச்சினைகளாக இருந்தாலும் சரி; சட்டம்—ஒழுங்காக இருந்தாலும் சரி. இன்றைய நிலைமை அதற்கு அனுமதி அளிக்காது. அதற்கு மாறாக, இந்த வன்முறை வாதத்திற்கு அடிப்படை வாதம் என்ன என்பதனைக் கண்டுபிடித்து அதனை வேரறுக்க வேண்டும் என்று நான் இங்கே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கோவையிலே நடைபெற்ற குண்டு வெடிப்பிற்கு ஆளுநர் அவர்கள் தன்னுடைய உரையிலே கூறியிருக்கிறார். அரசாங்கம் முதல் கட்டமாக ரூ.28 இலட்சமும், அதன் பிறகு ரூ.150 இலட்சமும், பொருட் சேதம் அடைந்தவர்களுக்கு ரூ.500 இலட்சமும், தேவைப்பட்டால் மேலும் அதிகத் தொகையும் வழங்கப்படும் என்று மேதகு ஆளுநர் அவர்கள் தன்னுடைய உரையிலே கூறியிருக்கிறார். இதைப்போன்ற உதவிகள் செய்வது அரசினுடைய கடமை; செய்ய வேண்டும்; செய்தமைக்கு நான் பாராட்டுகிறேன். ஆனால் அதே நேரத்திலே வேறொன்றையும் நாம் பார்க்க வேண்டும். ஆளுநர் உரையிலே அதைப் பார்க்கிறபொழுது ஏதோ மேலோட்டமாக இருக்கிறது. இறந்துபோனவர்களுக்கெல்லாம் ஓர் உதவித் தொகை. எப்படி ஏழைகளுக்கு இலவச வேட்டி, சேலை கொடுக்கின்றோமோ, வறியவர்களுக்கு மானிய விலையிலே கோதுமையும், அரிசியும் கொடுக்கிறோமோ அதேபோல இறந்துபோனால் அவர்களுக்கும் ஓர் உதவித் தொகை என்று சிறிய அளவில் இருப்பது பார்ப்பதற்கு மனதிற்குச் சங்கடத்தை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கிறது.

முற்பகல் 11-50

ஒரு பாத்திரத்திலே அமுதம் இருக்கிறது. அந்த அமுதம் கீழே தரையிலே கொட்டி விட்டால் அந்த அமுதத்தைத் திரும்ப எடுக்க முடியாது. அதுபோலத்தான் இறந்துபோன, இழந்து போன உயிர்களை நம்மால் திரும்பப் பெற முடியுமா என்று பார்க்க வேண்டும். எவ்வளவு உயிர்கள் இன்றைக்குப் பலி கொடுக்கப்பட்டிருக்கின்றன? பத்திரிகையிலே பார்க்கிறபோது மனது பதைபதைக்கிறது. இளம் குழந்தையை,

இரத்தத்தோடு, சேரோடு, சகதியோடு இருக்கின்ற அந்தக் குழந்தையை தாய், மார்போடு கட்டி அணைத்துக்கொண்டு அழுவதைப் பார்க்கிறபோது மனதிற்கு வேதனையாக இருக்கிறது. இந்தக் காட்சிகளைப் பார்ப்பதற்குச் சென்ற நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், எங்களுடைய தலைவர் அவர்களும் அதைப் பார்த்து கண்ணீர் சிந்தியிருக்கிறார்கள். புகைப்படத்திலே பார்க்கிறபோது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அழுவது நன்றாகத் தெரிகிறது. எனவே இதுபோன்ற ஒரு சூழ்நிலை இருக்கிறபோது ஏன் அரசு இந்தப் பிரச்சினையிலே இன்னும் கடுமையான நடவடிக்கை எடுத்து இருக்கக்கூடாது? இந்தக் குறைபாடுகளுக்கு, இந்தச் சங்கடங்களுக்கு, இந்தக் கால தாமதங்களுக்கு என்ன காரணம் என்பதை அரசாங்கம் அறிவிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல பொது விநியோக முறை. ஆளுநர் உரையிலே பொது விநியோக முறை பற்றி அறிவித்திருக்கிறார்கள். இரண்டுவிதமான அட்டைகள் வழங்கப்படும் என்று கூறியிருக்கிறார்கள். சென்ற ஆண்டிலே மூன்று விதமான அட்டைகள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. 12 மாதங்கள் கழித்து இப்போது இரண்டுவிதமான அட்டைகள் வழங்கப்படும் என்று நாம் அறிவித்து இருக்கிறோம். நான் கேட்கிறேன், ஒரு குடும்பத்திலே திருமணம் நடைபெற்று தனியாக அவர்கள் குடும்பம் நடத்தப் போகிறார்கள். அப்படி நடத்தப் போகிறவர்களுடைய எண்ணிக்கையை எடுத்துக்கொண்டால் ஆண்டு ஒன்றுக்கு பல இலட்சம் குடும்பங்கள் புதிதாக உருவாகின்றன. இந்த 3 அட்டைகள், 2 அட்டைகள் என்று நிர்வாகச் சீர்கேடுகள் காரணமாக நாம் காலம் தாழ்த்திச் செல்வோமானால் இவர்கள் எல்லாம் இந்த 2 ஆண்டுகளுக்குத் தேவையான ரேஷனை எப்படிப் பெற முடியும் என்பதை அரசாங்கம் யோசித்துப் பார்க்கவேண்டும். பொது விநியோக முறை இந்த 2 ஆண்டுகாலமாகவே மிகுந்த குழப்பத்தில் இருக்கிறது. நான் இதற்குள் விரிவாகச் செல்ல விரும்பவில்லை. ஆனால் மக்களுடைய எதிர்பார்ப்புகள்—இவர்கள் வேறு எதையும் நம்மிடத்திலே எதிர் பார்க்கவில்லை—இந்தப் பொது விநியோக முறை சீராக இருக்குமானால் அதனால் மிகுந்த வறிய நிலையிலே இருக்கிற மக்கள் மகிழ்ச்சி அடைவார்கள். 2 ஆண்டுகள் ஆகியும் இன்னும் நாம் அட்டைகள் வழங்காதபோது அவர்களுக்கு நாம் எப்போது ரேஷன் வழங்கப்போகிறோம் என்பதை சம்பந்தப்பட்ட துறையைச் சேர்ந்தவர்கள் உணர்ந்து பார்க்க வேண்டும்.



அதேபோல ஆசிரியர் பயிற்சிப் பள்ளி மாணவர்களைப் பற்றி ஆளுநர் தன்னுடைய உரையிலே எதுவும் கூறவில்லை. ஏராளமான மாணவர்கள் கடந்த அரசினுடைய தவறுகள் காரணமாக, கடந்த அரசால் ஏற்பட்ட முறைகேடுகள் காரணமாக, அந்த அரசாங்கத்தை நம்பி தங்களுடைய வாழ்வை இழந்து இருக்கிறார்கள். அந்த அரசாங்கம் தவறு செய்த அரசாங்கம் என்று உறுதிப்படுத்தப்பட்ட பிறகுதான் நம்முடைய அரசாங்கம் இங்கே ஆட்சிப் பொறுப்பிலே ஏறியது. இந்த அரசாங்கம் வந்த பிறகு இந்தத் தவறுகள் தீர்க்கப்பட்டு, இந்த மாணவர்களுக்கு ஒரு விடிவுகாலம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் சம்பந்தப்பட்ட துறையிடமிருந்து சட்ட ரீதியான பேச்சுகள்தான் வருகின்றனவே ஒழிய, இதை எப்படித் தீர்ப்பது? அவர்களுக்கு எப்படி மறு வாழ்வு அளிப்பது என்பது பற்றி அரசாங்கம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். சென்ற அரசாங்கம் தவறு செய்தது என்பதையே நாம் சொல்லிக்கொண்டிராமல் அவர்கள் செய்த தவறுகளுக்கு என்ன பரிகாரம் என்பதைப் பார்க்க வேண்டும். அந்தப் பரிகாரம் செய்யக்கூடிய நிலையிலே நாம் இருக்கிறோம். அதற்கான சக்தி நம்முடைய அரசாங்கத்திற்கு இருக்கிறது. எனவே, பாதிக்கப்பட்ட ஆசிரியர் பயிற்சிப் பள்ளி மாணவர்களுக்கு இந்த நிதியாண்டிலாவது ஒரு விடிவுகாலத்தை இந்த அரசு கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, கைத்தறி நெசவாளர்கள் பிரச்சினை. என்னுடைய பகுதியில் 25 ஆயிரம் கைத்தறி நெசவாளர் குடும்பங்கள் இருக்கின்றன. இந்தத் தேர்தலின்போது நான் சென்றபோது எனக்கு மனதிலே ஒரு குற்ற உணர்வு ஏற்பட்டது. இவ்வளவு அருகிலே இருக்கிற இவர்களுடைய பிரச்சினைகளைக்கூட நாம் அறிந்து வைக்காமல் இருந்து இருக்கிறோமே என்ற குற்ற உணர்வு எனக்கு ஏற்பட்டது. கேட்டால் கைத்தறித் துணிகள் விற்பனை ஆகவில்லை என்று பல்வேறு காரணங்களைச் சொல்கிறார்கள். கைத்தறி நெசவாளர்கள் இன்றைக்கு அந்தத் தொழிலை விட்டுவிட்டு கட்டடங்கள் கட்டுகின்ற வேலைக்கு சித்தாளாகச் செல்கிறார்கள்; மிக வறிய நிலையிலே இருக்கிறார்கள். இதற்கான காரணங்கள் என்ன என்பது எனக்குத் தெரியாது. அரசாங்கம் தான் அதைக் கண்டுபிடிக்க வேண்டும்.

முற்பகல் 11-55

ஒரு காலத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களும், நம்முடைய முதலமைச்சர் அவர்களும் கைத்தறித் துணியைத் தலையிலே தூக்கி விற்றவர்கள். ஆனால் நீங்கள் ஆட்சியிலே இருக்கிறபொழுது இன்றைக்குக் கைத்தறி நெசவாளர்கள் பட்டினி கிடக்கிறார்கள் என்றால், வேறு வேலைகளுக்குச் செல்கிறார்கள் என்றால், அவர்களுடைய குடும்பம் [illegible]ந்த வறிய நிலையிலே இருக்கிறது என்றால், அதற்கான ஒரு மாற்றுத் திட்டத்தை நாம் அறிவிக்க வேண்டும். இதற்கு என்ன காரணம் என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும். இரண்டு ஆண்டு காலமாக கைத்தறித் துறை என்ன செய்தது என்று எனக்குத் தெரியவில்லை. சொல்ல முடியாத அளவிற்குப் பஞ்சம்; சொல்ல முடியாத அளவிற்கு வறுமை: சொல்ல முடியாத அளவிற்குத் துன்பத்திலே அவர்கள் இருக்கிறார்கள் என்பதை அரசினுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன். (மணியடிக்கப்பெற்றது)

அதேபோல, பொதுச் சுகாதாரம். ஆளுநர் உரையிலே பொதுச் சுகாதாரத்தைப் பற்றிய தெளிவான விளக்கங்கள் ஏதும் இல்லை. இன்றைக்கு வட்ட அளவிலே இருக்கின்ற மருத்துவமனைக்குள் நுழைய முடியாத சூழ்நிலை இருக்கிறது. என்னுடைய சிதம்பரம் நகரத்திலே இருக்கின்ற மருத்துவமனையே அதற்கு ஒரு சான்று. ஒவ்வொரு முறையும் அங்கே இருக்கின்ற மக்களைப் பார்க்கின்றபொழுது தலை குனிந்துதான் செல்ல வேண்டியிருக்கிறது. அங்கே ஜெனரேட்டர் வசதி கிடையாது. அறுவை சிகிச்சை நிலையத்திலே குளிர்சாதன வசதி கிடையாது. எங்கு பார்த்தாலும் துர்நாற்றம். பலமுறை சொல்லியாகிவிட்டது. அதற்குப் பிறகு என்ன செய்வது என்றே தெரியவில்லை. மக்கள் பிரதிநிதி என்ன செய்ய முடியும்? மருத்துவமனைக்குச் செல்லலாம்; டாக்டரைச் சந்திக்கலாம்; ஐயா இதைப்போல வைத்துக்கொள்ளாதீர்கள் என்று சொல்லலாம். ஆனால் எந்தவிதமான மாற்றமும் கிடையாது. நான் இதை மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். எனக்கு மிகவும் பிரியமானவர் அவர். ஆனால் அவருடைய துறை அந்த அளவுக்குப் பிரியமானதாக எனக்கு இல்லை என்பதுதான் என்னுடைய வருத்தம். எங்களுடைய மாவட்ட அமைச்சர் ஒரு முறை வந்தார். நானும் அவருடன் சென்றிருந்தேன். மருத்துவமனையிலே விசிறி இல்லை. கீழே அறுவை சிகிச்சை செய்து கொண்ட நோயாளி



இருக்கிறார்; இன்னும் ஒரு மணி நேரத்தில் இங்கே மின்சார விசிறி வேண்டுமென்று அவர் உத்தரவிடுகிறார்; ஒரு மாதமாகியும் அந்த மின்சார விசிறி அங்கே வரவில்லை. எனவே, நாம் சிரமப்படுகிறோம்.

நான் அரசாங்கத்தைக் குறை சொல்லவில்லை. எனக்குத் தெரியும் இந்த அரசாங்கத்தை. நான் 2 ஆண்டுகளுக்கு முன்பு ஓர் அரசாங்கத் தைப் பார்த்திருக்கிறேன்; 5 ஆண்டு காலம் ஓர் அரசாங்கத்தை நான் பார்த்திருக்கிறேன்; ஒன்றரை ஆண்டு காலமாக நான் ஓர் அரசாங்கத்தைப் பார்க்கிறேன்.

பத்தாயிரம் ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்கு, அவர்களுடைய வீடு தேடி வேலைக்கான ஆணை செல்வது இந்த அரசாங்கத்திலேதான்; பத்தாயிரம் காவலர்களுக்குத் தகுதியின் அடிப்படையிலே வேலை கிடைத்தது இந்த அரசாங்கத்திலேதான்; பத்தாயிரம் கிலோ மீட்டர் கிராமச் சாலைகள் இந்த அரசாங்கத்திலேதான் தார்ச் சாலைகளாக மாற்றப்பட்டன.

நமக்குப் புரிகிறது; உயர் மட்டத்திலே ஊழல் கிடையாது. ஐக்கிய முன்னணி அரசாங்கமாக இருந்தாலும் சரி, திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கமாக இருந்தாலும் சரி, உயர் மட்டத்திலே ஊழல் இல்லாத ஓர் அரசாங்கமாக இருந்தது.

பொதுப்பணித் துறையிலே குளங்கள் தூர் வாரப்படாமல் இருந்தன. ஆனால் இன்றைக்குப் பார்த்தால், நவீன இயந்திரங்களை வைத்து மிக அருமையாகத் தூர் வாரப்படுகிறது. இதெல்லாம் நமக்குப் புரிகிறது. ஆனால், மருத்துவமனையிலே, ரேஷன் கடையிலே இருக்கின்ற, கைத்தறி நெசவாளர்களாக இருக்கிறவர்களுடைய குறைகள் தீர்க்கப்படவில்லை என்றால் அதற்கு என்ன காரணம்? அதற்கான காரணத்தை நான் உணர்ந்து வைத்திருக்கிறேன்.

அரசாங்க அதிகாரிகள் பெருமளவிலே நமக்கு ஒத்துழைப்பாக இல்லை. நான் குறையாகச் சொல்லவில்லை. 1952 ஆம் ஆண்டு கேரளாவிலே மார்க்சிஸ்ட் அரசாங்கம் இருந்தபொழுது ஒரு கொள்கையைக் கொண்டு வந்தார்கள். (குறுக்கீடு) 1957-இல். Agitation and Administration என்று. அரசாங்கமே திட்டங்களை வகுக்கும்; அதே நேரத்திலே, அரசாங்கத்திலே இருக்கிற குறைபாடுகளுக்காக அரசாங்கமே சென்று போராடும். மந்திரியே சென்று மருத்துவமனையிலே

போராட்டம் நடத்துவார். ஆளுங்கட்சிச் சட்டமன்ற உறுப்பினரே பஞ்சாயத்து யூனியனிலே போய்ப் போராட்டம் நடத்துவார். சாலை சரியாகப் போடப்படவில்லை என்றால் அதற்கும் அவர் போராட்டம் செய்வார். எனவே, நாம் ஆளுங்கட்சியாக வந்து விட்டோம் அல்லது ஆளுங்கட்சிக்குத் தோழமையாக வந்து விட்டோம் என்பதற்காக - எதிர்ப்பு தெரிவிக்காமல் இருக்கமாட்டார்கள். பெரிய அரசாங்கம் இது; டெல்லியிலே ஔரங்கசீப் இருப்பார். இந்தியாவை அவர் சக்கரவர்த்தியாக இருந்து ஆண்டு கொண்டிருப்பார். ஆனால், தென்னிந்தியா அவருடைய கையிலே இருக்காது. டெல்லியிலிருந்து 500 கிலோ மீட்டர் தூரம்தான் அவருடைய அதிகாரம் இருக்கும். இப்படியெல்லாம் ஒரு காலம் இருந்தது. அதேபோலத்தான் இன்றைக்கும் இருக்கிறது.

இன்றைக்கு நாம் ஆட்சி செய்தாலும்கூட அதிகாரம் கோட்டையைச் சுற்றித்தான் இருக்கிறதேயொழிய, நகர்ப்புறங்களிலே, வட்டாரங்களிலே, மாவட்டங்களிலே இருக்கின்ற அதிகாரிகள் நம்முடைய அதிகாரத்திற்குக் கட்டுப்பட்டு இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. எனவே, இவற்றையெல்லாம் சரி செய்ய ஒரு சீரிய திட்டத்தை நாம் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவ்வளவுதான், முடிந்து விட்டது. நேரமாகி விட்டது. திரு. சுந்தர்.

**திரு. ச. அழகிரி:** முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் சொல்லி முடியுங்கள்.

**திரு. ச. அழகிரி:** அடுத்தது, தமிழகத்திலேயிருந்து ஒரு காதல் கடிதம் போய் இன்றைக்கு ஓர் அரசாங்கம் அமைந்து இருக்கிறது.

நண்பகல் 12-00

**திரு. பி. ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** Are you yielding?



**திரு. ச. அழகிரி:** இல்லை.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள், நீங்கள் பேசும்போது சொல்லலாம். திரு. அழகிரி தொடர்ந்து பேசுங்கள்.

**திரு. ச. அழகிரி:** நான் சொல்லவில்லை. திரு. பால் நாக்கரே சொல்லியிருக்கிறார். 'வாஜ்பாயிடம் நான் பேசினேன்...'

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மைக்கை ஆன் செய்து, என்ன சொல்கிறீர்கள் என்று சொல்லுங்கள்.

**திரு. பி. ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு உறுப்பினர் 'காதல் கடிதம்' என்று சொன்னதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும். அவர் சொன்ன வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட வேண்டும். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காதல் என்றவுடன் ஏன் இவ்வளவு தூரம் அவர் அஞ்சி நடுங்குகிறார் என்று தெரியவில்லை. காதலையே அவர் எதிர்க்கிறாரா? 'காதல் கடிதம்' என்று அவர் சொன்னதிலே யாருக்கு யார் கொடுத்தது என்ற விவரமே இல்லை. இந்த நேரத்திலே ஏன் இவ்வளவு தூரம் அஞ்சி நடுங்குகிறார், தலையீடு செய்கிறார் என்று எனக்குப் புரியவில்லை.

**திரு. சி. வேலாயுதன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் பேசப் போகிறீர்கள்; அப்போது சொல்லுங்கள். உட்காருங்கள். திரு. ச. அழகிரி, பேசுங்கள்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வார்த்தையை நான் மிகவும் ஜாக்கிரதையாகப் போட்டிருக்கிறேன். நான் யாருடைய பெயரையும் சொல்லவில்லை. பத்திரிகையிலே பால் தாக்கரே சொன்னதைச் சொல்லியிருக்கிறேன். அதாவது அவர் வாஜ்பாயிடம் பேசுகிறபோது, வாஜ்பாய் அப்படிச் சொன்னதாக, பால் தாக்கரே சொன்னதை நான் சொல்லியிருக்கிறேன். [illegible] வார்த்தை எதுவுமில்லை. என்னுடைய கூற்றே இதில் இல்லை. (குறுக்கீடு) ஒருமுறை போதும், அந்த வார்த்தைகள் ஒருமுறை போதும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காதல் கடிதங்கள் எழுதுகிறபோதே விவாகரத்துக் கடிதங்களும் எழுதுவது வழக்கம். (சிரிப்பு) எனவே, இரண்டு கடிதங்களும் இன்றைக்கு அவர்களுடைய கையிலே இருக்கின்றன. எப்படியிருந்தாலும் அவர்களை வாழ்த்த நாம் கடமைப்பட்டிருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு சின்ன விளக்கம். கல்யாணத்திற்குப் பிறகுதானே விவாக ரத்து.

**திரு. ச. அழகிரி:** இன்றைக்குப் புதிதாக அமைந்திருக்கின்ற அரசாங்கத்தில் ஒரு புதிய அஜெண்டா போட்டிருக்கிறார்கள். National Agenda. அதிலே அவர்கள் சொல்கிறபோது, தேசிய நதிநீர்க் கொள்கை வகுக்கப்படும் என்று அவர்கள் அதிலே எழுதியிருக்கிறார்கள். இந்த 1½ ஆண்டு காலம் இந்த அரசாங்கம் காவிரிப் பிரச்சினையிலே நடுவர் மன்றத் தீர்ப்பை அமல்படுத்த வேண்டுமென்பதற்காக நாம் கடுமையாகப் போராடி வந்திருக்கிறோம். இதற்கு உறுதுணையாக ஐக்கிய முன்னணி அரசாங்கமும் இருந்திருக்கிறது. ஐக்கிய முன்னணி அரசாங்கம் நம்முடைய கூற்றை தென் மாநிலங்களுக்கு சுற்றறிக்கையாக விட்டபோது, கேரளம் அதனை ஏற்றுக் கொண்டது, தமிழகம் அதனை ஏற்றுக் கொண்டது, புதுவை அதனை ஏற்றுக் கொண்டது, ஆனால் கர்நாடகம் மட்டும் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. கர்நாடகத்தைச் சார்ந்தவர்கள் சொன்னார்கள். தேசிய நதிநீர்க் கொள்கை என்று அறிவித்து, அதன் பிறகுதான் அந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமேயொழிய, நடுவர் மன்றத் தீர்ப்பை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது என்று கர்நாடகம் பிடிவாதமாக இருந்தது; இருக்கிறது; இருந்துகொண்டும் இருக்கிறது. ஆனால் இன்றைக்குத் தமிழகத்திலே



இருந்து சென்றிருக்கின்ற 30 பாராளுமன்ற உறுப்பினர்களை நம்பித்தான் புதிய அரசாங்கம் இருக்கிறது. ஆனால், புதிய அரசாங்கம் தன்னுடைய Common Minimum Programme-லே தேசிய நதிநீர்க் கொள்கை வகுக்கப்பட வேண்டுமென்று மட்டுமே கூறியிருக்கிறது. இது கர்நாடக அரசாங்கத்தினுடைய குரல் அல்லவா? கர்நாடகம் என்ன சொல்லிக் கொண்டிருந்ததோ, அதைத்தான் இன்றைக்கு மத்தியிலே வந்திருக்கின்ற அரசாங்கம் தன்னுடைய கொள்கையாக அறிவித்திருக்கிறது. நான் கேட்கிறேன், தமிழகத்திலிருந்து சென்றிருக்கின்ற 30 பாராளுமன்ற உறுப்பினர்களும் இதனை ஏற்றுக்கொள்கிறார்களா? தேசிய நதிநீர்க் கொள்கையை வகுத்து அதில் முடிவு செய்து அதன் பிறகுதான் காவிரி நீர் தமிழகத்திற்கு வருமென்றால் அது எத்தனை மாமாங்கமாகும்; எண்ணிப் பார்க்க வேண்டும். எனவே, இந்த நேரத்திலே தமிழ் மக்களுக்கு இந்தப் பேரவையின் மூலமாக நான் தெரிவித்துக்கொள்ள விரும்புவது, தேசிய நதிநீர்க் கொள்கை வகுக்கப்படும் என்று புதிய அரசாங்கம் சொல்லியிருப்பது, காவிரி நீர்ப் பிரச்சினையிலே மீண்டும் ஒருமுறை நம்முடைய முதுகிலே அவர்கள் குத்தியிருக்கிறார்கள் என்பதுதான். அதற்கு நம்மவர்களே துணை போயிருக்கிறார்கள் என்பதனை மட்டும் நான் கூறி, ஆளுநர் உரையின் மீதான விவாதத்தில் பங்குபெறுவதற்கு அனுமதி அளித்தமைக்காக, என்னுடைய கருத்துக்களை நான் சொல்வதற்கு அவகாசம் அளித்தமைக்காகப் பேரவைத் துணைத் தலைவருக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

பிற்பகல் 12-05

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. சுந்தர்.

**திரு. கே. சுந்தர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த உங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நேர்மையும் பொறுப்பும் மிக்க நிர்வாகத்தை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் உறுதியுடன் செயல்படுத்துகின்ற காரணத்தாலேதான் நடந்து முடிந்த குன்னூர், அருப்புக்கோட்டை ஆகிய சட்டமன்றப் பேரவைத் தொகுதிகளுக்கான இடைத்தேர்தலிலே வாக்காளர்கள் ஒரு

நல்ல தீர்ப்பை அளித்திருக்கின்றார்கள். ஆனால், பகட்டான திட்டம், பல நூறு கோடி ரூபாய்க்குத் திட்டம், அதிலே 10 பர்சன்ட் கமிஷன் என்றெல்லாம் ஆட்சி நடத்தியவர்கள், இன்றைக்கு அவர்களுக்கு மக்கள் அளித்த ஆதரவு என்று நாடாளுமன்றத் தேர்தல் முடிவைச் சுட்டிக் காட்டி இந்த ஆட்சியைக் கலைக்க வேண்டும் என்றெல்லாம் பேசி வருகின்றார்கள். ஆனால், இங்கே ஆளுநர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல நாடாளுமன்றத் தேர்தலைப் பொறுத்தவரையிலே, அது 1977 ஆக இருந்தாலும் சரி, 1980 ஆக இருந்தாலும் சரி, 1989-லே நடைபெற்ற தேர்தலாக இருந்தாலும் சரி, இப்போது 1998-லே நடைபெற்ற தேர்தலாக இருந்தாலும் சரி, நாடாளுமன்றத்திற்கு என்று தனியாகத் தேர்தல் நடைபெறுகின்றபோதும் மக்கள் தங்கள் தீர்ப்பை மாற்றியமைத்திருக்கின்ற ஒரு காட்சியைத்தான் காண்கின்றோம். அதிலேயும்கூட 1977-லே ஜனதா அரசாங்கம், 1989-லே தேசிய முன்னணி, 1996-லே ஐக்கிய முன்னணி என்று அரசுகள் அமைந்த போதிலும் அவை அந்த ஐந்தாண்டு காலம் ஆட்சி நடத்த முடியாத ஒரு சூழ்நிலையிலே, தமிழகத்திலே மக்கள் அந்தவொரு முடிவை, ஒரு நிலையான மத்திய அரசை அமைக்க வேண்டும் என்ற வகையிலேதான் அந்த முடிவை நாடாளுமன்றத் தேர்தலிலே எடுத்து அமல்படுத்தியிருக்கின்றார்கள். ஆக, மக்களாட்சியில் அருமையான திட்டங்களை அறிமுகப்படுத்தியிருக்கின்ற நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குத்தான் நம்முடைய தமிழ்நாட்டு மக்கள் உறுதுணையாக இருக்கிறார்கள் என்பதை, சட்டமன்றத் தேர்தலுக்கான முடிவுகள் நமக்கு வெளிப்படுத்தியிருக்கின்றன. அந்த வகையிலே, இன்றைக்கு இரண்டாவது பசுமைப் புரட்சியை உருவாக்குகின்ற வகையிலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்த ஏரிகள் தூர் வாரும் பணி சிறப்பான முறையிலே அமைந்துள்ளது. ஏறத்தாழ இன்றைக்கு 200-க்கும் மேற்பட்ட ஏரிகள் தமிழகமெங்கும் தூர் வாரப்பட்டிருக்கின்றன. இன்னும் அந்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இதைப்போலவே பருவமழை. கடந்த இரண்டு ஆண்டு காலம் நல்ல முறையிலே மழை பெய்து இங்கே ஏரிகள் எல்லாம் நிரம்பியிருக்கின்ற காரணத்தாலேதான் இன்றைக்கு நல்ல விளைச்சல் தமிழகம் எங்கும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் மிகுந்த அளவிலே நெல் விளைச்சல் ஏற்பட்டிருக்கின்றது. அதைப்போலவே, காஞ்சிபுரம் மாவட்டமும் அதற்கிணையாக அதிகமாக



விளைச்சலை இன்றைக்கு ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. விவசாயிகள் அதிக அளவு உற்பத்தி செய்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, அங்கே நிறைந்த அளவிலே விவசாயிகள் உற்பத்தியை ஏற்படுத்தியிருக்கின்ற காரணத்தினாலே நெல்லை அவர்கள் குறிப்பிட்ட விலைக்கு—அதாவது அவர்களுக்குத் தேவையான அளவிற்கு விற்க முடியாத ஒரு சூழ்நிலை இன்றைக்கு ஏற்பட்டுள்ளது. கடந்த ஆண்டும் இதே நிலைமைதான் இருந்தது. அந்த நேரத்திலே மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்றபோது உடனடியாக நேரடிக் கொள்முதல் நிலையம், அதாவது இங்கே குறிப்பிட்டதைப் போல ஏறத்தாழ 926 நேரடிக் கொள்முதல் நிலையங்களை தமிழகமெங்கும் தொடங்கியிருக்கிறார்கள். ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தைத் தவிர்த்து, நீண்ட இடைவெளிக்குப் பிறகு காஞ்சிபுரம் மாவட்டத்திலே எட்டு இடங்களிலே நேரடிக் கொள்முதல் நிலையங்களை கடந்த ஆண்டு திறந்திருக்கிறார்கள். அதன்மூலம், விவசாயிகள் பயன்பெறக்கூடிய ஒரு சூழ்நிலை இருந்தது. இந்த ஆண்டும் நிறைந்த அளவிலே உற்பத்தி இருக்கின்ற காரணத்தாலே காஞ்சிபுரம் மாவட்டத்திலே 20 நேரடிக் கொள்முதல் நிலையங்களைத் திறக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதிலும் குறிப்பாக தாலுக்காவிற்கு குறைந்தது இரண்டு இடங்களிலாவது அந்த நேரடிக் கொள்முதல் நிலையங்களைத் திறக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். உத்திரமேரூர், சாலவாக்கம், வாலாஜாபாத், காஞ்சிபுரம் ஆகிய ஊர்களில் திறக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலேயும் வழங்க முடியாத அளவிற்கு ஊக்கத் தொகை 35 ரூபாய் ஒரு குவிண்டாலுக்கு வழங்குகிற அரசு நம்முடைய அரசுதான் என்று சொன்னாலும்கூட, குவிண்டாலுக்கு குறைந்தபட்சமாக 500 ரூபாயாக நிர்ணயம் செய்தால் இன்னும் நன்றாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-10

தொழில் புரட்சியைப் பொறுத்தவரையிலே கடந்த 1989, 1990-லே 25 மாண்புமிகு முதல்வர் அவர்கள் 24 மாதங்களிலே தொழிற்சாலைகளைத் தொடங்கி 109 வட்டங்களைத் தொழிலிலே பின்தங்கிய பகுதிகளாக அறிவித்து தொழில் புரட்சியை அந்த நேரத்திலேயே ஏற்படுத்துவதற்கு வித்திட்டார்கள். அந்த வகையிலே இந்த 22 மாத காலத்தில் ஏறத்தாழ 15,576 கோடி அளவிலான

தொழில் முதலீடுகள் நம்முடைய தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு இன்றைக்குப் பல்வேறுவிதமான வேலைவாய்ப்புகள் ஏற்பட்டிருக்கிற ஒரு சூழ்நிலையைக் காண்கிறோம். அதிலும் ஆங்காங்கே ஏற்படவிருக்கின்ற தொழிற்சாலைகளில் அந்தப் பகுதியின் மண்ணின் மைந்தர்களாக இருக்கின்றவர்களுக்குக் கூடுதலாக வேலை கிடைக்கின்ற வகையிலே செய்தால் மிகவும் நன்றாக இருக்கும். குறிப்பாக, இதுபோன்ற தொழிற்சாலைகளை அமைப்பதற்கான நிலங்களை எடுக்கின்றபோது அங்கிருக்கின்ற அந்தப் பகுதி விவசாயப் பெருமக்கள் பாதிக்கப்படாத அளவுக்கு ஒரு விலையை நிர்ணயம் செய்திட நம்முடைய அரசு முன்வரவேண்டும். குறிப்பாக, ஸ்ரீபெரும்புதூர் பகுதியில் இருக்கின்ற விவசாயப் பெருமக்களெல்லாம், இன்றைக்கு அங்கே தொழிற் பூங்கா அமைத்திருப்பதன் காரணமாக நல்ல விலை கிடைக்காமல் வருத்தப்படுகின்ற ஒரு சூழ்நிலை இருக்கின்றது. அதை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் கனிவோடு கவனித்து விவசாயப் பெருமக்கள் பாதிக்கப்படாத வகையிலே நிலத்திற்கான விலையை வழங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சாலை மேம்பாட்டுப் பணிகளைப் பொறுத்தவரையில், காலையில்கூட நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, இதுவரை சுதந்திரம் அடைந்த இந்த 50 ஆண்டு காலத்திலே தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் 150 பாலங்கள்தான் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு இந்த இரண்டாண்டு காலத்திலே, நீண்ட நெடுங்காலமாக மக்களுடைய கோரிக்கையாக இருக்கின்ற அந்தப் பாலங்களை, அது உயர்மட்டப் பாலமாக இருந்தாலும், தரைப் பாலமாக இருந்தாலும், அவையெல்லாம் உடனடியாக அமைக்கப்படவேண்டும். குறிப்பாக 'நபார்டு', 'ஹட்கோ' மூலமும் அந்தப் பணிகளை எடுத்து முடிக்கவேண்டுமென்ற வகையிலே இந்த ஆண்டு 106 பாலங்கள் எடுக்கப்பட்டு அதற்கான திட்டங்களெல்லாம் உடனடியாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. உண்மையிலேயே இந்த அரசினுடைய மிகச் சிறந்ததொரு திட்டம், அகில இந்திய அளவிலே இதுவரை எந்த மாநிலத்திலும் குறிப்பிட்ட இரண்டாண்டு காலத்திலே 106 பாலங்களை அமைத்திருக்க முடியாது. எனவே, அந்த வகையிலே நம்முடைய அரசுக்கு ஒரு பெருமை உண்டு, 107 ஆவது பாலமாக நம்முடைய உத்திரமேரூர் சட்டமன்றத் தொகுதியில் திருமுக்கூடல் - பழைய சீவரம் கிராமங்களுக்கு இடையிலே



பாலாற்றின் குறுக்கே ஒரு பாலம் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற ஐந்து மாத காலத்திலே உள்ளாட்சிமன்றத் தேர்தலை அறிவித்து, 'சொன்னதைச் செய்வோம்' என்ற வகையிலே. உள்ளாட்சி மன்றத் தேர்தல் இன்றைக்கு நடைபெற்று வளர்ச்சிப் பணிகளெல்லாம் ஆங்காங்கே கிராமங்களில் செயல்படுகின்ற வகையிலே அந்தத் தேர்தல்கள் நடைபெற்று முடிந்திருக்கின்றன. இந்த ஒன்றரை ஆண்டு காலத்திலே வளர்ச்சிப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதற்கு முன்பு ஆட்சியிலே இருந்தவர்கள், ஐந்தாண்டு காலம் அவர்கள் மிருக பலத்தோடு கூடிய மெஜாரிட்டியை வைத்துக் கொண்டு. ஆட்சி நடத்தியபோதுகூட உள்ளாட்சிமன்றத் தேர்தலை நடத்தவில்லை. கூட்டுறவுச் சங்கத் தேர்தலை நடத்தவில்லை. மக்களுடைய பிரதிநிதிகளை அவர்கள் நியமிக்கவில்லை. ஆனால், மக்களுடைய பிரதிநிதிகள் வந்த காரணத்தால்தான், கிராமங்களில் நம்முடைய அரசு போடுகின்ற திட்டங்கள் சேருகின்ற வகையில் இருக்கின்றது. (மணியடிக்கப்பெற்றது) அதே நேரத்திலே ஒரு சிறு குறை, இந்த அரசு போடுகின்ற திட்டங்களைக் கொண்டு செல்கின்ற வகையில் ஒரு படிக்கட்டாக அமைச்சர்களும், உறுப்பினர்களும் இருக்கவேண்டுமென்று சொல்லி, செயல்பட்டுக் கொண்டிருக்கும்போது, பல ஊராட்சி மன்றங்கள் என்று சொல்ல முடியாது, பாதி ஊராட்சி மன்றங்கள் அரசினுடைய திட்டங்களையெல்லாம் குலைக்கின்ற வகையில் செயல்படுகின்றன. ஊராட்சி மன்றத் தலைவர்களெல்லாம் ஐ.ஆர்.டி.பி. கடனுதவி, தொகுப்பு வீடுகள் (Group Housing) பயனாளிகளைத் தேர்வு செய்வதில் அவர்கள் விருப்பத்திற்குத் தவறுகளை செய்கின்ற காரணத்தாலே, உண்மையான, வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கின்றவர்களைத் தேர்ந்தெடுக்க முடியாத சூழ்நிலை இருக்கின்றது. எனவே, இந்த நிலைமைகளைச் சற்று மாற்றி, ஊராட்சி மன்றங்களில் பயனாளிகளைத் தேர்ந்தெடுப்பதில், ஊராட்சி மன்றம் கிராமச் சபாவைக் கூட்டி அந்தப் பயனாளிகளைத் தேர்ந்தெடுக்கின்ற முறை இப்பொழுது இருக்கிறது. அதை மாற்றி ஊராட்சி மன்றத் தலைவர்கள் கிராமச் சபாவைக் கூட்ட வேண்டும். பயனாளிகளைத் தேர்வு செய்வதற்கு, ஒரு Task Force Committee போட வேண்டும். (மணியடிக்கப்பெற்றது) Task Force Committee போட்டு தொகுப்பு வீடுகளுக்கான பயனாளிகளையும் ஐ.ஆர்.டி.பி. கடனுதவி பெறக்கூடிய

பயனாளிகளையும் தேர்ந்தெடுக்க வேண்டும். இந்த Task Force Committee, இருந்தால்தான் அரசு போடுகின்ற திட்டங்கள் வறியவர்களுக்கு, உண்மையாகப் பாதிக்கப்பட்டவர்களுக்குப் போய்ச் சேருவதற்கு ஏதுவாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போலவே, கூட்டுக் குடிநீர்த் திட்டம்; கடந்த ஆண்டு 400 கோடி ரூபாய்க்கும் மேலாக குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்பட்டு பல கிராமங்களில் குடிநீர்ப் பஞ்சம் தீர்க்கப்பட்டிருக்கிறது. அந்த வகையிலே இந்த அரசு சிறப்பாகச் செயல்பட்டிருக்கிறது.

15% இட ஒதுக்கீட்டைப் பொறுத்தளவில் அகில இந்திய அளவில் கிராமங்களில் இருக்கின்ற மாணவர்களெல்லாம், தொழில் கல்வியைப் பெறுவதற்கு ஏதுவான முறையில் மிகச் சிறந்ததொரு திட்டத்தை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்து அதன்மூலமாக பல மாணவர்கள் இன்றைக்குப் பலன் அடைந்திருக்கின்ற காட்சியை நாம் காண்கிறோம்.

*பிற்பகல் 12-15*

தொழிற் கல்லூரிகளில் இட ஒதுக்கீடு என்பது மிகுந்த மகிழ்ச்சியைத் தருகின்றது. இதிலே பேரூராட்சியைச் சேர்ந்த பள்ளிகள் விடுபட்டுள்ளன. பேரூராட்சியைச் சேர்ந்த அந்தப் பள்ளிகளையும் இதில் சேர்க்க வேண்டும். 10 கிராமங்கள் சேர்ந்து பேரூராட்சி என்ற காரணத்தினாலே நகர்ப்புறப் பள்ளி என்ற அளவில் அவை விடுபட்டிருக்கின்றன. குறிப்பாக உத்திரமேரூர், வாலாஜாபாத் போன்ற இடங்களிலுள்ள பேரூராட்சிப் பள்ளிகளையும் இதில் சேர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

***திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே மாநில அரசால் முன் வைக்கப்பட்டிருக்கின்ற, முறைப்படி மாநில ஆளுநரால் * அளிக்கப்பட்டிருக்கின்ற உரையின்மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக ஒருசில கருத்துக்களை முன்வைக்க விரும்புகிறேன். இதுவரையில் நடைபெற்ற சட்டமன்றக்

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.



கூட்டத் தொடர்களைக் காட்டிலும், இந்தத் தொடர் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது. இன்றைக்கு சமூக வாழ்வில் எழுந்திருக்கின்ற பல்வேறு சிக்கலான, நெருக்கடி நிறைந்த பிரச்சினைகளுக்கு...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஆளுநர் அளித்திருக்கிற உரை என்று வைத்துக்கொள்ளலாம். ** உரை என்று வேண்டாம்.

**திரு. கே. சுப்பராயன்:** நன்றி. ஆளுநர் அளித்திருக்கின்ற இந்த உரையின் மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் என்னுடைய கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். சிக்கலும், நெருக்கடியும் நிறைந்த இன்றைய சமூகச் சூழலை நாம் எப்படி எதிர்கொள்வது என்பது மிக முக்கியமான ஒரு பிரச்சினையாகும்.

ஆளுநர் உரையிலேயே சொல்லப்பட்டிருக்கிறபடி தமிழ்நாட்டில் பொருளாதார முன்னேற்றமும், வளர்ச்சியும் ஏற்பட வேண்டுமானால் சமூக நல்லிணக்கம் என்பது தவிர்க்க முடியாத ஒரு முன் நிபந்தனையாகும். அந்தத் தவிர்க்க முடியாத முன் நிபந்தனை இன்றைக்குக் கடுமையான நெருக்கடிக்கு உள்ளாகி இருப்பதைத்தான் தமிழ்நாட்டு அனுபவம் நமக்கு உணர்த்துகிறது. இரண்டு ஆண்டு காலத்திற்கு முன்னர் தேர்வு செய்யப்பட்ட இந்த அரசு கடந்த 5 ஆண்டுகாலமாக நிலைகுலைக்கப்பட்டுக் கிடந்த மாநில அரசை பல்வேறு மட்டங்களில் ஒழுங்கமைத்து, நிலைப்படுத்தி, இந்த மாநிலத்தினுடைய பொருளாதார, சமூக வளர்ச்சிக்கான நடவடிக்கைகளை மேற்கொள்கிறபோது, இவற்றை நிலைகுலைப்பதற்காக இந்தப் பிரச்சினை எழுந்திருக்கிறது. இந்தப் பிரச்சினை ஏதோ இரண்டு சாதிகளுக்கிடையே ஏற்பட்டிருக்கிற பிரச்சினை அல்லது இரண்டு மதங்களுக்கிடையே ஏற்பட்டிருக்கிற பிரச்சினை என்று மட்டுமே சுருக்கிப் பார்க்க முடியாது. இந்தப் பிரச்சினைக்கு ஆழமான அரசியல் நோக்கம் இருக்கிறது என்றுதான் நான் பார்க்கிறேன். தமிழ்நாட்டில் இதுவரையிலும் இல்லாத அளவிற்குத் திட்டமிட்டே சாதிக் கலவரங்கள், மதக் கலவரங்கள் தோற்றுவிக்கப்படுகின்றன. தோன்றியுள்ள அதை ஒரு சட்டம்-ஒழுங்கு பிரச்சினையாகக் காட்டி திரும்பத் திரும்ப, திரும்பத் திரும்ப, இந்த மாநில அரசை டிஸ்மிஸ் செய்ய வேண்டுமென்று கோரிக்கை முன்வைக்கப்படுகிறது. இந்தக்

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

கோரிக்கையை முன் வைப்பதற்குரிய சில அடிப்படைகள் தங்களுக்குத் தேவையென்று கருதுகிற சில அரசியல் சக்திகளின் கை இதற்குப் பின்னால் இருக்கிறதோ என்பதைப் புலனாய்வுத் துறை ஊடுருவிக் கண்டறிய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதிலும் குறிப்பாக கடந்த 5 ஆண்டுகாலம் ஆண்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்குப் பொறுப்பேற்றுள்ள முன்னாள் முதலமைச்சரின் நடவடிக்கைகள், ஒரு பொறுப்புள்ள அரசியல் கட்சியின் பிரதிநிதி என்கிற முறையில் என்னை வேதனைக்கு ஆட்படுத்துகின்றன. நான் வேதனைப்படுவதைப் போல தமிழகத்தில் தேசப்பற்றுள்ள பலரும் வேதனைப்படுகிறார்கள். நான் இந்தப் பேரவையின் வாயிலாக முன்னாள் முதல்வரைக் கேட்க விரும்புகிறேன். இந்தத் தமிழ்நாட்டில் குண்டு வெடிப்புகள் இல்லாமல், வகுப்பு மோதல்கள் இல்லாமல் சமூக நல்லிணக்கத்தோடு மக்கள் வாழ வேண்டுமென்று ஜெயலலிதா அவர்கள் அந்தரங்கசுத்தியோடு விரும்புவார்களேயானால், உண்மையிலே தமிழ்நாடு இத்தகைய நெருக்கடி நிலையில் இருக்கக் கூடாது; இது முடிவுக்கு வர வேண்டுமென்பது அவர்களது அந்தரங்க நோக்கமாக இருக்குமானால், மாநில முதலமைச்சரோடு தொடர்பு கொண்டு, இதுகுறித்து அவர்களுக்கு இருக்கிற ஆக்கபூர்வமான கருத்துக்களை, ஆலோசனைகளை மாநில அரசுக்கு முன்வைக்க வருவாரா என்று நான் கேட்க விரும்புகிறேன். உண்மையிலேயே அவர் அப்படிப்பட்ட கருத்தோட்டத்தில் இருந்தால் மாநில முதலமைச்சரோடு தொடர்பு கொண்டிருக்க வேண்டும். ஒரு முன்னாள் முதலமைச்சர், மாநிலத்தில் சமூக இணக்கத்தை உத்தரவாதப்படுத்துவதற்குரிய என்னுடைய proposal இதுதான் என்று முன்வைத்திருக்க வேண்டும். அப்படி முன்வைக்காத காரணத்தால்தான் நான் சொல்கிறேன். இப்பொழுதும் அவர் முன்வைக்க மாட்டார்; முன்வைப்பதற்கு அவர் தயாராக இல்லை. ஏனென்றால் தனது அரசியல் இலாபத்துக்காக இத்தகைய நிலை தமிழகத்தில் தொடர்ந்து நீடிக்க வேண்டுமென்று அவர் விரும்புகிறார். ஏன் இதை நான் குறிப்பிட விரும்புகிறேன் என்றால், குறிப்பாக....

பிற்பகல் 12-20

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஒரு வார்த்தை கூற விரும்புகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சுந்தரம், அடுத்து பேசுவதற்கு உங்களுக்கு வாய்ப்பு இருக்கிறது. அப்பொழுது பதில் சொல்லிக் கொள்ளலாம், உட்காருங்கள்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வெற்று ஆரவாரங்களிலேயே மூழ்கியிருக்கிறார்களே தவிர, அடிப்படையில் தமிழ்நாட்டில் அமைதி நிலவ வேண்டுமென்பதில் அவர்களுக்கு அக்கறை இல்லை. நான் இப்பொழுது சுந்தரம் அவர்கள் பேசுவதையும் வரவேற்கிறேன். அவர் நேரடியாகப் பதில் சொல்லட்டும். குண்டு வெடிப்பற்ற தமிழகத்தை உருவாக்குவதற்கு, இந்த மாநிலத்தில் சமூக நல்லிணக்கம் ஏற்பட முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா ஆக்கபூர்வமான ஆலோசனைகளை முன்வைக்கத் தயாரா என்று கேட்க விரும்புகிறேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த குண்டு வெடிப்புச் சம்பவத்தைப் பொறுத்தவரையில், தமிழக அரசு எங்களால் ஒன்றுமே செய்ய முடியவில்லை; நீங்கள் உதவுங்கள் என்று எதிர்க்கட்சிக்காரர்களை என்றைக்காவது, ஒரு நாளாவது கூப்பிட்டு அழைத்திருக்கிறதா? எதிர்க்கட்சிகளை அழைக்காமல் ஆக்கபூர்வமான யோசனைகளை ஏன் நாங்கள் சொல்லவேண்டும்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான், முன்னாள் முதலமைச்சர் மட்டும்தான் பொறுப்பற்ற அரசியல் நடத்துகிறார் என்று கருதினேன். அவரை வழிபடுகிறவர்கள், அவர் வழி நடக்கின்றவர்களும் அப்படித்தான் பொறுப்பற்ற நிலையிலே இருக்கிறார்கள் என்பதை அவரது பதில் தெளிவாகக் காட்டுகின்றது. எனவே, நான் அந்த விவரங்களுக்குள்ளே போக விரும்பவில்லை. இப்பொழுது நான் எடுத்துக் கொண்ட விஷயத்துக்குள் வர விரும்புவது, இந்தப் பிரச்சினைகள் எப்போது, ஏன் தோன்றின?...

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் பொறுப்பற்ற முறையிலே செயல்படுவதாகக் கூறுவதற்கு அவருக்கு உரிமை கிடையாது. நான் என்ன பொறுப்பற்ற முறையில் இயங்கினேன்?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சுந்தரம், தயவு செய்து உட்காருங்கள். அடுத்து நீங்கள் பேசும்போது இதைப் பற்றிப் பேசலாம்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொறுப்பற்றது என்பது unparliamentary word அல்ல. பொறுப்பற்ற நடவடிக்கை என்பது unparliamentary word அல்ல. அதைச் சொல்கின்ற உரிமையை அவரிடமிருந்து நான் பெறுவதற்கான அவசியம்'' இல்லை. எனவே, நான் இங்கே குறிப்பிட விரும்புவது, எப்போது இந்தப் பிரச்சினை தொடங்கிற்று?......

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்... அவர்களே, நான் பொறுப்பற்ற முறையில் பேசுகிறேன் என்று அவர் சொல்கிறார்....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்த உறுப்பினர் பேசும்போது இப்படி இடையூறு செய்யக்கூடாது. தயவுசெய்து உட்காருங்கள். உங்களுக்கு வாய்ப்பு வரும்போது சொல்லுங்கள்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குண்டு வெடிப்பாகட்டும்; ஜாதிக் கலவரமாகட்டும். இது எப்போது தமிழ்நாட்டில் தொடங்கிற்று என்று பார்த்தால், குறிப்பாக 1982-இல்...

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொறுப்பற்ற முறை என்ற வார்த்தையை நீக்கிவிடுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் பொறுப்பற்ற முறையில் நடந்துகொள்கிறேன் என்று அவர் எப்படிச் சொல்லலாம்?

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் விளக்குகிறேன். ஒரு அரசியல்வாதி என்கிற முறையிலேயும்....

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திரு. சுப்பராயன் அவர்கள்தான் பொறுப்பற்ற முறையில் இந்த அவையிலே பேசிக் கொண்டிருக்கிறார்கள். அதை நான் ஆணித்தரமாகக் கூறுகிறேன்.



**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அப்படி சொல்வதற்கு அவருக்கு உரிமையுண்டு. அதுபற்றி நான் ஆட்சேபிக்கவேயில்லை. ஆனால், நான் கேட்க விரும்புவது, அரசியல்வாதி என்ற முறையில் அரசியல் பொறுப்பு முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா அவர்களுக்கு உண்டு. என்ன பொறுப்பு உண்டு என்றால், முன்னாள் முதலமைச்சர் என்ற முறையிலேயும், பொதுஜனப் பிரதிநிதி என்கின்ற முறையிலேயும் தமிழகத்தில் ஏற்பட்டு வருகின்ற கொந்தளிப்பைத் தீர்க்கின்ற, ஆலோசனைகளைச் சொல்கின்ற அரசியல் பொறுப்பு அவருக்கு உண்டு. அவருடைய கடமையை, பொறுப்பை அவர் நிறைவேற்றவில்லை என்று சொல்வது எந்த வகையிலேயும் தவறு இல்லை. நிறைவேற்ற விரும்பினால் நான் அதை வரவேற்கிறேன். அப்படி நிறைவேற்றுகிறாரா; நிறைவேற்ற விரும்புகிறாரா என்பதைத்தான் நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, இந்தப் பிரச்சினை எப்பொழுது வருகிறது என்று சொன்னால், மதப் பிரச்சினைகள் என்று சொல்கின்றபோது, இது ஏதோ இன்றைக்குக் கால்கொண்டது அல்ல. 1982 ஆம் ஆண்டு மண்டைக்காட்டிலே பிரச்சினை தொடங்கியது; அதையொட்டி அப்போது வேணுகோபால் கமிஷன் போடப்பட்டது. அந்தக் கமிஷனுடைய அறிக்கையை மறுபடியும்கூட, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்குவது பொருத்தம் என்று நான் கருதுகிறேன், அதில் பல்வேறு அரிய ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டிருக்கின்றன. ஜாதிக் கலவரங்களுக்கான காரண வேர்கள் பற்றியெல்லாம் அதில் விரிவாக ஆராயப்பட்டிருக்கிறது. அந்த விஷயங்களிலெல்லாம்கூட பல ஆலோசனைகளை முன்வைத்திருக்கிறார்கள். அன்றைக்கு என்ன நடந்தது? கிறிஸ்துவ, இந்து மத மோதலாக அது மாற்றப்பட்டது. அந்த மோதல் மிகப்பெரிய அளவிற்கு வடிவெடுத்து, பல்வேறு சிக்கல்களைத் தோற்றுவித்தன. அதையொட்டியே பல தகராறுகள் வந்தன.

அதுமட்டுமல்ல, நான் இப்பொழுதும் குறிப்பிட விரும்புகிறேன்; இஸ்லாமிய தீவிரவாதம் தமிழகத்தில் மிகக் கடுமையான தாக்குதலை நடத்திக்கொண்டிருக்கிற இந்த நிலையில், இந்தப் பிரச்சினை எல்லா வழிமுறைகளிலேயும் கண்டனம் செய்யப்பட வேண்டிய ஒன்று. மன்னிக்க முடியாத ஒன்று. மனித இருதயம் உள்ளவர்களால் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற ஒரு விஷயம் அல்ல. ஆனாலும், இன்னொரு விஷயத்தையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். குறிப்பாக,

இந்தப் பிரச்சினை எப்போது தொடங்கிற்று? 1992 ஆம் ஆண்டுக்குப் பின்னர்தான், நான் அறிந்தவரை, நாம் அறிந்தவரை இந்து முஸ்லிம் பேதமும், குரோத விரோத உணர்ச்சிகளும் தோற்றுவிக்கப்பட்டன. இதற்கும் ஒரு அரசியல் பின்னணி இருக்கிறது. 1992-இல் 470 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்ட மசூதி தரைமட்டம் ஆக்கப்பட்டது. இது முறைதானா? இந்த முறை இந்து மரபா? இந்திய மரபா? இரண்டும் இல்லை.

பிற்பகல் 12-25

நான் சொன்னால்கூட வருத்தப்பட்டுக் கொள்வார்கள். நான் சொல்லவில்லை; இந்து சாஸ்திரங்களைப் பற்றி முழுமையாக உணர்ந்த மேதைகள் குறிப்பிட்டிருக்கிறார்கள். காவி உடைக்குள் வாழ்ந்த விவேகானந்தர் குறிப்பிடுகிறார். இன்றைக்கு ஆட்சிப் பொறுப்பில், பாரதீய ஜனதா பொறுப்பேற்றிருக்கிற நிலையில், இந்து முஸ்லிம் கலவரத்தைத் தோற்றுவிக்க விரும்புகிறவர்களுக்கு நான் குறிப்பிட விரும்புவது—அவருடைய மேற்கோளைத்தான்—விவேகானந்தர் குறிப்பிடுகிறார்: "நீ கடவுளை வழிபடுவதற்கு என்று ஒரு கோயிலைக் கட்டலாம்; ஆனால் அதைவிட மேன்மை நிறைந்ததும், சிறந்ததுமான கோயில், உயிரோடுள்ள மனிதன்தான்". இதை விவேகானந்தர் குறிப்பிடுகிறார். உயிரோடு உள்ள மனிதனைக் கொன்றுவிட்டு, உயிரற்ற கற்கோயிலைக் கட்டுவது என்பது, எந்த வகையில் நியாயம்? ஒரு கோயிலைக் கட்ட வேண்டும் என்பதற்காக, நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான மனிதர்களைக் கொல்வது இந்து தர்மமா? இந்து மரபிலும் இது இல்லை; இந்திய மரபிலும் இது இல்லை என்பதுதான் நான் இங்கே குறிப்பிட விரும்புவது. நான் மட்டும் இதைச் சொல்லவில்லை. இதே இந்திய மண்ணில், அயோத்தியில் இராமருக்குக் கோயில் கட்ட வேண்டுமென்று, ஊரெல்லாம் இருந்து செங்கற்கள் கொண்டு சென்றார்கள். செங்கற்கள் கொண்டு செல்வது, அயோத்தியிலே செங்கற்கள் கிடைக்கவில்லை என்பதற்காக அல்ல. ஊரெங்கும் இருந்து செங்கல் கொண்டு செல்வதன்மூலம் அயோத்தியில் மையம்கொண்டு இருக்கிற இந்து முஸ்லிம் கலவரத்தை இந்திய நாடு முழுவதும் விஸ்தரிக்க வேண்டும், அதன்மூலம் அரசியல் ஆதாயம் பெறவேண்டும் என்ற உள்நோக்கத்தோடு செங்கற்கள் கொண்டு செல்லப்பட்டு, பல இடங்களில் கலவரங்கள் தோற்றுவிக்கப்பட்டன. இதிலே நான்



இப்போது பேரவையின் வாயிலாக தமிழ்நாட்டு மக்களுக்கும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். பக்தனை ஒரு போதும் தெய்வம் கைவிடாது என்பதை இந்து மத மரபு சொல்கிறது; சாஸ்திரங்களும் சொல்கின்றன. நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்; இராமருக்குக் கோயில் கட்ட விரும்பிய பி.ஜே.பி., பாபர் மசூதியை இடித்து, தரைமட்டமாக ஆக்கிவிட்டு, அங்கே இராமருக்குக் கோயில் கட்டுவது என்ற மிகப் பெரிய பிரச்சினையை இந்திய நாடு முழுவதும் செய்தது. அந்த பி.ஜே.பி., அயோத்தியை உள்ளடக்கிய ஃபைசலாபாத் நாடாளுமன்றத் தொகுதியில் தோற்று விட்டது. இராமரே தோற்கடித்து விட்டான் போலும். என்ன துரதிருஷ்டம் பாருங்கள்; உண்மையிலேயே ஃபைசலாபாத்...... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அயோத்தியில் இராமர் கோயில் கட்ட வேண்டுமென்ற பிரச்சினையைக் கிளப்பியது பாரதீய ஜனதா கட்சி அல்ல. அங்கு ஏற்கெனவே இருந்த அந்தக் கட்டடத்தை, அதாவது பழைய கட்டடத்தை மாற்றி, அங்கு ஒரு தேசியச் சின்னம் அமைக்க வேண்டுமென்ற சூழ்நிலை இருந்தது. அதை மற்ற இயக்கங்கள் முடிவு செய்தன. பாபர் மசூதி அங்கே வரவேண்டுமென்று முயற்சி செய்த அந்த இயக்கங்களுக்கு அரசியல் கட்சிகளின் பின்னணி வந்ததற்குப் பிறகுதான், பாரதீய ஜனதா கட்சி வந்தது. எனவே, அதற்கு அடிப்படை பாரதீய ஜனதா கட்சி அல்ல என்பதைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் சொன்னதற்கு மிகவும் நன்றி. பாரதீய ஜனதா கட்சி, இராமர் கோயில் கட்டுவதைப் பிரச்சினையாக்கவில்லை என்று அவருடைய தேசிய செயற் குழுவில் தீர்மானம் போட்டு, இந்திய நாடு முழுவதும் அறிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். உண்மையிலேயே, இராமரை முன்னிறுத்தி அவர்கள் ஆட்சிக்கு வந்தார்கள் என்று நான் திரும்பவும் சொல்கிறேன். இராமர் பிறந்த அந்த மண்ணில் கோயில் கட்ட விரும்பிய அவர்களின் நடவடிக்கை, இராமராலேயே ஏற்றுக் கொள்ளப்படாமல் நிராகரிக்கப்பட்டு விட்டது, அயோத்தியில். அயோத்தியில் சமாஜ்வாடி ஜனதா கட்சியினுடைய பிரதிநிதி திரு. மித்ரசென் யாதவ் வெற்றி பெற்றார். இராமர் கோயில் கட்டுவதற்காக தன் வாழ்நாளையே அர்ப்பணிப்பதாகச் சொன்ன

திரு. வினய் கத்யார் அங்கு தோற்கடிக்கப்பட்டிருக்கிறார். இதிலிருந்து என்ன தெரிகிறது என்றால், இந்து பக்தர்களுக்கு, இந்துக்களுக்கு, இராமர் குறிப்பால் உணர்த்திவிட்டார். நான் பிறந்த மண்ணில் நானே தோற்கடித்த பி.ஜே.பி.-யை இந்தியாவில் நீங்கள் தோற்கடிக்க வேண்டுமென்று இராமரே குறிப்பால் உணர்த்தி விட்டார். இனி இந்தியர்கள்தான் சிந்திக்கவேண்டும். இதுதான் நான் இந்த விஷயத்தில் இங்கே குறிப்பிட விரும்புவது.

அடுத்து, இன்னொரு விஷயத்தை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். விவேகானந்தருக்கு மேல் சந்நியாசி யாரும் இல்லை. விவேகானந்தர் சொல்கிறார். இதை மிகக் கவனமாக நாம் பரிசீலிக்க வேண்டும். "இந்தியாவில் ஏழை மக்களிடையே, முஸ்லிம்கள்தான் அதிக எண்ணிக்கையில் ஏழைகளாக இருக்கிறார்கள். கத்திமுனையில் அச்சுறுத்தப்பட்டு, அவர்கள் மதம் மாற்றப்பட்டார்கள் என்பது தவறாகும். ஜமீன்தார்களிடமிருந்தும், புரோகிதர்களிடமிருந்தும் விடுதலை பெற்று, சுதந்திரமாக வாழ்வதற்குத்தான் அவர்கள் மதம் மாறினார்கள்" என்று காவி உடையில் வாழ்ந்த ஞானி, அப்பழுக்கற்ற மேதை விவேகானந்தர் குறிப்பிட்டிருக்கிறாரே, அந்த ஏழை முஸ்லிம்கள் எல்லோரும் இன்றைக்குக் குற்றவாளிகளா? குற்றம் செய்தவர் யாராக இருந்தாலும் தண்டிக்கப்பட வேண்டும் என்பதற்கு மாற்றுக் கருத்து இல்லை. குண்டு வைத்தவனை வேட்டையாடலாம், தண்டிக்கலாம். ஆனால், நிரபராதிகளான ஏழை முஸ்லிம்கள் இன்றைக்கு வேட்டையாடப்பட வேண்டுமா? நிரபராதி முஸ்லிம்கள் வேட்டையாடப்படுவது நியாயம்தானா?

நான் இன்னொன்றைக் கேட்க விரும்புகிறேன். இதே கோயம்புத்தூர் மருத்துவமனைக்கு முன்னால் வகுப்பு மோதலில் அடிபட்ட நிலையில் மருத்துவச் சிகிச்சை பெற, உயிருக்குப் போராடிய நிலையில் வந்த இஸ்லாமிய இளைஞனை, உயிரோடு தீ வைத்துக் கொளுத்தினார்களே, அந்தப் படம் பல பத்திரிகைகளில் வெளிவந்ததே, அந்தப் படத்தைப் பார்த்த எத்தனை மனிதர்களின் ஆன்மா குமுறி எழுந்தது? எவ்வளவு பேர்கள் கிளர்ந்து எழுந்து, ஆவேசத்தோடு போராடினார்கள்? இந்த அமைதியின்மை நியாயம்தானா?

பிற்பகல் 12-30

நான் இப்போதும், எப்போதும் குறிப்பிட விரும்புவது குண்டு வைத்த முஸ்லிம்களைத் தண்டியுங்கள். டாக்டர் அப்துல் கலாம்



அவர்களுக்கு 'பாரத ரத்னா' விருது கொடுத்திருக்கிறோம் அல்லவா? அவரும் முஸ்லிம்தானே, குண்டு வைத்தவன் முஸ்லிம் என்பதாலேயே அவர் உட்பட முஸ்லிம்கள் எல்லோரையும் எதிரிகளாகக் கருத முடியுமா? முடியாது. ஆகவே 'பாரத ரத்னா' என்கிற மிக உயர்ந்த விருதைப் பெற்றிருக்கிற அந்த இஸ்லாமிய விஞ்ஞானியை நாம் இந்த நேரத்தில் மறந்துவிடக் கூடாது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அதேபோல பாரதிய ஜனதாவைச் சேர்ந்தவர்கள் இன்றைக்கு வாதத்திற்காகக் குறிப்பிடலாம். நம்முடைய அருமை நண்பர் திரு. சி. வேலாயுதன் போல அந்தக் கட்சியில் எல்லோரும் இல்லை. ஆனாலும் வேலாயுதன் அவர்கள் குறிப்பிடுவதற்கு நான் இன்னொன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். அங்கே அயோத்தியிலேதான் இராமர் பிறந்தார் என்கிற வாதத்தை நீங்கள் ஏற்றுக்கொண்டால், அது எங்களுடைய கோயிலாக இருந்தது, ஆனால் இப்போது இஸ்லாமியர்களுக்கு மாறிவிட்டது என்றெல்லாம் சொன்னார். நான் இன்றைக்குக் கேட்கிறேன். பூரி ஜெகந்நாதர் ஆலயம் பௌத்த கோயில்; பௌத்த கோயிலாக இருந்ததை இந்துக் கோயிலாக மாற்றிவிட்டார்கள் என்று நான் சொல்லவில்லை. விவேகானந்தர் சொல்கிறார். விவேகானந்தர் என்ன சொல்கிறார்? பௌத்த கோயிலாக இருந்த பூரி ஜெகந்நாதர் ஆலயத்தை இந்துக் கோயிலாக இந்துக்கள் மாற்றிக் கொண்டார்கள் என்று விவேகானந்தர் குறிப்பிட்ட வாதத்தை ஏற்று பௌத்தர்கள் பூரி ஜெகந்நாதர் ஆலயத்தை இப்போது இடிக்கப்போனால், விட்டுவிட்டால் விளங்குமா நாடு? விட்டுவிடலாமா? அப்படி விட்டுவிடுவது நியாயம்தானா என்பதை தயவுசெய்து நாட்டு மக்களின் சிந்தனைக்கே விட்டுவிடுகிறேன்.

அதைப்போல இன்னொரு விஷயத்தை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அதுவும் விவேகானந்தர் குறிப்பிட்டதுதான். "கடவுளை வணங்குவதற்கு வேறு ஒரு முறையைப் பின்பற்றுகிறார்கள் என்பதற்காகத் தனது சகோதரர்களை அழிக்க விரும்புகிறவர்கள் அன்பைப் பற்றிப் பேசுவது கேலிக்குரியதாகும்". யாராக இருந்தாலும், சகோதரர்களைக் கொல்லுவது, மதத்தின் பெயரால் கொன்று விடுவது, பின்பு அன்பைப் பற்றி உபதேசிப்பது சரியில்லை என்பதைப் பற்றி நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அதேபோல, இன்றைக்கு இரக்கமற்ற முறையில் இந்தக் கலகம் நாடு பூராவும் தொடங்கப்படுவதைத் தடுக்க வேண்டுமென்றால் உண்மையிலேயே நாம் செய்ய வேண்டியது ஒரே ஒரு விஷயம்தான். அரசியல் உள்நோக்கத்தோடு பிரச்சினைகளை அணுகாமல் சமூக நல்லிணக்கத்திற்குப் பொருத்தமான ஒட்டுமொத்தமான ஒரு பொதுக் கொள்கையை உருவாக்க வேண்டும்.

அதேபோல, தமிழகத்தில் தேர்தல் தீர்ப்பு 22 ஆம் தேதியோடு அல்ல, இன்றைய தேதியோடு முடிந்துவிடாது. காலண்டர் காகிதங்கள் தொடர்ந்து கிழிந்துகொண்டே இருக்கின்றன. அது ஒன்றும் அப்படியே நின்று விடுவதில்லை. காலச் சக்கரம் சுற்றிக்கொண்டுதான் இருக்கிறது. இந்தத் தேர்தல் தீர்ப்பிலேயே லயித்துப்போய் சிலர் அடுத்து ஏதோ ஒன்றை நினைத்துக் கொண்டு, ஏதோ ஒன்றை சொல்லிக் கொண்டிருப்பார்களேயானால் அவர்களுக்கும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புவது வெறும் ஆட்சி என்ற நிலையிலிருந்து அல்ல, ஆட்சி அரியணையில் இருந்து கொண்டிருப்பதனாலேயே எந்த நிகழ்ச்சியும் நடந்துவிடுவதில்லை. ஆனால் தமிழ்நாட்டில், சட்டமன்றத்தில் அங்கம் பெறுகிற கட்சியும் சரி, அங்கம் பெறாத கட்சிகளும் சரி, தமிழ்நாட்டின் நலனில் அக்கறை கொள்ள வேண்டுமா, இல்லையா? தமிழ்நாட்டின் நலனில் அக்கறை கொள்ள வேண்டுமானால் தமிழ்நாட்டில் சாதி, மதக் கலவரங்களை எந்த அரசியல் நோக்கத்தோடும் அணுகக்கூடாது என்ற பொதுவான நிலையை மேற்கொள்ள வேண்டும். அத்தகைய நிலையை மேற்கொண்டால்தான் ஒரு பொதுவான ஜனநாயகமான சூழ்நிலை உருவாகும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து, உள்ளாட்சித் துறைக்கு வருகிறேன். இரண்டொரு பிரச்சினைகளைச் சொல்லி முடித்துக்கொள்கிறேன். உள்ளாட்சித் துறை பற்றி விரிவாகச் சொல்ல வேண்டியிருந்தாலும் சுருக்கமாக நான் மாநில அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புவது உள்ளாட்சித் துறையின் மொத்த வரி வருவாயில் நாம் உள்ளாட்சிகளுக்கு ஒதுக்குவது என்பது 8 சதவீதம்தான். 8 சதவீதம்தான் நாம் ஒதுக்குகிறோம். மாநில அரசு மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற வேண்டுமென்கிற அக்கறையில் முழு ஈடுபாட்டோடு இருக்கிறது என்பதில் நான் எள்ளளவும் சந்தேகம் கொள்ளவில்லை. ஆனால், அந்த முழு ஈடுபாட்டை நிறைவேற்றுவதற்கு உரிய வழிமுறைகளை



உருவாக்க ஒத்துழைப்பது எங்கள் கடமை என்பதால் நான் குறிப்பிட விரும்புகிறேன். 8 சதவீதம்தான் ஒதுக்குவது என்பது பொருத்தமானதல்ல. வரி வருவாயில் மாநில நிதி ஆணையம் சொல்லியிருக்கிறபடி பார்த்தால் 2002-லேதான் 12 சதவீதம் வருகிறது. ஆனால் அதேநேரத்திலே கர்நாடகத்தில் 40 சதவீதம் கொடுக்கிறார்கள். கேரளாவில் 38 சதவீதம், மேற்கு வங்காளத்தில் 50 சதவீதம் கொடுக்கிறார்கள். எனவே, நான் மாநில முதலமைச்சர் அவர்களை இந்தப் பேரவையின் வாயிலாகக் கேட்டுக்கொள்ள விரும்புவது வருகிற பட்ஜெட்டிலாவது கொஞ்சம் அதிக நிதியை உள்ளாட்சித் துறைக்கு ஒதுக்கீடு செய்வதுதான் பொருத்தமாக இருக்கும். அதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொன்றையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். உள்ளாட்சித் துறையில் உள்ளாட்சித் துறை ஊழியர்கள் போடப்பட்டிருக்கிறார்கள். நான் மாநில முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புவது, எல்லா உள்ளாட்சிகளிலேயும் கிளார்க்குகள் போடப்பட்டிருக்கிறார்கள். அந்தக் கிளார்க் செய்கிற வேலையை, அந்த எழுத்தர் செய்கிற வேலையைப் பற்றி இப்போது நான் கொண்டுவரவில்லை. ஒரு பெரிய காகித கத்தையே இருக்கிறது. அவ்வளவு வேலைகளை 400 ரூபாய் சம்பளத்திலேயே செய்து கொண்டிருக்கிறார்கள். தயவுசெய்து மாநில முதலமைச்சர் அவர்கள் இந்த பட்ஜெட் கூட்டத் தொடரிலாவது உள்ளாட்சித் துறையில் பஞ்சாயத்துக்களில் வேலைசெய்கிற எழுத்தர்களை நிரந்தரம் ஆக்குவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதுதான் பொருத்தமாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-35

மேலும், ஒரே ஒரு விஷயத்தைச் சொல்லி முடித்துக்கொள்கிறேன். ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்காக 25 ஆயிரம் கோடி ரூபாய் செலவு செய்ய ஒப்புதல் செய்யப்பட்டிருப்பது உண்மையிலேயே இந்த மாநில அரசின் சாதனைகளில் மகுடம் வைத்ததுபோல் உள்ள ஒரு சாதனை என்றால் அது மிகையாகாது. எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மாநில வளர்ச்சிக்குச் செலவிட மத்திய திட்டக் குழு ஒப்புதல் அளித்தது 10,200 கோடி ரூபாய். ஆனால் இன்றைக்கு ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மாநிலம் செலவு செய்ய

மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ள தொகை 25 ஆயிரம் கோடி ரூபாய். அதாவது 245.10 சதவீதம் உயர்ந்து இருக்கிறது என்பது உண்மையிலேயே ஒரு நல்ல மகத்தான முன்னேற்றம்தான். அந்த முயற்சியைப் பற்றி நான் குறிப்பிட விரும்புவது. இவ்வளவு செலவிடுவதில் வெறும் 39.95 சதவீதம்தான் மத்திய அரசு மாநிலத்திற்கு நிதியுதவியாக அளிக்கப்போகிறது. மாநில அரசுக்கு மத்திய அரசு கொடுக்கப்போவது எவ்வளவு? 25 ஆயிரம் கோடி ரூபாய் என்பது பொதுத் தோற்றத்தில் பெரிய தொகைதான். ஆனால் அந்த 25 ஆயிரம் கோடி ரூபாயில் மத்திய அரசின் பங்களிப்பு என்பது 39.95 சதவீதம்தான். மீதம் உள்ள 60.05 சதவீதத்திற்கான நிதி ஆதாரங்களைக் கண்டறிய வேண்டிய பொறுப்பும், தேடிக்கொள்ள வேண்டிய பொறுப்பும் மாநில அரசுக்கே உரியதாகும். இதை எப்படித் தேடப்போகிறோம்? வரி விதித்துத் தேடப்போகிறோமா, சிக்கனம் செய்து தேடப்போகிறோமா, மக்களைச் சேமிக்க வைத்து நிதி நெருக்கடியைத் தீர்த்துக் கொள்ளப் போகிறோமா? இப்படிப் பல பிரச்சினைகள் எழுகின்றன. இது பொதுவான general structure சம்பந்தப்பட்ட விஷயம் என்பதால் பட்ஜெட்டில் விரிவாகப் பேசலாம். எனவே, இதைப் பற்றி பட்ஜெட்டில் குறிப்பிட விரும்புகிறேன் என்று சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து ஒரே ஒரு விஷயத்தை, நம்முடைய அழகிரி அவர்கள் குறிப்பிட்ட ஒரு பிரச்சினையை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். நெசவாளர் பிரச்சினை ஒரு சீரியசான பிரச்சனையாகும். நான் மாநில முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவது, நான் கம்யூனிஸ்ட் இயக்கத்தைச் சேர்ந்தவன் என்றாலும், நெசவாளர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு நெருக்கமாக இருந்தவர்கள். அவர்கள் தற்போது அதிருப்தி அடைந்திருக்கிறார்கள். இதுவரை இல்லாத அளவுக்கு அதிருப்தி அடைந்திருக்கிறார்கள். அவர்களுடைய துணிகள் தேங்கிக் கிடக்கின்றன. நெசவாளர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டதற்கு பல காரணங்கள் இருக்கின்றன. இது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு வந்ததோ இல்லையோ தெரியவில்லை. நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். கோவை மாவட்டம் முழுவதும் நெசவாளர்கள் வேலை இல்லாமல் போனதற்குக் காரணம் 'ஷோபா கிளாத் சென்டர்' தீ வைத்து எரிக்கப்பட்டதுதான். கோரா பட்டு இரக நூல் கோவை மாவட்டம் முழுவதும் இருக்கின்ற நெசவாளர்கள் நெய்வதாகும். கோரா பட்டு இரக நூல் முழுவதையும்



ஷோபாவினுடைய அதிபர் ஜாபர் அலி தான் பர்சேஸ் செய்து கொண்டிருந்தார். அவருடைய கடை தீ வைத்து எரிக்கப்பட்டதால், மதக் கலவரத்தால் தீ வைத்து எரிக்கப்பட்டதால், அந்தக் கடை மூடப்பட்டுவிட்டது. யாரும் கோரா பட்டு இரக நூல் கொடுக்க முடியவில்லை. எனவே நெசவாளர்களுக்கு வேலை இல்லாமல் போனது. அதற்கு என்ன காரணம் சொல்லுகிறார்கள் என்றால் கலைஞர் வந்தால் வேலை இல்லை என்று ஒரு உள் நோக்கத்தோடு கோவை மாவட்டத்தில் பிரச்சாரம் செய்யப்பட்டது. இங்கே நான் தெரிவித்துக் கொள்ள விரும்புவது—உண்மையிலேயே நேரம் இல்லை—நெசவாளர்களுடைய அதிருப்தி நியாயமானது. வருகின்ற 23 ஆம் தேதிகூட அவர்கள் சிலபல கோரிக்கைகளை முன் வைக்க இருக்கிறார்கள். எனவே, தயவுசெய்து நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதில் மிக அதிக அளவுக்குக் கவனம் செலுத்தி அவர்களுடைய பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

நிறைவாக ஒன்றைச் சொல்லி முடித்து விடுகிறேன். மின்வெட்டு, ஒரு பிரச்சினையாக இருக்கிறது. மின்வெட்டால் பல்வேறு பிரச்சினைகள் வருகின்றன. அதற்குக் காரணம் 1952-லிருந்து நமக்கு உற்பத்திப் பெருக்கம் இல்லை. அதிக உற்பத்திக்கு வழியில்லை. இப்போது சில புரபோசல்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அதுகுறித்து அக்கறை செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்நிய முதலீடு பற்றி முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றவுடன் சொன்ன வார்த்தைகளைதான் நான் சொல்ல விரும்புகிறேன். அந்நிய முதலீடு உண்மையிலேயே அதிகரித்திருக்கிறது. ஆனால் அது தமிழ்நாட்டின் பொருளாதார சமூக வளர்ச்சிக்கு எந்தவகையில் பங்களிப்பு செலுத்துகிறது என்பது குறித்து ஒரு வெள்ளை அறிக்கையை வெளியிடுவது நல்லது என்பது என்னுடைய கருத்தாகும். ஏனென்றால் அந்நிய முதலீடுகள், முதலமைச்சர் அவர்கள் குறிப்பிடுவதுபோல, கழுத்து மாலையாக இல்லாமல், கழுத்தை இறுக்கும் சுருக்குக் கயிறாக மாறிவிடுமோ என்ற ஐயத்தோடு, இந்தக் கோரிக்கையை முன் வைத்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. மு. பன்னீர்செல்வம் 5 நிமிடங்களில் உரையை முடித்துக் கொள்ள வேண்டும்.

**திரு. மு. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் விவாதத்திலே

நான் பேச வாய்ப்பளித்தமைக்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்து, என்னுடைய கருத்துக்களை முன் வைக்க விரும்புகிறேன். மிகப்பெரிய சிறப்பான திட்டங்களைத் தீட்டி வருகின்ற தமிழக அரசு, தமிழகத்திலே நல்லாட்சி நடைபெறுகிறது என்பதை நிலை நிறுத்திக் காட்டுவதற்காக, நடைபெற்ற சட்டமன்ற இடைத்தேர்தலிலேகூட தமிழக மக்கள் நல்ல தீர்ப்பை அளித்துள்ளார்கள் என்பதற்கு இதைவிட பெரிய உதாரணம் எதையும் காட்டிவிட முடியாது.

பிற்பகல் 12-40

இந்த ஆண்டு மாநிலம் முழுவதும் அதிகமான மழை பெய்ததை நாடு நன்கு அறியும். குறிப்பாக தஞ்சை, திருவாரூர், நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாயின. அப்படிப்பட்ட நேரங்களிலேகூட மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பம்பரம் போலச் சுழன்று தஞ்சை, திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களிலே சுற்றி, வெள்ள நிவாரண நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தார்கள். மேலும் அவர்களுடன் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர், மாண்புமிகு பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர், மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் ஆகியவர்களெல்லாம் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய பிரதிநிதிகளாக இந்த மூன்று மாவட்டங்களிலே வருகை தந்து என் பகுதி மக்களையெல்லாம் பார்த்தும். நிவாரணப் பணிகளில் ஆலோசனைகளை வழங்கியிருப்பதையடுத்தும் நன்றிக்கடனாக தஞ்சை, நாகை மற்றும் திருவாரூர் மாவட்டங்களை உள்ளடக்கிய பாராளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்றமையை உதாரணத்திற்காகச் சொல்லவிட முடியும்.

மேலும் தமிழக முதல்வர் அவர்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களில் நிவாரணப் பணி நடவடிக்கைகளுக்காக கிட்டத்தட்ட 59 கோடி ரூபாயை ஒதுக்கிக் கொடுத்துள்ளார்கள். அப்படி ஒதுக்கிக் கொடுக்கப்பட்ட நிதியிலே பல்வேறு பணிகள், சாலைப் பணிகள் போன்றவை பொதுப்பணித் துறை மூலமாகவும் மற்ற துறைகள் மூலமாகவும் இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. சென்ற ஆண்டு வெள்ளம் அதிக அளவிலே, தாங்க முடியாத அளவிற்கு வந்ததன் காரணமாக ஆறுகள் எல்லாம் வெட்டப்பட்டு கரைகள்



எல்லாம் உயர்த்தப்பட்டன. அதேபோன்று இந்த ஆண்டும் பொதுப் பணித் துறை மூலமாக இருக்கின்ற அத்தனை ஆறுகளையும் ஆழப்படுத்தி கரைகளை உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சென்ற ஆண்டு புல்டோசர்கள் மூலமாகவும் பொக்ளின் மூலமாகவும் பணிகள் செய்யப்பட்டதைப் போலவே இந்த ஆண்டும் சிறப்பாக செய்து கொடுத்தால் எங்களைப் போன்ற விவசாயப் பெருங்குடி கடைமடை மக்கள் எல்லாம் நன்கு பயனடைவார்கள். வரும் ஆண்டுகளில் இப்படிப்பட்ட பணிகள் நடைபெறுவதன் மூலம் வருகின்ற ஆண்டுகளிலே வெள்ளம் தேங்கி நிற்காமல் வெள்ள நீர் கடலிலே கலக்கின்ற அளவிற்கு நிச்சயமாக வேலைகள் நடைபெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்லாமல், எங்கள் பகுதியிலே கடைகோடி, கடைமடைப் பகுதி என்று சொல்லப்படுகின்ற பகுதியிலே புது மன்னியாறு, நன்டோடையாறு, திருவாளி ஏரி, திருநகரி வாய்க்கால், தெற்கு ராஜன் வாய்க்கால், பெருந்தோட்டம் ஏரி இருக்கின்றன. அவற்றின் பணிகளை பொதுப்பணித் துறை மூலமாக எடுத்து இந்த ஆண்டும் சிறப்பாக நடத்திக் கொடுத்திட வேண்டுகிறேன்.

மழை வெள்ள காலங்களில், தஞ்சை திருவாரூர், நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களிலே நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டு திறந்த தேதி முதல் இன்று வரை தொடர்ந்து சிறப்பாக நடந்து கொண்டிருக்கிறது. அது மட்டுமல்லாமல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 35-என எப்போதும் இல்லாத அளவிற்கு உயர்த்திக் கொடுத்ததன் காரணமாக விவசாயிகள் எல்லாம் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களைப் பாராட்டி வருகின்றார்கள்.

கிராமத்திலே உள்ள படித்த மாணவர்களுக்கு 15 சதவீத இட ஒதுக்கீடு கொடுத்ததன் காரணமாக சென்ற ஆண்டு பொறியியல் துறையில் மாணவர்கள் சேர்க்கப்பட்டார்கள். அதேபோன்று இன்றைக்கு மருத்துவக் கல்லூரி படிப்புகளிலே 15 சதவீத ஒதுக்கீடு செய்திருப்பதை கிராமப்புற மாணவர்கள் நன்றாகப் பாராட்டுகின்றார்கள்.

எப்போதும், எந்தத் திட்டத்தை அறிவித்தாலும், இந்தியாவிலேயே முதன்முதலில் தமிழகத்தில் அறிவிக்கின்ற முதல்வர் நம்முடைய மாண்புமிகு கலைஞர் அவர்களை அடையாளம் காட்டும் வகையில்

ஆதிதிராவிடர்களுக்கு காலனி வீடுகளை கட்ட முதன்முதலில் அறிவித்தவரும் டாக்டர் கலைஞர் அவர்கள்தான். 8 ஆவது படித்த ஏழைப் பெண்களுக்கு, 18 வயது நிரம்பிய ஏழைப் பெண்களுக்கு திருமண உதவித் திட்டத்தை அறிவித்தவர் டாக்டர் கலைஞர் அவர்கள். (மணியடிக்கப்பெற்றது). அண்ணா மறுமலர்ச்சி திட்டம், நமக்கு நாமே திட்டம், அரசியல் சட்டத்தை வகுத்துத் தந்த டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் அவர்கள் பெயரிலே சட்டப் பல்கலைக்கழகம் மற்றும் அனைத்து சமூக மக்களும் ஒரே இடத்தில் வாழ சாதி சண்டை இல்லாமல் சமதர்ம சமுதாயத்தை உருவாக்கிட சமத்துவபுரம். எல்லாவற்றிற்கும் மேலாக. . . . (மணியடிக்கப்பெற்றது).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன்.

***திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களுடைய உரைக்கு நன்றி தெரிவிக்கக்கூடிய இந்தச் சந்தர்ப்பத்தில் பேச வாய்ப்பு தந்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்று அடல் பிகாரி வாஜ்பாய் அவர்கள் பாரத நாட்டினுடைய பிரதமராகப் பொறுப்பு ஏற்கின்றார். சந்தோஷகரமான இந்த நல்ல வேளையில் நம்முடைய சட்டமன்றத்தின் மூலமாக அவர்களுடைய ஆட்சி எல்லோராலும் பாராட்டப்படக்கூடிய ஒரு நல்லாட்சியாக அமைய அனைத்து சந்தர்ப்ப சூழ்நிலைகளையும் எல்லாம் வல்ல இறைவன் அவருக்கு வழங்க வேண்டுமென்று வாழ்த்தி விட்டு என்னுடைய உரையைத் தொடங்கலாம் என்று கருதுகிறேன்.

பிற்பகல் 12-45

கவர்னர் உரையில் அரசினுடைய நடைமுறை எளிமைப்படுத்தப்படுவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அது பாமர மக்களுக்குப் பயன்படக்கூடிய வகையிலே அமையும் அதேபோன்று அனைவருக்கும் மருத்துவ வசதி கிடைக்க ஆவன செய்யப்படும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அதுவும் வரவேற்கக்கூடிய ஒன்று.

அதேபோன்று அனைத்து மக்களுக்கும் பாதுகாப்பு என்ற நிலையினை இந்த அரசு எப்பாடுபட்டாவது ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு, சமீப காலமாக வெடிகுண்டு சம்பவங்கள், கோவை சம்பவத்திற்குப் பிறகு அல்லது தேர்தலுக்குப்



பிறகு அரசாங்கத்தினுடைய அனைத்து நடவடிக்கைகளும் பாராட்டக்கூடிய வகையில் அமைந்திருக்கிறது என்று சொன்னால் அது பொருத்தமாக இருக்கும், இந்த நடவடிக்கைகளை இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்டவுடனே எடுத்திருந்தால், தமிழகம், பாரத நாட்டினுடைய ஒரு அமைதிப் பூங்காவாக மாறி இருக்கும் என்று சொன்னால் அது மிகையாகாது. பல காரணங்கள் இருக்கின்றன. அவற்றை நான் பின்னால் சொல்ல ஆசைப்படுகிறேன்.

எனக்கு முன்னால் பேசிய பல கட்சித் தலைவர்களும் மத நல்லிணக்கத்திற்கு, மதப் பிரச்சினைக்கு வேதனையோடு பல விஷயங்களைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். என்னைப் பொறுத்தவரை மதக் கலவரம் எப்போது இல்லாமல் போகும் என்றால், அனைத்து மக்களுடைய வழிபாட்டு முறையையும் ஏற்றுக் கொள்ளக்கூடிய சித்தாந்தம் அனைத்து மக்களுக்கும் எப்பொழுது ஏற்படுகிறதோ அப்போதுதான் என்று சொல்ல வேண்டும்.

பாரத நாட்டினுடைய பண்பாடு என்னவென்றால், 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்று சொல்லப்படுகிறது. "ஏகம் சத், விப்ரா பெகுதா வதந்தி", அதாவது உண்மை ஒன்று, ஆனால், ஞானிகள் அதைப் பலவாறாகக் காண்கிறார்கள். என்னைப் பொறுத்தவரையில் கடவுள் ஒருவனே என்று அழுத்தந்திருத்தமாகச் சொல்ல முடியும். என்னுடைய கடவுள் மட்டும்தான் உயர்ந்தவர். அவர் மட்டும்தான் உயிர் உள்ள கடவுள், அவரை வணங்கினால் மட்டுமே அவரை அடைய முடியும். அவருடைய மதப் பண்பாட்டினைப் பின்பற்றுபவர்கள் மட்டும்தான் இறைவனை அடைய முடியும் என்று சொல்லக்கூடிய நிலை இருப்பதால்தான், பாரத நாட்டில், தமிழகத்தில் இப்படிப்பட்ட மதக் கலவரங்கள் எல்லாம் ஏற்படுகின்றன.

வணங்குவது, இறைவனைதான். இந்துவாக இருந்தாலும் சரி, முஸ்லிமாக இருந்தாலும் சரி, கிருஸ்துவராக இருந்தாலும் சரி அனைவரும் வணங்குவது ஒரே பரம்பொருளைத்தான், இந்த சித்தாந்தம் எப்போது வழிபாட்டுத் தலங்களில் போதிக்கப்படுகின்றதோ, அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களும், அனைத்து சமயத் தலைவர்களும், எப்போது இதை ஏற்றுக்கொண்டு பேச ஆரம்பிக்கின்றார்களோ, எப்போது கல்வியின் மூலமாக, அறிஞர்கள் மூலமாக, பெரியோர்கள் மூலமாக இதை நாட்டு மக்களுக்கு உணர்த்த ஆரம்பித்து, அவர்களும்

புரிந்து கொள்ள ஆரம்பிக்கின்றார்களோ, அன்றிலிருந்து மதக் கலவரம் இல்லாத பொற்காலமாக பாரதம் அமையும், தமிழ்நாடு மாறும்.

இப்போது பிரச்சினை என்ன? "நான் வணங்கக்கூடிய கடவுள்தான் உண்மையான கடவுள், அவனை வழிபட்டால்தான் அவனை அடைய முடியும்" என்று சொல்லக்கூடிய சித்தாந்தம் இருப்பதுதான் பிரச்சினை. எந்தக் கடவுளை வணங்கினாலும், வணங்குவது இறைவனை என்று சொல்வதுதான் இந்துத்துவம், இந்துப் பண்பாடு, பாரதப் பண்பாடு; வழிபாடு மாறலாம், தேசியம் மாறக்கூடாது; பண்பாடு மாறக்கூடாது; கலாச்சாரம் மாறக்கூடாது. முருகனையும், சிவனையும், ஐயப்பனையும் வணங்குபவர்களை எப்படி இந்து என்று சொல்கிறோமோ அதேபோன்று, அல்லாவும், ஏசு கிறிஸ்துவும் இறைவன்தான், அவர்களை வழிப்பட்டால் மட்டும்தான் அவர்களை அடைய முடியும் என்ற சித்தாந்தத்தில் அவர்கள் மாறுபடுகிறார்கள். இதைப் புரிந்து கொள்ள வேண்டும். இறைவன் ஒருவனே, ஏசுவும், அல்லாவும் ஒருவனே; இதே சிந்தனை மற்ற சமயத்தைச் சார்ந்தவர்களுக்கும், அதாவது முருகனை வழிபடுபவர்கள், சிவனை வழிபடுபவர்கள், ஐயப்பனை வழிபடுபவர்கள், அவர்களும் இறைவன் ஒருவன்தான், வழிபாட்டு முறைதான் மாறி இருக்கிறது என்ற சித்தாந்தத்தை ஏற்றுக் கொண்டால், சர்ச்சிலும், மசூதியிலும், கோயில்களிலும், எல்லா இடங்களிலும் இருக்கக்கூடியவன் ஒரே கடவுள், ஒரே இறைவன் என்ற உணர்வோடு எப்போது போதிக்கப்படுகின்றதோ அப்போதுதான் இந்த மதப் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும்.

பிற்பகல் 12-50

ஒரு விஷயத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். என்னுடைய பக்கத்து ஊரில் உள்ள ஒருவன், என்னுடைய தாத்தா காலத்தில் அவர்கள் இருவருக்குமிடையே கொடுக்கல், வாங்கல் பிரச்சினை இருந்தது என்று வைத்துக் கொள்வோம். அந்த பக்கத்து ஊர்க்காரன் சில ரவுடிகளை அழைத்துவந்து, எங்களுடைய வீட்டை அடித்து நொறுக்கிவிட்டு, என்னுடைய தாத்தாவையும் கொலை செய்து சென்று விட்டான். இப்போது, என்னுடைய தலைமுறை இருக்கிறது. என் தாத்தா காலத்து



ஆசாமியின் பெயர் கந்தசாமி என்று வைத்துக் கொள்வோம். அந்த ஆசாமியினுடைய படத்தை வைத்து நான் வணங்குகிறேன் என்று சொன்னால், என்னுடைய தம்பி சொல்கிறான், அண்ணா, அந்த கந்தசாமி இன்ன ஊரைச் சேர்ந்தவன், நம்முடைய வீட்டை நாசமாக்கியவன், நம்முடைய குடும்பத்திற்கு உழைத்த தாத்தாவைக் கொலை செய்தவன், அவருடைய படத்தை நான் வைத்து வணங்கினால் அது குடும்பத் துரோகமாகாதா, என்று என்னுடைய தம்பி சொன்னான். அப்படி உனக்கு யாரையாவது வைத்து வணங்க வேண்டுமென்று சொன்னால் நமக்காக உழைத்த நம்முடைய தாத்தா - அவர் சம்பாதித்து நாம் சுகமாக வாழ்கின்றோம் என்று சொன்னால் - அப்படி நமக்காக உழைத்த நம்முடைய தாத்தா வேலாயுதம் அவர்கள் படத்தை வைத்து வணங்கு என்று சொன்னார். அது எந்த அளவுக்குப் பொருத்தமாக இருக்குமோ, அதேபோன்று நம்முடைய நாட்டைத் தாக்கியவர், ஆக்கிரமித்தவர், ஏராளமான மக்களைக் கொன்று குவித்தவர், பண்பாடற்றவர், அவர் நினைவாக நினைவுச் சின்னம் வைத்திருப்பது முறையல்ல. இது வழிபாட்டுப் பிரச்சினையல்ல என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். எங்களைப் பொறுத்தமட்டில், அனைத்தும் தேசியமே என்ற அளவோடு பார்க்கிறோம்.

அயோத்தி பிரச்சினைகள் நடந்த சந்தர்ப்பத்தில்கூட, பல இஸ்லாமிய பெரியோர்களே சொன்னார்கள். அது வழிபாட்டு ஸ்தலம் அல்ல, அது மசூதி அல்ல, யாரும் அங்கு சென்று தொழுகை நடத்தியது கிடையாது. அது ஒரு பழைய கட்டடம் என்று இஸ்லாமிய சகோதரர்களே கூறியிருக்கிறார்கள். ஆனால் இந்தப் பிரச்சினை இஸ்லாமிய தீவிரவாதிகளுக்கு மட்டும்தான். இந்தப் பிரச்சினை நடந்தபோது, அனைத்து அரசியல் தலைவர்களும் சொல்லியிருக்க வேண்டும், 'அது வழிபாடு நடக்காத இடம், அது மசூதி அல்ல, அந்தக் கட்டடம் தகர்க்கப்பட்டபோது, அதைச் சுற்றியுள்ள எந்த மசூதிக்கும் எந்தப் பிரச்சினையும் கிடையாது' என்று கல்யாண்சிங் அவர்களுடைய ஆட்சி இருக்கக்கூடிய காரணத்தால், அங்கு வாழக்கூடிய முஸ்லிம்கள், பிரச்சினை ஏற்படும் என்று கருதி ஃபைசலாபாத் மாவட்டத்தில் வாழ்ந்த அனைத்து முஸ்லிம்களும் நூற்றுக்கணக்கான மசூதிகளை விட்டுவிட்டு வெளியே சென்று விட்டார்கள். ஆனால் இந்தப் பிரச்சினை நடந்தபோது, வேறு எந்த மசூதிக்கும் ஒரு செங்கல்கூட சேதம் ஏற்படவில்லை. எனவே

முஸ்லிம்களுடைய வழிபாட்டு ஸ்தலத்தை இடித்தது அவர்களுடைய மனதைப் புண்படுத்த வேண்டுமென்றோ, மனதை நோகடிக்க வேண்டுமென்றோ அல்ல. இது தேசிய பிரச்சினை என்ற அளவில்தான் அந்தப் பிரச்சினை நடந்தது என்ற இந்த உண்மையை அனைத்து அரசியல் தலைவர்களும் சொல்லியிருந்தால், இஸ்லாம் சகோதரர்கள்கூட புரிந்து கொண்டிருப்பார்கள். இப்போது இஸ்லாம் சகோதரர்கள் புரிந்துகொள்ள ஆரம்பித்திருக்கிறார்கள். அதன் அடிப்படையில்தான் காஷ்மீரில், முஸ்லிம் மக்கள் பாரதீய ஜனதாவிற்கு வாக்களித்து, எம்.பி.-க்கள், எம்.எல்.ஏ.-க்களைத் தந்திருக்கிறார்கள்.

இப்போது உள்ள சூழ்நிலையில், ஜாதி மதத்திற்கு அப்பாற்பட்டு அனைத்து மக்களும் ஒன்றுபட்டு வாழ வேண்டும் என்ற சித்தாந்தத்தை மட்டுமே முன்வைக்க விரும்புகிறேன். என்னைப் பொறுத்தமட்டில், ஜாதி மதப் பிரச்சினை ஏற்படுத்தக்கூடிய காரியங்கள், பல உண்மையாக இருந்தாலும்கூட, அது பிரச்சினை ஏற்படுத்தும் என்று சொன்னால், நம்முடைய மாநிலத்தினுடைய ஒற்றுமையைக் கருதி, உண்மையை மறைக்க வேண்டுமென்ற கருத்தை உடையவன். எனவே, அன்பார்ந்த உறுப்பினர்கள் அனைவருக்கும் தெரிவித்துக்கொள்கிறேன். ஜாதி மதத்தினுடைய அடிப்படையில் இல்லாமல் தேசியத்தால், பண்பாட்டால், கலாச்சாரத்தால், நாம் அனைவரும் ஒன்றுபட்டு வாழ வேண்டும் என்பதை மட்டும் புரிந்து கொண்டு எதைச் சொன்னால் ஜாதிப் பிரச்சினை வராதோ, அதை மட்டும் சொல்லி, மற்றவற்றை ஒற்றுமை கருதி மனதில் கொண்டு, அமைதியாக வசிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வேலாயுதன் அவர்கள் மிக அழகாக, தெளிவாக கருத்துக்களை எல்லாம் இங்கே சொன்னார்கள். ஆனால் அவர் பாரதீய ஜனதா கட்சியின் உறுப்பினர் என்பதில்தான் எங்களுக்குப் பிரச்சினை. இந்துத்துவா என்கிற ஒரே ஒரு கொள்கையை தன்னுடைய கையிலே ஏந்தி, செங்கற்களை நாடு முழுவதிலிருந்து கொண்டு போய் அங்கே பாபர் மசூதியை இடித்துவிட்டு அந்த



சொன்னவர்கள், இடத்தில் இராமர் கோவில் கட்டுவோம் என்று எல்லா மதத்தையும் ஒன்றாகப் பார்க்க வேண்டும் என்கின்ற எண்ணம் உண்மையிலேயே அவர்களுக்கு இருந்திருக்குமேயானால், பாபர் மசூதியை இடித்ததை அவர் எப்படி ஏற்றுக் கொண்டிருக்கிறார் என்ற ஒரே ஒரு கேள்வியை மட்டும் கேட்க விரும்புகிறேன். அவர் விளக்கம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இங்கே ஊருக்கு உபதேசம் செய்துவிட்டு, அங்கே பாபர் மசூதியை இடித்தது ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒன்று என்பதை விளக்கத் தயாரா?

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இந்த வெடிகுண்டு பிரச்சினை அல்லது மதப் பிரச்சினை வந்தவுடனேயே, குற்றவாளிகளைக் கண்டறிந்து அவர்களைத் தண்டிக்கும் முகமாக அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும் என்பது என்னுடைய கருத்து. அப்படி தவறிவிட்ட காரணத்தால், இந்த அளவுக்கு ஒரு வெடிகுண்டு சம்பவம் நடந்துவிட்டது. இன்றும் கூட வெடிகுண்டு சம்பவம் ஓயாத நிலையில் இருக்கிறது. ஆரம்பத்தில் சென்னையில் ஆயுதங்கள் என்ற பெயரில் வெட்டுக் கத்தி, கம்பு போன்றவை பயன்படுத்தப்பட்டு வந்தன. அதேமாதிரி திருநெல்வேலி, மேலப்பாளையத்திலும், கோவை, மேட்டுப்பாளையத்திலும் சரி, வெட்டு, கொலை சம்பவங்கள்தான் நடந்தன.

பிற்பகல் 12-55

இதேபோன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் நடந்த ஒரு சம்பவத்தினை மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். 3 மாதங்களுக்கு முன்னால் ஒரு ஆட்டோவில் 7 பேர், அவர்கள் ரவுடிகள், இளைஞர்கள், வெட்டுக் கத்தி போன்ற பெரிய கத்திகளுடன் வந்தார்கள். காவல் துறை அவர்களைக் கைது செய்து இருக்கின்றது. கைது செய்த அவர்களை உரிய செக்ஷனில் போட்டு உள்ளே தள்ளி இருக்க முடியும். ஆனால், அரசியல் குறுக்கீட்டின் காரணமாக, அவர்கள் உடனே ஜாமீனில் விடப்பட்டார்கள். அதே ரவுடிகள் சமீபத்தில் மாதாவாலயம் என்று சொல்லக்கூடிய ஊரில் 30 பேர் கொண்ட கும்பலுடன் சிதம்பரநாதன் என்பவருடைய வீட்டைத் தாக்கச் சென்றிருக்கிறார்கள். அவர் இல்லாத

ணத்தால், அவருடைய தம்பியையும், மனைவியையும் வெட்டிவிட்டு இருக்கிறார்கள்.

கன்னியாகுமரி மாவட்டத்தில்கூட ஒருசில இடங்களில் வெடிகுண்டுகள் கண்டெடுக்கப்பட்டு இருக்கின்றன. கடந்த மாதம் 14 ஆம் தேதி திரு. எல்.கே. அத்வானி கோவை வந்திருந்தபோது நடந்த சம்பவம் போல கன்னியாகுமரி மாவட்டத்தில் மார்த்தாண்டத்தில்கூட வெடிகுண்டு வைக்க முயற்சி நடந்து இருக்கின்றது. காவல் துறை அதிகாரிகள் நல்லமுறையில் முயற்சி எடுத்ததன் காரணமாக அது தவிர்க்கப்பட்டு இருக்கின்றது. அந்தச் சம்பவம் நடந்திருந்தால், நானும்கூட இன்று உங்கள் முன்னால் பேசி இருக்க முடியாது. எனவே காவல் துறை... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மார்த்தாண்டத்திலே பி.ஜே.பி. தலைவர் வந்திருந்தபோது. குண்டு வைக்க முயற்சி நடந்தது, காவல் துறை தடுத்துவிட்டது என்று சொன்னார். யார் காரணமாக இருந்தார்கள்? அப்படி ஏதாவது ஒரு attempt நடந்திருக்கிறதா என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும். சகட்டுமேனிக்கு. மார்த்தாண்டத்திலே அத்வானி வந்த நேரத்திலே இப்படி ஒரு நிகழ்ச்சிக்கு ஏற்பாடுகள் இருந்தது என்று சொல்வது சரியாக இருக்காது. அந்தக் காவல் துறையிடமிருந்துகூட விவரம் தெரிந்திருந்தால், அந்தக் காவல் துறை அதிகாரி யார்? எப்படி குண்டை எடுத்தார்கள் என்ற விவரத்தோடு சொன்னால் அது மகிழ்ச்சிகரமாக இருக்கும்.

**திரு. சி. வேலாயுதன்:** துணைத் தலைவர் அவர்களே, பத்திரிகைகளில் தெளிவாகச் செய்தி வந்திருக்கிறது. காவல் துறை அந்தச் சம்பவத்தைத் தடுத்து இருக்கிறது என்ற பத்திரிகை செய்தியைத்தான் சொன்னேன். பத்திரிகையில் செய்தி வந்தது உண்மை.

அதேபோன்று, கொடுங்கையூர் சம்பவத்திலும்கூட காவல் துறை அதிகாரிகள் சிறந்த முறையில் செயல்பட்டு, அங்கு வைக்கப்பட்டிருந்த குண்டுகள் வெடிக்காத அளவுக்கு பிடித்து இருக்கின்றார்கள். அவர்களுக்கு விசேஷ வெகுமதியும் பாராட்டுக்களும் அரசாங்கம்



அளிக்கும் என்று சொல்லி இருந்தார்கள். அவர்களை ஊக்கப்படுத்த வேண்டும். அப்படி ஊக்கப்படுத்தினால்தான் காவல் துறை அதிகாரிகளுக்கு தைரியமாகச் செயல்படக்கூடிய ஒரு நல்ல உணர்வு வரும் என்பதை நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோவையில் நடந்த வெடிகுண்டு சம்பவத்தினுடைய பின்னணி என்ன, எங்கிருந்து ஆயுதங்கள் எல்லாம் வந்தன? பத்திரிகைகளில் பல மாநிலங்களில் இருந்து எல்லாம் ஆயுதங்கள் வந்ததாகவும் செய்திகள் வந்திருக்கின்றன. கோவை சம்பவத்தில் சம்பந்தப்பட்ட 9 பேரை கேரள காவல் துறை கைது செய்தது. தமிழக காவல் துறை அந்த 9 பேரை ஜாமீனில் விடக்கூடாது என்று நீதிமன்றத்தில் சொல்லாத காரணத்தால் அந்த 9 பேரும் விடுதலை ஆனார்கள் என்று பத்திரிகை செய்தி இருக்கிறது. அது உண்மையா என்று ஆராய்ந்து, அந்த 9 பேரையும் கண்டறிந்து அவர்களைக் கைது செய்ய தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படி ஒரு தவறு நடந்து இருக்குமேயானால், இதுபோன்ற குற்றவாளிகளை நாட்டுமக்களின் நலன் கருதி சிறையில் அடைப்பதும், உடனே அவர்கள் ஜாமீனில் வருவதும், இந்தச் சூழ்நிலை எக்காரணம் கொண்டும் நடக்காத அளவுக்கு, குற்றவாளி என்று புலப்பட்டால் — ஆனால் பாமர மக்கள் பாதிக்கக்கூடாது, யாராக இருந்தாலும் சரி, எந்த அரசியல் தலைவர் முன்வந்தாலும் சரி — அவர்களுக்கு ஜாமீன் கிடைக்காத அளவுக்குக் கடுமையான தண்டனை கிடைக்க வேண்டும் என்று சொல்லக்கூடிய பய உணர்வு வரவேண்டும். இப்போது இளைஞர்கள் இதுபோன்ற தவறுகளைச் செய்கிறார்கள். அவர்களுடைய மனநிலை என்ன? இப்படி கைதாகிவிட்டால் வெளியே வந்துவிட முடியும்; எங்களது வீட்டிற்கு, குடும்பத்தாருக்கு பாதுகாப்புச் செய்யக்கூடிய வசதிபடைத்த பலர் பின்னணியில் இருக்கிறார்கள்; அல்லது அந்நிய நாட்டுப் பணம் இருக்கின்றது என்றெல்லாம் சொல்கிறார்கள், ஆக அவர்களுக்குக் கடுமையான தண்டனை கிடைக்கும்; அவர்களுக்கு உதவி செய்யக்கூடிய அனைவருமே கைது செய்யப்படுவார்கள் என்ற நிலையை அரசாங்கம் ஏற்படுத்த வேண்டும் என்று சொல்லி, வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகின்றேன், பாரத் மாதாகி ஜே.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஒரு Clarification.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் பேசி முடித்து விட்டாரே?

**டாக்டர் தே. குமாரதாஸ்:** ஒரே ஒரு நிமிடம்....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேரம் இல்லை.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** சீக்கிரம் முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, சொல்லுங்கள்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அருமைச் சகோதரர் வேலாயுதன் அவர்கள் பேசுகின்ற போது, அவர்கள் வேலாயுதம் என்று பெயர் வைத்திருந்தாலும், அவரிடம் **. ஆனால், நல்ல இதயத்திற்குச் சொந்தமானவர்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இந்தமாதிரி எல்லாம் பேசக்கூடாது.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நல்லவர் என்றுதான் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் குமாரதாஸ் குறிப்பிட்ட வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதாவது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டபோது, அவர் சொன்ன கருத்துக்களிலே ஒரு கருத்து—அதுதான் இன்றைக்கு பிரச்சினையே; என்னுடைய தகப்பனாருடைய சொத்தை என்னுடைய தாத்தாவினுடைய சொத்தை அடுத்த வாரிசாக வந்து நாங்கள் எடுக்கிறோம் என்று அவர்கள் சொல்கிறார்கள். அதனால்தான் பிரச்சினையே. அப்படிச் சொல்லித்தான் பாபர் மசூதியை இடித்தார்கள். அன்றைக்கு அது இடிக்கப்பட்ட காரணத்தினாலேதான், இன்றைக்கு இந்தப் பிரச்சினை. ஆகவே, நான் கேட்டுக்கொள்வது எல்லாம்,

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



சட்டத்தின் அடிப்படையிலேகூட, பொசஷன் ஒரு ஆளிடம் இருந்தால்கூட, அவரை வெளியேற்ற முடியாது, கைப்பற்ற முடியாது. அதை மீறி அன்றைக்கு பாரதீய ஜனதா கட்சி செயல்பட்ட காரணத்தால்தான் இன்றைக்கு இந்த நாட்டிலே இந்தக் கலவரம் ஏற்பட்டிருக்கிறது. இப்போது அந்தக் கொள்கைகளை எல்லாம் அவர்கள் கைவிட்டு விட்டார்கள் பதவிக்கு வரவேண்டும் என்பதற்காக. அது பாராட்டத் தகுந்ததுதான். பொது சிவில் சட்டத்தை விட்டுவிட்டார்கள், இராமர் கோயில் கட்டும் திட்டத்தை விட்டு விட்டார்கள். இதை முதலிலேயே அவர்கள் சொல்லியிருந்தால் நாம் எல்லோரும் சேர்ந்தேகூட பாராட்டி இருக்கலாம் பதவிக்காகக் கொள்கையை விட்டுத் தந்ததற்காக என்னுடைய பாராட்டைக் கூறிக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-00

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பதவிக்கு வருவதற்காகக் கொள்கையை விட்டதற்காகப் பாராட்டுகிறேன் என்று சொல்கிறார். அதைப் பற்றி அவர் தெளிவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** தெளிவுபடுத்த வேண்டாம், உட்காருங்கள். அடுத்து திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கவர்னர் உரை மீதான விவாதத்தில் கலந்து கொள்ள என்னை அனுமதித்ததற்கு முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த அரசு மீது அதிருப்தியுற்று நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணிக்கு வாக்களித்த தமிழக வாக்காளர்களுக்கு, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக என்னுடைய நன்றியை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்.

கவர்னர் அவர்கள் ஆற்றிய உரையில் இந்த அரசு என்ன செய்யப் போகிறது என்பதைப் பற்றிய எந்தவிதமான விபரங்களும் சொல்லப்படவில்லை. மேலும் படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகள் எப்படி கொடுக்கப் போகின்றீர்கள் என்ற திட்டத்தையும் ஒரு இடத்தில்கூட சொல்லவில்லை.

[திரு. பி.ஆர். சுந்தரம்] [1998 மார்ச் 19

அடுத்தபடியாக நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் எங்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணி 3 இடங்களில்தான் வெற்றி பெறும், 4 இடங்களில்தான் வெற்றி பெறும், உங்களுடைய தி.மு.க.வும் அதனுடைய கூட்டணிக் கட்சிகளும் 35 [illegible] வெ[illegible]றிபெறும் என்று கருத்துக் , கணிப்புக் கூறிய பத்[illegible] எல்லாம் கூட இன்று உங்களைப் பார்த்து ஏளனம் [illegible] இன்றைக்குப் பத்திரிகைச் சுதந்திரம் இந்த ஆட்சியிலே பறிக்கப்பட்டிருக்கிறது. எங்களுடைய ஆட்சியிலேதான் இந்தப் பத்திரிகைச் சுதந்திரம்....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** துணைத் தலைவர் அவர்களே, பத்திரிகைகள் எங்களை ஏளனம் செய்கின்ற நிலை இருக்கின்றது என்று சொன்னார்கள். ஏளனம் செய்கின்ற பத்திரிகைகளைப் பொறுத்துக் கொண்டிருக்கிறோம் என்று சொன்னால், எப்படிப் பத்திரிகைச் சுதந்திரத்தைப் பறித்ததாக ஆகும் என்று எனக்குத் தெரியவில்லை.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, சென்ற கூட்டத் தொடரிலே கூட நான் கேட்டிருந்தேன். நக்கீரன் பத்திரிகை அலுவலகம் மதுரையிலே தாக்கப்பட்டது. அதற்காக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று கேட்டோம். அதற்கு இதுவரை எந்தப் பதிலும் வரவில்லை. அடுத்தபடியாக இன்றைக்கு மதுரையில் தினமலர் பத்திரிகை அலுவலகம் தாக்கப்பட்டிருக்கிறது. தினமலர் பத்திரிகை அலுவலகம் அடித்து நொறுக்கப்பட்டிருக்கிறது. அதைப்போல, ஜுனியர் விகடன் பத்திரிகையின் போட்டோகிராபர் ஒருவர் சென்னையிலே சென்ற வாரம் தாக்கப்பட்டிருக்கிறார். ராஜ்ய சபை உறுப்பினர் ஒருவர் அந்தச் செயலைச் செய்திருக்கிறார் என்று தெரிந்தும், இன்னும் இந்த அரசு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. இந்த ஆட்சியிலே உங்களை ஆதரித்த பத்திரிகைகள் மீது நீங்கள் தாக்குதல் நடத்தியிருக்கிறீர்கள். இதற்குக் காரணம் நம்முடைய முதல்வர் அவர்களுடைய மகன் இந்த இரண்டு செயல்களையும் மதுரையில் செய்திருக்கிறார் என்று தெரிவதால்...



1998 மார்ச் 19]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவையில் இல்லாத ஒருவரைப் பற்றி இங்கே பேசக்கூடாது என்பது மரபு. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரம் அவர்கள் இங்கே பேசும்போது, ஜுனியர் விகடன் அலுவலகத்தில், ஒரு மாநிலங்களவை உறுப்பினர் சென்று தகராறு செய்தார் அல்லது தாக்கினார் என்று குறிப்பிட்டார்கள். எந்தப் புகாரும் ஜுனியர் விகடன் அலுவலகத்திலிருந்து காவல் துறைக்கோ, அரசுக்கோ வரவில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கின்றேன். மதுரை தினமலர் அலுவலகத்தைப் பற்றிக் குறிப்பிட்டார். தினமலர் பத்திரிகையில் எத்தனையோ செய்திகள் வருகின்றன. குறிப்பிட்ட ஒரு கட்சியைப் பற்றி மாத்திரம் இல்லாமல், எல்லாக் கட்சிகளைப் பற்றியும் அதிலே செய்திகள் வருகின்றன. இன்னும் பாராட்டியும் தாக்கியும் செய்திகள் வருகின்றன. யாரோ சொல்லப்போனால், கோவை குண்டு வெடிப்புக்குக் கூட 'டீ கடை பெஞ்சு' ஒருவர் காரணம் என்று, தினமலர் பத்திரிகையில் என்ற பகுதியில் எழுதப்பட்டிருந்தது. குறிப்பாக, நடராஜன் என்பவர் அதற்குக் காரணம் என்று தினமலர் பத்திரிகையில் பட்டவர்த்தனமாக எழுதப்பட்டிருந்தது. அதற்கு இரண்டு நாளைக்குப் பிறகுதான், தினமலர் பத்திரிகை அலுவலகம் தாக்கப்பட்டது. அதனால் நடராஜன்தான் ஆட்களை அனுப்பித் தாக்கினார் என்று நான் எடுத்துக் கொள்ளவில்லை. யாராவது புண்பட்டவர்கள் அதன் காரணமாக இந்தக் காரியங்களைச் செய்து இருக்கலாம். அதற்காக முதலமைச்சருடைய மகன்தான் என்று சொல்வதற்கு என்ன ஆதாரத்தை வைத்துக் கொண்டு சொல்கிறார் என்பதை அவர் இங்கு விளக்க வேண்டும்.

பிற்பகல் 1-05

**திரு. பி.ஆர். சுந்தரம்:** நானும் ஒரு பத்திரிகையாளன். (சிரிப்பு) முதலமைச்சர் கூறியதைக் கூறுகின்றேன். 'பத்திரிகை மீது விழுந்த அடி என் மீது விழுந்த அடி, ஆகவே பத்திரிகைகள் கூறுகின்ற செய்தியை நான் ஏற்றுக்கொள்கிறேன்' என்று முதலமைச்சரே இந்த அவையிலே கூறியிருக்கின்ற காரணத்தினால், ஒருசில பத்திரிகைகளில் அவருடைய மகன் மு.க. அழகிரியும், அவருடைய ஆட்களும்தான் இதைச் செய்திருக்கிறார்கள் என்று வந்த அடிப்படையில் நான் அந்தக் கருத்தைத் தெரிவித்தேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, நான் அதை மறுக்கின்றேன். அதற்கான பொறுப்பை திரு. சுந்தரம் அவர்கள் ஏற்றுக் கொள்கிறார்களா?

**திரு. பி.ஆர். சுந்தரம்:** பத்திரிகைச் செய்தியை நான் மீண்டும் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். அடுத்தபடியாக....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அந்தச் செய்தியை முதலமைச்சர் மறுத்து விட்டார். பொறுப்பு ஏற்றுக் கொள்கிறீர்களா என்று கேட்கிறார்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாளையதினம் இன்னொரு பத்திரிகையில் அந்தக் காரியத்தைச் செய்தவர் சுந்தரம்தான் என்று வந்தால் அதை சுந்தரம் ஏற்றுக் கொள்வாரா?

**திரு. பி.ஆர். சுந்தரம்:** பத்திரிகையில் வந்த செய்தியை அடிப்படையாக வைத்து நான் தெரிவித்தேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பத்திரிகையிலே வந்த செய்தியை அடிப்படையாக வைத்து. நீங்கள் கருத்தைத் தெரிவிக்கக்கூடாது.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** அடுத்தபடியாக, மின்சாரத் தட்டுப்பாடு, எனக்கு முன்னர் பேசிய உறுப்பினர்கள் அழகிரியாக இருந்தாலும் சரி, சுப்பராயன் அவர்களாக இருந்தாலும் சரி, மாண்புமிகு உறுப்பினர் அழகிரி அவர்கள், சுகாதாரத் துறையை பொறுத்தவரையில், ஆஸ்பத்திரிகள் இயங்கவில்லை, அங்கே நோயாளிகள் சரியாக பாதுகாக்கப்படவில்லை என்று கூறினார்கள் அடுத்தபடியாக சுப்பராயன் அவர்கள் கூறும்போது, மின்சாரத்தைப்பற்றி, இந்த மின்சார வெட்டைப்பற்றி கூறினார்கள். நான் இரண்டையும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே அதிகச் சுமையாக இந்த இரண்டு துறைகளும் இருக்கின்ற காரணத்தினால்தான் இந்த மின்சாரத் துறையும், சுகாதார...
(மணியடிக்கப்பெற்றது)



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஆளுநர் உரை பற்றிப் பேசுங்கள். முதலிலே ஒரு குற்றச்சாட்டைச் சொன்னீர்கள். பொறுப்பு ஏற்க முடியுமா என்று முதலமைச்சர் அவர்கள் கேட்டார்கள். "பொறுப்பு ஏற்றுக் கொள்கிறேன்" என்று சொல்லாமல் அதை விட்டு விட்டுத் தேவையில்லாமல் பேசுகிறீர்களே?

**திரு. பி.ஆர். சுந்தரம்:** அறிவிக்கப்படாத மின்சார வெட்டு இருந்தது. தற்போது மின்சார வெட்டு அறிவிக்கப்பட்டிருக்கிறது. என்னுடைய பகுதியில் சேலம் மாவட்டம், நாமக்கல் மாவட்டத்தில் மின்சாரம் ஒரு மணி நேரம் தொழிற்சாலைகளுக்குக்—கொடுக்கப்பட மாட்டாது, அதேமாதிரி வீடுகளுக்கு 2 மணி நேரம், 3 மணி நேரம் கொடுக்கப்படாது என்று அறிவித்தும், மற்ற நேரங்களிலும் சரியாக மின்சாரம் வருவதில்லை. இரண்டு மணி நேரம் என்றால் 3 மணி நேரம் நிற்கிறது, 4 மணி நேரம் நிற்கிறது.

எனது பகுதியைப் பொறுத்தவரையில் ஜவ்வரிசி தொழிற்சாலைகள் மிக அதிகமாக இருக்கின்றன. அந்தக் கிழங்குகளை எல்லாம் அரைவை செய்ய முடியாவிட்டால், அங்கு விவசாயமே பாதிக்கப்படும். அதுபற்றி கவர்னர் உரையில் எதையும் குறிப்பிடவில்லை என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக வெள்ள நிவாரணம் பற்றி குறிப்பிட்டு இருக்கிறார்கள். வெள்ள நிவாரணத்திற்கு நாங்கள் உதவி செய்து இருக்கிறோம் என்ற புள்ளி விவரத்தைக் கொடுத்திருக்கிறார்கள். நாணயத்திற்கு இரண்டு பக்கங்கள் உண்டு என்பது உங்களுக்குத் தெரியும் என்று நினைக்கிறேன். அதைப்போல வறட்சி நிவாரணம் பற்றி சரிவர இதில் குறிப்பிடவில்லை. குறிப்பாக சேலம், நாமக்கல் மாவட்டங்களில் வறட்சி தலைதூக்கிக் கொண்டிருக்கிறது. நான் ஏற்கெனவே அரசாங்கத்திற்கு அறிக்கை அனுப்பி இருந்தேன். அறிக்கை அனுப்பியதற்கு எந்தவிதமான பதிலும் இல்லை. கிட்டத்தட்ட இந்த இரண்டு மாதங்களாகத்தான் சரியாக இருக்கிறதேயொழிய நான் கொடுத்தபோது, குடிப்பதற்குக்கூட குடிதண்ணீர் கிடைக்காமல் பல மைல்கள் அவர்கள் சென்று தண்ணீரை எடுத்துக் கொள்ள வேண்டிய சூழ்நிலை இருந்தது. ஆகவே இந்த கவர்னர் உரையில் வறட்சி நிவாரணத்தைப் பற்றி எதுவுமே குறிப்பிடவில்லை.

ஊராட்சிகளுக்கு அதிக அதிகாரம், அதிகாரம் என்று அனைத்துக் கட்சிகளும் கத்திக் கொண்டிருக்கிறோம் அமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கை அளித்தார்கள். அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் சேர்ந்த ஒரு குழு அமைக்கப்படும் என்று கூறினார்கள். அந்தக் குழு கூட்டப்பட்டதா? அவர்கள் அறிக்கை அளித்தார்களா... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவை துணைத் தலைவரவர்களே, அந்தக் குழு கூட்டப்பட்டது. இதுவரை என்ன அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைக் கேட்டு அறிந்தார்கள். கொடுத்து இருக்கிறோம். அதற்கு பிறகு அவர்கள் இன்னின்னது வேண்டும் என்று உங்களிடத்தில் தெரிவிக்கிறோம் என்று தெரிவித்து இருக்கிறார்கள். அது இன்னும் சில பேரிடத்திலிருந்து வரவில்லை. அதற்கான கூட்டம் கூட்டுவதற்கு அழைத்த நேரத்தில் தேர்தல் வந்தது. திரும்பவும் இரண்டொரு நாட்களில் கூட்டுவதாக இருக்கிறோம். நீங்களும், ஏதாவது தகவல் இருந்தால் தெரிவிக்கலாம்,- சரியாக இருந்தால் ஏற்றுக் கொள்ளலாம்.

பிற்பகல் 1-10

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அடுத்தபடியாக, பொது விநியோக முறைத் திட்டத்தைப் பொறுத்தவரையில், நாங்கள் சென்ற கூட்டத் தொடரிலே இதைப்பற்றி மிக விளக்கமாக எடுத்துக் கூறினோம். மூன்றுவிதமான கார்டுகளைக் கொடுத்திர்களானால், அது நடைமுறைக்கு ஒத்துவராது, ஆகவே, இதிலே உள்ள குளறுபடிகளைத் தவிர்க்க வேண்டும் என்று கூறினோம். இப்போது அதை உணர்ந்து இரண்டுவிதமான கார்டுகள் கொடுப்பதற்கு அரசு முயற்சி எடுத்து இருக்கின்றது. உடனடியாக அந்தக் கார்டுகளைக் கொடுத்தால்தான் பொதுமக்கள் அவர்களுடைய அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள முடியும் என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, மத்தியிலே நிலையான ஆட்சியை அமைப்பதற்காகவும், மாநிலத்திலே இந்த ஆட்சிக்கு ஆதரவைக் கொடுத்ததைப் போலவும் ஒரு மாயையை ஏற்படுத்தி, கவர்னர்



உரையிலே அதைப்பற்றி குறிப்பிட்டு இருக்கிறார்கள். அருப்புக்கோட்டையிலே நடந்ததைப் பொறுந்தரையில், அருப்புக்கோட்டை தேர்தலிலே என்னவிதமாக தேர்தல் நடந்தது, அங்கே எப்படி எல்லாம் தேர்தல் தில்லுமுல்லுகள் நடந்தன என்பதைப் பற்றி ஒருசில கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். இதை நான் ஆதாரபூர்வமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அருப்புக்கோட்டையில் நடந்த தேர்தலைப் பற்றி கிட்டத்தட்ட 15 எப்.ஐ.ஆர் சாப்பிகள் போடப்பட்டிருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சி துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏதாவது ஒரு விஷயத்தைச் சொல்லும்போது அதற்கு பொறுப்பு ஏற்க வேண்டும் என்று கேட்டால், ஏற்றுக் கொள்கிறேன் என்று சொல்கிற உறுப்பினர்களுக்குத்தான் இந்த மாதிரி பேச அனுமதி எல்லாம் அளிக்க வேண்டும். அதைவிட்டு விட்டு, இந்த மாதிரி கண்டபடி பேசிவிட்டுப் போவதெல்லாம் நல்லதல்ல.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அருப்புக்கோட்டையிலே நடந்ததைப் பற்றி நான் ஆதார பூர்வமாக வைத்திருப்பதில் ஒருசிலவற்றை மட்டும்.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அந்த ஆதாரத்தை எல்லாம் முன்பாகவே என்னிடம் கொண்டு வந்து காட்டினீர்களா?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டவிதிப்படி தங்களிடத்திலே அதைக் காட்டிவிட்டு, சரிதானா என்பதை நீங்கள் சரிபார்த்ததற்குப் பிறகுதான் அதைப்பற்றி அவர் இங்கே பேச முடியும். (குறுக்கீடு)

**திரு. பி.ஆர். சுந்தரம்:** கோர்ட்டுக்குப் போவதற்கு எங்களுக்குத் தெரியும். கோர்ட்டுக்குப் போகாமல் சும்மா இருப்போமா? கோர்ட்டுக்குப் போனால் என்ன பதில் வரும் என்பதைப் பார்க்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆர். சொக்கர்.

**•திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, I am standing on a point of clarification, கடந்த கூட்டத் தொடரின்போது, நான் பேசும்போது, முன்னாள் முதலமைச்சரைப் பற்றியும், அவருடைய உடன்பிறவாச் சகோதரியைப் பற்றியும், பெயரைக் குறிப்பிட்டுச் சொன்னபோது, மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்கள் குற்றச்சாட்டைச் சொல்லும்போது, அதுவும் அவையில் இல்லாதவர்களைப் பற்றிச் சொல்லும்போது, பெயரைக் குறிப்பிட்டுச் சொல்லக்கூடாது என்று சொல்லி, அது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்பட்டது. இன்று, மாண்புமிகு முதலமைச்சருடைய மகனைப்பற்றி ஒரு குற்றச்சாட்டை ஆதாரம் இல்லாமல் சொல்லும்போது, அதை நீங்கள் அவைக்குறிப்பில் வைத்துக் கொண்டிருக்கப் போகின்றீர்களா? நான் பேசும்போது அவைக்குறிப்பிலிருந்து எடுத்து இருக்கிறீர்கள். எனவே, இதையும் எடுக்க வேண்டும் என்பது என்னுடைய கருத்து. இது ஒன்று.

இரண்டாவது, அருப்புக்கோட்டை தேர்தலைப் பொறுத்தவரையிலும் அதைப்பற்றி தேர்தல் கமிஷனுக்கு ஏற்கெனவே புகார் கொடுத்து, அந்தப் புகாரை பரிசீலனை செய்த தேர்தல் கமிஷன் அது ஆதாரமற்றது என்று நீக்கிய பிறகு, அங்கே தள்ளுபடி செய்த பிறகு, அதை இந்த மன்றத்திலே எழுப்ப முடியுமா? அதை நீங்கள் அனுமதிக்கப் போகிறீர்களா என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஏற்கெனவே உறுப்பினர் திரு. சுந்தரம் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய மகன் குறித்து குறிப்பிட்ட குற்றச்சாட்டுகளுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மறுப்புத் தெரிவித்ததோடு மட்டுமல்லாமல், ஆதாரம் இருந்தால் பொறுப்பேற்றுக் கொள்கிறீர்களா என்று கேட்டதற்கு எந்தப் பதிலும் சொல்லாமல், அடுத்த பிரச்சினைக்கு வந்துவிட்டார். மேலும் இப்போது அருப்புக்கோட்டை தேர்தலைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறார். இதெல்லாம் தேர்தல் கமிஷனிடம் பேச வேண்டிய பேச்சு. எனக்கு நேரம்தான் முக்கியம். இன்னும் ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள். இல்லை என்றால் அடுத்த உறுப்பினரை நான் அழைக்க வேண்டியிருக்கும்.

**திரு. பி. ஆர். சுந்தரம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆரம்பத்தில் பேசிய மாண்புமிகு உறுப்பினர் அழகிரி அவர்களுக்கு



ஒதுக்கப்பட்ட நேரத்தையும், மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரத்தையும் சற்றுத் திரும்பிப் பார்க்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஆளும் கட்சி மற்றும் ஆளும் கட்சியை ஆதரிக்கின்ற, கவர்னர் உரையை ஆதரித்துப் பேசுகின்றவர்களுக்கு ஒரு நீதியும், மற்றவர்களுக்கு ஒரு நீதியும் தயவுசெய்து நீங்கள் ஏற்படுத்தக்கூடாது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள், இருக்கைக்கு உள்நோக்கம் கற்பித்துப் பேசக்கூடாது. இந்த இருக்கையினுடைய பார்வை விசாலமானது.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** கோவை குண்டு வெடிப்பைப் பற்றிப் பலர் இங்கே கூறினார்கள். அரசு நடவடிக்கை எடுத்தது என்று கூறினார்கள். நாங்கள் கேட்கின்றோம். ஒரேயொரு கேள்வி. குண்டு வெடித்ததற்குப் பின்னால், இந்த அரசு வீட்டுக்கு அனுப்பப்பட்டு விடுமோ என்று பயந்து, நீங்கள் எடுத்த நடவடிக்கையை, நீங்கள் முன்பே எடுத்திருந்தால், கோவையிலே குண்டு வெடித்திருக்காது என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1-15

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேரம் முடிந்துவிட்டது. (குறுக்கீடு) நீங்கள் சீக்கிரம் உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாரதீய ஜனதா கட்சியினுடைய துணைத் தலைவர் இராஜகோபால் அவர்கள் கடந்த ஜனவரி மாதம் 7 ஆம் தேதி முதல்வர் அவர்களைக் கோட்டையிலே சந்தித்து ஒரு மகஜர் கொடுத்திருக்கிறார்கள். அப்போதே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தால் இந்தச் சம்பவம் நடந்திருக்காது. இந்தச் சம்பவத்தைப் அத்வானி அவர்களே பேசியிருக்கிறார்கள். இந்தச் சம்பவத்தைப் பொறுத்தவரையில் திராவிட முன்னேற்றக் கழகக் கட்சியைச் சார்ந்த முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கு குண்டுவெடிப்பது அன்று காலையிலேயே தெரியும் என்று கூறியிருக்கிறார்கள். இதையெல்லாம் பார்க்கும்போது முதல்வர் அவர்கள் ஏற்கெனவே பேசியிருக்கிறார்கள், நீ மிதிப்பது ஒரு காட்டுமிராண்டித்தனம் என்று. அதேபோல் தஞ்சை பெரியகோயிலை இடித்தால் இந்த இந்துக்கள் பார்த்துக்கொண்டிருப்பார்களா என்று கூறியதன் விளைவுதான் இந்தத்

தீவிரவாதிகளுக்கு ஊக்கம் ஏற்பட்டு அவர்கள் இந்தச் செய்கையிலே ஈடுபட்டார்கள் என்பதைக் கூறிக்கொண்டு, இதற்கு தமிழக அரசும் பொறுப்பு ஏற்கவேண்டும். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன்.

***திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியை பிரதான நோக்கமாகக் கொண்ட இந்த ஆளுநர் உரை விவாதத்திலே பங்கேற்பதிலே நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

தன்னலமற்று, புகழ் விரும்பாமல் ஆசைகளைத் துறந்து, நாட்டிற்காக தன்னை அர்ப்பணித்துக்கொண்ட நமது தமிழகத்தைச் சார்ந்த விஞ்ஞானி டாக்டர் அப்துல் கலாம் அவர்களுக்கும், இசை மேதை நமது எம். எஸ். சுப்புலட்சுமி அவர்களுக்கும், பல பொறுப்புக்களை வகித்து, சிறந்த சேவையாற்றி, இன்று பெருமிதத்தோடு அமர்ந்திருக்கின்ற நமது முன்னாள் ஆளுநர் சி. சுப்பிரமணியம் அவர்களுக்கும், இந்த நாட்டின் உயரிய விருதான 'பாரத ரத்னா' விருது வழங்கப்பட்டிருக்கின்ற இந்த நல்ல வேளையில், இந்தப் பெருமையில் நானும் பங்கெடுத்தவனாக இந்த ஆளுநர் உரையிலே என்னுடைய கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைய சூழ்நிலையில் கோவை குண்டுவெடிப்புச் சம்பவம் பற்றியும் மற்றும் பல்வேறு சம்பவங்கள் பற்றியும் இந்த அவையிலே பிரதானமாக விவாதிக்கப்பட்டு வருகின்றது. கோவையிலே குண்டுவெடிப்பு, அதைத் தொடர்ந்து பல தீவிரவாதிகளிடமிருந்து குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டு, பலர் கைதாகிக் கொண்டிருந்த வேளையிலே நாம் இங்கு ஒன்றை கவனிக்கவேண்டும். கைதாக்கப்படுகிற தீவிரவாதிகள் ஒவ்வொருவரும் இளைஞர்களாக இருந்துகொண்டிருக்கிறார்கள். நாம் குண்டுவெடிப்பைத் தவிர்ப்பதற்கு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்த வேளையிலே எத்தனை முறை குண்டுவெடித்தாலும், அதைத் தடுக்கின்ற நடவடிக்கைகளை மட்டும்தான் செய்து கொண்டிருக்கிறோம்.



(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

திருமணம் செய்துகொண்டு, நல்ல முறையிலே வாழ்ந்து, வாழ்க்கையை அனுபவிக்க வேண்டிய இளைஞர்கள் தீவிரவாதிகளாக ஏன் மாறுகிறார்கள் என்கின்ற அடிப்படைக் காரணத்தை நாம் கண்டறியத் தவறி விடுகிறோம். இவர்கள் தீவிரவாதிகளாக மாறுவதற்கு யார் காரணம்? எந்தவித சூழ்நிலைகள் இவர்களைத் தீவிரவாதிகளாக மாற்றியது? நல்ல முறையில் வாழ வேண்டியவர்கள் ஏன் தீவிரவாதிகளாக மாறுகிறார்கள் என்ற அடிப்படைக் காரணத்தைக் கண்டறிந்தால்தான் இந்தப் பிரச்சினை ஒரு ஆழ்ந்த முடிவிற்கு வரும் என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டுகிறேன். கோயம்புத்தூர் சம்பவத்திற்குப் பிறகு தீவிரவாதங்கள் என்று கருதப்படுகின்ற இரண்டு இயக்கங்கள் தடை செய்யப்பட்டன. அதை நான் வரவேற்கிறேன். அதே சூழ்நிலையிலே அந்த இயக்கங்கள் தீவிரவாத இயக்கங்களாக மாறுவதற்கோ, அல்லது உருவாவதற்கோ காரணமான இயக்கங்களும் தடை செய்யப்பட்டிருக்க வேண்டும். ஒருவருக்கு மட்டும் ஒரு நியதி, மற்றவருக்கு ஒரு நியதி என்று இருக்கக்கூடாது. இருவருக்குள் தகராறு ஏற்படுகிறது என்று சொன்னால், அதில் ஒருவர் மட்டுமே காரணமாக இருக்கமுடியாது. இதிலே எதிர்த் தரப்பிலிருந்து அந்தத் தூண்டுகோலுக்குக் காரணமாக இருந்தவர்களையும் தடைசெய்து, இந்த நாட்டிலே நீதியை நிலைநாட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. சற்றுமுன் பேசிய பி.ஜே.பி. உறுப்பினர், நண்பர் வேலாயுதன் அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். இரண்டு தாத்தாக்களுடைய போட்டோக்களை வைத்து வழிபடுவதிலே பிரச்சினை, ஆகவேதான் பாபரி மஸ்ஜித்தை இடித்தோம் என்றார்கள். நீங்கள் சொல்வது உண்மைதான். ஆனால் நீங்கள் இன்று ஏற்றுக்கொண்டிருக்கக்கூடிய அரசமைப்பு சட்டம், மத்தியிலே உங்கள் அரசு அங்கு அமைந்து, அது பின்பற்ற வேண்டிய அரசமைப்பு சட்டம். இந்த நாட்டிலே மூன்று நிலையிலே இந்த அரசமைப்பு சட்டம் பிரிக்கப்பட்டிருக்கின்றது. சட்டத் துறை, நீதித் துறை, நிர்வாகத் துறை என்று. இந்த மூன்று துறைகளிலும் சரிசமம் வாய்ந்த நீதித் துறையில் இந்த வழக்கு நிலுவையிலே இருக்கிறபோது . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. நிஜாமுதீன் பேசிக் கொண்டிருக்கிறார். இங்கே பலபேர் தனியாகப் பேசிக் கொண்டிருக்கின்றார்கள். திரு. ஞானசேகரன் அவர் இருக்கைக்குச் செல்ல வேண்டும்.

**திரு. ஜி. நிஜாமுதீன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்காடு மன்றத்திலே வழக்கு நிலுவையிலே இருக்கும்போது சட்டத்தைக் கையில் எடுத்துக்கொண்டு நீங்கள் அரசமைப்பை மிதித்து, அந்த அரசமைப்புக்குப் புறம்பாக நடந்துகொண்டிருக்கிறீர்கள் என்று சொன்னால், நீங்கள் எப்படி இந்த நாட்டின் இறையாண்மையைக் காக்கப் போகின்றீர்கள்? உங்களால் எப்படி நீதியான, நிலையான, நேர்மையான ஆட்சியைத் தர முடியும்? இதை நீங்கள் சிந்தித்துப் பார்த்தீர்களா? இன்று இந்த அவையிலே பேசுகின்றீர்கள், அதைச் செய்தது நியாயம் என்று இந்த அவையிலே நீங்கள் வாதித்து இருக்கின்றீர்கள். எப்படி இரண்டுவிதமான பேச்சுக்கள் முறையாக இருக்க முடியும்? வழக்காடு மன்றம் என்பது எங்களுக்கும், எல்லோருக்கும், அனைவருக்கும் சமமான ஒன்று. அந்த வழக்காடு மன்றத்திலே ஒரு வழக்கு இருக்கும்போது அதை இடித்தது சரிதான் என்று பாரதீய ஜனதா கட்சி உறுப்பினர் பேசுவாரேயானால், இன்று உங்கள் அரசாட்சியிலே அந்தமாதிரி பின்பற்றப்படுமா? இதுதான் என்னுடைய கேள்வி.

பிற்பகல் 1-20

**திரு. சி. வேலாயுதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள்தான் ரொம்ப நேரம் இறைவனைப் பற்றிப் பேசிவிட்டீர்களே? அப்புறம் இப்போது என்ன? (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த அயோத்தி சம்பவத்தைப் பற்றிச் சொல்லும்போது நான் தெளிவாகச் சொன்னேன். அது வழிபாட்டு ஸ்தலம் அல்ல. அங்கிருந்த நூற்றுக்கணக்கான வழிபாட்டு ஸ்தலங்களுக்கு-யாரும் தடுப்பதற்கு ஆள் இல்லாதபோதுகூட- எந்தச் சேதமும் ஏற்படவில்லை. எனவே, முஸ்லிம்களுடைய வழிபாட்டு முறையை மதிக்கின்றோம். அவர்களுக்கு எந்தச் சேதமும் ஏற்படாமல் பார்த்துக்கொண்டார்கள் என்பதை மீண்டும் அழுத்தமாகச் சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்கு அடுத்த மதத்தைப் பற்றிச் சொல்வதற்கு உரிமையில்லை. இஸ்லாமியர்கள் ஒரு வழிபாட்டு



ஸ்தலம் என்று சொன்னால், நாம், இந்துக்கள், அதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். நீங்களாகவே அதைப் பார்த்து, அது வழிபாட்டு ஸ்தலம் அல்ல என்று சொல்லக் கூடாது.

***மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது வழிபாட்டு ஸ்தலமா, இல்லையா என்பது வேறு பிரச்சினை. . பாபர் மசூதி முஸ்லிம்களின் சொத்து, அவர்களுக்கு உரிமை படைத்தது. அதை நாம் மறந்துவிடக் கூடாது.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது வழிபாட்டு ஸ்தலமா அல்லது இல்லையா என்பது வழக்காடு மன்றம் தீர்மானிக்க வேண்டிய ஒன்று. அந்த . வழக்காடு மன்றம் அதை மசூதி என்றோ அல்லது வீடு என்றோ அல்லது இராமர் கோயில் என்றோ நினைவுச் சின்னம் என்றோ அறிவிக்கட்டும். அதற்குள் உங்களுக்கு ஏன் அவசரம்? நீங்கள் ஏன் கட்ட பஞ்சாயத்து முறையிலே போராடுகின்றீர்கள்? அப்படியென்றால், உங்களிடத்திலே எப்படி நியாயம் இருக்க முடியும் என்பதை நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகின்றேன். அதோடு மற்றொன்றையும் தெரிவித்துக்கொள்கிறேன். ** என்று சொன்னார்கள். அதை நான் வன்மையாகக் கண்டிக்கின்றேன். எந்த மசூதியிலும் யாருடைய படமோ, எந்தத் தனி நபருடைய நிழல் படமோ அல்லது உருவங்களோ வைத்து வழிபடுவது கிடையாது. இது உருவமற்ற வழிபாடு என்பதை நண்பர் வேலாயுதன் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தப் பிரச்சினையினாலே தமிழ்நாட்டுடைய பொருளாதாரம் பின்தங்கும் நிலைக்கு வந்து கொண்டிருப்பதற்கு இதுபோன்ற கலவரங்கள் காரணமாக இருந்து கொண்டு இருக்கின்றன. இந்தக் கலவரங்கள் மட்டுமல்ல, தென் மாநிலங்களிலே ஜாதிக் கலவரங்கள். சிலையிலே ஏதாவது பட்டுவிட்டால் அதற்கு ஒரு கலவரம். 'வேண்டாத மருமகள் கை பட்டால் குற்றம், கால் பட்டால் குற்றம்' என்பார்கள். அதுபோல, சிலையிலே ஏதாவது ஒரு பகுதி உடைந்து விட்டால் அதற்கு ஒரு கலவரம். இந்தக் கலவரங்களுக்கு அடிப்படைக் காரணங்கள் என்ன? எதனால் ஏற்படுகிறது என்பதைத் தெரிந்துகொண்டு, அதை சீர்படுத்தினால்தான் நாட்டிலே ஒரு நிலையான நிம்மதியை ஏற்படுத்த முடியும்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** அதற்கான அடிப்படைக் காரணங்களை ஆய்ந்து, அறிந்து இந்த அரசு செயல்படுத்த வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

சமீபத்திலே ஏற்பட்ட பெருமழையினால், தஞ்சை, நாகை, திருவாரூர் ஆகிய 3 மாவட்டங்களும் பாதிக்கப்பட்டு, அதனால் பொருள் சேதம் ஏற்பட்டதை இந்த ஆளுநர் உரையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். அதே நேரத்தில் அந்தப் பகுதிகள் பாதிக்கப்பட்டதற்காக, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிவாரணப் பணிகளுக்காக 58 கோடி ரூபாய் ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். அதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்தில் அந்தப் பாதிக்கப்பட்ட விவசாயிகளிடத்திலிருந்து, அரசு வசூலிக்கும் வாய்தாவோ, வரியோ தள்ளுபடி செய்யப்படாமல் உள்ளது, அவர்களுக்காக 58 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்ட நிலையில் அவர்களிடமிருந்து வாய்தா, வரி வசூல் செய்வது எந்த விதத்தில் நியாயமாக இருக்க முடியும் என்று கேட்க விரும்புகிறேன். அவர்களுக்கு முறையாகக் கூட்டுறவுக் கடன்களைத் தள்ளுபடி செய்திருக்க வேண்டும். இல்லை என்றால், குறைந்தபட்சம் அந்த வட்டியையாவது தள்ளுபடி செய்து வாய்தாவையும், வரியையும் தள்ளுபடி செய்ய வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டாவது பசுமைப் புரட்சியை ஏற்படுத்தும் இவ்வரசின் முயற்சிகள் ஈடு இணையற்றது. அதை நான் இந்திய தேசிய லீக் கட்சியின் சார்பாகப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதிலே பெருமுயற்சியாக வாய்க்கால்களையும், ஏரிகளையும், ஆறுகளையும் சீர்படுத்த எண்ணித் துணிந்து முயற்சித்திருப்பது கடந்த காலத்தில் எந்த அரசும் செய்யத் துணியாத, செய்ய முயற்சிக்காத, செய்ய நினைக்காத ஒரு பணியை இந்த அரசு செய்திருக்கிறது. இது மிகப் பெரும் சாதனையாகும். இதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதே நேரத்தில், இந்தப் பணியை மீண்டும் கடைமடைப் பகுதியிலிருந்து தொடர வேண்டுமாய் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுடைய ஒலிபெருக்கி சரியாக இல்லை, உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் பகுதியிலுள்ள ஏரிகளையும் . . . . .



பிற்பகல் 1-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. ஜி. நிஜாமுதீன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை, இல்லை. ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை என்று சொல்லக்கூடாது.

**திரு. ஜி. நிஜாமுதீன் :** தலைவர் அவர்களே, முக்கியமான பிரச்சினை. முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லாமே முக்கியமான பிரச்சினைதான்.

**திரு. சி. வேலாயுதன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்லாததைச் சொன்னதாக அவர் சொல்லியிருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர், நீங்கள் சொல்லாததைச் சொல்லியிருந்தால், நான் அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுகிறேன். திரு. ப. கோவிந்தன்.

**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆளுநர் உரையில் எனக்குப் பேச வாய்ப்பு அளித்த தங்களுக்கு நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். உலக அரசியல் அரங்கிலே இன்று உற்று நோக்கிப் பேசப்படும் எங்கள் தலைவராம் மக்கள் காவலர் டாக்டர் ராமதாஸ் ஐயா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்கி என்னுடைய உரையைத் தொடங்குகிறேன்.

தேர்தல் காலத்திலே திண்டிவனத்திலே அண்ணல் அம்பேத்கர் சிலைக்கு கேவலமான முறையிலே செருப்பு மாலை அணிவித்தவர்களை, அந்தத் தேச துரோகிகளை வன்மையாகக் கண்டிக்கின்றோம். இந்தக் கேவலமான சம்பவத்தைக் கண்டித்து சாகும்வரை உண்ணாவிரதம் இருந்த எங்கள் திண்டிவனம் காந்தியடிகளாம் டாக்டர் ராமதாஸ் ஐயா அவர்களை ஏளனம் பேசி அறிக்கைவிட்ட நபர்களுக்கு இம்மாமன்றம் மூலமாக எனது கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேற்படி அம்பேத்கர் சிலைக்கு அவமரியாதை செய்த துரோகிகளை அறிந்து தக்க தண்டனை வழங்க வேண்டும் என்று இம்மாமன்றம் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

குண்டு வெடிப்பினால் தமிழக மக்களுக்கு ஏற்பட்டுள்ள பீதியைச் சொல்லி முடியாது. எங்கு வெடிக்கும், எப்போது வெடிக்கும், எந்த அப்பாவி மக்கள் சாவார்கள் என்ற அச்சமும், பீதியும் திசையெட்டும் பரவிவிட்டது. நேற்றுகூட எங்கள் சட்டமன்றக் கட்சியினுடைய தலைவர் கணேசன் அவர்களின் மாவட்டத்தில் பள்ளிப்பாளையத்திலே—ஜீப்பிலே—வெடிகுண்டு வெடித்திருக்கிறது. முன் எப்போதும் இல்லாத இந்த இழிநிலை அபாயம் அன்றாட வாழ்க்கையையே பாதித்துவிட்டது. சுமுக வாழ்க்கை நிலை ஏற்பட இந்த அரசு திறமையாகச் செயல்பட வேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக வலியுறுத்துகிறேன்.

ஆளுநர் உரையில் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. எனது தாரமங்கலம் தொகுதியிலே சுமார் 100-க்கு மேற்பட்ட மாணவர்களைக் கொண்ட ஓராசிரியர் பள்ளிக்கூடங்கள் 16, இன்றைய தேதி வரை நடைபெற்று வருகின்றன. அந்தப் பள்ளிக்கூடங்களில் ஆசிரியர்கள் உடல்நலம் சரியில்லாமலோ, சொந்தப் பணியாக விடுப்பில் சென்றாலோ அந்தப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கும் விடுப்பு என்ற நிலை இருக்கிறது. இந்த நிலையை இதற்குமுன் இரண்டு நிதிநிலை அறிக்கையிலும் கூறியுள்ளேன். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களிடத்திலும் மனு கொடுத்துள்ளேன். மாணவர்களுடைய கல்வி நலன் கருதி இந்த நிதி ஆண்டிலாவது ஈராசிரியர் பள்ளிகளாக மாற்றிட வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 40 மாணவர்களுக்கு ஓராசிரியர் நிலை என்று அறிக்கையில் கூறியுள்ளார். அவ்வாறு முழுமையாகச் செயல்படுத்தி கிராமப்புற மாணவர்களுக்கு கட்டாயக் கல்வியும், தரமான கல்வியும் வழங்கிட வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

புளோரைடு கலந்த உப்புத் தண்ணீரைக் குடித்தால் மனிதனுடைய உடல் நலத்திற்குக் கேடு என்று அரசு ஆய்வில் சொல்லப்படுகிறது. எனது தாரமங்கலம் தொகுதியைப் பொறுத்தவரைக்கும் மொத்தமுமே புளோரைடு என்று சொல்லப்படுகின்ற உப்பு நீர் உள்ள பகுதியாகும். பல ஆண்டு காலமாக இந்த நீரையே குடித்து பல்வேறு நோய்களுக்கு ஆளாக்கப்பட்ட நிலையில் வாழ்கின்ற மக்களுடைய நலனைக் காக்கும் வகையிலே புளோரைடு உப்பு நீருக்கு மாற்று குடிநீர் வழங்கும் திட்டம் காவேரி குடிநீர்த் திட்டம். பூலாம்பட்டியிலிருந்து தாரமங்கலம் வழியாக வீரபாண்டி செல்லும் திட்டத்தையும், மேட்டூரிலிருந்து



மேச்சேரி வழியாக ஓமலூர், காடையாம்பட்டி செல்லும் திட்டத்தையும், இந்த இரண்டு, காவேரி குடிநீர் வழங்கும் திட்டங்களையும் உடனடியாக அரசு செயல்படுத்தி மக்களின் நலன் காக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையில் நபர் ஒன்றுக்கு நாள்தோறும் 10 லிட்டருக்குக் குறைவான குடிநீர் பெறுகின்ற ஊரகக் குடியிருப்புகளுக்கு 40 லிட்டர் வீதம் போதுமான குடிநீர் வழங்கும் செயல் திட்டம் அறிவிக்கப்பட்டது. எனது தாரமங்கலம் தொகுதியில் ஒரு நபருக்கு 10 லிட்டருக்குக் குறைவாக உள்ள கிராமங்களுக்கு ஒரு நபருக்கு 40 லிட்டர் குடிநீர் வழங்கும் திட்டத்தில் குடிநீர் வழங்கப்பட வேண்டும் என்று அதிகாரியிடத்தில் கேட்டபோது தாரமங்கலம் தொகுதியில் சர்வேபடி தாரமங்கலத்திற்கு 10 லிட்டருக்குக் குறைவாக உள்ள கிராமம் இல்லை என்று கூறுகிறார்கள். அந்த சர்வே சரியான முறையில் செய்யப்படவில்லை. தவறான ஒரு சர்வேயை வைத்துக்கொண்டு அரசுக்குத் தகவல் தருகிறார்கள். அதை மறு ஆய்வு செய்து என் தொகுதியிலுள்ள குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்துக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியோடு அலுவல் நேரம் நீட்டிக்கப் பெறுகிறது.

**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புற இணைப்பு தார்ச்சாலைகள் பற்றி இந்த ஆளுநர் உரையிலே கூறப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு போதுமான நிதியை ஒதுக்கி கிராம மக்களுடைய மேம்பாட்டுக்கு முன்னுரிமை அடிப்படையில் அதிகப்படியான நிதியை ஒதுக்கி கிராமங்களுக்கு இணைப்பு தார்ச் சாலைகளை அதிகமாக செப்பனிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராம மக்கள், விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற பொருட்களை நகர்ப்புறத்திற்கு விற்பனைக்காக கொண்டு செல்வதற்கு புதிய நகரப் பேருந்துகளை அதிகப்படியாக விட்டு அவர்கள் மேம்பாடு அடையச் செய்யவேண்டுமென்று இந்த மாமன்றத்தின் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழக அரசு மாதத்தில் 30 நாட்களும் குடும்ப அட்டைதாரர்களுக்கு பொருட்கள் வழங்கப்படும் என்றும், வழங்கப்படும் பொருட்கள் அனைத்தும் மாதம் 30 நாட்களில் எந்த நாளில் சென்றாலும் கிடைக்கும் என்றும் அறிவித்திருந்தாலும், அந்த அறிவிப்பு நடைமுறையில் இல்லை. 100-க்கு 80 குடும்ப அட்டைதாரர்களுக்குதான் அனைத்துப் பொருட்களும் கிடைக்கின்றன. மீதம் உள்ள 20 நபர்களுக்கு அது கிடைக்காத நிலையில் இருக்கிறது. 100 நபர்களுக்கும் அதாவது அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும், நியாயவிலைக் கடைகள் மூலம் அனைத்துப் பொருட்களும் கிடைக்க ஆவன செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

24 மணி நேர மருத்துவமனைகளில் போதுமான மருந்துகள் இல்லை. ஆம்புலன்ஸ் வசதிகள் இல்லை; போதுமான படுக்கை வசதிகள் இல்லை; 3 சிப்ட்டுகளுக்கும் போதுமான டாக்டர்கள் வருவது இல்லை என்பதை வலியுறுத்திக் கூறுகிறேன்.

மின்வெட்டு, மின் அழுத்தம் மிகவும் மோசமான நிலையில் இருக்கிறது. எந்த நேரத்தில் மின் வெட்டு வரும் என்ற நிலையை மக்கள் அறிந்துகொள்ள நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அண்ணா மறுமலர்ச்சி திட்டம், மாதிரி கிராமம் என்று அறிவித்து செயல்படுத்துகின்ற செயல் திட்டத்தை முழுமையாகச் செயல்படுத்தவில்லை. அதை எவ்வாறு மாதிரி கிராமம் என்று சொல்ல முடியும்? ஆகவே, அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தில் எடுக்கப்பட்ட கிராமத்தின் பணிகளை முழுமையாகச் செயற்படுத்த வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே தொகுதிக்கு, வருடத்திற்கு ஒரு கிராமம் என்பதை மாற்றி தொகுதியிலுள்ள ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் வருடத்திற்கு ஒரு கிராமம் என்று எடுத்து அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தை செயல்படுத்த வேண்டுமென்று அன்போடு கேட்டு இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன்.

***திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கிற இந்த விவாதத்திலே



கலந்து கொண்டு என்னுடைய கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு அனுமதித்ததற்காக நான் உங்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஐக்கிய முன்னணி அரசு செய்த சிறப்பான பல காரியங்களில் தலையானது என நான் கருதுவது தமிழ்நாட்டைச் சேர்ந்த 3 பேர்களுக்கு 'பாரத ரத்னா' விருது அளித்தது என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ஆளுநர் உரையிலே இந்த 3 பேரைப் பற்றி இன்னும் கொஞ்சம் விளக்கமாகச் சொல்லியிருந்தால் தமிழ்நாட்டு மக்கள் மகிழ்ச்சி அடைந்திருப்பார்கள். குறிப்பாக சிறுபான்மை இனத்தைச் சார்ந்த டாக்டர் அப்துல்கான் மிகப்பெரிய விஞ்ஞானி, வெளிநாட்டிலே எல்லாம் போய்ப்படிக்காமல் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் டாக்டர் அப்துல்கான் அல்ல, டாக்டர் அப்துல் கலாம்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மன்னிக்கவும், டாக்டர் அப்துல் கலாம் அவர்கள் நம்முடைய எம்.ஐ.டி.யில் படித்து இன்றைக்கு மிகப்பெரிய விஞ்ஞானியாக உயர்ந்திருக்கிறார்கள். அவர்கள் நம்முடைய பாராட்டுக்கு உரியவர் ஆவார்கள். அதைப்போலவே இசைப் பேரரசி டாக்டர் எம்.எஸ். சுப்புலட்சுமி அவர்கள் காந்தி அடிகளும், நேருஜி அவர்களும் இன்னும் பல சிறந்த அரசியல் தலைவர்களும் கேட்டு மகிழத்தக்க வண்ணம் தன்னுடைய இசைப்புலமையால் எல்லோரையும் ஈர்த்தவர்கள். அவரைப் பற்றி கூட நாம் ஓரிரு வரிகள் சிறப்பாகச் சொல்லியிருக்க வேண்டும். அடுத்தது நம்முடைய பாரத நாட்டுக்கே பசுமைப் புரட்சியை ஏற்படுத்தியவர் நம்முடைய திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள். மாணவப் பருவத்திலேயே அரசியலில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு சிறை சென்று, சிறந்த தியாகியாக, சிறந்த அரசியல்வாதியாக, அமைச்சராக, இந்த மாமன்றத்திலேயேகூட அமைச்சராக இருந்து இந்த நாட்டுக்கு பல்வேறு பணிகளைச் செய்தவர்கள். ஒருவேளை அவர் இல்லையென்று சொன்னால் இந்திய நாடு இன்றைக்கு உணவுப் பற்றாக்குறை உள்ள நாடாகத்தான் இருந்திருக்கும் என்று நாம் சொல்ல வேண்டிய அளவிற்குப் பசுமைப் புரட்சியைச் செய்தவர்கள் என்று சொன்னால் அது மிகையாகாது.

பிற்பகல் 1-35

இந்த ஆளுநர் உரையிலே, குறிப்பாகப் பல்கலைக்கழகங்களுக்கு அதிகமான நிதி ஒதுக்க வேண்டுமென்று ஒரு கருத்து

சொல்லப்பட்டிருக்கிறது. நான் அதை வரவேற்கிறேன். நம்முடைய பல்கலைக்கழகங்கள் மற்ற மாநிலங்களிலே பெறுவதுபோலத் தேவையான அளவிற்கு நிதிகளைப் பெறுவது இல்லை. நாம் இந்தப் பல்கலைக் கழகங்களுக்கு அதிக நிதியைக் கொடுத்து சிறந்த ஆராய்ச்சி மாணவர்களை உருவாக்குவதற்கு அவர்களை ஊக்குவிக்க வேண்டும். சர். சி.வி. இராமனுக்குப் பின்னாலே நோபல் பரிசு பெறக்கூடிய அளவிற்குத் தமிழ் நாட்டிலே யாரும் வரவில்லையென்று சொன்னால் நம்முடைய பல்கலைக்கழகங்கள் சிறந்த ஆராய்ச்சிக்கு ஊக்கம் அளிவிக்கவில்லையோ என்று சந்தேகம் கொள்ள வேண்டியிருக்கிறது. எனவே, பல்கலைக்கழகங்களுக்கு அதிக நிதி ஒதுக்குவதை நான் மனதார வரவேற்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், இந்த "Maritime Academy" என்று ஒரு அகாடமியை நிறுவுவதற்காக இந்த ஆளுநர் உரையிலே சொல்லப்பட்டிருக்கிறது. அதுவொரு சிறந்த முயற்சி. பல மாணவர்கள் இங்கே படிப்பதற்கு வழியில்லாமல், இடமில்லாமல், இந்த அகாடமி இல்லாத காரணத்தினாலே வேறு மாநிலங்களுக்குச் சென்று படிக்க வேண்டிய ஒரு நிலையிருக்கிறது. இந்த அகாடமியை இங்கே ஏற்படுத்துவது மிக மிகப் பொருத்தமானது என்று சொல்லி அதை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆளுநர் உரையிலே 38-ஆவது பத்தியிலே இந்த அரசு இந்த ஓராண்டு காலம் மட்டுமல்ல; இன்னும் பல ஆண்டுகளுக்கு செய்ய வேண்டிய பல நல்ல திட்டங்களை சூசகமாக கொள்கை ரீதியாகத் தெரிவித்திருக்கிறது. அதை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒருவேளை பட்ஜெட் உரையிலே நம்முடைய முதல்வர் அவர்கள் மிகத் தெளிவாக இதையெல்லாம் சொல்வார்கள் என்று கருதுகிறேன். ஒவ்வொரு துறைக்கும் அரசு என்ன செய்யப் போகிறது என்பதைப்பற்றி அவர்கள் சொல்வார்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

அடுத்தபடியாக, இந்தக் கோவை கலவரம். கோவை கலவரத்தைப் பொறுத்தமட்டிலே 14-ஆம் தேதி இரவு குண்டு வெடித்தது. 60 பேர் இறந்து போனார்கள். இறந்து போனது என்று சொல்வது, மேலெழுந்தவாரியாக நமக்கு யாரோ 60 பேர்கள் இறந்ததாகத் தென்படலாம். ஆனால் பலபேருக்கு தந்தை இல்லை, பல குடும்பங்களிலே மனைவி இல்லை, மகன் இல்லை, அதுமட்டுமல்ல, அடிபட்டவர்களின் நிலையையும் பார்க்க வேண்டும். அடிபட்டுள்ள



சிலபேருக்கு இரண்டு காலும் இல்லை, இரண்டு காலும் இல்லாததோடு கண்ணும் போய்விட்டது; என்ன செய்யப் போகிறோம் அதற்காக? மாநில அரசு கமிஷன் அமைத்திருக்கிறது. இழப்பீட்டுத் தொகையெல்லாம் கொடுக்கிறது. நான் இந்த அரசுக்குச் சொல்ல வேண்டிய யோசனையெல்லாம், நீங்கள் அந்த 60 குடும்பங்களிலே உள்ள தகுதி உள்ளவர்களுக்கு யாருக்கேனும் வேலை கொடுக்க முடியும் என்று சொன்னால் அதுதான் பெரிய் உதவியாக இருக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, அடிபட்டவர்களிலேகூட எதுவுமே செய்ய முடியாதவர்கள்—இரண்டு காலும் இல்லாமல் என்ன செய்ய முடியும், அவர்களுக்குக் கருணை அடிப்படையிலே, விதிகளையெல்லாம் தளர்த்தி வேலை கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த ஆளுநர் உரையிலே, மாநிலம் முழுவதும் அதிகமான மழை பெய்திருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், எங்களுடைய பல்லடம் தாலுக்காவிலே, குடிப்பதற்குக்கூட தண்ணீர் இல்லை. ஆகவே, பரவலாகப் பெய்ததாகச் சொல்லிவிட முடியாது. பல இடங்களிலே மழை சரிவரப் பெய்யவில்லை. நீண்டகாலக் கோரிக்கை என்னவென்று சொன்னால், நீர்ப்பாசனத் திட்டம். பாண்டியாறு-புன்னம்புழா ஒருவேளை வந்திருக்கும் என்று சொன்னால் இன்றைக்குப் பல்லடம் மக்களுக்கு அதுவொரு வாய்ப்பாக அமைந்திருக்கும்.

அதேபோல, கிருஷ்ணா தண்ணீர்கூட என்றைக்கு வரும், எவ்வளவு டி.எம்.சி. வரும் என்பது பற்றியெல்லாம் ஆளுநர் உரையிலே குறிப்பாக எதுவும் சொல்லப்படவில்லை என்பதை நான் இங்கே வருத்தத்தோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கோவையிலே நீண்ட காலமாகப் பல ஆலைகள், பஞ்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன. இன்றைக்கு அந்த ஆலைகளை எடுத்து நடத்த முடியாது என்று அரசு தீர்மானித்தாலும்கூட அந்த ஆலையைச் சுற்றியிருக்கும் நிலங்கள் நல்ல விலைக்குப் போகும். அந்த நிலங்களை விற்றாவது அந்த ஆலையிலே பணிபுரிகின்ற தொழிலாளர்களுக்குச் சேர வேண்டியத் தொகையை அரசு கொடுக்க முன்வர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளப் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1-40

அதுமட்டுமல்ல, கோவையிலே அரசு அதிகாரிகளுடைய பணி பற்றி தவறாக சொல்லுவதாக நினைத்துக்கொள்ளக் கூடாது, 10 ஆண்டு காலமாக, இராமநாதபுரம் என்கிற இடத்திலே, மாநகராட்சிப் பள்ளிக்கூடம், பொதுப்பணித் துறை கட்டிக் கொடுத்தது 10 இலட்சம் ரூபாய் செலவிலே. ஒரு மாணவன்கூட அந்தக் கட்டடத்திலே நுழையவில்லை, நுழையாமலேயே அது பாழடைந்து போய்விட்டது. இதற்கு யார் பொறுப்பு? அதை இடிக்காத காரணத்தினாலே, அந்தப் பாழடைந்த பள்ளிக்கூடத்திலே சமூக விரோதக் காரியங்கள் நடைபெற்று வருகின்றன. அதையாவது தடுக்க வேண்டும். பொதுப்பணித் துறை இந்தக் கட்டடத்தை உடனடியாக இடிப்பதற்கும் தக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கோவையைச் சுற்றி நிறைய குடிசைப் பகுதிகள் இருக்கின்றன. குடிசை மாற்று வாரியம் பல ஆண்டுகளாக அதிலே வாழ்கின்ற மக்களுக்கு இன்னும் பட்டா கொடுக்கவில்லை. பலபேர் காத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதற்கு அதிகமான தொகை ஒதுக்கப்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கோவையிலே நடந்த கலவரத்திலே சொத்துக்களை இழந்தவர்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்ற தொகை 5 கோடி ரூபாய். இழந்த சொத்துக்களுடைய மதிப்பு என்னவென்று பார்த்தால் ஏறத்தாழ 70 கோடி ரூபாய்க்கு மேல் சொத்துக்கள் அங்கே சூறையாடப் பட்டிருக்கின்றன அல்லது நாசமாக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, இந்தத் தொகையை அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று நான் இந்த அரசை அன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கோவையிலே நீண்ட காலமாக பத்திரிகை நிருபர்களுடைய கோரிக்கை ஒன்றிருக்கிறது. ரேஸ் கோர்சிலே வீட்டுவசதி வாரியத்தால் கட்டப்பட்ட வீடுகள் பல பத்திரிகையாளர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அந்த வீடுகள் கிடைக்காமல் பல பேர் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். அரசு முன்வந்து பத்திரிகை நிருபர்களுக்கு வீடு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 1.45-க்கு அவை நிகழ்ச்சிகளை முடிக்க வேண்டும்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** 1.45-க்குள் முடித்துவிடுகிறேன். ஒரு நிமிடத்திலே முடித்து விடுகிறேன்.

கோவை கலவரத்தைப் பொறுத்தமட்டில் இதற்கு என்ன தீர்வு என்று பலபேர் கேட்கிறார்கள். இதிலே அந்நிய சக்தியின் தலையீடு இருக்கலாமென்று சிலபேர் மேலெழுந்தவாரியாக யோசனை சொல்கிறார்கள். எந்த அந்நிய சக்தியையும் யாரும் பார்க்கவில்லை. அதெல்லாம் இலவச ஆலோசனை. எந்த அந்நிய சக்தி வந்தது, யார் பார்த்தார்கள், யாருக்கும் தெரியாது. ஆகவே, என்னைப் பொறுத்தமட்டிலே நான் இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புவது எல்லாம் இதிலே ஈடுபட்ட முஸ்லிம் சமுதாயத்தைச் சார்ந்த இளைஞர்கள் 20 வயதிற்கு மேல் 25 வயதிற்குட்பட்டவர்கள், வேலையில்லாதவர்கள், படித்தும் வேலையில்லாதவர்கள், வறுமையிலே இருக்கின்றவர்கள். கோவையிலே இருக்கின்ற முஸ்லிம் சமுதாயம், இதற்குத் தீர்வு காண வேண்டுமென்று சொன்னால், எப்படி கிருஸ்துவ சமுதாயம், அதிகமான பள்ளிகளை, கல்லூரிகளை நிறுவி, மருத்துவமனைகளை நிறுவி, தொழிற்சாலைகளை நிறுவி வேலை அளிக்கின்றதோ அதுபோல், முஸ்லிம் சமுதாயமும் நிறைய கல்லூரிகளைத் தொடங்க வேண்டும். இந்த மாணவர்களுக்கு அங்கே இடம் அளிக்க வேண்டும். நிறைய செல்வந்தர்கள் இருக்கிறார்கள். தொழிற்சாலை கட்டலாம்; கட்டி அவர்களுக்கு வேலை வாய்ப்பைக் கொடுக்கலாம். பிரச்சினை என்னவென்று சொன்னால், இந்த மாணவர்கள் படித்து வேலையில்லாமல் ஊதாரியாகத் திரிகின்றவர்கள். இவர்களைத் தடுக்க வேண்டுமென்று சொன்னால், இவர்களை வேறு பணியில் அமர்த்த வேண்டும். அதற்கு ஒரே வழி அவர்களுடைய கல்வித் தரத்தை உயர்த்துவது, அவர்களுக்கு வேலை வாய்ப்பைக் கொடுப்பது என்றுதான் நான் கருதுகிறேன். ஆகவே, தமிழ்நாட்டில் இருக்கின்ற முஸ்லிம் சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் எல்லோருமாக சேர்ந்து, அந்தப் பணியில் ஈடுபட வேண்டுமென்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, சமத்துவபுரம். ஆளுநர் உரையிலே சமத்துவபுரம் பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. சமத்துவபுரம் கோவையிலே ரொம்ப அவசியம்.

கோவையிலே, ஒரு இஸ்லாமிய சகோதரர், ஒரு இந்து சகோதரர் என்று பக்கம் பக்கமாக வாழ்கிற மாதிரி ஒரு நிலைமையை ஏற்படுத்துவோம் என்று சொன்னால் கருத்து வேறுபாடு வராது. இன்று எப்படி இருக்கிறது கோவையிலே? மஜீத் காலனி, அல் அமீன் காலனி, பிலால் நகர் என்று அங்கீகரிக்கப்படாத மனைக்கட்டுகள் எல்லாம் ஒரே இடத்தில் இருக்கின்றன. இதனுடைய விளைவு-யாரும் அவர்களை அணுக முடியாது, அங்கே போகமுடியாது, அவர்களுடன் பேசமுடியாது. (மணியடிக்கப்பெற்றது) ஆகவே, சமத்துவபுரத்தை கோவையிலே ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

*பிற்பகல் 1-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (20-3-1998) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

*பின்னர், பேரவை பிற்பகல் 1-45 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

1. 1967-ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து திருமணம் (பதிவு செய்தல்) விதிகளில் திருத்தங்கள் செய்வது குறித்து உள் (நீதிமன்றங்கள்-IV) துறையின் 5-9-1996-ஆம் நாளிட்ட 1237-ஆம் எண் அரசாணையில். வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1955-ஆம் ஆண்டு இந்து திருமணச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 25/1955) 8(3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

2. 1957-ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (ஒழுங்குமுறை) விதிகளில் திருத்தங்கள் செய்வது குறித்து உள்துறையின் 23-9-1997-ஆம் நாளிட்ட 1410-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1955-ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (ஒழுங்குமுறை) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 9/1955) 10(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].



3. 1983-ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு சாராவிகள் (மொத்தமாக வழங்குதல்) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 17-6-1997-ஆம் நாளிட்ட 140-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937-ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

4. 1983-ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு சாராவிகள் (மொத்தமாக வழங்குதல்) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 10-9-1997-ஆம் நாளிட்ட 197-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937-ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

5. பரம்பரை அறங்காவலரல்லாத பிற அறங்காவலர் பதவியில் உள்ள காலியிடங்களை நிரப்புவதை 26-9-1997 முதல் மேலும் மூன்று மாதங்களுக்கு நீட்டிப்பது குறித்து வணிகவரி மற்றும் அறநிலையத் துறையின் 15-9-1997-ஆம் நாளிட்ட 382-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1991-ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலையக்கட்டளைகள் (திருத்த) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 46/1991) 64(2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

6. தருமபுரி அங்காடிக் குழுவின் கட்டுப்பாட்டில் உள்ள 16 அங்காடிகளின் அறிக்கையிடப்பட்ட அங்காடிப் பகுதிக்குள், மாம்பழ விற்பனையை முறைப்படுத்துவது குறித்து வேளாண்மைத் துறையின் 16-10-1996-ஆம் நாளிட்ட 417-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1987-ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனை (முறைப்படுத்தல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1989) 52(4)(சி) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

7. 1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிகவரி மற்றும் அறநிலையத் துறையின் 21-8-1997-ஆம் நாளிட்ட 358-ஆம் எண் அரசாணையில்

வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

8. கோயம்புத்தூர், திருவாளர்கள் லேசர் ப்ளோ கண்ட்ரோல்ஸ் (பிரைவேட்) லிமிடெட் செலுத்த வேண்டிய விற்பனை வரியினை 31-12-1996 முதல் ஐந்து ஆண்டு காலத்திற்கு தள்ளி வைப்பது குறித்து வணிக வரி மற்றும் அறநிலையத் துறையின் 30-5-1997-ஆம் நாளிட்ட 199-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

9. தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் தாலுக்கா, கல்லூரணி கிராமத்திலுள்ள நயினார்சத்திரம் மற்றும் அருள்மிகு விநாயகர் கோயில் அறக்கட்டளையை தமிழ்நாடு இந்து சமய அறநிலையச் சட்டத்தின் அனைத்து பிரிவுகளின் மூலம் நீட்டிப்பது குறித்து வணிகவரி மற்றும் அறநிலையத் துறையின் 26-9-1997-ஆம் நாளிட்ட 400-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலையச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 22/1959) 116(3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

10. 1989-ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுபான (சில்லறை விற்பனை) விதிகளின் திருத்தங்கள் செய்வது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 6-12-1996-ஆம் நாளிட்ட 249-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937-ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

11. திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம், திருவாளர்கள் கிறிஸ்டியன் சகவாச (Fellowship) மருத்துவமனைக்குச் சொந்தமான பதிவு எண் TNW 8507 (ஆம்புலன்ஸ்), TCL 5786 (ஆம்னி பஸ்) மற்றும் TDU 7982 (ஆம்னி பஸ்) ஆகிய மோட்டார் வாகனங்கள் அன்பளிப்பாக வழங்காமலும் வாடகைக்கு விடாமலும் அம்மருத்துவமனையே வைத்துக் கொண்டு பொது நோக்கத்திற்காக பயன்படுத்தும் நேர்வில் அந்நிறுவனத்தினால் செலுத்தப்பட வேண்டிய வரியை சலுகை அடிப்படையில் நிர்ணயித்தல் குறித்து உள் துறையின்



1-9-1997-ஆம் நாளிட்ட 1247-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1974-ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

12. சில வட்டாரப் போக்குவரத்து அலுவலர்களின் ஆளுகையின் கீழ் வரும் போக்குவரத்து வாகனங்கள் சிலவற்றுக்குச் செலுத்தப்பட வேண்டிய வரி மற்றும் தண்டத் தீர்வைத் தொகையினை குறைப்பது குறித்து உள் துறையின் 12-8-1997-ஆம் நாளிட்ட 1169-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1974-ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

13. 1983-ஆம் ஆண்டு தமிழ்நாடு வடிப்பாலை விதிகளில் திருத்தங்கள் செய்வது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையில் 6-5-1997-ஆம் நாளிட்ட 125-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937-ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

14. 1947-ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் முதல் அட்டவணையில் தொழில் உருவாக்குதல் ஊரக கங்க வரி மசல் இருக்கின்கள் சேர்ப்பது குறித்து தொழிலாளர் நலன் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் 22-7-1997-ஆம் நாளிட்ட 108-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1947-ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 14/1947) 40-ஆவது பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

15. 1975-ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி பணிகள் (ஒழுங்கு முறை மற்றும் மேல்முறையீடு) விதிகளில் திருத்தங்கள் செய்வது குறித்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 12-6-1997-ஆம் நாளிட்ட 154-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1971-ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1971) 432(2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

16. 1986-ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிப் பணிகள் (ஒழுங்குமுறை மற்றும் மேல்முறையீடு) விதிகளில் திருத்தங்கள் செய்வது

குறித்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 12-6-1997-ஆம் நாளிட்ட 155-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1981-ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/1981) 431(2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

17. 1979-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொருள்கள் தீர்வு செய்தல் (தமிழ்நாடு மதுவிலக்கு சட்டத்தின் கீழ் பறிமுதல் செய்தல்) விதிகளில் திருத்தம் செய்வது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 16-10-1997-ஆம் நாளிட்ட 215-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937-ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

18. 1981-ஆம் ஆண்டு தமிழ்நாடு வடிசாலை விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 13-11-1997-ஆம் நாளிட்ட 271-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. 1937-ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

19. 1989-ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள் துறையின் 8-9-1997-ஆம் நாளிட்ட 1322-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1988-ஆம் ஆண்டு மோட்டார் வாகனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 59/1988) 212 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

20. சென்னை, ஆற்காடு இளவரசர் அவர்களுக்குரிய டி.எம்.ஜே. 6454 (மெர்சிடெஸ் பென்ஸ்) மோட்டார் வாகனத்திற்கு வாகன வரி செலுத்துவதிலிருந்து விலக்களித்ததை நீக்குவது மற்றும் டி.என்.01 4449 (மெர்சிடெஸ் பென்ஸ் 280) மோட்டார் வாகனத்தை தனிப்பட்ட முறையில் பயன்படுத்தும்வரை வாகன வரி செலுத்துவதிலிருந்து விலக்களிப்பது ஆகியவைகள் குறித்து உள் துறையின் 27-8-1997-ஆம் நாளிட்ட 1223-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [1974-ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].





21. 1977-ஆம் ஆண்டு தமிழ்நாடு அமைச்சர்கள் மற்றும் சட்டமன்றத் தலைவர்கள் (தனியார் இல்லங்கள் பராமரிப்பு) விதிகளில் திருத்தங்கள் செய்வது குறித்து பொதுத் (பணியாளர் தொகுதி-1 மற்றும் சட்டமன்றம்) துறையின் 18-9-1997-ஆம் நாளிட்ட 1151-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1951-ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/ 1951) 14(3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

22. 1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிகவரி மற்றும் அறநிலையத் துறையின் 2-9-1997-ஆம் நாளிட்ட 369-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

23. சென்னை-20, அடையாறு, புற்றுநோய் நிலையத்திற்கு (WIA) திருவாளர்கள் அசோக் லேலண்டு நிறுவனத்தினரால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட பேருந்தின் மேற்கூடு அமைத்ததற்காக சென்னை, திருவாளர்கள் பிரிட்ஜ் மற்றும் அசோசியேட்ஸ் அவர்களால் செலுத்தப்பட வேண்டிய விற்பனை வரிக்கு விலக்களிப்பது குறித்து வணிக வரி மற்றும் அறநிலையத் துறையின் 13-11-1997-ஆம் நாளிட்ட 514-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

24. சென்னை, மகிந்திரா நிறுவனத்திற்கு பதிவு செய்யப்பட்ட விற்பனையாளர் ஒருவரால் விற்பனை செய்யப்பட்ட நுகர்பொருட்கள் சிப்பப் பொருட்கள், பெயர்ச் சீட்டுகள் மற்றும் மூலதனப் பொருட்கள் ஆகியவற்றிற்காக செலுத்த வேண்டிய விற்பனை வரி மற்றும் கூடுதல் விற்பனை வரி ஆகியவற்றிற்கு விலக்களிப்பது குறித்து வணிக வரிகள் மற்றும் அறநிலையத் துறையின் 15-9-1997-ஆம் நாளிட்ட 381-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவு மற்றும் 1970-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 14/1970) 4(3) பிரிவு ஆகியவற்றின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

[1998 மார்ச் 19

25. வணிகவரிகள் மற்றும் அறநிலையத்துறையினரால் வெளியிடப்பட்ட II(1)/வ.வ.அ.நி/45/97-ஆம் எண் அறிக்கையை ரத்து செய்வது குறித்தும் மற்றும் மிதிவண்டிகள் விற்பனைக்காக சென்னை, திருவாளர்கள் டியூப் இன்வெஸ்ட்மெண்ட்ஸ் ஆப் இந்தியா நிறுவனத்தினர் செலுத்த வேண்டிய கூடுதல் விற்பனை வரிக்கு விலக்களிக்க அனுமதிப்பது குறித்தும் வணிகவரிகள் மற்றும் அறநிலையத்துறையின் 16-10-1997-ஆம் நாளிட்ட 444-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். (1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவு மற்றும் 1970-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 14/1970) 4(3) பிரிவு ஆகியவற்றின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

26. 1978-ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நில உடைமைக்குரிய (உச்ச வரம்பினை ஒழுங்குமுறைப்படுத்துதல்) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வருவாய்த் துறையின் 12-5-1994-ஆம் நாளிட்ட 333-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1978-ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நில உடைமைக்குரிய (உச்சவரம்பினை ஒழுங்குமுறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/1978) 47(3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

27. 1984-ஆம் ஆண்டு தமிழ்நாடு சாராவி தயாரிப்புகள் (கட்டுப்பாடு) விதிகளில் திருத்தம் செய்வது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 3-12-1997-ஆம் நாளிட்ட 279-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937-ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

28. 1978-ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நில உடைமைக்குரிய (உச்சவரம்பினை ஒழுங்குமுறைப்படுத்துதல்) சட்டத்தில் உள்ள அட்டவணையில் திருத்தம் செய்வது குறித்து வருவாய்த் துறையின் 17-7-1995-ஆம் நாளிட்ட 679-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1978-ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நில உடைமைக்குரிய (உச்சவரம்பினை ஒழுங்குமுறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/1978) 47(3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].



1998 மார்ச் 19]

29. பரம்பிகுளம்-ஆளியாறு திட்டத்தின்கீழ் நீர் வழங்குவதை முறைப்படுத்துவது குறித்து பொதுப்பணித் (பாசனம்) துறையின் 4-8-1997-ஆம் நாளிட்ட 459-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1993-ஆம் ஆண்டு பரம்பிகுளம்-ஆளியாறு திட்ட (நீர் வழங்குகையை முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1993) 9(3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

30. 1996-97 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகத்தின் முப்பத்திரண்டாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

31. 1996-97-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சரிகை லிமிடெட்டின் இருபத்தைந்தாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

32. 1996-97-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் இருபத்தி ஆறாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

33. 1996-97-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கைத்தறித் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் இருபத்தி நான்காவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

34. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் 1996-97-ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை. [இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 320(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்.)

35. 1996-97-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வனத்தோட்டக் கழகத்தின் இருபத்தி மூன்றாம் ஆண்டறிக்கையும், கணக்குகளும் [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

1. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (முதல் பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

2. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (இரண்டாம் பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

3. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (மூன்றாம் பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

4. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (நான்காம் பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை)

5. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் இணைப்பு 'உ'-ல் குறிப்பிடப்பட்டுள்ள பொது நிறுவனங்கள் பட்டியலில் "தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்தினை" சேர்ப்பது குறித்து 14-10-1997-ஆம் நாளிட்ட சட்டமன்றப் பேரவைச் செயலக கடித எண் 17633/97-1, த.நா.ச.ம.பே.செ. (சமுவ-3)-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை.

6. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளில் இணைப்பு - 'உ'-ல் குறிப்பிடப்பட்டுள்ள பொது நிறுவனங்கள் பட்டியலில் "சதர்ன் பிரிக்ஸ் ஒர்க்ஸ் (வரையறுக்கப்பட்டது)" மற்றும் "சேரன் பொறியியல் கழகம் (வரையறுக்கப்பட்டது)" ஆகியவை நீக்குவது குறித்து 5-11-1997-ஆம் நாளிட்ட சட்டமன்றப் பேரவைச் செயலக கடித எண் 22906/97-1, த.நா.ச.ம.பே.செ. (சமுவ-3)-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை.

7. 1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (நான்காம் திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 10/1997).

8. 1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (ஐந்தாம் திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 11/1997).

9. 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிக (முறைப்படுத்துதல்) திருத்த அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 1/1998).

10. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆளுநர் உரையாற்றும் போது பின்பற்ற வேண்டிய ஒழுங்குமுறை பற்றிய புத்தகம். (தமிழ், ஆங்கிலம்).

11. 1998 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 18-ஆம் நாள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ், ஆங்கிலம்).



# இணைப்பு - I

*(314 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

**Honourable Members of the Legislative Assembly,**

I am pleased to meet you for the first time after my assumption of charge as the Governor of this State, in the fifth session of this Eleventh Legislative Assembly. I hope this year will prove to be one of all round economic development for the State, bringing further prosperity to Tamil Nadu and its people.

2. The conferment of the country's highest honour, the "Bharat Ratna", on the great Scientist Dr. Abdul Kalam, the doyen of music Dr. M.S. Subbulakshmi and the elder statesman Thiru C. Subramaniam, who has held the positions of Minister in the Central and State Governments and of the Governor of Maharashtra, all hailing from Tamil Nadu is a matter of pride for all of us. On behalf of all of you and on my personal behalf, I convey our felicitations to them.

3. The results of the election to both the Legislative Assembly Constituencies held recently have provided an encouragement to the Government to continue its good work. As far as the Parliament is concerned, it is clear that the people of Tamil Nadu have given their mandate with an expectation of a stable Government at the Centre. This Government will extend its full co-operation to the Centre in maintaining cordial Centre-State relations.

4. While upholding India's sovereignty, unity, integrity and secularism, this Government has been advocating since long, autonomy for the States with more powers, federalism at the Centre, making of the official languages of all States the official languages of the Union and pending the implementation of this language policy, to give that status to Tamil to begin with. This Government will continue to strive for these ideals.

5. The communal clashes and the bomb blasts at Coimbatore have caused deep anguish to all those who cherish communal harmony and human dignity. A sum of Rs. 28 lakhs has been paid as a first installment

as compensation to the families of persons who lost there lives and for those injured in the weeklong clashes that started on 29th November 1997. The Government has constituted a Commission of Inquiry headed by Justice Thiru P.R. Gokulakrishnan, retired Chief Justice of the Gujarat High Court, to inquire into the circumstances and causes leading to these clashes, to recommend measures to prevent recurrence of such incidents in future and the compensation to be paid for the damages caused to public and private properties. Since it was considered that the bomb blasts that occurred in Coimbatore on 14-2-1998 may have some connection with the clashes that took place in November 1997, Government has appointed the Justice Thiru P.R. Gogulakrishnan Commission of Inquiry to inquire into these incidents also. With the prior permission of the Commission, a total sum of Rs. 1.50 crores has been sanctioned as compensation at an enhanced rate of Rs. 2 lakhs per person to the families of persons who lost their lives in these bomb blasts and in the November clashes. Pending receipt of the recommendations of the Commission of Inquiry, an amount of Rs. 5 crores has been sanctioned by the Government for providing interim relief to the people who sustained loss and damage to their properties in both the occurrences. If necessary, the Government will sanction additional funds.

6. The inquiries into the explosions in Coimbatore and seizure of gelatine sticks and other explosives there and in other parts of the State have revealed that explosives intended for bonafide uses like digging of wells have been diverted to extremist organisations. The Government is determined to curb this and has decided to enforce rigorous statutory control on all wholesale and retail sale points of explosives in the State.

7. Realising that peace and tranquility are absolutely essential for implementing development schemes for achieving economic progress, this Government attaches the highest priority for the maintenance of law and order in the State. In order to study and identify the causes for the caste clashes which have been periodically occurring in the southern districts for the past several years and recommend appropriate measures to prevent the recurrence of such clashes, this Government constituted a High Level Committee under the Chairmanship of Justice





Thiru S. Mohan, a retired Judge of the Supreme Court. The Committee has submitted its report to the Government in January 1998 and has made several recommendations such as formation of Peace Committees at various levels in all districts, making law and order machinery perform with vigil, caution and without lapse, etc. These recommendations are under the active consideration of the Government for necessary action.

8. This Government has made determined efforts to curb the sandalwood smuggling that has been going on for the past many years. Due to effective measures taken by the Government machinery, sandalwood valued at Rs. 34.80 crores has been seized from the time this Government assumed office till December 1997. Besides, 33 sandalwood smugglers have been detained under the Goondas Act. This Government intends to further intensify efforts to prevent sandalwood smuggling. A Special Task Committee will be constituted soon as per the judgment of the High Court.

9. Tamil Nadu has the distinction of implementing Plan Programmes competently and effectively and achieving all targets. As against an outlay of Rs. 10,200 crores for the Eighth Five Year Plan, an expenditure of Rs. 10,563 crores has been incurred. The Union Planning Commission has approved an enhanced outlay of Rs. 25,000 crores for the Ninth Five Year Plan. The annual growth rate during the Eighth Plan was 5.96 percent. During the Ninth Plan period, efforts will be made to increase the annual growth rate to above 7 percent.

10. This year there was excess rainfall all over the State. Several districts, particularly the coastal districts of Thanjavur, Nagapattinam and Tiruvarur were severely affected due to these rains. The Government has incurred an expenditure of Rs. 58.95 crores in granting relief for the loss of human life and livestock, damages to huts and crops caused by rain and lightning.

11. The Government continues its efforts to usher in a second green revolution. The aim of this Government is to achieve self-sufficiency in food production, economic stability, rural development and eradication of poverty. The effort to desilt the irrigation channels in the Cauvery delta

and in tanks in various districts during last year has yielded good benefit to the farmers. This scheme will continue to be implemented during the next year to tap the full benefits of irrigation sources. Following a good monsoon, the State has had a good crop. Even during the period of parallel procurement, accepting the request of the farmers, the Government has sanctioned Rs. 35 per quintal of paddy over the minimum support price fixed by the Central Government which is higher than the price offered in any other State. With a view to ensuring that the farmers do not face any marketing problems on account of the increased production, the Government has opened 926 Direct Purchase Centres. These Centres have been opened also in the districts outside the Cauvery delta areas for the first time. A record quantity of 17 lakh tonnes of paddy is expected to be procured this year.

12. The transparent and entrepreneur-friendly policies of this Government has started yielding tangible results. Large numbers of industrial entrepreneurs from other Countries and other States are coming forward to invest in Tamil Nadu. The Government machinery has been geared up to provide the facilities required by them without delay. As a result of this, during the past 22 months, Foreign Direct Investment in Tamil Nadu amounting to Rs. 4,040 crores has been approved by the Foreign Investment Promotion Board. Besides this, under the delicenced sector 655 industries with an outlay of Rs. 9,639 crores have been registered. Among the industries requiring licensing, 141 industrial projects with an investment of Rs. 1,897 crores have obtained Letters of Intent. In short, industrial investments amounting to Rs. 15,576 crores have been committed in this State within a short period of 22 months which is the highest ever in the history of Tamil Nadu. During the current year the Nylon fibre factory of Du Pont, the Metal Halide Lamp factory at Chennai Export Processing Zone, the Karur Yarn Links factory near Karur, Taurus Novelties Dolomite factory at Chokkarasannapalli in Dharmapuri District, the Bharat Garment factory at Chettipunniyam Village in Kancheepuram District and the S.G. Iron Casting factory at Mayeleripalayam near Coimbatore have commenced production. Hyundai company's motor car factory will commence production by October 1998.



13. The Government has realised that only good quality infrastructure required for industrial development can attract entrepreneurs from other Countries and States to our State. The Government will create industrial growth centres, industrial parks and satellite towns in various areas of the State. The Government will vigorously develop infrastructural facilities like power, roads, water and Ports. As huge investments would be required for this, the Government has taken steps to attract private sector investment in areas such as power, highways, etc. which were developed till now only by the Government.

14. The State Government has entered into a Memorandum of Understanding with the Harvard Institute for International Development for undertaking research on various aspects of Tamil Nadu economy with a view to providing policy advice on increasing export oriented production in the State, attracting foreign investment in infrastructure and industries in the State and for accelerating the rate of growth of the State's economy. Based on this Memorandum of Understanding, research work on the State's economy has since commenced.

15. During the next year, the first private sector power project with a capacity of 196 MW will be commissioned in Chennai. This Government has also given an "in principle" approval for setting up a joint venture company with Infrastructure Leasing and Financial Services Limited for cogeneration of power by the co-operative and public sector sugar mills. The Tamil Nadu Electricity Board is taking action to establish a 1,000 MW thermal power station at Ennore and a 500 MW thermal power station at Tuticorin.

16. The Government accords high priority for the development of the road sector. During the last two years, projects at a cost of over Rs. 450 crores have been taken up with the assistance of the National Bank for Agriculture and Rural Development from the Rural Infrastructure Development Fund. The Government proposes to take up upgradation of roads and bridges with an outlay of Rs. 1,416 crores with financial assistance from Housing and Urban Development Corporation and the World Bank.

17. The State Maritime Board, which was set up by this Government, is involved in the development and regulation of minor ports. Government proposes to take up the development of Cuddalore, Cheyyur and Colachel ports with private sector participation. To train seamen for the merchant navy and to provide job opportunities in this profession to the youth of this State, Government has decided to set up a Maritime Academy.

18. With a view to undertaking development works, this Government conducted elections to all the local bodies in 1996 with reservation of 33 1/3% of the seats for women for the first time. Further, the Government devolved substantial funds to both urban and rural local bodies in 1997. To delegate more powers to the local bodies, a Committee with the Minister for Local Administration as Convenor and representatives from all political parties in the Legislative Assembly as its Members has been constituted. The Government will take early decisions on the recommendations of this Committee. As assured in the Governor's Address for 1997, a common Urban Local Bodies Bill was introduced in the last Budget Session of the Assembly. The Bill is now under the consideration of a Select Committee. This Legislation will enable delivery of urban basic services in a more efficient and effective manner.

19. Under the 'Namakku Naame' and 'Anna Marumalarchi Scheme', basic amenities required for villages have been taken up. Under the 'Namakku Naame' Scheme, 3,658 works at a cost of Rs. 24.61 crores have been undertaken. Under the 'Anna Marumalarchi Scheme' 33,282 works with an outlay of Rs. 224 crores are being executed.

20. As announced during the last Budget, out of 10,000 rural habitations getting less than 10 lpcd water, schemes to provide water at the rate of not less than 40 lpcd to 4,500 rural habitations have been taken up during the current year and would be completed by the end of this month. The State has decided to provide protected drinking water supply to all the rural habitations before the end of the Ninth Five Year Plan period. In order to achieve this goal, allocation for rural water supply will be substantially stepped up in the coming years. A number of schemes are also proposed to be implemented for improving urban water supply.



A scheme to provide water supply to the urban areas and the wayside habitations in Cuddalore and Villupuram districts, utilising the water from the enhanced capacity of the Veeranam lake has been drawn up for implementation. The Third Chennai Water Supply Project with World Bank assistance would be taken up during the next year for upgrading the distribution of water and improving solid waste management in Chennai.

21. Out of 517 villages with a population exceeding 1000 without link roads, 216 villages are being provided with link roads during the current year. In the next year the remaining 301 villages will be provided with link roads. Black topping of 54,20 kms of Panchayat Union roads during the last year and 6,580 kms in the current year has been taken up under various schemes.

22. For providing health care for all, all efforts will be made to provide necessary equipment and facilities to all the Primary Health Centres. District and Taluk hospitals will be strengthened and upgraded in a phased manner, to become referral units to provide emergency and essential services round the clock. Functioning of Government hospitals and dispensaries will be improved by increasing financial allocations and streamlining the procedures.

23. An extensive eye camp programme for restoring the eye sight of the blind was started when this Government was in power in 1972 and several lakhs of poor persons benefited. The slackness in this programme which occurred in the intervening period will be removed and the eye camp programme will be implemented with renewed vigour.

24. The Government has been consistently attaching importance to the development of the education sector. Steps are being taken to make all children in the age group of 6 to 14 years, attend schools regularly. Additional funds will be allocated for augmenting the facilities in schools to improve the standard of education. Action has been taken to start computer courses in more Government Higher Secondary Schools. Realising the importance of quality higher education for the economic development of the State, steps are also being taken to increase the financial aid to the Universities. During the current year, Periyar

University at Salem, Dr. Ambedkar Law University at Chennai and K.A.P. Viswanatham Medical College at Tiruchirappalli have been inaugurated and have started functioning. For the first time, fifteen per cent of the seats have been reserved in the Engineering colleges for the students from rural schools. From the next year onwards, such reservation will be extended to all professional courses. By this, students educated in rural schools will get an opportunity to acquire professional education and progress in life.

25. The Cauvery Water Disputes Tribunal, after giving its interim order, is now engaged in final adjudication of the dispute. Following the cross-examination of the expert witnesses of Tamil Nadu and Pondicherry, the cross-examination of the expert witnesses of Karnataka is now in progress. In the meantime, during the course of hearing of the suit filed by this Government in 1992, the Government of India on 9-4-1997 submitted to the Supreme Court that it would frame a Scheme under Section 6-A of the Inter-State Water Disputes Act, 1956 and notify the same to ensure implementation of the said Tribunal's Order. Accordingly, the Government of India framed a draft Scheme on which the party States also offered their comments. The Union Minister for Water Resources held a meeting with the concerned States on 30-9-1997. This Government has been repeatedly insisting that the Government of India finalise and notify the Scheme so as to give effect to the Tribunal's Order and has also been forcefully arguing its case in the Supreme Court.

26. As the Central Government introduced the Targeted Public Distribution System from 1-6-1997, the allocation of rice to this State was reduced from 1.65 lakh tonnes to 84,230 tonnes. Due to the sustained urging by the Hon'ble Chief Minister, the allocation of food grains was increased to 1,19,230 tonnes from December 1997. In view of the procurement of 7 lakh tonnes of paddy during the Kuruvai season, the distribution of rice through the Public Distribution system is being done without any interruption. To eliminate problems such as long wait to get kerosene, the Government started a new system of distribution through kerosene bunks in Chennai. These bunks have been designed on the lines of petrol and diesel bunks with the technical assistance of Indian Oil



Corporation. As this scheme has had a good response from the public, it has been decided to extend the scheme of setting up these bunks to other urban areas in the State.

27. It was stated in the last year's Governor's Address that the Public Distribution System would be restructured and three colour family cards would be distributed. After conducting the field survey for this purpose, printing of family cards is in progress. At this stage, this scheme has been reviewed and it has been decided to issue cards in two different colours only. Pink colour family cards will be issued to the poor families whose monthly income is below Rs. 1250. For the remaining families Yellow colour family cards will be issued. For people with Pink colour cards, all commodities which are presently being distributed through the Public Distribution System would continue to be issued. For others with Yellow cards, based on their option, either rice or in lieu of rice, additional quantity of sugar or additional quantity of kerosene will be issued. The distribution of these family cards will start from 1st May of this year in Chennai Corporation and belt areas and commodities will be distributed from the month of June onwards on the basis of these cards. Subsequently, the two colour family cards will be issued in other Municipal Corporation areas, Municipalities, Town Panchayats and Panchayats in a phased manner and on completion, the new pattern of distribution implemented.

28. The implementation of the Tamil Nadu Women's Development Project has been started in 194 Panchayat Unions in 14 districts in the State. At present 9000 self help groups having 2 lakhs women Members are functioning in the State. In the coming year, this will be extended to seven more districts and an additional 3 lakhs women will be benefited by becoming Members in the self help groups.

29. The World Bank assisted Tamil Nadu Integrated Nutrition Project-II was completed in December, 1997. This scheme will continue to be implemented with funds from Central and State Governments. With the allocation of additional funds for the Moovalur Ramamirtham Ammayar Thirumana Udavi Thittam, 53,145 girls belonging to poor families will be benefited in this financial year.

30. With the noble objective of creating an egalitarian society without caste differences, Government is setting up 'Samathuvapurams' in 50 places in the State where all communities can live in harmony. These Samathuvapurams will be developed as model villages with all basic amenities like drinking water, electricity, schools, dispensaries and community halls so that Adi Dravidars, Backward Classes, Most Backward Classes and Other Communities can live harmoniously and peacefully.

31. Schemes are being implemented by the Government for the development of Adi-Dravidars and Scheduled Tribes with increased allocation of funds every year. Training schemes for professions having immediate employment opportunities like training in computers and plastic technology which are being implemented during the current year will be further extended.

32. This Government is keen on the welfare of socially weaker sections like handloom weavers and landless agricultural labourers. For this purpose, new schemes are under consideration. The decision of the Government on these schemes will be announced soon.

33. This Government is committed to providing 69 per cent reservation in education and employment for Backward Classes, Most Backward Classes, Adi-Dravidars and Scheduled Tribes. The cases relating to this issue are pending in the Supreme Court of India. The stand of this Government in this case is clear and convincing. Honourable Members are aware that this Government has been consistently pressing for amending the Constitution to vest with the States the power to decide the policy of reservation determined by the concept of social justice.

34. This Government has been functioning with a commitment to providing an honest and responsive administration. The Government had constituted a High Level Committee under the Chairmanship of Justice Thiru G. Ramanujam (Retd.) to recommend measures for simplification of Government procedures and prevention of corruption in Government offices. The recommendations of the Committee are under the consideration of the Government. Decisions will be taken on these recommendations soon and implemented. With a view to providing



information on the functioning of the Government required by the public, the Tamil Nadu Right to Information Act has been enacted. Rules under this Act will be notified shortly.

35. When an agreement was reached between Governments of India and Srilanka in the year 1974, it contained a clause which provided for the fishing rights of Tamil Nadu fishermen near Kachatheevu and the rights of pilgrimage to Kachatheevu for the people of the Tamil Nadu. The Tamil Nadu Government has continued to press the Government of India to enforce this clause, which has not been enforced from 1977 and find a solution to the problems of our fishermen, who are subjected to frequent harassment and loss.

36. The co-operation of the Government employees, teachers, policemen and the employees of the local bodies, is essential for the proper implementaion of the programmes of the Government and for ensuring that the benefits of the schemes reach the beneficiaries in time, for the development of human resources and for the effective maintenance of law and order. The Officials Committee constituted to examine the pay scales given to Central Government employees based on the recommendations of the Fifth Central Pay Commission and to make suitable recommendations on extending the pay scales to the State Government employees has submitted its report. The decision of the Government on the Committee's recommendations will be announced during the current session.

37. Many representations have been received from the traders requesting for reduction of the rate of Profession Tax and removal of some of the provisions in the new Profession Tax Act enacted in 1992 by the previous Government. The receipts from the Profession Tax being an important source of revenue for the local bodies, the Government has decided to appoint a Committee to review the Profession Tax Act. After receiving the recommendations of the Committee, the Government would make suitable amendments to the Act.

[1998 மார்ச் 19

38. This Government has taken an important policy decision to focus on schemes which will provide basic facilities needed by the public such as food, clothing, shelter, drinking water, roads, education, public health and storm water drainage quickly rather than according priority to grandiose schemes which require many years for implementation.

39. I have outlined the important activities, achievements, future programmes and policies of this Government. The Government is making all efforts to continue and speed up the implementation of the schemes for the growth and development. I conclude my address seeking your full co-operation in these endeavours.

**Vanakkam**

## இணைப்பு-II

***(314 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)***

**மதிப்பிற்குரிய சட்டப்பேரவை உறுப்பினர்களே,**

இம்மாநிலத்தின் ஆளுநராகப் பொறுப்பேற்ற பின்னர், உங்கள் அனைவரையும் இந்தப் பதினோராவது சட்டப்பேரவையின் ஐந்தாவது கூட்டத் தொடரில் முதன்முறையாகச் சந்திப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இவ்வாண்டில் நம் மாநிலத்தின் பொருளாதாரம் மேலும் வளர்ச்சியடைந்து தமிழ்நாட்டுக்கும் தமிழக மக்களுக்கும் வளம் சேர்க்கும் ஆண்டாக அமையும் என நான் நம்புகிறேன்.

2. தமிழகத்தைச் சேர்ந்த சிறந்த விஞ்ஞானி டாக்டர் அப்துல் கலாம் அவர்களுக்கும், இசைமேதை டாக்டர் எம்.எஸ். சுப்புலட்சுமி அவர்களுக்கும், மத்திய, மாநில அமைச்சர் பொறுப்புகளிலிருந்தவரும், மராட்டிய மாநில முன்னாள் ஆளுநரும், அரசியல் மேதையுமான திரு. சி. சுப்பிரமணியம் அவர்களுக்கும் நாட்டின் மிக உயர்ந்த விருதான "பாரத ரத்னா" விருது வழங்கப்பட்டுள்ளது நமக்குப் பெருமிதம் அளிக்கிறது. தமிழகத்திற்கு புகழ் சேர்த்துள்ள இவர்களுக்கு உங்களனைவர் சார்பிலும் என் சார்பிலும் மனமார்ந்த பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1998 மார்ச் 19]

3. அண்மையில் நடந்த தேர்தல்களில் இரண்டு சட்டமன்றத் தொகுதிகளின் முடிவுகள் அரசின் நற்பணிகளைத் தொடர ஊக்கப்படுத்தும் வகையில் அமைந்துள்ளன. நாடாளுமன்றத்தைப் பொறுத்தவரையில் தமிழக மக்கள் நிலையான ஆட்சி அமையும் என்ற எதிர்பார்ப்புடன் வாக்களித்துள்ளனர். பொதுவாக மத்திய மாநில உறவுகள் சுமுகமாக அமைந்திட இந்த அரசு முழு ஒத்துழைப்பைத் தரும்.

4. இந்தியாவின் இறையாண்மை, ஒற்றுமை, ஒருமைப்பாடு, மதச்சார்பின்மை ஆகியவற்றைப் பேணிக்காப்பதுடன், மாநிலங்கள் மேலும் அதிகாரங்கள் பெற்று சுயாட்சித் தன்மையுடன் விளங்கவும், மத்தியில் கூட்டாட்சித் தத்துவம் நிலைபெறவும், மாநிலங்களின் ஆட்சிமொழிகள் அனைத்தும் மத்திய ஆட்சிமொழிகளாகவும், அதற்கு முதற்கட்டமாக தமிழ் மொழிக்கு அந்தத் தகுதி அளிக்கப்படவும் பலகாலமாக வலியுறுத்தி வருகிற இந்த அரசு இவற்றுக்காகத் தொடர்ந்து பாடுபடும்.

5. கோவையில் நடந்த மதக் கலவரம், குண்டு வெடிப்பு ஆகியவை மத நல்லிணக்கத்திலும், மனித நேயத்திலும் அக்கறையுள்ள அனைவருக்கும் ஆழ்ந்த வேதனை அளிப்பதாகும். 1997 நவம்பர் 29 ஆம் தேதி தொடங்கி ஒரு வார காலம் நடந்த கலவரங்களில், உயிரிழந்தவர்களுடைய குடும்பங்களுக்கும், காயமடைந்தவர்களுக்கும் இழப்பீட்டுத் தொகையாக முதற்கட்டமாக ரூ. 28 இலட்சம் வழங்கப்பட்டது. இக்கலவரங்களுக்கு வழிவகுத்த சூழ்நிலைகள், காரணங்கள் குறித்து விசாரணை செய்யவும், இத்தகைய நிகழ்ச்சிகள் இனி எதிர்காலத்தில் நிகழாமல் தடுக்கவும், பொதுமக்களுக்கும், தனியார் சொத்துக்களுக்கும் ஏற்பட்ட சேதங்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கவும் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து பரிந்துரைகள் செய்ய, குஜராத் உயர்நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற தலைமை நீதிபதி திரு. பி.ஆர் கோகுலகிருஷ்ணன் அவர்கள் தலைமையில் விசாரணைக் குழு ஒன்றை அரசு அமைத்துள்ளது. 14-02-1998 அன்று கோயம்புத்தூரில் ஏற்பட்ட குண்டு வெடிப்புச் சம்பவங்களுக்கும், 1997 நவம்பர் மாதத்தில் நடந்த கலவரங்களுக்கும்

தொடர்பு இருக்கக்கூடும் என்று கருதப்படுவதால் இவை குறித்தும் விசாரணை செய்ய அரசு, நீதிபதி திரு. பி. ஆர். கோகுலகிருஷ்ணன் அவர்களின் விசாரணைக் குழுவையே நியமித்துள்ளது. விசாரணைக் குழுவின் முன்அனுமதியுடன் குண்டு வெடிப்புச் சம்பவங்களில் உயிரிழந்த குடும்பங்களுக்கும், நவம்பரில் நடைபெற்ற கலவரத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கும் உயர்த்தப்பட்ட வீதத்தில் நபர் ஒருவருக்கு ரூ. 2 இலட்சம் என்ற அளவில் இழப்பீட்டுத் தொகையாக மொத்தம் 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. விசாரணைக் குழுவின் பரிந்துரையை எதிர்நோக்கி, இரு நிகழ்வுகளிலும் சொத்துக்களுக்கு இழப்பு மற்றும் சேதம் ஏற்பட்டுள்ளவர்களுக்கு இடைக்கால நிவாரணம் வழங்க அரசு ரூ. 5 கோடி அனுமதித்துள்ளது. தேவையெனில் இத்தொகையை அரசு அதிகப்படுத்தி வழங்கும்.

6. கோயம்புத்தூரில் நிகழ்ந்த குண்டு வெடிப்புகளும், அங்கும் மாநிலத்தின் பிற பகுதிகளிலும், ஜெலட்டின் குச்சிகள், மற்றவெடி பொருட்கள் கைப்பற்றப்பட்ட நிகழ்வுகளும், கிணறு வெட்டுதல் போன்ற உண்மையான தேவைகளுக்கான வெடி பொருட்கள் தீவிரவாத இயக்கங்களுக்கு திசை திருப்பி அனுப்பப்பட்டிருப்பதைக் காட்டுகின்றன. இதனைத் தடுப்பதற்கு அரசு உறுதிபூண்டுள்ளது. எனவே, மாநிலத்தில் வெடி பொருட்கள் மொத்த விற்பனை மற்றும் சில்லறை விற்பனை செய்யப்படும் எல்லா இடங்களிலும் தீவிரக் கட்டுப்பாட்டை சட்ட ரீதியாகச் செயல்படுத்த இவ்வரசு முடிவு செய்துள்ளது.

7. பொருளாதார முன்னேற்றத்திற்கான வளர்ச்சித் திட்டங்களுக்கு அமைதியும் நல்லிணக்கமும் இன்றியமையாத அடிப்படையாகும் என்பதை நன்குணர்ந்த இவ்வரசு. மாநிலத்தில் சட்டம்-ஒழுங்கு நிலைமையைப் பராமரிப்பதற்கு உயர் முன்னுரிமை அளித்துள்ளது. தென்மாவட்டங்களில் பல்லாண்டுகளாக அவ்வப்பொழுது நிகழ்ந்து வரும் வகுப்புக் கலவரங்களுக்கான காரணங்களைக் கண்டறிந்து, அத்தகைய கலவரங்கள் தொடராமல் தடுக்க, உரிய நடவடிக்கைகளை எடுப்பது குறித்து ஆய்வு செய்து, பரிந்துரைகள் அளிக்க உச்ச நீதி





மன்றத்தின் ஒய்வுபெற்ற நீதிபதி திரு.எஸ். மோகன் அவர்கள் தலைமையில் உயர்நிலைக் குழு ஒன்றை இவ்வரசு அமைத்தது. இக்குழு, 1998 சனவரியில் அரசுக்கு அதன் அறிக்கையை வழங்கியது. அந்த அறிக்கையில், அனைத்து மாவட்டங்களிலும், பல்வேறு நிலைகளில் அமைதிக் குழுக்களை அமைத்தல், சட்டம்-ஒழுங்கு நிருவாகம் எச்சரிக்கையுடனும் தவறு நேராமல் விழிப்புடனும் செயல்படச் செய்தல் போன்ற பல்வேறு பரிந்துரைகள் வழங்கப்பட்டுள்ளன. இவை, மாநில அரசின் நடவடிக்கைக்காக தீவிர பரிசீலனையில் உள்ளன.

8. பல ஆண்டுகளாக நடந்து வரும் சந்தன மரக் கடத்தலைத் தடுப்பதற்கு இவ்வரசு உரிய முயற்சிகள் எடுத்துள்ளது. இதன் விளைவாக இவ்வரசு பொறுப்பேற்ற நாளிலிருந்து டிசம்பர் 1997 முடிய ரூ.34.80 கோடி மதிப்புள்ள கடத்தல் சந்தன மரங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. மேலும் 33 சந்தன மரக் கடத்தல்காரர்கள் குண்டர்கள் சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். சந்தன மரக் கடத்தலைத் தடுக்க இவ்வரசு இன்னும் தீவிர முயற்சிகளை மேற்கொள்ளும். அண்மையில் வழங்கப்பட்ட சென்னை உயர்நீதிமன்றத் தீர்ப்பின்படி ஒரு சிறப்புப் பணிக்குழு விரைவில் அமைக்கப்படும்.

9. திட்டப்பணிகளை ஆக்கபூர்வமாகவும் செம்மையாகவும் நிறைவேற்றி, எல்லா இலக்குகளையும் எய்தி வருகிறது என்ற பெருமை தமிழ்நாட்டுக்கு உண்டு. எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ.10,200 கோடி ஒதுக்கப்பட்டிருக்கையில், ரூ.10,563 கோடி செலவிடப்பட்டுள்ளது. ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு, மத்தியத் திட்டக் குழு, தமிழ்நாட்டுக்கான ஒதுக்கீட்டளவை ரூ.25,000 கோடியாக உயர்த்தி ஒப்புதல் அளித்துள்ளது. எட்டாவது திட்டக் காலத்தில் ஆண்டு வளர்ச்சி வீதம் 5.96 சதவீதமாக இருந்தது. ஒன்பதாவது திட்டக் காலத்தில் இவ்வளர்ச்சி வீதத்தை 7 சதவீதத்திற்கும் மேலாக உயர்த்திட முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

10. இந்த ஆண்டில் இம்மாநிலம் முழுவதிலும் அளவுக்கு அதிகமான மழை பெய்துள்ளது. இப்பெருமழையினால் பல்வேறு மாவட்டங்களில்,

குறிப்பாக, கடலோர மாவட்டங்களான தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர் ஆகியவை கடுமையான பாதிப்புக்கு உள்ளாயின. மழை மற்றும் இடி, மின்னலால் ஏற்பட்ட மனித உயிர் இழப்பு, கால்நடை உயிர் இழப்பு, குடிசைகள், பயிர்கள் சேதம் ஆகியவற்றுக்கு இடருதவி அளிக்கும் வகையில், அரசு ரூ.58 கோடியே 95 இலட்சம் செலவழித்துள்ளது.

11. இரண்டாவது பசுமைப்புரட்சியை உருவாக்கத் தொடர்ந்து முயற்சிகளை அரசு மேற்கொண்டுள்ளது. உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடைதல், பொருளாதாரத்தில் சீரான நிலை, ஊரக வளர்ச்சி மற்றும் வறுமை ஒழிப்பு ஆகியவற்றை எய்துவதே இவ்வரசின் நோக்கமாகும். சென்ற ஆண்டில் காவிரிப் பாசன வாய்க்கால்களிலும், பல மாவட்டங்களில் உள்ள கண்மாய்களிலும் தூர்வார எடுத்த முயற்சி விவசாயிகளுக்கு நல்ல பயனை அளித்துள்ளது. இத்திட்டம் வரும் ஆண்டிலும் நல்லமுறையில் செயல்படுத்தப்பட்டு, பாசன ஆதாரங்களின் முழுப்பயனும் கிட்ட, முயற்சிகள் மேற்கொள்ளப்படும். நல்ல பருவமழை பெய்ததையடுத்து, இவ்வாண்டு நம் மாநிலம் நல்ல விளைச்சலைக் கண்டுள்ளது. இணைக் கொள்முதல் செய்யப்படும் காலகட்டத்திலும்கூட விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று இவ்வரசு, மைய அரசு நெல்லுக்கு நிர்ணயித்த குறைந்த அளவு ஆதரவு விலைக்கும் மேலாக வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில், குவிண்டால் ஒன்றுக்கு ரூ.35 அனுமதித்தது. உற்பத்திப் பெருக்கம் காரணமாக விவசாயிகள் விளைபொருளை விற்பனை செய்வதில் பாதிப்புக்கு ஆளாகாமலிருப்பதை உறுதி செய்யும் பொருட்டு அரசு 926 நேரடிக் கொள்முதல் மையங்களைத் திறந்துள்ளது. முதல்முறையாக காவிரிப் பாசனப் பகுதிகளுக்கு வெளியேயுள்ள மாவட்டங்களிலும் இம்மையங்கள் தொடங்கப்பட்டுள்ளன. இவ்வாண்டில் இதுவரை செய்திராத அளவு 17 இலட்சம் டன் நெல் கொள்முதல் செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

12. இந்த அரசின் ஒளிவு மறைவற்றதும், தொழில் முனைவோரிடையே நேயப் பண்புடையதுமான கொள்கைகள் பலன்தரத் துவங்கியுள்ளன. வெளிநாடுகளிலிருந்தும், வெளி



மாநிலங்களிலிருந்தும் வரும் தொழில் முனைவோர் தமிழ்நாட்டில் முதலீடு செய்ய விரும்பி வருகின்றனர். அவர்களுக்குத் தேவையான வசதிகளனைத்தையும் தாமதமின்றிச் செய்ய அரசு இயந்திரம் முடுக்கி விடப்பட்டுள்ளது. இதன் விளைவாக கடந்த 22 மாதங்களில் தமிழகத்தில் வெளிநாட்டு மூலதனம் ஊக்குவிக்கும் வாரியத்தின் (Foreign Investment Promotion Board) ஒப்புதல் பெற்ற வெளிநாட்டு நேரடி மூலதனம் ரூ.4,040 கோடி ஆகும். மேலும் தொழில் உரிமம் பெறத் தேவையில்லாத 655 தொழில்கள் ரூ.9,639 கோடி மதிப்பீட்டில் தொடங்க பதிவு செய்யப்பட்டுள்ளன. உரிமம் தேவையுள்ள 141 தொழில் திட்டங்கள் ரூ.1,897 கோடி மதிப்பீட்டில் தொடங்க உரிமம் பெற்றுள்ளன. சுருங்கக் கூறின், மிகக் குறைந்த கால அளவான 22 மாதங்களில் ரூ.15,576 கோடி அளவிலான தொழில் முதலீடுகள் இம்மாநிலத்தில் செய்யப்படவுள்ளன என்பது தமிழகத்தின் வரலாற்றிலேயே மிகவும் அதிகமான ஒன்றாகும். நடப்பாண்டில் ரூபாண்ட் நிறுவனத்தின் நைலான் தொழிற்சாலை சென்னை ஏற்றுமதி வளாகத்தில் அமைந்துள்ள உலோக ஹேலைட் விளக்கு தொழிற்சாலை, கரூர் அருகில் அமைந்துள்ள கரூர் யார்ன் லிங்க்ஸ் தொழிற்சாலை, தருமபுரி மாவட்டத்தில் சொக்கரசன்ன பள்ளியில் அமைந்துள்ள டாரஸ் நாவல்டீஸின் டாலமைட் தொழிற்சாலை, காஞ்சிபுரம் மாவட்டத்தில் செட்டிபுண்ணியம் கிராமத்தில் அமைந்துள்ள பாரத் உடைகள் தயாரிக்கும் தொழிற்சாலை மற்றும் கோயம்புத்தூருக்கு அருகில் உள்ள மயிலேரிப்பாளையத்தில் அமைந்துள்ள S.G. இரும்பு வார்ப்புத் தொழிற்சாலை ஆகியவை உற்பத்தியைத் துவக்கியுள்ளன. ஹூண்டாய் நிறுவனத்தின் மோட்டார் வாகனத் தொழிற்சாலையில் 1998 அக்டோபர் மாதத்தில் உற்பத்தி துவங்கும்.

13. தொழில் வளர்ச்சிக்கான சிறந்த அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் மட்டுமே, வெளிநாடுகளிலிருந்தும், வெளிமாநிலங்களிலிருந்தும் தொழில் முனைவோரை நம் மாநிலத்திற்கு ஈர்க்கும் என்பதை அரசு உணர்ந்துள்ளது. தொழில் வளர்ச்சி மையங்களையும், தொழில் பூங்காக்களையும், துணை நகரங்களையும் மாநிலத்தின் பல பகுதிகளில் அரசு உருவாக்கும். மின்சாரம், சாலைகள், தண்ணீர் வசதி, துறைமுகங்கள் போன்ற அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை

உருவாக்குவதில் அரசு முனைப்புடன் செயல்படும். இதற்குப் பெருமளவில் முதலீடுகள் தேவைப்படுமாதலால், இதுவரை அரசினால் மட்டும் செயல்படுத்தப்பட்ட மின்சக்தி, நெடுஞ்சாலைகள் போன்ற துறைகளில் தனியார் முதலீட்டை ஈர்க்க, அரசு நடவடிக்கைகள் எடுத்துள்ளது.

14. இம்மாநில பொருளாதாரத்தின் பல்வேறு அம்சங்களை ஆய்வு செய்து, அதன் அடிப்படையில் தமிழகத்தின் ஏற்றுமதியை அதிகரிக்கும் வகையில் மாநிலத்தின் உற்பத்தியை அதிகரிக்கவும், பெருமளவில் வெளிநாட்டு முதலீட்டை தமிழகத்தில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளுக்கும் தொழில்களுக்கும் ஈர்க்கவும், மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சி வீதத்தை அதிகரிக்கவும், ஆலோசனைகள் வழங்க ஹார்வர்டு பன்னாட்டு வளர்ச்சிக் கழகத்துடன் அரசு ஓர் ஒப்பந்தம் செய்துள்ளது. இதன் அடிப்படையில் தமிழகப் பொருளாதாரத்தின் மீதான இவ்வாராய்ச்சிப் பணி துவங்கியுள்ளது.

15. தனியார் துறையினால் இயக்கப்பட இருக்கும் முதலாவது மின்திட்டம் வரும் ஆண்டில் 196 மெகாவாட் திறனுடன் சென்னையில் செயல்படத் துவங்கும். கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் மின் உற்பத்தி செய்வதற்காக, அடிப்படை வசதிகள் குத்தகை மற்றும் நிதி நிறுவனத்தோடு (Infrastructure Leasing and Financial Services Limited) சேர்ந்து கூட்டுத்துறை நிறுவனம் ஒன்றை ஏற்படுத்த, இந்த அரசு கொள்கையளவில் அனுமதி அளித்துள்ளது. எண்ணூரில் 1000 மெகாவாட் திறன் கொண்ட அனல் மின் நிலையம் ஒன்றையும் நிறுவ தமிழ்நாடு மின்வாரியம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

16. சாலை மேம்பாட்டுப் பணிக்கு இவ்வரசு அதிக முன்னுரிமை அளித்து வருகிறது. சென்ற இரண்டாண்டுகளில் ஊரக அடிப்படை வசதி மேம்பாட்டு நிதித் திட்டத்தின் கீழ் "நபார்டு" (National Bank for Agriculture and Rural Development) வங்கியின் நிதியுதவியுடன் ரூ.450 கோடி மதிப்புள்ள சாலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வீட்டுவசதி நகர்ப்பகுதி மேம்பாட்டுக் கழக



(Housing and Urban Development Corporation) நிதியுதவியுடனும், உலக வங்கியின் நிதியுதவியுடனும் மொத்தம் ரூ. 1,416 கோடி செலவில் சாலைகளும் பாலங்களும் மேம்படுத்தப்படும்.

17. இவ்வரசால் நிறுவப்பட்ட மாநில கடலாண்மை வாரியம் (Maritime Board) சிறு துறைமுகங்களின் மேம்பாட்டுப் பணியிலும், அவற்றை முறைப்படுத்துவதிலும் ஈடுபட்டு வருகிறது. கடலூர், செய்யூர் மற்றும் குளச்சல் துறைமுகங்களின் மேம்பாட்டை இவ்வரசு தனியார் துறையின் பங்கேற்புடன் செயல்படுத்த உள்ளது. வணிகக் கப்பல்களுக்குத் தேவையான பணியாளர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காகவும் இம்மாநிலத்திலுள்ள இளைஞர்களுக்கு இத்தொழிலில் வேலைவாய்ப்பினை உருவாக்கவும் ஒரு கடலாண்மைப் பயிற்சிக் கழகத்தை (Maritime Academy) அமைக்க அரசு முடிவெடுத்துள்ளது.

18. வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்வதற்கு வாய்ப்பாக இந்த அரசு 1996-ஆம் ஆண்டில் அனைத்து உள்ளாட்சி மன்றங்களுக்கும் முதல் தடவையாக பெண்களுக்கு 33-1/3 சதவீதம் இட ஒதுக்கீடு செய்து தேர்தல்களை நடத்தியது. மேலும் 1997-இல் நகர்ப்பகுதி மற்றும் ஊரக உள்ளாட்சி மன்றங்கள் அனைத்திற்கும் கணிசமான நிதிப்பகிர்வை அளித்தது. மேலும், உள்ளாட்சி நிறுவனங்களுக்குக் கூடுதல் அதிகாரங்களை அளிப்பதற்கு உள்ளாட்சித் துறை அமைச்சரை அமைப்பாளராகவும், சட்டமன்றத்தில் உள்ள அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளை உறுப்பினர்களாகவும் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு அளிக்கும் பரிந்துரைகளின் அடிப்படையில் அரசு தக்க முடிவுகள் எடுக்கும். சென்ற ஆண்டு ஆளுநர் உரையில் உறுதி அளிக்கப்பட்டிருந்தபடி, நகர்ப்பகுதி உள்ளாட்சி மன்றங்கள் குறித்த பொதுவான சட்டமுன்வடிவு ஒன்று சென்ற வரவு-செலவுத் திட்டக் கூட்டத் தொடரில் இச்சட்டப் பேரவையில் தாக்கல் செய்யப்பட்டது. இச்சட்டமுன்வடிவு, தற்போது ஆய்வுக் குழுவின் பரிசீலனையில் உள்ளது. நகர்ப்பகுதிகளில் அடிப்படைப் பணிகளைத் திறமையுடனும், செம்மையாகவும் நிறைவேற்ற இச்சட்டம் உதவும்.

19. 'நமக்கு நாமே' மற்றும் 'அண்ணா மறுமலர்ச்சி' திட்டம் ஆகியவற்றின்கீழ் கிராமங்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 'நமக்கு நாமே' திட்டத்தில் 3,658 பணிகள் ரூ. 24.61 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 'அண்ணா மறுமலர்ச்சி' திட்டத்தின்கீழ் ரூ. 224 கோடி அளவில் 33,282 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

20. சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளபடி நபர் ஒன்றுக்கு நாள்தோறும் 10 லிட்டருக்குக் குறைவான குடிநீர் பெறுகின்ற 10,000 ஊரகக் குடியிருப்புகளில், நடப்பாண்டில் 4,500 ஊரகக் குடியிருப்புகளில் நபர் ஒன்றுக்கு நாள்தோறும் 40 லிட்டருக்குக் குறையாமல் குடிநீர் வழங்கும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு, இம்மாத இறுதிக்குள் நிறைவேற்றி முடிக்கப்படும். அனைத்து ஊரகக் குடியிருப்புகளுக்கும் ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதிக்குள் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க இவ்வரசு முடிவு செய்துள்ளது. இந்த இலக்கினை அடைய ஊரகக் குடிநீர் வழங்கும் பணிக்கான நிதியொதுக்கீடு, வரும் ஆண்டுகளில் கணிசமாக அதிகரிக்கப்படும். நகர்ப்புறப் பகுதிகளுக்கு குடிநீர் வசதிகளை அதிகரிக்க பல திட்டங்கள் செயலாக்கப்படவுள்ளன. வீராணம் ஏரியின் கொள்ளளவு அதிகரிக்கப்பட்டு அத்தண்ணீரை கடலூர், விழுப்புரம் மாவட்டங்களிலுள்ள நகர்ப்புறங்களுக்கும், வழியிலுள்ள கிராமக் குடியிருப்புகளுக்கும் அளிக்கத் திட்டம் ஒன்று தீட்டப்பட்டு செயல்படுத்தப்பட உள்ளது. சென்னையில் குடிநீர் வழங்கு பணியை மேம்படுத்தவும், திடக்கழிவு அகற்றும் நிருவாகத்தை மேம்படுத்தவும் வகை செய்யும் சென்னை மூன்றாவது குடிநீர்த் திட்டம் உலக வங்கி நிதியுதவியுடன் வரும் ஆண்டில் செயல்படுத்தப்படவுள்ளது.

21. இணைப்புச் சாலை தேவையுள்ள ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் தொகை உள்ள 517 கிராமங்களில், நடப்பாண்டில் 216 கிராமங்களுக்கு இணைப்புச் சாலை வசதிகள் செய்யப்பட்டு வருகின்றன. வரும் ஆண்டில் எஞ்சிய 301 கிராமங்களுக்கு இணைப்புச் சாலை வசதிகள் செய்து கொடுக்கப்படும். பல்வேறு திட்டங்களின்கீழ் சென்ற ஆண்டில் 5,420 கி.மீ. மற்றும் நடப்பாண்டில் 6,580 கி.மீ. ஊராட்சி ஒன்றிய தார்ச் சாலைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.



22. எல்லா மக்களுக்கும் மருத்துவ வசதி கிடைத்திட அனைத்து வட்டார ஆரம்ப சுகாதார மையங்களுக்குத் தேவையான சாதனங்களையும், வசதிகளையும் வழங்க முழு முயற்சி மேற்கொள்ளப்படும். மாவட்ட மருத்துவமனைகளும் வட்ட மருத்துவமனைகளும், மேல் சிகிச்சை மருத்துவமனைகளாக மாற்றப்பட்டு 24 மணி நேரமும் அவசர அவசிய மருத்துவப் பணிகள் கிடைக்கும் வகையில் படிப்படியாக வலுப்படுத்தப்படும். அரசு மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்களுக்கான நிதியொதுக்கத்தை உயர்த்துவதன் மூலமாகவும் நடைமுறைகளை நெறிப்படுத்துவதன் வாயிலாகவும் அவற்றின் செயல்பாடு சீர்படுத்தப்படும்.

23. ஏழை எளியோர்க்குக் கண்ணொளி வழங்கும் விரிவானதொரு திட்டம் மாநிலம் முழுவதும் முகாம்கள் வாயிலாக பரவலாக நிறைவேற்றப்பட 1972 ஆம் ஆண்டு இந்த அரசினால் தொடங்கப்பட்டு அதனால் பல இலட்சம் மக்கள் பயன் பெற்றனர். இடைக்காலத்தில் அத்திட்டத்தில் ஏற்பட்ட தொய்வைப் போக்கி மீண்டும் அதே அளவில் மேலும் செம்மையாக கண்ணொளி வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படும்.

24. கல்வித் துறை முன்னேற்றத்திற்கு அரசு தொடர்ந்து முக்கியத்துவம் அளித்து வருகின்றது. 6 முதல் 14 வயது வரை உள்ள அனைத்து சிறார்களும் பள்ளியில் சேர்ந்து தொடர்ந்து கல்வி பெற எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. பள்ளிக் கல்வியின் தரத்தினை உயர்த்திட பள்ளிகளுக்குத் தேவையான வசதிகளை அதிகரிக்கும் பொருட்டு கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். மேலும் பல அரசு மேல்நிலைப்பள்ளிகளில் கணினி படிப்பினைத் துவக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மாநிலத்தின் பொருளாதார மேம்பாட்டுக்கு தரமான உயர் கல்வியின் அவசியத்தை உணர்ந்து பல்கலைக்கழகங்களுக்கு வழங்கும் நிதி உதவியை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நடப்பு ஆண்டில் சேலத்தில்

பெரியார் பல்கலைக்கழகமும், சென்னையில் டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகமும், திருச்சிராப்பள்ளியில் கி.ஆ.பெ. விசுவநாதம் மருத்துவக் கல்லூரியும் துவக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. முதன்முறையாக பொறியியல் கல்லூரிகளில் கிராமப்பள்ளிகளில் பயின்ற மாணவ மாணவியர்களுக்கு 15% இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. வரும் ஆண்டிலிருந்து இத்தகைய ஒதுக்கீடு தொழிற்கல்வி அனைத்திற்கும் விரிவுபடுத்தப்படும். இதன் மூலம் கிராமப் பகுதிகளில் கல்வி கற்ற மாணவர்களும் தொழிற்கல்வி பெற்று வாழ்க்கையில் முன்னேற்றம் அடையும் வாய்ப்பு ஏற்படும்.

25. காவிரி நதிநீர் தாவா தற்பொழுது காவிரி நடுவர் மன்றத்தில் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால ஆணையைத் தொடர்ந்து இறுதி ஆணைக்காக விசாரணையில் உள்ளது. தமிழகம் மற்றும் பாண்டிச்சேரியைச் சேர்ந்த வல்லுநர் சாட்சிகளின் குறுக்கு விசாரணையைத் தொடர்ந்து கர்நாடகத்தின் வல்லுநர் சாட்சிகளின் குறுக்கு விசாரணையைக் காவிரி நடுவர் மன்றம் எடுத்துக் கொண்டுள்ளது. இதற்கிடையில் 1992 ஆம் ஆண்டு தமிழக அரசு உச்ச நீதிமன்றத்தில் தொடுத்த வழக்கின்மீது விசாரணை நடைபெறும் சமயத்தில், நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையைச் செயலாக்கும் பொருட்டு, மாநிலங்களுக்கிடையிலான நதிநீர் தாவா சட்டம், 1956 பிரிவு '6-ஏ'-ன் கீழ் ஒரு திட்டத்தை மத்திய அரசு வகுக்குமென்று 9-4-1997 அன்று உச்ச நீதிமன்றத்தில் மத்திய அரசு தெரிவித்தது. அதனடிப்படையில் மத்திய அரசு ஒரு வரைவுத் திட்டத்தைத் தீட்டி அதன்மீது சம்பந்தப்பட்ட மாநிலங்கள் கருத்துக்களை அளித்துள்ளன. 30-9-1997 அன்று மத்திய நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்ட மாநிலங்களுடன் இதுகுறித்து ஒரு கூட்டத்தைக் கூட்டி விவாதித்தார். நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையைச் செயலாக்கும் பொருட்டு. வரைவுத் திட்டத்தை இறுதி செய்து அரசிதழில் வெளியிடும்படி மத்திய அரசை இவ்வரசு தொடர்ந்து வற்புறுத்தி வருவதுடன் உச்ச நீதிமன்றத்திலும் வலியுறுத்தி வாதாடி வருகிறது.



26. 1-6-1997 முதல் மத்திய அரசு, வறியோர் நலனுக்கான பொது விநியோக முறையினை அறிமுகப்படுத்தியதால் இம்மாநிலத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட அரிசியின் அளவு 1.65 இலட்சம் டன்னிலிருந்து 84,230 டன்னாகக் குறைக்கப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து வலியுறுத்தியதால் 1997 டிசம்பர் திங்கள் முதல் இம்மாநிலத்திற்கான உணவு தானியங்களின் மொத்த ஒதுக்கீட்டை 1,19,230 டன்னாக மத்திய அரசு அதிகரித்துள்ளது. குறுவைப் பருவத்தில் நல்லமுறையில் 7 இலட்சம் டன்கள் நெல் கொள்முதல் செய்யப்பட்டதால் பொது விநியோக முறையில் தங்கு தடையின்றி அரிசி வழங்கப்பட்டு வருகிறது. மண்ணெண்ணெய் பெற நீண்ட நேரம் காத்திருப்பது போன்ற குறைபாடுகளைக் களைய மண்ணெண்ணெய் நிலையங்கள் மூலம் விநியோகம் செய்ய புதிய திட்டம் ஒன்றை சென்னையில் அரசு துவக்கியுள்ளது. இந்நிலையங்கள் பெட்ரோல், டீசல் வழங்கும் நிலையங்களைப்போல் இந்திய எண்ணெய்க் கழகத்தில் தொழில்நுட்ப உதவியுடன் வடிவமைக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்கு மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பு உள்ளதால் மாநிலத்திலுள்ள நகர்ப்புறப் பகுதிகளில் இந்நிலையங்களை அமைக்கும் திட்டத்தை விரிவுபடுத்த முடிவெடுக்கப்பட்டுள்ளது.

27. சென்ற ஆண்டு ஆளுநர் உரையில் பொது விநியோகத் திட்டம் சீரமைக்கப்படும் என்றும் அதன்படி மூன்று நிற அட்டைகள் வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது. இதற்கான கள ஆய்வு நடத்தப்பட்டு அட்டைகள் அச்சிடும் பணி நடந்து கொண்டிருக்கிறது. இந்நிலையில் இத்திட்டம் மறு ஆய்வு செய்யப்பட்டு, சில மாற்றங்களுடன் இரண்டு நிறங்களில் மட்டுமே குடும்ப அட்டைகள் வழங்க தற்போது முடிவு எடுக்கப்பட்டுள்ளது. மாத வருமானம் ரூ.1,250-க்குக் குறைவாக உள்ள ஏழை எளிய குடும்பங்களுக்கு இளம் சிவப்பு நிற அட்டைகளும், மற்ற குடும்பங்களுக்கு மஞ்சள் நிற அட்டைகளும் வழங்கப்படும். இளம் சிவப்பு நிற அட்டை பெறுவோருக்கு தற்போது பொது விநியோகத் திட்டத்தில் வழங்கப்படும் பொருள்கள் அனைத்தும் வழங்கப்படும். மஞ்சள் நிற அட்டை பெறுவோருக்கு அவர்கள் விருப்பத்தின் அடிப்படையில்

நீதிபதி திரு. ஜி. ராமானுஜம் அவர்கள் தலைமையில் உயர்நிலைக் குழு ஒன்றை அரசு அமைத்திருக்கிறது. இக்குழுவின் பரிந்துரைகளை, இவ்வரசு ஆய்வு செய்து வருகிறது. விரைவில் முடிவுகள் எடுக்கப்பட்டு செயலாக்கப்படும். அரசின் செயல்பாடு குறித்து பொது மக்களுக்குத் தேவையான தகவல்களை அளிப்பதற்காக தகவல் அறியும் உரிமைச் சட்டம் இயற்றப்பட்டுள்ளது. அதற்கான விதிமுறைகள் விரைவில் வெளியிடப்படும்.

35. இந்திய மற்றும் இலங்கை அரசுகளுக்கிடையே 1974 ஆம் ஆண்டில் ஒப்பந்தம் ஏற்பட்டபோது கச்சத்தீவு பகுதியில் தமிழக மீனவர்களுக்கு மீன் பிடிக்கின்ற உரிமையும், கச்சத்தீவுக்கு தமிழ்நாட்டிலிருந்து மக்கள் யாத்திரையாகச் செல்கின்ற உரிமையும் உண்டு என்ற பிரிவு இடம் பெற்றிருந்தது. ஆனால் 1977 முதல் செயல்படாமல் ஆக்கப்பட்டுவிட்ட இந்தப் பிரிவைச் செயல்படுத்த வேண்டுமென்றும்; அடிக்கடி அல்லலுக்கும், இழப்புக்கும் ஆளாகும் மீனவர் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமென்றும் மைய அரசைத் தமிழக அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றது.

36. அரசின் திட்டங்களை தொய்வின்றிச் செயல்படுத்தவும், திட்டங்களின் பயன்கள் உரிய காலத்தில் உரியவர்களை அடைவதற்கும், மனிதவள மேம்பாட்டுக்கும், சட்டம்-ஒழுங்கை நல்லமுறையில் பராமரிப்பதற்கும், அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், காவலர்கள் மற்றும் உள்ளாட்சித் துறை அலுவலர்கள் ஆகியோரின் ஒத்துழைப்பு இன்றியமையாதது. ஐந்தாவது ஊதியக் குழுவின் பரிந்துரையின் பேரில் மத்திய அரசின் அலுவலர்களுக்கு அளிக்கப்பட்ட ஊதிய விகிதங்களை ஆய்வு செய்து, மாநில அரசு அலுவலர்களுக்கு இவற்றை அளிப்பது குறித்து பரிந்துரைகளை அளிக்க நியமிக்கப்பட்ட அலுவலர்கள் குழு தனது அறிக்கையை அளித்துள்ளது. இதன் [illegible] அரசின் முடிவுகள் இக்கூட்டத் தொடரில் அறிவிக்கப்படும்.

37. 1992 ஆம் ஆண்டு முந்தைய அரசு இயற்றிய புதிய தொழில் வரிச சட்டத்தில் உள்ள வரி விகிதங்களைக் குறைப்பதைப் பற்றியும், சில பிரிவுகளை நீக்குவது பற்றியும் வணிகர்களிடமிருந்து பல முறையீடுகள் வந்துள்ளன. தொழில் வரியிலிருந்து வரும் வருவாய் உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒரு முக்கிய வருவாய் இனமாக உள்ளதால் தொழில் வரிச் சட்டத்தை மறு ஆய்வு செய்ய ஒரு குழுவினை நியமிக்க அரசு முடிவு செய்துள்ளது. இக்குழுவின் பரிந்துரைகளைப் பெற்றபின் அரசு தொழில் வரிச சட்டத்தில் தேவையான மாறுதல்களைச் செய்யும்.



38. செயல்படுத்துவதற்குப் பல ஆண்டுகள் ஆகக்கூடிய பெருமிதப் பகட்டான திட்டங்களை மேற்கொள்ளுவதற்கு முன்னுரிமை தருவதை விடுத்து, பொதுமக்களுக்கு அவசியமான உணவு, உடை, உறையுள், குடிநீர், சாலைகள், கல்வி, சுகாதாரம் மற்றும் மழைநீர் வடிகால் போன்ற அடிப்படை வசதிகளை விரைந்து வழங்கும் திட்டங்களுக்கே முக்கியத்துவம் அளிப்பது என்ற தலையாய கொள்கை முடிவை இந்த அரசு எடுத்துள்ளது.

39. இந்த அரசின் முக்கியமான நடவடிக்கைகள், சாதனைகள், எதிர்காலத் திட்டங்கள், கொள்கைகள் குறித்து நான் குறிப்பிட்டுள்ளேன். வளர்ச்சி மேம்பாட்டுப் பணிகளைத் தொடர்ந்து மேற்கொள்ளவும், விரைவுபடுத்தவும், அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது. இவை யாவும் செவ்வனே நிறைவேற உங்களுடைய முழு ஒத்துழைப்பு வேண்டுமெனக் கேட்டுக்கொண்டு என் உரையை நிறைவு செய்கிறேன்.

வணக்கம்.

218447

அரிசி அல்லது அரிசிக்குப் பதிலாக கூடுதலாக சர்க்கரையோ அல்லது கூடுதலாக மண்ணெண்ணெய்யோ வழங்கப்படும். இந்த அட்டைகளின் விநியோகம், சென்னை மாநகராட்சி மற்றும் புறநகர் பகுதிகளில் வரும் மே மாதம் முதல் தேதியிலிருந்து தொடங்கும். இந்தப் புதிய குடும்ப அட்டைகளின் அடிப்படையில் ஜூன் மாதம் முதல் பொருள்கள் வழங்கப்படும். தொடர்ந்து படிப்படியாக மற்ற மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சிப் பகுதிகளில் இரு வண்ண அட்டைகள் வழங்கும் பணி நிறைவு செய்யப்பட்டு, புதிய முறை விநியோகத் திட்டம் செயல்படுத்தப்படும்.

28. தமிழக மகளிர் முன்னேற்றத் திட்டம் இந்த ஆண்டில் 14 மாவட்டங்களில் 194 ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படுத்தத் துவங்கப்பட்டுள்ளது. தற்போது மாநிலத்தில் 2 இலட்சம் பெண்கள் உறுப்பினர்களாக உள்ள 9000 தன்னிறைவுக் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. வரும் ஆண்டில் இத்திட்டம் இன்னும் 7 மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டு மேலும் 3 இலட்சம் பெண்கள் இத்திட்டத்தின் கீழ் தன்னிறைவுக் குழுக்களில் உறுப்பினர்களாகிப் பயன்பெறுவார்கள்.

29. உலக வங்கி நிதி உதவி பெறும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச் சத்து இரண்டாவது திட்டம் 1997-ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதற்குப் பின்னும் இத்திட்டம் மத்திய மாநில அரசுகளின் நிதியிலிருந்து தொடர்ந்து செயல்படுத்தப்படும். மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித் திட்டத்திற்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இந்த நிதி ஆண்டில் ஏழை எளிய குடும்பங்களைச் சேர்ந்த பயன் பெறுவோர் 53,145 பெண்கள் ஆவார்கள்.

30. சாதி வேறுபாடுகளற்ற சமத்துவ சமுதாயத்தை உருவாக்கும் உன்னத நோக்கத்தோடு இந்த அரசு, மாநிலமெங்கும் 50 இடங்களில் எல்லா சாதியினரும் நல்லிணக்கத்துடன் வாழும் வகையில் 'சமத்துவபுரங்களை' உருவாக்கி வருகின்றது. ஆதிதிராவிடர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் இதர



சமூகத்தினர் அனைவரும் இணக்கத்துடனும், அமைதியாகவும் வாழ அவர்களின் அடிப்படைத் தேவைகளான குடிநீர், மின்சாரம், பள்ளிகள், மருத்துவமனைகள் மற்றும் சமுதாயக் கூடம் போன்றவை அமைந்திடும் வகையில், மாதிரி கிராமங்களாகவும் இந்த சமத்துவபுரங்கள் உருவாக்கப்படுகின்றன.

31. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் முன்னேற்றத்திற்காக அரசு ஆண்டுதோறும் நிதி ஒதுக்கீட்டினை அதிகரித்து திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது. நடப்பாண்டில் வேலை வாய்ப்பு உடனடியாகக் கிடைக்கக்கூடிய கணினி பயிற்சி, பிளாஸ்டிக் தொழில் நுட்பம் போன்ற இனங்களில் செயல்படுத்தப்பட்டு வரும் பயிற்சித் திட்டங்கள் மேலும் விரிவுபடுத்தப்படும்.

32. சமுதாயத்தில் நலிந்துள்ள கைத்தறி நெசவாளர்கள், நிலமற்ற விவசாயத் தொழிலாளிகள் போன்றவர்களின் நலனைக் காத்திட இவ்வரசு முனைப்பாக உள்ளது. அதற்கான புதிய திட்டங்கள் ஆய்வில் உள்ளன. இவற்றுக்கான அரசின் முடிவுகள் விரைவில் அறிவிக்கப்படும்.

33. பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், ஆதிதிராவிடர், பழங்குடியினர் ஆகியோருக்கு வேலைவாய்ப்பிலும், கல்வியிலும் 69 சதவீத இட ஒதுக்கீட்டை வழங்கிட இந்த அரசு உறுதிபூண்டுள்ளது. இதுகுறித்து வழக்குகள் உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன. இவ்வழக்கில் தமிழக அரசின் நிலை தெளிவாகவும் உறுதியாகவும் இருக்கிறது. இட ஒதுக்கீட்டை நிர்ணயிக்கும் சமூக நீதிக் கோட்பாட்டினை மாநில அரசின் அதிகாரப் பொறுப்பில் விடுகின்ற அளவுக்கு அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டுமென்பதை இந்த அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவீர்கள்.

34. நேர்மையும் பொறுப்பும் மிக்க நிருவாகத்தை அளிக்க இந்த அரசு உறுதியுடன் செயல்படுகிறது. அரசு நடைமுறைகளை எளிமையாக்கவும், ஊழலைத் தடுக்கவும் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து தக்க பரிந்துரைகளை அளிக்க ஓய்வுபெற்ற